
NAVA LAW
Professional Corporation
Real Estate · Corporate · Commercial · Immigration · Family · Wills & Estate
10 Milner Business Ct. Suite 210
416 321 1100 www.navalaw.ca

# தாய்வீடு

THAIVEEDU APRIL 2016 ஏப்பிரல் HOME & LIVING

FREE REAL ESTATE CLASSES
INCOME TAX
• Personal
• Small Business
• Corporate Returns
• Business Registration
• Corporation Registrations
• New house HST Rebate
• GST/HST Filling
Successful Real Estate Office With Over 300 Salespeople
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301 Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently Owned and Operated, REALTOR®



## கிழக்கை மையமாகக் கொண்ட தலைமையை முன்னிலைப் படுத்தவேண்டும்

- வ.ஐ.ச.ஜெயபாலன்

படம்: டிஜி கருணா

அரங்கியல் விழா - ஒக்ரோபர் 02

ISSN 2369-3657

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8
BonaFide Mortgage Solutions Inc.
Brokerage Lic# 10216

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...
Thana Yoganathan
Sales Representative
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC. BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440, E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

Best investment on earth is earth
Jey Rukmanykanthan B.Sc
(Sales Representative)
Home Life GTA Realty Inc.
Cel: 416 845 5629
email: jey@realtorjey.com

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
Uthayan Sivarajah
Broker
Dir: 416-301-5555
Sugan Sivarajah
Sales Representative
Dir: 416-890-9999
Raj Sivarajah
Sales Representative
Dir: 416-843-3333
Sivakumar Sivarajah
Sales Representative
Dir: 416-453-7777
HomeLife/ Future Realty Inc., Brokerage
#205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

• வீடு • வாழ்வியல் • சமூகம் • இலக்கியம்


VINVITE US IN
WE'LL BRING RESULTS
CALL US NOW FOR AN EXPERIENCED AND EXCELLENT SERVICE
MORTGAGE ALLIANCE
R & R Mortgage
2005 Sheppard Ave. E., Unit 200
Toronto, ON. M2J 5B4
Nisha Kiruba
Mortgage Specialist
416.708.7202
LIC. # M11001538
• 1st & 2nd Mortgage
• Refinancing
• Loan & Line of Credit
• Debt Consolidation
• Life & Health Insurance Products
• Education Saving Plan (RESP)
• Income Tax Services and more...
New Immigrant or bad credit ?
NO PROBLEM...
OSHAWA
$539,900
Taunton / Grandview
4 bdrms, 3 wshrms.
OSHAWA
$649,000
Harmony / Rossland
4 bdrms, 4 wshrms.
OSHAWA
$688,990
Coldstream/Grandview
4+1 bdrms, 5 wshrms.
MARKHAM
$689,000
Castlemore Ave/Markham Rd
4+1 bdrms, 4 wshrms.
MARKHAM
$699,900
Hwy 48 / Castlemore
3 bdrms, 3 wshrms.
MARKHAM
$699,900
16th Ave / 9th Line
3 bdrms, 4 wshrms, fin bsmt.
AJAX
$700,000
Williamson/Audley
4 bdrms, 3 wshrms.
AJAX
$719,900
Delaney / Church
4+1 bdrms, 4 wshrms, bsmt apt.
MARKHAM
$799,000
16 th/Donald cousens parkway
3 bdrms, 4 wshrms, fin bsmt.
Vasanthy Niranjan
Real Estate Broker
416.845.8272
PRESIDENT AWARD WINNER 2014
TOP 5% IN CANADA 2009 TO 2015
Homelife Today Realty Ltd.
Brokerage*
HOMELIFE
HIGHER STANDARDS
31 Progress Ave
Unit 210, Toronto
ON. M1P 4S6
416.298.3200
*INDEPENDENTLY OWNED & OPERATED. NOT INTENDED TO SOLICIT PROPERTIES CURRENTLY LISTED FOR SALE OR INDIVIDUALS CURRENTLY UNDER CONTRACT WITH BROKERAGE

தாய்வீடு
THAIVEEDU HOME & LIVING

## மனித உரிமையா? வணிகமா?

மனித உரிமையா? வணிகமா? எதற்கு முன்னுரிமை தரவேண்டும் என ஓர் அறச்சிக்கல் ஏற்பட்டால் வணிக நலனே முதன்மை என்பது எல்லா நாடுகளும் கடைப்பிடிக்கும் கொள்கை. இது பிழையானது எனத் தெரிந்தாலும் அதில் அவர்களுக்கு அக்கறை இல்லை.

கனடாவிலும் முக்கியமான, பெரிய போராயுதங்கள் உற்பத்தி செய்கிற பல நிறுவனங்கள் உள்ளன. இவற்றின் வணிக நலன்களுக்காக முன்னைய ஹார்ப்பர் அரசு முன்னின்று உழைத்தது என்பது இரகசியம் அல்ல.

உலகத்திலேயே மோசமான மனித உரிமை மீறல்களில் ஒவ்வொரு நாளும் ஈடுபட்டுவரும் சவூதி அரேபியாவுக்கு பில்லியன் கணக்கில் ஆயுதம் விற்பனை செய்ய அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, இஸ்ரேல் போன்ற நாடுகள் உற்சாகமாகச் செயற்படுவதே வழமை. அந்த வகையில் ஹார்ப்பர் அரசின் கீழ், 15 பில்லியன் டொலர் பெறுமதியான கனடியக் கவச வாகனங்களை சவூதி அரேபியாவுக்கு விற்க ஒப்பந்தம் செய்யப்பட்டது.

'மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் நாடுகளுக்கும்', 'விற்பனை செய்யப்படும் ஆயுதங்களைப் பொதுமக்களுக்கு எதிராகப் பயன்படுத்தும் நாடுகளுக்கும்' ஆயுத விற்பனை செய்வதில்லை என்ற கனடியக் கொள்கையை ஹார்ப்பர் தூக்கி வீசிவிட்டாலும், இப்போது பதவிக்கு வந்த ட்ருடோ அரசு இந்தக் கொள்கையைப் பின்பற்றாது என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அவரது அரசும் சவூதி அரேபியாவுக்கான ஆயுத விற்பனையைத் தொடரப்போவதாக அறிவித்துள்ளது.

பலத்த எதிர்ப்புகள் இப்போது கிளம்புகின்றன. ஐரோப்பிய ஒன்றியம், சவூதி அரேபியாவுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதில்லை எனத் தீர்மானமெடுத்துவிட்டது. எனினும், கனடிய அரசு விற்பனை செய்வதே கனடியப் பொருளாதாரத்துக்கு நல்லது என்று கருதுகிறது.

ஏற்கெனவே யேமென் நாட்டில் சவூதி அரேபியாவும் அதனது கூட்டாளி நாடுகளும் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளையும் சிறுவர்களையும் கொன்றொழித்துள்ளன என ஐ.நா.வும் வேறு பல மனித உரிமை அமைப்புகளும் குற்றஞ்சாட்டுகின்றன.

இந்நிலையில், சவூதி அரேபியாவுக்கும் ஏனைய கொடுங்கோலாட்சி நாடுகளுக்கும் ஆயுத விற்பனையைக் கனடா நிறுத்தவேண்டும்.

இந்தச் சூழலில் மேலுமொரு மனித உரிமைச் சிக்கலிலும் ட்ருடோ அரசு மாட்டியுள்ளது. பலஸ்தீன - இஸ்ரேல் விவகாரம் தொடர்பாகச் சென்ற வாரம் ஐ.நா. சபை ஒரு சிறப்பு அறிக்கையாளரை நியமித்தது. அவர் கனடாவின் புகழ் பெற்ற சட்ட அறிஞரும் மனித உரிமையாளருமான வெஸ்ரேர்ண் பல்கலைக்கழகச் சட்டப் பேராசிரியர் மைக்கேல் லின்க்.

அவரது நியமனத்துக்குக் கனடாவின் ஸியோனிஸ ஆதரவு யூதமக்களது அமைப்புகள் சில எதிர்ப்புத் தெரிவித்ததால் நியமனத்தை எதிர்க்கப்போவதாக எமது வெளியுறவு அமைச்சர் தெரிவிக்கிறார். ஸியோனிஸ்டுக்களதும் யூதக் கோடீஸ்வரர் பலரதும் உதவிக்காக லிபரல் கட்சி பலஸ்தீன மக்களை உதறி வீசக்கூடாது.

இப்படியான நிகழ்வுகள் தொடர்ந்தால் வழமையாக லிபரல் கட்சி ஆட்சி மீது வைக்கப்படும் குற்றச்சாட்டான, 'சொல்வது ஒன்று, செய்வது வேறொன்று' என்பது ட்ருடோ ஆட்சியிலும் தொடர்வது தவிர்க்க முடியாதது மட்டுமல்லாது கனடியர்களின் கைகளை மேலும் குருதியில் தோய்ப்பதற்கும் வழி வகுக்கும்.

III

முகப்பில்: கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலன்
படம்: டிஜி கருணா


Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜெ. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : அருண்மொழிவர்மன், சேரன், துஷி ஞானப்பிரகாசம், ஞானம் லெம்பட், கந்தசாமி கங்காதரன், கருணா, பொன்னையா விவேகானந்தன், ரவிச்சந்திரிகா

ஓவியங்கள் : ஆசை இராசையா (இலங்கை) ட்ராட்ஸ்கி மருது (இந்தியா), ஜீவா (இந்தியா) கருணா (கனடா), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து) ரமணி (இலங்கை), செந்தில் (இந்தியா).

புகைப்படங்கள் : கருணா, K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), துசியந்தன் துரைரத்தினம்.

தட்டச்சு : கௌரி, ஜீவா, சாம் டானியல்

ஒப்புநோக்கல் : கௌரி, கந்தசாமி கங்காதரன்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்).

ரொறன்ரோ விநியோகம் : இராமநாதன் ரூபன், சசி.

மொன்றியால் தொடர்புகள் : சுகுமாரன் சின்னையா.


ஒட்டாவா தொடர்புகள் : அலெக்ஸ் சிவசம்பு: 1-613 -276-7253

அஞ்சல் முகவரி : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel : 416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

Printed on recycled paper


# கிழக்கை மையமாகக் கொண்ட தலைமையை முன்னிலைப்படுத்தவேண்டும்



- கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலன்

நேர்காணல்: ரதன்

அண்மையில் ரொறன்ரோ வந்திருந்த கவிஞரும் அரசியல், சமூகசெயற்பாட்டாளருமான வ.ஐ.ச. ஜெயபாலனுடனான நேர்காணல்.




### பிரசல்ஸ் குண்டு வெடிப்பு முடிவா? தொடர்ச்சியா?

- அ. கணபதிப்பிள்ளை

பெல்ஜியம் நாட்டின் தலைநகரில் நடந்த குண்டுவெடிப்புக்கு உரிமை கோரியுள்ளார்கள் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர்.




### Autism Spectrum Disorders: வரைவிலக்கண மாற்றங்களும் விளைவுகளும்

- புஷ்பா கனகரட்ணம்


Autism ஒரு நோய்நிலை அல்ல, மாறாக ஒரு வழமைக்கு மாறுபட்ட நிலை அல்லது ஓர் ஒழுங்கின்மை.




### குறுகியகாலப் பயிற்சி நெறிகளும் வேலை வாய்ப்புகளும்

- த. வசந்தகுமார்

ஆயுட்காலம் அதிகரிக்கும்பொழுது, முதியவர்களைப் பராமரிப்போரும் அதிகளவில் தேவைப்படுகின்றார்கள்.




### மக்களின் கலைஞன், அரசியல் போராளி எஸ்.ரி. அரசு: ஒரு சகாப்தம்

- கந்தையா ஸ்ரீகணேசன்

கலைஞன், அரசியல் போராளி எஸ்.ரி. அரசு அவர்கள் பற்றிய பதிவு.


2016 தேர்தல்: முடியாத முதுவேனில் 9
ஆழி செந்தில்நாதன்

தன்வந்தரியின் மருத்துவப் பாரம்பரியம் 23
பாலா. சிவகடாட்சம்

குதிரை இல்லாத ராஜகுமாரன் 78
தெளிவத்தை ஜோசெப்

சொல்லத்தான் நினைக்கிறேன் 83
அருண்மொழிவர்மன்

மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்: ஓர் அரசியல் சாட்சியம் 86
மு. நித்தியானந்தன்

பதின்ம வயதுப் பாலைநிலம் 89
ஆன் ரைலர்
மொழியாக்கம்: என்.கே. மகாலிங்கம்

கலையெழில் நர்த்தகி வானதி தேசிங்குராஜா 97
வி. கந்தவனம்

அடுத்த புதன்கிழமை உன்னுடைய முறை 103
அ.முத்துலிங்கம்

தாய்ப் பால் 107
பூர்வீகன்

இவனையும்... இவனுக்குள் இருக்கும் இவனையும்... 109
ஆனந்தப்ரசாத்

இலங்கையில் 1958 - இனக்கலவரம் 113
உதயணன்

அற்லான்ரிஸ்! மறைந்திருக்கும் மர்ம நகரம் 118
நிமால் நாகராஜா


மேலும் ஆக்க விபரங்கள் 4ம் பக்கம்

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

# பிரசல்ஸ் குண்டு வெடிப்பு - முடிவா? தொடர்ச்சியா?

பெல்ஜியம் நாட்டின் தலைநகரான பிரசல்ஸில் மார்ச் 22ம் திகதி செவ்வாய்க்கிழமை மிகவும் சுறுசுறுப்பாக மக்கள் இயங்கிய காலை வேளையில் நடந்த குண்டுவெடிப்பு ஐ.எஸ்.ஐ.எஸ் (Islamic State of Iraq and al-Sham) என்ற இஸ்லாமிய அரசுக்கோட் பாட்டாளர்களின் செயலென அவர்களால் உரிமை கோரப்பட்டுள்ளது. இந்தப் பரிதாப நிகழ்வு சிரிய மண்ணில் வைத்து இனிப்பு வழங்கி ஐ.எஸ் தீவிர வாதிகளால் கொண்டாடப்பட்டதாகவும் சொல்லப்பட்டது. அத்துடன் ஐரோப்பா பற்றிஎரிகிறது என்ற ஒளிநாடாவும் அவர்களால் வெளியிடப்பட்டிருக்கிறது.

பிரசல்ஸின் சவென்ரெம் (Zaventem) விமானநிலையத்திலும் மெற்றோ சுரங்கவழி இரயிலிலும் வெடிக்கவைக்கப்பட்ட குண்டுகள் 34 பேரைக் கொன்றும் இருநூற்றுக்கணக்கானவர்களைக் காயப்படுத்தியுமிருந்தது.

விமானநிலையத்தில் வெடிக்கவைக்கப்பட்ட குண்டுகளில் ஒன்று தற்கொலைக் குண்டுதாரியாலும் மற்றது சூட்கேஸில் வைக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இதில் 14 பேர் உயிரிழந்தனர் இந்த வெடிப்புகளுக்கு 40 நிமிடங்களின் பின்னர் சுரங்கரயில் வண்டியில் மற்றொரு குண்டு வெடிக்கவைக்கப்பட்டிருந்தது. இதில் 20 பேர்கொல்லப்பட்டிருந்தனர். இந்தக் குண்டுவெடிப்புகள் பாரிஸ் குண்டுவெடிப்பின் தொடர்ச்சியா அல்லது புதிய மிரட்டலா என்ற கேள்விகளுக்கு விடை கிடைத்துக்கொண்டிருக்கிறது.

ஐரோப்பாவை உலுக்கிக்கொண்டிருக்கின்ற குண்டுவெடிப்புகள் ஐ.எஸ் தீவிரவாதிகளின் வலையமைப்பின் வழிவந்தவைகளாக இருக்கின்றன. பரிஸ் குண்டுவெடிப்புக்குப் பொறுப்பானவருக்கும் பிரசல்ஸ் குண்டுவெடிப்பாளருக்கும் இடையில் தொடர்பிருந்ததாக புலனாய்வாளர்களினால் சொல்லப்பட்டிருக்கிறது.

ரேறோன்ரோ ஸ்ரார் படி ஈராக் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தாங்கள் ஏற்கனவே ஐரோப்பாவிலுள்ள புலனாய்வாளர்களுக்கு விமான நிலையமும் புகையிரதமும் தாக்கப்படப்போகும் டேஸ் (Daesh) என்பதன் கடந்தமாதத் திட்டம் பற்றி எச்சரித்திருந்ததாகவும் அந்தத் தாக்குதல் பெல்ஜியத்தில் நடாத்தப்படலாம் எனத் தாம் குறிப்பிட்டிருக்கவில்லை எனவும் சொல்லப்பட்டிருக்கிறது.

டேஸ் என்ற சொற்பதம் ஐசிஸ் அல்லது ஐசில் (isis - IsiL, Islamic State of Iraq and Levent) ஐக் குறித்து நிற்கிறது. இந்தப்பதத்தைப் பிரயோகிப்பவர்களது நாக்குத் துண்டிக்கப்படும் என இஸ்லாமிய அரசுக்கோட்பாட்டாளர்கள் எச்சரித்திருக்கிறார்கள். அரபிய மொழி வார்த்தையான டேஸ்




ஸிக்கு காலடியில் போட்டு நசுக்குதல் என்பது பொருள் என்பதே அதற்கான காரணம் எனச் சொல்லப்படுகிறது. 2015ல் அவுஸ்திரேலியப் பிரதமராயிருந்த ரோனி அப்போட் பயன்படுத்தியதிலிருந்து அமெரிக்க இராசாங்கச்செயலர் ஜோண் கெரி பிரான்சின் பிரதமர் போன்றோரும் இதனைப் பயன்படுத்தினர். அல்-டாவ்லா அல்-இஸ்லாமியா அல்-ஈராக் அல்-ஸாம் (Al-Daw la Al -Islamiya Al-Iraq Al-Sham ) என்பதன் சுருக்கம் தான் இது.

ஐஸிஸ் பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஐரேப்பாவில் பரிஸ் குண்டுவெடிப்பு 129 பேருக்குக் காரணமாகவிருந்தது. இதுவே ஐரோப்பாவைவிழிப்படைய வைத்தாலும் இது திட்டமிட்ட நிகழ்வென்பதால் சூத்திரதாரிகளது வலையமைப்பின் பரம்பல் முறையினைக் கண்டுபிடிப்பதற்கு நாட்கள் தேவைப்பட்டன.

2004 மார்ச்மாதம் முதல் ஸ்பெயின் மட்றிட் இல் தொடங்கிய குண்டுவெடிப்புக்களும் பயங்கரவாதத் தாக்குதல்களும் லண்டன் பாரிஸ் பிரசல்ஸ் எனத் தொடர்கிறது. அதே வேளை முஸ்லிம்களுக்கெதிரான தாக்குதல்களும் இடம்பெற்றிருந்தன. 2014 மே மாதம் டேஸ் உறுப்பினர் பிரசல்ஸில் ஒரு தாக்குதலை நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அல்கைடாவும் டேஸ்சும் மேற் குறித்த ஐரோப்பிய நாடுகளை இலக்கு வைத்துத் தாக்குவதில் உள்ள காரணங்களைக் கண்டுகொள்ள வேண்டியது அவசியமாகும்.

வடஆபிரிக்காவிலிருந்து உள்வரக்கூடிய தான வாய்ப்பினை பிரான்ஸ் இஸ்பெயின் இங்கிலாந்து பெல்ஜியம் போன்ற நாடுகள் கொண்டிருந்தன. தொழிற்சாலைக்கான தொழிலாளர் தேவையுமிருந்தது. இந்தநாடுகள் முஸ்லிம்கள் வாழும் குடியேற்ற நாடுகளை வளஞ்சுரண்டும் நாடுகளாகவோ தமது பெருமையைப் பறைசாற்றும் நாடுகளாகவோ வைத்திருந்தன. தாராண்மைத் தன்மை கொண்ட இந்த நாடுகளில் சுதந்திரத்தைத் துஸ்பிரயோகஞ் செய்வதும் இலகுவாகவிருந்தது. ஏற்கனவேயிருந்த முஸ்லிம்களிலிருந்து இயக்கங்களுக்கு ஆட்சேர்ப்பதும் இலகுவான நடைமுறையாகவுமிருந்தது. தரவுகளின்படி பெல்ஜியத்தில் ஜனவரி 2015 முதல் 440 பேர் சிரியா- ஈராக்குக்கும் ஆட்சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்

பிரசல்ஸ் குண்டுவெடிப்பை நடாத்திய

**- அ. கணபதிப்பிள்ளை**

காலித், இப்ராகிம் ஆகிய இருவரும் சகோதரர்கள். மொறோக்கோவிலிருந்து குடியேறியவர்கள். தற்கொலைத் தாக்குதலில் அவர்கள் இறந்துவிட்டாலும் மூன்றாவது நபர் நஜிம் என்பவர் அவர்களை வழிநடாத்தியிருக்கிறார் என்று செல்லப்படுகிறது. பிரான்ஸ் குண்டுவெடிப்புக்கு காரணமாகவிருந்த சலா அப்டெஸ்லம் (salah Abdes lam) வெள்ளிக்கிழமை பிரசல்ஸில் வைத்துக் கைதாகி நான்கு நாட்களில் அதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக இக்குண்டுவெடிப்பு என்பது சில ஆய்வாளர்களது ஊகமாகும். இது பல கண்காணிப்புகளின் மத்தியிலும் நிகழ்த்தமுடியுமாகவிருந்தமை மிகவும் சாதுர்யமானமுறையிற் திட்டமிட்டிருந்தமை என்றே சொல்ல வேண்டும்.

கைது செய்யப்பட்ட சலா அப்டெஸ்லம் பிரசல்ஸிலிருந்து புதியதாக்குதலைத்தொடங்கியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். இதனால் இத்தாக்குதலை ‘தொடரப்போகும் தாக்கதலுக்கான முதன்நிலைத் தாக்குதல்’ என்று உயரதிகாரிகள் குறிப்பிட்டிருந்ததால் பாதுகாப்பு அதிகாரிகள் மிக அவதானமாக இச்செயற்பாட்டை அணுகிவருகின்றனர்.

பெல்ஜியத்தின் பிரதமர் சார்லஸ் மைக்கல் மூன்றுநாளைத் துக்கதினங்களாக அறிவித்திருந்தார். அத்துடன் நாட்டின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. பிரான்சினதும் பெல்ஜியத்தினதும் எல்லைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. 28 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் நீதி மற்றும் உள்துறை மந்திரிகள் நிலைமைகள் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

ஈராக்கிய புலனாய்வுத்துறையினர் தொடர்ந்தும் டேஸ் பயங்கரவாதிகளின் தாக்கதல்கள் இடம்பெறும் வாய்புகளிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். கைதுசெய்யப்படாத மூன்று முக்கிய தீவிரவாதிகள் அங்கு ஊடுருவியிருப்பதாகவும் குறிப்பிடுகின்றனர். இதனிடையே நடந்த தேடுதல் வேட்டையில் 10 பேர் வரை கைதாகியிருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதேவேளை 25ம் திகதி மேலும் இரண்டு குண்டுகள் வெடித்துள்ள

தொடர்தல் 10ம் பக்கம்

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...

தேயிலை - செடியல்ல மரம்! 8
மல்லியப்புசந்தி திலகர்

ஸ்கார்பரோ ரூஜ் ரிவர் தொகுதிக்கான சட்டமன்ற இடைத்தேர்தல் 11

உதட்டுப் பிளவு, அண்ணப் பிளவு என்பவற்றுக்கான சிகிச்சை 14
ரவிச்சந்திரிகா

வெளிப்புறத் தானியங்கி மின்சீராக்கி 17
கந்தையா செந்தில்நாதன்

Stephen Hawking: மாபெரும் அண்ட விஞ்ஞானி 18
எஸ். பத்மநாதன்

மூல உயிரணு தானம் 26
சிவாஜினி பாலராஜன்

வசந்தகால வீட்டுப் பராமரிப்பு 32
வேலா சுப்ரமணியம்

புற்றரையும் அழகுபடுத்தலும் 34
மகேன் சிங்கராஜா

கழுகு 36
செல்லையா சந்திரசேகரி

வரிகளைப் பற்றிய சிந்தனை வரும்போது குடும்பம் முக்கியமாகும்! 38

வரிகள், உங்கள் புதிய வாழ்க்கையை முதலீடு செய்ய உதவுகின்றன! 43

வருமானம் குறைந்த மக்களுக்கான இலவச சட்ட சேவை 44

கடன் மதிப்பீடு 47

நாங்கள் ஏழைகள் 48
கதிர் துரைசிங்கம்

கதை சொல்லல் 50
சாரதா குமாரசாமி

நடமாடும் உணவு விற்பனை அனுமதிச்சீட்டு 53
ஜீவா திசைராஜா

தற்கொலை செய்த ஸீரோ ஃபைற்றர் 54
குரு அரவிந்தன்

காப்புறுதி நட்டஈடு 57
செந்தூரன் புனிதவேல்

Transmission பாவனை 58
அதீசன் சர்வானந்தன்

பெற்றோர் பொய் கூறல் பற்றிய உண்மை 63
த. சிவபாலு

வன்னியின் நீர் வடக்கேயும் வருமா 67
அ. கணபதிப்பிள்ளை

என் நாடக உலக அனுபவத் துளிகள் 71

அரசையா அவர்களுக்கு எமது இறுதி வணக்கம் 71
கே. பாலேந்திரா

மாமனிதர் அரசையா 72
சோக்கல்லோ சண்முகநாதன்

நன்றி ஐயா! எல்லாவற்றுக்கும் நன்றி! 73
சர்வே

அரசையா - இரங்கல் வரிகள்! 73
ஈழக்கூத்தன் ஏ.சீ. தாசீசியஸ்.

கடல் கடந்த கலைப் பயணம் 73

காலம் தந்த கலைக்குவியம் அரசையா! 74

புலம் பெயர் மொன்றியல் தமிழர்களின் ஆரம்பகால கலை இலக்கிய முயற்சி! 77
லீலா சிவானந்தன்

பொன்விழாக் கலைஞர் ஜி.ஜே. ராஜ் 95
தெளிவத்தை ஜோசப்

எதற்காக அறுபது ஆண்டு வட்டம்? 85
பால. சிவகடாட்சம்

பொன் மாலைப் பொழுது 108
ரதன்

தமிழ்வலை - 06 111



# கிழக்கை மையமாகக் கொண்ட தலைமையை முன்னிலைப் படுத்தவேண்டும்

## - வ.ஐ.ச.ஜெயபாலன்

படம்: டிஜி கருணா

**நேர்காணல்: ரதன்**

**அண்மையில் ரொறன்ரோ வந்திருந்த கவிஞரும் அரசியல் சமூகசெயற்பாட்டாளருமான வ.ஐ.ச. ஜெயபாலனை தாய்வீடு பத்திரிகை சார்பாகச்சந்தித்தோம். அவருடனான உரையாடலில் இருந்து முக்கிய பகுதிகள் இங்கே**

**▸ கனடாவிற்கு நான்கு தடவை. வந்துள்ளீர்கள், புலம்பெயர்ந்த தமிழர்களில் எவ்வித மாற்றங்களை அவதானித்தீர்கள்?**

புலம்பெயர்ந்த நாடுகளில் ஆங்கிலம் பேசும் நாடுகள் நான்கு அவுஸ்திரெலியா, நியுசிலாந்து, இங்கிலாந்து, கனடா. 1956 இனக்கலவரத்துக்குப் பிறகு புலம்பெயர் நாடுகளில் மக்கள் அதிகம் நாடியது இங்கிலாந்து. 1980கள் வரை தமிழர்கள் அதிகம் நாடிச்சென்ற நாடுகள் ஆங்கிலம் பேசும் நாடுகளே. 1980களுக்கு பிற்பாடு எங்களை அறியாமலேயே உலகமயமாதலும் எங்களுக்குள் ஆதிக்கம் செலுத்துகின்றது. 1970களில் தரப்படுத்தல் வருகின்றது. மத்திய தரவர்க்க மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். தெருவில் இறங்கிப் போராடுகின்றார்கள். வசதியானவர்கள் தங்கள் பிள்ளைகளை இங்கிலாந்து போன்ற ஆங்கிலம்பேசும் நாடுகளுக்கு அனுப்புகின்றார்கள். 1980களில் ஒரு முக்கிய நிகழ்வு நடக்கின்றது. யாழ்ப்பாணத்தில் மத்தியதரவர்க்க மக்கள் தொகை விரிவடைகின்றது. 1970களில் ஏற்பட்ட விவசாய மாற்றம் நடுத்தரத்துக்குக் கீழ் உள்ள மக்களிடம் பணப்புழக்கத்தை அதிகரிக்கின்றது. இவர்களில் பலர் சவூதி போன்ற நாடுகளுக்கு தங்களது பிள்ளைகளையும் சகோதரங்களையும் தரகர்களுக்கு பணம் கொடுத்து அனுப்புகின்றார்கள். ஆசிரிய சமூகத்தினர் நைஜீரியா போன்ற நாடுகளை நாடுகின்றார்கள். 1970களில் ஏற்பட்ட சமூகமாற்றங்கள் 1980களில் பல இளைஞர்களை ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளை நோக்கித் தள்ளுகின்றது. இவர்களில் பலர் பின்னர் கனடா வருகின்றார்கள். பல இளைஞர்கள் நோர்வே சுவீடன் போன்ற நாடுகளுக்கும் செல்கின்றனர். கனடா போன்ற நாடுகள் குடியேற்றவாசிகளால் நிரம்பி இருப்பதனால் தமிழர்களுக்கு மிகவும் வசதியாகவுள்ளது. 2000 வரை கனடாவில் வரையற்ற இடம் அகதிகளுக்கு இருந்தது. இந்த நிலை மற்றைய நாடுகளில் இருக்கவில்லை. புலம்பெயர்ந்த மக்களிடம் பெரிய வரவேற்பைப் பெற்ற நாடாக கனடா திகழ்கின்றது. ஈழத்து அரசியலில் புலம்பெயர் மக்களின் செல்வாக்கு அதிகரிக்கின்றது. புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழர்களின் பெரிய களமாக கனடா மாறியது.

**▸ கனடாவில் அடுத்த தலைமுறை புலம்பெயர் தமிழர்கள், இளைஞர்களது பண்பாட்டு வாழ்வியல் எவ்வாறு அமையும்? அவர்களில் ஈழத்தில் தமிழர்களுக்கு இருந்த பண்பாட்டு வாழ்வியலின் எந்த அம்சங்கள் பாதிப்பை ஏற்படுத்தும்?**

ஈழத்து அரசியலில் கனடாவில் வாழும் மூன்றாவது சந்ததிகளும் ஆதிக்கம் செலுத்துவார்கள். இரண்டாவது சந்ததியினருக்கு பதின்மவயதின் முடிவுக்காலங்களில் ஈழத்தின்மீதான அக்கறை அதிகரிக்கின்றது. அடையாளத்தேடல் ஒன்று உருவாகுகையில் இது அதிகரிக்கின்றது. இதில் சாதகமான அம்சங்கள் இருக்கின்றபோதும் பிற்போக்கான சில அம்சங்களும் இருக்கின்றன என்பதை நாம் கவனத்திற்கொள்ளவேண்டும்.

குறிப்பாக சாதி. கலாச்சார அடையாளங்களை கொச்சைப்படுத்துவதில்தான் சாதியுள்ளது. எங்களுக்குள் பலவிதமான கருத்துவேறுபாடுகள் இருந்தாலும், கோயில்கள் கலாச்சாரத்தை அடுத்தகட்டத்துக்கு நகர்த்துவதில் முக்கிய பங்களித்து வருகின்றன. தென் ஆபிரிக்கா, மொரீசியஸ் போன்ற நாடுகளில் தமிழை கொஞ்சமாவது பிடித்து வைத்திருந்தது கோயில்கள் தான். கோயில்கள் மதத்தை நிலைநாட்டுவது என்ற நிலையிலிருந்து கலாச்சாரத்ததை அடுத்தகட்டத்துக்கு நகர்த்துவது என்ற நிலைக்கு உயரவேண்டும். வேறுசமயத்தை சாராதவர்களுக்கும் அங்கு இடமிருக்கவேண்டும். மதவழிபாடுகள் நடந்தாலும் அது ஒரு தமிழ் கலாசார நிறுவனமாக இருக்கவேண்டும். புலம்பெயர் நாடுகளின் சட்டதிட்டங்களுக்கமைய தனிநபர் நிறுவனங்களாக இல்லாமல் ஒரு சமூகநிறுவனமாக இருக்கவேண்டும். இது நிச்சயமாக இங்கு நடக்கும் என நினைக்கின்றேன் அப்படி இல்லாவிட்டால் அடுத்த தலைமுறையிலாவது கோயில்களை அமைப்புக்கள் நடத்தவேண்டும். ஜனநாயகத்தன்மை என்பது தமிழ்ப்படுத்தலை அதிகரிப்பதனை செய்யவேண்டும். இதனை ஊடகங்கள் முன்னெடுத்துச் செய்யவேண்டும். சமயத்தில் ஈடுபாடு இல்லாதவர்கள்கூட கோயில்களில் உள்ள வளங்களைப் பயன்படுத்தவேண்டும். கனடா எனக்கு நம்பிக்கையூட்டுகின்றது.

மற்றது, மிக முக்கியமாக எங்களது சாத்தியப்படாத உணர்வுகளால் கனடிய வாழ்வியல் யதார்த்தங்களை நிராகரிக்கின்ற தன்மை எங்களிடம் உள்ளது. குறிப்பாக முதியோர் பற்றியது. அவர்களை வீட்டில் வைத்திருக்கவேண்டும், பாதுகாக்கவேண்டும் என்று சொல்லி அவர்களை தங்களது சொந்த நலன்களுக்காக பாவிக்கின்றார்கள். பிள்ளைகள் கூட அவர்களிடம் கடுமையாக நடக்கின்றார்கள். முதியோர் விடயத்தில் கனடாவில் பெரும்பாலான தமிழர்கள் கனடிய சட்டதிட்டங்களையும், மனித உரிமைகளையும் மீறுவதாகவே நான் நினைக்கின்றேன். இது ஒருவகை அராஜகத்தனம். இது இளந்தலைமுறையைப் பாதிக்கும். முதியோரையும், பெண் பிள்ளைகளையும் பெற்றோர் நடத்தும் முறையை கனடிய அரசாங்கம் கண்காணிக்கவேண்டும்.

**▸ கனடாவிற்கு பல தடவைகள் வந்துள்ளீர்கள். கனடாவின் முதன்மைக் குடிகளை சந்தித்துள்ளீர்களா? அவர்களைப் பற்றிய உங்கள் கருத்துகளை அறிய ஆவலாக உள்ளோம்.**

துரதிஸ்டவசமாக அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இனுவிற் மாதிரி முதன்மைக் குடிகளுக்கு ஓரளவு அதிகாரங்கள் உண்டு. அவுஸ்திரேலியா, அமெரிக்காவை விட கனடாவில் முதன்மை குடிகளுடனான அணுகுமுறை ஆரோக்கியமானதாக இருப்பதாக தகவல்கள் அடிப்படையில் நினைக்கின்றேன்.

பெண்கள் மீது வன்முறைகள் நடப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நான் முதல் முறை வந்தபோது அவர்களைச் சந்திக்க விரும்பினேன். போதிய வளங்கள் இன்மையால் சாத்தியப்படவில்லை.

எங்களது கலாச்சார நிகழ்வுகளில், பழைய மாணவர் நிகழ்ச்சிகளில் பூர்விககுடிகளின் நிகழ்ச்சிகளை அரங்கேற்றவேண்டும். அவர்களைப் பற்றி அக்கறையின்மை ஆரோக்கியமானதல்ல. அவர்களது அடையாளத் தேடலையும், சிக்கல்களையும் நாங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

**▸ நீங்கள் முஸ்லீம் மக்கள் மத்தியில் நீண்ட காலம் அரசியல் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளீர்கள். மத்திய கிழக்கில் தோன்றியுள்ள முஸ்லீம்களின் இன்றைய பிரச்சினைகளையும், இலங்கையில் தோன்றியுள்ள முஸ்லீம்களின் பிரச்சினைகளையும் எவ்வாறு பிரித்துப் பார்க்கின்றீர்கள்?**

அமெரிக்கா பெற்றோலிய பொருளாதாரத்தை தன்னகத்தே கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதற்கும், இஸ்ரேலின் நலன்

*தொடர்தல் 7ம் பக்கம்*



Lower rates.
Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address
797 Milner Avenue, Unit 200
Scarborough, ON M1B 3C3

குறைந்த கட்டணங்கள்
பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும் எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators®
A Better Place For You®

# கிழக்கை மையமாக...

5ம் பக்கத் தொடர்ச்சி...

களை பாதுகாப்பதற்கும் விரும்புகின்றது. இதனால் மத்தியகிழக்கு நாடுகளின் ஆட்சி அதிகாரத்தை அமெரிக்காவே தீர்மானிக்கின்றது. தீர்மானிக்க விருப்பமுமாக உள்ளது மத்திய கிழக்கு நாடுகள் தங்களது பொருளாதாரத்தை தாங்களே தீர்மானிப்பதும் தங்களது சமூக, பொருளதார முன்னேற்றங்களை தாங்களே தீர்மானிப்பதும் முக்கியமானது. நாடுகளின் எல்லைகள் மீள வரையறுக்கப்பட வேண்டும். லிபியா, சிரியா போன்ற நாடுகளில் இயல்பான ஆட்சிமாற்றங்கள் ஏற்பட இடங்கொடுக்கப்படவில்லை. இலங்கையில் சுனி முஸ்லீம்கள் சூபி, வகாபி போன்ற பிரிவுகளே உள்ளன. அங்கு சியாவில்லை. சுனி, சியாவிற்கிடையில் மோதல்களும் இல்லை.


- **மதத்தையும், மொழியையும் பிரித்துப் பார்க்கின்றீர்களா? முஸ்லீம்களின் அரசியலை, கலாச்சாரத்தை மதம்தான் தீர்மானிக்கின்றதா?**

தங்களது அரசையும், மதத்தையும் அவர்களே தீர்மானிக்க வேண்டும். தேசிய இன வரம்புகளை தீர்மானிக்கின்ற காரணிகளாக அங்கு மதமும் மொழியும் உள்ளது. பங்களாதேஷ், பாகிஸ்தான் பிரிவிற்கு சுனி, சியா என்பதற்கு அப்பால் மொழியிலும் வேறுபாடு உள்ளது. மதமும் ஏனைய அடையாளங்களும் இருப்பது அங்கு இயல்பு. அதனை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். உதாரணமாக: பெண்களின் பல விடயங்கள் ஆண்களுக்கு புரிந்துகொள்வது கடினமாக இருக்கும். ஆனால் பெண்களுக்கு அது இயல்பானது. நாங்கள் சைவமும், தமிழும் என்று தான் கூறியிருக்கின்றோம். மன்னாரில் திருக்கேதீஸ்வரத்தில் கந்தையா வைத்தியநாதன் காலத்தில் மத அடையாளத்தை முன்னிறுத்தியிருக்கின்றோம். என்றபடியால் நாங்களும் மதத்தை முன்னிறுத்தவில்லை என்று கூறமுடியாது.

- **தீராநதிக்கு நீங்கள் அளித்த செவ்வியொன்றில் இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சினைக்கு இந்தியா அவசியம் எனக் கருத்து தெரிவித்துள்ளீர்கள். இன்றைய, அதாவது விடுதலை இயக்கங்கள் அழிக்கப்பட்ட பின்னர் தமிழ்மக்களின் எதிர்காலம் எப்படி இருக்கும்? வடக்கு கிழக்கு மக்களின் ஒற்றுமை என்பது சம்பந்தர் காலத்தின் பின்னும் தொடருமா?**

பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் மொழியாலும், எதிரியாலும் ஒன்றிணைக்கப்பட்ட மக்கள்தான் தமிழ் மக்கள். வரலாற்று ரீதியாக யாழ்ப்பாண இராச்சியம் என்பது முல்லைத்தீவு, மன்னார் பிரதேசங்களை இணைத்த பிரதேசமாகவேயிருந்தது. வன்னி, தெற்கு திருகோணமலைப் பிரதேசங்கள் பெரும்பாலும் சிற்றரசர்களால் ஆளப்பட்டது. வடக்கு திருகோணமலை, அம்பாறை வன்னிமையர் என்ற குறுநிலங்களாக இருந்தது. இங்கு முஸ்லீம், தமிழ் குறுநிலங்கள் கண்டியரசோடு இணைக்கப்பட்டிருந்தது. கண்டியரசில் தமிழர்களின் செல்வாக்கு அதிகமாக இருந்தது. அத்துடன் உத்தியோக மொழியாகவும் தமிழிருந்தது.

சனத்தொகை மற்றும் வளங்கள் அதிகமிருந்த வடபிரதேச அரசியல்வாதிகள் கிழக்கு பிரதேசத்தை தங்களுடன் இணைப்பதற்கான எந்த வேலைத்திட்டங்களையும் செய்யவில்லை. இயக்கங்களும் அமைப்புரீதியாக செய்யவில்லை. அதற்கு அவர்களுக்கு அவகாசம் இல்லை என்ற பதிலளிக்கப்பட்டபோதும், உண்மையில் அந்த சிந்தனையில்லை என்பதே உண்மை. அந்த சிந்தனை இல்லாதபோது ஈழம் என்பது பொய். பெந்தோட்டை பீச்சுக்கு போகவேண்டும் என்று சிந்திப்பவர்கள், திருகோணமலை பீச்சுக்கு போகவேண்டும் என்று சிந்திப்பதில்லை. மட்டக்களப்புக்குப் போகின்றவர்கள், அம்பாறைக்குப் போகவேண்டும் என்று யோசிப்பதில்லை. இந்த அணுகுமுறை இல்லாதவர்கள் ஈழத்தைப் பற்றிபேசுவது அபத்தமானது. புலம்பெயர் அமைப்புகளும் சரி, ஈழ அமைப்புகளும் சரி கிழக்கு மக்களுடன் இணைந்து வேலை செய்யாமல், அவர்களை உள்வாங்காமல் ஈழம் என்று சொல்லமுடியாது. யாழ்ப்பாண அமைப்புக்கள், ஈழ அமைப்புக்களாக முடியாது. எதிரியினால் கிழக்கு மக்கள் வடக்குடன் தள்ளப்பட்டுள்ளார்கள். கிழக்கில் முஸ்லீம்-தமிழ் முரண்பாடுகள், சிங்கள குடியேற்றங்கள் அவர்களை வடக்குக்குத் தள்ளியுள்ளது. இது ஒரு தற்காலிக இணைப்பே. புலம்பெயர் அமைப்புக்களும், ஈழ அமைப்புக்களும் உள்ளார்ந்தரீதியாக வட-கிழக்கு அமைப்புக்களாக மாறி முழுமையான ஈழ அமைப்பாக மாறவேண்டும். அது மிக முக்கியமானது. சம்பந்தர் தலைமைப் பதவியேற்றது மிக முக்கியமானது. அவ்வாறான நிலைப்பாட்டை தொடர உள்ளார்ந்தரீதியாக செயற்பட வேண்டும். இங்கு கூட அமைப்புக்கள் யாழ்ப்பாண அமைப்புகளாகவே உள்ளன. கனடாவிலிருந்து இலங்கைக்கு போகின்றவர்கள் கிழக்கிற்கு போய் வருகின்ற சூழலை உருவாக்குங்கள்.



கொழும்பை மையமாகக்கொண்ட ஒரு தலைமையையோ அல்லது யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட ஒரு தலைமையையோ முன்னிலைப்படுத்துவதை விட கிழக்கை மையமாகக்கொண்ட தலைமையை முன்னிலைப்படுத்த வேண்டும். செல்வநாயகம் காலத்திலிருந்தது போல் ஊர்க்கட்சிக் கிளைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த கட்சிகளாக இப்பொழுது உள்ள கட்சிகள் மாறவேண்டும். வடக்கு-கிழக்கு சமத்துவ நிலை கட்சிக்குள் இருக்கவேண்டும். இதனை முதலில் செய்வது தழிழரசுக் கட்சியாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் அவர்களிடம் அந்த நிலைப்பாடு இல்லை. வன்னியசிங்கம், இராஜவரோதயம் போன்ற கம்யூனிஸ்ட்களுடனும், தொழிற்சங்களுடனும் தொடர்பாக இருந்தவர்கள் தமிழரசுக் கட்சியை ஒரு முழுமையான அமைப்புரீதியான கட்சியாக மாற்றினார்கள். இன்று அந்த நிலை இல்லை.

இந்தியாவின் இலங்கை நிலைப்பாடு என்பது முக்கியமானது. இந்தியா என்பது சிங்களவர்களைப் பொறுத்தவரை வரலாற்று ரீதியாக அச்சம் கொடுக்கும் நாடாகவே தொடர்ந்து இருந்துவந்துள்ளது. இந்தியா பல நாடுகளாக இருந்த காலங்களிலுமே, சோழ, பாண்டிய, கலிங்க அரசுகள் இலங்கையைக் கைப்பற்றியுள்ளன. தொடர்ச்சியாக அவர்கள் இந்தியாவை எதிர்கொண்டுள்ளார்கள். இன்றைக்கு சீனா, அமெரிக்கா, இந்தியா இந்த மூன்று நாடுகளையும் தமது அரசியல் வளையத்துக்குள் சமாளித்துவருகின்றார்கள். ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை தமிழ்நாடு மிக முக்கியமானது. சிங்களவர்களைப் பொறுத்தவரை அது அச்சுறுத்தல்.

இந்தியாவில் தேசிய கட்சிகள் நாட்டை ஆண்ட நிலை மாறியுள்ளது. மாநில கட்சிகள் அரசை தீர்மானிப்பதில் முக்கிய பங்களிக்கின்றன. இன்று தமிழ்நாட்டின் குரல் மத்தியில் ஓங்கிக் கொண்டு செல்கின்றது. வடக்கில் அதிகமாகவும், கிழக்கில் குறுகிக் கொண்டு போகின்ற சனத்தொகை அத்துடன் புலம்பெயர்வால் சனத்தொகை இழப்பு. இப்படியிருந்தும் தமிழீழம் என்பதை சாத்தியப்படுத்தும் சக்தி என்றால் அது தமிழ்நாடு தான். இந்திரா காந்தி இருந்த காலங்களில் தமிழ்நாடு பெரிய பங்களித்துள்ளது. பயிற்சிகள் அங்கு தான் நடைபெற்றுள்ளன. தமிழ்நாட்டு மக்களின் ஆதரவில்லாமல் நாங்கள் போராட்டத்தில் இவ்வளவு தூரத்தைக் கடந்திருக்க முடியாது. இந்தியா என்று சொல்கின்றபோது தமிழ்நாட்டையும் உள்ளடங்குகின்றது. தமிழ்நாட்டைத்தவிர்த்து நாங்கள் கதைக்க முடியாது. உலகமயமாதல் தமிழ்நாட்டிற்கும், உலகில் பரந்து வாழ்கின்ற தமிழர்களுக்கும் ஒரு நெருக்கமான உறவை ஏற்படுத்துகின்றது. நீங்கள் ஆச்சரியப்படுகின்றளவிற்கு தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் திருமணங்கள் நடைபெற்று வருகின்றன. போதிய ஆய்வுகள் மேற்கொண்டால் இதனை உறுதிப்படுத்தலாம். பதிவு செய்யலாம்.

ராஜீவ் காந்தியின் கொலையானது பல பாதகங்களை எமக்கு ஏற்படுத்தியுள்ளது. அது மிகப் பெரிய தவறு. எனக்கு புலிகளுடன் மிகப்பெரிய நெருக்கமான உறவு இருந்தது. அவர்களுடன் இது பற்றி வன்னிக்குச் சென்றபொழுது கதைத்துள்ளேன். நான் பல நாட்டு இராஜதந்திரிகளுடன் கதைத்தபொழுது அவர்கள் குறிப்பிட்டவிடயம் மிக முக்கியமானது. “தமிழ் மக்கள் எங்களது நாட்டில் வாழ்கின்றார்கள். உங்களது அமைப்புக்கள் அங்கும் இயங்குகின்றன. அங்கு எமது அரச சட்டங்களை மீறி வன்முறைகளில் ஈடுபட்டுள்ளார்கள். நீங்கள் தற்கொலைப் போராளிகளின் பொறிமுறைகளில் அதி உச்சத்தில் உள்ளீர்கள். வேறு ஒரு நாட்டில் அந்த நாட்டின் சட்டத்தை மீறி அந்நாட்டின் மிக முக்கிய தலைவரைக் கொன்றுள்ளீர்கள். உங்களது அமைப்பு, எங்கள் நாட்டில் இருப்பது எமக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது” என்று எனக்கு சொல்லியுள்ளார்கள். ராஜீவ் காந்தி கொலையானது ஒரு சர்வதேசப் பிரச்சினையாகவும், சர்வதேசத்துக்கு ஒரு அச்சுறுத்தலாகவும் மாறிவிட்டது. தற்கொலைப் போராளிகள் பொறிமுறையை வேறு அமைப்புக்களுக்கு மாற்றி விடுவார்கள் என்ற அச்சமும் சர்வதேசத்திடமுண்டு. புலிகளின் மீதான சர்வதேச தடைக்கு இது முக்கிய காரணமாக அமைந்துள்ளது. எனவே தடைசெய்துவிட்டு ஒரு கதவைத் திறக்கின்றார்கள். ஹிலறி கிளின்டன் முஸ்லீம் தீவிரவாதிகளையும், புலிகளையும் ஒரே மாதிரியாக பார்க்கவில்லை என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சராக இருந்தபோது தெரிவித்துள்ளார். முஸ்லீம் தீவிரவாதிகள் ஐடியலிஸ்ட் ரெரரிசம் (கொள்கைப் பயங்கரவாதம்), புலிகளது பிராந்திய தீவிரவாதம். கொள்கை தீவிரவாதம் முடிவற்றது. தொடர்ந்து கொண்டே இருக்கும். அது ஒரு காலத்திலும் முடியாது. பிராந்திய தீவிரவாதம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குரியது மட்டுமே. அதனால்தான் ஒரு கதவைத் திறக்கின்றார்கள். ராஜீவ் காந்தியின் கொலை நடைபெற்றிருக்காவிட்டால் எமது பிரச்சினைக்கு சாதகமான முடிவு கிடைத்திருக்கலாம்.

- **போருக்கு பின்னான இலக்கிய சூழல் மிக மோசமாகவுள்ளதாக நுஃமான் உட்பட்ட பலர் குறிப்பிட்டுள்ளார்கள். ஒரு கவிஞர் என்ற வகையிலும் ஒரு சமூக, அரசியல் செயற்பாட்டாளர், போராளி என்ற வகையில் நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

இலக்கியம் என்பது எந்த நாட்டிலும் பெரியளவில் வணிக இலக்கியமாகவும் அல்லது ஜனரஞ்சக இலக்கியமாகவும், சிறயளவில் சீரியதாகவும் இருக்கும். என்னைப் பொறுத்தவரை தரமானவை வெளிவருகின்றன. ஊடகங்கள் போருக்குப் பின்னான சீரிய, தரமான இலக்கியங்களை தமிழிலிருந்து வேறு மொழிகளுக்கும், வேறு மொழிகளிலிருந்து தமிழுக்கும் மொழிபெயர்ப்பு செய்ய

*தொடர்தல் 10ம் பக்கம்*



# தேயிலை - செடியல்ல மரம்!

**மலையகப் பெருந்தோட்ட மக்களின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு நடைமுறைக்கு வரவுள்ள 'ஐந்தாண்டுத் திட்டத்தை' முன்னிறுத்திய ஒரு பார்வை.**

-மல்லியப்புசந்தி திலகர்-

இலங்கை என்றவுடன் அதனை வெளிநாடுகள் இலகுவாக அடையாளம் கண்டு கொள்ளக் குறிகாட்டியாக இருப்பது தேயிலை. கிராமிய பொருளாதார முறைமையில் காணப்பட்ட இலங்கை நாட்டை ஏற்றுமதி நோக்கிய பொருளாதார முறைமைக்குள் மாற்றிப்போட்டது இந்த தேயிலைத் தொழில் துறையே.

கோப்பியில் ஆரம்பித்து அது நோய்வாய்ப்பட்டு அழிவை நோக்கிச் செல்ல தேயிலை மற்றும் இறப்பருக்கு மாறிய தொழில் துறை இலங்கையின் 'நிலத்தில்' அந்நிய (பிரித்தானிய)'முதலீட்டினாலும்', 'முயற்சியினா'லும் மாத்திரம் உருவாகியது அல்ல. அந்நிய 'உழைப்பினாலும்' உருவானது என்பது அழுத்தமாக சொல்லப்படுதல் வேண்டும். பிரித்தானியர் அந்நியராக தமது நாட்டில் இருந்து முதலையும், தமது ஆதிக்கத்தில் இருந்த இந்தியாவில் இருந்து அந்நியர்களாக உழைப்பையும் (தொழிலாளர்களையும்)அழைத்து வந்தனர். இவ்வாறு இலங்கையை நோக்கி இந்திய தொழிலாளர்கள் இடம்பெயர இரண்டு காரணிகள் செல்வாக்கு செலுத்தின

**1. இழுக்கும் காரணி (Pulling factor)**
**2. தள்ளும் காரணி (Pushing factor)**

இலங்கை நாட்டுக்குப் போனால் பெரும் செல்வம் சேர்க்கலாம், கௌரவமாக வாழலாம் என்பது தொழிலாளர்களை இழுத்த காரணியாக இருந்த அதேநேரம், இந்தியாவில் நிலவிய பண்ணையார் - அடிமை (Master and Slave) முறைமையும், வறுமையும் அதிலிருந்த விடுபட இலங்கை நோக்கிய தள்ளிய காரணிகளாகவும் அமைந்தன.

எனவே இந்த இரண்டு காரணிகளுக்குள்ளும் பொருளாதாரமும் (Economic) சுய கௌரவமும் (dignity) இந்திய தொழிலாளர்களை இலங்கைக்கு அந்நிய உழைப்பாக அழைத்து வந்தது.

இவ்வாறு அழைத்து வந்தபோது அவர்களின் பயணம் இலகுவானதாக அமைந்துவிடவில்லை. தென்னிந்தியாவில் இருந்து கால்நடையாக மண்டபம் வரை நடந்தும் பின்னர் சிறிய படகுகளில் அளவுகக்கதிகமாக ஏறிய கடலைக்கடந்தும் (இதன் போது ஆதிலட்சுமி எனும் படகு கவிழ்ந்து பல லட்சம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டதாக சொல்லப்படுகின்றது.) பின்னர் மன்னாரில் இருந்து மாத்தளை வழியாக நடை பயணமாகவே மலைநாட்டு பகுதிகளுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அவர்களை தள்ளியும், இழுத்தும் வந்த காரணிகளில் பொருளாதார காரணிகள் என்பது அதுவரை ஆண்டான் அடிமை முறையில் முறைமைப்படுத்தப்படாத நிலையில் இருந்து முறைமைப்படுத்தப்பட்ட பொருளாதார அடிமைகளாக்கின. அவர்களது எண்ணிக்கை, வேலைநேரம், வேலை முறைமை என்பன மேலைத்தேய நிர்வாக முறைமைக்குள் உள்வாங்கப்பட்டன. அடிமைகள் (Slaves என்ற நிலையில் இருந்தவர்கள் கூலிகளாக (Coolis) மாற்றப்பட்டனர். Cooli எனும் ஆங்கில அகராதிக்கு அந்தச் சொல்லை வழங்கியவர்கள் இந்த தொழிலாளர் மக்களே. இந்த கூலிமக்கள் வாழ்ந்த வேலைப்பிரதேசத்திற்குள் வெளியாள் உட்செல்ல முடியாதவாறு இறுக்கமான பிடிகள் இருந்தன.

இந்த கட்டத்தில்தான் தொழிற்சங்கம் எனும் முறைமை அவர்களை நோக்கி வருகிறது. இறுக்கமான முகாமைத்துவ கட்டமைப்புக்குள் சிக்கியிருந்த மக்களுக்குள் இந்தியாவில் இருந்து பத்திரிகையாளராக இலங்கை வந்த நடேசய்யர் புடவை வியாபாரி உருவில் உள்நுழைந்து தொழிற்சங்கத்தை அறிமுகம் செய்கிறார். இவ்வாறு இந்த மக்களுக்குள் உள்நுழைந்த முதலாவது கூட்டிணைவு 'தொழிற்சங்கத்தினால்' ஆனது. அதனால்தான் இன்றும் அவர்களது அரசியல் கட்டமைப்பு கூட தொழிற்சங்கத்தினாலானதாகவுள்ளது. ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் பின்னால் தொழிற்சங்கம் இருக்கும். இங்கு மாத்திரம் எல்லா தொழிற்சங்கங்களுக்குள்ளும் பின்னால் அரசியல் இருக்கும். இது உலக நடப்பில் இருந்து முரண் என்பது சிறப்பு பண்பு.

இந்த தொழிற்சங்க கட்டமைப்பு வழிவந்த அரசியல் பிரவேசம் 1930களில் அந்நியரிடமே அரசியல் கோரிக்கையை முன் வைக்காத அப்போதைய ஆட்சி அமைப்பில் நடேசய்யர் முதலானவர்களை அமர வைக்கிறது. நடேசய்யர் வகுத்து விட்ட வழியில் அவரை ஒதுக்கிவிட்டு 'இந்திய இலங்கை காங்கிரஸ்' இந்த மக்களிடை சென்றது. ஹோல்புறுக், சோல்பெரி ஆணைக்குழு அரசியல் அமைப்பில் இந்திய வம்சாவளியினரான இந்த மக்கள் பற்றிய சரத்துகள் வரத்தொடங்குகின்றன. ஏனெனில் இவர்கள் இலங்கையில் இரண்டாவது பெரிய சனத்தொகையாக இருந்தனர். சோல்பெரி அரசியல் அமைப்பின்படி இவர்களில் இருந்து 14 பேர் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு வரும் ஏற்பாடு உருவானது. ஆனாலும் 1947 நாடாளுமன்ற அவையில் 7 பிரதிநிதிகளால் அது நிரப்பப்பட்டது. இது இந்த மக்களிடையே தோன்றிய பெரும் அரசியல் எழுச்சி. எனினும் இந்த எழுச்சி மிக நீண்டாகலத்திற்கு எடுத்துச் செல்லப்படவில்லை. 1948ம் ஆண்டு இந்த நாட்டில் இவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வாக்குரிமை பறிக்கப்பட்டது. இதனால் அரைநூறாண்டுக்கு மேலாக அவர்களுக்குள் வந்திருந்த அரசியல் எழுச்சி சூனியமானது.

வாக்குரிமை இழந்த பின்னர் தொழிற்சங்கங்களை மாத்திரமே சமூக அமைப்பாக பெற்ற மக்கள் தொடர்ந்தும் தொழில் விடயங்களுக்கு மாத்திரம் அன்றி சமூக விடயங்களுக்காகவும் தொழிற்சங்கங்களில் தங்கயிருக்கும் நிலையை உருவாக்க இன்றும் தொழிற்சங்கங்களிலேயே தங்கியிருக்கும் கலாசாரத்தை தேற்றுவித்தது. எனவே தொழில் சங்கங்கள் தொழில் ரீதியான (Industry) விடயங்களுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை சமூகம் சார்ந்து கொடுக்காத நிலையில் சமூகம் சார்ந்த (Social Development) பௌதீக அபிவிருத்தி விடயங்கள் புறந்தள்ளப்பட்டே வந்தது.

ஆனாலும் தங்களது வாக்குரிமையை இந்த நாட்டில் இழந்ததன் பின்னர் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தமக்கான தேசம் பற்றிய பண்பாட்டுப்புரட்சி (Cultural Revolution) இந்த மக்களிடத்தில் ஏற்பட தாங்கள் வாழும் பிரதேசத்தை 'மலைநாடு' என்றும்(Hill country) தங்களை 'மலைநாட்டு மக்கள்' என்றும் அழைக்கத் தொடங்கினர். 1950களில் தமது எழுத்துக்களின் ஊடாக சி வி.வேலுப்பிள்ளை போன்றவர்களை இதனைப் பதிவு செய்துள்ளனர். இந்த பண்பாட்டுப்புரட்சியில் கூலியாக வந்தவர்கள், இந்திய தொழிலாளர்களாக, பெருந்தோட்டத் தொழிலாளர்களாக பெயர்பெற்று பின்னர் மலைநாட்டுத் தமிழர்களாக வடிவம்பெறுகின்றனர்.

இந்த கட்டத்தில் அவர்களுக்கு வந்துசேர்ந்த இன்னுமோர் பேரிடர் ஸ்ரீமா- சாஸ்திரி ஒப்பந்தம். 1964 ஆண்டு செய்யப்பட்ட இந்த ஒப்பந்தம் காரணமாக அதுவரை வாக்குரிமையை மாத்திரம் இழந்த மக்களுக்கு தங்களது குடியுரிமை பற்றிய கேள்வியைத் தோற்றுவிக்கின்றது. இவர்கள் இந்த நாட்டுக்கு உரியவர்கள் என்கிற நிலைமை இவர்களது வளர்ச்சியிலும் இருப்பிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்த 1960களில் இவர்களிடம் உருவாகிய இளைய தலைமுறை 'ஆத்திர பரம்பரை' யாகவே வளர்ந்தது. அவர்களுக்கு பல விடயங்கள் ஆத்திரத்தை ஏற்படுத்தின. தங்களது ஒரு பகுதியினர் இந்த நாட்டில் இருந்து வெளியேற வேண்டும் என்ற நிலையில் 'தமக்கான தேசம்' (Nationality) குறித்த கேள்வி வலுவாக எழ ஆரம்பித்தது. இந்த கட்டத்தில் தான் தம்மை மலைநாட்டு மக்கள் என அழைத்து வந்த மக்கள் 'மலையகம்' தமது தேசியம் எனும் நிலையை உணர்ந்தனர். தம்மை மலையக மக்கள் என்று அழைக்கவும் தலைப்பட்டனர்.

எவ்வாறெனினும் இந்திய, இலங்கை அரசுகள் எடுத்த முடிவினை இந்த மக்களால் மாற்ற முடியவில்லை. மூன்று தலைமுறைக்கு முன்னர் தாம் எங்கிருந்து வந்தோம் என்று அறியாத புதிய தலைமுறையினர் மீண்டும் இந்தியா நோக்கி திருப்பி அனுப்பப்பட்டனர. இதனால், 1961ம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டில் இலங்கையில் இரண்டாவது அதிகூடிய சனத்தொகையாக இருந்த இந்த மக்கள் 1981ம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டில் நான்காம் இடத்திற்கு தள்ளப்பட்டனர். அதேநேரம் அவ்வப்போது இடம்பெற்ற இன வன்முறைச் சம்பவங்கள் இந்த மக்களை அந்நியர்களாகவும் (இந்தியர்களாகவும்) தமிழர்களாகவும் கருதி தாக்குதலுக்கு உட்படுத்தியது. ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தமே இதற்கு பிரதான காரணமாகது. இன வன்முறைகளில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கு இந்த மக்களுக்கு இரண்டு தெரிவுகள் இருந்தன.

1. தங்களுக்கு என திறந்து விடப்பட்டுள்ள ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் 'தாயகம் திரும்புகிறோம்' என்கிற பெயரில் இந்தியா திரும்புவது.

2. இந்தியா செல்ல விண்ணப்பிக்காத விரும்பாத நிலையில் தம்மை பாதுகாத்துக் கொள்ள அப்போது பாதுகாப்பானது என கருதிய இலங்கைத் தமிழர்கள் அதிகம் வாழ்ந்த வன்னிக்கு குடிபெயர்வது.


இந்த இருவித குடிபெயர்வுகளைக் கடந்து மலையகப் பெருந்தோட்டங்களில் வாழ்ந்த மக்கள் தங்கள் தாயகப்பிரதேசமாகவும், வாழ்விடப் பிரதேசமாகவும் மலைநாட்டு தேயிலை, இறப்பர் தொழில்துறை சார்ந்தே நிற்க வேண்டிய நிலை தோன்றியது. இதில் 1972ம் ஆண்டு வரை பிரித்தானிய கம்பனிகளில் நிர்வாகத்தின்கீழ் இருந்த பெருந் தோட்ட முகாமைத்துவும் அப்போதைய காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் அரசுடமையாக்கப்பட அரச கூட்டுத்தாபனங்களின் தேயிலை, இறப்பர் தோட்டங்கள் நிர்வகிக்கப்படலாயிற்று.

அதேநேரம் 1977ம் ஆண்டு வரை அமுலில் இருந்த இறக்குமதி முதலீட்டு பொருளாதார முறைமைக்கு பதிலாக ஏற்றுமதி நோக்கிய பொருளாதார முறையும் இந்த நாட்டில் திறந்த பொருளாதார முறையும் அறிமுகப்படுத்தப்பட அதுவரை காலம் ஏற்றுமதியில் அதிக பங்களிப்பு செய்த தேயிலைக்கு மாற்றாக வேறு ஏற்றுமதிகளில் கவனம் செலுத்தத்தொடங்கியது. தேயிலை, இறப்பர் கைத்தொழில்கள் சரிவை நோக்கிச் செல்ல 1992ம் ஆண்டு அரச கூட்டுத்தாபனங்களில் இருந்து மீண்டும் தனியாருக்கு ஒப்படைக்கப்பட்டு இன்றுவரை அதுவே தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆக 200 வருடகால கோப்பி, தேயிலை, இறப்பர் பயிர்ச்செய்கை வரலாற்றில் வெறும் 20 வருடங்கள் மாத்திரமே இலங்கை அரச



தொடர்தல் 10ம் பக்கம்

# 2016 தேர்தல்: முடியாத முதுவேனில்

**ஆழி செந்தில்நாதன்:**
அரசியல் விமர்சகர், பச்சைத் தமிழகம் கட்சியின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவர்.


2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேர வைத் தேர்தலுக்கான அரசியல் சதுரங்க ஆட்டத்தில் எல்லாமே புதியதாக நடப்பது போலவும் இதுவரையிலான தேர்தல்களை விட வித்தியாசமாக ஏதோ நடக்கப்போகிறது என்றும் வழக்கம்போல ஊடகத்தினரும் அரசியல் விமர்சகர்களும் பேசத் தொடங்கி யிருக்கிறார்கள். உண்மை என்ன? மே மாதம் மூன்றாம் வாரம் வாக்கெடுப்பு முடிந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப் படத் தொடங்கி ஒரு சில மணி நேரங்களில் அடுத்த ஐந்தாண்டுக்கான தமிழகத்தின் தலைவிதி வெளிப்படும்வரை, எல்லா யூகங்களும் வெறும் யூகங்களே. உண்மை யில் அடிப்படையில் எந்த மாற்றமும் இந்தத் தேர்தலில் ஏற்படவாய்ப்பில்லை,. சுமார் ஒரு கோடிக்கும் மேற்பட்ட இளம் வாக்காளர்களுக்கு முன்னால் என்ன வாய்ப்பு இருக்கிறது? அவர்களுடைய தாத்தாக்க ளுக்கும் பாட்டிகளுக்கும் முன்னால் கடந்த அரை நூற்றாண்டுகாலமாக என்ன தேர்வு கள் முன்வைக்கப்பட்டிருந்தனவோ அதே தேர்வுகள்தான் இப்போது அவர்கள் முன் பும் இருக்கின்றன.

அவர்கள் மீண்டும் ஜெ. ஜெயலலிதா அல்லது மு. கருணாநிதி ஆகிய இருவரில் ஒருவரைத்தான் தேர்ந்தெடுக்கப்போகிறார் கள். ஏகபோகத்தைவிட மோசமான ஒன்று இரட்டை ஏகபோகம். தமிழகத்தில் கடந்த இருபதாண்டு காலமாக மக்கள் இந்த இருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் அதற்கான அர்த்தம் மிகவும் வெளிப்படையானது: இந்த இருவரில் - ஒருவரை வீட்டுக்கு அனுப்புவதற்காக - மற்றொருவரை தேர்ந்தெடுத்தார்கள். இதே 'வியூகம்' இந்த முறையும் மக்களிடம் தொடருமானால், தமிழ்நாட்டில் கருணா-நிதியின் ஆட்சி ஏற்படக்கூடும்.

ஆனால் அதிமுக வழமையான போக்கை உடைத்தெறிந்துவிட்டு, ஆட்சியில் தொட ரும் என்றும் அடுத்த முதல்வராக அம்மா தான் இருக்கப்போகிறார் என்றும் பேசுவது ஊடக வட்டாரங்களில் சகஜமாக இருக்கி றது. சரி, ஆனால் எந்த நிஜமான புள்ளி விவரங்களின் அடிப்படையில் இந்த முடி வுக்கு அவர்கள் வந்தார்கள்? தெரியவில்லை. ஆனால் தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சி களில் பங்கேற்கையில், நிகழ்வுக்கு முன் னும் பின்னும் விளம்பர இடைவேளைக-ளிலும் அதன் பங்கேற்பாளர்கள் பேசிக் கொள்கிற விஷயங்களை செவிமடுத்தால் ஒன்று புலப்படுகிறது. அவர்கள் நிகழ்ச்சி யினூடாக பேசுவதைவிட அதிக உண்மை யுடன் நிகழ்ச்சிக்கு வெளியே பேசுகிறார் கள். மற்றது, அவர்கள் உண்மையிலேயே குழம்பியிருக்கிறார்கள்.


ஜெ.வுக்கு எதிராக எந்த அலையுமில்லை, எனவே ஜெ.வின் வெற்றி தொடரலாம் என்கிறார்கள். 2014 நாடாளுமன்றத் தேர் தலில் ஜெ. வெற்றிவாகை சூடியதுபோ-லவே இந்த முறையும் நடக்கலாம் என்று அவர்களில் பெரும்பாலானோரும், கரு-ணாநிதி எப்படியும் கரைசேர்ந்துவிடுவார், தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தல் என்பது இருதரப்புக்கும் மாறி மாறி வெற்றி வாய்ப்பை அளித்திருக்கிறது, அந்த போக்கு இந்த முறை மாறிவிடவேண்டும் என்று நினைப்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று அவர்களில் சிறுபான்மை-யோரும் கருதுகிறார்கள். ஆக, எப்படியும் 2016 தேர்தலும் ஒரு திமுக எள அதிமுக தேர்தல்தான். பழைய படம்தான். புது பிரின்ட்கூட இல்லை.

திமுகவைப் பொறுத்தவரை 2016 தேர்தல் அதற்கு நிச்சயமாக ஒரு வாழ்வா சாவா விவகாரம்தான். 2011 இல் தோல்வி, 2014 இல் படுதோல்வி என அடிபட்டு வீட்டில் அமர்ந்திருக்கும் திமுகவின் சகல மட்டங்க ளினதும் தலைவர்கள் மற்றுமொரு தோல் வியை சகித்துக்கொள்ளமாட்டார்கள். ஸ்டாலினது ஆதரவாளர்கள் நிரம்பியிருக் கும் மாவட்டத் தலைவர்களில் மிகப்பெரும் பாலானோர் பழைய திமுக கொள்கைப் புலிகள் அல்ல. அதே சமயம் இந்த முறை தோற்றால் அது கருணாநிதியின் தோல்வி யாக இருக்காது, அது ஸ்டாலினுடைய தலைமைத்துவத்தின் தோல்வியாக இருக் கும். ஊழல், குடும்ப அரசியல், ஈழ விவ-காரத்தில் செய்த துரோகம் என எல்லா வற்றுக்குமாக இரண்டு முறை மக்கள் திமுகவைத் தண்டித்துவிட்டார்கள். மூன்றா வது முறையாக திமுக இந்த காரணங்க ளால் தண்டிக்கப்படாது. திமுகவின் தோல்வி அநேகமாக திமுகவால் மட்டுமே சாத்தி-யப்படுத்தப்படும்.

ஈர்ப்பற்ற ஒரு கட்சியாகவே திமுக இப் போது காட்சியளிக்கிறது. தமிழ்நாட்டில் 1967 இல் ஆட்சியை இழந்தபோதுகூட காங்கிரஸ் கட்சி துடிப்பாக இருந்தது. ஆனால் அடுத்தடுத்த தோல்விகளுக்குப் பிறகு, காங்கிரஸ் தனது நிலையிலிருந்து தடம்புரண்டது. அன்றைய அதிமுக அமைச்சர் காளிமுத்து, 'கறந்த பால் மடி







புகாது, கருவாடு மீனாகாது' என்று வர்-ணித்தது போல பின்பு காங்கிரஸ் மெல்ல மெல்ல தமிழ்நாட்டில் தனது பிடிப்பை இழந்தது. இப்போது அது தமிழ்நாட்டில் ஒரு கட்சியே அல்ல. திமுகவுக்கும் அப்படி ஒரு நிலைமை ஏற்படத்தொடங்கியிருக்கி றதா என்பதை இந்தத் தேர்தல் கூறிவிடும். திமுகவால் இளைய தலைமுறையை ஈர்க்க முடியவில்லை. ஸ்டாலினின் நமக்கு நாமே சுற்றுப்பயணமும் நூறாண்டு கண்ட திராவிட இயக்கத்தின் தலைமைக்கட்சி வெளியிட்ட ஆலுமா டோலுமா விளம்பரமும் என்ன தாக்கத்தை உருவாக்கிவிடமுடியும் என்று இறுமாப்பாக நாம் பேசிவிடமுடி-யாதுதான்.

ஆனால் அந்த நெருப்பு? திமுக காரர்க ளிடம் தேர்தலுக்கு முன்பு காணப்படும் அந்த உற்சாக நெருப்பு இப்போது அவிந்து போயிருக்கிறது! கட்சியிடம் தெளிவான கூட்டணி வியூகம் இல்லை. தேசிய முற்-போக்கு திராவிடக் கழகத்தின் தலைவர் விஜயகாந்த் உள்ளிட்டோர் திமுகவின் பலவீனத்தை வெளிப்படுத்தியதைவிட மிக வும் கூடுதலாகவே கருணாநிதி அதை வெளிப்படுத்தினார். பழம் நழுவி பாலில் விழும் எனக் காத்திருந்த திமுக தலைவரின் ஆற்றாமையும் பலவீனமும் மீன் கருவா டாக ஆகிக்கொண்டிருக்கிறதோ என்கிற அச்சத்தை ஏற்படுத்துகிறது. மீண்டும் அழகிரியோடு பேச்சுவார்த்தை நடத்துகிறது கட்சி. ஒருவேளை அழகிரி, ஸ்டாலின், கனிமொழி, மாறன் ஆதரவாளர்களோடு இணைந்து கூட்டணி ஆட்சி ஒன்றுக்கு பிதாமகர் திட்டமிடுகிறாரா எனத் தெரிய வில்லை. ஆனால் இவை எதுவுமே திமுக வின் மீதான ஈர்ப்பை அதிகரிக்கவில்லை. திமுகவின் உடல் மொழி ஏளனத்தை வர-வழைக்கிறது. தலைவர் தன் மந்திர சக்தியை இழந்துவிட்டாரா?

ஊடகவியலர்களின் அன்புக்கும் மதிப்புக் கும் உரிய நபராக இந்த தேர்தலில் காணப்படுகிறவர் விஜயகாந்த். எந்த கட்சி தொலைக்காட்சி விவாதங்களில் தனது பிரதிநிதியை அனுப்புவதில்லை என்று திட்டவட்டமாக கொள்கை முடிவை எடுத் திருக்கிறதோ அந்தக் கட்சியைப் பற்றித் தான் கடந்த மூன்று மாதங்களாக தொலைக் காட்சிகளில் விவாதங்கள் பொறிபறந்தன. விஜயகாந்த் யாருடன் கூட்டுசேர்வார் என் பதுதான் ஊடகங்களைப் பொறுத்தவரை ஒரே 'தேர்தல் பிரச்சினை'. வாழ்க்கையின் எந்த ஒரு சிக்கலும் அரசாளுகையின் எந்த ஒரு அம்சமும் இங்கே விவாதிக்கப் படவே இல்லை. அரசியல் பத்திரிகை களும் சமூக ஊடகமும் தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சிகளின் அதே போக்கிலேயே தொடர்ந்தன. கடந்த மூன்று நான்கு மாதங்களாக தமிழ்நாட்டின் ஒரே பிரச்சினை யாக இருந்துவந்தது விஜயகாந்த் திமுக வுடன் போவாரா மாட்டாரா என்பதுதான்.

கிளைமாக்ஸ் ஒரு ஆன்ட்டிகிளைமாக்ஸா-கவே அரங்கேறியது. அண்மைக் காலத்தில் சற்றே நம்பிக்கை தந்த கூட்டணியாக உருவாகியிருந்த மக்கள் நலக்கூட்டணி யின் தலைவர்கள் மின்னல் வேகத்தில் ஒரு அரசியல் தற்கொலையை நிகழ்த்திக் கொண்டார்கள். திமுகவுக்கும் அதிமுக வுக்கும் மாற்று என்று கூறும்போது, அது இரு கட்சிகளுக்கும் இடையிலான மாற்று என்பதை மட்டும் குறிப்பிடவில்லை. அந்த இரு கழகங்களும் பிரதிபலித்த அரசியல் கலாச்சாரத்துக்கும் தலைமைத்துவப் போண்டித்தனத்துக்குமான மாற்றைத்தான் அது குறித்தது. குடும்ப அரசியல்,. வாரிசு அரசியல், ஊழல் அல்லது பணமே தலையாய குறிக்கோள் என்று இயங்கும் திமுக, அதிமுகவுக்கு மாற்றாக எந்த அடிப்படையில் கட்சி தொடங்கிய முதல் நாளுக்கு முன்பிருந்தே இந்த குட்டையில் குதித்து விளையாடிவரும் விஜயகாந்த் கட்சியை நாம் கருதமுடியும்? ஆனால் வைகோவும் திருமாவளவனும் இடதுசாரி களும் மக்களின் உண்மையான மனநி லையை சரிவர அறிந்திருக்கவில்லை. மக்கள் ஒரு குணாம்சரீதியிலான மாற் றத்தை விரும்பி நிற்கிறார்கள். மக்கள் நலக்கூட்டணி, நாலைந்து சதவீத வாக்கு கள் கூடுதலாக கிடைக்கும் என்பதற்காக விஜயகாந்த் கட்சியோடு கூட்டு வைத்தி ருக்கிறது. வைகோவின் புகழ்பெற்ற தற்-கொலை முயற்சிகளில் இந்த தேர்தலும் சேரும். ஒவ்வொரு தேர்தலின்போதும் தவறாக முடிவெடுத்து தன் நற்பெயரை யும் ஆதரவாளர்களையும் இழப்பதில் அவருக்கு நிகர் அவரே.

விஜயகாந்தோ களத்தில் உள்ள மற்றொரு பெரிய கனவுக்காரர். டாக்டர் அன்புமணி ராமதாஸோ இருபெரும் கழகங்களுக்கும் ஏதோ கொஞ்சம் தொந்தரவுகளைத் தர முடியுமே ஒழிய தேர்தலின் பொதுப்போக் கை மாற்றிவிடமுடியுமா என்பது பெரிய கேள்வியாகவே இருக்கிறது. ஆனால் பல தொகுதிகளில் இவர்கள் திமுக அல் லது அதிமுகவின் வெற்றி தோல்விகளை இடம்மாற்றிவிடுவார்கள் என்பதில் சந்தேக மில்லை. அந்த அடிப்படையில் பார்த்தால் இத்தேர்தலில் இவர்கள் பெரிய பாதிப்பை ஏற்படுத்துவார்கள் என்பது உண்மைதான். ஆனால் வெற்றியின் இடமாற்றம் இரு பெரும் கழகங்களுக்கும் இடையில் மட்டும் தான் என்பதால் இறுதியில் அதனால் தேமுதிக, பாமக போன்ற கட்சிகள் இந்த தேர்தலில் எந்த பலனையும் அனுபவிக்கப் போவதில்லை. எல்லோரும் யூகிப்பதுபோல அடுத்த தேர்தலுக்கான பேரம்பேசும் திற னை இந்த தேர்தலில் இவர்கள் அறுவடை செய்யமுடியும்.

உலகத் தமிழர்கள் மத்தியில் சில கேள் விகள் இருக்கின்றன. இந்த தேர்தலில் ஈழம் ஒரு தேர்தல் பிரச்சினையாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா என்கிற கேள்வி அவர்கள் மனத்தில் இருக்கும். உலகத் தமிழர்களுக்கு ஒரு நற்சேதி: இந்தத் தேர்தலில் தமிழகமே ஒரு தேர்தல் விவகாரமாக கணக்கில் எடுத்துக்கொள்ளப் படவில்லை என்பதாலே, ஈழத்தைப் பற்றி யோசிப்பதெல்லாம் வீணான விஷயம். ஈழம் இங்கே அரசியல் களப்பொருளாக ஆகாதது குறித்து நாம் அனைவரும் மகிழ்ச்சி அடையவேண்டும்.

நாம் தமிழர் கட்சியின் பிரச்சாரங்களினூ டாக பிரபாகரன் தமிழகம் முழுக்க காட்சியளிக்கிறார். ஒரு பக்கம் லெனினை யும் மறு பக்கம் விஜயகாந்தையும் போட்டு இடதுசாரிகள் துண்டறிக்கை வெளியிடு-வதுபோல, ஒரு பக்கம் பிரபாகரனையும் மறுபக்கம் சீமானையும் போட்டு நாம் தமிழர்கள் துண்டறிக்கை வெளியிடுகிறது. தமிழ்த்தேசியம் என்கிற அரசியல் களத் தின் வலதுசாரி முகமாக உருவாகியுள்ள சீமானுக்கு இளம் தலைமுறையினர் மத்தியில் ஒரு ஈர்ப்பு உருவாகியிருக்கிறது என்பது தான் உண்மை. ஹிட்லரை முன்னி றுத்தியும் அன்பான சர்வாதிகார ஆட்சியை அமைப் போம் என்றும் நாம் தமிழர் கட்சியின் தலைமைப்பீடம் பேசத்தொடங்கியிருக்கிறது. எந்தவிதமான சலசலப்பும் இன்றி இன்றைய தலைமுறை அதற்கு தலையாட்டுகிறது. நாம் தமிழர் கட்சியினர் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு முன்பேயே ஆட்சியை அமைத்திருப்பது போலவே பேசுகின்றனர்.

இவ்வளவு குழப்பங்களுக்கும் இடையில் தான் பச்சைத் தமிழகம் கட்சியின் சுப. உதயகுமாரன் உள்ளிட்டோர் அங்கங்கே களம் காண்கிறார்கள். மக்களுக்காக போரா டிவரும் வேறு பல இயக்கத்தவர்கள் சற்றே ஓய்வெடுத்துவருகிறார்கள். அவர்களுக்கு தேர்தல் பிடிக்காது என்பதால், தேர்தல் நேரத்தில் ஓய்வெடுத்துக்கொண்டு, தேர்தல் முடிந்தவுடன் களத்துக்கு வருவார்கள். இந்த ஆட்சியாளர்களை தூக்கியெறிய வேண்டும் என்று உரத்த குரலில் பேசு வார்கள். ஆட்சியாளர்களை தூக்கியெறிய வேண்டிய வாய்ப்பு வரும்போது மட்டும், ச்சீச்சி இந்த பழம் புளிக்கும் என ஒதுங்கி விடுவார்கள்.

இத்தகைய சூழல்களினூடாக, மீண்டும் தங்கள் வழமையான சுயஏமாற்று ஆட்டத் தில் களமிறங்குகிறார்கள் மக்களும். தமிழ-கத்தில் கோடைகாலமும் தனது கைவரி-சையைக் காட்டத்தொடங்கியிருக்கிறது. மண்டை காய்கிறது!

■ ■ ■

# பிரசல்ஸ் குண்டு...

4ம் பக்கத் தொடர்ச்சி...

தாகவும் செய்திகள் வந்துள்ளன.

முழுமையான வலையமைப்பினைக் கண்டு பிடிக்கும் வரையில் பொலிசாரும் புலனாய் வுத் துறையினரும் காலந்தாழ்த்துவது வழக் கம் அத்தகைய நிலையில் பிரதான கைது களுக்குப்பின்னர் விடயத்தைச் சாதுர்யமா கத் திசைதிருப்பும் முயற்சியின் நடவடிக் கைகளாக இத்தகைய பாரிய தாக்கதல் களை அடையாளங்காணவும் முடியும்.

இந்தக் குண்டுவெடிப்பின் பாதிப்பலைகள் எவ்விதம் முஸ்லிம் மக்களைப்பாதிக்கப் போகிறது என்பதிலே அகதிகள் தொடர்பான கரிசனையுள்ளவர்களிடம் இருந்துவருகிறது. மத்தியகிழக்கு ஐ.நா அகதிகளுக்குப் பொறுப்பான அதிகாரி அமின் அவார்ட் ஐரோப்பிய முஸ்லிம் அகதிக் குடிவரவா ளர்கள் இனவாத எதிர்ப்பினை எதிர்நோக் கும் ஆபத்திருப்பதனைச் சுட்டிக்காட்டியி ருக்கிறார். பரிஸ் பெல்ஜியத் தாக்குதல்க ளின் விளைவினால் வெளிவரும் வெறுப் பானது எந்தவடிவத்திலும் இடம்மாறலாம் என்கிறார்.

இந்தத் தாக்குதல் ஐரோப்பாவில் உள்ள அரசாங்கங்களுக்கு அகதிகள் தொடர்பாக அதிக அழுத்தத்தைக் கொடுக்கக் காரண மாக அமைகிறது. ஐரோப்பிய அரசாங் கங்கள் அகதிகளை உள்வாங்கும் மட் டத்தை எட்டிவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளனர். யேர்மன் சான்சலர் அஞ்ஜலா மேர்க்கல் துருக்கி அரசுடன் செய்துகொண்ட துருக் கியூடாக வரும் அகதிகளைக் கட்டுப்படுத் துவதும் துருக்கியருக்குக் தாராண்மை விசா சலுகை வழங்குவதும் கூடிய எதிரழுத் தத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

யேர்மனியில் அகதிகள் ஆற்றிய புதுவரு டகாலக் குற்றங்கள் முன்னிலைப்படுத்தப் பட்டு நோக்கப்படுகின்றன. இது அகதிகள் இருப்பிலும் வரவிலும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்றே சொல்லத் தோன்றுகி றது. யேர்மனி ஒரு மில்லியன் அகதிகளுக்கு கடந்தவருடம் மனிதாபிமான முறையில் கத வைத் திறந்துவிட்ட நிகழ்வானது இத்த கைய பயங்கரவாதத் தாக்குதல்களால் சிறுமைப்படுத்தப்படுகிறது.

பிரசல்ஸ் விமானத்தளமானது அம்ஸ்ரடாம், பாரிஸ், லண்டன் போல் கிழக்கு மேற்குப் பிரயாண விமானங்களின் ஒரு தரிப்புத் தளமாக இருப்பதால் இந்தியர்கள் மற்றும் இலங்கையர் கூடிய அக்கறை கொண்ட வர்களாகவிருப்பது குறிப்பிடத்தக்கது. பிர யாணிகளின் பிரயாணத்துக்கான இடையூறு கள் ஒரு புதிய பயத்தினையும் ஏற்படுத்தி யிருக்கிறது.

இத்தகைய குண்டுவெடிப்புகள் நாடுகளின் ஐக்கியத்தைக் கூட்டிப் பயங்கரவாத எதிர் நடவடிக்கைகளுக்கு உதவுவதாக அமை யும். உலகின் பயங்கரவாதத்துக்குத் துணை போகிறவர்கள் சந்தர்ப்பவாதிகளாகத்தான் பலமுடன் இருந்துவருகிறார்கள். அவ்வி தமாயின் பயங்கரவாதத்துக்கு விதை போடு பவர்கள் யார்.

*kanapathipillai.a@thaiveedu.com*

■ ■ ■

# கிழக்கை மையமாக...

7ம் பக்கத் தொடர்ச்சி...

வேண்டும். வரலாற்றுரீதியாக சிறுகதைக ளும், கவிதைகளும் தான் அதிகம் வெளி வந்துள்ளன. நாவல்கள் குறைவே. ஆனால் அண்மைக் காலங்களில் பல தரமான நாவல்கள் வெளிவந்துள்ளன. உருவ அடிப் படையிலான, உள்ளடக்க அடிப்படையி லான ஒரு பாய்ச்சல் இல்லைத்தான். ஆனால், அறுபதுவருட வரலாற்றில் ஒப் பிடும்போது தற்போதைய நாவல்கள் உருவ, உள்ளடக்க நேர்த்தியுடன் வருகின்றன. அவநம்பிக்கையை ஏற்படுத்துவதான சூழல் இல்லை என்றுதான் கூறவேண்டும். புலம் பெயர்ந்த பின்னர் குணா, கவியழகன், சயந் தன் போன்றோரது நாவல்கள் உருவ, உள்ளடக்கரீதியாக மிகவும் முக்கியமான நாவல்கள். இங்கு கேள்விகள் அதிகம் வருவது 'நாவல்களுக்கும் யதார்த்தத்துக் குமானதாக இருக்கின்றதா' அல்லது 'நாவல் களுக்கும் அரசியல் முனைப்புக்கும் உரி யதாக இருக்கின்றதா' என்ற கேள்விகளில் நாவல்களுக்கும் அரசியல் முனைப்புக்கு மான கேள்வியே அதிகம் வருகின்றது. இது விமர்சனங்களுக்கான காலம். அதிக நாவல்கள் வெளியாகுவதற்கான களத்தை நாங்கள் உருவாக்கவேண்டும். இப்பொ முது வெளிவரும் கவிதைகள் கூட பன்மு கத்தன்மை கொண்டவையாகவுள்ளன. இது ஒரு ஆரோக்கியமான போக்காகும்.

**▸ புலம்பெயர் திரைப்படத்துறை இன்று ஒரு வீச்சத்துடன் வளர்ந்து வருகின்றது. பல படங்கள் சர்வ தேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டுள்ளன. மறுபக்கம் இந்திய திரைப்படங்களையும் பின்பற்றிப் படங்கள் வெளிவரு- கின்றன. நீங்கள் இந்தியாவில் தேசிய விருது பெற்ற நடிகர். திரைப்படத்துறையை நன்கறிந் தவர். புலம்பெயர் திரைப்படத்து றையின் ஆரோக்கியமான போக்கு என்ன? பலவீனம் என்ன?**

சிறிய சந்தை வாய்ப்புக்களைக் கொண்ட மராத்தி, ஈரான், சிங்கள, மலையாள, வங் காள திரைப்படத்துறைப் படங்கள் பெரிய பாய்ச்சலை ஏற்படுத்தின. சர்வதேச திரைப் பட விழாக்களில் விருதுகளைப் பெற்றன. இதற்கூடாகத் தான் தங்களது கருத்துக் களை நோக்கங்களை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தியுள்ளன. அத்தகைய நோக் கங்கள் புலம்பெயர் திரைப்படங்களில் காணப்படவில்லை. தமிழ்நாட்டு திரைப் படத்துறை பெரியதாக இருப்பதனால் அப் படங்களின் பாதிப்பிலேயே புலம்பெயர் படங்கள் எடுக்கப்படுகின்றன. இது சாத் தியமும் ஆரோக்கியமானதுமல்ல. லெனின் சிவம் போன்ற ஒரு சிலரைத் தவிர மற்ற வர்களின் பல படங்கள் தரமற்றவை. லெனின் சிவத்திடம் நல்ல சினிமா பற்றிய பிரக்ஞை உண்டு. குறும்படங்கள், பாடல் ஒளிப்பதிவுகள் நல்ல தேர்ச்சியை பெற் றுள்ளன. இந்திய திரைப்படங்களின் சுருக் கம் தான் குறும்படங்கள் என நினைத்து படமெடுப்பவர்களை தவிர்த்துப் பார்த்தால் இங்கு நல்ல குறும்படங்கள் வந்துள்ளன.

**▸ இன்று பலராலும் கேட்கப்படும் கேள்வி, முஸ்லீம் சகோதரத்து வம் அதாவது முஸ்லீம் பிறதர்- கூட் போன்று உலகில் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைக்கப் பட்டு ஒரு தமிழ் சகோதரத்துவ அமைப்பு சாத்தியமானதா? அவ சியமானதா? ஆரோக்கியமானதா?**

முஸ்லீம் சகோதரத்துவம் காலம் காலமாக இருந்த அமைப்பு. உலகமயமாதல் பல் வேறு மொழிகளையும், கலாச்சாரங்களை யும், பண்பாடுகளையும் இணைக்கின்றது. தமிழர்கள் வந்து ஒரு Trans National Ethnic Group. முன்பு மூடிய பொருளாதாரமாக இருந்தது இன்று ஒரு திறந்த பொருளா தாரமாக மாற்றப்பட்டுவிட்டது. சினிமா என் பது குளோபலைசிங் தமிழருக்காக மாறி விட்டது. அதே போல் சீடி விற்பனையும் குளோபலைசிங் தமிழருக்காக மாற்றப் பட்டுவிட்டது. குளோபலைசேசன் ஒவ்ர மில்ஸ் என்பது தமிழ் புறதர்கூட் என்பதனை விட பலமானது. ஒரு டைனமிக்கான அமைப்பாக செயல்பட ஆரம்பித்து விட் டது. அதனை ஒருத்தரும் பின்தள்ள முடி யாது. இதை உள்வாங்குவது இந்தியா விற்கும் இலங்கைக்கும் நல்லது. இனப் பிரச்சினையைத் தீர்த்து குளோபலைசே சன் ஒவ் ரமில்ஸ்ன் பலத்தை உள்வாங் குவது நாட்டிற்கு பலத்தையும் செல்வத் தையும் கொடுக்கும். இலங்கை, இந்தி யாவிற்கு மட்டுமல்ல மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கும் நல்லது. எதிர்கா லத்தில் அமையக்கூடிய வல்லரசுப்போட் டிகளிலெல்லாம் தமிழ்குளோபசைசேன் முக்கிய பங்காற்றலாம். முக்கிய வகிபா கம் பண்ணக்கூடியநிலை வரலாம்.

**▸ இன்று புலம்பெயர் வாழ்வில் எங்களது சந்ததியினர் பல்வேறு மொழியினத்தவரை திருமணம் செய்கின்றார்கள். உதாரணத்- துக்கு எனது தம்பி ஒரு ஆபிரிக் கரை, தங்கை இத்தாலியரை என புதிய அடையாள உருவாக் கங்கள் நடைபெறுகின்றன. இந்த மாற்றத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

இந்தத் திருமணங்கள் நடந்தாலும் பெரும் பாலான திருமணங்கள் தமிழர்களுக்கிடை யில்தான் நடக்கின்றன. தமிழர்கள் என்பது இந்திய மலேசிய தமிழர்களையும் உள் ளடக்கும். யூதர்கள் மாதிரி ஆமேனியர்கள் மாதிரி உலகெங்கும் சிதறி வாழும் சீக்கி யர்கள் மாதிரி இப்படி பல்வேறு சமூகங் களுக்கிடையிலும் இவ்வாறான திருமணங் கள் நடந்தாலும் பெரும்பாலான திருமணங் கள் அவர்களுக்கிடையில்தான் நடைபெறு கின்றன.



rathan@thaiveedu.com

# தேயிலை - செடி...

8ம் பக்கத் தொடர்ச்சி...

நிர்வாகத்தில் அதாவது 10 சதவீத காலம் மாத்திரமே இலங்கை அரச பொறுப்பில் அவை இயக்கப்பட்டுள்ளன. ஏனைய 90% காலம் முழுவதும் தனியார் வசமே இந்த கைத்தொழில் நிர்வாகம் இருந்து வந் துள்ளது. கைத்தொழில் நிர்வாகம் மாத்திரம் (industrial administration) அல்ல சமூக நிர்வாகமும் (Social administration) தனி யார் வசமே ஒப்படைக்கப்பட்டமை இந்த மக்களின் பின்னடைவுக்கு காரணமாகியது. இன்றும் கூட அடிமட்ட அரச நிர்வாகப் பொறி முறையான 'பிரதேச சபை' நிர்வா கப் பொறிமுறைக்குள் அவர்கள் உள் வாங்கப்படவில்லை. (தற்போது சட்டத்தி ருத்த பிரேரணை கொண்டு வரப்பட்டுள் ளது), அரச சுகாதார துறை முழுமையாக பெருந் தோட்டப் பகுதிகளில் நடைமுறை யில இல்லை. ஆக, கல்வித்திணைக்களத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகள் தவிர ஏனைய அனைத்துத் துறைகளிலும் தனியாரின் ஆதிக்கமே அதிகளவில் உள்ளது.


அதேநேரம் 1977ம் ஆண்டு அறிமுகமான புதிய பொருளாதார முறைமைகள் மாத் திரமின்றி அரசியல் அமைப்பு முறையும் அதன் அணுகுமுறையும் இந்த மக்களி டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது. நிறை வேற்று அதிகார ஜனாதிபதி முறை அறி முகப்படுத்தப்பட்டு முழுநாடே ஒரு தொகு தியான நிலையில் ஜனாதிபதி தேர்தலில் அதிகூடிய வாக்குகளைப்பெற வாக்குரி மையற்றிருந்த மலையக மக்களுக்கு வாக் குரிமை வழங்க எத்தனிக்கப்பட்டது. அதன் தேவை அதிகரிக்க அதிகரிக்க காலத் திற்கு காலம் சிறுக சிறுக அது வழங்கப் பட்டு 2003ம் ஆண்டு முழு மலையக மக் களுக்கும் வாக்குரிமைப்பெறுவதில் தடை கள் நீக்கப்பட்டது. அதேநேரம் நடைமு றைக்கு வந்த விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை இந்த மக்கள் சார்பான பிரதிநிதிகளை பாராளுமன்றில் அமரச் செய்தது. அவ்வாறு அமர்ந்தவர்கள் ஆளும் தரப்பினருடன் இணைந்து செய்றபடுதல் ஒரு செல்நெறியாகவே கொள்ளப்பட்டு வந்தது. அதற்கமைய அமைச்சுப் பதவிக ளும் காலத்திற்குக் காலம் வழங்கப்படப்பட்டு வந்தது. சந்திரிக்கா பண்டாரநாயக்க ஜனா திபதி காலத்தில் இந்த மக்களின் வாழ் விட அபிவிருத்திக்கென 'தோட்ட உட்கட் டமைப்பு அமைச்சு' உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டது. எனினும் மகிந்த ஆட்சி காலத்தில் அது இல்லாதாக்கப்பட்டது. இத் தனைக்கும் 2005ம் ஆண்டு மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனமான 'மகிந்த சிந்த னை'யில் மலையக மக்களுக்கான தனி யான 'அதிகார சபை' குறித்து குறிப்பிடப் பட்டிருந்தது. அதேநேரம் 2005ம் ஆண்டு தொடங்கி 2015ல் நிறைவுசெய்யுமாறு தயாரிக்கப்பட்ட 'பத்தாண்டுத் திட்டமும்' கைவிடப்பட்டது.

எது எவ்வாறெனினும் 2015 ஜனவரி 8ல் ஏற்பட்ட ஆட்சிமாற்றம், அதனோடிணைந்த மலையக அரசியல் மாற்றம் என்பன இது வரை காலமும் இல்லாத அளவில் மலை யக மக்களின் 'நிலவுடமை'க்கான கோரிக் கையை வலுவாக முன்வைத்து 'சொந்தக் காணியில் சொந்த வீடு' எனும் கருத்தி யலை உருவாக்கியுள்ளது. அவர்களுக்கான அமைச்சுக்கும் 'மலைநாட்டு புதிய கிரா மங்கள்' எனும் இலக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த கட்டத்தில் நூற்றாண்டு காலமாக பின்னடைவில் இருந்த இந்த மக்களின் சமூக அபிவிருத்தியினை குறிப்பிட்ட கால எல்லைக்குள் முன்னெடுக்க 2005ம் ஆண்டு உருவாக்கப்பட்ட பத்தாண்டுத்திட் டம் முறையாக முன்னெடுக்கப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் அதனை மீண் டும் செயற்படுத்தும் வகையில் தற்போதைய மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்ட மைப்பு சமுதாய அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு அமைச்சர் திகாம்பரம் அதற்கான அமைச்சரவை அனுமதியையும் பெற்றுக்கொண்டுள்ளார். அதேநேரம் இந்த திட்டத்தை 'ஐந்தாண் டுத் திட்டமாக' முன்னெடுக்கவும் ஜனாதி பதியினால் ஆலோசனை வழங்கப்பட்டுள் ளது. ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) அனுசரணையுடன் முறையாக தயாரிக்கப்பட்டுள்ள பெருந்தோட்ட மக் களுக்கான 'தேசிய நடவடிக்கைத் (ஐந் தாண்டுத்) திட்டம்' (National Plan of Ac- tion) எதிர்வரும் நாட்களில் (10-03-2016) பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு, பண்டாரநாயக்கா ஞாபகார்த் தமாக மாநாட்டு மண்டபத்தில்ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

'தேயிலை' பார்ப்பதற்கு செடிபோல தெரிந் தாலும் அது செடியல்ல மரம். ஆனாலும் அந்த மரத்தில் இருந்து தேயிலைக் கொழுந் தினைப் பறிப்பதற்காக மட்டந்தட்டி செடி யாகவே பராமரிக்கப்படுகின்றது. அது போலதன் இந்த மக்களின் வாழ்வும், அவர்கள் மரமாக வளரவிடப்படாமல் செடி யாகவே மட்டந்தட்டப்பட்டு வைக்கப்பட்டு விட்டார்கள். அவர்களும் மரமாகி கிளை பரப்பி, இலை துளிர்விடும் எதிர்கால சமு கத்திற்கு பயன்பெறும்வகையில் இந்த 'ஐந்தாண்டுத் திட்டம்' அமைய வேண்டும் என்பதே எல்லோரதும் எதிர்பார்ப்பு.

*(நன்றி: தினக்குரல் மார்ச் 06, 2016)*



thilagar@thaiveedu.com

# ஸ்கார்பரோ ரூஜ் ரிவர் தொகுதிக்கான மாகாணசபை இடைத்தேர்தல்

ஸ்கார்பரோ ரூஜ் ரிவர் தொகுதியில் நீண்டகாலமாக மாகாணசபை உறுப்பினராக இருந்து வந்த திரு. பஸ் பால்கிரூன் கடந்த மாதம் தன் பதவியைத் துறந்திருந்தார். வெற்றிடமாகியுள்ள இத்தொகுதிக்கான இடைத் தேர்தல் ஒக்டோபர் மாதம் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. பற்றிக் பிரவுண் தலைமையில் ஒன்ராறியோ மாகாண பழமைவாதக் கட்சி புதுவடிவம் பெற்றுள்ளது. ரூஜ் ரிவர் தொகுதிக்காக நடைபெறவுள்ள இடைத் தேர்தலில் இக்கட்சியும் ஒரு தமிழரை நிறுத்தலாம் என உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.





ஒன்ராறியோ மாகாண லிபரல் கட்சி சார்ந்து பல்வேறு சமூகப் பணிகளை முன்னெடுத்துவரும் தமிழரான திரு. பிரகல் திரு உட்கட்சி வேட்பாளர் தெரிவில் போட்டியிடப்போவதாக அறிவித்திருக்கின்றார். உட்கட்சித்தெரிவில் போட்டியிடவிருக்கும் ஏனையோர் பற்றிய தகவல்கள் இதுவரை தெரியவில்லை.

இதேவேளை ரூஜ் ரிவர் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகிய ராதிகா சிற்சபைசன் தான் அத்தொகுதியில் போட்டியிடப்போவதாக அறிவித்திருக்கின்றார்.

இவ்விருவரும் தமது விருப்பங்களை வெளியிட்டுள்ளனர் எனினும் இறுதி முடிவு மாகாணக் கட்சித் தலைமையின் கைகளிலேயே உள்ளது. வேட்பாளர்களுக்கான உட்கட்சித் தேர்தல்களும் நடைபெறும் வாய்ப்பு உள்ளதனால் இவர்கள் முடிவுகளில் மாற்றங்களும் ஏற்படலாம்.

தமிழர்களால் பெரிதும் நேசிக்கப்படுகின்ற வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும் வாக்குவல்லமை கொண்டோராகத் தமிழர் உள்ள இத்தொகுதியில் பிரதான கட்சிளின் சார்பில் பெரிதும் தமிழர்களே போட்டியிடுவர் எனப் பலரும் கருதுகின்றனர். இவ்வாறு நிகழுமாயின் ஒன்ராறியோ மாகாண அரசில் முதன் முறையாக ஒரு தமிழர் இடம்பெறுவதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

வேட்பாளர்கள் சார்ந்து எதிர்பாராத திருப்பங்கள் நிகழ்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமுள்ளதாகக் கருதப்படும் இத்தொகுதியின் இறுதி முடிவுகளுக்கு நாம் காத்திருக்கவேண்டும். முடிவுகள் மாறுவதும் எதிர்பாராத திருப்பங்கள் நிகழ்வதும் அரசியலில் சாதாரண நிகழ்வுகளே.

வேட்பாளர்களாகவும் வாக்காளர்களாகவும் தமிழர் பெரிதும் ஈடுபாடு கொள்ளவிருக்கும் ஒரு தேர்தல்களமாக ஸ்காபரோ ரூஜ் ரிவர் இருக்கப்போகின்றது என்பது மட்டும் உண்மை.

■ ■ ■

## ‘லயஞான குபேரபூபதி யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தி’ சிறந்த ஆவணப் படத்துக்கான விருது



தவில் மேதை தெட்சணாமூர்த்தி அவர்களின் மேதைமை, ஆளுமை, வாழ்வு பற்றிய ஆவணப்படமொன்றை தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளரும் திரைப்பட, குறும்பட, ஆவணப்பட இயக்குநருமான திரு. அம்ஷன் குமார் இயக்கியிருந்தார். 2015 ஏப்பிரலில் பிரித்தானியாவின் இலண்டனிலும் 2015 மேயில் ரொறன்ரோவிலும் யாழ்ப்பாணத்திலும் கடந்த மாதம் அவுஸ்திரேலியாவின் சிட்னியிலும் ஆவணப்பட வெளியீடு நடைபெற்றது. தொடர்ந்து வேறுசில புகலிட நாடுகளிலும் வெளியிடப்பட்டது.

இவ்வாவணப்படத்துக்காக, தமிழகத்திலும் ஈழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் தவில் மேதை தெட்சணாமூர்த்தி அவர்களை அறிந்தவர்களிடமும் இசை விமர்சகர்களிடமும் இசை இரசிகர்களிடமும் இசைக்கலைஞர்களிடமும் தகவல்களைத் திரட்டி ஆவணப் படத்தோடு தேடற்கரிய இசைக்கச்சேரிகளையும் ஒலிவடிவில் வெளியிட்டனர். ஈழத்திலும் தமிழகத்திலும் புகலிட தேசங்களிலும் இத்தொகுப்பும் ஆவணப்படமும் ‘தெட்சணாமூர்த்தி - எட்டாவது அதிசயம்’ எனும் நூலும் பெருவரவேற்பைப் பெற்றன.

இத்தகைய பெரும் உழைப்பில் வெளிவந்த ‘லயஞான குபேரபூபதி யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தி’ என்ற ஆவணப்படத்துக்கு கலை, கலாச்சாரப் பிரிவில் சிறந்த ஆவணப் படத்துக்கான இந்திய அரசின் தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணப்படத்திற்கு முன்னின்று உழைத்த திரு. பத்மநாப ஐயர், தவில் மேதை தெட்சணாமூர்த்தி பவுண்டேசன் மற்றும் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த அனைவருக்கும் தாய்வீட்டின் வாழ்த்துகளும் பாராட்டுகளும் உரித்தாகட்டும்.

## அவசர வேண்டுகோள்!
## Urgent request - liver transplant

கனடாவில் வசிக்கும் இளங்குடும்பஸ்தர் ஒருவருக்கு, கல்லீரல் இழைநார் வளர்ச்சி (cirrhosis) எனும் நோய் காரணமாக ஈரல் பாதிக்கப்பட்ட நிலையில், உடனடியாக ஈரல் மாற்றுச் சிகிச்சையே தீர்வென்பதால் அவரின் குடும்பத்தினர் பொதுமக்கள் உதவியை நாடி நிற்கின்றனர்.

நீங்கள் தானமாக வழங்கும் ஒரு பகுதி மாற்று ஈரல் (part of liver) மூலம் மட்டுமே அவருக்கு மறுவாழ்வளிக்க முடியும்.

அன்புள்ளம் கொண்ட புலம் பெயர் தமிழ் உறவுகளே 18-55 வயதுக்குட்பட்ட ‘O’ வகையைச் சேர்ந்த ஆரோக்கியமான இருபாலாருள் முடிந்தவர்கள் முன்வந்து இவ்வுதவியைச் செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

நன்றி.

*தொடர்புகளுக்கு:* 289 232 4651
*email:* livererdoners@gmail.com
*விபரங்கள் அறிய:* www.uhntransplant.ca

## Veedu Living Home and Garden நிகழ்வு

VeeDu Living நிறுவனமானது ரொறன்ரோ பெரும்பாகத்தில் வசிக்கும் பல்லாயிரக் கணக்கான தென்னாசிய சமூகத்தவர்களையும் கவரும் வகையில் Home and Garden பற்றிய பிரமாண்டமான காட்சியொன்றை ஏற்பாடு செய்துள்ளது. இந்நிகழ்வில் HGTV நட்சத்திரத் தொகுப்பாளர் Paul Lafrance அவர்கள் கலந்துகொள்கின்றார்.

Veedu Living Home and Garden Show பிரமாண்டமான காட்சியையும் பயனுள்ள விடயங்களையும் உங்களுக்கு வழங்குவதற்காக சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 9, 10ஆம் திகதிகளில் Markham Fairgrounds இல் நடைபெறவிருக்கும் இக்காட்சியில் உள்நாட்டிலும் சர்வதேசரீதியிலும் தயாரிக்கப்படும் வீட்டுக்குத் தேவையான பலவிதமான Brand Name பொருட்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

குறிப்பாக தெற்காசிய மக்களின் வீடு சம்பந்தமான சகல தேவைகளுக்குமேற்ற சேவைகளை அறிமுகப்படுத்தி வீட்டுரிமையாளர்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்கான Tools and Resources அனைத்தையும் பெறுவதற்கான சந்தர்ப்பங்களையும் உருவாக்கிக்கொடுக்குமென ஏற்பாட்டாளர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

Markham Fairgrounds இல் இலவச அனுமதியுடனும் இலவச வாகன தரிப்பிட வசதிகளுடனும் பல்வேறு வகையான உணவுச்சாலைகளுடனும் கூடிய இந்நிகழ்வு சனி, ஞாயிறு இரண்டு நாட்களும் நடைபெறவுள்ளது.

வீடு சம்பந்தமான உங்கள் எண்ணங்களையும் திட்டங்களையும் செயற்படுத்தும் வகையில் துறைசார் நிபுணர்களின் அறிவுரைகளுடன் உங்கள் வீட்டை மென்மேலும் அழகுறச்செய்யத் தேவையான அனைத்துப் பொருட்களையும் ஒரே இடத்திற் பெற இது ஓர் அரிய வாய்ப்பு! என இக்காட்சி பற்றி ஏற்பாட்டாளர்கள் மேலும் குறிப்பிடுகின்றார்.

## ‘முன்னிலைப் பெண்கள்’ விருது பெறும் மாணவி



ரிச்மண்ட் ஹில் உயர்நிலைப் பள்ளி மாணவியான யதுசா மகேந்திரராஜன் ஒன்ராறியோவின் ‘முன்னிலைப் பெண்கள்’ (leading girl) என்ற விருதினைப் பெற்று தமிழ் சமூகத்துக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

பேச்சு வல்லமை மிக்கவரான 17 வயது நிரம்பிய யதுசா ‘நான் என்ன செய்ய வேண்டும்’ என்ற வினா வாயிலாக இளவயதிலிருந்தே சமூகத்துக்கான பல உதவிகளைச் செய்து வருகின்றார்.

கடந்த ஞாயிறன்று ரிச்மண்ட் ஹில் சமூக மையத்தில் நடைபெற்ற நிகழ்வில் 25 பெண்கள் இந்தப் பாராட்டைப் பெற்றனர். அதில் இளமையானவரும் உயர்பள்ளி மாணவியுமாகத் திகழ்ந்தவர் இவரே.

ஒன்ராறியோ அளவில் தெரிவு செய்யப்பட்ட இந்த பெண்களுக்கும் பள்ளி மாணவிகளுக்கும் விருது வழங்கும் நிகழ்வு 11 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. பிறக்கு உதவுதல், தொண்டு சேவை, தன்னார்வ நடவடிக்கைகள் என்பவற்றின் அடிப்படையிலேயே இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

பல்வேறு திறன்களைக் கொண்ட யதுசா மகேந்திரராஜன் மாகான ஆட்சிமன்ற ரிச்மண்ட் ஹல் உறுப்பினர் அவர்களால் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டவராவார். பள்ளியில் மாணவ அமைப்பில் தலைமைத்துவப் பொறுப்புகளை வகித்து வரும் யதுசா இளம் சமூகத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றார்.

செல்வி யதுசா மகேந்திரராஜன் அவர்களைத் தாய்வீடு வாழ்த்துகின்றது.


$489,900
Front/John
1+Den Tridel Condo Great Location
Close To All Amenities...
$549,900
Yonge/Carlton
2 Br Met Condo Great Location
Close To All Amenities...
$599,900
Brimley/Lawrence
3+2 Br Bungalow Detached Home
Close to all Amenities
$599,000
Brimley/Lawrence
3+1 Br Bungalow Detached Home
Close to all Amenities
$649,900
McCowan/Bur Oak
3 Br Freehold Town Home
Close to all Amenities..
$899,900
Bathurst/Woodspring
4 Br Det. 2 Storey Home
Close to all Amenities
$1,888,000
Aurora Rd/HWY 48
5+1 Br 4200sqft Detached Home
Close to all Amenities
SOLD
$2,099,000
Bethsda/Kennedy
3 Br Bungalow Detached Home
326' x 1320' Lot...
$449,900
Eva Rd/HWY427
1+Den Tridel Condo Great Location
Close To All Amenities...
$1,099,900
Midland/Sheppard
2+1 Br Bungalow Detached Home
75 x 242 Feet Lot
$399,900
McCowan/401
3 Br Tridel Condo Great Location
Clos To All Amenities...
$799,900
Kennedy/Castlemore
3+1 Br Semi Detached Home
Close to all Amenities
$648,000
Brimley/Ellesmere
3+1 Detached Bungalow Home
Close to all Amenities
$769,000
Kennedy/16th Ave.
3 Br Link Home
Close to all Amenities..
$1,128,000
Warden/Finch
5+2 Br Det. 2 Storey Home
Close to all Amenities
$549,000
Ellesmere/Conlins
4+2 Brt Detached Home
Close to all Amenities
$599,000
Brimley/Ellesmere
3+1 Br Bungalow Detached Home
Close to all Amenities
$799,000
McCowan/Ellesmere
4+1 Br Det. 2 Storey Home
Close to all Amenities
Vaughan
Jane/Major MacKen
4 Br Det. 2 Storey Home
Renovated, Practical layout
Close all Amenities..
$849,900
Aurora
Leslie/St John S.Rd
4 Br Det. 2 Storey Home
Brand New Never been Lived
Close all Amenities..
$999,888
$750
2 Br Basement For LEASE...
Close to all Amenities
$2000
3+2 Br Bungalow Detached Home
Whole House For LEASE....
$2499
2 Br Luxury Condo For LEASE....
Close to all Amenities
HOMELIFE
HIGHER STANDARDS
Gnani & Judy
REAL ESTATE
Gnanendran
Narasingham
416.937.8090
Judy
Gnanendran
416.629.9797
Buy,Sell or Lease
Residential
Commercial
& Business
Properties
Call Us....
HomeLife GTA Realty Inc., 5215 Finch Ave. E. #203 Toronto.
Office : 416-321-6969

# Autism Spectrum Disorders: வரைவிலக்கண மாற்றங்களும் விளைவுகளும்

- புஷ்பா கனகரட்ணம் -

Autism ஒரு நோய்நிலை (disease) அல்ல, மாறாக ஒரு வழமைக்கு மாறுபட்ட நிலை அல்லது ஒரு ஒழுங்கின்மை (disorder). ஒரு disorder எனும் போது, அதன் காரணங்கள் சரியாக தெரியாமல்; அத்துடன் அதன் அறிகுறிகள் ஒரு குறிப்பிட்ட வரைமுறைக்கு உட்படாமல் இருப்பதாக கொள்ளலாம். அதனால் தான் Autism Spectrum Disorders (ASD) என்கிறார்கள். Spectrum என்பது ஒரு தொடர் அல்லது ஒரு கோர்வை போன்றது. குறைந்த தாக்கத்தில் இருந்து தீவிரமான தாக்கம் வரை உள்ள பல ஒழுங்கின்மைகளை ASDக்குள் அடக்கலாம்.

New York Times, 'The Autism Wars' என்ற தலைப்பில் அண்மையில் ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்றிருக்கும் Autism வரைவிலக்கண மாற்றங்கள் மற்றும் அதன் விளைவுகள் பற்றிய கட்டுரை தான் இது.

நோயறிகைக்கான (diagnosis) உளமருத்துவ பைபிளாக கருதப்படுவது Diagnostic and Statistical Manual of Mental Disorders (DSM). இது 7-8 வருடங்களுக்கு ஒரு முறையாக திருத்தி அமைக்கப்படுகிறது (revisions). தற்பொழுது ஏழாவது முறையாக திருத்தி அமைக்கப்பட்டிருக்கும் DSM, உளநல நோய்களுக்கான வரையறைகளில் மாற்றங்கள் தேவையா என்ற ஆய்வில் ஈடுபட்டிருந்தது. DSM இனை பாவித்து நோய்நிலைகளை அடையாளம் காண்பது சில துறை சார் நிபுணர்களின் கட்டுப்பாட்டுக்குள் மட்டுமே உள்ள விடயமாகும். உளமருத்துவ (psychiatry) மற்றும் உளவியல் (psychology) நிபுணர்கள் மட்டுமே DSMனை அடிப்படையாக வைத்து நோயறிகை செய்ய முடியும். அண்மையில் நடைபெற்ற திருத்தி அமைப்புகளில் பல உளமருத்துவ மற்றும் உளவியல் நிபுணர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். DSM May 5, 2013ல் வெளியாகியிருக்கிறது. ASD கூட அதன் வரையறைகளில் சில மாற்றங்களுக்கு உள்ளாகி இருக்கிறது என்பது பலருக்கும், முக்கியமாக Autism ஒழுங்கின்மைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்கள், அக்குடும்பங்களோடு பணியாற்றுபவர்கள் மத்தியில் சற்றே பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

DSM காலம் காலமாக பல கண்டனங்களுக்கு உள்ளாகி வந்திருக்கிறது. இதற்கு காரணம் இல்லாமல் இல்லை. உலகளாவிய ரீதியில் நோய்களை அடையாளம் காணல், அதற்கான சிகிச்சைகள் பெறல், ஆய்வுகள், மற்றும் ஆய்வுக்கான நிதி, இவை எல்லாமே DSM நோய் வரையறைகளில் தங்கி இருக்கின்றன. மருந்து தயாரிப்பு நிறுவனங்களுக்கும் (pharmaceutical industry) இதில் பெருத்த லாபங்கள் இருக்கின்றன. நோய் வரையறைகள் நெகிழ்த்தப்படும் போது அதற்கான மருந்துகளை உட்கொள்பவர்கள் விகிதாசாரமும் அதிகரிக்கும் அல்லவா? அத்தோடு உளவியல் நோய்களை எப்பொழுதும் இலகுவில் வரையறைப்படுத்த முடியாது. நெருங்கியவர் ஒருவரின் இறப்பைத் தொடர்ந்து மன அழுத்தத்துக்கு உள்ளாகும் நபர் எவ்வளவு காலம் வரை அந்த சோகத்தில் இருந்து விடுபடாமல் இருக்கலாம்? எவ்வளவு காலத்திற்கு மேல் அதனை நாம் வழமைக்கு மாறு என்றும் ஒரு நோய் என்றும் கொள்ளலாம்? இப்படியான சிக்கல்களும் இருக்கின்றன.

இன்னொன்று காலத்திற்கு ஏற்ப மாறிவரும் வரைவிலக்கணங்கள். உதாரணமாக முன்பு homosexuality (தன்பாலின சேர்க்கை) ஒரு நோயாக DSMல் அடையாளப்படுத்தப்பட்டது. பின் மாறிவரும் கால மற்றும் அறிவு நிலை மாற்றங்களின் விளைவால்



DSM தன்பாலின சேர்க்கையை ஒரு நோய் அல்ல என கருதி அகற்றியது. இது போல் தான், அமெரிக்காவின் படைகள் உலகமெங்கும் 'அமைதி' பரப்ப சென்று பல உளத்தாக்கங்களை அறுவடை செய்து வீடு வர அவர்களுக்கான அங்கீகாரத்தையும் நிவாரண நிதியையும் வழங்குவதற்கு ஏதுவாகியது Posttraumatic Stress Disorder (PTSD) எனும் நோய்நிலை.

ASD யை பொறுத்தவரை - 90 களில் பல குழந்தைகள் ADHD நிலை (கவனக்குறை மிகைச்சுறுதி) உள்ளவர்களாக, அதாவது hyperactive என அடையாளம் காணப்பட்டது போல், இப்பொழுது ஏன் பலரும் ASD உள்ளதாக அடையாளம் காணப்படுகிறார்கள் என ஒரு கேள்வி எழும்பி இருக்கிறது. 1990களில் ASD க்கான வரையறையை DSM நெகிழ்த்தியது. அறிவு விருத்தி குறைந்த, தம்மை தாமே தாக்கக் கூடிய, பேச்சு வராத அறிகுறிகள் மட்டுமன்றி, பலதரப்பட்ட அறிவு நிலைகளில் இருப்பினும் சமூகத்துடன் தொடர்படும் ஆற்றல் குறைபாடுகள் இருப்பின் அவர்கள் எல்லோரும் ASD என்ற குடைக்குக் கீழ் வகைப்படுத்தப்பட்டார்கள். இதன் விளைவால் பத்தாண்டுகளுக்கு முன்பு 50%மாக இருந்த அறிவு விருத்தி குறைந்தவர்கள் விகிதாசாரம் இப்பொழுது மூன்றில் ஒன்றாக குறைந்து விட்டது. அதாவது, இதற்கு முந்திய DSM-IV-TR பதிப்பு வரையறைகளின் படி, ASD என அடையாளம் காணப்படுபவர்களில் பலரும் அறிவு நிலையில் அதிக பிரச்சினை இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள் (Centers for Disease Control and Prevention). இப்படியான நெகிழ்த்தப்பட்ட ஒரு வரையறை ASD யினால் பாதிக்கப்படுபவர்களுக்கு முக்கியம் என்கிறார் Thomas Frazier (Director of Research, Cleveland Clinic Center for Autism). நம் உலகம் ஒரு சமூகம் சார்ந்த உலகம், இதில் வாழ்வதற்கு தொடர்பாடும் ஆற்றல் முக்கியம் என்று கூறும் இவர், ASD என அடையாளம் காணப்படுபவர்களின் எண்ணிக்கை DSM இன் புது வரையறைகளுக்கு உட்பட்டு குறைந்து போகுமானால், அதனால் பாதிக்கப்படுபவர்கள் அறிவு நிலை விருத்தி சரியாக இருப்பினும் சமூக தொடர்பாடலில் குறைபாடு உள்ளவர்களே, என விளக்கம் கொடுத்துள்ளார். இவர்கள் ஒப்பீட்டளவில் பாதிப்பு குறைவானவர்களாக இருப்பினும், பாடசாலைகளில் அதிகம் பகிடிவதைக்கு(bullying) ஆளாகுபவர்கள் இவர்கள் தான். இப்படியான பிள்ளைகளை உயர்தொழிற்பாடு உடைய Autism அல்லது Asperger Syndrome என்ற ஒழுங்கின்மை நிலைக்குள் அடக்குவார்கள். இவர்கள் குறைகள் இப்படியானவை - முக உணர்வுகளை புரிய முடியாமை, கதைப்பதை எப்பொழுது நிறுத்துவது என தெரியாமை, உணர்வுகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது மற்றும் நாளாந்த ஒழுங்குகளில் மாற்றம் ஏற்படும் பொழுது அதை சமாளிப்பது போன்றவற்றில் சிக்கல்கள். இத்தகைய பிரச்சினைகள் தெளிவாக மற்றவர்களுக்கு தெரியாததால், இவர்களை குறைபாடு உள்ளவர்களாக எளிதில் மற்றவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அதனாலேயே கூடுதலான பகிடிவதைக்கு இவர்கள் ஆளாகிறார்கள்.

எது எப்படியோ DSMன் மாற்றங்கள் நடைமுறைக்கு வந்துவிட்டன. முன்மொழியப்பட்ட தீர்மானங்கள் சில:

'புதிய' ASD தீவிர பாதிப்புள்ள Autism நிலைகளை பிரதிபலிக்கும், அத்தோடு ஒன்றிரண்டு அதி தொழிற்பாடு கொண்ட Autism நிலைகளையும் அடக்கும். ASDல் அடக்கப்படுவதற்கு பின்வரும் அறிகுறிகள் மூன்று வயதுக்கு முன் தோன்ற வேண்டும்.

- மூன்று வித தொடர்பாடல் குறைகள் (பேச்சில் குறை அல்லது பேச்சின்மையுடன், தொடர்பாடல் குறை உள்ளடங்கலாக).
- அத்துடன் குறைந்தது இரண்டு திரும்பத் திரும்பச் செய்யும் காரியங்கள் அல்லது வினோதமான கட்டுப்பாட்டுக்குள் உள்ள ரசனைகள் (கைகளை இறகுபோல் அசைத்தல், நுனிக்காலால் நடத்தல், வினோதமான விடயங்களில் பெரும் ஆர்வம்காட்டல் உள்ளடங்கலாக.)

Asperger Disorder என்ற பெயர் அகற்றப்பட்டு அதன் அறிகுறிகள் புதிய ASD வரையறைக்குள் அடக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் தான் பொதுவாக குறிப்பிட்ட நூதனமான விடயங்களில் அதீத ஆர்வம் காட்டுபவர்கள். ஆனால் தொடர்பாடல் குறை கொண்டவர்கள். ஒரு புதிய பிரிவாக 'Social Communication Disorder' அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்குள் முக உணர்வுகளை, உடல் மொழியை (body language) அறிவதில் பிரச்சினை உள்ள குழந்தைகள் அடங்குவார்கள்.

DSM மீளாய்வின் சார்பாளர்கள் இந்த மாற்றங்கள் ஒரு பாதிப்பையும் கொண்டு வராது என்கிறார்கள். பெரும் பாதிப்பு இல்லாதவர்கள் கடும் Autism என்ற பிரிவிற்குள் தாம் அடக்கப்படமாட்டோம் என மகிழ்கிறார்கள். ஆனால் Dr. Fred Volkmar போன்ற Autism ஆய்வாளர்கள் (Yale University) இந்த மாற்றங்களை கண்டித்து மீளாய்வு குழுவில் இருந்து வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். இவர் போன்றவர்கள், பல குழந்தைகள் இந்த மாற்றங்களால் பாதிக்கப்பட போகிறார்கள் என கருதுகிறார்கள். இந்த மாற்றங்களை நிதியும் சிகிச்சையும் வழங்குபவர்கள் உடனடியாக புரிந்து கொள்ளாது போகும் வாய்ப்பு இருக்கிறது. ஏற்கனவே Autism நிலைக்குரிய உதவிகள் சரியாக கிடைப்பதில்லை எனும் போது, இந்த மாற்றங்கள் மேலும் தடைகளை கொண்டுவந்து விடும் என அஞ்சுகிறார்கள் பலர்.



pushpa.k@thaiveedu.com



# உதட்டுப் பிளவு, அண்ணப் பிளவு என்பவற்றுக்கான சிகிச்சை

## Treatment of cleft lip and cleft palate

- ரவிச்சந்திரிகா -

ஒன்ராறியோ மாகாணத்தில் உதடு அண்ணப் பிளவு கொண்டு பிறக்கும் குழந்தைகளுக்கு அதைத் திருத்தி அமைக்கும் சிகிச்சைகள் செய்வதில் ரொறன்ரோவில் உள்ள Sick Kids வைத்தியசாலை முதன்மை இடத்தில் இருக்கிறது. Sick Kids வைத்தியசாலை கடந்த ஐம்பது ஆண்டுகளாக இப்பணியில் ஈடுபட்டு வருகிறது. விரிவான ஒரு செயல் முறைத் திட்டம் கொண்ட சிகிச்சை முறையைப் பின்பற்றுகிறது. வருடத்துக்கு 100 - 125 குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள் இச்சிகிச்சை பெறுகிறார்கள்.


இவ்வைத்தியசாலையில் பிளவுகளுடன் பிறக்கும் குழந்தைகள் பிறந்த இரு வாரங்களுக்குள் மருத்துவர்களால் பரிசோதனை செய்யப்படுகின்றன. பிளவுகளுடன் வேறு குறைபாடுகளும் இருப்பின் வைத்தியசாலையில் இருந்தே நேரடியாகச் சம்பந்தப்பட்ட வைத்தியரின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகின்றன.

பிற நாடுகளில் இருந்து குடியுரிமை பெற்று வரும் சிறார்கள் எந்த வயதினர் ஆயினும் மருத்துவர்களைச் சந்தித்து மூன்று மாதங்களுக்குள் சிகிச்சைக்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்படும். Sick Kids வைத்தியசாலையில் ஒருவர் சிகிச்சை பெறுவதற்குரிய உச்ச வயது 22 ஆகும்.

குடும்ப வைத்தியர், மகப்பேறு வைத்தியர், குழந்தை நல வைத்தியர், பல் வைத்தியர், ஆகியோர் ஒரு குழந்தைக்கு இவ்வகைக் குறைபாடு இருப்பதைக் கண்டு பிடித்து அதற்குரிய சிகிச்சைகளுக்குப் பரிந்துரைக்க முடியும். (Referral) குழந்தை கருவில் இருக்கும்போதே பிளவு இருப்பது கண்டுபிடிக்கப்படலாம். அவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டால் மரபணு மருத்துவர் (Geneticist) அதற்குரிய சிகிச்சைகளைப் பரிந்துரைப்பார். சிலர் தம் குடும்பத்தில் இவ்வகைக் குறைபாடுகள் இருப்பதைக் கருத்தில் கொண்டு தாம் குழந்தை பெற்றுக் கொள்வதற்கு முன்பாக மரபணு மருத்துவருடன் கலந்தாலோசிப்பதும் உண்டு.

சில குழந்தைகளுக்கு பிளவு மிக மிகச் சிறியதாக வெளியே தெரியாததாக இருக்கலாம். நாளடைவில் அவர்கள் பேசத் தொடங்கும் போது, பேசுவது சீராக இல்லாதிருப்பதைச் சரி செய்யும் பொருட்டு Speech Therapist, Speech Pathologist ஆகியவர்களிடம் செல்லும் போது அவர்கள் பிளவு இருப்பதைக் கண்டுபிடிக்கக்கூடும்.

முதல் சந்திப்பில் எவ்வகையான சிகிச்சைகள் அக்குழந்தைக்குச் செய்யப்பட வேண்டும் என்பது பற்றி மருத்துவர்கள் பெற்றோருடன் கலந்தாலோசிப்பார்கள். ஒவ்வொரு பிளவும் மற்றொன்றை விட வேறுபட்டிருக்கும் என்பதால் சிகிச்சை முறைகளும் வேறுபடும் பிளவின் தன்மை, கடுமையைப் பொறுத்து குழந்தையின் வாழ்க்கை பல விதங்களில் பாதிக்கப்படுகிறது. அதன் உடல் மன நலங்களில் பல சிக்கல்கள் ஏற்படலாம். அக்குழந்தை வளரும் போது ஒவ்வொரு கால கட்டத்திலும் வெவ்வேறு சிகிச்சைகள் தேவைப்படுகின்றன. உதட்டுப் பிளவும், அண்ணப் பிளவும், ஒரு குழந்தையின் பற்கள், முக எலும்புகள், தோற்







றம், உணவுண்ணுதல், திரவங்களை அருந்துதல், பேச்சு, உச்சரிப்பு, மொழி, நடுக் காதுச் சிக்கல்கள் எனப் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும், குழந்தைக்கும் பெற்றவருக்கும் பலவிதமான பயிற்சிகள், வழிநடத்தல்கள் அவசியமாக இருக்கும். எனவே இச்சிகிச்சையை மேற்கொள்ளும் மருத்துவக் குழு பல்வேறு சத்திரசிகிச்சை நிபுணர்கள், மருத்துவர்கள், பல் மருத்துவர்கள், இன்னும் பல நிபுணர்களை உள்ளடக்கியது. ஒரு குழந்தை பிறந்தவுடன் ஆரம்பிக்கும் சிகிச்சை, பல் வேறு படிகளைக் கொண்டு 21 வயது வரை நீடிக்கிறது. அதாவது இத்தொடர் சிகிச்சை முறை முற்றுப் பெறுவதற்குக் கிட்டத்தட்ட 20 வருடங்கள் ஆகும்.

அனைத்து மருத்துவர்களும் நிபுணர்களும் Plastic Srugeon, Reconstructive Surgeon ஆகியவர்களின் தலைமையில் ஒருகுழுவாகச் சேர்ந்து இயங்குவார்கள். இக்குழுவில் பின்வரும் நிபுணர்கள், மருத்துவர்கள் தேவைக்கேற்ப சிகிச்சை அளிப்பார்கள்.

- Nurses: செவிலியர்
- Orthodontics: ஒழுங்கற்ற பற்களைச் சீரமைக்கும் பல் வைத்தியர்
- Dentistry: பல் வைத்தியர்
- Oral-maxillo-facial surgery: முகத்தில் உள்ள எலும்புகளைச் சீரமைக்கும் சத்திரசிகிச்சை நிபுணர்
- Otolaryngology-head and neck surgery: காது தொண்டைக்குரிய மருத்துவர், தலை, கழுத்துக்குரிய சத்திரசிகிச்சை நிபுணர்.
- Audiologists: செவிப்புலன் திறமையை பரிசோதனை செய்யும் மருத்துவர்
- Dieticians: உணவு முறை வல்லுநர்
- Occupational therapists: தொழில்முறை சார்ந்த பயிற்சி அளிப்பவர்
- Geneticists: மரபணு மருத்துவர்
- Social worker: சமூகநல அலுவலர்
- Speech language pathologists: பேச்சு, மொழிப் பயிற்சியாளர்
- Prosthodontists: செயற்கைப் பற்கள் பொருத்தும் பல் மருத்துவர்
- Psychologists: உளவியல் வல்லுநர்
- Psychiatrists: மனநோய் மருத்துவர்
- Pediatricians: சிறுவர் நலமருத்துவர்

சத்திர சிகிச்சைகளில் உதடு, அண்ணம் ஆகியவற்றைத் திருத்தி அமைப்பது, தாடை எலும்புகளைச் சீரமைப்பது, மூக்கின் உருவத்தை மாற்றி அமைப்பது, நடுக்காதின் அமைப்புகளைச் சீராக்குவது முதலாகப் பல சிகிச்சைகள் அடங்கும்.

ஒரு குழந்தையின் உதட்டுப் பிளவு அது பிறந்து 3 - 6 மாதங்களுக்குள் சீரமைக்கப்படலாம். காயம் ஆறியபின் மூக்கின் கீழே ஒரு சிறிய வடு மட்டுமே காணப்படும். அண்ணப் பிளவு 9 - 12 மாதங்களுக்குள் திருத்தப்படுகிறது. இரண்டு வித மான சத்திர சிகிச்சைகளுக்கும் வைத்தியசாலையில் நீண்டகாலம் இருக்க வேண்டியதில்லை.

குழந்தை வளரும்போதும், பாடசாலை செல்லும்போதும், அச்சிறுவன்/ சிறுமிக்குரிய சரியான வழிநடத்துதல் மிக அவசியம். பெற்றோர்கள், ஆசிரியர்களுக்கு நடைமுறைச் சிக்கல்களை விளக்கி உதவி பெற வேண்டும். ஏனைய மாணவர்கள் சிலர் இந்த நிலைமையைச் சரியாகப் புரிந்து கொள்ளாது கேலி செய்யக்கூடும். அந்நிலைமையை எவ்வாறு எதிர் கொள்ள வேண்டும் என்பதை சம்பந்தப்பட்ட சிறுவருக்குச் சொல்லித்தர வேண்டும். எந்த நிலையிலும் தன்னம்பிக்கை ஊட்டும் விதமாக சுற்றி உள்ளவர்கள் நடந்துகொள்ள வேண்டும்.

வயது வந்தவர்களுக்குரிய சிகிச்சைகள் Sunnybrook Health Science Centre மருத்துவர்களால் வழங்கப்படுகின்றன.

Ministry of Health and Long Term Care, வருமானம் குறைவாக உள்ள குடும்பத்தினருக்கு The Ontario Cleft Lip and Palate/Craniofacial Dental Program என்ற அமைப்பின் ஊடாக தகுந்த நிதி உதவி செய்துவருகிறது.

**உசாத்துணை:**

- The Ontario Cleft Lip and Palate/Craniofacial Dental Program (2013) Retrieved from
- http://www.health.gov.on.ca/en/public/publications/child/cleft.aspx
- Cleft lip and palate program (2014) Retrieved from http://www.sickkids.ca/cleftlip/index.html
- http://www.sickkids.ca/CleftLip/What-we-do/index.html
- http://www.sickkids.ca/CleftLip/What-we-do/How-to-make-a-referral/Referral-Parameters/index.html
- https://www.uoftplasticsurgery.ca/programs/cleft-lip-palate/
- http://kidshealth.org/en/parents/cleft-lip-palate.html#
- Image of Cleft lip repair (2016) Retrieved from
- https://www.nlm.nih.gov/medlineplus/ency/presentations/100010_4.htm



ravichandrika@thaiveedu.com

உங்களது அனைத்து சட்டத் தேவைகளுக்கும்...
KENNEDY LAW OFFICE கெனடி சட்ட அலுவலகம்
REAL ESTATE LAW
BUSINESS LAW
CRIMINAL LAW
FAMILY LAW
IMMIGRATION LAW
ODSP APPEALS
SMALL CLAIMS
WILLS, POWER OF ATTORNEY & AFFIDAVITS
NOTARIZING & COMMISSIONING
W.KENNEDY BERNADIUS, LL.B
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC
கனேடிய தமிழ் வழக்கறிஞர்

Tel: 416 613 4900
2390 Eglinton Ave. East, Suite# 223 Scarborough, ON. M1K 2P5 (Kennedy & Eglinton)
Fax: 416 613 4904 E: williamkennedylaw@gmail.com







TRUE HAIR REPLACEMENT
& COSMETICS CENTRE INC.




For New Clients Only

Look 7 to 10 years younger, get free hair (One Free Hair System) for joining our one year program.

Don't miss out on this great opportunity for looking younger and boosting your self confidence.

Call now and make a appointment for your free consultation
416-492-7873

7 முதல் 10 வயது வரை இளமையாகத் தோன்றுவதற்கு ஒரு அரிய சந்தர்ப்பம்

Visit our website
www.truehair.ca

TRUE HAIR REPLACEMENT
& COSMETICS CENTRE INC.

Tel: 416-492-7873
Fax: 416-492-8664



# BUY & SELL with TEAM RAMESH

INVESTMENTS

Investment/Rental Properties Available in Oshawa & Close to York University.
Call Us For Details

JUST LISTED




Whitby - Thickson & Taunton

JUST SOLD




Ajax - Salem & Taunton



Please Call Us...

Thurairajah RAMESH B.Sc. Eng.
ROSKY Navaratnam - PARVIN Vaezzadeh - JAWED Iqbal
(Sales Representatives)

TEAM RAMESH 416-879-2000

HOMELIFE GTA REALTY INC. BROKERAGE - 416-321-6969


Ravi Kana Broker
COMMITTED TO EXCELLENCE
Call me now to get your HOME SOLD 416-725-7284
FOR SALE $569,000
Toronto - Kennedy/Ellesmere
FOR SALE $575,000
Whitby - Thickson/Bellwood
FOR SALE $589,000
Ajax - Rossland/Harkins
FOR SALE $599,000
Pickering - Kingston Rd & Walnut
FOR SALE $729,000
Toronto - Morningside/401
FOR SALE $848,000
Markham - Hwy 7 & 9th Line
FOR SALE $918,000
Toronto - Mccowan/Ellesmere
FOR SALE $999,900
Toronto - Ellesmere/Meadowvale
MASTERS
HALL OF FAME
Centurion Award Winner 1999 – 2014
Century 21
Percy fulton Ltd. Borkerage
AIR MILES
Ravi Kana
Broker
Cell 416.725.7284
ravikana@trebnet.com
www.ravikana.com
2911 Kennedy Rd. Toronto, ON M1V 1S8 Office 416.298.8200


MORTGAGE
SOLUTIONS FOR EVERYONE!
2.69% FOR 5 YEAR FIXED*
2.30% FOR 5 YEAR VARIABLE*
*OAC
▶ Purchase
▶ Refinance
▶ Renewals / Switches
▶ 1st, 2nd, 3rd Mortgage
▶ Equity Lines of Credit
▶ Bad Credit / No Credit
▶ Bankruptcy/ Consumer Proposals
▶ Power of Sale
▶ Tax & Mortgage Arrears
APPROVED
Mortgage Application Form
MORTGAGE ALLIANCE
Ram Krish
Mortgage Agent - Mortgage Alliance
Lic # M08002015
Call Now : 416-427-5555
10 Milner Business Court, Suite 401 Scarborough, ON M1B 3C6
Visit us at www.lenderhub.ca

# வெளிப்புறத் தானியங்கி மின்சீராக்கி

## வெளிப்புறத் தானியங்கி மின்சீராக்கி (வெ.தா.மி) Automated External Defibrillator (A.E.D)


மேலே குறிப்பிட்டுள்ள கருவியின் பெயரைப் பார்த்து விட்டு இது ஏதோ தொழிற்சாலைகளில் பாவிக்கும் இயந்திரம் என்று எண்ணி இக்கட்டுரையை வாசிக்காது விட்டு விடாதீர்கள்.

நின்றுவிட்ட இதயத்தையும், சுவாசத்தையும் மீண்டும் செயற்பட வைக்கும் CPR எனப்படும் மீளவுயிர்ப்பிக்கும் செய்முறை (Cardio Pulmonary Resuscitation) யின் பொழுது பாவிக்கப்படும் மின்கருவியே இதுவாகும்.

இந்த AED கருவியினால் உடலுக்கு அதாவது இதயத்திற்குக் கொடுக்கப்படும் மின்சாரம் சாதாரண இதயத்துடிப்பை பழைய நிலைக்கு மீண்டும் கொண்டு வரக்கூடியது. இக்கருவி இதயத் துடிப்பின் வீதத்தை ஆய்ந்து அறிந்து இதயத்திற்கு கொடுக்க வேண்டிய அதிர்ச்சியை (Shock) கொடுக்க வல்லது.

கல்வி நிறுவனங்கள், அரசாங்க கட்டிடங்கள், காரியாலயங்கள் ஆகாய விமானங்கள் வானூர்தி நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற இன்னோரன்ன பல முக்கிய பகுதிகளில் முதலுதவி நிலையங்களுடன் இந்த AED (வெ.தா.மி) மின்கருவிகள் பொதுமக்களுக்காகப் பாவனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இக்கருவியானது சிறப்பாக இயங்குவதாயின் அதனை இதயம் நின்று விட்ட ஒரு சில நிமிட நேரங்களினுள் பாவித்தல் வேண்டும். மூளையில் உள்ள நரம்புக்கலங்கள் இரத்தம் சீராகப் பாய்ந்து மூளையை சென்று அடையாத பொழுது 4 தொட்டு 6 நிமிடங்கள் வரைதான் உயிர்வாழும் அச்சொட்டாகக் கூறுவதாயின் இப்பிரதான நேரத்தை நான்கு நிமிடங்கள் என்று கொள்வது மிகவும் நல்லது. இக்குறிப்பிட்ட



4 நிமிடங்களினுள் இதயத்தை மீளவும் செயற்படவைத்து சுவாசத்தையும் இயக்கி விடவேண்டும். இதை CPR என்று கூறுவார்கள் இதனை அருகில் உள்ள ஒரு-வரால் மாத்திரம் தான் செய்ய முடியும். ஏன்? நான்கு நிமிடங்களினுள் செய்ய வேண்டிய அலுவல் இது. CPR பயிற்சி பெற்ற எவராலும் இதைச் செய்ய முடியும்.

ரொறன்ரோ அவசர மருத்துவ சிகிச்சைப் பிரிவு இதன் காரணமாகவே பல இடங்களில் AED கருவிகளைப் பொருத்தி வருவதுடன் பலருக்கு முதலுதவிப் பயிற்சிகளையும் கொடுத்து வருகிறது.

எதை முதல் செய்ய வேண்டும்?

C.P.R என்பது நெஞ்சுப்பகுதியில் எமது கைகளை வைத்து இதயம் அமைந்துள்ள இடத்திற்கு நேரே இதயத்தை நோக்கி ஒரு நிமிடத்திற்கு 100 தடவைகள் அழுத்துவதாகும். அப்பொழுது இதயத்தின் அறைகள் அமுக்கப்பட்டு அந்த இதய அறைகளில் உள்ள குருதியானது உடல் பூராகவும் பாய்ச்சப்படும். சுவாசம் தொழிற்படாதவிடத்து செயற்கைச் சுவாசம் கொடுத்தல் வேண்டும்.

முதலில் செய்ய வேண்டியது CPR இதை 2 நிமிடங்களாவது செய்தல் வேண்டும். இதன் பின்பு தான் அதாவது CPR ஐ, 2 நிமிடங்களாவது செய்த பின்புதான் AED உபகரணத்தைப் பாவித்தல் வேண்டும். CPRன் பொழுது நெஞ்சறையை அமுக்கும் பொழுது உடல் முழுவதும் குருதி பாய்ந்து உடலின் பிரதான உறுப்புகளின் செயற்பாடுகளைத் தக்க வைத்துக்கொள்கின்றது. இரண்டு நிமிடங்களின் பின்பு கொடுக்கப்படும் AED மின் அதிர்வு இதயச் செயற்பாட்டைத் தூண்டி, இதயத் துடிப்பை சீராக்குகிறது.

இதயத்திற்கு ஏன் மின்சாரம் கொடுக்க வேண்டும்?

இதயத்தில் நான்கு அறைகள் உண்டு மேலேயுள்ள இரு அறைகளை வலது இடது சோணையறைகள் என்றும் கீழேயுள்ள இரு அறைகளையும் வலது, இடது இதயவறைகள் என்றும் கூறுவார்கள்.

**- கந்தையா செந்தில்நாதன் -**

மேற்புறமாக உள்ள வலது, இடது சோணைகளில் ஒன்றான வலது சோணையறையில் தானியங்கி மின் உற்பத்திக் கலங்கள் உண்டு. இவை சிறிதளவு மின்சாரத்தை இயல்பாகவே உருவாக்கி இதயத்தின் ஏனைய பகுதிகளுக்குப் பரவச் செய்யும் இதை ஆங்கிலத்தில் S.A.NODE என்று அழைப்பர். தமிழில் குடாச் சோணைக் கணு என்று அழைப்பர்.

இங்கு உற்பத்தியாகும் மின்சாரம் முதலில் சோணையறைகளையும், பின்பு அம்மின்சாரம் A.V. NODE என்ற முடிச்சினூடாகத் தொடர்ந்து செல்லும் நரம்புகளின் ஊடாக இதய அறைகளுக்கும் பரவி ஒரு ஒழுங்கு முறையில் சோணைகளையும், இதய அறைகளையும் சுருங்கச் செய்வதன் மூலம் குருதியை உடல் பூராகவும் பாய்ச்சுகிறது.

முதலுதவியைப் பயில்வதன் மூலம் அருகில் மார்படைப்பால் அல்லது வேறு ஏதாவது காரணத்தால் இதயமும், சுவாசமும் நின்றுவிட்ட பொழுது அவை இரண்டையும் மீளச் செயற்படச்செய்து ஓர் உயிரை மீட்டுக் கொடுப்பது ஒரு பாரிய நிகழ்வும், தர்மமும் கூட அருகில் உள்ள ஒருவரால் மாத்திரம் இது முடியும். மீண்டும் அந்தப் பிரதானமான 4 நிமிடங்களை நினைவில் கொண்டு முதலுதவி கற்பதன் அவசியத்தை உணர்ந்து கொள்ளுங்கள்.



*senthilnathan.k@thaiveedu.com*


SIMRUT TRUCKING INC.
6680 Campobello Road, Mississauga, ON L5N 2L8

HIRING AZ DRIVERS FOR USA!
SINGLE AND TEAM DRIVERS

* Long-term work and good pay
* Dedicated Texas runs
* Regular loads: 2800-3800 miles/week
* Guaranteed $1200-$1800 per week
* Experience required
* Excellent equipment - Freightliner, Kenworth and new Volvo trucks
* Clean CVOR & Abstract
* No criminal record
* Must be able to cross border
* Must be able to speak, write and understand English

Call: 416-254-7254 | Cell: 416-786-9676
E-mail: Info@SimrutTrucking.com

Certified First Aid & CPR Course Instructor
EMS - Toronto
Dr. Kandiah Senthilnathan ( SLMC)
Ultra-sonographer (CSDMS)
(Home work help available for Students)
647-801-9252
kandiahsenthilnathan@gmail.com

"Canada was built by citizen immigrants, people who come here permanently with their families to become Canadians."
- Hon. John McCallum, MP
Minister of Immigration, Refugees and Citizenship

Respond to Canada's need for immigrants.

Become a Regulated Immigration Consultant

ICCRC ACCREDITED EDUCATIONAL PROGRAM

Full-time | Part-time | Online

Contact a program adviser at 604.628.5784 or Toll free 1.844.628.5784 or apply online.

Ashton
Ashton College
www.ashtoncollege.ca

# Stephen Hawking: மாபெரும் அண்ட விஞ்ஞானி

- எஸ். பத்மநாதன் -

இயற்பியல் (Physics) விஞ்ஞானி ஐன்ஸ்டீனுக்கு அடுத்தபடி, இன்னொரு ஐன்ஸ்டீன் என அழைக்கப்படும் Stephen Hawking உலகெங்கும் அறியப்படுகிற ஒரு இயற்பியலாளரும் அண்ட ஆய்வு விஞ்ஞானியும் ஆவர். பூமியைப்பற்றி அடிப்படை அறிவைக் கூடச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாத நம்மில் பலருக்கு இப்படி ஒரு விஞ்ஞானி கிடைக்காமல் போயிருந்தால், பேரண்டம் பற்றிய பல புதிர்களுக்கு விடை தெரியாமல் போயிருக்கும். சக்கர நாற்காலியில் இருந்து கொண்டே விஞ்ஞான ஆய்வாளர்களுக்கு ஆச்சரியத்தையூட்டும் முடிவுகளை வெளியிட்ட இவரைப்போல் இன்னொருவரைக் காண்பதரிது.

1942 ஜனவரி 8ம் திகதி இங்கிலாந்து நாட்டின் ஒக்ஸ்போட்டில் நகரில் Frank Hawking(1905 - 1986) Isobel Hawking (1915 – 2013) ஆகியோருக்கு பிறந்தவர் இவர். தாயார் ஸ்கொட்லாந்தை சேர்ந்தவர். தத்துவம், அரசியல், பொருளாதாரம் படித்தவர். தகப்பனார் மருத்துவம் பயின்றவர். பெற்றோர் வடக்கு லண்டன் பகுதியில் வாழ்ந்தார்கள். குழந்தையிப் ஆகாலப் பகுதியில் இரண்டாம் உலக யுத்தம் நடந்து கொண்டிருந்தது. ஜேர்மனி, லண்டன் மீது கடுமையான குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தது. பெற்றோர் குழந்தை பெற்றுக்கொள்வதற்கு ஒக்ஸ்போட் நகர் பாதுகாப்பானது என்று கருதி அங்கு இடம் பெயர்ந்தார்கள்.

ஸ்டீவன் 1950 முதல் செயின்ற் அல்பன்ஸ் நகரில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்றார். தனது மகன் ஒரு மருத்துவராக வரவேண்டும் என அவரது தந்தை விரும்பினர். ஆனால், Hawking விஞ்ஞானம், வானவியல் ஆய்வுகளில் நாட்டம் கொண்டிருந்தார். விண்மீன்களை வியப்பு மேலிட பார்ப்பார். Board games எனப்படும் விளையாட்டுகளில் விருப்பம் உள்ளவர். பழைய மணிக்கூடு, தொலைபேசியின் பாகங்களைக் கொண்டு கணினி ஒன்றைச் செய்தார். கணித சமன்பாடுகளில் வல்லமை கொண்டிருந்தார்.

17 வயதில் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்துக்கு தெரிவுசெய்யப்பட்டார். அங்கு கணிதம் படிக்க முடியாததால் இயற்பியல், வேதியியல் துறைகளைத் தெரிவு செய்தார். 1962ல் முதலாம் வகுப்பில் சித்தி அடைந்து பட்டதாரியாகி கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலுள்ள Trinity Collegeல் அண்டவியலில் கலாநிதி பட்டம்(Ph.D) பெற மேற்படிப்பை ஆரம்பித்தார்.

ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தின் இறுதி வருடத்தில் தனது உடலின் இயக்கங்கள் சீராக இல்லாததை உணர்ந்தார். ஒரு தரம் படிகளில் இருந்து இறங்கும்போது விழுந்து விட்டார். படகோட்டுவதில் தேர்ச்சி உள்ள இவரால் படகோட்ட முடியவில்லை. பேச்சு குளறலாக இருந்தது. அடுத்து கேம்பிரிட்ஜில் முதல் வருட மாணவனாக இருந்த வேளையிலும் இந்த அறிகுறிகள் தொடர்ந்தன. 21 வயதில் மருத்துவர்கள் அவருக்கு மிகவும் மோசமான நரம்பியல் சிக்கல் உள்ளதைக் கண்டுபிடித்தார்கள். இவருக்கு ஏற்பட்ட நோய் Amyotrophic Lateral Sclerosis (ALS) என்பதாகும். இந்நோய் உள்ளவர்களின் தசைகள் அவற்றுக்குரிய நரம்புகளின் கட்டுப்பாட்டில் இருப்பதில்லை. மிகவும் அரிதாக வரும் இந்நோய் உள்ளவர்களின் ஆயுட்காலம் 5 வருடங்கள் மட்டுமே. ஸ்டீவன் இரண்டு வருடங்களுக்கு மேல் உயிருடன் இருக்கமாட்டார் என மருத்துவர்கள் கணித்தார்கள். ஆயினும் இவ்வருடம் 74 வயதாகும் அவர் எண்ணற்ற ஆய்வுகளைச் செய்து இன்னும் உயிருடன் இருக்கிறார் என்பது பெரும் அதிசயமே. ஆனால் அவருடைய வாழ்க்கை அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. அவருடைய சாதனைகளுக்குப் பின்னால் கடுமையான உழைப்பும் விடாமுயற்சியும் உள்ளது.

ஐன்ஸ்டீனுக்கு பின்பு மிக உயர்ந்த நுண்மதி (Inelligent Quotient) கொண்ட இவரது ஆய்வுகளில் பெரு வெடிப்பு கோட்பாடு, (Big Bang Theory), கருந்துளைக் கோட்பாடு (Theory of Black hole) முக்கியமானவை.

1965ல் இவரது ‘Singularities and Geometry Space – time’ ஆராய்ச்சி இவருக்கு கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுத்தந்தது.

1969ல் இவரால் முற்றாக நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. கைகால்களை அசைக்க முடியவில்லை. பேச முடியவில்லை. எனவே அவருடைய சக்கர நாற்காலி அவருக்கென்று பிரத்தியேகமாய் தயாரிக்கப்பட்டது. படிப்படியாக தனது தாடையை மட்டும் அசைத்து கணினியில் எழுத்துக்களை பெறக்கூடிய நவீன நுட்பமொன்றினை இணைத்து கொண்டார். அதன் மூலம் அவர் மற்றவர்களுடன் பேசக் கூடியதாக இருந்தது.



1966ல் கலாநிதி ஆய்வுக்காக அடம்ஸ் விருதினைப் பெற்றார். 1974ல் FRS விருது, 1975ல் எட்டிங்ரன் பதக்கம், 1976ல் மக்ஸ்வெல் பதக்கம், விருது, 1976ல் வெறயின்மென் விருது, 1978ல் CBE விருது, 1989ல் RAS தங்கவிருது, 1987ல் Divac விருது, 1988ல் wolf prime விருது, 1989ல் ஊர் விருது, 1989ல் Prince of Asterias விருது, 1999ல் Naylor விருது, 1999ல் Lilien Field விருது, 1999ல் Albert Medal Royal Society of Arts விருது, 2006ல் Copley பதக்கம், 2000ல் இங்கிலாந்தின் Presidential Medal of Freedom விருது, 2012ல் Fundamental Physics விருது என்பவற்றினைப் பெற்றார். அண்டவியல் ஆய்வுக்காக அதிக விருதுகளை பெற்றவர் என்ற பெருமை இவருக்குண்டு.

பல முன்னணி விஞ்ஞானிகளுடன் சேர்ந்து இவர் ஆய்வுகளில் ஈடுபட்டார். Fred Hoyle, Dennis, William Sciama போன்ற அண்டவியல் விஞ்ஞானிகளுடன் சேர்ந்து பல கோட்பாடுகளை அறிமுகம் செய்தார். புவிஈர்ப்பு கோட்பாடு ஆய்வு நிறுவனம் (Gravity Research Foundation) நடத்திய கட்டுரைப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்றார். சார்பு கோட்பாடு (The General Theory of Relavtivity) பற்றி ஆய்வு வெளியிட்டார். 1970ல் கருந்துளை நுட்பங்கள் (Black holes Mechanism) பற்றிய ஆய்வு செய்தார். 1973ல் The Large Scale Structure of Space – time நூலையும் வெளியிட்டார்.

The Universe in a nutshel (2001), on the shoulders of Giants (2002) God created integers (2005) My brief history (2013) ஆகியவை இவரது ஆராய்ச்சி நூல்களாகும். மற்றைய விஞ்ஞானிகளுடன் சேர்ந்து வெளியிட்ட நூல்கள் Nature of space and time (1996), Large the small and Human mind (1997) Brief History of time 2005, The Grand Design (2010) என்பனவாகும்.

சிறுவர்களுக்கான கதைகளும் எழுதியுள்ளார். மகள் லூசியுடன் சேர்ந்து Georges Secret key to the universe (2007), Georges Cosmic Treasure Hunt (2009), George and the big bang (2011), George and the unbreakable code (2014) என்னும் நூல்களை வெளியிட்டார்.

2014ல் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence: AI) சம்பந்தமாக வேறு விஞ்ஞானிகளுடன் சேர்ந்து செய்த ஆய்வுகள் AIன் ஆபத்துக்களைக் குறிப்பிடுகின்றன.

விண்வெளி பற்றிய இவரது கருத்து மிகவும் பிரபலம் பெற்று வருகிறது. புவிவெப்பமாதல், அணுஆயுதயுத்தங்கள், புதிது புதிதாக உருவாகும் வைரஸ்கள் ஆகியவற்றினால் புவியில் வாழும் உயிரினங்கள் அழிய நேரிடலாம். அதைத் தவிர்க்க நாம் வேறு கோள்களுக்கு இடம்பெயர நேரிடும். எனவே மக்களுக்கு வான்வெளி பற்றிய அறிவு முக்கியமாகும் என்கிறார்.

அரசியல் நிலைப்பாட்டில் வியட்நாம் யுத்தத்தினை எதிர்த்துள்ளார், ஐக்கிய ராச்சியத்தின் தொழிற்கட்சியின் நீண்டகால ஆதரவாளர், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட AL Goreக்கு ஆதரவானவர், அணுஆயுத உற்பத்தியை எதிர்த்தார். சர்வதேச சுகாதார நிறுவனத்தின் Stem Cell ஆய்வுக்கு ஆதரவு வழங்கியுள்ளார். 2014ல் பிரித்தானியாவில் ஸ்கொட்லாந்து பிரிவதை எதிர்த்துள்ளார். புவி வெப்பமாவதைத் தடுப்பதற்குரிய செயல்பாடுகளை ஆதரிக்கிறார்.

மதம் பற்றிய இவரது உணர்வு மிகவும் வித்தியாசமானது. “நான் ஒரு மதவாதியல்ல அண்டம் என்பது விஞ்ஞானத்தின் விதிகளின்படி இயங்குகிறது. ‘Universe is Governed by the Laws of Science The Laws may have been decreed by god; but god does not intervene to break the Laws’ எனக் கூறியுள்ளார்.

அத்துடன் “நாம் ஒவ்வொருவரும் நம்பிக்கை கொள்ள சுதந்திரம் உள்ளது. கடவுள் என்பவர் இல்லை, பிரபஞ்சத்தை எவரும் உருவாக்கவில்லை, விதியை செயல்படுத்துவது எவருமில்லை, சொர்க்கம் இல்லை, பிரபஞ்சத்தின் அற்புதமான படைப்பை நினைத்து நன்றி கூறவேண்டும்” என்று கூறுகிறார். 2014ல் தன்னை ஒரு ‘நாஸ்திகன்’ (Atheist) எனக் கூறினார்.

இவரது ‘மரணம்’ பற்றிய ஆய்வு பலரையும் கவர்ந்துள்ளது. ஒரு விஞ்ஞானியென்ற வகையில் பகுத்தறிவு சிந்தனையை இணைத்துப் பார்க்கும் ஆற்றல் அவருக்கு இருந்தது. அவர் கூறிய பல உண்மைகள் பலருக்கு உவப்பாக இல்லாது இருக்கலாம்.


பொதுவாக மதவாதிகள் “நமக்கு இரண்டு உடல்கள் உள்ளன. நமக்கு தெரிந்த பூதவுடல் ஒன்று மற்றொன்று கண்ணுக்கு புலப்படாத சூட்சும உடல். நாம் இறந்த பின் வேறு ஏதோ ஒரு உலகுக்கு பயணிக்கிறோம். நமது நன்மை தீமைகளுக்கு ஏற்ப நரகமோ சொர்க்கமோ செல்லுகிறோம். எனவே மரணத்திற்கு பின்பு ஒரு வாழ்க்கை உண்டு” என்று நம்புகிறார்கள். இதை ஸ்டீவன் ஏற்றுக் கொள்ளவில்லை. “மரணம் தான் இறுதியானது சொர்க்கம், நரகம் எதுவுமே கிடையாது” என்பதே இவரது திட்டவட்டமான கருத்து.

“மூளை ஒரு கணினி போன்றது. எப்படி கணினியில் உள்ள சாதனங்கள் செயலிழந்து போய் விடுமோ அது போல மூளையும் செயலிழந்து விட்டால் அனைத்தும் முடிந்துவிடும். நான் கடந்த 49 வருடங்களாக மரணத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கிறேன். எனக்கு மரணபயமில்லை. ஆனால் நான் மரணிக்க ஆசைப்படவில்லை. நான் நிறைய சாதிக்க ஆசைப்படுகிறேன். பல விஷயங்களை நான் கற்றுக்கொள்ளவே இல்லை. அதையெல்லாம் செய்யவேண்டும். மரணம் இறுதியானது சொர்க்கமும் நரகமும் கிடையாது. மறுபிறவியும் கிடையாது, மரணத்துக்கு பின் வாழ்வு என்பது மரண பயத்தை போக்க கட்டப்பட்ட கதைகளே அவை” என்பதே அவரது முடிவாகும்.

இவர் சில ஆவணப்படங்களில் நடித்துள்ளார். இவரைப் பற்றி முன்னூறுக்கும் மேலான கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. இவருடைய வாழ்க்கை வரலாறு ‘The Theory of Everything’ என்னும் திரைப்படமாக வந்துள்ளது.

கேம்ப்ரிட்ஜில் மாணவனாக இருந்தபோது தனது வருங்கால மனைவி ஜேன் வைல்ட் என்பவரைச் சந்தித்தார். 1964ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார்கள். இவர்களுக்கு றொபேர்ட், லூசி, டிமோத்தி என மூன்று பிள்ளைகள் உள்ளார்கள். 25 வருடங்களின் பின் ஸ்டீவன் தனக்கு உதவியாக இருந்த தாதி எலெய்ன் மேசன் என்பவர் மீது காதல்வயப்பட்டு ஜேனை விவாகரத்து செய்தார். 1995ம் ஆண்டு எலெய்னை மணமுடித்தார். அத்திருமணம் பதினோரு வருடங்கள் நீடித்தது. மீண்டும் விவாகரத்துப் பெற்றார். முதல் மனைவி ஜேன், மூன்று பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் உறவைப் புதுப்பித்துக்கொண்டு வாழ்கிறார். தற்போது மிகுந்த மகிழ்ச்சியுடன் இருப்பதாகக் கூறுகிறார்.

அண்ட கோட்பாடுகளை ஆய்வு செய்த விஞ்ஞானி, உலகின் தலை சிறந்த ஆய்வாளர், ஐன்ஸ்டீனுக்கு பிறகான இயற்பியல்வாதி, பல விஞ்ஞானிகளை உருவாக்கிய பிதாமகன், ஒரு சக்கரநாற்காலியிலிருந்தே உலகுடன் பேசியவர் என்ற வகையில்Stephen Hawking முக்கியம் வகிக்கிறார்.



pathmanathan.s@thaiveedu.com

# 2016 20 ஆவது ஆண்டில் புதினம் PUTHINAM

A Freely Circulated Monthly

ரூபா (இலங்கை) 1 லட்சம் பரிசுத் தொகை

## உலகளாவிய சிறுகதைப் போட்டி

எழுதி அனுப்ப வேண்டிய கடைசி நாள் : 1-6-2016

லண்டன் வாழ் தமிழ் மக்களின் அபிமானப் பத்திரிகையான 'புதினம்' 2016ஆம் ஆண்டு, தனது 20ஆவது ஆண்டில் பயணிக்க ஆரம்பித்துள்ளது. இதனைக் குறிக்கும் முகமாக 'உலகளாவிய சிறுகதைப் போட்டி' ஒன்றை நடத்தி, தேர்ந்தெடுக்கப்படும் சிறுகதைகளுக்கு ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பரிசுகள் வழங்கப்படவுள்ளது. முதல் மூன்று சிறுகதைகளுக்கும், மேலும் பத்து சிறுகதைகளுக்கும் இந்தப் பரிசுகள் வழங்கப்படும்.

### விதிகள்

1. சிறுகதையின் பொருள் இலங்கை மக்களின் வாழ்வியல் பற்றியதாக இருக்க வேண்டும்.
2. சிறுகதை இதுவரை எந்தப் பத்திரிகையிலோ, நூலிலோ வெளிவராத கதையாகவும், ஏற்கனவே பிரசுரமான ஒரு கதையின் தழுவலாக இல்லாமலும், முழுக்க, முழுக்க எழுத்தாளரின் மூல முயற்சியாக இருக்க வேண்டும்.
3. சிறுகதை A-4 அளவு காகிதத்தில் கையெழுத்துப் பிரதியானால், பத்து முதல் பன்னிரண்டு பக்கங்கள் வரை தமிழ் மொழியில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
4. போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகளைத் திருப்பி அனுப்ப முடியாதாகையால், அவற்றின் போட்டோ பிரதியை (Xerox-Photocopy) எடுத்து வைத்துக் கொள்வது எழுத்தாளரின் பொறுப்பாகும்.
5. சிறுகதையோடு இணைக்கப்படும் கடிதத்தில், 'இச் சிறுகதை முழுக்க முழுக்க எனது கற்பனையில் உருவானது என்றும், ஏற்கனவே வெளிவந்த ஒரு கதையைத் தழுவியது அல்ல' என்ற உறுதிமொழியைக் கொடுத்து எழுத்தாளர் கையொப்பமிட வேண்டும்.
6. உலகின் எந்த நாட்டிலிருந்தும் எழுத்தாளர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
7. வருகிற 01-06-2016க்கு முன்னர் 'புதினம்' ஆசிரியரிடம் பிரதிகள் வந்து சேரவேண்டும்.
8. புதினம் பத்திரிகை ஒழுங்கு செய்யும் நடுவர்கள், சிறுகதைகளைப் பரிசீலனை செய்து, சிறந்த முதல் மூன்று சிறுகதைகளையும், ஆறுதல் பரிசுகள் வழங்குவதற்காக பத்து சிறுகதைகளையும் தெரிவு செய்வார்கள்.
9. புத்தகமாகப் பிரசுரிக்கும் முதலாம் பதிப்பின் உரிமை மட்டும் 'புதினம்' பத்திரிகைக்கு உரியது.
10. இப்போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களுக்கும் 'புதினம்' ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.


– ஆசிரியர், 'புதினம்'

சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி

Editor, 'Puthinam' 38 MOFFAT ROAD LONDON SW 17 7EZ, U.K TEL: 020 8767 8004 MOB: 077 353 46890

Email: editor@londonputhinam.co.uk









AJAX NS DENTAL MARKHAM NS DENTAL

அரங்க ஆதரவில்



மேலதிக விபரங்களுக்கு:

ஈழநாடு பரமேஸ் - 416.841.9600

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 23வது ஆண்டு விழா

தென்னிந்திய பிரபல பக்கவாத்தியக் கலைஞர்களுடன் பிரபல தென்னிந்தியப் பின்னணிப் பாடகி 'இசையரசி' S. மஹதியின்

## சங்கீத இசை அமுதம்

(இன்னிசைக் கச்சேரி)

APRIL 24 6:00 PM


ARMENIAN YOUTH CENTRE
50 Hallcrown Place
(Victoria Park Ave & HWY 401)

## உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 23வது ஆண்டு விழா


Buying Or Selling
Residential, Commercial, Land & Investment Properties
Midland/Lawrence $174,000 For Sale Bedrooms 2, Washrooms 1
Birchmount/Ellesmere $339,000 For Sale Bedrooms 2, Washrooms 2
Kennedy/401 $359,900 For Sale Bedrooms 2, Washrooms 2
Mcnicoll/Middlefield $560,000 For Sale Bedrooms 3+1, Washrooms 2
Bellamy/Eglinton $599,000 For Sale Bedrooms 3+2, Washrooms 2
Markham/Steeles $599,900 For Sale Bedrooms 4, Washrooms 4
9th Line/Reeves Way $669,900 For Sale Bedrooms 4+1, Washrooms 4
Markham /Denison $689,000 For Sale Bedrooms 4+1 Washrooms 4
Markham Rd/ Major Mackenzie $695,000 For Sale Bedrooms 4, Washrooms 3
Old Harwood/Hwy 2 $699,000 For Sale Bedrooms 3+2, Washrooms 3
N.Steeles/E.Mccowan $699,900 For Sale Bedrooms 3+1, Washrooms 3
Castlemore Rd/ Mcvean Dr $729,000 For Sale Bedrooms 4, Washrooms 3
Mccowan Rd & Bur Oak Ave $749,000 For Sale Bedrooms 3+1, Washrooms 4
Mccowan/Mcnicoll $758,800 For Sale Bedrooms 4+1, Washrooms 2
Fairport Rd & Strouds Lane $1,248,800 For Sale Bedrooms 4+0, Washrooms 4
HOMELIFE HIGHER STANDARDS
Sathy Sivasubramaniam Sales Representative
2004/2005 Silver Award
2008/2009 Platinum Club Award
2010/ 2011/ 2012/ 2013/ 2014/ 2015 Chairman Club Award Top 6% Sales Rep in Canada
2011 / 2012 Sales person of the Year
For Sellers:
Free Market Evaluation Available
Competitive commission Packages available
Will pay for Staging & Consultation
Will pay for the Professional Photographer
Virtual Tour
Color Brochure
Will do open house until house get sold.
Will market your home with social medias
For Buyers
Will find the home in any area within your budget
Get you the lowest mtg. rate
1 Year Home Warranty Available for Limited Time
Preferred pricing on Furniture, Appliances & Electronics through "The Brick" up to 35% off
HomeLife/Future Realty
205-7 Eastvale Drive, Markham, Ont L3S-4N8
Office: 905-201-9977 / Fax: 905-201-9229 / Direct: 416-624-5044 E-mail-homelifesathy@gmail.com www.homelifesathy.com

HONDA

DRIVE A
WINNER




ALL-NEW 2016 CIVIC
AVAILABLE WITH A 1.5 LITRE, TURBOCHARGED, 4-CYLINDER ENGINE* WITH 174 HP‡ AND HONDA SENSING™ TECHNOLOGIES

0.99% APR
LEASE° OR FINANCE† FOR 24 MONTHS ON ALL 2016 CIVIC SEDAN MODELS

2016 NORTH AMERICAN CAR OF THE YEAR

HONDA
Formula Honda
Where You're Treated like Family.



Shan Sarvananthan
*Sales & Leasing Consultant*
Cell 416-720-1184

2240 Markham Road
Scarborough,
ON, M1B 2W4
Telephone:
416-754-4555

formulahonda.com






Rajah Tharmalingam
*Sales & Leasing Consultant*
Cell 647-833-4998

Be a part of the fastest growing Century 21 Brokerage...

Century 21 Innovative Realty Inc. Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED

Serve more... Earn more... and Keep more...

Many reasons to join Century 21 Innovative Realty?

- Experienced and dedicated Broker of Record
- Three Friendly Managers with many years of experience
- Grand Centurion Office, 2 years in a row
- Top 10 Office in Canada / Chairman's Circle Office
- Two Locations (Scarborough and Mississauga)
- Third one coming soon to Ajax
- Over 200+ Agents and growing...
- Supportive Staff & Multi cultural Environment
- One on One and group training (3 times weekly)
- VIP access to pre-construction condos & new homes
- Land Development & custom home construction advice
- Investment Opportunities to agents
- and More and More...



Please call to arrange an appointment at
416 298 8383
Owned and Managed by
Sameem Mohamed, BASc, P. Eng
Broker of Record / Owner


2250 Markham Road, Unit 3,
Toronto ON M1B 2W4
(Markham & Finch, behind McDonalds)
Tel: 416 298 8383 Fax: 416 298 8303

350 Burnhamthorpe Dr. W. Unit 127
Mississauga, ON L5B 3J1
Tel: 905 270 8100

Coming soon to
Ajax

TOP 10 Brokerage in Canada*
*within Century 21 in Canada

INDEPENDENT ART FILM SOCIETY
தாய்வீடு THAIVEEDU HOME & LIVING



தாய் வீடு - சுயாதீன கலைத் திரைப்பட மையம், ரொறன்ரோ
12th
ITaFF - 2016

மே 14, 2016 இல் நடைபெறவுள்ள
சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா - படைப்புகளுக்கான கோரல்

தாய் வீடு பத்திரிகையும் சுயாதீன கலை திரைப்பட மையமும் கனடாவின் ரொறன்ரோ நகரில் நடத்தும் சர்வதேச குறுந்திரைப்பட விழாவில் பங்குபற்றுவதற்கான குறுந்திரைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன.

- சிறந்த குழந்தை நட்சத்திரம், நடிகர், நடிகைக்கான விருதுகள்
- சிறந்த கதை, ஒளிப்பதிவு, படத்தொகுப்பு, இயக்குநருக்கான விருதுகள்
- சிறந்த குறும்படம், சமூக விழிப்புணர்வுக்கான சிறந்த குறும்படம்,
- சிறந்த குறும்படத்துக்கான விமர்சகர் விருது என்பவற்றோடு
- சான்றிதழும் C$200 - 1000 வரையிலான பணப்பரிசுகளும் வழங்கப்படும்.

படைப்புகள் ஆங்கிலத்தில் துணைத் தலைப்புகளைக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

¥ படைப்புகள் ஏப்பிரல் 30, 2016க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.
¥ படைப்புகள் 20 நிமிடங்களுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
¥ படைப்புகளின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
¥ படைப்புகளுடன் அதில் பங்குபற்றிய தொழினுட்பக் கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படல் வேண்டும்.
¥ படைப்புகளின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.
¥ தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.

படைப்புகள்
அனுப்பப்படவேண்டிய முகவரி:
M.Ragunathan
4 Castlemore Avenue,
Markham, ON,
L6C 2B3,
Canada

மேலதிக தொடர்புகளுக்கு
1-416-857-6406
1-416-450-6833
1-416-832-0929

rathan@rogers.com,
iafs@rogers.com
www.iafstamil.com

# தன்வந்தரியின் மருத்துவப் பாரம்பரியம்

- பால. சிவகடாட்சம் -

*ஹஉம் நமோபகவதே வாசு தேவாய*
*தன்வந்தரயே அம்ருத கலச ஹஸ்தாய*
*சர்வ ஆமய நாசநாய திரை லோக்யநாதாய*
*மகா விஷ்ணவே நம'*

- தன்வந்தரி மந்திரம்

"எல்லோர்க்கும் வரம் தருபவரும் வாசு தேவராக இருப்பவரும், அமிர்த கலசத்தைக் கையில் ஏந்தியிருப்பவரும், சகல வித நோய்களைத் தீர்க்க மூவுலகத்தைக் காண்பவரும், மகாவிஷ்ணுவாக அவதரித்திருப்பவரும் ஆகிய தன்வந்திரிக் கடவுளே, உன்னை வணங்குகிறேன்."

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது தேவ மருத்துவரான தன்வந்தரி அமுதகலசத்துடன் தோன்றினார் என்று புராணங்கள் கூறும். நோய்தீர்க்கும் கடவுளாகப் போற்றப்பெறும் தன்வந்தரி பகவானை நினைவுகூறும் நாளாகத் தீபாவளிக்கு முந்தைய திரயோதசி தினம் இன்றும் கொண்டாடப்பெற்று வருகின்றது.

ஆயுள்வேதப் பொதுமருத்துவத்துறையின் முதலாவது போதனாசிரியர் என ஆத்தி-ரேயபுனர்வசு அறியப்படுவது போல் அறுவைச்சிகிச்சையின் முதலாவது போதனாசிரியராக அறியப்படுபவர் தன்வந்தரி. எனினும் இந்தத் தன்வந்தரி உண்மையில் காசியை ஆண்ட மன்னன் ஒருவரே என்பதும் இவரது இயற்பெயர் திவோதாச என்பதும் அறியப்பட்டுள்ளது. மருத்துவக்கலையில் பெற்றிருந்த நிபுணத்துவம் காரணமாக தேவலோக மருத்துவரான தன்வந்தரியின் அவதாரமாக மன்னன் திவோதாச போற்றப்பெற்றார். விஸ்வாமித்திரரின் வம்சத்தவரான சுஸ்ருதர் என்பார் திவோதாச தன்வந்தரியின் சீடர்களுள் ஒருவர்.

சுஸ்ருதர், ஔபதேனவர், வைதரானர், ஔரப்ரர், பௌஷ்கலாவதர், கரவீர்யர், கோபுரரக்ஷிதர் என்போரை உள்ளடக்கிய இருடிகள் திவோதாச தன்வந்தரியிடம் சென்று தங்களுக்கு மருத்துவம் படிப்பிக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொண்டனர். ஆயுள்வேதத்தின் எட்டுப் பெரும்பிரிவுகளுள் எதனை அவர்கள் படிக்க விரும்புகின்றார்கள் என்று தன்வந்தரி கேட்டபோது தாம் சல்லிய தந்திரம் என அறியப்படும் அறுவைச்சிகிச்சை பற்றியே அறிந்து கொள்ள விரும்புவதாக இருடிகள் தெரிவித்தனர்.


"எங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே நீங்கள் படிப்பிக்கவேண்டிய அவசியம் இல்லை. அனைவரும் சார்பாக சுஸ்ருதர் மட்டுமே உங்களிடம் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வார். நீங்கள் இருவரும் உரையாடுவதை நாங்கள் கேட்டு அறிந்துகொள்ளுவோம்" என்று அனைவரும் தன்வந்தரியிடம் பணிவுடன் தெரிவித்தனர்.

சகமாணவர்களுடன் சேர்ந்து தன்வந்தரியிடம் தாம் கேட்ட பாடங்களைத் தொகுத்து சுஸ்ருதர் ஆக்கிய நூலே சுஸ்ருதசம்கிதை என்ற பெயரில் இன்று எமக்குக் கிடைக்கும் ஆயுள்வேதத் தொகுப்பாகும். சரகசம்கிதையைப் போன்று இதுவும் இன்றுள்ள ஆயுள்வேத நூல்களுள் மிகப் பழமை வாய்ந்த ஒன்றாக எண்ணப்படுகின்றது.

அறுவைச்சிகிச்சையினைப் பிரதான பாடமாகக் கொண்டுள்ள போதிலும் சுஸ்ருத சம்கிதை சலாக்கிய தந்திரம் எனப்படும் கண், காது, மூக்கு தொடர்பான நோய்கள் பற்றிய பிரிவையும் உள்ளடக்கிக் காணப்படுகின்றது. பொதுவாக அறுவைச்சிகிச்சையைத் தொழிலாகக் கொண்டவர்களுக்கு உதவுமுகமாகவே சுஸ்ருதசம்கிதை எழுதப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

ஆயுள்வேத மருத்துவத்தின் ஆரம்பகாலத்தில் இருந்தே பொதுமருத்துவமும் அறுவைச்சிகிச்சையும் வெவ்வேறு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன என்பதற்கான சான்றுகள் உள்ளன. அறுவைச்சிகிச்சை தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அறுவைச்சிகிச்சையாளரை நாடும்படி நோயாளிக்கு அறிவுறுத்துமாறு சரகசம்கிதையில் கூறப்பட்டிருப்பதை இவ்விடத்தில் நினைவு கூரலாம்.

ஆரம்பகாலத்தில் அரசவம்சத்தினர் அறுவைச்சிகிச்சைத்துறையில் மிகுந்த ஆர்வம்



The flap of skin is twisted and brought down over the injured nose.

காட்டி வந்துள்ளனர் என்பதற்கு அநேக சான்றுகள் உள. இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அக்காலப்பகுதியில் அறுவைச் சிகிச்சையானது 'சல்லியக்கிரியை' என அறியப்பட்டது. 'சல்லியம்' என்பது அம்பைக் குறிக்கும் ஒரு வடமொழிச் சொல். போரின் போது எதிரிகள் விடும் அம்புதுளைப்பதனால் ஏற்படும் காயங்களே அதிகம். ஊடுருவிய அம்பை வீரனின் உடலில் இருந்து பக்குவமாக வேளியே எடுப்பதற்கு அறுவைச்சிகிச்சை நிபுணர்களின் உதவி அவசியமாகும். அறுவைச்சிகிச்சைக்கு 'சல்லியக்கிரியை' என்று பெயர் வர இதுவே காரணம். யுத்தகளத்துக்குப் புறப்பட்டுச் செல்லும் படையுடன் அறுவைச்சிகிச்சை நிபுணர்களும் தாதிமாரும் கொண்ட குழுவும் சென்றதாக வரலாற்றுக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.


இவ்விடத்தில் இலங்கை மன்னன் புத்ததாச பற்றி மகாவம்சம் பதிவு செய்திருக்கும் குறிப்புக்கள் சிலவற்றை நினைவு கூரலாம்.

திஸ்ஸ வாவியில் நீராடுவதற்காக மன்னன் புத்ததாச பிரதான வீதிவழியாகத் தன் யானைமீது பயணித்துக்கொண்டிருந்தான். வழியில் புட்டபாகை விகாரைக்குச் சமீபமாகக் காணப்பட்ட எறும்புப்புற்றின் மேல் பெரிய பாம்பு ஒன்று நோயினால் அவஸ்தைப்பட்டுக்கொண்டு கிடந்தது. பாம்பின் வயிற்றுப்புறத்தில் கழலை ஒன்று காணப்பட்டது. பாம்பின் நிலை கண்டு மனம் நெகிழ்ந்த மன்னன் யானையினின்றும் இறங்கித் தன் இடையிலிருந்த கத்தியை எடுத்துப் பாம்பின் வயிற்றைக் கீறினான். அதன் வயிற்றில் காணப்பட்ட நோய்ப்பாகங்களை வெட்டி அகற்றிய பின்னர் சிறந்த மருந்தைப் பிரயோகித்து அப்பாம்பினைக் குணப்படுத்தினான். 'எனது தர்மத்தை விலங்களும் அறிந்து கொண்டுள்ளன. அவ்வகையில் எனது ஆட்சிமுறை நீதியானதே' எனக்கூறி மன்னன் பெருமிதமுற்றதாக மகாவம்சம் எடுத்துரைக்கின்றது.

கர்ப்பத்தைத் தவறான நிலையில் கொண்டிருந்த பெண் ஒருத்தியைக் காப்பாற்றியது உட்பட மேலும் பல சம்பவங்களை மன்னன் புத்ததாச தொடர்பாக மகாவம்சம் பதிவுசெய்துள்ளது. மருத்துவக்கலையில் புத்தபெருமானின் சொந்த மருத்துவரான ஜீவகனுக்கு அடுத்தபடியாக எண்ணப்பட வேண்டியவன் தானே என இம்மன்னன் பெருமிதம் கொண்டிருந்தான் என்ற செய்தியையும் மகாவம்சம் வாயிலாக அறிந்து கொள்ளமுடிகின்றது.

அறுவைச்சிகிச்சைத் துறையில் பிராம்மண வகுப்பினர் அவ்வளவு ஆர்வம் காட்டியதாகத் தெரியவில்லை. இரத்தம் சிந்துதல், புண்பட்ட மேனியைத் தீண்டுதல் போன்றவை சம்பந்தப்படுவதால் அறுவைச்சிகிச்சையினைப் பிராமண வகுப்பினர் மேற்கொள்ளத் தயங்கி இருத்தல்கூடும்.

ஆயுள்வேதக்கலையானது பிராம்மணர்,



An arrow-shaped flap of skin is cut from the forehead.

சத்திரியர், வைசியர் ஆகிய மூன்று வருணத்தாரும் படிக்கவேண்டியதொன்று. பிராம்மணன் அனைத்து உயிர்களுக்கும் நன்மை புரிவதற்கும் சத்திரியன் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் வைசியன் இலாபம் சம்பாதிப்பதற்காகவும் இதனைப் பயில வேண்டும்.

சரகசம்கிதை சூத்திர ஸ்தானம் பாடம் 30

இவ்வாறு சரகசம்கிதையில் கூறப்படுகின்றது. இங்கே நான்காவது வருணத்தவராகிய சூத்திரர்களைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை. இதேசமயம் ஆயுள்வேத மருத்துவக்கலையினை முதல் மூன்று வருணத்தார் மட்டுமே படிக்க வேண்டும் என்ற கருத்து தன்வந்தரியின் சீடரான சுஸ்ருதரின் நூலில் எவ்விடத்திலும் கூறப்படவில்லை. மாறாக நல் ஒழுக்கம் உடைய, நற்குடியில் பிறந்த சூத்திர மாணவனுக்கும் ஆயுள் வேதத்தின் நுட்பங்களை அறிமுகப்படுத்தலாம் எனினும் இச்சந்தர்ப்பங்களில் ஓதப்படவேண்டிய மந்திரங்களைத் தவிர்த்துவிடலாம் என்று ஆலோசனை கூறுகின்றார் சுஸ்ருதர்.


ஆயுள்வேதத்தின் ஒரு கிளையான அறுவைச்சிகிச்சையைப் பிரதான பாடமாகக் கொண்டுள்ள சுஸ்ருதசம்கிதையை அனைத்து வகுப்பினரும் படித்துப் பயன்பெற முடிந்தது. குறிப்பாக நாவிதர், குயவர் உள்ளிட்ட சமுதாயத்தின் சிலபிரிவினர் அறுவைச்சிகிச்சைத் துறையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள முடிந்தது. தென்னிந்தியாவில் தன்வந்தரி நன்கு அறியப்பட்ட ஒருவராக இருப்பதற்குத் தன்வந்தரி பெயரில் வழங்கப்பட்ட வைத்திய நூல்களைச் சாதாரண மக்களும் பெற்றுக்கொள்ள முடிந்ததும் ஒரு காரணமாக இருக்கலாம்.

*தாரணியோர் மிகப் புகழ் தன் வந்தரி செய்த*
*தகவுடைய கீர்த்திபெறு மாயுள் வேதப்*
*பேரணியும் வாகடத்தைப் பெரிது பேணிப்*
*பெட்புடைய தமிழ்ப்பாவாற் பேசும் வண் ணம்*

- பரராசசேகரம்

உலகப்புகழ் பெற்ற தன்வந்தரி ஆக்கிய சிறப்புமிக்க ஆயுள்வேத நூலைப் பெரிதும் சார்ந்து அதனைத் தமிழில் தரத் தாம் முயல்வதாகக் கூறுகின்றார் இற்றைக்கு 500 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஈழத்துப் புலவர் ஒருவர்.

இந்திய அறுவைச்சிகிச்சை மருத்துவத்தின் பிதாமகர் என்று உலகவரலாற்றில் அறியப்படுபவர் தன்வந்தரி. நாசிமறுசீரமைப்பு (rhinoplasty) உட்பட்ட தோல் மாற்றுச் சிகிச்சை (plastic surgery), கண்படலம் அகற்றுதல்(cataract surgery)போன்ற அறுவைச்சிகிச்சை முறைகளை முதன்முதலாக விளக்கியவர் தன்வந்தரியின் மாணவரான சுஸ்ருதரேயாவர் என்பதை உலக மருத்



Later the graft bonds, blood vessels form, and the attached flap is cut.

துவ வரலாற்று அறிஞர்கள் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பண்டையநாட்களில் இந்தியாவில் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளில் ஒன்று அவர்களது மூக்கு, காது போன்ற அங்கங்களை வெட்டிவிடுதலாகும். மூக்கை அறுத்துவிடுவதை ஒரு தண்டனையாக இருக்கு வேதம் குறிப்பிடுகின்றது. மூக்கை அறுத்துவிடுவது என்பது மிகுந்த அவமானத்தை ஏற்படுத்தும் ஒரு தண்டனையாகும். இராமனின் தம்பி இலக்குவன் சூர்ப்பனகையின் மூக்கை அரிந்ததாகக் கூறப்படும் இராமாயணக் கதையை இங்கு நினைவு கூரலாம். இலங்கை வேந்தன் இராவணன் தனது மருத்துவர்களைக்கொண்டு தங்கை சூர்ப்பனகையின் மூக்கை மறுசீரமைப்புச் செய்ததாகக் கூறப்படுகிறது. மூக்கு மறுசீரமைப்பு பற்றி முதன்முதலில் பதிவு செய்யப்பட்ட குறிப்பு இதுவேயாகும்.

கி.பி. 18ம் நூற்றாண்டில் பிரித்வி நாராயணன் என்னும் கூர்க்க மன்னன் நேபாளத்தில் கீர்த்திப்பூர் நகரத்தின்மீது படையெடுத்துச்சென்று அதனைக் கைப்பற்றியபோது அங்கு வாழ்ந்த ஆண்கள் 865 பேரினதும் மூக்கை அறுத்துவிட்டதோடு அந்நகரத்துக்கு மூக்கில்லாத நகரம் என்னும் பொருள் கொண்ட நாஸ்கதபூர் என்று பெயரிட்டதாக வரலாறு உண்டு. பல்வேறு குற்றச்செயல்களைப் புரிந்தவர்களுக்கு வழங்கப்படும் தண்டனையாக இந்த மூக்கு அரிதல் தண்டனை இந்தியா உட்பட மேலும் பல நாடுகளில் வழக்கில் இருந்துவந்துள்ளது.

தனக்கு மூக்குப்போனாலும் எதிரிக்குச் சகுனம் பிழைக்கவேண்டும் என்று ஒரு பழமொழி உண்டு. மூக்கறுபட்டவன் முகத்தில் விழிப்பதே அபசகுனம் என்று கருதப்பட்ட காலத்தில் மூக்கறுபட்டவர்கள் அதனை மீண்டும் வடிவமைக்க அறுவைச்சிகிச்சை செய்வோரை நாடியதில் வியப்பில்லை. இதுதவிர, தலைக்கவசம் அணியாத போர் வீரர்கள் யுத்தத்தில் இவ்வுறுப்புக்களை இழப்பது சர்வசாதாரணம். இவர்களும் தாங்கள் இழந்த உறுப்புக்களை மறுசீரமைக்க அறுவைச்சிகிச்சையாளரை நாடினர்.

வெட்டுப்பட்ட மூக்கை மறுசீரமைப்புச் செய்யும் முறைபற்றி சுஸ்ருதர் பின்வருமாறு விளக்குகின்றார்.

துண்டிக்கப்பட்ட மூக்குப்பகுதியை முழு

**தொடர்தல் 24ம் பக்கம்**

# தன்வந்தரியின்...


23ம் பக்கத் தொடர்ச்சி...

மையாக மூடுவதற்கு ஏற்ற அளவில் ஒரு இலையை எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த இலையைப் பாதிக்கப்பட்டவரின் கன்னத்தில் வைத்து இலையின் அளவில் கன்னத்தில் இருந்து தோலை வெட்டிப் பிரிக்கவேண்டும். தோலைக் கன்னத்தில் இருந்து முற்றிலும் வெட்டி அகற்றாது ஒரு சிறு இணைப்பை விட்டு வைக்கவேண்டும். சுவாசம் சீராக நடைபெறும் வண்ணம் உள்ளே துவாரம் உடைய ஆமணக்கஞ்செடியின் இரு சிறிய துண்டுகளை மூக்குத்துவாரத்துள் செருகி வைத்துவிடவேண்டும். கன்னத்தில் இருந்து பிரிக்கப்பட்ட தோலை மூக்கில் செருகிவைக்கப்பட்டுள்ள ஆமணக்கம் தடிகளின் மேலாக மடித்துத் தைத்துவிடவேண்டும். புண்களை மாற்றுவதற்கு உரிய மருந்தைப்போட்டபின் பஞ்சால் மூடிக்கட்ட வேண்டும் பஞ்சின்மேல் சுத்திகரிக்கப்பட்ட நல்லெண்ணெய் தெளிக்கவேண்டும். நோயாளிக்கு நெய்யைக் குடிக்கக்கொடுக்கவேண்டும். புதிய மூக்கு நன்றாகப் பொருந்திப் புண்கள் ஆறியவுடன் இன்னமும் கன்னத்தில் இணைந்திருக்கும் தோற்பகுதியை வெட்டிவிடலாம்.

பண்டைக்காலத்தில் இருந்து இந்திய அறுவைசிகிச்சையாளரால் மேற்கொள்ளப்பட்டுவந்த மூக்கு மறுசீரமைப்பு பிற்காலத்தில் குயவர் சமூகத்தவரால் செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. சென்ற நூற்றாண்டில் மூக்கு மறுசீரமைப்புச் சிகிச்சையினை ஆயுள்வேத முறைப்படி மேற்கொண்ட மராட்டிய குயவர் சமூகத்தைச் சேர்ந்த ஹக்கிம் தின நாத் (Hakim Dina Nath) என்பவர் தமது குடும்பத்தவர் மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்தத் துறையில் ஈடுபட்டுவந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக ஆயுள்வேத அறுவைச் சிகிச்சையாளர் மேற்கொண்டுவந்த மூக்கு மறுசீரமைப்பு முறைபற்றி இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர்தான் ஐரோப்பிய மருத்துவர்கள் அறிந்துகொண்டனர்.


மைசூரின் திப்பு சுல்தானுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே போர் நடந்து



கொண்டிருந்த காலம் அது. ஆங்கிலேயரிடம் மாட்டுவண்டி ஓட்டுநராக வேலை பார்த்த கௌசாஜி(Cowsaji) என்பவர் திப்புசுல்தானின் படையினரால் சிறை பிடிக்கப்பட்டார். அந்நியரிடம் பணிபுரிந்தமைக்குத் தண்டனையாக அவரது மூக்கை அரிந்துவிட்டு அவரை ஆங்கிலேயரிடம் அனுப்பிவைத்தனர் திப்புசுல்தானின் படைவீரர்கள். இந்நிலையில் மூக்கு மறுசீரமைப்புச் செய்யும் முறையில் வல்லவரான பூனேயில் வாழ்ந்துவந்த ஒருவர் பற்றிக் கேள்விப்பட்ட ஆங்கிலேயப் படைத்தளபதி அவரை உடனடியாக வரவழைத்து வண்டி ஓட்டுநர் கௌசாஜியின் மூக்கை மறுசீரமைப்புச் செய்யும்படி கேட்டுக் கொண்டார்.

சுஸ்ருதசம்கிதையில் கூறப்பட்டுள்ள மூக்கு மறுசீரமைப்புச் செய்முறையைப் பெரிதும் ஒத்துக்காணப்பட்ட இச்சிகிச்சையின் போது கன்னத்தில் இருந்து எடுப்பதற்குப் பதிலாக நெற்றியில் இருந்து தோல் பிரித்தெடுக்கப்பட்டது. புருவங்களின் மத்தியில் பிரிக்கப்படாத தோல் விடப்பட்டது. இரத்த ஓட்டம் தொடர்ச்சியாக நடைபெற இந்த இணைப்பே உதவியது.

குயவர் சமூகத்தைசேர்ந்த பெயர் அறியப்படாத அந்த அறுவைச்சிகிச்சையா-



ளரால் மேற்கொள்ளப்பட்ட மூக்கு மறுசீரமைப்புச் செய்முறையினை ஆங்கிலேயரின் படையணியைச் சேர்ந்த தோமஸ் குருசோ (Thomas cruso) மற்றும் ஜேம்ஸ் பின்ட்லே (James Findley) என்னும் இரு மருத்துவர்கள் உடனிருந்து அவதானித்தனர். இச்சிகிச்சைமுறை பற்றிய முழுவிபரமும் முதலில் பம்பாயில் இருந்து வெளிவந்த 'மட்ராஸ் கசெற்' (Madras Gazette) என்னும் இதழிலும் பின்னர் 1794ம் ஆண்டு இலண்டனில் இருந்து வெளிவந்த 'ஜென்ரில்மென்ஸ் மகசீன்' (Gentlemen's magazine of London) என்னும் சஞ்சிகையிலும் வெளியிடப்பட்டது. 'இந்திய செய்முறை' (Indian Method) என்னும் தலைப்பில் இந்தச் செய்தி பிரசுரிக்கப்பட்டது.

இந்த விபரத்தைப் படித்த ஜே.சீ.காப்பூ (J.C.Carpue) என்ற ஆங்கில சர்ஜன் மூக்கு வடிவமைப்புச் சிகிச்சைகள் இரண்டை வெற்றிகரமாகச் செய்துமுடித்தார். இவரது ஆய்வுக்கட்டுரையைப் படித்த கிராபே (Graefe) என்ற ஜெர்மன் நாட்டு சர்ஜன் ஒருவர் கையில் இருந்து எடுக்கப்பட்ட தோலைப் பயன்படுத்தி வடிவமைப்புச் சிகிச்சையைச் செய்துமுடித்தார். இதன் பின்னரேயே 'றைனோப்லாஸ்ரி' (rhinoplasty) என்னும் மூக்கு மறுசீரமைப்புச் சிகிச்சையுட்பட பிளாஸ்ரிக் சர்ஜரி (plastic surgery) என்னும் உறுப்பு மறுசீரமைப்புச் சிகிச்சை ஐரோப்பா எங்கணும் பிரசித்தி பெற்றது. 'பிளாஸ்ரிக்' என்பது இன்று சாதாரணமாகப் பயன்படும் செயற்கை பிளாஸ்ரிக்கைக் குறிப்பதாகக் கொள்வது தவறு. 'பிளாஸ்ரிக்கோஸ்' (plastikos) என்னும் கிரேக்கச் சொல்லை மூலமாகக் கொண்ட இதன்பொருள் 'வடிவமைத்தல்' என்பதாகும்.

சுஸ்ருத சம்கிதையின் முதலாவது பாகமான சூத்திர ஸ்தானத்தின் பதினாறாவது பாடத்தில் மூக்கு மறுசீரமைப்புடன் கூடவே பாரம் கூடிய தோடுகளை அணிந்ததினால் காது அறுபட்டவர்களுக்குச் செய்யவேண்டிய ஓட்டோபிளாஸ்ற் (otoplasty) எனப்படும் காதுமறுசீரமைப்பு மற்றும் பிளவடைந்த உதடுகளுடன் பிறந்தவர்களுக்குச் செய்ய வேண்டிய உதடுசீரமைப்பு (cheiloplasty) என்பனவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இன்று 'பிளாஸ்ரிக் சர்ஜரி' என்று பரவலாக அறியப்படும் உறுப்புகள் வடிவமைப்புச் சிகிச்சையினை உலகுக்கு முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர்கள் இந்திய ஆயுள்வேத மருத்துவர்களே என்ற உண்மையை மருத்துவ வரலாற்று அறிஞர்கள் பலரும் இன்று ஏற்றுக்கொண்டுள்ளனர்.

*தொடரும்...*



*Sivakadadcham@thaiveedu.com*

**SELS Inc.**

**CARRIER & RIDE SERVICES**

**OTTAWA → KINGSTON → TORONTO → HAMILTON**

**Ottawa Greenboro பஸ் தரிப்பிடத்திலிருந்து புறப்படும் நேரம்:**

திங்கள் - வெள்ளி காலை 10:00 மணிக்கும் மாலை 6:30 மணிக்கும்
ஞாயிறு மாலை 4:00 மணிக்கும் புறப்படும்.

**Toronto வில் இருந்து புறப்படும் நேரம்:**

திங்கள் - வெள்ளி காலை 10:00 மணிக்கும் மாலை 6:30 மணிக்கும்
ஞாயிறு மாலை 4:00 மணி

Parcels + Courier எதுவாயினும் உரிய இடத்துக்குப் பாதுகாப்பாகக் கொண்டு போய்ச் சேர்க்கப்படும்.

நீண்ட விடுமுறை மற்றும் வார இறுதி நாட்களில் சிறப்புச்சேவை உண்டு!
We also do small Moving and Parcel delivery all over Ontario!

**உங்கள் மனநிறைவே எங்கள் தரம்!**

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்:
குமரன் (செல்வா) 613.889.8733 / 647.648.0166
மின்னஞ்சல்: sels4ride@gmail.com

**புதிய 'பாமினி' எழுத்துருக்கள்**
**இப்பொழுது இணையத்தில் கிடைக்கின்றன!**

haran graph

இன்றே உங்களது மின்னஞ்சலை இட்டு பதிவிறக்கிக்கொள்ளவும்

முதல் 1000 இணைவாளர்களுக்கு விசேட பரிசுகள் உண்டு!!

www.harangraph.com

பதிவிறக்கம் DOWNLOAD NOW

பாமினி - BaminiExtd - Font
த அகர முதல எழுத்தெல்லாம் - ஆதி பகவன் முதற்றே உலகு

திங்கோ - TrincoExtd - Font
த அகர முதல எழுத்தெல்லாம் - ஆதி பகவன் முதற்றே உலகு

சித்திரம் - Sithiram - Font

தொடர்புகளுக்கு: info@harangraph.com

# சக்தி என்றால் காப்புறுதி



காப்புறுதி துறையில்
'32' வருட முழுநேர
உன்னதமான, நெறியான சேவை
'சகல காப்புறுதி நிறுவன பிரதிநிதி'

- இதுவரை 11,000 இற்கு மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்.
- 250 துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- ஏறத்தாழ 50 நிரந்தர, பகுதி ஊன இழப்பீடுகள்.
- பாரபட்சமின்றி எந்த நிறுவனத் திட்டமாக இருப்பினும் தெளிவான, துல்லியமான, இலகுவில் கிரகிக்கும் வண்ணம், பொறுமையான விளக்கம்.
- பல்வேறு நிறுவனங்கள் மூலம் சிறப்பு விருதுகள் பெற்ற பெருமை.
- எவ்வித வருத்தங்கள் இருப்பினும் அதற்கேற்ப தகுந்த காப்புறுதி திட்டங்கள் அளிக்கும் திறமை.
- உங்கள் காப்புறுதி மனுப்பத்திரம் ஏதாவது நிறுவனம் மூலம் நிராகரிக்கப் பட்டாலும் தகுந்த காப்புறுதி திட்டம், நிறுவனங்களின் நிபந்தனைக்கு அமைய நிச்சயமாக, உறுதியாகக் கொடுக்கப்படும்.
- உடனே அமுலுக்கு கொண்டுவரும் மருத்துவ ரீதியின்றி ஆயுள்காப்புறுதி.

## மருத்துவ ரீதியின்றி ஆயுள் காப்புறுதி

- 85 வயதிற்குட்பட்ட எவரும் **$600,000** வரை மனுச்செய்யலாம்.
- சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (**BLOOD PRESSURE**), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (**HIGH CHOLESTEROL**).
- பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.
- மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டோர்.
- நிறை கூடியுள்ளோர் (**OVER WEIGHT**)
- அதிகூடியதான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை நிச்சயமாக அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

**ஒருவரும் நிராகரிக்கப்படமாட்டார்கள்.**

# சக்திவேல்

**416.706.3530, 905.763.8912**


Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

மன்னிக்கவும்!

வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!

# JUST SOLD




FREE MARKET EVALUATION

# OUR FREE SERVICES

1% Commission Exclusive

## For Home Owners

- ✓ Home Staging
- ✓ Newspaper & Flyer Advertisement
- ✓ High Resolution Picture & Virtual Tour
- ✓ Four Page Colour Feature Sheets
- ✓ Weekends Open House
- ✓ Guaranteed Weekly Feedback
- ✓ Social Media Marketing
- ✓ Full MLS Listing Service
- ✓ Sale Sign & Direction Signs
- ✓ Market Evaluation
- ✓ Radio & Web Tool Advertisement
- ✓ Professional & Friendly Service

Some condition apply

**More than 10 Yrs Experience & Multi Award Winner**

**Kathir Kathirgamanathan** B.A,

Real Estate & Mortgage Broker

Dir: 416-230-6462



**HomeLife/Future Realty Inc.,**
Brokerage *Independently Owned and Operated
O: (905)201-9977 F: (905)201-9229
205-7 Eastvale Dr., Markham,Ont, L3S 4N8

HOMELIFE HIGHER STANDARDS


Some condition apply

# மூல உயிரணு தானம்

## Stem Cell Donation

- சிவாஜினி பாலராஜன் -

> “ குழந்தை பெற்றுக்கொள்ளும் பெற்றோர்கள் உங்கள் வம்சத்தினை பாதுகாக்க தொப்புள் கொடியினை **cord blood banking**ல் சேகரித்து வைத்துக் கொள்ளலாம். சேகரிக்க விரும்பாதவர்கள் அதனை வீணே குப்பையில் எறிந்து விடாது தானமாக வழங்கினால் கிட்டத்தட்ட 70க்கும் மேற்பட்ட நோய்களுக்கு அது மருந்தாகலாம். ”




குருதித் தானம், மூல உயிரணு தானம், எலும்பு மச்சை தானம் என்பவை உலகமெங்கிலும் மிகவும் பிரபல்யமாக உள்ளது. குருதிக் தானம் மிகவும் சாதாரணமாக அனைத்து மக்களிடையேயும் பரவி அனைவருக்கும் மிகவும் பழக்கப்பட்டுவிட்டதொன்றாக இருந்த போதிலும் தற்போது மூல உயிரணு தானம் என்பதும் மிகவும் உன்னதமான ஒன்றாகக் கருத்தப் படுகின்றது. இரத்த தான வங்கிகளே இந்த மூல உயிரணு சேகரிப்பினையும் செய்கின்றன. கனடா இரத்த தான வங்கியின் OneMatch Stem Cell and Marrow Network என்னும் பிரிவு மூல உயிரணு தேவைப்படும் நோயாளிகளுக்குத் பொருத்தமான மூல உயிரணு உள்ளவரைத் தெடித் தரும் ஒழுங்குகளைச் செய்கின்றது. இந்த OneMatch Stem Cell and Marrow Network சர்வதேச சட்டதிட்ட நியமனங்க-ளுக்கு அமைய World Marrow Donor Association (WMDA) இனால் ஆக்கப்பட்ட ஒரு வலைப் பின்னல் ஆகும். உலகெங்கிலும் 55இற்கும் மேற்பட்ட பதிவுசெய்யும் இடங்களும் அதில் கிட்டத்தட்ட 11 மில்லியன் பதிவுகளை-யும் இவர்கள் கையாள்கின்றனர். இதனால் உலக ரீதியில் இந்த மூல உயிரணு தானம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இரத்த தானம் தான் நாங்கள் செய்கின்றோமே இந்த மூல உயிரணு தானத்திற்கான அவசியம் என்ன வந்தது என்று எங்களிடையே பல கேள்விகள் எழலாம். குருதிக் தானத்தினை விட பன்மடங்கு வலிமை வாய்ந்தது இந்த மூல உயிரணு தானம். மூல உயிரணுவை எங்கள் முகம் தெரியாத ஒருவருக்கோ அல்லது எங்கள் குடும்பத்தினருக்கோ நாங்கள் வழங்கக் கூடியதாக இருக்கின்ற போதிலும், முதலில் மூல அணுவென்றால் என்ன எனத் தெரிந்து கொள்ளுதலும் அத்துடன் இவற்றினை மற்றவர்களுக்கு தானம் செய்வதற்குரிய தேவை என்பதனையும் ஆராய்தல் அவசியமாகின்றது.

### மூல உயிரணு என்றால் என்ன?

மூல உயிரணுக்கள் தான் ஒவ்வொரு கலங்கள் உறுப்புக்கள் ஆகியவற்றிற்கும் மூலாதாரமாக இருப்பவை. பல்வேறு விதமான மூல உயிரணுக்கள் வெவ்வேறு உடற்பாகங்களில் வெவ்வேறு காலகட்டங்களில் தோன்றுபவை. மேலும் இம் மூல உயிரணுக்கள் தங்களை செங்குருதிச் சிறு துணிக்கைகளாகவோ (உடலின் பல பாகங்களுக்கும் பிராண வாயுவினை எடுத்துச் செல்ல உதவி செய்பவை) வெண்குருதிச் சிறு துணிக்கைகளாகவோ (உடலில் தொற்றுக்கள் ஏற்படும் போது தொற்றுக்களை எதிர்ப்பதற்குரிய பிறபொருள் எதிரிகளைச் சுரந்து நோய்க்கிருமிகளை எதிர்ப்பவை) குருதிச் சிறுதட்டுக்களாகவோ (காயங்கள் ஏற்படும்போது தொடர்ந்து குருதியானது பெருக்கெடாது உறைந்து குருதிப் பெருக்கினைத் தடை செய்யும்) அல்லது வேறு வகையான கலங்களாகவோ மாற்றம் பெறக் கூடிய முதிர் நிலை அடையா (immature) கலங்களாகும்.

பல் கல உயிரினங்களின் உடலில் உள்ள கலங்கள் இரு பெரு பிரிவுகளாகும். அவையாவன இனப்பெருக்கத்தில் எந்த வகையிலும் ஈடுபடாத கலங்கள் (Somatic cells) இனப் பெருக்கத்தில் ஈடுபடும் கலங்கள் (gametes) ஆகும். இனப்பெருக்கத்தில் ஈடுபடாத கலங்களில் சோடியாக குரோமசோம்கள் இருக்கும். இனப்பெருக்கத்தில் ஈடுபடுபவற்றில் சோடியாக இல்லாது தனித்து ஒற்றையாக இருப்பதனால் இவை வெவ்வேறு தாய் தந்தை குரோமசோம்களுடன் சோடி சேரக்கூடியன. Somatic கலங்கள் இனப்பெருக்கத்தில் ஈடுபடாது ஒவ்வொரு கலமும் தமக்கென வரையறுக்கப்பட்ட தொழிலையும் இயக்கங்களையும் கொண்டவை. ஆனால் stem cell என அழைக்கப்படும் மூல உயிரணுக்கள் தம்மை மீளப் புதுப்பிக்கக் கூடியவை மட்டுமன்றி வேறுவிதமான பிரத்தியேக கலங்களாகவும் வளரக்கூடியவை. இவ் விரு பிரத்தியேக தன்மைகட்கும் அப்பால் இவற்றால் என்ன செய்ய முடியும் என்ன செய்ய முடியாது என்பதும், இவை எவ்வாறு மாற்றம் கொண்டு என்னென்ன பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவக்கூடியவை என்னும் காரணங்களே ஆராச்சியாளர்களை இவை பற்றி மேலும் ஆராயத் தூண்டியவை.

### மூல உயிரணுக்கள் காணப்படும் இடங்கள் எவை?

மூல உயிரணுக்கள் எலும்பு மச்சைகளிலும் (எலும்பு மச்சைகள் எனப்படுவது எலும்பினுள்ளே இருக்கும் பதார்த்தம் மாமிசம் சாப்பிடுவோருக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். ஆட்டுக்கால் சாப்பிடும் போது அதனுள் இருக்கும் இதனை உறிஞ்சி எடுப்பார்கள்) குழந்தை பிறக்கும் போது வரும் நஞ்சு கொடி (Placenta) தொப்புள் கொடி குருதி (Cord Tissue) முளைத்துக் கொண்டிருக்கும். 4 அல்லது 5 நாட்கள் வயடதுடைய கருக் கட்டிய முளையம், பல் போன்ற இடங்களிலிருந்து மூல உயிரணுக்கள் எடுக்கப்படுகின்றன.

### எவ்வகையான நோயுடையோருக்கு இவை தேவைப்படுகின்றன?

Leukemia (குருதிப் புற்று நோய்), Lymphoma (lymphatic system எனப்படும் immune system) போன்ற புற்று நோய் உள்ளவர்களுக்கு இந்த Stem Cell தானம் மிக மிக அவசியமாகின்றது. எலும்பு மச்சையிலுள்ள Stem Cellகள் செங்குருதிச் சிறுதுணிக்கை, வெண்குருதிச் சிறுதுணிக்கை, குருதிச் சிறுதட்டுக்கள் என்பவற்றை உருவாக்கக் கூடியன.

Leukemia எனப்படுவது குருதியில் வெண்குருதிச் சிறுதுணிக்கையின் எண்ணிக்கை அதிகரிப்பது. இவ் வெண்குருதிச் சிறுதுணிக்கைகள் எலும்பு மச்சையினால் தோற்றுவிக்கப்பட்டு பின்னர் குருதியுள் விடப்படும். சாதாரணமாக உடலில் கிருமித் தொற்றுக்கள் ஏற்படும் போது வெண்குருதிச் சிறு துணிக்கைகள் பிறபொருள் எதிரிகளைச் சுரந்து அக் கிருமிகளுக்கு எதிராக செயற்படும். ஆனால் அளவுக்கதிகமாக வெண்குருதிச் சிறுதுணிக்கைகள் உருவாக்கப்படும்போது அவை நோய்த் தொற்றுக்கு எதிராகத் தொழிற்படாது மற்றைய உறுப்புக்களின் தொழிற்பாடுகளைத் தடை செய்யக் கூடியது. இவ்வியாதி உடையவர்களுக்கு இவர்களின் Stem Cellஇனை ஆரோக்கியமான Stem Cell இனால் மாற்றீடு செய்யப்படும்.

இவ் விடத்தில் புற்று நோய் பற்றி ஒரு சிறு விளக்கம் தேவைப்படுகின்றது. ஏன் இந்த வெண்குருதிக் கலங்கள் அளவுக்கதிகமாகத் தோற்றுவிக்கப்பட்டு Leukemia உண்டாகின்றது. ஒவ்வொரு உறுப்பும் பல்லாயிரக் கணக்கான கலங்களால் ஆனது. இக் கலங்களின் தொழிற்பாட்டில் பழைய கலங்கள் இறப்பதும் இழந்த கலங்களைப் புதிய கலங்கள் உற்பத்தியாக்கப்பட்டு நிவர்த்திக்கப்படுவதும் ஒரு சாதாரண தொழிற்பாடாகும். எங்கள் கலங்களின் கருக்களில் ஒவ்வொரு கலமும் எவ்வாறு தொழிற்படவேண்டும் என்பதற்குரிய செயற்பாட்டு விளக்கமானது வகுக்கப்பட்டுள்ளது. இவை genes எனப்படும். இந்த genes இலுள்ள விளக்கமானது ஏதாவது காரணிகளினால் குழப்பப்பட்டு விட்டால் கலம் பிரிவது அழிவது போன்ற தொழில் முறைகளில் பிரச்சினைகள் உண்டாகிவிடுகின்றது. அதனால் இவை மேலதிக கலங்களை உற்பத்தியாக்கத் தொடங்கி விடும். உடலில் தேவைக்கதிகமான கலங்கள் காணப்படும். இத் தேவைக்கதிகமான கலங்கள் இட நெருக்கடியினை ஏற்படுத்தலாம் அல்லது மற்றைய அவயவங்கள் மேல் அழுத்தி பலவிதமான இடையூறுகள் இவற்றினால் ஏற்படும். குருதிப் புற்று நோயில் இவ்வாறு வெண்கலங்களின் எண்ணிக்கை தேவைக்கதிகமாகப் பெருகும். மேலும் ஒவ்வொரு கலத்திற்கும் இடையிலுள்ள இடைவெளிகூட இவ் genesகளினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும். சில சமயங்களில் இந்த இடைவெளிகளில் மாற்றம் ஏற்படுகின்றது. இதுகூட ஒருவகை புற்று நோயாகும்.

நீரிழிவு நோயினை இதுவரை வைத்தியர்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்றார்களே தவிர அதனை நிவர்த்தி செய்வதற்கு அல்லது அதிலிருந்து முற்றாக விடுதலை பெறுவதற்கு இதுவரை எந்த மருந்தும் கண்டுபிடிக்கப் படவில்லை. ஆனால் இந்த Cell-Based Therapies மூலம் நீரிழிவு நோயினை முற்றாக இல்லாமல் செய்யமுடியும் என்னும் நம்பிக்கையினை இந்த மூல உயிரணு கொடுத்துள்ளது. வழக்கத்துக்கு மாறாக குருதியிலுள்ள குளுக்கோசின் அளவினால் உடலில் ஏற்படும் பல நோய்கள் இணைந்த ஒரு நோய் தான் நீரிழிவு நோயாகும். உடலிலுள்ள immune system ஆனது தனது கலங்களை எதிரியாக நினைத்து அவற்றை அழிக்க முற்படுவதே நீரிழிவின் மிக முக்கிய பிரச்சினையாகும். இவ்வாறுதான் இன்சுலினைச் சுரக்கும் சதையி என அழைக்கப்படும் pancreas அழிவுக்குள்ளாக்கப் படுவதனால் pancreas இனால் இன்சுலினைச் சுரக்க முடிவதில்லை. இன்சுலினின் துணையின்றி குளுக்கோசு கலங்களுள் செல்ல முடியாது தடைப்பட்டு குருதியிலேயே தேங்கி விடுகின்றது. இவ்வாறு தேங்கி நிற்கும் குளுக்கோசானது உடலில் பல பிரச்சனைகளுக்கு வித்தாகின்றது. குளுக்கோசு அதிகரிப்பினால் ஏற்படும் விளைவுகளில் சில வருமாறு: Blindness, kidney failure, heart disease, stroke, neuropathy, and amputations.

இதய வால்வு பழுதுபட்டோர் அல்லது தளர் வடைந்தோருக்கும் இதய தசை தொய்வு, மாரடைப்பு போன்ற நோயுள்ளோருக்கு மூல உயிரணுக்கள் செலுத்துவதன் மூலம் அந்நோய்கள் நிவர்த்திக்கப்படுகின்றன.

உடலின் இயக்கங்களுக்குத் தேவையான neurotransmitter dopamine எனப்படும். இந்த டோபமைன் அழிக்கப்படும் போது தான் நரம்பியக்கம் குறைந்து பாக்கின்சன் நோய் ஏற்படுகின்றது. இந்தப் பாக்கின்சன் நோயினைக் குணப்படுத்துவதற்கு முளையத்திலிருந்து எடுக்கும் மூல உயிரணு பாவிக்கப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

மேலும் முள்ளந்தண்டில் பாதிப்பு ஏற்படுபவர்களுக்கும் இம் மூல உயிரணுக்கள் பாவிக்கப்பட்டு நிவர்த்தி செய்யப்படுகின்றன.

### மூல உயிரணு மாற்றீடு செய்வதனால் நன்மைகள்:

மூல உயிரணுக்கள் சாதாரண கலங்களை விட வித்தியாசமானவை. எங்கள் உடலில் உள்ள ஏனைய கலங்கள் போலல்லாது எந்த விதமான அல்லது எந்த இடத்தில் இருக்கும் மூல உயிரணுவாயினும் அவை மிகவும் சுலபமாக பிரிந்து daughter cells எனப்படும் தங்களை ஒத்த கலங்களை உருவாக்கக் கூடியவை. இதன் காரணமாகவே இந்த மூல உயிரணுக்கள் குருதி தானம் போல தானம் செய்யக் கூடியவை.

நோய் வாய்ப்பட்ட எலும்பு மச்சையினை ஆரோக்கியமான மச்சையிலுள்ள மூல உயிரணுக்களால் மாற்றீடு செய்தல். இவ்வாறு மாற்றீடு செய்யும்போது நோயாளிக்கு high doses of radiation and/or chemotherapy வழங்கப்பட்டு அவரது எலும்பு மச்சை அழிக்கப்படும். பின்னர் ஆரோக்கியமான மூல உயிரணுவானது நரம்பினூடாக intravenously செலுத்தப்படும்

### தானம் செய்யத் தகுதியுடையவர்கள் யார்…

குருதி தானம் செய்வது போல 17க்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும். மிகவும் ஆரோக்கியமானவராக, இதய நோய், cancer, blood diseases, insulin-dependent diabetes, HIV/AIDS, hepatitis B and C. போன்ற நோய்களற்றவராக இருத்தல் வேண்டும். அத்துடன் தானம் வழங்குபவருக்கும் பெறுபவருக்கும் உடல் எடை, உயரம் போன்றவற்றில் சில கட்டுப்பாடுகள் உண்டு.

தொடர்தல் 28ம் பக்கம்

# 20 Pay Insurance

# இருபது வருடக் கட்டுப்பணம்! வாழ்நாள் முழுவதும் காப்புறுதி!

**இருபது வருடங்களுக்கு மட்டும் மாதாந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்துங்கள். அதன் பின்னர் உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு காப்புறுதி இருக்கும்.**

இருபது வருடங்களின் பின், விரும்பினால் காசுப் பெறுமதியை (Cash Value) அல்லது Policy Loan ஐப் பெற்றுக் கொள்ளலாம்.

| Age | 20 | | 25 | | 30 | | 35 | | 40 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100 | 63 | 57 | 78 | 63 | 90 | 80 | 106 | 92 | 125 | 110 |
| 200 | 122 | 105 | 144 | 121 | 168 | 150 | 208 | 177 | 240 | 214 |
| 300 | 181 | 155 | 214 | 179 | 250 | 223 | 309 | 264 | 357 | 319 |



RBC Insurance, Manulife, Industrial Alliance, La Capitale, Assumption Life, BMO Insurance, Sun Life Financial

**Thana Manickavasagar** Broker

**Cell:416.728.5772 Office:416.519.3896**

• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP • Non-Medical Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.8147 80 Nashdene Road, #D218, Scarborough, ON, M1V 5E4





# Dedicated Real Estate Agent with 20 years of experience!

***Buying, Selling, Investing, Leasing Homes***



*4 Crest Fern Way W*

- *Don Mills & Finch*
- *2 Storey Condo Townhouse*
- *3 Bedrooms & 3 Washrooms*
- *$566,000*
- *TTC, Library, Schools, & Amenities*




Front & Spadina
*Condo. Apartment*
*1 Bedroom & 1 Washrooms*




Front & Spadina
*Condo. Apartment*
*2+1 Bedrooms & 2 Washrooms*




Yonge & 401
*Condo. Apartment*
*2 Bedroom & 2 Washrooms*

HOMELIFE HIGHER STANDARDS

HOMELIFE LANDMARK Brokerage.
7240 Woodbine Ave, Suite 103
Markham, ON L3R 1A4
Bus: 905 305 1600
nanadarajah@trebnet.com

NADA G. NADARAJAH B.V.Sc
*Real Estate Sales Representative*
*Call me 416 - 616- 8751*

An Ontario Secondary Private School Registered Under the Ministry of Education

# Delta Academy Inc.

Delta Academy Inc.

Offers the Following OSSD Credit Courses

Our goal is not the quantity of students but quality of education. We ensure that the students are trained to work independently and be prepared to the next grade level with the help of our highly qualified and experienced teachers.



BSID # 667561

| Grade 10 | |
|---|---|
| English | ENG2D |
| Principle of mathematics | MPM2D |
| Science | SNC2D |
| **Grade 11** | |
| English | ENG3U |
| Functions | MCR3U |
| Biology | SBI3U |
| Chemistry | SCH3U |
| Physics | SPH3U |
| Accounting | BAT3U |
| Economics | CIA3U |
| **Grade12** | |
| English | ENG4U |
| Advanced Functions | MHF4U |
| Calculus and Vectors | MCB4U |
| Data Management | MDM4U |
| Biology | SBI4U |
| Chemistry | SCH4U |
| Physics | SPH4U |
| Accounting | BAT4M |
| Economics | CIA4U |

ART COURSES

| Grade 9 | |
|---|---|
| Vocal | |
| Violin | |
| Veena | AMU10 |
| Piano Keyboard | |
| Dance | ATI101 |
| Miruthangam | AMP10 |
| **Grade 10** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU20 |
| Piano Keyboard | |
| Dance | ATI201 |
| Miruthangam | AMP20 |
| **Grade 11** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU3M |
| Piano Keyboard | |
| Dance | ATI3M1 |
| Miruthangam | AMP3M |
| **Grade 12** | |
| Vocal | |
| Violin | |
| Veena | AMU4M |
| Piano Keyboard | |
| Dance | ATI4M1 |
| Miruthangam | AMP4M |

Classes begins on
February, July, September
Register with us early as the space is limited.
All courses are 110 hours.
Course fee is $500 (Including registration )

Contact

416.751.2011

deltaacademyinc@hotmail.com

1160 Birchmount Road, Unit 1B, Scarborough ON M1P 2B8

# மூல உயிரணு...

**26ம் பக்கத் தொடர்ச்சி...**

இந்த உயரத்திற்கும் உடல் எடைக்கும் தொடர்பான அட்டவணையினைக் கீழ்கண்ட இணையத்தள முகவரியில் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

http://www.blood.ca/CentreApps/Internet/UW_V502_MainEngine.nsf/resources/docs/$file/heightweightchart2009.pdf

ஒருவர் தானம் வழங்கப் பொருத்தமானவர் தானா? தானம் வழங்குவதால் அவருக்கு தீங்குகள் பக்கவிளைவுகள் ஏற்படுமா? தானம் அளிப்பவர் சத்திர சிகிச்சைக்குள்ளாக வேண்டுமா? இவ்வாறான பல கேள்விகளுக்கும் சில பிழையான கருத்துக்களுக்கும் தீர்வு.

நீங்கள் ஒருவருக்கு எலும்பு மச்சை அல்லது blood stem cells தானம் வழங்க பொருத்த மானவரா எனக் கண்டறிய வைத்தியர்கள் human leukocyte antigen (HLA) typing என்னும் சோதனையினைச் செய்வார்கள். இந்த HLA புரதம் தாய் தகப்பனிடமிருந்து பெறப்பட்ட ஒன்றாகும். இதனால் சகோதரங்கள் மிக மிகப் பொருத்தமானவர்களாக இருப்பார்கள். மேலும் தானம் வழங்குபவருக்கு பிறப்புரிமையியல் (பரம்பரை) முறையில் கடத்தப்படக் கூடிய நோய்கள் இருக்கின்றதா எனவும் ஒரு பரிசோதனை செய்யப்படும். இவ்வாறான நோயுள்ளவர்களினால் இவர்களது நோய் தானம் பெறுபவரினை அடைவதனைத் தடுப்பதற்காக எடுக்கும் முன்னேற்பாடு இது வாகும்.

மேலும் Stem Cell தானம் செய்வதனால் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டுவிடும் என ஒரு சிலர் நினைக்கின்றார்கள். எந்த விதத்திலும் முள்ளந்தண்டினைப் பாதிக்காது என்பது மட்டுமல்ல, முள்ளந்தண்டிலிருந்து எதுவும் எடுக்கப்படுவதில்லை.

என்பு மச்சை தானம், குருதி தானம் என்பவை மாற்றீட்டிற்கான குருதி மூல உயிரணுக்களை (blood stem cells for transplantation) வழங்குகின்றன என்பதும், முன்பெல்லாம் ஒருவருக்கு எலும்பு மச்சை தானமளிக்க வேண்டும் எனின் தானம் அளிப்பவர் இடுப்பு எலும்பில் ஒரு சிறு சத்திர சிகிச்சை செய்தே இந்த குருதிக்குரிய மூல உயிரணு எடுக்கப்படும் என்பதும் அனைவரும் தெரிந்து கொண்டவிடயம். இதனால் சத்திர சிகிச்சைக்குள்ளாகி இன்னொருவருக்கு தானம் செய்ய பலருக்குப் பயம் இருந்து வந்தது. ஆனால் தற்போது சத்திர சிகிச்சைக்கான தேவை அற்றுப் போகின்றது ஏனெனெல் இவை நேரடியாக எங்கள் சாதாரண குருதியிலிருந்து (peripheral blood stem cell (PBSC) எடுக்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாது குழந்தைகள் பிறக்கும் போது அவர்களது தொப்புள் கொடி, நச்சு கொடி என்பவற்றிலிருந்தும் blood stem cells எடுக்கப்படுகின்றது. மேலும் ஆச்சரியம் என்ன வென்றால் பெண்களின் மாதவிலக்கு குருதி யில் கூட எடுக்கலாம் என ஒரு *சில ஆய்வு கள்* கூறுகின்றன. இவற்றிற்கான மேலதிக ஆராய்ச்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதால் இதனை இன்னும் கொஞ்சம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எலும்பு மச்சை தானம் அல்லது குருதி மூல உயிரணுதானம் என்பவற்றிற்கு பக்க விளைவுகள் மிக மிக அரிதாகவே இருப்பதால் பொதுவாக பக்கவிளைவுகள் அற்றதாகவே கருதப்படுகின்றது. ஆனால் எங்கள் குருதியில் பெருமளவு தொகையான மூல உயிரணுக்கள் இல்லையாதலால், குருதியில் இருக்கும் மூல உயிரணுக்களின் எண்ணிக்கையினைக் கூட்டு வதற்கு, தானம் வழங்குபவருக்கு, தானம் வழங்குவதற்கு நான்கு நாட்களுக்கு முன் ஊசி மூலம் ஒரு மருந்து கொடுக்கப்படும். இம் மருந்து மிகச் சிலருக்கு லேசான தலை வலி; தசை, எலும்பு போன்றவையில் மிகவும் மெல்லிய வலி, தூக்கம் குழம்புதல் போன்ற வற்றைத் தோற்றுவிக்கலாம். இதற்கு acetaminophen எடுத்தால் இவ் இடையூறுகள் அற்றுப் போகும். ஐந்தாவது நாள் உடம்பிலிருந்து குருதி எடுக்கப்படும். இது apheresis என அழைக்கப்படும். இப் படிமுறையின் போது கையிலிருந்து எடுக்கப்படும் குருதி ஒரு இயந்திரத்தினூடு அனுப்பப்பட்டு மூல உயிரணு பிரித்தெடுக்கப்பட்டு மீண்டும் குருதி உடலினுள் செலுத்தப்படும். இச் செய்முறைக்கு கிட்டத்தட்ட 4 – 6 மணித்தியாலங்கள் எடுக்கும். அத்துடன் எங்கள் குருதியில் இருக்கும் blood stem cellsஇன் எண்ணிக்கைக் கேற்ப எத்தனை தடவை நாங்கள் apheresis செய்ய வேண்டும் என்பது நிர்ணயிக்கப்படும். பின்னர் குருதியிலிருந்து பிரித்தெடுக்கப்படும் மூல உயிரணுவானது Endotaxin Test எனப்படும் பரிசோதனைக்குட்படுத்தப்படும்.

மிகவும் அதிகளவிலான மூல உயிரணுக்களை நாம் குப்பையில் போடுவதாக கனடிய புற்று நோய் ஆராய்வாளரும் மருத்துவருமான Dr. Keating எடுத்துக் காட்டியுள்ளார். அவரவர் குழந்தைகளின் தொப்புக் கொடி குருதியினை தங்கள் குடும்ப நலனுக்காக வங்கியில் இடலாம். அப்படி வங்கியில் இட வசதியற்ற வர்கள் அல்லது அதற்கு முக்கியத்துவம் அளிக்காத ஒவ்வொருவரிடமும் அவர்கள் அதனைத் தானம் செய்வார்களா என அறிதல் முக்கியம் என அவர் கருத்து வெளியிட்டுள் ளார். இவ்வாறு பெற்றோர் தானம் செய்தால் இது நாடளாவிய ரீதியில் மட்டுமல்ல உலக ளாவிய ரீதியில் கூட பலருக்கு உதவக் கூடியதாக இருக்கும். தானம் வழங்கப்படும் தொப்புள் கொடி குருதியானது உடனடித் தேவையாக குருதிப் புற்று நோய் போன்ற நோய்களுக்குப் பாவிக்கப்படுகின்ற போதிலும் இதனால் மேலும் பல சாதனைகளை மருத்துவ உலகில் செய்யலாம் என்பது தெளிவாகின்றது. Liver, nerve, brain and pancreatic cells போன்ற அங்கங்கள் பழுதடைந்தவர்களுக்கு இந்த மூல உயிரணுக்களைக் கொண்டு புதிய அங்கங்கள் அல்லது கலங் கள் உருவாக்கப்பட வசதிகள் இருப்பதனால் எதிர்காலத்தில் பல நோய்களுக்கு இது நிவாரணியாக அமையலாம். மேலும் குருதி யிலுள்ள மூல உயிரணுக்களைப் போலல்லாது தொப்புள் கொடி குருதியிலிருந்து பிரித்தெடுப்பது மிகவும் சுலபம். இவ்வாறு பிரித்தெடுத்து இதனை திரவ நைதரசனுள் கிட்டத்தட்ட 190$^{C}$ல் பாதுகாத்து தேவை ஏற்படும் போது இளகவைத்து பாவிக்கப் படும்.

மூல உயிரணு தானம் வழங்கிய கண்ணன் என்பவர் தனது அனுபவத்தினை கூறுகின் றார். கீழ்கண்ட முகவரியில் பாருங்கள்:

www.youtube.com/watch?v=5NtSHDGrZMY

எப்படி ஒருவரது குருதியிலிருந்து Stem Cell பிரித்தெடுக்கப்படுகின்றது என்பதனைக் கீழ் கண்ட முகவரி காட்டுகின்றது:

www.youtube.com/watch?v=Fl13elGc4dQ


புதிதாக குழந்தை பெற்றுக் கொள்ளும் பெற்றோர்கள் உங்கள் வம்சத்தினை வரும் நாட்களில் பாதுகாக்க தொப்புள் கொடியினை cord blood bankingல் சேகரித்து வைத்துக் கொள்ளலாம். அவ்வாறு சேகரிக்க விரும்பாதவர்கள் அதனை வீணே குப்பையில் எறிந்து விடாது தானமாக வழங்கினால் கிட்டத்தட்ட 70க்கும் மேற்பட்ட நோய்களுக்கு அது மருந்தாகலாம். மேலதிக விபரங்களுக்கு இவ் இணையத்தளத்தினைப் பாருங்கள். http://www.lifebank.com

நான் கிரமமாக குருதி தானம் செய்துகொண்டிருக்கிறேன். ஆனால் இந்தத் தடவைதான் Stem Cell தானம் செய்யப் போகின்றேன். அதன்பின்னர் கட்டாயமாக எனது அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வேன். முடிந்தவரையில் மற்றையவர்களது உயிர்காக்க எங்களால் இயன்றவற்றைச் செய்வோம். கனடிய தமிழர்களுக்கு CANA009345 என்னும் அடையாள இலக்கம் உண்டு இதனை நீங்கள் பாவித்துக் கொள்ளலாம்.

தானத்தில் சிறந்த தானம் உயிர்கொடுக்கும் தானம். எங்கள் உயிரை வைத்துக்கொண்டே இன்னொருவருக்கு உயிர் கொடுக்கக்கூடியதாக இருக்கும் நாங்கள் அதிர்ஷ்டசாலிகள்.
தன்னுயிர் போல்
மன்னுயிரும் காப்போம்.



sivagini.bala@thaiveedu.com


$344,900
3 Bedrooms, 3 W Room
pen Concept Floor Plan, Main Floor Laundry With Garage Access
$359,900
4 Bedrooms, 3 W Room
Main Floor Laundry W/ Garage Access, Open Living Room/Dining Room
$419,500
3+0 Bedrooms, 2 W Room
3 Car Garage, No Businesses Or Out Buildings
$419,900
3 Bedrooms, 1 W Room
Custom Deck Overlooking Backyard With Custom Landscaping
$419,900
3 Bedrooms, 3 W Room
Oak Staircase,S/S Applns, Gas Stove,Jet Tub In Ensuite
$619,000
4 Bedrooms, 4 W Room
Beautiful Detached Home W/ Finished Bsmt
$638,800
4 Bedrooms, 4 W Room
Walk In Closet With Soaker Tub + Shower
$699,888
4 Bedrooms, 4 W Room
Professionally Finished Basement. Newer Garage Door
$735,000
3+2 Bedrooms, 4 W Room
New Paint,Open Concept Living & Diningroom
$739,917
3 Bedrooms, 3 W Room
Hardwood Flooring,Main Floor Den,Laundry With Garage Access
$769,900
4+3 Bedrooms, 5 W Room
Professionally Finished Basement Apartment
$849,000
4+1 Bedrooms, 3 W Room
4 Spacious Bedrooms With Large Master Ensuite
$923,900
3 Bedrooms, 3 W Room
Wrought Iron Fencing Around Pool, Extensive Decking,Hot Tub
$1,100,000
4+3 Bedrooms, 5 W Room
Escape To The Way The Cottage Used To Be
$5,499,000
5 Bedrooms, 8 W Room
Oak & Wrought Iron Railings, Theater Room Projector & Movie Chairs
KZG 647-200-5833
Sell your home faster and more money
RE/MAX Platinum Club Award
ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC
Sales Representative
Direct 416 - 276-1225
Email: esrinathan@trebnet.com
Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770
Your Home Sold In 30 Days or We buy it
When you list your home with Mike,you receive these Guarantees.
Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# குறுகியகாலப் பயிற்சி நெறிகளும் வேலை வாய்ப்புகளும்

## Personal Support Workers (PSW)

- த. வசந்தகுமார் -

அண்மையில் எடுக்கப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பின்படி, 2031ம் ஆண்டிலே, 100 வயதிற்கும் மேற்பட்டு வாழ்பவர்களின் எண்ணிக்கையானது தற்போதுள்ள எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 3 மடங்காக அதிகரிக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. மிக வேகமாக வளர்ந்து வரும் நவீன மருத்துவ வசதிகளே இத்தகைய ஆயுள் நீடிப்புக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

முதியவர்களின் ஆயுட் காலம் அதிகரிக்கும் பொழுது, அவர்களைப் பராமரிக்கும் தொழிலைப் புரியும் அதாவது 'PSW' என்று சுருக்கமாகக் கூறும் Personal Support Workersம் அதிகளவில் தேவைப்படுகின்றார்கள்.

### Personal Support Workers (PSW):

- PSWஆனது எதிர்காலத்தில் மட்டுமல்ல, இன்றும்கூட மிகவும் அதிக அளவு வேலை வாய்ப்புக்களைத் தரக்கூடிய பயிற்சி நெறியாகும்.
- ஏறக்குறைய 6 மாதங்களில் பயிற்சியை முடித்துவிடலாம்.
- PSWஆகப் பணியாற்றுபவர்கள் மணித்தியாலத்திற்கு $12 இருந்து $23 வரை ஊதியம் பெறுகிறார்கள்.

### PSW பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்:

வைத்தியசாலைகளிலும் முதியோர் இல்லங்களிலும் புனர்வாழ்வு (Rehabilitation) நிலையங்களிலும் மாற்றுத்திறனாளிகளைப் (Disabled) பராமரிக்கும் நிலையங்களிலும் தனிப்பட்ட வீடுகளிலும் PSW இனுடைய சேவைகள் தேவைப்படுகின்றன. நல்ல வேலை வாய்ப்புக்களுக்குரிய சந்தர்ப்பங்கள் இருப்பதனாலும், நல்ல ஊதியத்தைப் பெறக்கூடியதாக இருப்பதனாலும், ஒப்பிட்டுப் பார்க்கும் போது குறைந்த காலப் பயிற்சியே தேவைப்படுவதனாலும் பலர் PSW பயிற்சியைத் தொடர விரும்புகின்றார்கள்.

பயிற்சி முடிந்து, வேலையில் சேர்ந்தபின் பலர் மனத்திருப்தியடைந்து மகிழ்ச்சியுடன் வேலை செய்கின்றார்கள்.



PSW ஆக வருபவர்கள் எத்தகைய வேலைகளைச் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றார்கள் எனக் கீழே தரப்பட்டுள்ளது. அதனை நன்கு வாசித்த பிறகு, PSW பயிற்சி பற்றி முடிவெடுப்பது நல்லது. குறிப்பாகச் சொல்லப்போனால் PSW ஆக வருபவர்கள் பொறுமையும் சேவை மனப்பான்மையும் முதியவர்களுடனும் பாதிக்கப்பட்டவர்களுடனும் அன்பாகப் பழகும் பண்பும் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.


### PSW விடம் எதிர்பார்க்கப்படும் சேவைகளில் சில:

- இரத்த அழுத்தம், உடல் வெப்பநிலை, நாடி, சுவாசம், நிறை, உயரம் என்பவற்றைப் பதிவு செய்தல்.
- மருத்துவப் பரிசோதனைக்குத் தேவையான மாதிரிகளை எடுத்தல்.
- குடும்ப வன்முறையால் (Family Violence) பாதிக்கப்பட்டவர்களுக்கு சட்டரீதியாகவும், Employer Policy என்பவற்றிற்கமையவும் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க உதவி செய்தல்.
- மாற்றுத்திறனாளிகட்கு (Disability Clients) பிரத்தியேகமாகவும், கௌரவமாகவும் வேண்டிய உதவிகளைப் புரிதல்.
- விசேட தேவையுள்ள (Special Needs) குழந்தைகட்கும், சிறுபிள்ளைகட்கும் தேவையான உதவிகளைப் புரிதல்.
- உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தவர்களுக்கும் மனத்தெம்பையும் புத்துணர்வையும் அளிக்கக் கூடிய முயற்சிகளை மேற்கொள்ளுதல்.
- உணவுத் தயாரிப்பு, உணவுத்திட்டமிடல் (Dietary Planning) மற்றும் உணவு உட்கொள்ளுதல், பானங்களை குடித்தல் போன்றவற்றிற்கு உதவி செய்தல்.
- குழந்தைகள், கர்ப்பிணிகள், Nursing Mothers மற்றும் குழாய்கள் மூலம் உணவு செலுத்தப்படுவோர், சலரோகம் போன்ற நோயுள்ளவர்கள் போன்றோருக்கு அவரவர்களினுடைய தேவைக் கேற்ப உண்பதற்கும், அருந்துவதற்கும் உதவி செய்தல்.
- நாளாந்த நடவடிக்கைகளான குளித்தல், உடல் கழிவுகளை அகற்றுதல் போன்றவற்றிற்கு உதவி செய்தல் (Assist with Personal Hygiene)
- இறக்கும் தறுவாயிலும், இறந்த பின்னும் தேவையான சேவைகளைச் செய்தல் (Patliative Care).

### PSW பயிற்சிநெறி பற்றிய விபரங்கள்:

National Association of Career College (NACC) ஆனது Ontario Colleges of Applied

தொடர்தல் 31ம் பக்கம்






# குறுகியகாலப் பயிற்சி...

30ம் பக்கத் தொடர்ச்சி...

Arts & Technologyற்குச் சமனான (Deemed to be Equivalent) ஒரு பாடத்திட்டத்தைத் தயாரித்துள்ளது. இந்தப் பாடத்திட்டத்தைப் பயிலுபவர்களுக்கு, அரச சார்புடைய OSAP, Second Career மூலம் பெறும் HRDC நிதியுதவி என்பனவும் கிடைப்பதனால் அந்த விபரங்களைப் பார்ப்போம். இங்கு குறிப்பிடப்படும் பயிற்சி நெறி விபரங்கள் தற்போது அநேகமான பயிற்சி நிலையங்களில் பின்பற்றப்படுகின்றது. புதிய பாடத்திட்டம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

## பயிற்சிநெறியும் கால வரையறையும்:

இது வகுப்பறையில் போதிக்கப்படும் theory & Practice ஐயும் செயல்முறை அனுபவத்தைப் பெறக்கூடிய Clinical Placement ஐயும் உள்ளடக்கிய ஒரு பாடத்திட்டமாகும். இதன் பிரகாரம் ஒவ்வொரு மாணவரும் 640 மணித்தியாலப் பயிற்சி-நெறியை அதாவது 285 மணித்தியாலங்கள் வகுப்பறைக் கல்லூரியும் 355 மணித்தியாலங்கள் Clinical Placementம் பூர்த்தி செய்யவேண்டும்.

PSW பாடத்திட்டத்தில், 355 மணித்தியாலங்கள் Clinical Placement என்றழைக்கப்படுகின்ற வேலை அனுபவமும் உள்ளடக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். 285 மணித்தியால வகுப்பறைக்கல்வியை முடித்தவர்களும், Police Clearence, CPR & First Aid சான்றிதழ்கள் பெற்றவர்களும் மட்டுமே வேலை அனுபவத்தைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாகின்றார்கள். இந்த செயல்முறை வேலை அனுபவமானது, மாணவர்கள் வகுப்பறையிற் கற்ற கல்வியைச் செயல்முறையில் செய்வதற்கும் அவர்களால் வேலை செய்யமுடியுமென்ற நம்பிக்கையைப் பெறுவதற்கும் வழிவகுக்கின்றது. இந்த 355 மணித்தியாலங்களிலும், 180 மணித்தியாலங்கள் School Instructor இனுடைய முழுநேர மேற்பார்வையிலும் மிகுதி 175 மணித்தியாலங்கள், வேலைசெய்யுமிடத்திலுள்ள தகுதி வாய்ந்த ஒருவரின் மேற்பார்வையிலும், 10 மணித்தியாலங்களுக்கு ஒருமுறை 1 மணித்தியாலம் வகுப்பாசிரியரின் மேற்பார்வையிலும் Clinical Placement மேற்கொள்ளப்படுகின்றது. இந்த Practical Placement ஆனது, Nursing homes, முதியோர் பராமரிப்பு நிலையங்கள் போன்றவற்றில் மாணவர்கள் வேலை செய்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதனால், பயிற்சி முடிவில், பலர் அந்தந்த நிலையங்களிலே நிரந்தரமான வேலையையும் பெற்றுவிடுகின்றார்கள் என்பதனையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். மாணவர்களுடைய செயல்முறைக்குரிய நிலையங்களை ஒழுங்கு செய்வதும் அதற்குத் தேவையான காப்புறுதியைப் பெறுவதும், கல்வி நிலையங்களின் பொறுப்பாகும். மாணவர்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் Skills Passbookல் தாங்கள் பயின்ற பயிற்சிகளைக் குறிப்பிட்டு அவர்கள் அந்த பயிற்சியைத் தகுந்த முறையிற் பெற்றிருக்கின்றார்கள் என்று மேற்பார்வையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டால் மட்டுமே டிப்ளோமா பெறுதற்குத் தகுதியுடையவராகின்றார்கள்

இந்த ஒரே பயிற்சி நெறி சில கல்வி நிறுவனங்களில் 26 வாரங்கட்கும், சில கல்வி நிறுவனங்களில் 32 வாரங்களுக்கும் கற்பிக்கப்படுவதைக் காணலாம். இந்த வித்தியாசத்திற்குக் காரணம் சில நிறுவனங்கள் ஒவ்வொரு நாளும் 4 மணித்தியாலங்கள் பயிற்றுவிப்பதும், இன்னுஞ் சில நிறுவனங்கள் ஒவ்வொரு நாளும் 5 மணித்தியாலங்கள் பயிற்றுவிப்பதுமேயன்றி, பாடத்திட்டத்தில் எந்தவித வேறுபாடும் இல்லை!

## அனுமதித் தகைமைகள்:

- கனடாவிலுள்ள உயர்தரப் பாடசாலையில் டிப்ளோமா பெற்றிருக்க வேண்டும். அல்லது, 19 வயதிற்கு மேற்பட்டவராயிருந்தால் அந்தந்தக்கல்வி நிறுவனங்களில் வைக்கப்படும் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பிரவேசப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.
- ஆங்கிலத்தில் எழுத வாசிக்க, assignment பரீட்சைகள் எழுதக்கூடிய திறமையைப் பரீட்சிக்கும் English Literacy பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.
- குறிக்கப்பட்ட சில நோய்களால் பாதிக்கப்படவில்லையென்று மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.
- Criminal Record இல்லையென பொலிஸ் துறையினரால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.
- Clinical Placementற்கு முன்னதாக CPR & First Aid சான்றிதழ்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

சாதாரணமாக சில பொலிஸ் பிரிவுகளில், Police Clearance பெறுதற்கு 2 மாதங்களுக்கு மேலாகவும் தாமதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனைக் கவனத்திற்கொண்டு பயிற்சியைத் தொடங்கும் முன்னர் இதனைப் பெற்றிருப்பது நல்லது. பயிற்சி தொடங்கிய பிறகு Criminal Record இருக்கின்றதென அறிக்கை வந்தால், PSW பயிற்சியை எக்காரணங் கொண்டும் தொடர முடியாது. (Private Career Colleges ஐப் பொறுத்தமட்டில், பயிற்சிக் காலத்தின் அரைவாசியைக் கடந்திருந்தால், செலுத்திய Tuition Feesல் எதனையும் திரும்பப் பெற தகுதியற்று விடுவீர்கள் என்பதனையும், அரைவாசிக்கு முதல் Criminal Record இருக்கின்றதென அறிக்கை வந்தால், படித்த நாட்களுக்குரிய கட்டணத்தைக் கழித்த பிறகே Refund கிடைக்குமென்பதையும் தெரிந்து வைத்திருப்பது நன்று)

பயிற்சியின் முடிவில் NACCஇனால் 'Online' பரீட்சையும், கல்வி நிலையங்களினால் Diploma பெறுவதற்குரிய பரீட்சையும் நடத்தப்படுகின்றது.

## PSW Registry:

February 29, 2016 வரை, Ministry of Health & Long Term Care ஆனது, PSW ஆகப் பயிற்சி பெற்று, அந்த விபரங்களை தாமாகவே முன்வந்து (Voluntarily) தருபவர்களின் பெயர்களைத் தொகுத்து PSW Registry ஒன்றினை Maintain பண்ணிக் கொண்டிருந்தது. சில Employers உம் தாங்கள் வேலை வழங்கவிருக்கும் PSWன் பெயரும் இந்த Registryல் இருக்கின்றதா என்று உறுதிப்படுத்துவதும் உண்டு. இந்த Registryல் பெயர் பதிவு செய்யப்பட்டு இருக்கவேண்டுமென்பது, PSW ஆக வேலை பெறுபவர்களுக்கு ஒரு நிபந்தனையல்ல. மாறாக இதனை பாவனையிலுள்ள ஒரு வழக்கமாக எடுத்துக்கொள்ளலாம். இதில் பதிவு செய்யாத எத்தனையோ பேர் ஒன்ராறியோவில் PSW ஆக வேலை செய்வது இங்கு குறிப்பிடத்தக்கது இதில் தவறும் இல்லை. எனினும், இந்த Registry இப்போது close பண்ணப்பட்டு விட்டதென்பதையும் PSW ஆகப்பயிற்சி பெறுபவர்கள் அறிந்திருப்பது நல்லது.

## Membership & Details:

PSW ஆகப் பயிற்சி பெற்றவர்கள் Ontario Personal Support Workers Association (OPSWA)ல் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்ளலாம். இதில் அங்கத்துவம் பெறுவதனால் அடையப் போகும் நன்மைகளையும், மேலதிக விபரங்களையும் www.opswa.com என்ற இணையத்தளத்திற்குச் சென்று பார்வையிடலாம். Personal Support Network of Ontario என்ற நிறுவனத்தின் www.psno.ca என்ற இணையத்தளத்திற்குச்சென்று, PSW பற்றிய மேலும் விடயங்களை அறிந்து கொள்ளலாம்.



vasanthakumar.t@thaiveedu.com

# வசந்தகால வீட்டுப் பராமரிப்பு
# (Spring - Home Maintenance)

**வீடும் விடியலும் - 119**

**- வேலா சுப்ரமணியம் -**

கடந்த காலக்கட்டுரைகளில் குறிப்பிட்டது போல் காலநிலைக்கேற்ற வகையில் வீட்டைப் பராமரித்து வந்தால் திடீரென ஏற்படும் பாரிய செலவுகளைத் தவிர்துக் கொள்ளலாம். அந்த வகையில் குளிர்காலம் முடிவடைந்து கோடை காலத்தை எதிர்பார்த்து நிற்கும் எங்களுக்கு வசந்த காலத்தில் எந்தவகையில் வீட்டைப் பராமரிக்கலாம் அல்லது கோடை காலத்திற்கு தயார்ப்படுத்தலாம் என்பது பற்றி குறிப்பிடுவது பொருத்தமானது.

### மரத்தளம் - Deck

பொதுவாகக் குளிர்காலத்தில் தேங்கிக்கிடந்த பனிப்படிமானங்கள் கரையத் தொடங்கியதும் நீர், மரப்பலகைக்குள்ளேயோ அல்லது மரச் சட்டங்களுக்குள்ளேயோ உட்புகத் தொடங்கலாம். மரச்சட்டங்களில் உரிய எதிர்ப்புத் தன்மையற்றுப் போய்விட்டால் உட்புகும் நீரால் மரம் உரிய காலத்திற்கு முன்னர் உக்கிப் பழுதடைந்துவிடும். இக்காலத்தில் நீர்க்கறை, பொருமல் என்பவற்றை அவதானிப்பதன் ஊடாக கோடைகாலம் வரும்போது உரிய முறைப்படி நீர் எதிர்ப்புக்குரிய பூச்சுக்களை பூச (Water Resistent Paint) எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் Mold, Moss போன்ற பங்கஸ் பிடிக்காமல் இருப்பதற்காக ஒருதடவை Power Washer உதவியுடன் கழுவியும்விடலாம்.

### குளிரூட்டி - Air conditoner

குளிரூட்டியைச் சுற்றி சருகுகள், குப்பை கூழங்கள் குவிந்திருக்க வாய்ப்பு உள்ளது. அவற்றைச் சுத்தப்படுத்துவதோடு குளிரூட்டியைச் சுற்றியுள்ள வலைப்பகுதியினை (Net) Garden hose மூலமோ அல்லது Vacum Cleaner இன் உதவியுடனோ, சுத்தம் செய்து காற்றோட்டம் தடைப்படாதவாறு குளிரூட்டி இயங்கக்கூடிய நிலையை உறுதி செய்தல் வேண்டும்.

### அத்திவாரம் - Foundation

பனிஉருகி கரைந்தோடும் காலப்பகுதியாக இக்காலம் விளங்குவதால் பொதுவாக நிலக்கீழ் அறையில் தண்ணீர் உட்புகும் இடர் இக் காலத்தில் தான் அதிகமாக இருக்கும் எனவே மயிரளவு (Hairline Crack) வெடிப்பினால் கூட தண்ணீர் உட்புகும் வாய்ப்பு இருப்பதால் நிலைமை மோசமாக முன்னர் சற்று கூர்ந்து அவதானித்தால் உரிய நடவடிக்கைகளை ஆரம்பத்திலேயே எடுத்துவிடமுடியும்.

### வாகனக் கொட்டகைக் கதவு

வாகனக் கொட்டகைக் கதவு திறப்பதற்குப் பொதுவாக மோட்டர்கள் பொருத்தப்பட்டிருக்கலாம். அதன் தொடர்பைத் துண்டித்து விட்டு கையால் கதவை ஒரு தடவை திறந்து பார்த்து கதவு தடைகளின்றி இலகுவாக திறந்து மூடுகிறதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். தடைகள் இருந்தால் over head springஐ சரி செய்ய வேண்டிய தேவை இருக்கலாம். அத்துடன் உரிய முறையாக வேலை செய்கின்றனவா? என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

### தண்ணீர் பீலிகள் - Gutters


அடைபட்டு இருக்கக்கூடிய பீலிகளை நன்கு சுத்தம் செய்து இலகுவில் நீர்வழிந்தோடும் தன்மையை உறுதி செய்தல் வேண்டும். அத்துடன் கீழ் நோக்கி விழும் குழாய்கள் (Downspout) உரிய முறையில் நீரை வெளியேற்றுகிறதா? என்பதையும் அவதானித்தல் நல்லது. முக்கியமாக அதன் அடியில் பொருத்தப்பட்டிருக்கும் Leader pipes அடைக்காதிருக்கின்றதா என்பதை உறுதி செய்வதோடு நீர் நேரடியாக அத்திவாரத்திற்கு அடியில் உட்புகாதவாறு பார்த்தக்கொள்ளல் வேண்டும். குறிப்பாக அத்திவாரத்தில் இருந்து 5 அடிக்கு வெளியே நீர் சென்றடையும் விதத்தில் அவை பொருத்தப்பட்டிருப்பது சாலவும் சிறந்தது.

### கூரை - Roof

Chimney, Spylightஐ அண்டிய பகுதிகளில் நீர்க்கசிவு ஏற்படலாம். இக்காலப்பகுதியில் Attic ஊடாக நீர்க்கசிவுக்கான அடையாளங்களை இலகுவாகக் கண்டுகொள்ளலாம். பொதுவாக 15-20 வருடங்களுக்கு கூரையில் போடப்பட்டிருக்கும் Shingles நின்றுபிடிக்கும் என்றாலும் காற்று மற்றும் புறக்காரணிகளால் பழுதடைந்துள்ள அல்லது இடைவெளியாக உள்ளவற்றை பழுதுபார்ப்பது அவசியம்.

### மரங்கள்

வீட்டைச் சுற்றி மரங்கள் இருப்பது ஆரம்பத்தில் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் காலப்போக்கில் அதுவே பெரிய பிரச்சினை ஆகி விடும். வளர்ந்த மரங்கள் கூரையையோ, யன்னல்களையோ தாக்கி சேதங்களை உண்டு பண்ண வாய்ப்பு இருக்கின்றது. கொப்புக்கள் வளர்ந்து பாரம் ஏறமுதல் அவற்றை கத்தரிப்பதற்குரிய சிறந்த காலம் இதுவே. மரங்கள் அளவுக்கு அதிகமாக வளர்ந்திருந்தால் அதற்குரிய தொழில்சார் வல்லுனர்களை நாடுவதே சாலவும் சிறந்தது.








### வாகனப்பாதை - Driveway

வாகனப்பாதைக்கு குளிர்காலத்தில் உப்பால் குளிப்பாட்டி இருப்போம். இந்த வருடம் அவ்வளவாக இல்லாவிட்டாலும் போட்ட உப்பு தங்கி இருந்து அதற்குரிய பணியைச் (அரிப்பு) செய்து கொண்டே இருக்கும். Asphalt, Interlock, concrete என்று எந்தவகை வண்டிப் பாதையாக இருந்தாலும் இக்காலப் பகுதியில் Power washerஇன் உதவியுடன் முதலாவது வேலையாக வண்டிப்பாதையை நன்றாகக் கழுவி உப்பின் தன்மையை இல்லாது செய்தல் வேண்டும்.

குறிப்பாக Inter Lock உள்ளவர்கள் கல்லின் இடைவெளிகளில் பூண்டுகள் முளைப்பதை அவதானிக்கலாம். எனவே அவை முளைக்க முன்னர் அதனைத் தடுக்கக்கூடிய விதத்தில் உரிய மண்ணைப் போட்டு (Brush stone dust) பாதுகாக்கலாம். Congrete வாகனப்பாதையாக இருந்தால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை யாவது அதனை Seal பண்ணத் தவறக்கூடாது. Asphalt வாகனப் பாதையாக இருந்தால் இருக்கக்கூடிய வெடிப்புகளை, அடைத்த பின்னர் நல்ல வெப்பமான காலநிலை வரும் போது இரண்டு வருடத்திற்கு ஒருமுறையாவது Seal பண்ணத் தயாராதல் வேண்டும்.

### கவனத்தில் கொள்ளவேண்டிய மேலும் சில...

- வெப்பமாக்கியுடன் பொருத்தப்பட்டிருக்கும் ஈரப்பதனாக்கியை (Central Humidifiert) முற்றாக நிறுத்தி விடுங்கள்.
- வெப்பமாக்கிகோ (Furnace), Fire placeக்கோ முதன்மை விளக்குகள் (Pilot Lamps) பொருத்தப்பட்டிருந்தால் அவற்றை நிறுத்தி விடலாம்.
- வெளிவளவிற்கோ அல்லது முன் வளவிற்கோ (Back Yard & Front Yard) போகும் குழாய்களின் நீரை நிறுத்தி இருந்தால் (Shut Off) அவற்றைத் திறந்துவிடலாம்.
- 3 மாதத்திற்கு ஒருமுறை வெப்பமாக்கிக்குரிய வடிகட்டியை (Filters) மாற்றிவிடவேண்டும் என்ற அடிப்படையில் அதனையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.
- யன்னல்களுக்குரிய வலைகளை (Net)ச் சுத்தப்படுத்தி அல்லது அவசியம் ஏற்பட்டால் பிரதியீடு செய்து தயார்ப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
- தண்ணீர் வெளியேற்றத்திற்குரிய வெளிப் புறப் பாதைகள் அடைபட்டிருந்தால் அவற்றை சுத்தம் செய்தல் வேண்டும்.
- பூக்கன்றுகள், காய்கறி வைப்பவர்கள் மண்ணைத் தயார் செய்து தேவை ஏற்பட்டால் பசளைகளைப் போட்டு தமது பணிகளை ஆரம்பிக்கலாம்.



velasubramaniam@thaiveedu.com

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

E-mail: info@thaiveedu.com
Fax: 416-849-0594
Tel: 416-646-3422

வீட்டுப் பரிசோதகர் ஒரு வீடு விற்பனை முகவரானால்

வீடு வாங்க:



வீடு விற்க:



வாங்கப்போகின்றீர்களா?
- தரமான வீடு தவறிப்போகாது
- பிடித்த வீடு மலிவாய்க் கிடைக்கும்
- வாங்கிய பின் ஏமாற்றங்கள் இருக்காது
- வளம்சேர்க்கும் வாழ்நாள் முதலீட்டின் முதற்படி

விற்கப்போகின்றீர்களா?
- விற்கமுன் வீட்டின் பிழைகள் களைய இலவச ஆலோசனை
- விற்றபின் வரும் தடங்கல்களை விற்கமுன் தவிர்க்கலாம்
- விற்றபின் வரும் பெறுமதி இழப்புக்களைத் தடுக்கலாம்
- சந்தை விலைக்குக் குறையாத பெறுமதியை ஈட்டலாம்

நம்பிக்கை. நாணயம்
10 வருட வீட்டுப் பரிசோதனை அனுபவத்தடன் கூடிய ஒரு வீடு விற்பனை முகவர்

Highest Standard Agents... Highest Results!
Vela Subramaniam B.A. (Hons)
Experienced Home Inspector
Sales Representative
Direct: 416 786-0760
vela4homes@gmail.com
www.dreamglahomes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416 264-0101 Fax: 905 201-9229
205 - 7 Eastvale Dr, Markham, ON. L3S 4N8





வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
#3-1286 Kennedy Rd, Scarborough, ON M1P 2L5

416.270.1111
*each office independently owned & operated



SRI THAMBIRAJAH
SALESPERSON
Cell:416.710.8863
tsrirealtor@remaxace.com

#1 RE/MAX

BASKARAN SINNADURAI
BROKER
Cell:416.880.8585
baskaran.toronto@hotmail.com

## BRAND NEW PLAZA



IDEAL SQUARE
2710 MORNINGSIDE AVENUE
TORONTO, ON

BIRDSEYE VIEW 1
DATE: MAY 29, 2015

aaa atif aqeel architect

**brand new plaza in 10acre land . heart of scarborough medical , restaurant, retail ,banquet hall,church**



# JUST LISTED... 2 Myron St. Stouffville

9th & Hoover Park



4 Bedrooms, 3 Washrooms, Double Garage

Century 21
Affiliate Realty Inc. Brokerage
Office : 416-290-1200
Not intended to solicit properties currently listed for sale or individuals currently under contract with a Brokerage.

10 FULL TIME REALTOR WITH TEN YEARS EXPERIENCE



**Pakeer Sahadevan**
*Sales Rep.*
416.908.6003 / 905.470.0063

**LIST WITH PAKEER AND SAVE TIME AND MONEY**

www.pakeer.realtor

# புற்றரையும் அழகுபடுத்தலும்

- மகேன் சிங்கராஜா -

### புற்தரையில் காற்றோட்டத்தினை ஏற்படுத்துதல் (Lawn Aeration):

இம்முறை நாம் வெகு விரைவாகவே பனிக் காலத்திற்கு (winter) விடை கொடுத்துவிட்டு இலை துளிர்காலத்தை (Spring)ஐ கோடை காலம் போல் உணர்க்கூடியதாக இருக்க, நாம் குளிர் காலத்திற்கும் குளிர் ஆடைக ளுக்கும் விடை கொடுத்துவிட்டு, பசுமையான நினைவுகளோடு வெளியேறும் பொழுது நம் கண்களில் தெரியும் இவ் அழகான புற்தரை மனதுக்குள் ஒரு புத்துணர்ச்சி எம்மை அறி யாமலே ஏற்படும். இவ் இலை துளிர் காலம் ஒரு பசுமையானதும் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தக் கூடியதுமான காலமாகும்.

நாம் கனடிய நீரோட்டத்தில் வாழ்வதாலும், எம்மில் பலர் வீட்டு உரிமையாளராக இருப தினாலும் இது எம்மில் பலருக்கு உதவும் என்ற எண்ணத்தில் இதனை வரைகின்றேன். உங்களுக்கு இது பிரயோசனப்பட்டால், உங் கள் விமர்சனத்தை எதிர் பார்க்கின்றேன்.

புற்தரையில் காற்றோட்டம் ஏற்படுத்துதல் பல்வேறு நன்மைகளை ஏற்படுத்தும் என்பது உங்களுக்கு தெரியுமா?

பல வருடங்கள் கடந்த பின்னர் மண்ணின் மேற்பரப்புக்கும் ஆரோக்கியமான பசும்புற் தரைக்கும் இடையில் உள்ள இறந்த புற்கள் thatch என்று அழைக்கப்படும் படலமாக உரு வாகிறது. இலை துளிர் காலத்தில் அல்லது இலையுதிர் காலத்தில் புற்களுக்கு காற்றோட் டத்தை ஏற்படுத்துவதனால், இந்த படலத்- தின் அளவு பெருமளவு குறைக்கப்பட்டு பல நன்மையான விளைவுகள் ஏற்படும்.

### புல்தரையில் காற்றோட்டத்தை ஏற்படுத்துவது என்றால் என்ன?

மண்ணில் துளைகளை ஏற்படுத்தி மண் கட்டி களை இழுத்தெடுப்பதே புற்தரை காற்றோட் டம் என அழைக்கப்படுகிறது. Core aerator என்ற கருவியே இச்செயற்பாட்டுக்கான மிகச் சிறந்த கருவியாகும். இக்கருவி மண்ணில் இருந்து 1/2" - 3/4" விட்டமுடைய மண் பகு திகளை பிரித்தெடுத்து உங்களது புற்தரை யின் மீது போடுகின்றது.

மண்ணின் மீது துவாரங்களை ஏற்படுத்து வதே இந்த செயற்பாட்டின் அர்த்தம். புல் தரையில் காற்றோட்டம் ஏற்படுத்துவதனால் கீழே குறிப்பிடப்படும் பயன்கள் ஏற்படுகின்றன.

- ஒட்சிசன் வாயு வேர்களையும், மண்ணை யும் சென்றடைவதற்கு வழி செய்தல்.
- சேதன பசளைகளும், கனிப்பொருட்களும் வேர்களை சென்றடைய வழி செய்தல்.
- மண் அதிகளவில் நீரை உறிஞ்சக்கூடிய தன்மையைப் பெறுதல்.
- உலர்ந்த புல் ஏற்படுத்தும் படலத்தை (thatch) உடைத்து இறுக்கமான மண் ணை இளகச் செய்து, வேர்கள் படர்ந்து வளருவதற்கு வழி செய்தல்.

### புற்தரைக்கு காற்றோட்டம் ஏற்படுத்துவது எப்படி?


காற்றோட்டம் ஏற்படுத்தும் கருவி (Aerator) மூலம் இதனை செய்ய முடியும். இக்கருவி கள் இரு வகைப்படும்.

- கையினால் இயக்கும் கருவி
- மின்சாரத்தினால் இயங்கும் கருவி

இதனை நீங்கள் வாடகைக்கு கூட எடுத்து பயன் படுத்த முடியும்.

### புற்தரையில் காற்றோட்டம் ஏற்படுத்தும் போது நடை- பெறுவது என்ன?

காற்றோட்டம் ஏற்படுத்தும் கருவி (Aerator) யின் உதவியுடன் மண்ணின் மேற்பரப்பில் துளைகள் ஏற்படுத்துவதன் மூலம் புற்தரையில் உள்ள மண்ணுக்கு காற்றோட்டம் ஏற்படுத் தப்படுகிறது. அதன் காரணமாக மண்ணின் இறுக்கமான தன்மை குறைக்கப்பட்டு, அதே சமயம் இறந்த புல் படலத்தின் அளவு கட்டுப் படுத்தப்படுகின்றது. அதேவேளை, வேர்கள் படரும் பகுதியினுள் காற்றும் பசளையும் பரவிச் செல்ல வழி ஏற்படுகிறது.




புல்தரையில் இருந்து மண் கட்டிகள் வெளி யே இழுக்கப்படுவதனால் மட்டுமே சிறந்த காற்றோட்டம் ஏற்படுத்தப்படுகிறது. மண்ணில் ஏற்படுத்தப்படும் துளைகள் 2"-3" அங்குல ஆழம் கொண்டதாகவும் 2"-4" இடைவெளி கொண்டதாகவும் அமைய வேண்டும். மண் ணில் துளைகளை இட்டு மண் கட்டிகளை (Plugs of Soil) இழுத்தெடுப்பதற்கு இலகு வாக, காற்றோட்டம் ஏற்படுத்துவதற்கு முன் னைய தினத்தில் புல்தரையின் மீது நிறை வான நீர் பாய்ச்சுதல் ஏற்படுத்த வேண்டும். Sprinkler heads, ஆழமற்ற நீர்ப்பாசன கோடு கள், கேபிள் தொலைக்காட்சி இணைப்பு வழிகள் என்பவை பாதிக்கப்படாமல் இருப்ப தை உறுதி செய்வதற்காக அவை ஏற்கனவே தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும். அதன் பின்னரே மண்ணில் துளைகளை ஏற்படுத்த வேண்டும்.

தரை உறையாமல் உள்ள எந்த வேளையி லும் புல்தரையில் காற்றோட்டம் ஏற்படுத்த லாம். ஆனால், தரை மிகவும் வெப்பமாகவும் உலர்வாகவும் உள்ள வேளையில் இதனை செய்யக்கூடாது. மக்கள் நடமாட்டம் அதிக மாக உள்ள புல்தரை பகுதிகளில் அடிக்கடி காற்றோட்டம் ஏற்படுத்த வேண்டும்.

புல்தரையில் காற்றோட்டம் ஏற்படுத்திய பின்பு அவற்றின் மீது பசளைகள் இடப்பட்டு, புல் விதைகளும் தூவப்படலாம்.

### காற்றோட்டம் ஏற்படுத்துவதினால் ஏற்படும் புற்தரையின் விளைவுகள்:

புற்தரைகள் முதிர்வடையும் போது அல்லது வாகன போக்குவரத்து, வளர்ப்பு பிராணிக- ளின் நடமாட்டம், விளையாட்டு செயற்பாடு கள் என்பன பாதிப்பு ஏற்படுத்துவதன் கார ணமாக மண் கட்டிபடுகின்றது. மிகக் குறை வான நீர்வடியும் தன்மை கொண்ட நிலப் பகுதிகளிலேயே மண்கட்டிபடுதல் மிகவும் கடுமையாக நடைபெறுகின்றது. இதனால் மண்ணில் உள்ள காற்றின் அளவு பெரும ளவு குறைகிறது. இதன் விளைவாக வேர்க ளின் வளர்ச்சியும், கனிப்பொருட்களையும் நீரையும் உறிஞ்சும் செயற்பாடுகளும் பாதிக் கப்படுகிறது. எனவே வருடம் ஒரு முறையா வது புற்தரைக்கு காற்றோட்டம் ஏற்படுத்து வதனால், உங்கள் புற்கள் மிகவும் செழிப் பாக காணப்படும். மண்ணில் துளைகளிட்டு காற்றோட்டம் ஏற்படுத்தும் போது மேலும் பின்வரும் நன்மையை உருவாக்கும்.

- இறந்த புற்களுடன் இணைந்த மண்படை களை சிதைவடையச் செய்யும் நுண்ணங் கிகளின் செயற்பாடு அதிகரிக்கும்.
- மண்ணினுள் நீர், கனிப்பொருட்கள், ஒட்- சிசன் என்பவற்றின் பரவுதலை அதிகரிக்கும்.
- வேர் படருவதை தூண்டுகிறது.
- மழைநீர் உட்புகுவதை அதிகரிக்கிறது.
- மண்ணில் இடப்படும் பசளைகள், பீடை கொல்லிகள் (Pesticide) என்பவை மண் ணில் இருந்து வழிந்தோடுவதை தடை செய்ய உதவுகிறது.

### காற்றோட்டம் ஏற்படுத்த வேண்டும் என எவ்வாறு அறிய முடியும்?

உங்களது வீட்டின் புற்தரையில் 6 அங்குல அகலமான ஒரு சதுர அடி மண்பரப்பை கிண்டி எடுக்கவும். புற்களின் வேர்கள் 1-2 அங்குலங்களுக்கு மட்டுமே நீண்டிருந்தால் உங்களது வீட்டை சூழவுள்ள மண் இறுக்க மடைந்துள்ளது என்று தீர்மானிக்கலாம். இவ் வாறான சந்தர்ப்பத்தில் மண்ணில் காற்றோட் டம் ஏற்படுத்துவது நன்மையை ஏற்படுத்தும்.

### காற்றோட்டம் ஏற்படுத்துவதற்கான ஏனைய காரணங்கள்:

- உங்களது வீட்டைச் சூழவுள்ள புல்தரை அதிக அளவு பாவிக்கப்பட்டாலும்.
- உலர்ந்த புல்படையின் அளவு 1/2 அங் குலத்திற்கும் அதிகமானதாக இருந்தாலும்.
- உங்களது மண் அதிகளவான களிமண் தன்மை கொண்டதாக இருந்தாலும் இத- னை நடைமுறைப்படுத்தலாம்.

### புற்தரையில் காற்றோட்டம் ஏற்படுத்துவதற்கு பொருத்தமான தருணம் எது?

- மண் ஈரலிப்பாக இருக்க வேண்டும். ஆனால், நீரில் தோய்ந்திருக்கக் கூடாது.
- காற்றோட்டம் ஏற்படுத்துவதற்கு முன்னைய இரு தினங்களுக்கு மண்ணில் நீரூட்டம் ஏற்படுத்துவதன் மூலம் மண்கட்டிகளை வெளியேற்றுவது இலகுவாக்கப்படலாம்.
- நீண்ட நேர மழைவீழ்ச்சியின் பின் காற் றோட்டம் ஏற்படுத்துவதானால், மண் காயும் வரை காத்திருப்பது அவசியம்.

புற்தரையை செழிப்பாக வைத்திருப்பது எப்படி என பார்த்தோம், இனி வரும் இதழில் எப்படியான பசளைகளை எந்தெந்த இனப் புற்களிற்கு பாவிக்க வேண்டுமென்பதினையும், எந்தெந்தக் காலத்திற்கு பசளை இடப்பட வேண்டும் என்பதினையும் பார்ப்போம். மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை, உங்களிடம் இருந்து விடைபெறுகின்றேன்.



mahensingaraja@thaiveedu.com


**Tutoring**

Grade 3-8 Math, English, Social studies, Science and French பாடங்களுக்கும்

Grade 3, 6, 9 EQAO பரீட்சைகளுக்கும்

Grade 10 & 11 Math & Grade 10 Literacy test இற்கும் மாணவர்களைத் தயார்படுத்த

அஞ்ஜலீன் திசைராஜா

(B.A (Hons), M.Sc, Ph.D)

Kennedy & Progress

647 291 1357



**People don't plan to fail, but they do fail to plan**

You don't have to take life the way it comes to you...
You can design your life to come to you the way you want!

நாளை நம் கையில்
இன்றே செயற்படுங்கள்

Super Visa Insurance
Disability Income Insurance
Critical illness Insurance
Mortgage Insurance
No medical exam Life Insurance
Permanent Life Insurances
Term Life Insurance
Travel & Visitor Insurance
RRSP Loan / Investment
RESP



*As an Independent Insurance Broker, I will shop around for you and get you the best rate…*

**Guna Thuraisingham** M.A.Sc (Eng.), P.Eng.
*Independent Insurance Advisor*
**Dir: 416 528 1407**
Tel: 905 230 4986 | guna@gtbrokers.ca
www.gtbrokers.ca

Super Visa Insurance 100% Refund

Industrial Alliance | RBC Royal Bank | Assumption Life | Desjardins | Manulife | Canada Protection Plan | Foresters

$689,000




$899,600




Bedrooms: 4+1 Washroom:4
Bedrooms: 6 Washroom:5

New Condos With VIP Price
www.NewCondoInGta.com




4+1 Bedrooms: Washroom:4




3 Bedrooms: Washroom:4




4 Bedrooms: Washroom: 4



Full Time Realtor

**Krish Sivapatham**
Sales Representative
Direct : 416-895-4457
**krishome.ca**
Indepently Owned and Operated, REALTOR

**I SOLD 86 HOUSES**
FROM MAY 2013 TO March 2016

**Top 5% Sales Rep in Canada**
**2010, 2011, 2012 ,2013 & 2014**

HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Dr Markham, ON, L3S 4N7
Bus:905-201-9977 Fax: 905-201-9229

## அதிசயப் பிராணிகள்

# கழுகு / Eagle

- செல்லையா சந்திரசேகரி -

### அறிமுகம்:

முள்ளந்தண்டுள்ள பிராணிகளில் பறவைகள் அடங்கிய (Class Aves) ஏவிஸ் எனும் வகுப்பினைச் சேர்ந்தது கழுகுகள். அதிகமான இனங்கள் ஆசியா, ஆபிரிக்கா நாடுகளில் கூடுதலாகக் காணப்பட்டன. ஆபிரிக்காவில் ஏறக்குறைய 60க்கும் மேலான இனங்கள் காணப்படுகின்றன. இவற்றைவிட வெண்தலைக் கழுகுகள், பொன்னாங் கழுகுகள் ஐக்கிய அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலும் காணப்படுகின்றன. வழமையாக, பெண் கழுகுகள் ஆண் கழுகுகளைவிட சற்று பெரிதாக இருக்கின்றன. தமிழ் நாடுகளில் பருந்து, வல்லூறு போன்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றன. கழுகு ஓர் அற்புதமான பிராணி என்பதே பொதுவான கருத்தாயிருக்கின்றது. இது ஒரு ஊணுண்ணும் பறவையாகும்.

### வியப்பான உடலமைப்பு:

கழுகானது உறுதியான கட்டமைப்பைக் கொண்ட ஒரு பெரிய பறவையாகும். இரையைப் பெறுவதற்கேற்ப வலுமையான கழுத்தையும் பெரிய வளைவுள்ள சொண்டினையும் பெற்றிருப்பதால் குறிவைத்துப் பிடிக்கும் இரையின் சதையை நன்கு கிளிக்கக் கூடியதாயிருக்கின்றது. இதனது முக்கிய ஆயுதங்களாக, வலிமையுள்ள தசைகளையுடைய கால்களும் பட்டாக் கத்திபோன்ற நகங்களும் இன்னொரு பறவைக்கும் இல்லாத சிறப்பியல்பாக அமைகின்றன. கண்கள் மிகவும் பெரிதாயிருக்கின்றன. மனிதனின் பார்வையிலும் பார்க்க நான்கு மடங்கு கூடுதலான பார்வை இருப்பதனால் தனது இரையினை மிகக் கூடிய தூரங்களிலிருந்தும் குறிவைத்து பிடிக்கக் கூடியதாயிருக்கிறது. இதனால் கண்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒளி கூடுதலாக இருப்பதால் தெரிகின்ற உருவமும் பெரிதாகத் தென்படுகின்றது. இதற்கு இன்னொரு காரணம் உள்ளது. கண்விழியிலுள்ள பெரிய கண்மணியானது, இதனை நோக்கி வரும் ஒளியினைக் கடத்திவிடுகின்றது. சடார் சடார் என கீழே பார்வையை விட்டு, கோழிக்குஞ்சு, புறா, வாத்து, எலி, முயல், போன்ற பிராணிகளைப் பாய்ந்து கவ்வுகின்றது. வேட்டையாடிப் பிடித்த உணவினை அலகினால் சதைகளைக் கொத்தி இலேசாக உண்கின்றது. இனங்களுக்கு இனம் வேறுபாடான பருமன்களில் கழுகுகள் காணப்படுகின்றன. இதற்கு ஏற்ப இவற்றிக் சிறகுகளின் விரிப்பின் நீளம் 3-8 அடியாகவும் உடலின் நிறை, 7-12 இறாத்தலாகவும் இருக்கும்.

### காணப்படும் உயரிய குணங்கள்:

பறவைகள் பறக்கும் ஆற்றல் உள்ளவை என்பதுதான் எமது கருத்து. ஆனால் உயரப் பறக்கும் ஆற்றல் கழுகுகளுக்கு இருப்பதை எண்ணும்போது எல்லோரும் இதனை ஓர் வியப்பாகவே கருதுகின்றனர். இதுமட்டுமல்ல, பல முக்கிய குணாம்சங்களும் இவற்றுள் காணப்படுவது, மேலும் பரவசமாகவே இருக்கின்றன. கழுகுகள் தனியனாக உயரத்தில் பறப்பதைப் பார்த்திருக்கின்றோம். இதுபோல வேறு பறவைகள் கூடிய உயரத்தில் பறக்க முடியாது. கழுகுகள், கூட்டமாக பறப்பதானால் தமது இனங்களுடன் மட்டும் சேர்ந்து பறக்கின்றன. இவற்றிற்கு கூர்மையான கண்பார்வை இருப்பதால் ஐந்து கிலோ மீறறர் தூரத்திற்கும் மேலாக தனது பார்வையினைச் செலுத்தி தனது இரையைப் பிடிக்க முயலும்போது சாதுரியமான முறையில் இரையை தன் பக்கம் சேர்த்துவிடும். இதனை நாங்கள் எமது வீடுகளிலும் கவனித்து பார்த்திருக்கின்றோம். சிறிய கோழிக்குஞ்சுகளை எப்படி கீழ் நோக்கி வந்து பிடிக்கின்றது. இன்னொரு நல்ல குணம் இவற்றிற்கு உண்டு. அழுகிய உணவுகளையோ அல்லது இறந்த உயரினங்களையோ விலக்கி, புதிதான நல்ல



இரையினையே தெரிவுசெய்து உண்கின்றன.

வளிமண்டலத்தில் புயல் காற்று உள்ள வேளைகளிலும் ஆபத்தான காலநிலைகளிலும் நன்கு விரும்பியவாறே தன்னை தயார் செய்துகொண்டு உயரத்திலும் முகில் கூட்டங்களுக்கூடாகவும் பறக்கின்றன. இவ்வேளை, இவை சிறகுகளை நன்கு விரித்து காற்றில் மிதந்து பறப்பதற்கும் இதோடு தனது களைப்பினை போக்கி இளைப்பாறுவதற்கும் பறந்து செல்கின்றன. ஏனைய பறவைகள் இச்சமயங்களில் ஒதுங்கி மரக்கிளைகளில் மட்டும் ஒளித்திருப்பதையே நாம் காணலாம்.

ஆண் பெண் கழுகுகளின் பொறுப்புணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் சில அம்சங்களை நாம் பார்க்கக் கூடியதாயிருக்கின்றன. பெண்கழுகு, ஆண்கழுகு ஒன்றினோடு உறவு சேரும்போது இருவரும் சேர்ந்து தரையை அடைந்து சிறு தடிகளை பெண் கழுகு சேகரித்து பின்னர் இருவரும் உயரமாகப் பறக்கின்றன. இடையில் தடிகளைக் கீழே போடுவது அவதானிக்கப்படுகின்றது. அப்போது ஆண்கழுகு வேகமாக கீழ்சென்று எடுத்து பெண்கழுகிடம் இதனை சேர்த்துவிடும். இதுபோல பல முறை மீண்டும் செய்கின்றது. பலமுறை பரீட்சை நடைபெறுகின்றது. இதனால், ஆண்கழுகிடம் காணப்படுகின்ற பொறுப்புணர்ச்சியினை பெண் கழுகானது நன்கு அறிந்து கொண்டபின்னர்தான் இவற்றிற்கிடையே உறவு ஏற்படுகின்றது.

### இனவிருத்தி காலம்:

அநேகமான கழுகுகள் ஐந்து வயதை அடைந்ததும் இனப்பெருக்கத்தில் ஈடுபடுகின்றன. உயரமான மரங்களிலும் மலை உச்சிகளிலும் தங்கும் வேளைகளில் கலவியலுக்குரிய சில செயற்பாடுகள் ஆரம்பமாகின்றன. இவை பெரும்பாலும், இணைகின்ற சோடிகளுக்கிடையே நடைபெறும். பரந்த வெளியில் பறந்த நிலையில் ஒன்றையொன்று கலைப்பது, சுழலுவது, குத்துக்கரணம் போடுவது, அலகுகளால் ஒன்றையொன்று உரோஞ்சுவது வேடிக்கைகளாக இருக்கின்றன. கழுகானது வாழ்க்கையில் ஒரே சோடியாக மட்டும் இருப்பது வழமை. சோடியில் ஒன்று இறந்தவேளைகளில் சேர்ந்த கூட்டத்திலுள்ள இன்னொன்றை மட்டும் சோடியாக தெரிகின்றது. மரக்கிளைகளில் கூடுகட்டுவதை அவதானிக்கலாம். முட்டை இடுவதற்கு தயாரானதும் ஆண் பெண் கழுகுகள் மலை உச்சியினை அல்லது மலைச்சாரலை, ஏனைய பிராணிகள் வராதவகையில் தேர்வு செய்கின்றன. ஆண் கழுகு, நீளமான மெல்லிய தடிகள் அல்லது முட்கள் சேகரித்து கூட்டிற்கு வெளியான அமைப்பை ஏற்படுத்தும். கூட்டின் நடுப்பகுதியினை காய்ந்த களைகள், புல் பூண்டுகள், அல்லது மிருதுவான பொருட்களினால் நிரப்பும். பின்னர், முட்டைகள் இடுகின்ற பகுதியினை மட்டும் இறந்த பூஞ்சணங்கள், மென்மையான இறகுகள் கொண்டு பதுமைப்படுத்தும். சூழலில் ஏற்படும் விளைவுகளை தவிர்ப்பதற்காகவே இத்தகைய பாதுகாப்பினை பறவையானது எடுக்கின்றது. வெளியே உபயோகிக்கும் முட்கள் ஆபத்து இல்லாது எதுவும் வராமல் தடுப்பதற்கு முடிகின்றது. ஒருமுறை இரண்டு முட்டைகள் மட்டும் இடும். முட்டையிடும் காலம் 20வருடங்களாய் இருப்பின் 40முட்டைகள் மட்டும் அடைகாப்பதற்கு கிடைக்கும். பெண்கழுகு முட்டையிட்டு அடைகாக்க, ஆண்கழுகு இரை தேடுவதற்காக வேட்டையாடும். முட்டைகள் 5-6 கிழமைகளில் பொரிக்கின்றன. பொரித்ததும், குஞ்சுகளை சிறிது சிறிதாக வெளியே போவதற்கு பயிற்சி அளிக்கப்படும். பெண்கழுகு குஞ்சுகளை கூட்டிலிருந்து வெளியே எடுத்து விடும். குஞ்சுகள் இறக்கை அடித்து பறக்கும்வரை குடும்பமாக இரு பறவைகளும் கவனம் செலுத்துகின்றது. கழுகுகள் வாழ்கின்ற காலம் ஏறக்குறைய 20-30 வருடங்கள். ஒருசில மட்டும் 50 வருடங்கள் வாழ்ந்திருக்கின்றன. ஒரு கழுகு வயதாகிய நிலையில் இறக்கை பலவீனமாகி பறக்க முடியாத வேளையில் அதாவது சாகும் அளவிற்கு கஸ்டப்படும் காலத்திலே ஓய்வு எடுப்பதற்காக மலையுச்சியினை அடைந்து சென்றுவிடும். இங்கிருந்து உடலிலுள்ள இறகுகள் மொட்டையாக வரும்வரை நீக்கிவிடும். மறைவான இந்த இடத்தில் புதிய இறகுகள் முளைக்கும்வரை தங்கியிருந்து, பின்னரே வெளியே வந்து வாழ்கின்றது.

### அடையாள சின்னங்கள்:


1782ம்ஆண்டுகளில் பழமையான காலப்பகுதி, ஓர் இனத்தின் வலுமைக்கும் சுதந்திரத்திற்கும் அடையாளமாகக் கருதி, கழுகினை அமெரிக்க இராச்சியத்தின் அடையாளச் சின்னமாக பிரகடனப்படுத்தியிருக்கின்றனர். இது மட்டுமல்ல, ஏனைய பல நாடுகளும் இதற்குச் சான்றாக மதிப்புக் கொடுத்தனர். 1975-1933 காலப்பகுதிகளில் கழுகுச் சின்னத்தோடு 10 டொலர் நாணயக்குத்திகள் அடிக்கப்பட்டன. சில வருடங்களில் நாணயங்கள் அடிக்கப்படவில்லை. இதுபற்றிய விபரங்கள் தெளிவாகவும் கிடைக்கவில்லை. பல பிரபல்லியமான எழுத்தாளர்கள் கழுகினை ஓர் அன்பின் சின்னமாகக் கருதி விபரித்திருக்கின்றனர். இதனது சிறப்பான பண்பினை மனதில் கொண்டு அலங்காரப் பொருட்களாக இதனது படங்களையோ அல்லது இதன் உடல் அமைப்பின் உருவங்களையோ அல்லது உடலின் இதர பகுதிகளை அழகு படுத்தி வைத்தோ மதிப்பு கொடுத்தனர்.

சென்னையிலுள்ள காஞ்சிமாவட்டத்தில் திருக்கழுக்குன்றம் எனும் பட்டணம் காணப்படுகின்றது. இங்கு, சிவனுக்குரிய வேடாகிரீஸ்வரர் எனும் புனிதமான கோயில் முக்கியமாக அமைந்திருக்கிறது. பொதுவாக எந்த வேளையிலும் ஜனக்கூட்டமாகவே காணப்படும் இடம். திருக்கழுக்குன்றம் என்ற பெயர் ‘கழுகு’ என்ற சொல்லின் திரிபினாலே அமைந்திருக்கின்றது. புராண வரலாற்றின் பிரகாரம் ஆதிகாலம் தொட்டு, மதிய வேளையில் இரு கழுகுகள் இச்சிவன் கோவில் மேலாக பறந்துவந்து அருகேயிருக்கும் மலைக் குன்றத்தில் இறங்குவதும் அக்கோயில் அர்ச்சகர் அவற்றிற்கு தினமும் உணவு வழங்குவதும் நிகழ்வாகவே அமைந்து வந்தது. வரலாற்றின்படி இவ்விரு கழுகுகளும் முற்பிறப்பின் சாபத்தினால் பறவைகளாக வாழ்வெடுத்தன என்பதாகும். இக் கழுகுகள் தற்போது, நடைபெறும் கலியுககால யுகத்தினால் காணப்படுவதில்லை என்பது தெரியவருகின்றது. மனிதனில் காணப்படாத அநேக குணாதிசயங்கள் கழுகுகளில் காணப்படுவதால், இவை அற்புதமான பறவைகள் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர்.

***உசாத்துணை:***

- *Eagle of North America. Johnsgard , P.A 1990.*
- *‘Birds of Prey’. Facts of File, New York*
- *The World Book Encyclopedia. E 6*

*sekari.s@thaiveedu.com*







# WE PROVIDE
MORTGAGE SOLUTIONS
FOR EVERYONE!

- Purchase
- Refinance
- Pre Approvals
- Self Employed
- Debt Consolidation
- New Immigrant
- Equity Lines of Credit
- 1st, 2nd, 3rd Mortgages.

MORTGAGE ALLIANCE

Call Now : 416-505 7333

Visit us at www.lenderhub.ca

LOW RATES STARTS AT
2.79 FOR 5 YEAR FIXED &
2.35 FOR 5 YEAR VARIABLE



Piraba Ratnam
Mortgage Agent / Mortgage Alliance
LIC # M13001215
10 Milner Business Court, Suite 401
Toronto, Ontario, M1B 3C6

We have solutions for everyone!

10 Milner Business Court, Suite 401
Scarborough, ON M1B 3C6

# CUSTOM BUILD HOME

**Your Personalized Custom Build Home**
**Starting From $139 / sq ft**

**Quality ! Price !! Peace of Mind !!!**

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு



அனுபவம் நிறைந்த,
நாணயமான,
தரமான கட்டிட
நிபுணர்கள்

**TAMB CANADA** (647) 877-8262 (TAMB)

# வரிகளைப் பற்றிய சிந்தனை வரும்போது குடும்பம் முக்கியமாகும்!

உங்களுக்கு ஒரு குடும்பம் இருந்தால், உங்களுடைய வருமான வரி மற்றும் நலன் படிவத்தை சமர்ப்பிப்பதற்கான நேரத்தைத் திட்டமிடுவது உங்களுக்கு மிகவும் சிரமமானதாக இருக்கலாம். குடும்பங்களுக்குக் கிடைக்கப்பெறும் பல ஆதாயங்களையும் பலன்களையும் சுலபமாகக் கோருவதற்கு Canada Revenue Agency (CRA) வழங்குகின்ற மின்னனுச் சேவைகள் வசதியைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த வருமான வரி படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற காலத்தை நிம்மதியுடன் கழியுங்கள் (மேலும், சிறிது பணத்தையும் மிச்சம் பிடியுங்கள்).

CRA-வின் பாதுகாப்பான என் கணக்கு (My Account) சேவைக்காகப் பதிவுசெய்து கொள்வதன் மூலம், உடனடியாக வருமான வரியைச் சமர்ப்பிக்கத் துவங்குங்கள் இது உங்கள் வரி மற்றும் நலன் தொடர்பான தகவல்களை நிர்வகிப்பதற்கான அனைத்தும் உள்ளடங்கிய ஒரு சேவையாகும். நீங்கள் 'என் கணக்கு' சேவையைப் பயன்படுத்தி உங்கள் வருமான வரி படிவத்தின் நிலைமையைப் பின்தொடரலாம், உங்கள் முகவரியை மாற்றலாம், உங்கள் RRSP மற்றும் TFSA வரம்புகளைச் சரிபார்க்கலாம், ஆன்லைன் (online) அஞ்சல் சேவைக்காகப் பதிவுசெய்துகொள்ளலாம், வருமானச் சான்றை அச்சிட்டுக்கொள்ளலாம் மற்றும் இன்னும் பலவற்றை சுட்டியின் (mouse) ஒருசில சொடுக்கிகளிலேயே மேற்கொள்ளலாம். நீங்கள் ஆன்லைன் (online) அஞ்சல் சேவைக்காகப் பதிவுசெய்து கொண்டால், மேற்கொண்டு உங்களுக்குக் கடிதங்களை அச்சிட்டு, அஞ்சலில் அனுப்பிவைக்க மாட்டோம். அதற்குப் பதிலாக, நாங்கள் உங்களுக்கு ஒரு மின்னஞ்சலை அனுப்பி வைப்போம். அதை நீங்கள் 'என் கணக்கு'ல் காணலாம்.

இரவில் குடும்பத்தினருடன் விளையாடி மகிழும் நேரத்தில், உங்களுடைய வருமான வரிபடிவச் சமர்ப்பித்தல் குறுக்கிட அனுமதிக்காதீர்கள். இந்த ஆண்டு முதல், உங்களுடைய வருமான வரி படிவத்தை நீங்கள் ஆன்லைனில் (online) சமர்ப்பிக்கிறீர்கள் எனில், CRA'வின் Auto-fill my return எனும் சேவையைப் பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் நேரத்தைச் சேமிக்கலாம். இது, சில சான்றுபெற்ற வரி தயாரிப்பு மென்பொருட்களின் மூலம் கிடைக்கிறது. இந்தப் பாதுகாப்பான சேவை, உங்கள் வருமான வரி மற்றும் நலன் படிவத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளைத் தன்னியக்கமாகப் பூர்த்தி செய்கிறது. 'Auto-fill my return' வசதியைப் பயன்படுத்துவதற்கு, நீங்கள் 'என் கணக்கு' சேவைக்காக உங்களுடைய பதிவை முழுமையாக நிறைவு செய்ய வேண்டியது கட்டாயமாகும். மேலதிகத் தகவல்களுக்கு, www.cra.gc.ca/getready என்ற இணையத்தளத்துக்குச் செல்லவும். இலவசமாக கிடைக்கக்கூடிய சில மென்பொருள்களை உள்ளடக்கிய, சான்றுபெற்ற மென்பொருள் பொதிகளின் பட்டியலுக்கு www.cra.gc.ca/netfilesoftware என்ற இணையத்தளத்துக்குச் செல்லவும்.

மாசி 15, 2016 முதல் நீங்கள் உங்களுடைய வருமான வரி அறிக்கையை ஆன்லைனில் (online) சமர்ப்பிக்கலாம். மேலும் உங்களுக்கு பணம் திரும்பப் பெற வேண்டியிருந்தால், மற்றும் அதை நேரடியாக உங்களுடைய வங்கிக் கணக்கில் செலுத்தப்படுவதற்குத் தேர்வு செய்திருந்தால், எட்டு வேலை நாட்களுக்குள் நீங்கள் அதை உங்களுடைய வங்கிக் கணக்கில் காண முடியும்! நேரடிச் செலுத்துதல் என்பது உங்கள் வருமான வரி பணமீட்பையும், உங்கள் வரவு மற்றும் நலன் பணமளிப்புகளையும் கனடாவிலுள்ள ஒரு நிதி நிறுவனத்தில் இருக்கிற உங்கள் கணக்கிற்கு நேரடியாகப் பெறுவதற்கான வேகமான, சௌகரியமான, நம்பகமான மற்றும் பாதுகாப்பான ஒரு வழியாகும். இன்னும் ஏன் காத்திருக்கிறீர்கள்? நேரடிச் செலுத்துதலுக்கு இன்றே புகுபதிகை செய்திடுங்கள்.




மேலும், 18 வயதிற்குட்பட்ட பிள்ளைகளை வளர்ப்பதற்கு ஆகும் செலவை ஈடுகட்ட உதவும் பலன்களைப் பெறுவதற்கு உங்கள் குடும்பம் விண்ணப்பம் செய்துள்ளதா என்பதை உறுதிசெய்துகொள்ளவும். பிள்ளை மற்றும் குடும்பப் பலன்கள் மற்றும் வரவுகளைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு, www.cra.gc.ca/benefits என்ற இணையத்தளத்துக்குச் செல்லவும். நீங்கள் கனடா குழந்தை மற்றும் குடும்பப் பலன்களைத் தற்சமயம் பெறவில்லை எனில், 'என் கணக்கு' வாயிலாக 'குழந்தை பலன்களுக்காக விண்ணப்பிக்கவும் (Apply for child benefits) சேவையைப் பயன்படுத்தி நீங்கள் ஆன்லைனில் (online) விண்ணப்பம் செய்யலாம்.

2015 வரி ஆண்டுக்காக, family tax cutல் இருந்தும் கூட உங்கள் குடும்பம் நன்மை பெறலாம். 18 வயதிற்குட்பட்ட ஒரு பிள்ளையைக் கொண்டிருக்கும் தகுதிவாய்ந்த தம்பதியினருக்கு, $2,000 வரையிலான திரும்பப் பெற இயலாத ஒரு வரி பலன் கிடைக்கப்பெறுகிறது.

உங்கள் பிள்ளை தொழில்முறையாக ஹாக்கி (hockey) விளையாட வேண்டுமென்றோ, ஸ்னோபோர்ட்டில் (snowboard) சறுக்கி விளையாட வேண்டுமென்றோ அல்லது புகழ்பெற்ற ஒரு பெலே (ballet) நிறுவனத்திற்காக பெலே (ballet)நடனமாட வேண்டுமென்றோ கனவு காண்கிறார் எனில், அவற்றுக்கான கட்டணங்கள் மிகவும் அதிகமாக இருக்கலாம். குழந்தைகளின் உடல் தகுதி வரி பலனைக் (children's fitness tax credit)கோரி பெறுவதற்கு, உங்கள் இரசீதுகளைப் பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் ஒவ்வொரு பிள்ளைக்காகவும் செலுத்திய கட்டணங்களில் $1,000 வரை உங்களால் கோரிப் பெற முடியும். இந்த ஆண்டிலிருந்து, குழந்தைகளின் உடல்தகுதி வரி பலனைத் திரும்பப்பெற்றுக்கொள்ளலாம். இதன்மூலம் ஒவ்வொரு பிள்ளைக்கும் $150 வரை சேமிப்பதற்கு வாய்ப்புள்ளது.

உங்களுடைய குழந்தை வளர்ந்துவரும் கலைஞர் அல்லது இசைக்கலைஞரா? உங்களுடைய குழந்தை அவனுடைய அல்லது அவளுடைய வளர்ச்சிக்கு பங்களிக்கக்கூடிய திட்டங்களில் கலந்து கொண்டால், வரி சமயத்தில் நீங்கள் அதற்கான விலக்கு பெற தகுதியுடையவராவீர்கள். பயிற்சியும் கூட பலன் பெறுவதற்குத் தகுதியுடையதாகும். குழந்தைகளின் கலை வரி பலன் (children's arts tax credit) என்பது ஒவ்வொரு குழந்தைக்கும் $75 வரையிலான, திரும்பப் பெற இயலாத வரி பலன் ஆகும். திரும்பப் பெற இயலாத வரி பலன்கள் உங்களுடைய ஃபெடரல் வரியைக் (federal tax)குறைக்கிறது. உங்களுடைய திரும்பப் பெற இயலாத வரி பலன்களின் ஆக மொத்தத்தொகை உங்களுடைய ஃபெடரல் வரியைக் (federal tax)காட்டிலும் அதிகமாக இருந்தால், அத்தகைய வேறுபாட்டிற்காக நீங்கள் பணமீட்பைப் பெற மாட்டீர்கள்.

வரிச் சேமிப்புகளை இங்கே இழந்துவிடாதீர்கள்! நடைமுறை வருமான வரி சலுகை (working income tax benefit), குழந்தைப் பராமரிப்புச் செலவுகள், குடும்ப பராமரிப்பு வழங்குனர் தொகை மற்றும் குழந்தை உடற்குறை நன்மை ஆகியவற்றையும் கூட உங்கள் குடும்பத்தால் கோரிப் பெற முடியும். மேலும், நீங்கள் முதல் முறையாக ஒரு வீடு வாங்குகிறீர்கள் எனில், முதல் முறையாக வீடு வாங்குபவர்களுக்கான தொகையைக் கோரிப் பெறுவதற்கு நீங்கள் தகுதிபெறலாம் இது, தகுதிபெறும் வீடு ஒன்றை வாங்குவதற்கு $750 வரையிலான திரும்ப பெற இயலாத ஒரு வரி பலனாகும்.

2015க்கான கனடிய வருமான வரி மற்றும் நலன் படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி திகதி சித்திரை 30, 2016 ஆகும். எனினும், இத் திகதி சனிக்கிழமை என்பதால், வைகாசி 2, 2016க்குள் உங்கள் வருமான வரி படிவம் சமர்ப்பிக்கப்பட்டால் அல்லது அஞ்சல் வழி பெறப்பட்டால், அது குறித்த நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், குறித்த நேரத்தில் உங்கள் பணமளிப்பு செய்யப்பட்டதாகவும் CRA கருதும். சுயதொழில் செய்யும் தனிநபர்கள் மற்றும் அவர்களின் துணைவர்கள் அல்லது கூடிவாழும் துணைவர்கள் தங்களுடைய வருமான வரி மற்றும் நலன் அறிக்கைகளை ஆனி 15, 2016 க்குள் சமர்ப்பிக்க வேண்டும், ஆனால் ஏதேனும் வரி செலுத்த வேண்டியிருந்தால் அதை வைகாசி 2, 2016 க்குள் செலுத்திவிட வேண்டும்.

உங்களுடைய வரி அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு வீடியோக்கள் மற்றும் வெபினர்கள் (webinars) என்பன போன்ற உதவிகரமான ஆன்லைன் (online) கருவிகளைப் பயன்படுத்தி, இதுவரை இல்லாத அளவுக்கு எளிமையாக உங்களுடைய வருமான வரி மற்றும் பலன் அறிக்கையைப் பூர்த்தி செய்வதன் அடிப்படைகள் குறித்து CRA உங்களுக்கு விளக்கமளிக்கும். உங்களுடைய வருமான வரி படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கு உங்களுக்கு உதவி தேவைப்படுகிறது மற்றும் நீங்கள் குறைந்த அளவே வருமானம் ஈட்டுகிறீர்கள் மற்றும் ஒரு எளிய வரிச் சூழ்நிலையைக் கொண்டிருக்கிறீர்கள் எனில், நீங்கள் சமூகத் தொண்டர் வருமானவரி திட்டத்தை (Community Volunteer Income Tax Program) பயன்படுத்திக்கொள்ளலாம். இதில் சமூக அமைப்புகள் இலவச தொண்டர் வரி மையங்களை நாடு முழுவதும் நடத்துகின்றன. உங்களுக்கு அருகாமையில் உள்ள தொண்டர் வரி தயாரிப்பு மையத்தைக் (Volunteer Tax Preparation Clinic) கண்டறிய, www.cra.gc.ca/volunteer என்ற இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

வரி செலுத்துவதற்கான காலம் நெருங்குகிறது என்பதால், அடையாளம் அல்லது நிதிசார்ந்த திருட்டுக்கு வழிவகுக்க கூடிய ஏமாற்றுதல் (phishing) scam அல்லது பிற மோசடிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்கவும். ஒரு இணைப்பைக் கொண்ட மின்னஞ்சலை அனுப்புவது, மின்னஞ்சல் அல்லது உரைச் செய்தியின் வாயிலாக ஏதேனும் வகையான தனிப்பட்ட அல்லது நிதிசார்ந்த தகவல்களைக் கேட்பது அல்லது ப்ரீபெய்டு (prepaid) கடன் அட்டையைக் கொண்டு பணமளிப்புகளுக்காகக் கோருவது ஆகியவற்றை CRA ஒருபோதும் மேற்கொள்ளாது. தற்போது நடைபெற்று வரும் மோசடிகளின் உதாரணங்களையும், அவற்றை எவ்வாறு கண்டறிந்து தவிர்க்கலாம் என்பது குறித்த தகவல்களையும் அறிய, www.cra.gc.ca/fraudprevention என்ற இணையத்தளத்திற்குச் செல்லுங்கள். நீங்கள் CRA-க்கு வரி செலுத்த வேண்டியுள்ளது என்று கூறுகின்ற ஒரு அழைப்பை நீங்கள் பெற்றால், அதை உறுதிசெய்துகொள்வதற்கு நீங்கள் இந்த இணையத்தளத்தில் உள்ள' என் கணக்கு (My Account)'ல் சரிபார்க்கலாம்.

இந்த வரி செலுத்தும் காலத்தில் உங்களுக்கு வழிகாட்டுவதற்கு நிறைய விருப்பத் தேர்வுகள் இருப்பதால், தாமதத்துக்கான மன்னிப்பு உங்களுக்கு வழங்க முடியாது. உங்களுடைய வரி அறிக்கையைச் சமர்ப்பிக்கத் தொடங்குவதற்கு, www.cra.gc.ca/getready என்ற இணையத்தளத்துக்குச் செல்லவும்.

மேலும், Twitter-ல் @CanRevAgency வாயிலாக பின்தொடர்வதன் மூலம் சமீபத்திய CRA செய்திகள் அல்லது வரி உதவிக் குறிப்புகளை நீங்கள் உடனடியாகத் தெரிந்துகொள்ள முடியும்.

*நன்றி: Canada Revenue Agency*

■ ■ ■

# iNFORCE LIFe Financial Services Inc.

# வண்ணம் தீட்டும் போட்டி

# COLOURING CONTEST



**Ends April 18, 2016**

## March 2016 Winners

**First Prize Winner**
Qhueenu Gopalaratnam




**Second Prize Winner**
Harini Arooran



**Third Prize Winner**
Saiharshita Ranganathan





*Full Name: ____________________

*Age: __________ *Tel: ____________________

*Address: ____________________

*Email: ____________________

*Parent/Guardian Name: ____________________

*Parent/Guardian Signature: ____________________

*Please fill all the details in order to enter the contest. Incomplete entries may not be judged.

Cut this page and mail it on or before April 18, 2016 to enter the competition.

**iNFORCE LIFe Financial Services Inc.**

10 Milner Business Court, Suite 707
Scarborough ON M1B 3C6

For More Details:

**Bus: 416 321 6000**

**Direct: 416 909 0400**

**www.inforcelife.com**

For kids up to 14 years old only.
Submit the entry by mail or in person.

**First Prize** Win Amazing Prizes!

**Second Prize** Win Amazing Prizes!

**Third Prize** Win Amazing Prizes!

**Terms and conditions:** By entering the Contest, all entrants agree to be bound by the rules of the contest and release INFORCE LIFe Financial Inc. and all parties associated with this Contest from any liability with respect to the contest and the redemption of any Prize. Contest Organizers reserve the right to withhold the Prize and disqualify any Contestant's entry in the event that any Contestant fail or refuse to comply with these contest rules. By entering this contest, Contestants and their legal parent(s) or guardian(s) consent to the Contest Organizers publishing or announcing any Prize winners' name and photograph(s), in future publicity, without permission. All entries become the property of the Contest Organizers and none will be returned. decision made by the Judges are final. INFORCE LIFe Financial Inc. and their affiliates family cannot participate in the competition. INFORCE LIFe Finacial Inc. and their affiliates family members cannot participate in the competition.

printfast.ca


www.AjaxNSDental.com
Open
7DAYS
Mon-Sat : 9-8
Sun : 9-5
Join
OUR TEAM
IT'S FUN TO BE PART OF US!
AJAX
NS DENTAL
Care, Comfort, Convenience, Confidence...
1801 Harwood Avenue N
Suite 18 | Ajax ON | L1T 0K8
905 426 2222
905 426 2225
dmalini@ajaxnsdental.com
Dental Hygienist
Inventory Controllers
Dental Assistants
Customer Care Representatives
Careers @ AjaxNSDental.com
Treatment Coordinators
CRM Administrators
IT Administrators



CORPORATE & COMMERCIAL
FINANCING
வீடு கட்டுவதற்கான கடன்
Bridge Financing
நிலம் கொள்முதல் கடன்
Mezzanine Capital Loan
வணிக உபகரண கடன்
Truck & Trailer Loan
வியாபாரக் கடன்
Equity Take Out
சுயவர்த்தக அடமான கடன்
Hotel, Motel, Building
அழையுங்கள்:
PRABA NAMASI (A.I.C.B)
416 645 3027
O/A 6401473 Canada Inc,
Broker NO: 11108, Agent No: M15000851




Are you planning to
sell or buy in the near future?
Do you want to know
how much your property is worth?
VEEDU
REALTY INC.
BROKERAGE
Negotiable commission will save you thousands!
CALL ME FIRST
Sri Sivasubramaniam
Sales Representative
416.884.3991
Offce: 416-759-6000
Fax: 416-759-6005
ssriskand@gmail.com
www.sriveedu.com
Your interest is my capital
1345 Morningside Ave., Unit # 9, Toronto, M1B 5K3




TD Canada Trust
Call Me First and Say "YES" to The Home Of Your Dreams!
For all your Mortgage needs
Purchase, Pre-Approvals, Refinances, Renewals and Switch,
Builder Purchase, Home Line Of Credit, Self Employed,
New Immigrants, Multi Rental Properties.
Peter Sober
Manager, Mortgage Specialist
Platinum Sales Award
Dir: 416-275-3571
Pager: 1-866-767-5446
Fax: 905-240-3882
Email: peter.sober@td.com
சகல Mortgage தேவைகளுக்கும்
தமிழில் உரையாட என்னை அழையுங்கள்
Your Smile Is My Best Return!
Four TD Branch Locations to serve you better
Scarborough: 2650 Lawrence Avenue East, Scarborough, ON, M1P 2S1 | Markham: 80 Copper Creek Drive, Markham, ON, L6B 0P2
Brampton: 8125 Dixie Road, Brampton, ON, L6T 2J9 | Pickering: 1790 Liverpool Road, Pickering, ON, L1V 1V9



# TIME FOR SOLUTIONS

## Make your house work for you!

Consolidate your high interest rate debts into your mortgage prior to renewal time for a better cash flow.

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | 320,000 @ 5.4% | 1,934.67 | - |
| Car Loan | 21,000 @7.5% | 764.25 | 0.00 |
| Line of Credit | 16,000 @ 6.5% | 566.67 | 0.00 |
| Line of Credit 2 | 12,500 @ 7% | 447.92 | 0.00 |
| Credit Card 1 | 8,800 @ 12% | 352.00 | 0.00 |
| Credit Card 2 | 5,200 @ 19% | 238.34 | 0.00 |
| Store Card | 3,000 @ 24% | 150.00 | 0.00 |
| New Mortgage payment | 386,500 @ 2.8% | | 1,584.80 |
| Total Dept | | 386,500.00 | 386,500.00 |
| Total Payment | | **4,450.85** | **1,584.80** |

Based on this scenario,

YOU CAN SAVE

**$2,866.05**

Monthly

-digi Media Creations-

BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216

TD Canada Trust  Scotiabank
Street Capital Financial Corporation  First National Financial LP
MCAP  National Bank of Canada  Merix

**Suren Nathan** AMP
Mortgage Broker
License# M08004479

Dir. **416-436-1111**

Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8



## உங்களுக்குத் தெரியுமா?

# வரிகள், உங்கள் புதிய வாழ்க்கையை முதலீடு செய்ய உதவுகின்றன!

கனடா உலகில் இரண்டாவது பெரிய நாடு மற்றும் இது நீர்நாய்கள் (beaver), Royal Canadian Mounted Police, மேப்பிள் பானம் மற்றும் பவுட்டின் (poutine) என்றழைக்கப்படுகின்ற ஃபிரெஞ்சு-கனடியன் அருஞ்சுவைப் பொருள் ஆகியவற்றின் பிறப்பிடம் என்பதை நீங்கள் ஏற்கெனவே அறிந்திருப்பீர்கள். மன்னிக்கவும், இப்பட்டியலில் பனிச்சறுக்கு ஹாக்கியைச் (hockey) சேர்க்க மறந்துவிட்டோம். கனடியர்கள் அதிகப்படியாக 'மன்னிக்கவும்' என்ற வார்த்தையைக் கூறும் பழக்கத்தைக் கொண்டிருப்பதை நீங்கள் அநேகமாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள்! மொத்தத்தில், கனடா ஓர் சிறந்த, பல்வகைப்பட்ட நாடாக இருப்பதோடு, இங்கு வரும் பெரும்பாலானோர் இதை தமது வீடு என்றே அழைக்கின்ற தனித்துவத்தையும் அது கொண்டிருக்கின்றது.

கனடாவிலுள்ள உயர்தர வாழ்க்கை என்பது நன்கு பராமரிக்கப்பட்ட சாலைகள், பொதுப் போக்குவரத்து, பொதுப் பயனுடைமை, பள்ளிகள், பணிக்காப்பீடு, ஓய்வூதியத் திட்டம், நலப் பராமரிப்பு போன்ற எங்கள் சமூகச் செயல்திட்டங்கள் மற்றும் சேவைகளின் விளைவாகும். கனடியர்களும், வசிப்பவர்களும், தங்கள் வருமானத்தின் பேரில் தாங்கள் செலுத்துகிற வரிகள் வாயிலாக ஆதரவளிக்கின்ற இச்செயல்திட்டங்களை ஓரேமாதிரியாக முழுமையாய் பயன்படுத்திக்கொள்ளலாம். கனடாவில் வசிப்பவர் எனும் முறையில், குறிப்பிட்ட சில பலன்களைப் பெறுவதற்கு நீங்கள் தகுதிபெறக்கூடும், ஆனால் உங்கள் வருமானத்தைத் தெரிவிப்பதற்கும் வரிகளுக்கான உங்கள் நியாயமான பங்கைச் செலுத்துவதற்கும் உங்களுக்குப் பொறுப்புள்ளது. கனடாவின் வரி அமைப்பின் கீழுள்ள உங்கள் உரிமைகள், தகுதிகள் மற்றும் கடமைகள் என்ன என்பதை நீங்கள் புரிந்துகொள்வது முக்கியமாகும்.

இந்த அமைப்பு எப்படி இயங்குகிறது? முதலில், நீங்கள் வரி செலுத்த வேண்டியுள்ளதா மற்றும் எவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்பதைக் கண்டறிவதற்கான பொறுப்பு உங்களுக்கு உள்ளது. நீங்கள் வருமான வரி மற்றும் நலன் படிவம் என்றழைக்கப்படும் ஒரு படிவத்தைப் பூர்த்தி செய்து, அதை Canada Revenue Agency (CRA)-க்கு ஒவ்வொரு ஆண்டும் அனுப்பிவைக்க வேண்டியிருக்கும் என்று இதற்கு அர்த்தமாகும். நீங்கள் எவ்வளவு வரி செலுத்த வேண்டும் அல்லது நீங்கள் ஏற்கெனவே செலுத்தியுள்ள வரிகளில் ஏதேனும் பணமீட்டைப் பெற இயலுமா என்பதை நீங்கள் இப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் வேளையில் உங்களுக்குத் தெரியவரும்.

நீங்கள் கனடாவில் வசிப்பவர் எனில், நீங்கள் கட்டாயம் வருமான வரி செலுத்த வேண்டும். பெரும்பாலான நிகழ்வுகளில், நீங்கள் கனடாவிற்கு வந்து சேர்ந்து, இங்கு ஒரு வீட்டை வாங்குதல் மற்றும் ஒரு துணைவரை ஏற்படுத்திக்கொள்ளுதல் போன்ற ஒரு இணைப்பை ஏற்படுத்திக்கொண்ட திகதியன்று நீங்கள் கனடாவின் குடியிருப்பாளராக மாறுகிறீர்கள். நீங்கள் கனடாவில் வசிப்பவர் எனில், நீங்கள் ஈட்டும் அனைத்து வருமானத்திற்கும், அவை கனடாவிற்கு வெளியே ஈட்டியதாக இருந்தாலும் கூட, நீங்கள் வரி செலுத்த வேண்டும்.

நீங்கள் வருமானம் எதையும் ஈட்டவில்லை என்றாலும் கூட, நீங்கள் வருமான வரி மற்றும் நலன் படிவத்தை ஒவ்வொரு ஆண்டும் பூர்த்திசெய்து அனுப்பிவைக்க வேண்டும். நீங்கள் ஒரு வருமான வரி படிவத்தை அனுப்பும் போது, அதை Canada Revenue Agency மீளாய்வு செய்து, நீங்கள் செலுத்தியுள்ள பொருள் மற்றும் சேவைவரி (Goods and Services Tax) அல்லது ஒத்திசைவு விற்பனை வரிக்கான (Harmonized Sales Tax) வரவு போன்ற ஏதேனும் நன்மைகளை நீங்கள் பெற இயலுமா என்பதை உங்களுக்குத் தெரிவிக்கும்.

2015-க்கான கனடியர் வருமான வரி மற்றும் நலன் படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி திகதி சித்திரை 30, 2016 ஆகும். எனினும், இத் திகதி சனிக்கிழமை என்பதால், வைகாசி 2, 2016-க்குள் உங்கள் வருமான வரி படிவம் சமர்ப்பிக்கப்பட்டால் அல்லது அஞ்சல் வழி பெறப்பட்டால், அது குறித்த நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், குறித்த நேரத்தில் உங்கள் பணமளிப்பு செய்யப்பட்டதாகவும் CRA கருதும். சுயதொழில் செய்யும் தனிநபர்கள் மற்றும் அவர்களின் துணைவர்கள் அல்லது கூடிவாழும் துணைவர்கள் தங்களுடைய வருமான வரி மற்றும் நலன் அறிக்கைகளை ஆனி 15, 2016 க்குள் சமர்ப்பிக்க வேண்டும், ஆனால் ஏதேனும் வரி செலுத்த வேண்டியிருந்தால் அதை வைகாசி 2, 2016க்குள் செலுத்திவிட வேண்டும். நீங்கள் 2015ல் ஈட்டியுள்ள ஏதேனும் வருமானத்தைத் தெரிவிப்பதற்கு அல்லது GST/HST வரவு போன்ற வரவுகளைப் பெறுவதற்கு, நீங்கள் இக்காலக்கெடுவிற்குள் உங்கள் வருமான வரி படிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டியது அவசியம் என்பதே இதன் அர்த்தமாகும்.

வரிக் கட்டணங்களும் வரவுகளும் ஒவ்வொரு மாகாணத்திற்கும் பிராந்தியத்திற்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை என்பதால், நீங்கள் வசிக்கின்ற மாகாணத்திற்கு அல்லது பிராந்தியத்திற்கு உரிய சரியான படிவங்களை உபயோகிப்பதும் முக்கியமாகும். நீங்கள் எந்தப் படிவத்தை உபயோகிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க, வரி ஆண்டின் மார்கழி 31ம் திகதியில் நீங்கள் வசித்துள்ள மாகாணத்திற்கான அல்லது பிராந்தியத்திற்கான படிவங்களை தேர்வுசெய்திடுங்கள்.

பெரும்பாலான வரிசெலுத்துனர்கள், காகிதத்தில் பூர்த்திசெய்வதைத் தவிர்த்து, தங்கள் வருமான வரிப் படிவத்தை ஆன்லைனில் (online) சமர்ப்பிப்பதைத் தேர்வுசெய்கின்றனர். மேலும், நீங்கள் பணமீட்பு பெறுவதற்கு தகுதியானவராக இருந்து, உங்களுடைய இணையவழி சமர்ப்பித்தலை நேரடி செலுத்துதலுடன் நீங்கள் இணைத்திருந்தால், எட்டு வேலை நாட்களுக்குள்ளாகவே உங்களுடைய பணத்தை உங்களால் பெற முடியும். நீங்கள் நலன் அல்லது வரவு பெறுனராக இருந்தால், உங்கள் பணமளிப்புகளைப் பெறுவதற்கு நேரடிச் செலுத்துதலே அதிவிரைவான வழியாகும். நலன் வரவு நேரடிச் செலுத்துதல் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு, www.cra.gc.ca/directdeposit எனும் இணையதளத்திற்குச் செல்லுங்கள்.

வரி செலுத்துவதற்கான காலம் நெருங்குகிறது என்பதால், அடையாளம் அல்லது நிதிசார்ந்த திருட்டுக்கு வழிவகுக்கக்கூடிய ஏமாற்றுதல் (phishing) scam அல்லது பிற மோசடிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்கவும். ஒரு இணைப்பைக் கொண்ட மின்னஞ்சலை அனுப்புவது, மின்னஞ்சல் அல்லது உரைச் செய்தியின் (text message) வாயிலாக ஏதேனும் வகையான தனிப்பட்ட அல்லது நிதிசார்ந்த தகவல்களைக் கேட்பது அல்லது ப்ரீபெய்டு (prepaid) கடன் அட்டைகளைக் கொண்டு பணளிப்புகளுக்காகக் கோருவது ஆகியவற்றை CRA ஒருபோதும் மேற்கொள்ளாது. தற்போது நடைபெற்று வரும் மோசடிகளின் உதாரணங்களையும், அவற்றை எவ்வாறு கண்டறிந்து தவிர்க்கலாம் என்பது குறித்த தகவல்களையும் அறிய, www.cra.gc.ca/fraudprevention என்ற இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள். நீங்கள் CRA-க்கு வரி செலுத்த வேண்டியுள்ளது என்று கூறுகின்ற ஒரு அழைப்பை நீங்கள் பெற்றால், அதை உறுதிசெய்துகொள்வதற்கு நீங்கள் இந்த இணையத்தளத்தில் உள்ள 'என் கணக்கு (My Account)'ல் சரிபார்க்கலாம்.

வரி தொடர்பான விதிகள் மற்றும் தேவைகளும் புதிய தொகுப்பொன்றிற்கு சரிப்படுத்திக்கொள்வது என்பது வரவேற்கத்தக்கதாக இருக்கலாம். CRA உதவுவதற்குக் காத்திருக்கிறது! அதிக விரிவான தகவல்களைப் பெற, www.cra.gc.ca/newcomers என்ற இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள். 'கனடாவிற்குப் புதிதாய் வருபவர்கள் மற்றும் கனடிய வரி அமைப்பு' எனும் வீடியோ தொடர்களை www.cra.gc.ca/videogallery எனும் இணையதளத்தில் நீங்கள் காணலாம்.

நீங்கள் குறைந்த அளவே வருமானம் ஈட்டுகிறீர்கள் மற்றும் ஒரு எளிய வரிச் சூழ்நிலையைக் கொண்டிருக்கிறீர்கள் எனில், நீங்கள் சமூகத் தொண்டர் வருமான வரி திட்டத்தையும் (Community Volunteer Income Tax Program) பயன்படுத்திக் கொள்ளலாம். இதில் சமூக அமைப்புகள் இலவச தொண்டர் வரி மையங்களை நாடு முழுவதும் நடத்துகின்றன. உங்களுக்கு அருகாமையில் உள்ள தொண்டர் வரி தயாரிப்பு மையத்தைக் (Volunteer Tax Preparation Clinic) கண்டறிய, www.cra.gc.ca/volunteer என்ற இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

இன்னும் கேள்விகள் இருக்கின்றனவா? CRA முகவரைத் தொடர்புகொள்ள 1-800-959-8281 எனும் எண்ணில் அழைத்திடுங்கள், அவர் உங்கள் வரி-தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிப்பார்.

மேலும், Twitter-ல் @CanRevAgency வாயிலாக பின்தொடர்வதன் மூலம் சமீபத்திய CRA செய்திகள் அல்லது வரி உதவிக் குறிப்புகளை நீங்கள் உடனடியாகத் தெரிந்துகொள்ள முடியும்.

*நன்றி: CRA (கனடிய வருமானவரித் திணைக்களம்)*

■ ■ ■

JM ACCOUNTING AND FINANCIAL SOLUTION INC.

YEAR ROUND

TAX AND ACCOUNTING SERVICES

INCOME TAX RETURN STARTING FROM

$14.99 PLUS tax

FOR E- FILE

647-351-5622

1193 A, BRIMLEY ROAD, UNIT 5, SCARBOROUGH, ON, M1P 3G5

# வருமானம் குறைந்த மக்களுக்கான இலவச சட்ட சேவை

ரொறன்ரோ கிழக்குப் பகுதியிலுள்ள மையங்கள், வேலைசெய்யும் வருமானம் குறைந்த மக்களுக்கு இலவசமான சட்ட சேவைகளை அறிமுகம் செய்கின்றன.

ரொறன்ரோ கிழக்குப் பகுதியிலுள்ள ஆறு மையங்கள் ஒன்றிணைந்து, இலவசமான வேலைவாய்ப்பு சட்ட சேவைகளை கிழக்குப் பகுதியிலுள்ள வேலை செய்யும் வருமானம் குறைந்த மக்களுக்காக விஸ்தரிக்கின்றன.

வேலைவாய்ப்புச் சேவைகளில் உள்ள இடைவெளியை நிரப்புவதற்காக, குறைந்த வருமானமுள்ள தனிநபர்களுக்கு இலவசமான சட்ட சேவைகளை வழங்கும் கிழக்குப் பகுதிக்கான வேலைவாய்ப்பு சட்ட செயல்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு ரொறன்ரோ கிழக்குப் பகுதியிலுள்ள ஆறு சட்ட மையங்கள் ஒன்றிணைந்துள்ளன.

சட்டத்தின் கீழ் போதியளவில் சேவையாற்றப்படாத பகுதி, அது என்பதை இனம் கண்டு, ஒவ்வொரு மையத்துக்குள்ளும் இலவசமான சட்டரீதியான சேவைகளை வழங்குவது இந்த முன்னோடிச் செயல் திட்டத்தின் நோக்கமாகும்.

மையங்களின் பரந்துபட்ட அளவிலான சேவைபெறுநர்களை வேலைவாய்ப்புடன் தொடர்பான பிரச்சினைகள் பாதிக்கின்றன. அத்துடன் தேவையுள்ளவர்களுக்கு, தகவல்கள் மற்றும் நேரடியான சேவைபெறுநர் சேவைகளுக்கான அணுகல் வழங்கல் மற்றும் தொழிலாளர்களாக அவர்களின் உரிமைகளை அறிவதற்கும் அவற்றை நிலைநாட்டுவதற்கும் வழிசெய்தல் என்பவற்றை இந்த மையங்கள் இலக்காகக் கொண்டுள்ளன.

“ரொறன்ரோ கிழக்குப் பகுதியிலுள்ள வருமானம் குறைந்த நிலையில் வாழும் அனேகமான மக்கள் பாதிப்புக்குள்ளாகக் கூடியவர்களாகவும் அனுகூலங்களற்ற தொழிலாளர்களாகவும் இருக்கின்றார்கள். அவர்களில் பெரும்பாலானோர், புதிய குடிவரவாளர்கள், பெண்கள், இனவாதத்துக்குட்பட்டவர்கள், குறைந்த வருமானமுள்ளவர்கள் அல்லது பாதுகாப்பற்ற வேலை செய்பவர்களாக இருக்கின்றார்கள்.

இவர்கள் அனேகமான நேரங்களில், ஊதியங்கள், மேலதிக நேர வேலைக்கான சம்பளம் மற்றும் விடுமுறை காலத்துக்கான ஊதியம் போன்ற - தங்களுடைய அடிப்படை உரிமைகளுக்காகப் போராடுவதற்கு, இலவசமான சட்ட உதவியைப் பெற முடியாமல் இந்த தொழிலாளர்கள் இருக்கின்றனர். ‘தங்களுக்கென ஓர் இருப்பிடத்தை வைத்திருப்பதற்கும் வறுமை நிலை மட்டத்மதக் குறைப்பதற்கும் பெரும்பாலான குறைந்த வருமானமுள்ள மக்களுக்கு இலவசமான வேலைவாய்ப்பு சட்ட சேவைகள் முக்கியமாக இருக்கின்றன,” என்கின்றார், இச் செயல் திட்டத்தின் வெளிக்கள மற்றும் சட்ட சீரமைப்பு ஒருங்கிணைப்பாளர், Regini David.

செப்ரெம்பர் 15, 2016 வரை, இந்தச் செயல் திட்டம் நடைமுறையில் இருக்கும்.

மேலதிக தகவல்களுக்கு Regini David ஐ 416 285.7917 ext. 226 என்ற இலக்கத்தில் தொடர்புகொள்ளலாம்.

வேலையுடன் தொடர்பான பிரச்சினை ஏதாவது உங்களுக்கு இருந்தால், பங்கு கொள்ளும் பின்வரும் சட்ட மையங்களில் ஒன்றை அழையுங்கள்:

**East Toronto Community Legal Services**
**(416) 461–8102**
**Gerrard Street East &**
**Greenwood Avenue**

•

**Flemingdon Community Legal Services**
**(416) 441–1764**
**Millwood Road &**
**Overlea Boulevard**

•

**Neighbourhood Legal Services**
**(416) 861-0677**
**Queen Street East &**
**Parliament Street**

•

**Scarborough Community Legal Services**
**(416) 438-7182**
**Markham Road &**
**Lawrence Avenue East**
(திங்கள் முதல் வெள்ளி வரை - காலை 9:30 மணி - நண்பகல் 12:00 மணி)

•

**West Scarborough Community Legal Services**
**(416) 285-4460**
**Kennedy Road &**
**Eglinton Avenue East**

•

**Willowdale Community Legal Services**
**(416) 492-2437**
**Don Mills Road &**
**Sheppard Avenue East**

■ ■ ■


*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 416-849-0594 Tel: 416-646-3422***




**Engineering Drawing Package for Custom Build Home to Obtain Site Plan Approval and Building Permits - $11,995**

Our Engineering Drawing Package for Custom Build Home includes the all the Applicable Drawings, Plans and Reports of the following: Legal Land Survey, Topographical Survey, Arborist Report, Tree protection Plan, Geotechnical Report, Soil Test for Soil Bearing Capacity, Soil Percolation Test for Stormwater Management, Site Plan, Site Grading & Erosion Control Plan, Stormwater Management Report, Functional Servicing Report, Site Servicing Plan, Architectural Drawings, Floor Plans, Elevations, Cross Sections, Structural Drawings, Plumbing Drawings, Heat Loss/Heat Gain Calculations, HVAC Drawings, Duct Design, Ventilation Design/Calculations, and Landscape Architect Plan



**சகலவிதமான கட்டிட நிர்மாண வரைபடத் தேவைகளுக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள் !**


**M.பாஸ்கரசிங்கம்**, P.Eng.


**Periyathamby Kuruparan** M Sc (Eng) **Meghal Raval** M Sc (Eng)


(416) 332 1743 www.buildingexpertscanada.com

# Hot Buyers!! *With A Flexible Commission!*

## SELL YOUR HOME FASTER

FOR SALE — Brampton

Bedrooms:3+1 Washrooms:4

FOR SALE — Toronto

Bedrooms:3+2 Washrooms:3

FOR SALE — Barrie

Bedrooms:5 Washrooms:4

FOR SALE — Ajax


Bedrooms:3+2 Washrooms:3

FOR SALE — Markham

Bedrooms:3+1 Washrooms:4


FOR SALE — Vaughan

Bedrooms:3 Washrooms:3

FOR SALE — Innisfil

Bedrooms:4 Washrooms:4

FOR SALE — Stouffville

Bedrooms:4+1 Washrooms:4

FOR SALE — Toronto

Bedrooms:4+2 Washrooms:4

FOR SALE — Toronto

Bedrooms:2+1 Washrooms:2

FOR LEASE — Toronto

Bedrooms:2 Washrooms:2

FOR SALE — Markham

Bedrooms:3+1 Washrooms:4

## Experienced Full Time Agent

TOP PRODUCER 2013 · TOP PRODUCER 2014 · TOP PRODUCER 2015

**Raj Nadarajah**
Sales Representative
**416-333-6115**
nanohomes@gmail.com



HomeLife/Future Realty Inc., Brokerage
*Independently Owned and Operated.*

205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977 Fax: (905) 201-9229

RE/MAX

Bringing Your Dreams To Life!

DREAM WITH YOUR EYES OPEN™

மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி

மகேசன் சுப்பிரமணியம்
Broker

416-816-0141

Buying/Selling Call me First to evaluate your Home...



141-1140 Burnhamthorpe Road West, Mississauga, ON L5C 4E9
Office : 905-270-2000 Fax : 905-270-0047

* Not intended to solicit properties already listed for sale, or buyers under contract.

Agent of the Month
March 2016

Inforce Life proudly recognises our
**Agent of the month**
for his hard work and dedication.

Congratulations!



Mejanan Mathivathanan

Insurance Solutions for
LIFE | HEALTH | GROUP
Investments

QUALITY ADVICE YOU CAN TRUST!

INFORCE LIFe
Financial Services Inc.

Bus: 416 321 6000
www.inforcelife.com
career@inforcelife.com
10 Milner Business Court, Suite 707, Scarborough ON M1B 3C6

printfast.ca

Join Our Dynamic Team

## வீடு வாங்க விருப்புகின்றீர்களா? தெரிந்து கொள்ளுங்கள்!

# கடன் மதிப்பீடு / Credit Score

வீட்டு அடமானக் கடனை வழங்க முன் ஒரு நிறுவனம் கடன் பெறுபவரின் கடன் மதிப்பீடு நன்றாக உள்ளதா? எனச் சரி பார்க்கும். இந்த மதீப்பீட்டின் அடிப்படையிலேயே வாடிக்கையாளர் கடன் பெறத் தகுதியுள்ளவரா இல்லையா என்பதை கடன் வழங்கும் நிறுவனங்கள் தீர்மானிக்கின்றன.

உங்கள் கடன் மதிப்பீடு தான் உங்கள் வாடிக்கையாளரின் நிதி நிலைமை வலுவாக உள்ளதா? என்பதைத் தீர்மானிக்கின்ற பொதுவான அளவுகோலாக அமைந்திருக்கின்றது. கடன் வழங்கும் நிறுவனங்கள் வாடிக்கையாளரால் எதிர்கொள்ளும் - ஏற்படவல்ல சிக்கல்களையும் இந்த அளவுகோல் காட்டவல்லது.

உங்கள் கடன் மதிப்பீட்டு, அளவு எண்களால் ஆனது. 300 இலிருந்து 900 வரையான புள்ளிகளைக் கொண்டது. ஒருவரது கடன் மதிப்பீடு 700 புள்ளிகளுக்கு மேல் இருந்தால் அவர் தனது கடன்களைச் சரியாகப் பராமரிக்கின்றார் எனக் கருதப்படுவார். நிறுவனங்களும் கடன் வழங்கத் தயாராக இருக்கும். ஆனால், கடன்களை முறையாகப் பராமரிக்காது குறைவான புள்ளிகளைக் கொண்ட வாடிக்கையாருக்கு நிறுவனங்கள் அடமானக் கடன் வழங்கும் முடிவை ஆழமாகப் பரிசீலிக்கும். பரிசீலனைக்குப் பின் கடன் கோரிக்கையை நிராகரிக்கவும் வாய்ப்பு உண்டு. சில நிறுவனங்கள் அதிக வட்டிவீதத்தில் கடனை வழங்க முன்வரலாம்.

வாடிக்கையாளரது கடன் பராமரிப்புகளை அவதானிப்பதனூடாக அவர்களது கடன் மதீப்பீட்டைக் கணித்து, கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு வழங்கும் இரு முகவர் மையங்கள் (Credit reporting agencies) கனடாவில் உள்ளன. அவை Equifax Canada, Transunion என்பனவாகும். இவை கடன் வழங்கும் நிறுவனங்களான வங்கிகள், கடன் அட்டை நிறுவனங்கள், பிற நிதி நிறுவனங்கள் போன்றவற்றிடமிருந்து வாடிக்கையாளரினுடைய கடன் பராமரிப்புத் தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றன.

வாடிக்கையாளர்கள் கட்டணம் செலுத்தத் தவறின், மக்களுக்குச் சேவை வழங்கும் தொலைபேசி நிறுவனங்கள் போன்றனவும் கடன் மதிப்பீடுப் பராமரிப்பு முகவர்களுக் (Credit reporting agencies) குத் தகவல் அனுப்பிவிடுகின்றன.

இந்த இரு முகவர் நிறுவனங்களிடமிருந்தும் ஆண்டுக்கொரு தடவை கடன் மதிப்பீட்டு அறிக்கையை நாம் கட்டணமின்றிப் பெற்றுக்கொள்ள முடியும். சிறிய கட்டணம் ஒன்றைச் செலுத்துவோமாயின் அவ்வப்போது இவ்வறிக்கையைப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வறிக்கையை வாடிக்கையாளர் அவ்வப்போது பார்த்துக்கொள்ளல் அவரது கடன் மதிப்பீட்டை முறையாகப் பேண உதவும்.

### கடன் மதிப்பீட்டுப் பேணலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்:

கடன் மதிப்பீட்டு அறிக்கையைப் பராமரிக்கும் முகவர் நிலையங்கள் தத்தமக்குரிய விதிமுறைகளுக்கேற்ப, கடன் மதிப்பீட்டைக் கணிக்கின்றனர். வாடிக்கையாளரின் கடன் மதிப்பீடு பின்வரும் காரணிகளின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது.




- **கடன் கட்டணப் பராமரிப்பு:** தாமதமான, அல்லது கட்டத்தவறிய கட்டணங்கள், உரிய நேரத்தில் செலுத்தத் தவறிய கட்டணங்கள் (Overdue) வங்குரோத்து நிலை (Bankruptcies), போன்றன வாடிக்கையாளரின் கடன் மதிப்பைக் குறைக்கும்.
- **கடன் பாவனை (Credit Utilization):** மொத்தக் கடனில் எவ்வளவு வீதமான கடனை வாடிக்கையாளர் பயன்படுத்துகிறார் என்பதுவும் கடன் மதிப்பீட்டைப் பாதிக்கும். நிர்ணயிக்கப்பட்ட கடன் தொகையில் 35 விழுக்காட்டுக்குக் குறைவாக பயன்படுத்தும் வாடிக்கையாளரது கடன் மதிப்பீடு உயர வாய்ப்புண்டு.
- **கடன் வரலாறு (Credit History):** வாடிக்கையாளரின் கடன் கணக்கு பேணப்படும் காலவளவு கடன் மதிப்பீட்டைக் கணிக்க உதவுகின்றது. நீண்ட காலமாகப் பேணப்பட்டுவரும் கடன் கணக்கு அதிக மதிப்பீட்டைப் பெற உதவும்.
- **புதிய கடன் தேவைகள் (New Credit Requests):** குறிப்பிட்ட காலத்துக்குள் அல்லது அண்மையில் வாடிக்கையாளர் எத்தனை முறை புதிய கடனுக்கு விண்ணப்பித்திருக்கின்றார் என்பதுவும் கடன் மதிப்பீட்டைப் பாதிக்கின்றது. கடன் மதிப்பீட்டளவைப் பரிசோதிப்பது கடன் மதிப்பீட்டைப் பாதிக்காது.
- **கடன் வகை (Types of Credit):** கடன் அட்டைகள், வாகனக் கடன் (Auto Loan) நீண்டகாலக் கடன் (Line of Credit) போன்ற கடன்களின் சீரான பராமரிப்பு மதிப்பீட்டை அதிகரிக்க உதவும்.

### கடன் மதிப்பீடு எவ்வாறு உங்கள் அடமானத்தைப் பாதிக்கிறது?

அடமானக் கடன் பெற முயலும் வாடிக்கையாளருக்குக் கடன் மதிப்பீடு மிக முதன்மையானதாகும். முன்னர் அடமானக் கடன் பெற்ற நிறுவனங்கள் எவை என்பதையும் அந்த நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்ட வட்டி வீதம் எவ்வளவு என்பதையும் புதிதாகக் கடன் தர முயலும் நிறுவனம் ஆழமாகப் பரிசீலிக்கும். அடமானக் கடன் வழங்கும் முதன்மை நிறுவனங்களான வங்கிகள் (Major Banks) கடன் மதிப்பீடு அளவுகோல்களில் அடிப்படையிலேயே தமது முடிவுகளை எடுக்கும்.

வாடிக்கையாளரின் கடன் மதிப்பீட்டுப் புள்ளி 700க்கு மேல் இருந்தால், நிறுவனங்கள் அவருக்கான அடமானக் கடனை சிக்கலின்றி வழங்க முன்வரும்.

கடன் மதிப்பீட்டுப் புள்ளி, 600க்கு 700க்கும் இடைப்பட்டிருந்தால் கடன் விண்ணப்பங்கள் பரிசீலனைக்குட்படுத்தப்படும். இந்நிலையில் வருமானம் உட்படப் பிற தகவல்கள் வலுவாக இருந்தால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட வாய்ப்பு உண்டு.

வாடிக்கையாளர் குறைவான மதிப்பீட்டுப் புள்ளிகளைக் கொண்டிருத்தல், கடன் வழங்கும் நிறுவனங்களைச் சிக்கல்களுக்கு உட்படுத்தும். குறைந்த புள்ளிகளைக் கொண்ட பலரும் கடன் பெறுவதற்காகத் தனியார் நிறுவனங்களை அணுகுவர். குறைந்த மதிப்பீடுப் புள்ளிகளைக் கொண்ட வாடிக்கையாளரிடம் தனியார் நிதி நிறுவனங்கள் அதிக வட்டியை அறவிடும். சில நிறுவனங்கள் விண்ணப்பங்களை முழுமையான நிராகரித்து விடுவதுவும் உண்டு.

### எவ்வாறு கடன் மதிப்பீட்டை மேம்படுத்துவது?

- ஒருவர் பாதிக்கப்பட்ட (Bruised) கடன் மதிப்பீட்டைக் கொண்டிருந்தால் அல்லது கனடாவில் அண்மையில் குடியேறியவராக இருந்தால், பின்வரும் முறைகளால் அவர் தனது கடன் மதிப்பை மேம்படுத்தலாம்.
- ஆகக் குறைந்தது இரண்டு கடன் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு மாதமும் அவற்றைப் பயன்படுத்துவதோடு, கடன் பாக்கியைக் கட்டி முடித்துவிடல் வேண்டும்.
- எப்போதும் உரிய நாளுக்கு முன்பாகவே மாதாந்தக் கட்டணத்தைச் செலுத்திவிடுதல் வேண்டும். குறைந்தளவு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தையேனும் (Minimum Payment) செலுத்தவேண்டும். இதையும் கட்டி முடியாவிட்டால் கடன் வழங்கிய நிறுவனத்துக்கு உடன் தெரியப்படுத்த வேண்டும். அந்நிறுவனம் கட்டணம் செலுத்த வேண்டிய காலவளவை நீடிக்க வழி செய்யும்.
- ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று, வழங்கப்பட்ட கடனில் 35 விழுக்காட்டுக்குக் குறைவாகவே பயன்படுத்த வேண்டும்.
- வாடிக்கையாளர் நீண்ட கடன் பராமரிப்புக் காலத்தைக் கொண்டிருக்க வேண்டும். பழைய கடன் அட்டைகளை நிறுத்திவிடாது வைத்திருங்கள். அதிகமாகப் பயன்படுத்தவிடினும் நீண்ட கடன் பராமரிப்பு வரலாறு கடன் மதிப்பீட்டை உயர்த்தும்.
- வாடிக்கையாளர் அடிக்கடி கடன் பெறுவதை மட்டுப்படுத்த வேண்டும். பல தடவைகள் புதிய கடன்களைப் பெற தொடர்ந்து பலதடவை விண்ணப்பித்தால், கொடுப்பனர் விசனம் அடைவர்.

*அடுத்த இதழிலும் தொடரும்...*

**உசாத்துணை:**
• *www.ratehub.ca*

■ ■ ■

எல்லோராலும் கடன் மதிப்பீட்டைச் சிறப்பாகப் பேண முடிவதில்லை. முடிந்தவரை சிறப்பாகப் பேண வேண்டும் என்பதற்காகவே கடன் அட்டை தொடர்பான பல விளக்கங்களைத் தமிழில் தந்திருக்கின்றோம். வாடிக்கையாளருக்கான அடமானக் கடனைச் சிக்கலின்றிப் பெறுவதில் திறமை மிக்க முகவர் பலர் எம் நிறுவனத்தில் பணியாற்றுகின்றனர். அடமானக் கடன் பெற முயலும் வாடிக்கையாளர் ஒருவர் எதிர்கொள்ளும் சிக்கல்களை முறையாக அடையாளம் கண்டு, அவற்றைத் தீர்த்து குறைந்த வட்டி வீதத்தில் அடமானக் கடன் பெற்றுக் கொடுப்பதையே நாம் கைதேர்ந்த பணியாகக் கொண்டுள்ளோம். அடமானக் கடன் முகவர்களாகிய நாம் உங்கள் தேவைகளை முன்னிறுத்தி சேவை செய்யக் காத்திருக்கின்றோம். கனடாவில் உள்ள அடமானக் கடன் வழங்கும் நிறுவனங்களின் வட்டி வீதங்களை ஒப்பு நோக்கி, சிறந்த அடமானக் கடன் ஒழுங்குகளை எம்மால் செய்துதர முடியும்.



**Rambo**
**Tharmalinagm**
Mortgage Agent
**647-290-3416**



**Mahesan**
**Subramaniam, AMP**
Principal Broker
**416-816-0141**



**Kethes**
**Sivasubramaniyam AMP**
Mortgage Agent
**416-873-5780**

KAPITAL CARE MORTGAGE INC.
Office : 416-335-5264 Fax : 416-335-5266
5200 Finch Ave. East, Unit 306 Toronto, ON. M1S 4Z5
www.kcmi.ca

# நாங்கள் ஏழைகள்

## - கதிர் துரைசிங்கம் -

**செல்லர்:** என்ரை மகளும் மருமகனும் பேரனோட இலங்கைக்குப் போய் மூத்த மகள் குடும்பத்தோட ஒரு மாசம் நிண்டு, எல்லா இடமும் சுத்திப்போட்டு வந்திருக்கினம். அங்கை போட்டு வந்ததில இருந்து என்ரை பேரன் "இஞ்சை இருக்கிற நாங்கள் ஏழைகள்" எண்டு சொல்லிக்கொண்டு நிற்கிறான்.

**சோமர்:** Ajax லை இரண்டு கராஜ் ஒட Detached வீடு, Lexus கார் இரண்டு, மகளும் மருமகனும் கைநிறைய உழைக்கினம். இப்படி இருக்க, பேரன் ஏன் ஏழை எண்டு நினைக்கிறான்.

**செல்லர்:** நான் அவனைச் சும்மா விடவில்லை, ஏன் எண்டு கேட்டனான். அவன் சொன்ன ஏழு விளக்கத்தையும் சொல்லிறன் கேளும்.

- நாங்கள் இஞ்சை சிரமப்பட்டு வீட்டிலை ஒரு நாய் வளர்க்கிறம். அங்கை அவை ஒரு பசுமாடு, இரண்டு ஆடு, ஆறு கோழி எண்டு சுலபமாய் வீட்டிலை வளர்க்கினம்.
- எங்கடை வீட்டைச்சுற்றி 3 அடி வளவு மட்டும்தான் எங்களுக்குச் சொந்தம். அங்கை வீட்டோட வளவு, வயல் எண்டு பெரிய இடம் அவைக்குச் சொந்தம்.
- இஞ்சை நாங்கள் ஒரு சின்ன அறைக்குள்ள நிண்டு குளிக்கிறம். அங்கை பெரிய இடத்தில நிண்டு குளிக்கினம்.
- நாங்கள் எப்பவோ பிடிச்ச மீனையும் எப்பவோ கொன்று குளிர் ஊட்டியில் வைக்கப்பட்ட இறைச்சியை எடுத்துச் சமைத்துச் சாப்பிடுகிறம். அங்கை அன்றைக்கு வெட்டின ஆட்டு இறைச்சி, கோழி இறைச்சி, அன்றைக்குப் பிடித்த மீன் என்று உடனுக்குடன் சமைச்சுச் சாப்பிடுகினம்.
- இஞ்சை பிறந்த நாள் அல்லது இறந்த நாள் எண்டால் தான் வீட்டுக்கு ஆட்கள் வருகினம். அங்கை ஒவ்வொரு நாளும் ஆட்கள் வந்து போகினம்.
- அங்கை குடிசையிலை இருந்தாலும் சந்தோசமாக இருக்கினம். இஞ்சை மாளிகை இருந்தாலும் சந்தோசம் தேடி Cottage (குடிசை) க்குப் போகிறம்.
- எங்களுக்கு இஞ்சை சொந்தம் எண்டு சொல்ல ஒரு கணினியும் ஒரு கைத் தொலைபேசியும் தான் இருக்கு. அங்கை அவைக்கு ஏகப்பட்ட சொந்தங்கள்.

•

**செல்லர்:** சின்னத்திரை சீரியல்லை ஒரு சின்னச் சந்தேகம். உன்னைக் கேட்டால்த் தான் சரியான பதில் கிடைக்கும்.

**சோமர்:** எனக்குச் சரியெண்டு படுகிறதை உமக்குச் சொல்லிறன். அது உமக்குச் சரியாய்ப் படலாம். ஆனால் எல்லாருக்கும் சரிப்படுமோ தெரியாது. அது சரி சந்தேகத்தைச் சொல்லும்.

**செல்லர்:** சின்னத்திரை நாடகங்களிலை ஒருவர் தனது உறவினருக்கு கைத்தொலைபேசியில் இலக்கங்களை அழுத்தி அவருக்கு அழைப்பை ஏற்படுத்துவார். உறவினர் தொலைபேசிக்குப் பதில் அளித்தாலும் சரி, எடுக்காவிட்டாலும் சரி அதே உறவினருக்கு திரும்பவும் அவர் தொடர்புகொள்ள எல்லா இலக்கங்களையும் திரும்பவும் அழுத்தி அழைப்பை ஏற்படுத்துகிறார். இப்ப என்ரை கேள்வி என்னவெண்டால், இந்திய கைத்தொலைபேசிகளில் Redial, Contact list போன்ற வசதிகள் இல்லையோ?

**சோமர்:** இந்தியாவின் சனத்தொகையை விட இந்தியாவில் கைத்தொலைபேசி அதிகமாம். கனடாவிலை உள்ள நிறுவனங்களே எங்களோட இந்தியாவில் இருந்து தான் உரையாடுகினம். தொழில் நுட்பத்திலை எங்கேயோ நிற்கிற இந்தியத் தொலைபேசிகளில் எல்லா Features ம் இருக்கு.

**செல்லர்:** அப்ப ஒரே நபரின் தொலைபேசியை அழைக்க ஏன் திரும்பத் திரும்ப எல்லா எண்களையும் அழுத்திறவை.

**சோமர்:** சீரியல்லை ஒரு சின்னக் கதாபாத்திரம் இறந்தால் இருபது, இருபது நிமிடமாய் ஒரு கிழமை செத்தவீடு சிறப்பாகக் கொண்டாடி இழுத்து அடிக்கிற சின்னத்திரை இயக்குனர், நடிகரை Redial அமத்தச் சொல்லி ஏன் சொல்லவேணும். இரண்டு மணித்தியாலத்திலை முடியிற திரைப்படம் எண்டால் சினிமா இயக்குனர் Redial அமத்தச் சொல்லுவர்.

•

**மனைவி:** இஞ்சாரும் நான் Gymn க்குப் போறன், நீரும் வாறீரா?

**கணவன்:** அப்படி எண்டால் எனக்கு உடம்பு வைச்சிட்டுது எண்டு சொல்றீரா?

**மனைவி:** அதுக்கில்லை அப்பா, உடற் பயிற்சி ஆரோக்கியத்திற்கு நல்லது.

**கணவன்:** அப்ப என்னை நோயாளி எண்டு சொல்றீரா?

**மனைவி:** இல்லை நீர் வர வேண்டாம், விடும்.

**கணவன்:** அப்ப நான் சோம்பேறி எண்டு சொல்றீர்.

**மனைவி:** ஐயோ! ஏன் எல்லாத்தையும் தப்பாய் எடுக்கிறீர்.

**கணவன்:** இவ்வளவு நாளும் நான் எடுத்தது எல்லாம் தப்பா?

**மனைவி:** நான் அப்படிச் சொல்லயில்லை.

**கணவன்:** அப்ப நான் பொய் சொல்றனா?

**மனைவி:** ஏன் சண்டை. என்னை விடும்.

**கணவன்:** அப்ப நான் சண்டைக்காரனா?

**மனைவி:** சரி விடும். நானும் Gymn போக இல்லை.

**கணவன்:** உமக்குப் போக அலுப்பு, அதுதான் என்னை குறைசொல்றீர்.

**மனைவி:** சரி நீர் படும், நான் தனியப் போறன்.

**கணவன்:** உமக்கு தனியாப் போய் enjoy பண்ணவேணும் அதுக்குத் தான் இவ்வளவு நாடகம்.

தான் செய்த தவறு என்ன? என்று சிந்தித்து சிந்தித்து களைத்த மனைவி கதிரையில் இருந்தபடியே தூங்கிவிட்டாள்.

•

**செல்லர்:** 'வெற்றி என்பது பணம் சப்பாதித்து பொருளாதார எல்லைகளை விரிவாக்குவது. ஆனந்தம் என்பது புகழின் உச்சியை அடைவது.' நான் சொல்லுறது சரி தானே?

**சோமர்:** நீர் நினைக்கிறது உமக்குச் சரி. ஆனால், என்ரை வரவிலக்கணம் வேறை மாதிரி. 'வெற்றி என்பது இதயங்களைச் சம்பாதித்து நண்பர், உறவினரின் எல்லைகளை விரிவாக்குவது'. அடுத்து 'ஒருவர் அன்பு செய்யப்படுகிறார் என உணர்வது உலகின் மிகப்பெரிய ஆனந்தம்'.

•

**குமார்:** தெரிஞ்ச ஆள் எண்டு சொல்லிறாய். ஐஞ்சு மாசத்திலை திருப்பித்தாறன் எண்டு அவருக்குச் சொல்லிறாய், அப்படித் தரமுடியாது எண்டு சொன்னால் அவரை விட்டு விடவேண்டியது தானே. ஏன் 1000 டொலருக்கு அவரை ஐஞ்சாறு தரம் கெஞ்சிறாய்?

**சேகர்:** உனக்குப் பார்க்க கஷ்டமாய் இருக்கும். இண்டைக்கு ஒரு நாள் மட்டும் எப்படியும் கெஞ்சி நான் அவரிட்டை 1000 பிரட்டிப்போடுவன். ஆனால், நீ இருந்து பார் 5 மாசம் முடிய எத்தனை நாள், எத்தனை தரம் அவர் என்னைக் கெஞ்சப் போறார் எண்டு. கனடாவிலை Smart ஆய் இல்லாட்டால் சீவிக்க ஏலாது.

**குமார்:** சொன்னது நல்லது. நானும் இனி உன்ரை விசயத்தில Smart ஆய் இருப்பன்.



kathir.thuraisingam@thaiveedu.com







Finding Homes to fit your Lifestyle

அழகான
இல்லம்
ஆனந்தமான
வாழ்க்கையின்
ஆரம்பம்



வீடு வாங்கவும்
விற்கவும் குறைந்த
வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு
செய்வதற்கும் அழையுங்கள்...



RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu@hotmail.com

HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210 Toronto, ON, M1P 4S6

MORTGAGE EMPIRE (LIC# 12660)

MORTGAGE ALLIANCE
MORTGAGE EMPIRE

அனைத்து
மோட்கேஜ்
தேவைகளுக்கும்
அழையுங்கள்



WIN UP TO $100,000* ONE LUCKY MORTGAGE ALLIANCE CUSTOMER

OUR RANGE OF SERVICES INCLUDE...
Purchase & Refinance packages | Switch and Transfer / Renewals | Open/Closed mortgages.



RAVI PARAMU AMP
Mortgage Agent
Lic # M11000420
Dir: 416-262-4176
rparamu@mortgagealliance.com
rparamu@hotmail.com

We have mortgage solutions for everyone.
* 1st & 2nd Mortgages
* Private Motgages

5-1801 HARWOOD AVE.N., AJAX ON L1T 0K8 TEL: 416-321-0110 FAX: 416-321-0150

``THANK YOU ALL FOR YOUR TRUST, SUPPORT & REFERRAL``

RAVI INCOME TAX SERVICES "INCLUDING EFILE"



sun sonic
Connecting you to yours...

FREE



Digital Home phone line with
Unlimited High speed DSL internet

416 907 7777

OUR LOCATION

5200 FINCH AVE EAST
SUIT- 301A
TORONTO -ON
M1S 4ZS
CANADA

www.sunsonic.ca



STOP PAYING FOR USAGE

SWITCH
TO
SUNSONIC
UNLIMITED
HIGH SPEED

DSL-15 MBps
$49.95*



DSL- 25 MBps
$59.95*

DSL- 50 MBps
$69.95*

*Taxes apply for all the packages * set up fee apply * device charges apply
* limited offer*some conditions apply

# கதை சொல்லல்

- சாரதா குமாரசாமி -

மொழிகள் யாவும் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்ற நான்கு மொழித் திறன்களையும் கொண்டுள்ளன. கேட்டலும் (Listening), வாசித்தலும் (Reading) உள்வாங்கும் திறன்களாகவும் (Receptive Skills), பேசுதலும் (Speaking) எழுதுதலும் (Writing) விளைவுத் திறன்களாகவும் (Productive Skills) அமைந்துள்ளன.

கேட்டல், வாசித்தல் ஆகிய உள்வாங்கும் திறன்களால் நாம் மொழியை, அறிவை, தகவல்களை உள்வாங்குகிறோம். இவ்வாறு பெற்ற அறிவைக் கொண்டு நாம் பேசுதல், எழுதுதல் ஆகிய திறன்களைப் படைக்கிறோம், விளைவிக்கிறோம், அறிவைப்பெருக்குகிறோம், வளர்க்கிறோம்.

கதை சொல்லல் என்பது ஒரு கலை (ART). பேச்சுவல்லமை உள்ள ஒருவர், கதையை நன்றாக வாசித்து அறிந்து வைத்திருந்து கேட்போர் மனதிற் புகுந்து, அவர்களின் உணர்வுகள் வெளிக்கொண்டு வரும் நோக்கோடு கதையை எடுத்துக் கூறுவதாகும். தெரிவு செய்யப்படும் கதைகள் மெய்ப்பாடுகளான நகை, அழுகை, கவலை, உவகை, வியப்பு, அச்சம், வெறுப்பு, கோபம் போன்ற ஒன்பது மெய்பாடுகள் அல்லது நவரசங்கள் உள்ளனவாக இருத்தல் வேண்டும். கதை சொல்பவர் உணர்த்தும் எந்த வெளிப்பாடும், கேட்போரைப் போய்ச் சேர்ந்து அவர்களும் அதே உணர்வுகளைக்கொண்டு வரவேண்டும், கதையானது, கேட்போரின் மனதுடன் ஒன்றிவிடக்கூடியதாக இருக்க வேண்டும். எனவே கதையைத் தேர்ந்தெடுப்பது என்பது கதை சொல்லலில் முக்கியமானதாகும்.

கதை சொல்லும்போது எங்கே, எப்படிப் போகிறது, கேட்போரைப் பரவசப்படுத்துகிறதா? உணர்வலைகளைத் தூண்டி விடுகிறதா? கேட்போர் கவனிக்காமல் அலட்சியமாக இருக்கிறார்களா? என்பனவற்றைக் கவனித்துக் கொண்டே கதை கூறவேண்டும். கதையில் வரும் ஒவ்வொரு சொல்லும், வசனமும் கேட்போருக்கு சுலபமாக விளங்கக்கூடியதாக இருத்தல் அவசியம். கதைகளில் உணர்வுகளின் முதலீடு இல்லாமலும் காரசாரமில்லாமலும் உப்புச்சப்பு இல்லாமலும் விறுவிறுப்பில்லாத கதைகளாக இருத்தல் ஏற்றதல்ல. கேட்போரைக் வசப்படுத்துவது, உணர்வலைகளும் சொல்பவரின் நேர்மையுமாகும். வேகமாகப் போகாமல், நிறுத்தி, நிறுத்திக் கேள்விகள் கேட்டு, கேட்போரின் சிரிப்பொலிகள் போன்ற மெய்பாடுகளுக்கு நேரம் கொடுத்து, அவர்களை மதித்துக் கதை சொல்லல் நிகழ வேண்டும். கதை நீண்டுகொண்டே போதல் விரும்பத்தக்கதன்று, அலுப்புத்தட்டிவிடும்.

ஈழத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன (CBC) 'சிறுவர் மன்ற' நிகழ்ச்சியில் ஒவ்வொரு ஞாயிறும் மதியமும் 'கதை சொல்லல்' நிகழ்ச்சி நடைபெற்று வந்தது. இந்நிகழ்ச்சியை நடத்தி வந்தவர், மாஸ்டர் சிவலிங்கம் என்ற, மட்டக்களப்பைச் சேர்ந்த புகழ்பெற்ற தமிழ் ஆசிரியர் ஆவர். இவை கதை சொல்லும் நேர்த்தியே நேர்த்தி. இவரின் குரலைக் கேட்டதும் குழந்தைகள், பெரியவர் என அனைவரும் ஆவலோடு, வானொலியை நோக்கி ஓடிவந்து, முன்னிருந்து அமைதியாகக் கேட்பதையும், இன்பத்தை அனுபவிப்பதையும் பார்த்திருக்கிறேன். இதற்குக்காரணம், கதை சொல்பவர், தன் சுவாசத்தைக் கதைக்குள் புகுத்திக் குரலைக் கொணர்ந்து, உயிரோவியமாக கதையை நடத்திச் செல்வதாகும்.

மேலும், கதையில் வரும் வசனங்கள், சொற்றொடர் என்பன ஒன்றோடு ஒன்று இணைந்து, கதையின் சாரத்தை வெளிப்படுத்த வேண்டும். கதைப்பதைப் போலவே கதையும் அமைந்திருந்தால் நல்லது. அது சொல்வோருக்கும் கேட்போருக்கும் ஒரு பாலத்தை ஏற்படுத்தும். மேலதிகமாகக் கதைகளைக் கேட்கத் தூண்டும். சொல்பவர் சாதாரண நடையில் நல்ல சொற்களைக் கொண்டு வர்ணனை செய்யும் போது, கேட்போர், கதையில் வரும் பாத்திரங்களுடன் ஒன்றிவிடுவர், தம்முணர்வுகளைக் காட்டுவர். இது தான் கதை சொல்லலின் வெற்றி!

மேலும் சிறுவர் கதைகளில் காரணகாரியத் தொடர்பு இருப்பது சிறந்ததெனவும், இவை இல்லாத கதைகள் வெற்றிபெறமாட்டா எனவும் கூறுகின்றார், சிறுகதை எழுத்தாளர் லோறா பேக்ஸ் (Laura Backes).

பொதுவாகக் கதைகள் கதாபாத்திரம், கதையின் அமைப்பு, கதையின் முடிவு என மூன்று வகையாக அமையும். கதாபாத்திரம் ஒரு பிரச்சினையை எதிர்நோக்க வேண்டும், பின் கதை அமைப்புத்தான் கதையைக் கொண்டு செல்லும். கதாபாத்திரம் பிரச்சினையை அனுபவித்து, அதற்கொரு தீர்வோ, பதிலோ தேட வேண்டும். கதைசொல்பவர் இம்மூன்றையும் மனதில் வைத்துத் திறம்படக் கதையை நடத்திச் செல்வர். கேட்போர், அடுத்தடுத்து ஆவலுடன் கேட்கும் கேள்விகளால், அவர்கள் மனதில் ஏற்படும் ஒரு மகிழ்ச்சிகரமான இன்ப உணர்வு, வேறெங்கும் கிடைப்பதில்லை. இவ்வாறாகப் பெற்ற மகிழ்ச்சிகரமான அனுபவத்தை பெரியவர்கள் ஆனாலும் மறக்க மாட்டார்கள். மனதில் நிரந்தரமாக இடம்பிடித்து விடும்.

கதை சொல்லல், ஒப்புவிப்பதாகவோ புராணம் பாடுவதாக வெறும் வசனத்தை ஓட்டிச் செல்வதாகவோ அமைவதில்லை. பின் வரும் கதைப் பகுதியின் அமைப்பைப் பாருங்கள்:

"வயலுக்குள் ஒரு எலி நெற்கதிர்களுக்குள் நின்று, நெல்மணிகளைச்சாப்பிட்டுக் கொண்டிருந்தது. வயலுக்கெதிரில் உள்ள தெருவில் ஒரு பூனை நின்றது. வயலுக்குள் எலி ஒன்றிருப்பதை முகர்ந்து தெரிந்து கொண்டது. வயலுக்குள் நடக்கத் தொடங்கியது. புற்களுக்குள்ளிருந்து ஒரு சத்தம் வந்தது. பூனையும் எலியும் ஒன்றை ஒன்று எதிர்கொண்டன."



இக்கதையின் நடை கேட்போரைத் திருப்திப்படுத்தவோ, மகிழ்விக்கவோ, உணர்வலைகளைத் தூண்டவோ இல்லை. பெயர், வினைச்சொற்கள் பெறுமதி மிக்க ஆயுதமாக இருக்கவேண்டும். அளவான வர்ணனைகளும், தகவல்களும் கதைகளில் அமைய வேண்டும்.

இதே கதை அமைப்பை இனிப்பாருங்கள்,

"வயலில் உயர்ந்து, நெடுந்து, பச்சைப் பசேலென வளர்ந்திருந்த நெற்கதிர்களுக் கிடையே ஒரு சிறிய எலி நெற்கதிர்களைக் கொறித்துக் கொண்டு, உல்லாசமாகத் தன்பாட்டில் இளைப்பாறியது. இதமான காற்றில் ஆடிக் கொண்டிருக்கும் நெற்கதிர்களின் மென்மையான ஓசை, எலியின் காதில் புகுந்து, அந்த ஓசை தன்னுடன் செல்லமாக விளையாடுவது போல் இருந்ததையிட்டு பெருமிதப்பட்டது. ஒரு பூனையின் உறுமல் சத்தம், மென்மையாக வீசிக் கொண்டிருந்த காற்றினூடாகக் கேட்டது. எலி நிலை குலைந்து, உண்பதை நிறுத்தி நடுநடுங்கியது. பூனை தன் மென்மையான நடையால் வயலை நோக்கி நடந்தது, திடீரெனப் பாய்ந்து நடுங்கிக் கொண்டிருந்த எலியின் முன் நின்றது. பாவம் எலி! பூனையின் அகன்ற மஞ்சள் நிறக் கண்களைப் பார்த்தது. பூனை, 'ச்சும்' எனச்சீறியது."

இவ்வாறான வசன அமைப்பும் நடையும் வர்ணனையும் கதை சொல்பவரின் நடிப்புத் தன்மையும் கேட்போரை ஒட்டிச் செல்லும், ஆவலைத் தூண்டிச் செல்லும்.

கேட்டல் (Listening) என்ற உள்வாங்கும் மொழித்திறன் (Receptive Language Skill) எல்லாருக்கும் முறையாக அமையாது. சிலர் கேட்டிருக்கும் போதே கதைப்பவரை வெட்டித் தாம் கதைப்பர், சிலர் கதையைக் கேட்டுக் கேட்டுத் தாமும் கதைப்பர். பொறுமையுடன் முழு விடயத்தையும் உள்வாங்கி பதில் அளிப்பவரே சிறந்த கேட்போர் ஆவர். இவ்வாறாக முழுமையாகக் கேட்டு உள்வாங்கிப் பேசுபவர்கள், சிறந்த தலைவர்களாகவும், மேடைப் பேச்சாளராகவும் திகழ்கிறார்கள்.

இதற்கு எடுத்துக்காட்டாக, நமது புதிய கனடியப் பிதமர் ஜஸ்ரின் ரூடோ அவர்கள் தகவல்களைப் பொறுமையுடன் கேட்டு உள்வாங்குவதில் மிகவும் திறமை வாய்ந்தவர். (ஆதாரம் 'Diversity' என்ற ஆங்கில சஞ்சிகை) நாமும் பொறுமையுடன் கேட்கும் திறனை வளர்த்து முன்னேறுவோம்!



saradha.k@thaiveedu.com

திருமணம், பூப்புனிதநீராட்டுவிழா, பிறந்தநாள் அழைப்பிதழ்கள்
அச்சிட தொரன்ரோவில் புதிய காட்சியறையுடன்
MENAKA CARD
மேனகா அழைப்பிதழ்
Invitations for all occasions
80 Nashdene Road, Suite 113, (E Block), Toronto, Ontario, M1V 5E4. Tel : 416.335.1155

# NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.

• விசா இல்லாதவர்கள், சுப்பர் விசாவில் உள்ளவர்களும் பெறலாம்.



உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.

Does your current life insurance policy need a tune up please call me.

**Nimal Subramaniam**

**Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com**

La Capitale Financial Group | IA Industrial Alliance Insurance and Financial Services Inc. | Assumption Life

•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# வீடு வாங்க விற்க




South of Patterson
4 + 7 Bedrooms 7 Washroom
W/O Basement Finished




Markham/McNicoll
Commercial Condo



**Kuga Raveendrarajah**
Real Estate Broker
Dir: **416-843-8585**

HomeLife Higher Standards



**Mathan Selvendarakumaran**
Sales Representative
**Dir: 416-625-2870**

MLS Multiple Listing Service



**Shajetha (Suzy) Sabanathan B.Sc.**
Sales Representative
Cell: **416-298-3200**


**HomeLife Today Realty Ltd.**, Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6

சேமிப்பின் அடையாளம் அழகானதோர் வீடு

**Bus: 416-298-3200**

*Independently Owned and Operated, Realtor


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING & LOGISTICS
SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
PERSONAL EFFECTS
SHIPMENTS BY SEA & AIR
TO SRI LANKA
SRI LANKA'S
Best Clearing Facilities in
COLOMBO, KANDY & BATTICALOA
REGULAR
AIR SHIPMENTS NOW
AVAILABLE
We are expanding Now in Dubai
For further information contact
Kumar
905-673-9873
Vancouver: Randy - 604-273-4911 Edmonton, Calgary: Desmond - 780-918-2501 Montreal: Gana - 514-573-0093
Ottawa: Ignatius (Iggy) - 613-799-3519 Dubai: Gihan Jayasankha - 971564036107
Dubai
Ceycan Transhipping Inc. C/0: RSL Freight CO LLC Office : Flat No 306/4 Zabeal Business Centre, Karama, Dubai U.A.E
United Kingdom
Transcontinental Shipping Ashley House, 235 High Road Suite 412, Woodgreen, London Tel: 0208 889 8486
Colombo
Ceylon Shipping Lines Ltd 760, Dr. Danister De Silva Mawatha Colombo - 09 Tel: (011) 2680301 - 306
Kandy
Ceylon Shipping Lines 175 Parangantota Road, Mawilmada, Kandy Tel: (812) 234356/57/59
Batticaloa
Ceylon Shipping Lines Ltd. 134 Main Street Addalaichenai - 09 Tel: (067) 2277302
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9 Email: Ceycantrans@gmail.com web: ceycantranship.com


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும் இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
FUNERAL HOME INC.
PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1
Chapel Ridge
Chapel Ridge
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது

# நடமாடும் உணவு விற்பனை அனுமதிச்சீட்டு

- ஜீவா திசைராஜா -

### றொறன்ரோ நகர வீதிகளில் இடம் விட்டு இடம் சென்று உணவுப்பண்டம் விற்கும் உரிமையாளர்கள் பெற்றிருக்க வேண்டிய அனுமதிகள் (Mobile Food Vending Permits):

வாகனங்களில் உணவு விற்பனை செய்வது இலாபம் தரக்கூடிய சுயதொழில் முயற்சியாகும். ஆனால் அதனை எவ்வாறு சட்ட ரீதியில் செய்வது என்பதை அறிவது பயன் தரக்கூடியதாகும். விதிகளை மீறி பொது வீதிகளில் உணவு விற்பனை செய்வதால் தண்டிக்கப்பட வேண்டிய நிலைகளும் ஏற்படலாம். இவற்றைத் தவிர்ப்பதற்கு றொறன்ரோ நகரின் பொது வீதிகளில் உணவு வண்டிகளில் உணவு விற்பனை செய்யும் வரைமுறைகளை இக் கட்டுரையில் பார்ப்போம்.

றொறன்ரோ நகரத்தின் பொது வீதிகளில் உணவு விற்கும் வாகனங்கள்,இடம்பெயர்ந்து சென்று விற்கும் அனுமதியுடனும் (Mobile vending permit), பச்சைநிற P வாகனந்தரிப்பு இடங்களில் வாகனம் நிறுத்துவதற்கான பச்சை P அனுமதியுடனும், வர்த்தக வாகனந்தரிப்பு இடங்களில் அந்த இடத்தின் உரிமையாளரின் அனுமதியுடனும், தனியாரின் இடங்களில் அந்த உரிமையாளரின் அனுமதியுடனும் அந்த வலய துணைச்சட்ட விதிக்கேற்ப (Bylaw) இயங்க முடியும்.

### வாகனம் இயங்கக்கூடிய இடங்கள்:

- இடம்பெயர்ந்து சென்று உணவு விற்கும் அனுமதி வைத்திருப்பவர்கள், பணம் செலுத்தி வாகனந்தரிப்பதற்கான சீட்டை (Parking ticket) வாகனத்தில் பார்வைபடும்படி வைக்கக்கூடிய எல்லா பிரதான, சிறிய வீதிகளிலும் இயங்க அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த விற்பனயாளர்கள் பொருத்தமான எல்லா வாகனந்தரிப்பு விதிகளைப் பின்பற்றுவதுடன் வாகனந்தரிப்பதற்கான பணத்தையும் செலுத்துமாறு வேண்டப்படுகிறார்கள்.
- திறக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கும் உணவு விடுதிகளிலிருந்து 30 மீற்றர் தூரத்தில் இயங்கமுடியும். இந்த தூரத்திற்குள் இருக்கும் கட்டிடங்களினுள் உணவு விற்பனை செய்யப்படுமாயின் அவற்றை இந்த விதி உள்ளடக்காது.
- இரண்டு வீதிகளுக்கிடைப்பட்ட தொகுதியினுள் இரண்டு உணவு லொறிகளுக்கு மேல் இயங்க முடியாது.
- எந்த ஒரு காலப்பகுதியிலும் 5 மணித்தியாலத்திற்கு மேற்பட தொடர்ந்து இயங்க முடியாது.

### வாகனங்களில் சென்று உணவு விற்பனை செய்வதற்கு பெற்றிருக்க வேண்டியவை:

- உணவு விற்கும் வாகன சொந்தக்காரருக்குரிய அனுமதியைப் பெற்றிருத்தல்
- இடம்பெயர்ந்து சென்று உணவு விற்பதற்குரிய அனுமதியைப் பெற்றிருத்தல்

### யார் விண்ணப்பிக்க முடியும்?

- தனியார், பங்குதாரர்கள் அல்லது கூட்டுறவு நிறுவனங்கள்

### எவ்வாறு விண்ணப்பிப்பது?

850 கொக்ஸ்வெல்(Cowell)ல் அமைந்திருக்கும் East York Civic Centreன் 3வது தளத்திலுள்ள அனுமதி வழங்கும் அலுவலகத்திற்கு (Licence &Permit Issuing Office) நேரடியாகச் சென்று விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்க முடியும்.




**பங்குதாரரும் கூட்டுறவு நிறுவனங்களும்:** இந்த விண்ணப்பதாரிகள் ஒரு வியாபார முகவரியுடன் அந்த வியாபாரத்தைப் பொறுத்து ஏனைய ஆவணங்களும் சமர்ப்பிக்க வேண்டியதாயிருக்கும். இந்த ஆவணங்களுள் நிறுவன அமைப்புப் பத்திரம் (Articles of incorporation), நிறுவனத்தின் சுயவிவரங்கள் (Corporate profiles), உரிமை சார்ந்த ஒப்பந்தங்கள் (Franchise agreements), பங்குடமை ஒப்பந்தங்கள் (Partnership agreements) மற்றும் மாகாண பெயர் பதிவு (Provincial name registration) என்பன உள்ளடக்கப்படும்.

**விண்ணப்ப கட்டணம்:** ஒரு சிற்றுண்டி விற்கும் மோட்டார் வாகன அனுமதியை பெறுவதற்கான கட்டணம் 1146.85 டொலர்களாகும்.

இடம் பெயர்ந்து விற்கும் அனுமதியைப் பெறுவதாயின்: 6 மாத அனுமதிக்கு வரி தவிர்த்து 2664.19 டொலர்களும், 9 மாத அனுமதிக்கு வரி தவிர்த்து 3996.29 டொலர்களும், ஒரு வருட அனுமதிக்கு 5328.38 டொலர்களும் கட்டணமாக அறவிடப்படும்.

**அடையாளம் காண்பதற்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட இரண்டு அடையாள பத்திரங்கள் காட்டப் பட வேண்டும்.**

- கனடா கடவுச்சீட்டு, அல்லது பிரஜாவுரிமை அட்டை, நிரந்தர வதிவுரிமை அட்டை, வேலை செய்வதற்கான அனுமதி, கனடா பிறப்புச் சான்றிதழ் போன்ற வேலை செய்யக்கூடிய நிலையை காட்டுவதற்கான நிரூபணம்.
- வாகன சாரதி பத்திரம், புகைப்பட அடையாள அட்டை, கனடா கடவுச்சீட்டு போன்ற வலிதான புகைப்பட அடையாளம்
- சுகாதார அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா

**குற்றவியல் பின்னணி பரிசோதனைகள்:** அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு 280 நாட்களுக்கு முன்பாக ஒரு கனடா பொலிஸ் சேவையால் வழங்கப்பட்ட குற்றவியல் பின்னணி பரிசோதனை அறிக்கையை விண்ணப்பதாரிகள் சமர்ப்பிக்க வேண்டும்.

றொறன்ரோ நகரில் 40 கொலிஜ் வீதியில் அமைந்திருக்கும் பொலிஸ் நிலையத்தில் 20 டொலர் கட்டணம் செலுத்தி இந்த பரிசோதனை அறிக்கையை பெற்றுக் கொள்ள முடியும்.

**காப்புறுதி:** எந்த ஒரு விபத்தினாலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு உடற்காயம் அல்லது மரணம் ஏற்படுவதற்கு அல்லது உடமைகளுக்கு சேதம் அல்லது இழப்பு ஏற்படுவதற்கு எதிராக குறைந்தது 1,000,00ற்கு விரிவான காப்புறுதி செய்ததற்கான நிரூபணம்.

**பொது சுகாதார பரிசோதனை:** றொறன்ரோ பொது சுகாதாரத்தினால் சுகாதார பரிசோதனை செய்யப்பட்டதற்கான நிரூபணம். இதனை 311 றொறன்ரோவை தொலைபேசியில் அழைப்பதன் மூலமாக அல்லது 416-338-7600 எனும் சுகாதார தொடர்பு தொலைபேசி அழைப்பினூடாக ஒழுங்கு செய்யலாம்.

**உணவு கையாள்வதற்கான சான்றிதழ்:** உரிமையாளர் மற்றும் அங்கு வேலை செய்யும் ஊழியருக்குரிய உணவு கையாளும் சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்.

**வாகனத்தின் புகைப்படமும் அதன் வரைபடமும்:** அனுமதி பெறச் செல்லும் போது வாகனத்தின் புகைப்படமும் அதன் பரிமாணங்களைக் காட்டும் வரைபடத்தையும் வைத்திருக்க வேண்டும்.

**உரிமையாளரின் புகைப்படம்:** அனுமதி வழங்கும் அலுவலகத்தில் வைத்து வாகன உரிமையாளரின் புகைப்படம் எடுக்கப்படும்.

**உற்பத்தி தொடர்பான பட்டியல்:** என்னென்ன உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன என்பதற்கான பட்டியல்.

**புறொபேன் வாயு கொள்கலன் தொடர்பான அனுமதி:** இதற்கு தொழில்நுட்ப நியம மற்றும் பாதுகாப்பு நிறுவனத்திடமிருந்து (Technical Standards and Safety Asoociation–TSSA) உபகரணத்தை வெளிக்களத்தில் பாவிப்பதற்கான அனுமதி பெறப்பட வேண்டும். TSSA இனால் சான்றிதழ் பெற்ற தொழில்நுட்பவியலாளரால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

**வாகன உடமை:** மாகாண வாகன பதிவின் மூலாதார பிரதியில் உள்ள பெயரும் முகவரியும் விண்ணப்பதாரியினதாக இருக்க வேண்டும்.

**பாதுகாப்பு பரிசோதனை:** போக்குவரத்து அமைச்சால் அனுமதிக்கப்பட்ட வாகன பரிசோதனை மையத்தால் பாதுகாப்பு பரிசோதனை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**வாகன பரிசோதனை:** பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் றொறன்ரோ நகரின் வாகன பரிசோதனை மையத்தால் வாகன பரிசோதனை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இவ்வாறு அனுமதிக்கு விண்ணப்பித்த பின்னர் சாரதியின் வாகன ஓட்ட பதிவின் சுருக்கம் பெறப்படும். இந்த அறிக்கையும் ஏனைய ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் றொறன்ரோ மாநகர விதி அத்தியாயம் 545ற்கேற்ப அனுமதி வழங்குவதில் பிரச்சனைகள் இருக்கிறதா எனவும் வியாபார அனுமதி வரையறைகளுக்கு ஏற்புடையதாக இருக்கின்றதா எனவும் கவனிக்கப்படும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகள் நடைபாதை உணவு வண்டிகள் மற்றும் ஐஸ்கிறீம் விற்கும் வண்டிகளுக்கான அனுமதி நிபந்தனைகளை விட வேறுபட்டவை.

**உசாத்துணை:**
- http://www1.toronto.ca/ wps/ portal



jeevathisairajah@thaiveedu.com

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com
COLDWELL BANKER



# தற்கொலை செய்த ஸீரோ ஃபைற்றர்

- குரு அரவிந்தன் -

இரண்டாம் உலக யுத்தத்தின் போது மிகவும் ஆபத்தான விமானமாகக் கருதப்பட்டது யப்பான் விமானப்படையால் பாவிக்கப்பட்ட இந்த ஸீரோ பைற்றர் (Zero fighter plane) என்ற சிறிய ரக விமானமாகும். ஒரு கட்டத்தில் இரண்டாம் உலகயுத்தத்தின் போக்கையே மாற்றக்கூடிய முக்கியமான சாதனமாக இந்த விமானம் கருதப்பட்டது. அதனால் யப்பான் நாட்டின் முக்கிய கதாபாத்திரங்களில் ஒன்றாக, தங்கள் வீரத்தின் சின்னமாக யப்பானியர்கள் இந்த விமானத்தைப் போற்றினார்கள். நீண்ட காலத்தின் பின் சமீபத்தில் இந்தவகை விமானம் ஒன்று யப்பான் நாட்டில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் வான் பரப்பில் பறப்பில் ஈடுபடுத்தப்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் முதற்தடவையாக இந்த விமானம் பறப்பில் ஈடுபடுத்தப்பட்டதற்குச் சில முக்கியமான காரணங்கள் இருந்தன.




பாபா நியூ கின்னி (Papua New Guinea) என்ற தீவில் சிதைந்த நிலையில் ஸீரோ பைற்றர் விமானம் ஒன்று அமெரிக்கர் ஒருவருக்குச் சொந்தமாக இருந்ததை யப்பானிய வர்த்தகர் ஒருவர் தெரிந்து கொண்டார். மேற்கொண்டு அது பற்றி தேடுதல் செய்த போது, 1970ம் ஆண்டு இந்த விமானத்தை அமெரிக்கர் ஒருவர் விலை கொடுத்து வாங்கியிருப்பது தெரிய வந்தது. தேவை கருதி அந்த விமானத்தை யப்பானிய வர்த்தகரான மாசாஹிரோ ஸ்சிசுகா என்பவர் 2010ம் ஆண்டு விலை கொடுத்து சொந்தமாக வாங்கியிருந்தார். அவரது முயற்சியால் தான் அந்த விமானத்தை மீண்டும் யப்பானுக்குக் கொண்டு வந்து திருத்தி புதுப் பொலிவோடு பறப்பில் ஈடுபடுத்தப்பட்டது. 'இவ்வளவு பணம் செலவழித்து என் இந்த விமானத்தைத் திருத்தி எடுத்துப் பறக்க வைத்தீர்கள்' என்ற கேள்வியைப் பத்திரிகையாளர் ஒருவர் அப்போது மாசாஹிரோ ஸ்சிசுகாவிடம் கேட்டிருந்தார்.

'முதியோர் பழைய நினைவுகளை மீட்டுப் பார்ப்பதற்கும், இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது தொழில் நுட்பத்தில் யப்பான் எவ்வளவு தூரம் முன்னேறி இருந்தது என்பதை இந்தத் தலைமுறையினரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் இதைக் கொண்டு வந்து எங்கள் மண்ணில் பறக்க விட்டேன்' என்றார் மாசாஹிரோ ஸ்சிசுகா என்ற அந்த வர்த்தகர். இரண்டாம் உலகமகா யுத்தத்தை மையமாக வைத்து 'பேர்ள் ஹாபர்' என்ற பெயரில் எடுக்கப்பட்ட ஹொலிவூட் படத்திலும் இந்த விமானம் படப்பிடிப்பில் ஈடுபடுத்தப் பட்டதாகத் தெரிகின்றது. 1941ம் ஆண்டு அமெரிக்காவிற்குச் சொந்தமான 'பேர்ள் ஹாபர்' துறைமுகத்தை தாக்குவதற்காக நீண்ட தூரம் பயணிக்கக் கூடிய இத்தகைய விமானங்கள் தான் பாவிக்கப்பட்டன. துறைமுகத்தில் நின்ற பல யுத்தக் கப்பல்களையும், விமானங்களையும் தாக்கி, அமெரிக்காவிற்கு மிகப் பெரிய சேதத்தை இந்த விமானங்கள் அப்போது ஏற்படுத்தி இருந்தன. யப்பான் ஒரு சுதந்திர நாடு என்பதால், யுத்தகால நினைவுகளை மீட்டிப் பார்ப்பதற்காக இதைச் செய்ய முடிந்தது.

யப்பானிய வருடமான 2600ல் இந்த ரக விமானம் தயாரிக்கப்பட்டதால், ஸீரோ பைற்ரர் என்று பெயர் சூட்டப்பட்டது. (Named as 'Model 00' or 'Zero' or A6M Zero) இந்த விமானத்திற்கான வடிவமைப்பை மிற்சுபிசி நிறுவனத்திற்காக டாக்டர். ஜீரோ கொறிஹோஸி (Dr. Jiro Horikoshi) என்பவரே செய்திருந்தார். 1942ம் ஆண்டளவில் நடந்த யுத்தத்தின் போது 'வெற்றி வீரன்' என்ற சிலேடைப் பெயரையும் இந்த விமானம் பெற்றிருந்தது. சுமார் 3879 விமானங்கள் இந்த நிறுவனத்தால் அப்போது தயாரிக்கப்பட்டன. இதுவரை சுமார் 10,430 ஸீரோ பைற்றர் விமானங்கள் தயாரிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இதன் சராசரி நீளம் 29 அடி 9 அங்குலமாகும். 10 அடி உயரமான இதன் செட்டையின் நீளம் 39 அடி 4 அங்குலமாகும். 1930 மைல்கள் வரை தொடர் பறப்பில் ஈடுபடக்கூடியதான இதன் வேகம் மணிக்கு 331 மைல்களாகும். 33,000 அடி உயரம் வரை பறக்கக்கூடியது இந்த ஸீரோ பைற்றர்.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது எதிரிகளைத் தாக்குவதற்கு யப்பானிய கடற்படையினர் இத்தகைய விமானங்களையே அதிகமாகப் பாவித்தனர். 1941ம் ஆண்டிற்கும் 1945ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் 1000க்கு மேற்பட்ட எதிரிகளின் விமானங்களைச் சுட்டு வீழ்த்திய பெருமை இந்த ஸீரோ பைற்றர் விமானங்களுக்கு உரியது. 'ஹமிக்காஸி' (Kamikasi) என்று அழைக்கப்பட்ட யப்பானிய விசேட தாக்குதல் படையினரும் இந்த ஸீரோ பைற்றர் விமானங்களையே அதிகமாகப் பாவித்தனர். ஒரு தீவுபோல மிதந்து கொண்டிருந்த யுஎஸ் எஸ் பங்கஹில் (USS Bunkerhill) என்ற விமானந்தாங்கிக் கப்பல் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்துவதற்கு இந்த ரக விமானங்களே பயன்படுத்தப்பட்டன. யப்பானில் உள்ள தீவுகளில் ஒன்றான கையூசு தீவுதான் விமானப் படையின் விமானங்களின் பறப்புகளுக்கான முக்கிய விமானத்தளமாக யுத்த காலத்தில் இருந்தது. இத்தீவில் உள்ள கனோயா விமானத் தளத்தில் இருந்துதான் மிக்காஸி விமான ஓட்டிகளும் எதிரிகளைத் தாக்குவதற்காகப் புறப்பட்டுச் சென்றிருந்தனர். Ensign Kiyoshi Ogawa and Lieutenant Seizō Yasunor என்ற இருவரும் 1945ம் ஆண்டு மே மாதம் 11ம் திகதி ஸீரோ பைற்றர் என்ற யப்பானிய விமானத்துடன் சென்று கப்பலில் மோதித் தற்கொலைத் தாக்குதலை நடத்தினர். அந்தத் தற்கொலைத் தாக்குதலின் போது, கப்பலில் இருந்த சுமார் 389 அமெரிக்கப்படை வீரர்கள் கொல்லப்பட்டும், 264 பேர் காயமடைந்தும் இருந்தனர். இது போன்ற பல யுத்தக் கப்பல்கள் ஸீரோ பைற்றர் விமானத்தால் அழிக்கப்பட்டன.

இப்படியான அதிரடித் தாக்குதல்கள் யப்பானிய விமானப்படைக்கு ஒரு எழுச்சியைக் கொடுத்தது என்றே சொல்லலாம். பசுபிக் கடலில் உள்ள யுத்தக் கப்பல்களுக்கு யமனாக இருந்தது இந்த ஸீரோ பைற்றர் விமானங்களே. ஒவ்வொரு யுத்தக் கப்பல்களையும் தாக்கும் போது வேறுபட்ட யுக்திகளை யப்பானியர்கள் கையாண்டனர். எதிரிகளின் கப்பலைத் தாக்குவதற்கு அதி உயரத்தில் ஸீரோ பைற்றர் விமானம் ஒன்று செல்லும் போது, அதே சமயம் கடல் மட்டத்தோடு வேறு ஒரு ஸீரோ பைற்றர் விமானமும் செல்வதுண்டு. எதிரிகள் ஒரு விமானத்தில் கவனம் செலுத்தும் போது மற்ற விமானம் கப்பல் மீதான தற்கொலைத் தாக்குதலை மேற்கொள்ளும். இரண்டாம் உலகமகா யுத்தத்தின் போது, ஒரு கட்டத்தில் இனியும் பொறுக்க முடியாது என்ற நிலையில், யப்பான் மீது அணுக்குண்டுகள் போடப்பட்டு யப்பான் நாட்டைச் சரணடைய வைத்தாலும், அவர்கள் தங்கள் வீரத்தையும், சாதனையையும் இன்றும் நினைவுபடுத்திக் கொண்டே இருக்கின்றார்கள்.

*உசாத்துணை:*

- http://www.japantoday.com/category/national/view/zero-fighter
- www. en.wikipedia.org/wiki/Mitsubishi_A6M_Zero
- http://ww2db.com/battle_spec.pup?battle_id];uP17



kuruaravindan@thaiveedu.com



# சகலவிதமான மோட்கேஜ் தேவைகளுக்கும்...

## என்னை முதலில் அழையுங்கள்

வருமான உத்தரவாதம் இல்லாமலே பெற்றுக் கொடுக்கப்படும்

# 416.873.5780

## உங்கள் தேவை இவற்றில் ஒன்றா?

- வீட்டு விலை உயர்வை சாதகமாக்கி உங்களின் கடன்களில் இருந்து விடுபடவேண்டுமா?
- வீட்டின் Equity யைப் பயன்படுத்தி உயர் வட்டியில் உள்ள கடனில் இருந்து விடுபட வேண்டுமா?
- வீட்டுத்திருத்த வேலைக்கு தேவையான பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- சொந்த தேவைக்காக (Proposal Payment, பிள்ளைகளின் படிப்பு, அரங்கேற்றம், சுற்றுலா) பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- பிறிதொரு வீட்டை வாங்க தேவையான முற்பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- உயர் வட்டியில் உள்ள மோட்கேஜ்ஜை குறைந்தவட்டியிலுள்ள மோட்கேஜ்ஜாக மாற்ற வேண்டுமா?
- சொந்த தொழில் செய்பவர்கள் வீடுவாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- புதிதாக கனடாவுக்கு வந்தவர்கள் மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- வெளிநாட்டில் உள்ளவர்கள் கனடாவில் வீடுவாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- பெற்றோர் பிள்ளைகளுக்கு வீட்டை மாற்றி மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- கிறடிற் பிரச்சினை (Consumer Proposal, Late payments, previous bankruptcy) ஆனால் வீடு வாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- அவசர தேவைக்கு 2nd Mortgage எடுக்க வேண்டுமா?

* some conditions apply



KAPITAL CARE
MORTGAGE INC. Lic-12623

**Kethes**
**Sivasubramaniyam** AMP
*Mortgage Agent - (Lic # M08006105)*

5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


25
YEARS IN BANKING &
MORTGAGE SERVICES
Sri T. Sridharan, B.Sc. AICB
Mortgage Professional
Professional MORTGAGE solutions by reputed professional
with banking and mortgage management experience
Dir: 416-953-3297 Fax: 416-287-2483 E-mail: sridharan@finmor.ca
10 Milner Business Court, Suite 208, Toronto, ON, M1B 3C6
Thanking My Clients, Key Partners &
Well-wishers for Their Continued Support!
FINMOR
FINANCIAL SERVICES
Lic. # M14000782
Lic. # 10530
MORTGAGE ALLIANCE
You deserve much more than you think

# காப்புறுதி நட்டஈடு



செந்தூரன் புனிதவேல்
காப்புறுதி முகவர் -


சென்ற இரு மாதங்களாக முறையே வாகன- காப்புறுதி கட்டணமும் வீட்டுக் காப்புறுதிக் கட்டணமும் நிர்ணயிக்கப்படுகிறது என்று கவணித்தோம். இம்முறை அப்படி நிர்னயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தியவர்கள், தங்கள் உரிமைப் பணத்தை (claim) எப்படி பெறுவது என்று கவணிப்போம்.

இது விடயம் பற்றி குறிப்பிடு முன்பு வேறு ஒரு விடயத்தை இங்கு நான் தருவது பயனுடையதாகும். உங்களுக்கு சிறுவயதில் படித்த குரங்கு அப்பம் பிரித்த கதை ஞாபகமிருக்கலாம். சுருக்கமாக கூறுவதானால் இரு பூனைகள் அப்பத்திற்காகச் சண்டை பிடிக்கையில் அதனை பிரித்து தருவதாக ஒரு குரங்கு கூறி கடைசியில் அந்தக் குரங்கு முழு அப்பத்தையும் சாப்பிட்டுவிட்டது. அதேபோல் இங்கும் காப்புறுதி அமைப்புகளுக்கும் அதன் வாடிக்கையாளர்களுக்கும் இடையில் அப்பம் பிரிக்க முற்படும் குரங்குகள் பலர் உண்டு. அவர்கள் அப்பம் முழுவதையும் உண்டு விட்டு ஏப்பம் விடுகிறார்கள். இப்படியான குரங்குகள் முதலில் உங்களிடம் கையொப்பம் பெற்று உங்கள் ஏகபோக பிரதிநிதியாக தம்னம் வைத்துக் கொண்டு அப்பத்தை சாப்பிட முற்படுகிறர்கள். எனவே எந்த நிலையிலும் ஒரு பத்திரத்தில் கையொப்பமிடு முன் அதில் என்ன கூறப்பட்டிருக்கிறது. உங்கள் எந்த உரிமைகளை விட்டுக் கொடுக்கிறீர்கள் என்பதை தெளிவுசெய்து கொள்ளுங்கள். இதில் வள்ளுவர் கூறிய...

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்னும் 423வது குறள் பெரிதும் பொருந்தும்.

## உரிமைப் பணத்தை கேட்பது பயனுள்ளதுதானா?

அடுத்து உங்கள் உரிமைப் பணத்தைப் பற்றி கவனிப்போம். முதலாவதாக நீங்கள் மனதில் கொள்ள வேண்டியவிடயம் deductable எனப் படும் கழிவுப் பணம். அதாவது நீங்கள் எந்த ஒரு காப்புறுதியிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை கழித்துக் கொண்டு மிதி இழப்புகளைத்தான் கொடுப்பார்கள். இந்த கழிவுப் பணம் மாறுபட்டிருக்கலாம். சில காப்புறுதி உடன் படிக்கையில் $300ஆக இருக்கும் வேறு சிலவற்றில் $500ஆக இருக்கலாம். எனவே இத்தொகையை அறிந்திருப்பது மிக்க அவசியம். இப்படியான கழிவுத்தொகை இருப்பதற்கு காரணம். சிறு சிறு அசம்பாவிதம் நடக்கும் வேளைகளில் அதன் உண்மை நிலையை அறிவதற்காக பெரும் செலவு ஏற்படுவதாலும், சிறு தொகை ஒருவர் வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தாது என்பதாலும் இத்தகைய கழிவுத் தொகை இட்டுள்ளார்கள். இத்தொகையை சிலர் $1,000 ஆகவும் $5,000 ஆகவும் வைத்திருந்து கட்டணப் பணத்தை குறைவாக செலுத்துவதை இங்கு குறிப்பிடலாம்.

சில சந்தர்ப்பங்களில் உரிமைப்பணத்தை கேட்பது பயனற்றதாகிவிடும். உதாரணத்திற்கு உங்கள் $400 டொலர் பொறுமதியான துவிச்சக்கர வண்டி கானாமல் போகும் வேளையில் அதற்காக நீங்கள் பணத்தை கேட்டால் $300 டொலர் கழித்துக் கொண்டு $100 டொலர் மட்டுமே தருவார்கள். அதுவுமல்லாமல் கட்டுப் பணமும் 10% விகிதத்தால் கூடிவிடும் எனவே சிறு இழப்புகளுக்கு உரிமைப்பணம் கோருவது அறிவுள்ள செயலாகாது.

மேலும் அடுத்தடுத்து சிறுசிறு தொகையை பெறும் வேளைகளில் காப்புறுதியை இரத்துச் செய்யவும் இடமுண்டு. ஒருவர் முக்கியமாக ஞாபகத்தில் இருத்தவேண்டிய விடயம் காப்புறுதி என்பது ஒரு பாராமரிப்பு உடன்படிக்கை அல்ல (Insurance is not a Maintanence Contract)

- பொதுவாக ஒரு வாகண விபத்து நடக்கும் வேளையில் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேற்பட்ட விபத்துகள் நடந்தால் காப்புறுதி அமைப்புக்கு தெரியப்படுத்த கடமைப்பட்டிருந்தாலும், உங்கள் தவறினால் ஏற்படும் சிறு விபத்துகளுக்கு நீங்களே செலவு செய்வது, உங்கள் கட்டுத்தொகை அதிகரிக்காதிருப்பதற்கு பெரிதும் உதவும்.
- உரிமைப் பணத்தை கேட்பனவு செய்வதை உரிய காலத்தில் கேட்பதவசியம். உதாரணத்திற்கு ஒரு வாகன விபத்து நடக்குமிடத்து சாட்சிகளின் ஞாபகச் சத்தி குறைவதன் காரணமாக உங்களுக்குச் சாதகமானவர் பாதகமாகலாம் அல்லது உங்கள் பேஸ்மன்ட்டில் வெள்ளம் வரும் வேளைகளில், காப்புறுதி செய்தவார் உங்கள் கவலையீனம் காரணத்தால் ஏற்படவேண்டிய நஷ்டத்திலும் அதிகம் ஏற்பட்டதா? என்று சந்தேகப்படலாம். ஆரம்பத்தில் ஏற்பட்ட விபத்தினை நீங்கள் சரி செய்ய முயன்று தேவைக்கதிகம் நஷ்டம் ஏற்பட்டதெனச் சந்தேகப்படுவதுடன் தவறு எங்கு முதலில் ஏற்பட்டது என்பதை தீர்மனிப்பது கடினமாகலாம். இந்நிலையில் உங்கள் நஷ்டத்தின் மூலகாரணத்தை அறிய முடியாமல் நஷ்ட ஈட்டை நிராகரிக்கக்கூட இடமுண்டு எனவே காலதாமதமில்லாமல் நஷ்ட ஈட்டிற்கு படிவங்களை உடனே அனுப்பி வைப்பதவசியம்.
- "பொய் சொன்ன வாயிற்கு பொரி அரிசியும் கிடையாது" என்ற வாக்கு காப்புறுதிக்கு பெரிதும் பொருந்தும் உண்மையை தெரிவிப்பது எப்போதும் உங்களுக்கு நன்மையே தரும். உண்மையை திரித்து கூறும்போது அது பிரிதொருவேளை உங்களுக்கு தீமையைத்தரும். யாருமே தவறு செய்யலாம், ஆனால் அதை மறைக்க அல்லது திரித்துக் கூற முற்படும் வேளையில் தவறு குற்றமாக மாறி உங்களுக்கு எதிராக இயங்கும். இந்நிலையில் காப்புறுதி அமைப்பு உங்களை நேர்மை இல்லாதவர் என்ற காரணத்தால் தொடர்ந்தும் காப்புறுதி செய்ய மறுக்கலாம். அப்படி நடந்தால் மற்றைய அமைப்பும் உங்களுக்கு காப்புறுதி தர மறுக்கும்.
- காப்புறுதி அமைப்பு நஷ்ட ஈட்டாக ஒரு காசோலையை நீட்டும் வேளைகளில் கிடைத்தமட்டில் இலாபம் என்று பெற்றுக் கொண்டு இருப்பது ஒரு நல்ல திட்டமல்ல. சற்றுக் கவணமாக நடந்த நட்டத்தையும், காரணங்களையும், அதற்காக தரப்பட்ட நட்டஈட்டுத் தொகை நியாயமானதா என்று கவணித்துப் பாருங்கள். அத்தொகை மிகக்குறைவாக இருப்பின் உங்கள் வாதத்தை முன்வைத்து முறைப்பாடு செய்யுங்கள். எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்கவேண்டிய ஒரு விடயம் "சத்தம் போடும் சில்லுக்குத்தான் எண்ணை இடப்படும். எனவே உன்மையாகவே கொடுக்கப்பட்ட நஷ்டஈடு குறைவாக இருப்பின் முறைப்பாடு செய்யுங்கள்.
- உங்களுக்காக நீங்கள் வாதாடுங்கள். ஒருவேளை காப்புறுதி அமைப்பு உங்களை சார்ந்து இருக்காமல் இருக்கலாம். ஆனால் நிச்சயமாக அவர்கள் உங்கள் எதிரியல்ல, இங்கு முக்கியமாக கவணிக்க வேண்டிய விடயம் யாதெனின் நஷ்டஈட்டை பெறுபவர், தான் சரி என்று எண்ணும் மொத்தத் தொகையையும் காப்புறுதி அமைப்பு தரவேண்டும் என்று நிணைப்பது இயல்பனதே அதே வேளை காப்புறுதி அமைப்பு எது நியாயமானது என்று எண்ணுகின்றதோ அத்தொகையை கொடுக்க முன்வரும். ஒரு நஷ்டஈட்டை தீர்ப்பது என்பது ஒவ்வொருவருடைய மனநிலையை பொறுத்திருக்கும் இதனில் உடன்பாடு காண்பது தான் முக்கியம்.


## வழக்கறிஞரை நாடுவது:

ஒரு நஷ்ட ஈட்டுத் தொகையை தீர்மாணிப்பது என்பது இருவருக்கிடையில் இனக்கப்பாட்டை ஏற்படுத்துவதே. உங்களுக்கு நியாயமான நஷ்ட்ட ஈட்டை கொடுக்க வேண்டிய கடமைப்பாடு காப்புறுதி அமைப்புக்கு உண்டு. ஆனால் நீங்கள் உங்கள் உரிமையைக் கேட்டுப் பெற்றுக் கொள்வதவசியம். இந்த நஷ்டஈட்டு பெறுவதில் நீங்களும் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறிர்கள் என்பதை மறந்து வடலாகாது. எனினும் பெரும் விபத்துகள், அனர்த்னங்கள் ஏற்படும் வேளைகளில் உங்கள் பிரதிநிதியாக ஒரு வழக்கறிஞரை நாடுவது சிறப்பாகும். அதற்கு முன் உங்களுக்கு காப்புறுதி தந்த முகவரினுடன் கலந்தாலோசியுங்கள். அடுத்து, உங்கள் நஷ்ட ஈட்டைத் தீர்மானிப்பவருடன் கலந்தாலோசியுங்கள். இதுவும் திருப்த்தி இல்லையென்றால் எல்லா காப்புறுதி அமைப்புகளுக்கும் ஒரு Ombuds Person அல்லது சமரசம் செய்பவர் இருப்பார். அவரிடம் உங்கள் அதிருப்பதியை தெரிவிக்கலாம். இதுவும் சரியில்லை என்றால் ஒரு வழக்கறிஞரின் ஆலோசனையை நாடலாம். அதற்காக இடையில் நிற்கும் தரகரை நாடுவது அறிவுடமையாகாது.

இறுதியாக ஒரு அறிவுரை எந்த ஒரு காப்புறுதியும் ஒரு உடன்படிக்கையே. அதில் உங்கள் உரிமையை விட்டுக்கொடுக்க வேண்டாம். எந்த ஒரு காப்புறுதி கொடுப்பனவும் பேரம் பேசியே தரப்படும் என்பதை மறக்கலாகாது.

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■

# Transmission பாவனை

- அதீசன் சர்வானந்தன் -

## clutch (Manual Transmission) சறுக்க ஆரம்பித்து விட்டால் என்ன செய்யவேண்டும்?

clutch குறைவான மைல்கள் தான் இயக்கப்பட்டுள்ளதா (40,000 மைல் / 65,000 km அல்லது அதற்கு குறைவானது) என்பதை பொறுத்த விடயம் இது. Clutch, இயந்திரத்தின் பகுதியில் சரியாக இணைக்கப்படாமல் இருந்தாலோ அல்லது அதில் எண்ணெய் அழுக்குகள் அதிகமாக படிந்திருந்தாலோ சறுக்கல் ஏற்படும். உங்கள் clutch அதிக எண்ணிக்கையான மைல்கள் (60,000 / 96,000 km அல்லது அதற்கு மேலானது) இயக்கப்பட்டிருந்தாலும், அதன் பாகங்கள் தேய்ந்து போயிருக்கும். அப்படியானால் புதிதாக Clutch மாற்ற வேண்டும்.

என்ஜினின் கீழ்புற பகுதியை சோதனை செய்யுங்கள் எண்ணெய் கசிந்துள்ளதா என்பதை பாருங்கள். Oil pan அல்லது bell housing மீது எண்ணெய் தென்பட்டால், கீழ்புற பகுதியிலுள்ள பிரதான oil sealல் எண்ணெய் கசிகிறது என்பதை அறிந்து கொள்ளலாம். எண்ணெய் கசியும் வேறு இடங்கள் எவை எனில் என்ஜினின் பின்புறம் இருக்கும் mani fold மற்றும் valve cover gasketகள், அத்துடன் உள் இயக்கத்தை கடத்தும் shaft seal ஆகியனவாகும்.

எதனால் எண்ணெய் கசிந்தொழுகிறது என்பதை தெரிந்து கொள்வதற்கு முன் நீங்கள் clutchஐ மாற்றாதீர்கள். clutchliningகளில் அதிக அளவு எண்ணெய் அழுக்குகள் படிந்திருந்தால். அவற்றை சுத்தம் செய்யமுடியாது என்பதால் நீங்கள் புதிதாக ஒரு clutch diskஐ பொருத்துவதுதான் ஒரேவழி. அப்போது தான் clutch சரியாக இயங்கும். எண்ணெய் கசியவில்லை என்றால் clutch இணைக்கப்பட்ட பகுதியை சோதனை செய்யுங்கள் அனேக கார்களில் clutch மிக சரியாக இயங்குவதற்கு ஒரு cable இணைப்புடன் கூடிய தானே இயங்கும் செயல் நுட்பம் வடிவமைக்கப்பட்டிருக்கும். அந்த cable tight ஆக இருப்பதை விட loose ஆக இருக்கும் படிதான் பொருத்தப்பட்டிருக்கும் தவறான இயக்கத்தால் அது tight ஆகிவிட்டால் clutchன் இணைப்பு பகுதியில் கோளாறு ஏற்பட்டு விடும். Hydraulic இணைப்பு முறைகள் உள்ள வாகனங்களிலும் இதே மாதிரி ஏற்படும். Clutchஐ யாராவது தவறாக இயக்கினால் இந்த இணைப்பு பகுதி மோசமாகி சறுக்கல் ஏற்படும்.

Facingகள் தேய்ந்துவிட்டாலோ அல்லது Pressure plateல் spring tension போய் விட்டாலோ சறுக்கல் உண்டாகும். Clutch தவறாகவோ அல்லது அதிக எண்ணிக்கையிலான மைல்கள் இயக்கப்பட்டிருந்தாலோ தான் pressure plate சேதமடைய நேரிடலாம். நாட்பட்ட இயக்கம் clutch diskன் facingகளை தேய்த்து போக வைக்கும். அதனால் அவை fly wheelன் மீது சரியான அழுத்தத்தை தரமுடியாது. இதற்கு clutch diskஐ மாற்றவேண்டும்.


Clutch மற்றும் fly wheelஐ பரிசோதிக்கும் போது pressure plate சேதமடைந்துள்ளதா என்பதையும் கவனிக்கவேண்டும். Fly wheelன் friction surface எப்போதும் நன்றாக இருக்க வேண்டும். அது flat ஆகவும், நேர்த்தியாகவும், சுத்தமாகவும் மற்றும் உடையாமலும் இருப்பது அவசியம் இல்லையென்றால் fly wheelஐ reface செய்யவேண்டும். Fly wheel உஷ்ணத்தால் நிறம் மாறிப்போயிருந்தாலோ, அதில் ஏதாவது பள்ளங்கள் ஏற்பட்டிருந்தாலோ, அல்ல அது சேதமடைந்திருந்தாலோ அதை resurface செய்யவோ அல்லது புதிதாக மாற்றவோ செய்யவேண்டும்.

## எத்தனை தடவைகள் automatic transmission fluidஐ மாற்ற வேண்டும்?

அது அவசியமில்லை என்று தயாரிப்பாளரின் குறிப்பு புத்தகங்கள் குறிப்பிடுகின்றன. அதனால் தான் என்னவோ, transmission கடைகள் automatic transmissionகளை அதிக அளவில் விற்று லாபம் சம்பாதிக்கின்றன. ஆயினும் உங்கள் பாதுகாப்பிற்கு ஒவ்வொரு 30,000 மைல்(48,000 km) களுக்கு ஒருமுறை fluid மற்றும் filterஐ மாற்றுவது சிறந்த தீர்வு. மேலும் உங்களுடைய வாகனம் புதியது மற்றும் அதில் Dexron III ATF நிரப்பப்பட்டுள்ளது என்றால் அது 100,000 மைல் (160,000 km)கள் வரை நன்றாக ஓடும் என்று நிச்சயமாக நம்பலாம்.

## Why ATF (தானே இயக்கத்தை கடத்தும் கருவி) தேய்ந்துபோகிறது?

உராய்வினால் தானே இயக்கத்தை கடத்தும் கருவியின் உட்பக்கம் அதிக அளவு உஷ்ணமடைகிறது. Torque converterன் உள்ளே சுழலும் fluid உண்டு பண்ணும் உராய்வு (Fricition), Clutch plateகள் வேலை செய்யும் போது உருவாகும் உராய்வு மற்றும் gearகள் மற்றும் bearingகள் இயங்கும் போது ஏற்படும் உராய்வு ஆகியன ATFஐ விரைவில் உஷ்ணப்படுத்திவிடுகின்றன. சாதாரண வாகன



ஓட்டத்திலேயே fluid வெப்பநிலை 175 டிகிரிக்கு உயர்ந்து விடுகிறது. வழக்கமாக இந்த உஷ்ண நிலையில் தான் அனேகமான fluidகள் வேலை செய்யுமாறு உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் ATF 100,000 மைல்கள் வரை நிச்சயமாக நீடித்து உழைக்கும். அனால் fluid வெப்ப நிலை மிக அதிகமாக உயர்ந்து விட்டால் fluidஇன் ஆயுள் ஊசல் ஆடத் தொடங்கி விடும். சாதாரண வாகன ஓட்டத்திலேயே fluid வெப்ப நிலைகள் பாதுகாப்பு அளவுகளையும் தாண்டி அதிகரிக்கலாம். அதனால் கோளாறு உருவாக நேரிடலாம். மிக அதிகமான வெப்ப நிலைகளில் இயங்கும் போது ATF, பிராண வாயுவினால் எரியூட்டப்பட்டு (Oxidizes) பழுப்பு நிறமாக மாறி, ஒரு கருகிய வாடையை வெளியேற்றும். உஷ்ணம் fluidஇன் வழவழப்பான பசைத் தன்மைகளையும் மற்றும் உராய்தல் இயல்புகளையும் அழித்துவிடும் போது valve body போன்ற உட்புற பகுதிகளின் மீது Varnish படிய ஆரம்பித்து விடும். அது transmissionஇன் இயக்கத்தை தடைசெய்யும். வெப்பநிலை 250 Degrees Fஐ விட அதிகரித்தால் rubber sealகள் கடினமாகிவிடும். அதனால் கசிவுகள் மற்றும் அழுத்தக்குறைவுகள் ஆகியன ஏற்படும். மேலும் transmission சறுக்க ஆரம்பித்து, உஷ்ணம் மிக அதிக அளவு உயர்ந்து விடும். இதன் காரணமாக clutchகள் எரிந்துவிடும் மற்றும் transmission வேலையை நிறுத்திவிடும். இதனால் ஏற்படும் சேதத்தை. பாகங்களை பிரித்தெடுத்து முழுதும் பழுதுபார்ப்பதன் மூலமே சரி செய்ய முடியும். ஒரு பழைய model front wheel drive car அல்லது ஒரு mini vanஐ பழுது பார்த்து ஓட வைப்பதற்கு சமம் தான் இதுவும்.

175 degreeக்கும் மேலாக அதிகரிக்கும் ஒவ்வொரு 20 degree வெப்ப நிலையும் fluidன் ஆயுளை பாதியாக ஆக்கிவிடும் என்பது தான் பொதுவான நியதி. உதாரணமாக 195 degrees வெப்ப நிலையின் போது fluidன் ஆயுள் 50,000 மைல்களுக்கு குறைக்கப்பட்டுவிடும் பல transmissionகள் வழக்கமாக 220 degrees என்ற நிலையில் தான் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. அதனால் fluid சுமார் 25,000 மைல் (40,000 km) கள் மட்டுமே இயங்க முடியும் 240 degrees Fல் fluid 10,000 மைல் (16,000 km)களுக்கு மேல் இயங்காது. இன்னும் 20 degrees கூடிவிட்டால், fluidன் ஆயுள் 5,000 மைல்(8,000 km)களுக்கு குறைந்துவிடும். 295 அல்லது 300 degrees F வரும் போது 1000 முதல் 1500 மைல்(1,600 - 2,400km)கள் வரை தான் இயங்கும். அந்த நிலையில் transmission ஒருவேளை எரிந்தாலும் எரிந்து விடும்.

அதிக அளவு fluidஐ விற்பனை செய்வதற்கு ATF உற்பத்தியாளர்கள் செய்யும் வியாபார தந்திரம் இது என்று ஒருவேளை நீங்கள் நினைக்கலாம். அப்படியானால் அனைத்து transmission கோளாறுகளில் 90 சதவீதம் அதிக அளவு உஷ்ணத்தினால் மட்டுமே ஏற்படுகின்றன என்று Automatic Transmission REbuilders Association வெளியிட்ட அறிக்கையை சிந்தித்துப்பாருங்கள். எனவே தேய்ந்து போன fluidக்கு பதிலாக புதியதை மாற்றுவது தான் சிறந்த தீர்வு.

அனேகமான வாகனங்களில், radiatorஇன் அடிப்பகுதியில் அல்லது அதன் மூலையில் உள்ள tankல் ஒரு சிறிய heat exchanger பொருத்தப்பட்டிருக்கும். அது தான் automatic transmission fluidஐ குளிர்ச்சி அடைய வைக்கும். ஒரு குறுகிய pipe வழியேணுடும் மிக சூடான ATF இவ்வாறு பிரத்தியேகமான முறையில் குளிரவைக்கப்படுகிறது. ஏனென்றால் radiator 180 முதல் 220 degrees வெப்ப நிலையில் இயங்கி கொண்டிருக்கும்.

சாதாரண Oil cooler கருவி வெப்ப நிலையை மிகக் குறைந்த அளவில் மட்டுமே குறைக்க உதவுகிறது என்று பரிசோதனை முடிவுகள் சுட்டிக் காட்டியுள்ளன. 300 degrees வெப்ப நிலையில் உள்ள ATF, radiator coolerக்குள் நுழைந்து வெளியேறும் போது அதன் வெப்ப நிலை 240 முதல் 270 degrees Fஆக இருக்கும். வெப்ப நிலை 10 முதல் 20 சதவீதம் தான் குறைக்கப்படும். Fluid ஆயுளுக்கு இது மிக உகந்ததாக இல்லை. ஒரு trailerஐ வாகனத்தில் இழுத்துச் செல்லுதல், மலைப் பகுதியில் வாகனம் ஓட்டுதல், உஷ்ணமான கால நிலையில் வெகு வேகமாக வாகனம் ஓட்டுதல், போக்குவரத்து நெரிசலில் அடிக்கடி வாகனத்தை நிறுத்தி நின்று நின்று போகுதல், சேற்றில் அல்லது பனியில் tire (ரயர்) புதைந்து விட்டால் வாகனத்தை பின்னால் செலுத்துவதற்கு அதிவேகமாக்குதல் போன்ற காரணங்களினால் ATFஇன் குளிர்ச்சயடையும் திறன் குறைந்துவிடுகிறது. மேலும் குறைபாடுள்ள cooling fan, fan clutch, thermostat அல்லது Water pump மற்றும் radiatorஇல் ஏற்பட்டுள்ள அடைப்பு ஆகியவற்றாலும் ATF அதிக அளவில் உஷ்ண மடையும். எற்கனவே transmission coolerகளுக்கு துணை cooler உபகரணம் மிக அவசியம்.

## Auxiliary Cooling (துணை குளிர்ச்சியூட்டும் உபகரணம்):

ஒரு Auxiliary transmission fluid coolerஐ பொருத்துவதினால், fluid இயங்குவதற்கான சாதகமான வெப்ப நிலைகளை மிக சுலபமாக உருவாக்க முடியும். Plate மற்றும் fin ரக cooler, tube மற்றும் fin வடிவமைப்பை விட அதிக திறன் வாய்ந்தது. ஏற்கனவே இருக்கும் coolerக்கு துணையாக இரண்டில் ஏதேனுமொன்ற பொருத்துவதில் மூலம் fluid வெப்ப நிலைகளை 80 முதல் 140 degrees வரை குறைக்க முடியும். சாதாரணமாக குளிர்ச்சியடைய வைக்கும் இதன் திறன் 35 முதல் 50 சதவீதம் என்ற அளவில் இருக்கும்.

## ATF fluid வகைகள்:

உங்கள் transmissionல் எந்த வகை automatic transmission fluidஐ நீங்கள் பயன்படுத்த வேண்டும்? இதற்கான பதிலை உங்கள் தயாரிப்பாளரின் குறிப்பு புத்தகத்திலோ அல்லது transmission dipstickல் அச்சடிக்கப்பட்ட எழுத்துக்களையோ பாருங்கள்.

**குறிப்பு:** மின்னனு உபகரணத்தால் கட்டுப்படுத்தப்படும் transmissionகள் உள்ள சில நவீன வாகனங்களுக்கு Dexron II அல்லது Dexron III fluid தேவைப்படும். பழைய வாகனங்களுக்கும் Dexron IIக்கு பதிலாக Dexron III fluid மிக உகந்தது என்று GM சிபாரிசு செய்கிறது.

**எச்சரிக்கை:** Fluidஐ ஜாக்கிரதையாக பயன்படுத்த வேண்டும். தவறான வகை fluid என்றால் transmission shiftகள் சரியாக நடை பெறாது. Dexron II தேவை என்றால் அதற்கு பதிலாக Type F fluidஐ பயன்படுத்தினால் Transmission shift மிக கடினமாக ஆகிவிடும். அது போன்று Type F fluid தேவை என்றால் அதற்கு பதிலாக Dexron IIஐ பயன்படுத்தினால் கனத்த பாரத்தை ஏற்றிச் செல்லும் போது transmission சறுக்கலாகி clutch விரைவில் தேய்ந்துவிடும்.

**எச்சரிக்கை:** Transmission fluidஐ மாற்றும்போது அதிக அளவு நிரப்பாதீர்கள். மிதமிஞ்சிய fluid நுரைக்க ஆரம்பித்து விடும். அதன் காரணமாக ஒழுங்கில்லாத shifting oil தட்டுப்பாடு மற்றும் transmission சேதம் ஆகியன ஏற்படும். மேலும் transmission sealகள் வழியே ATF கசிய ஆரம்பித்து விடும். முதலில் அரை quart ஊற்றுங்கள் fluid சூடாகி இருக்கும் போது dip stickஇன் அளவுகோலை பார்க்க வேண்டும் என்பதால் என்ஜினை வெறுமனே ஓடவிடுங்கள். பிறகு வாகனத்தை சிறிது தூரம் ஓட்டி fluid அளவை மீண்டும் சோதனை செய்யுங்கள். பின்னர் dip stick முழு அளவையும் காட்டுவது வரை fluid ஐ ஊற்றி நிரப்புங்கள்.

atheesan.s@thaiveedu.com



**RES Home Direct**
*We make your financial dreams come true...*

**Equitable solutions to all your financial problems!**

**Purchase & refinance for Restaurants, Gas stations, Plazas, Churches & Motels** (Downpayment from 25% )

மனம் கேட்கும் இல்லம் கிடைத்தால் வாழ்கை என்பது சொர்க்கம்தான்

**Now is the time to buy your Dream home**

- Residential 1st Mortgage with low interest rates
- Home Equity line of Credit and Refinance (80% LTV,Interest From 3.75)...
- New Immigrant, Low income, Self Employed & Bankruptcy
- Commercial Mortgage up to 20 million (with Interest rate From 4.75*)
- Commercial refinance / Construction loan & more
- Store with apartment, Duplex, Triplex Rental Properties.
- Private Funds for Bad credit & Collection Agency settlement.
- We deal with all major banks, trust companies and private lenders.

**Get your debt relief now**


- ✓ Mortgage Payment in Arrears
- ✓ Credit Card Payments In Arrears
- ✓ Property Taxes in Arrears
- ✓ Rejected by the Bank
- ✓ Debt Consolidation
- ✓ Collection Agency settlement

**Bank Say No? We Say Approved!**

**Commercial / Residential, Private 2nd mortgage available with Low interest**


You will get the best rate regardless of good or bad credit!

**T. Antony Ponrajah**
Mortgage Agent Lic # M08004007
Commercial & Construction Financing Specialist
**Tel: 416-431-5115** | Dir : 416-457-0651
antonyres@gmail.com | Fax : 416-628-3120



**New Town Sq Builder's**
Authorized Commercial Mortgage Agent
**40 New Delhi Dr Unit 107A**
**Markham,ON,L3S 0B5**






GALAXY CONDO

Royal Living
in Scarborough

www.galaxycondo.com
647-829-7979



# DEVADAS LAW
## PROFESSIONAL CORPORATION

### What if your Lawyer is also an Accountant?



- Tax Law
- HST - New Housing Rebate and Residential Rental Property Rebate Claims
- Appeals to CRA / Tax Court of Canada
- CRA Questionnaires / CRA Audits
- Tax planning for businesses and individuals
- Business law – Incorporations / Purchase, Sale & Lease
- Employment Law – Termination / Dismissal Claims
- Estate Planning and Last Wills

**Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA**
***Barrister & Solicitor***
devadas@vdlaw.ca



- Real Estate – Residential / Commercial - Purchase, Sale & Refinancing
- Family law – Divorce / Separation / Custody & Support
- Immigration – Sponsorship / Super Visa / Work Permits
- Power of Attorney, Affidavits, Statutory declaration
- Notarization & Commissioning

**Vasuki Devadas**
***Barrister, Solicitor & Notary Public***
vasuki@vdlaw.ca

**DROP IN FOR A FREE 30 MINUTE INITIAL CONSULTATION**
Evenings & weekends consultation by appointments

## Devadas Law Professional Corporation
**LAW with ACCOUNTability**

**1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6**
**Next to RBC @ Kennedy & Ellesmere**

## Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
**www.vdlaw.ca**


**Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"**


Call Before You List See The Difference!!!
YORK MILLS/VICTORIA PARK
3
2
$189,900
Great Value! 3 Bedroom Corner Unit With Fantastic Space And Functional Layout. Large Sunken Living Room, Huge Balcony.
HWY 427/REXDALE
1+1
1
$189,900
Luxury Tridel Built Condominium Conveniently Located Near All The Amenities You Need! This Bright And Spacious 1 Bdr + Den.
VICTORIA PK/DANFORTH
2
1
$199,900
Close To All Amenities- Subway, Shopping, School, Park, Golf Course, Ttc, Place Of Worships ** Demand Building ** Corner Unit.
SHEPPARD/MARKHAM
1+1
1
$239,900
Functional 1 Bedroom + Den Unit! Den Has Walk In Closet And Can Be Easy To Convert Unto Second Bedroom. Beautiful Finishes!
MCCOWAN/HWY 401
2
1
$269,000
Bright And Spacious 2 Bedroom Suite At Lee Centre. One Of The Best Layouts In The Building With No Wasted Sq Footage.
BRIMLEY/ELLESMERE
3
2
$379,900
Beautiful 3 Bed Rooms Corner Unit On 22nd Floor In A Tridel High Rise Building With An Unobstructed View. Freshly Painted.
MCCOWAN/ELLESMERE
2
2
$409,000
Spacious 2 Bedroom 2 Washroom Suite With An Amazing Unobstructed South East Panoramic View On A High Floor.
YONGE/FINCH
2
2
$425,000
Luxury Tridel Triomphe 2 At Northtown, $$$ Spent In Total Renovation, Bright Corner Suite With Lots Of Windows, Walkout To Balcony
YONGE/DORIS
2
2
$438,000
Move In Condition.Tandon Parking For 2 Full Size Cars. One Of The Finest Condo In Yonge/Finch Area. Built By Tridel. Bright And Spacious.
McCOWAN/ELLESMERE
3+1
3
$469,000
Stunning 3 Bedroom Penthouse Suite With An Unobstructed North View And Double Balconies. Nice Upgrades Including SS Appl.
YONGE/EMPRESS
2
2
$482,000
Empress Walk, One Of The Best Buildings In North York. Bright & Spacious. Direct Access To Subway, Shops and all Amenities.
BROCK/TAUTON
3
3
$499,900
Gorgeous Semi Detached Home In High Demand & Conveniently Located Duffin Heights. Ideal Open Concept Family Friendly Floor Plan.
BROCK ROAD/TAUNTON
3
3
$520,990
1 Year Old Lebovic Home, Comfortable Living. Close To Public Transit And Shopping, Parks & Golf Course, Close To Hwy 407 & 401.
MAVIS/STEELES
3+1
4
$529,900
Beautiful Well-Maintained 3+1 Bdrm With 4 Baths Semi-Detached Home In A Friendly Neighborhood. Freshly Painted.
VICTORIA PARK/YORK MILLS
3
2
$739,000
Stunning! Completely Top-To-Bottom Newly Renovated 3 Level B/Split Home! Absolutely Move-In Condition! Startling Floor.
WOODBINE/MAJOR MAC
3+1
4
$759,900
Premium Corner Lot Home In Cornell. Exceptionally Large Open Concept Floorplan. Main Floor Features Enormous Family Room, Library.
VICTORIA PK/HUNTINGWOOD
4+1
4
$988,800
Fabulous Sun-Filled Home Located In A High Demand Area,Close To Transit,Shopping,Parks,Highways & Other Amenities.
MARKHAM/CASTLEMORE
4
4
$999,800
pectacular Upgrd Executive Hm In High Demanded Local Step To Park! Gorgeous & Fabulous Finishes! Absolutely Stunning.
LORNE PARK/INDIAN RD
4+2
8
$2,480,000
Stunning Custom Build Home In Desirable Lorne Park. Over 6,000 Sq. Ft. Of Luxury Living Space. Unique Center Hall Layout.
LIST YOUR HOME HERE!
Call Now! Free & No Obligation Evaluation
RE/MAX Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002
Dir:416-992-4474
www.HouzzValue.ca
2009-2014
2007-2008
Yathavann
SELVARAJAH
Sales Representative


ENTER FOR A CHANCE TO
WIN
WITH HOMELIFE GALAXY REAL ESTATE LTD., BROKERAGE
BUY • SELL • LEASE
THROUGH OUR BROKERAGE
GRAND PRIZE
civic 2017*
Win 1 of 3
All inclusive Trip*
for 2 to the Caribbean
HOMELIFE
HIGHER STANDARDS
DRAW DATE:
GALAXY GALA NITE 2016
November 4th 2016 @ 10 pm
* Winning prices shown above may not look exactly same, No Purchase necessary.
*Visit www.homelifegalaxy.com for terms and conditions
HomeLife Galaxy
REAL ESTATE LTD., BROKERAGE, INDEPENDENTLY OWNED & OPERATED
Tel: 416.284.5555 | Fax: 416-284-5727
111 Grangeway Ave, #301, Toronto, ON M1H 3E9
*Not intended to solicit buyers or sellers under contract with any other brokerages

# பெற்றோர் பொய் கூறல் பற்றிய உண்மை

- த. சிவபாலு -




பொய் சொல்லுதல் அல்லது பொய் சொல்ல வைத்தல் இவை இரண்டிற்கும் மிக நெருங்கிய தொடர்பிருப்பதனைக் காணலாம். பெற்றோர் பிள்ளைகளுக்குப் பொய் சொல்லுகின்றார்கள். அவர்கள் அவற்றைப் பொய் என உணர்ந்துகொண்டோ அன்றி அவற்றால் பிள்ளைகள் பொய் சொல்லப் பழகுவார்கள் என்றோ நினைப்பதில்லை. பிள்ளைகளின் நன்மைக்காக என எண்ணிக் கொண்டே அவர்கள் பல பொய்களைச் சொல்லுவார்கள்.

பிள்ளைகள் பல காரணங்களுக்காகப் பொய் சொல்லுவார்கள். பெரியவர்கள் பொய் சொல்வது போலவே அவர்களும் பொய்களைச் சொல்லுகின்றார்கள். தண்டனையைத் தவிர்ப்பதற்காக, ஏதாவது ஒரு அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்காக, விரும்பத்தகாத ஏதாவது செயற்பாட்டுக்களின் விளைவுகளின் பயனாக, அல்லது தங்கள் தற்துணிவையோ - தன்னிலையினையோ தற்பெருமையையோ நிலைநாட்டும் நோக்கத்தோடு அல்லது தங்களைப் பற்றிய கருதுகோளை மேம்படுத்துவதற்காகப் பொய் சொல்லுவார்கள். சில வேளைகளில் பெரியவர்கள் பொய் சொல்லுவதைப் போன்று தன்னதிகாரத்தை நிலை நிறுத்துவதற்காக அல்லது தனித்துவத்தைப் பேணிப்பாதுகாத்துக் கொள்வதற்காக அல்லது நண்பர்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காகப் பொய் சொல்லுவதனைக் காணலாம். இந்த நிலை சாதாரணமாக நான்கு வயது முதல் 12ம் வகுப்பு வரையான மாணவர்களிடையே காணப்படுகின்றது. ஒரு குழந்தை பொய் சொல்கின்றது என்றால் அது அப்போதுள்ள நிலைமையை மாற்றுவதற்காகப் பொய் சொல்கின்றது என்பதனை மிகக்கவனமாக அவதானிக்கும்போது வெளிப்படும்.

பிள்ளைகள் பொய்சொல்லும் நிலையானது படிப்படியாக அதிகரித்துச் செல்லும் ஒரு போக்காகக் காணப்படுகின்றது. முதலாவது நிலையில் அவர்கள் சில இலக்குக்களை அடைவதற்காக அல்லது மற்றவர்களின் பாராட்டைப் பெற்றுக்கொள்ளுவதற்காகப் பொய் சொல்லுவார்கள். பிள்ளைக்குத் தான் சொல்லுவது பொய் என்ற எண்ணமும், நம்பிக்கையும் அவர்களிடத்திலே காணப்படும். அவர்களின் எண்ணம் சிலவேளைகளில் கேட்டுக்கொண்டிருப்பவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக அல்லது அவர்களின் பாராட்டைப் பெற்றுக் கொள்ளவதாகவும் பொய் சொல்லுவதாக இருக்கலாம்.

பெற்றோர் பிள்ளைகளுக்குப் பொய் சொல்லுவது என்பது மிகவும் சாதாரணமான ஒன்று. 'நான் ஒரு நல்ல தந்தை, அத்தோடு நான் எனது பிள்ளைகளுக்குப் பொய் சொல்கின்றேன்' என Aaran Gouveia என்னும் எழுத்தாளர் (www.huffingtonpost.com/aaron-gouveia) குறிப்பிடுவது சற்று சிந்திக்க வைக்கின்றது. நல்ல பெற்றார் எனக் கூறும் ஒருவர் எவ்விதம் பிள்ளைகளுக்குப் பொய் சொல்லமுடியும் என எண்ணத் தோன்றுகின்றது. அதாவது

*வாய்மையும் பொய்மையிடத்துப் புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்.*

- குறள் 292

என வள்ளுவன் கூறிப்போந்தது பிள்ளைகளின் நன்மைக்காகப் பெற்றோர் சொல்லும் பொய் நன்மை பயப்பதாக அமைந்தால் அதனை ஏற்றுக்கொள்ளலாம் என்னும் கருத்தையும் முன்வைக்கின்றனர். ஆனால் ஆரன் கௌவேயா 'பொய் சொல்லுவது என்னை ஒரு நல்ல பெற்றாராக ஆக்கிக் கொள்ளாது' என்பதனை அவர் ஒத்துக் கொள்கின்றார். ஆனால் அவர் பல்வேறு காரணிகளுக்காகப் தனது பிள்ளைகளுக்குப் பொய் சொல்லுவதாகக் குறிப்பிடுகின்றார். அது மட்டுமன்றி 'பெற்றோர்கள் அனைவருமே பிள்ளைகளுக்குப் பொய் சொல்கின்றார்கள். அவ்விதம் யாரும் இல்லை என்று மறுப்பவர்கள் சுத்தமற்ற மனதுள்ள மோசமான பொய் பேசுபவராகத்தான் இருக்க முடியும்' என அறுதியிட்டுக் குறிப்பிடுகின்றார். பிள்ளைகளுக்குப் பொய் சொல்லுவது அவர்களைப் பாதுகாக்கவே என்றும் அவர் குறிப்பிடுகின்றார். எங்களுக்கு எப்போதும் சரியான விடைகள் கிடைப்பதில்லை அப்படியான வேளைகளில் நாம் பொய் சொல்ல வேண்டியவர்களாகின்றோம் எனக் குறிப்பிடுகின்றார். அதற்கு எமது சோம்பேறித்தனமே காரணமாகும் என்கின்றார். பிள்ளைகளைப் பாதிக்கக் கூடிய பொய்களைச் சொல்லுவதற்கும் சாதாரணமான சிறிய பொய்யைச் சொல்லுவதற்குமிடையே வேறுபாடுகள் இருப்பதாகக் குறிப்பிடுகின்றார்.

பிள்ளைகளுக்கு எந்தெந்தச் சந்தர்ப்பங்களில் பெற்றோர் பொய்சொல்லுகின்றார்கள் என்பதனைப் பட்டியலிட்டுக்காட்ட முடியும். அவர்கள் ஏன் பொய் சொல்ல வேண்டி வருகின்றது என்பதனைக் கீழ்வரும் பட்டியல் கோடிட்டுக் காட்டுகின்றது. பிள்ளைகள் மீது பெற்றோர் கொண்டுள்ள செல்வாக்கும், பாடசாலை கொண்டுள்ள தாக்கமும் அவர்களை சமூக நடத்தைகளைக் கற்றுக்கொள்ளவும் அவற்றிற்கு எதிராக நடந்து கொள்ளவும் கற்றுக்கொள்ள வைக்கின்றது என்பதனை உளவியலாளர்கள் ஆய்ந்துள்ளனர். 1997ல் இசன் பேர்க் என்னும் உளவியலாளர் பிள்ளைகளின் சமூக விரோத நடத்தைகள் பற்றி ஆய்ந்து அறிக்கை செய்துள்ளார். பள்ளியில் கற்கும் போது அவர்களுக்கு வளங்கப்படும் நிறங்களை மற்றவர்களுக்குக் கொடுக்க மறுப்பது அல்லது ஒழித்து வைத்துக்கொள்வது என்பன சாதாரணமாக பிள்ளைகளிடம் காணப்படும் சமூக முரண்பாடான நடத்தையாகும். ஆனால் இவற்றைப் பெரிதாக ஆசிரியர்கள் கருதுவதில்லை. இதற்கு சமூகம் கற்றுத்தரும் பாடங்களையும், பெற்றோரிடம் இருந்து கற்றுக்கொள்ளும் பாடங்களையும் மட்டுமன்றி பரம்பரை அணுக் கருத்தையும் முன்வைக்கின்றார்கள். இதுபற்றி Janes W.Vander Zanden என்பவர்கள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளமையை தனது நூலில் குறிப்பிடுகின்றார்.

### பெற்றோர் சொல்லும் பெய்களைப் பின்வருமாறு பட்டியலிடலாம்:

**நத்தார் தாத்தா உனது நடவடிக்கைகளைப் பார்க்கின்றார்:**

பிள்ளைகளின் உளப்பாங்கையும் நடத்தையையும் சரிசெய்வதற்காகச் சொல்லும் சிறிய பொய்.

**பாலைக் குடித்தால் பெரிதாகவும் உயரமாகவும் வளரலாம்:**

பிள்ளைகளின் வளர்ச்சியில் அவர்களின் பரம்பரை அணு 95 விழுக்காடு செல்வாக்குச் செலுத்துகின்றது. மீதியே உடலின் ஏனைய மாற்றங்களுக்குக் காரணி. பால் குழந்தைகளுக்கு நன்மையானது. அவர்களது எலும்பும் பற்களும் உறுதியானவையாக வளர்வதற்குத் தேவை. இதனால் சிறு பொய்யும் நன்மை பயக்கும்.

**நாங்கள் ஏறக்குறைய வந்துசேர்ந்துவிட்டோம்:**

போகவேண்டிய தூரம் அதிகமாக இருப்பினும் குழந்தைக்கு பிரயாணம் செய்ய முடியாத நிலையில் திருப்திப்படுத்தச் சொல்லும் பொய்யாகும். இது தவிர்க்க முடியாத நிலையினை ஏற்படுத்திவிடுகின்றது. இதனால் தாயோ தந்தையோ பொய் சொல்லுகின்றார்கள்.

**எனக்குத் தெரியாது:**

பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லமுடியாதநிலையில் அவர்களுக்கு எனக்குத் தெரியாத எனப் பொய் சொல்லுவது வழக்கம்.

**படுக்கை நேரம் வந்துவிட்டது:**

அது நேரம் மாறும் நாளாக இருந்தாலும். இன்னும் ஒரு மணித்தியாலம் இருந்தாலும் கூட பிள்ளைகளைப் பொய்கூறிப் படுக்கைக்கு அனுப்பிவிடுகின்றோம்.

**ஓ இது மிக நல்ல சுவையாக உள்ளதே:**

மனைவிக்குக் கூறுவதும் பொய், அதே நேரம் பிள்ளையை உண்ண வைப்பதற்காகச் சுவையில்லாத உணவை உண்டு பார்த்து நலல சுவையாக உள்ளதே என்று கூறுவதும் பொய்தான்.

**அந்த ஓவியம் மிகவும் அழகாக உள்ளதே:**

பிள்ளைகள் செய்யும் வேலைகளைத் தட்டிக் கொடுப்பதற்காக அல்லது அவர்களைத் திசை திருப்ப குறிப்பாக கணினி விளையாட்டுகளில் இருந்து மாற்றிவிடப் பொய் சொல்லுகின்றார்கள். அவர்களது ஓவியம் நன்றாக இல்லையாயினும் பொய் சொல்லுகிறார்கள் என்பது பிள்ளைகளுக்குத் தெரியாமலா இருக்கும்.

**உனது ஓவிய ஒப்படை எங்கு சென்றது என எனக்குத் தெரியாது:**

நாளாந்தம் அதிக படங்களைக் கீறும் பிள்ளையின் படங்கள் சமயலறைச் சுவர்களில் தொங்கவிடப்பட்டால் இடம் போதாமையாலும், அது அழகில்லாமல் இருப்பதாலும் அவற்றைப் பெற்றோர் அகற்றி விடுகின்றனர். பிள்ளைகளுக்கு உங்களுடைய ஏனையவற்றிற்கு இடம் தேவைதானே என்று ஏமாற்றுகின்றார்கள். அது மட்டுமின்றி எல்லாவற்றையும் சேகரித்துவைப்பதற்கு நாம் என்ன பழைய பொருட்களைச் சேமித்துவைப்பவர்களா எனவும் கூறுவது பெரும் பொய்யாகவே உள்ளது.

**எனது செல்பேசி பற்றி குறைந்துவிட்டது:**

பிள்ளை உங்கள் செல்பேசியில் விளையாடலாமா என்று கேட்டால் அதற்கு இல்லை என்று சொல்லாது 'பற்றி' குறைந்துவிட்டது என்று பொய் சொல்லுவது பெற்றோரின் வழக்கமாகும். அது மட்டுமன்றி சில பெற்றோர் இப்படிச் சொல்லிவிட்டுத் தாங்களே செல்போனில் விளையாடுவார்கள்.

**நானும் அம்மாவும் படுக்கப்போகின்றோம்:**

பிள்ளை ஏதும் விளையாடிக்கொண்டிருந்தால் படுக்கை நேரம் இன்னும் ஒரு மணித்தியாலம் இருந்தாலும் அந்தப்பிள்ளையை படுக்கை அறைக்கு அனுப்புவதற்காக பொய் சொல்லுவது. பிள்ளை தனியே இருந்து வரவேற்பறையில் விளையாடமாட்டாது என்பதனால் அது மட்டுமன்றி நான் தொலைக்காட்சியை நிற்பாட்டவில்லை அதனை நாய் கேட்டால்தான் நித்திரை கொள்ளும் எனக்கூறிவிட்டுத் தொலைக் காட்சி பார்க்கும் பெற்றோரின் பொய் எத்தகையது?

**நீங்கள் இன்று வைத்திய நிலையத்தில் ஊசி ஏற்றுவதில்லை:**

நால்வருக்கும் தடை மருந்து ஏற்றச் செல்லும் வேளை பிள்ளை அழுகின்றது உடனடியாக இலலை என்று பொய் சொல்லுவது பெற்றோரின் தற்காலிக செயற்பாடு. அழுகையை நிறுத்தச் சொல்லுவதாக அமைந்தாலும் அது பொய் என்பதனை உணர்வதில்லை.

*தொடர்தல் 64ம் பக்கம்*

# பெற்றோர் பொய் கூறல்...

63ம் பக்கத் தொடர்ச்சி...

**உங்களுக்கு பூனை ஒத்துக்கொள்ளாது (ஒவ்வாது):**
நீங்கள் பூனையை வைத்திருக்க முடியாது உங்களுக்கு அது ஒவ்வாமை நோயைத் தரும் என்று பொய் சொல்லும் வழக்கம். இது பிள்ளையின் மீது பழியைப் போடும் செயலாகவும் அமைகின்றது.

**நாய் உனது இனிப்பு எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட்டது:**
நாய், பூனை இரண்டும் மிகவும் விரும் பத்தக்க செல்லப்பிராணிகள். பெற்றோர் பிள்ளைகளை ஏமாற்ற அவற்றைப்பயன்ப டுத்துவது மிகவும் சாதாரணம். உங்களுக்கு விருப்பமான எல்லாவற்றையும நான் உண் டுவிட்டது, தாங்களே உண்டுவிட்டு நாய், பூனையை சாட்டும் வழக்கம் பல பெற் றோரிடமும் உண்டு.

**குழந்தைகள் எப்படி உருவாகின்றார்கள்:**
பெற்றோர்கள் அன்புப்பிணைப்பில் தம்மை மெய்மறந்து உறவாடும்போது குழந்தை கள் அவர்கள் விரும்பித் திட்டமிடாத வேளை களிலும் உருவாவது வழக்கம். வளர்ந்த பிள்ளைகள் வீட்டில் இருக்கும்போது இத் தகைய பொய் சொல்லவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

**நத்தார் பாப்பா, பற்தேவதை, ஈஸ்ரர் பணி போன்றன உண்மையிலேயே வருவதில்லை:**
பிள்ளைகளின் மகிழ்ச்சிக்காகப் பெற்றோர் அவர்கள் புகைபோக்கியூடே வந்து பரிசில் களை வைத்துவிட்டுச் சென்றார்கள் எனப் பொய் சொல்லுவது பிள்ளைகளுக்கு நன்கு தெரியும். என்றாலும் அவர்களுக்கு நல்ல பரி சில்கள் கிடைப்பதால் அவர்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளுகின்றார்கள்.

**உங்களது மிகவிருப்பமான செல்லப்பிராணி விடுமுறையில் உள்ளது:**
மிக விருப்பமான செல்லப்பிராணி வேண்டும் என அடம்பிடிக்கும் பிள்ளைக்கு அதனை வாங்கித் தருகின்றேன் எனக்கூறி ஏமாற்று வதற்காகப் பல கதைகளைச் சொல்லுவது பெற்றொரின் நாளாந்த பொய்யாகவே காணப்படுகின்றது.

**விளையாட்டுச் சாமன் கடை அல்லது டிஸ்னிவேள்ட் போன்றவை இன்று மூடப்பட்டுள்ளது:**
பிள்ளைகளை அழைத்துச் செல்வதாக அல்லது வாங்கித் தருவதாகக் கூறிவிட்டுப் பின்னர் அவை மூடப்பட்டுள்ளன எனப் பொய் சொல்வதும் பெற்றேரின் கைவண் ணங்களில் உள்ளன.

**ஐஸ்கறீம் முடிந்துவிட்டது:**
எங்கள் ஒருவருக்குமே ஸ்கிறீம் இல்லை. நீங்கள் படுக்கைக்குப் போகும்வரையும் ஐஸ்கிறீம் வான் வராது எனச் சொல்லி படுக்கவைத்தல்.

**இது ஒரு கட்டு:**
நான் மாட்டேன், நான் நிலத்தைக் கழுவி விட்டேன், அது மூடப்படவில்லை போன்ற வார்த்தைகள் பிள்ளைகளின் காதுகளில் படும்போது அவை பொய்யான வார்த்தை கள் என்பதனை அவர்கள் உணர்ந்து கொள் வார்கள். பொருத்தமற்ற வேளைகளில் உப யோகிக்கப்படும் வார்த்தைகளின் அர்தம் பிள்ளைகளைச் சிந்திக்கத்தூண்டும்.

**உங்களது மீன்கள் தூக்கமடைந்துள்ளன:**
பிள்ளைகளுக்கு விளங்காத வகையில் கண வன் மனைவியின் கருத்துப் பரிமாறல் சிலவேளைகளில் அவர்களுக்குச் சொல் லும் பொய்யாகப் படும். பிள்ளைகளின் செவிகளில் எவ்வித இடக்கரடக்கல் வார்த் தைகளும் கேட்காதபடி நடந்துகொள்ளுதல் மிக முக்கியமானது.

**நாங்கள் உங்களுக்கு எதுவும் நடக்கவிடமாட்டோம்:**
எனது பணம் உங்களுக்காகவே. எனக் கூறும் தந்தையோ தாயோ அதனை ஒரு சிறந்த பொய்யாகவே கூறுகின்றனர். வள் ளுவர் கூறியது போன்று ‘பொய்மையும் வாய்மையிடத்துப் புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்’ என்பதாக அமைகின்றது. பிள்ளைகள் பாதுபாப்பாக இருக்க வேண் டும் என்பதே.

**அம்மாவும் நானும் மல்யுத்தம் செய்கின்றோம்:**
பெற்றோர் கதவினை பூட்டிவிடாமலோ அன்றி பிள்ளைகள் தூங்காமலே இருக்கும் வேளை களில் பாலியலில் ஈடுபடுவதனை அவர்கள் கண்டுகொண்டால் பொய்சொல்லித் தான் ஆகவேண்டும். அம்மா என்னை அமத்தி அடக்கப்பார்க்கிறார். சண்டையிடுகின்றார். அல்லது அப்பா என்னோடு மல்யுத்தம் புரிகின்றார். அவரைச் சும்மா விடச்சொல் லுங்கள் என்று பிள்ளைகளை ஏமாற்றுவ தனை வெறும் பொய் எனக்கூறாது அது சந்தர்ப்பவசத்தால் தாம் மேற்கொண்ட தவறினால் சொல்லவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

**பொருட்களை வாங்கிக்கொடுக்காமை:**
வேண்டுமென்றே பிள்ளை சொல்லிவிட்ட பொருளை வாங்காது வந்துவிட்டு அதற்கு மறந்துவிட்டேன், என்னிடம் பணம் இல்லை, பின்னர் வாங்கலாம். அதற்கு இப்பொழுது என்ன அவசரம். என்றெல்லாம் பிள்ளைகளை ஏமாற்றும் நிலைமை பல பெற்றோர்க ளுக்கு ஏற்படுகின்றது.

பொய்சொல்லாத பெற்றோர் இல்லை என் னும் அளவிற்குப் பெற்றோர் தம்மையறி யாமல் பொய்சொல்லுவது, அறிந்து தாம் தப்பிக்கொள்வதற்காகப் பொய் சொல்லு வது. இயலாமையால் பொய்சொல்லுவது சோம்பலால் பொய்சொல்லுவது. அக்க றையீனத்தால் பொய்சொல்லுவது எனப் பல்வேறு வழிகளில், பல்வேறு சந்தர்ப்பங் களில் பொய் பேசுகின்றார்கள். இவற்றை அவர்கள் மிகவும் பாரதூரமான விளை வினை ஏற்படுத்தும் என எண்ணுவதே இல்லை. பிள்ளைகள் பொய் பேசப் பழக பெற்றோர்கள் இவ்வழிகளில் காரணர்களா கின்றனர்.

‘எந்தப்பிள்ளையும் நல்லபிள்ளைதான் மண் ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவ தும் கெட்டவராவதும் அன்னை வளர்ப்பி னிலே’ எனக் கண்ணதாசன் பாடிய பாட லில் புதைந்துள்ள உளவியல் தத்துவத் தைக் கருத்திற்கொள்ளுதல் மிக முக்கிய மானதாகும். ‘குழந்தைக்கில்லைக் கள்ளச் சிந்தை’ என்பார்கள். ஆம், பிள்ளை பொய் சொல்ல ஆரம்பிப்பதற்கு அது வாழும் சூழல்தான் முக்கிய காரணம் என்பதனை கருத்திற்கொண்டு. குழந்தை கருவில் இருக் கும் காலந்தொட்டு வளர்ச்சியடையும் வரை பொய், ஏமாற்று என்பனவற்றை அவர்க ளின் பிஞ்சு உள்ளங்களில் தூவி விடாமல் பாதுகாக்க வேண்டியது பெற்றோரின் கட மையாகும்.

**உசாத்துணை:**

- Human Development, Third Edition- by Janes W.Vander Zanden, Alfred A.Knopf, New York-1985
- The Developing Person –through childhood and Adolescence, Fifth Edition, by Kathleen Stassen Berger; Worth Publishers, 2000 – New York
- Behavior Child ‘Why Kids Lie – Age by Age, By Julette Guilbert, 2015
- 19 Lies Parents Tell Their Kids, Aaron Gouveia; Huffpost Parents-05/12/2014
- ‘When Parents lie’ by Kate Roverts’ Psychology Today, June 15, 2014


sivapalu@thaiveedu.com




2015ல் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் பிரிவு 2 தேசியரீதியில் நடாத்திய உதைபந்தாட்ட இறுதிபோட்டியில் தேசியமட்டத்தில் முதல் முறையாக வெற்றிபெற்ற தமிழ் அணி

**யா.நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுகழகம்**



யா/நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுகழக உதைபந்தாட்ட அணியைபாராட்டி நடைபெறும் நிதி சேகரிப்பும் இராபோசன விருந்தும்.

காலம் : ஏப்ரல் 22, 2016
இடம் : J & C Banquet Hall
1686 Ellesmere Road, Scarborough, ON M1H 2V5
நேரம் : மாலை 6:00

தொடர்புகளுக்கு
Regi Manuelpillai 416 843 5832 | Asir Antony 647 701 2505

**நாவாய் கனடியன்ஸ்**

மார்ச் 4, 2016

அன்புடையீர்,

[illegible]

[illegible]

[illegible]

மேற்கூறிய வாகனத்தின் பெறுமதி 25,000.00 — 30,000.00 கனடியன் டொலர்கள் [illegible] ஏப்ரல் 22, 2016 [illegible] JC Banquet [illegible]

நன்றி.

அன்புடன்,
நிகழ்வுஒருங்கிணைப்பாளர்கள்

றெஜி மனுவல்பிள்ளை
மனுவல் ஜேசுதாசன்
கருணாரட்ணராஜா

veeduliving
Your Home. Your Life. Better.

# HOME & GARDEN APRIL 9 - 10 SHOW
## MARKHAM FAIRGROUNDS

PRESENTED BY
OHM DEVELOPMENTS

**FREE ENTRY & PARKING • HOURLY GIVEAWAYS**

**SATURDAY 10 AM - 8 PM SUNDAY 10 PM - 6 PM**

உங்கள் விட்டை மேலும் அழகு படுத்தத் தேவையான அனைத்தையும் தெரிந்து கொள்ளவும் உங்கள் திட்டங்களுக்கு பொருத்தமான துறைசார் வல்லுனர்களையும் அவர்களின் வேர்த்தியான வேலைப்பாடுகளையும் ஒரே இடத்தில் பார்த்து அறிந்துகொள்ளவும் ஓர் அரிய சந்தர்ப்பம்

80+ வர்த்தகர்கள் + உணவு சாவடிகள் + மணித்தியாலத்திற்கு ஒரு முறை இலவச பரிசுகள்

சுய செயல்முறை பயிற்சிப்பட்டறைகள் கருத்தரங்குகள் உணவு தயாரிக்கும் முறைகள் இன்னும் பல



நட்சத்திர தொகுப்பாளர்
**Paul Lafrance** ஐ
சந்திக்கும் வாய்ப்பு

PLATINUM SPONSORS
COMPUTEK COLLEGE — BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY
Abi Singam

GOLD SPONSOR — AJAX NS DENTAL
MEDIA SPONSOR — ATN
FOOD SPONSOR — Chef RAMANAA

தீபன் பாலசுப்ரமணியம்
416.317.2986

For more information visit
VEEDULIVING.COM


புதுப்பொலிவுடன் புதிய முகவரியில்!!
தூயபொன் கொண்டு
தயாரிக்கப்பட்ட
முகசரும கிரீம்!!
24 carat Gold Revitalizer - exfoliating facial
A spa quality facial peel without damaging acids or abrasive polishing agents.Gold Revitalizer, sloughs off old, dead skin cells revealing fresh, smooth skin.
எலும்பு, மூட்டு ஆரோக்கியத்திற்கு!!
NanoCal is a supplement that has been approved by the US FDA as a CURE for osteoporosis and osteoarthritis. NanoCal can actually reverse and cure these conditions!
Combining best practices from Eastern herbal medicine and Western research, the Sagee capsule was developed after years of dedicated research by a team of scientists and herbal medicine specialists. SAGEE capsule is a pure natural herbal product extracted and refined through advanced GMP/ISO facility Canada. It is non-toxic, non-addictive and has no side effects.
NANOCAL
SAGEE
HIGH POTENCY
PURE HERBAL EXTRACTS
GOLD REVITALIZER
Ervamatin
Hair Lotion
கஸ்தூரி மஞ்சள்
உள்ளிட்ட
பல மூலிகைகள் கொண்டு
தயாரிக்கப்பட்ட கிரீம்
சருமத்தை பாதுகாப்பாகவும் பொழிவாகவும் பேண
நம் மூதாதையர் பாரம்பரியமாக பயன்படுத்திய
கஸ்தூரி மஞ்சள் கொண்டு தயாரிக்கப்பட்ட முக சரும பராமரிப்பு!!
Kasturi
TURMERIC
Kasturi
TURMERIC & SANDALWOOD
Day Cream
முடி உதிர்வை தடுப்பதுடன்
புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம்
அளிக்கிறது. கபாளத்தில் பொடுகைப்
போக்குவதுடன் மூலிகை முடியை செழிப்பாக
வைத்திருக்கு உதவுகிறது.
Dreamron
ECO
Hair Color
Specially for:
Dreamron
HENNA
ஊழைச்சதை நீக்கி!!
சலரோக நிவாரணி!!
Gluteala
Diabina
ஒவ்வாமை அற்ற
முடி மை
மூலிகை தரும்
இன்னுமோர் அற்புதம்!!
மூலிகை
முடி மை!!
மூலிகைகள், உடலின் தேவைக்கதிமாக
உள்ள ஊழைச்சதையை நீக்கி
தேக ஆரோக்கியத்தைப் பேணுகின்றன.
மூலிகைகள், உடலின் குளுக்கோஸ்
அளவை பராமரிப்பதுடன்
இரத்த ஓட்டத்தை சீராக வைத்திருப்பதற்கு
துணையாய் இருக்கின்றன.
SABONA
& Gift
2466, Eglinton Ave East Unit 12B
Scarborough, ON. (Midland & Eglinton)
www.amazonhealthcare.ca 416•264•8787

# வன்னியின் நீர் வடக்கேயும் வருமா

- அ. கணபதிப்பிள்ளை

நீர் அரசியல் இலங்கையில் மாத்திரமல்ல உலக நாடுகளிலும் நாடுகளுக்கிடையேயும் மாநிலங்களுக்கிடையேயும் கவனத்தை ஈர்க்கவைக்கும் ஒன்றாக இருந்து வருகிறது. நதிகள் திசை திருப்பப்படுவதன் மூலம் மூலவளப் பயன்பாட்டிலும் மக்கள் வாழ்க்கையிலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. நதிகள் இயற்கை நிர்ணயித்த ஒழுங்கில் ஓடவிடப்பட வேண்டும் என்ற கருத்தானது மனித நீர்த்தேவை கூடிய இன்றைய காலகட்டத்துக்குப் பொருத்தமில்லை. நதியில் கிடைக்கும் மேலதிக நீரையோ மனிதாபிமான அடிப்படையில் குறிப்பிடத்தக்க அளவு நீரையோ அயற் பிரதேசங்களுக்குக் கொடுத்து அப்பிரதேசமக்களை வாழவைப்பது மனித நாகரிகத்தின் உயர்வான சிந்தனையின் பாற்பட்டதாகும்.

மகாவலி வடக்குக்குக்கு வரவேண்டும் என்பது வடபிரதேசத் தமிழர்களின் கனவு. மலை நாட்டின் மண்வாசத்தை மகாவலி சுமந்துகொண்டு செல்கிறது. கிழக்கிலங்கையையும் வட மத்திய மாகாணத்தையும் வளமாக்கிய மகாவலிகங்கை வடக்கையும் வளமாக்க வேண்டும் என்று மக்கள் நினைப்பதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. அரசியல் அதற்கு இன்னமும் இடம்கொடுக்கவில்லை.

வடக்குக்கு நீர் என்பது பொருளாதாரரீதியிலன்றி அரசியலடிப்படையில் வாக்கு வங்கியை வளர்த்துச்செல்லப்போவதில்லை. ஒருகாலத்தில் யாழ்தேவியை வடக்குக்குக் கொண்டு வருவதில் அரசாங்கத்துக்கு இருந்த முனைப்பும் அதன் பொருளாதார வாய்ப்பும் மகாவலியுடன் இணைத்துப் பார்க்க முடியாதது. அவ்வாறான பெரும்பான்மை மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கத்தக்க நிகழ்ச்சித்திட்டங்கள் தான் மத்திய அரசாங்கத்துக்குப் பலம் சேர்த்தது.

போரின் பின்பாக யாழ்ப்பாணம் என்ற இலட்சிய நகரமும் அந்த நகர வாழ்க்கையும் ஏற்படுத்திய ஈர்ப்பு முக்கியமானது. யாழ்ப்பாணம் உல்லாசப்பயண நகரமாக மாற்றங்கண்டதாக ஏனைய பகுதி மக்களின் பார்வைக்குள் வந்திருந்தது. இதுவே இலங்கையின் ஏனையபகுதிகளில் உள்ள மக்களை யாழ்ப்பாணத்தை நோக்கித்தள்ளக் காரணமானது. இந்த இருவிசைகளின் பாதிப்பும் யாழ்ப்பாணத்தின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டும் என்றதோர் தேவையினை வலியுறுத்தின. இன்றைய காலகட்டத்தில் நீரும் குடியிருப்புக்களும் நகர சேவைமையங்களும் மக்களது உள்ளூர் இடப்பெயர்வுக்கு ஈடு கொடுக்கும் நிலையில் இருக்க வேண்டியுள்ளது.

யாழ்பாணத்தின் கல்வி கலாசாரப்பாரம்பரியமானது யாழ்ப்பாணத்தைப் பாதுகாப்பதுடன் சனச் செறிவைக் கட்டுப்படுத்தும் நிலையிலும் இருப்பதால் யாழ்ப்பாணத்தைச் சுயதேவை நகரமாக மாற்றவேண்டிய கடமைப்பாடு மாநில, மத்திய அரசுகளின் கையில் கொடுக்கப்பட்டுள்ளது.

மகாவலி நீரை வடக்குக்குக்கொண்டுவருவதனால் யாழ் குடாநாட்டின் நிலத்தடி நீர் வளம் கூடும் என்பது முதலாம் கட்ட ஆய்வுகளில் தெளிவாகியிருந்தது. தொண்டமனாறு, உப்பாறு, ஆனையினவு, சுண்டிக்குளம் ஆகிய அணைகள் கட்டப்பட்ட பின்னர் யாழ்பல்கலைக்கழகப் பேராசிரியர் சோ.செல்வநாயகம் தலைமையில் நடாத்திய தென்மராட்சி நீர்வள ஆய்வு மூலமும் தொண்டமனாறு அணை தொடர்பான உயிரியல் துறை ஆய்விலும் நன்நீருக்கான வாய்ப்பு அதிகம் என்பது தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. இந்த அணைகள் கட்டப்பட்டதன் பின்னர் தொண்டமனாறு மற்றும் உப்பாற்றுப் பகுதிகளைச்சுற்றியுள்ள கிணறுகள் நன்னீராவது அடையாளம் காணப்பட்டிருந்தது.



தலைநிலப்பகுதியிலிருந்து நன்நீர்வருகையும் அதன்மூலம் தரைக்கீழ்நீர்ச் செறிவூட்டுதல்களும் நிகழுமாயின் குடாநாட்டின் குளங்கள் முடப்பட்டு விட்டன அதனால் தான் நன்நீர்ச் செறிவூட்டல் குறைந்து நீர் வீணே ஓடிக் கடலுட் செல்கிறது என்ற கருத்தில் மாற்றம் பெற வழியேற்படும். இன்று தீவுகளாகக் காணப்படும் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய மூன்று பெரிய நிலத் திணிவுகளும் ஒன்றாக இணைந்து கொள்ள வாய்புள்ளது. அதன் மூலம் நிலத்தடி நீர்த்தடாகங்கள் மிகப் பெரிதாகவும் ஆழமாகவும் மாறக்கூடிய சாத்தியநிலை ஏற்படுகிறது. அவற்றின் தொடர்ச்சியாக அயலில் உள்ள தீவுகளுக்கும் இந்நன்நீர்த்தடாக விஸ்தரிப்புக்கான வாய்ப்பினை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

பருவகாலத்தில் பெறப்படும் மழையை மாத்திரம் நம்பி அணைகளைப் பலப்படுத்தி நன்நீரைச் சேகரித்தால் வறட்சியான காலங்களில் நீர் வற்றிவிடுவதுடன் உவர் நீரின் அமுக்கம் கூடி மேற்பரப்பு நீர் விரைவில் உவர்நீராகக்கூடிய வாய்ப்புகள் அதிகம் என்று சொல்லலாம். மேற்பரப்பில் நன்நீரின் அழுத்தம் கூடவாகவிருந்தால் தரைக்கீழ் நீர்த்தடாகத்தின் ஆழமும் அகலமும் கூட வாய்ப்பு ஏற்படுகிறது.

மக்களது ஒன்றிணைந்த விளிப்புணர்வானது நீர்ச் நீர்ச்சமநிலை தொடர்பான விருப்பங்கொண்டதாகவும் வன்னியின் ஊடாக வழிந்தோடும் நீரை வளமாக்க வேண்டிய பகுதிக்குத் திருப்ப வேண்டும் என்ற விருப்பமும் இணைந்து உருவாகியதாக அமையவேண்டும். இதுவே தரைக்கீழ் நீர்செறிவூட்டுதலுக்கான அத்தியாவசிய தேவையாகும்.

வன்னி நீர் வடக்குக்கு வருவது இரண்டு வகையான திட்டங்களாயினும் குடிநீர்வழங்கும் திட்டமானது புதிதான நிகழ்ச்சித்திட்டமாகும். அதன் வாய்ப்புக்கள் பற்றி மக்கள் மட்டத்திலும் மாகாணசபை, மத்திய அரசு மட்டங்களிலும் விவாதத்துக்குட்பட்டு வந்திருந்தது. இதில் விருப்பு வெறுப்புக்கள் பலமட்டங்களிலும் இருந்தது உண்மை. ஒருபகுதி உயர்ந்து மறுபகுதிதாமும் என்ற மனப்போக்குத்தான் எந்தவொரு திட்டத்துக்கும் சவாலாக அமைந்து விடுகிறது. இரணைமடு நீர் வெளியேற்றத்தால் வன்னியின் நீர்வளம் குறைந்துவிடும் என்ற மனப்போக்கினை வன்னிமக்கள் உணர்வு பூர்வசிந்தனை மூலம் கருத்தேற்றியிருக்கிறார்கள். வன்னிமக்களும் அரசியல்வாதிகளும் குடிநீரைத்தடை செய்கிறார்கள் என்பது குடா நாட்டு மற்றும் தீவக மக்களது ஆதங்கமாக இருக்கிறது.

திட்டங்கள் எல்லாம் மக்களைக்கேட்டுச் செய்யப்படுவனவல்ல. அவற்றின் சாதகத் தன்மைகள் குறித்த ஆய்வுகளின் முடிவான வெளிப்பாடாக அவை அமையும். தெளிவான விளக்கங்களும் ஆய்வுகளும் மக்களிடம் சென்றடையவேண்டும். அதன் மூலம் எதிர்ப்பு என்பது இல்லாமற் போய்விடுகிறது. அத்தியாவசியம் ஒன்றிருப்பது பெறுபவர்களின் கோரிக்கையாக மாறவேண்டும் அவ்வாறிருப்பின் தாங்களாகவே நீரை எடுத்து வந்துவிடுவார்கள் ஆனால் இன்று எங்கு பிழை நடக்கிறது யார் தடுக்கிறார்கள் ஏன் தடுக்கிறார்கள் என்பது தெரியாமலே திட்டங்கள் கிடப்பில் போடப்படும் நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.

பேராசிரியர் இரா. சிவசந்திரன் உட்படச் சிந்தனைக் கூடத்தினைச் சேர்ந்த ஆய்வாளர்கள் தமது தொண்டு நிறுவனத்தினூடாகப் பலதடவைகளில் இத்துறைசார் ஆய்வுகளை வெளியிட்டிருந்தனர். அதில் யாழ்ப்பாணக் குடிநீர் வழங்கல் திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டியதன் உட

தொடர்தல் 68ம் பக்கம்



# வன்னியின் நீர்...

67ம் பக்கத் தொடர்ச்சி...

னடித்தேவை வலியுறுத்தப்பட்டிருந்தது. வடமாகாண சபையானது இதில் கூடிய அக்கறை காட்டாமலிருந்தது ஏன் என்ற கேள்வி பல தடவைகளில் எழுந்திருந்திருக்கிறது. வளம் சுரண்டப்படுதல் என்ற வகையில் நோக்கப்படுதல் ஒருபக்கம் அதன் சாதகத்தன்மை பற்றியும் அது குறித்த இலக்கைச் சென்றடையுமா என்ற கருத்து மறுபுறமும் இருக்கிறது. தவிரவும் அதற்கு ஏற்படும் செலவினை யாழ்ப்பாண மக்கள் தாங்கிக் கொள்வார்களா என்ற ஐயப்பாடும் ஏற்படுகிறது இத்தகைய முதற்செறிவான திட்டங்கள் பல பாதகவிளைவுகளை ஏற்படுத்தி விடுவதும் கூட இத்தகைய விருப்பமின்மைக்கு வழி ஏற்படுத்துகிறது. இத்திட்டத்துக்கான செலவைவிடக் கூடிய செலவில் அரசாங்கத்தின் பல திட்டங்கள் உருவாக்கப்பட்டிருந்தன என்பதனை எஸ் சிவதாசன் போன்றோர் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இரணைமடுக்குளம் வடமாகாணத்தில் உள்ள மிகப்பெரிய குளம். 1902ம் ஆண்டு முதல் இதன் கட்டுமான வேலைகளும் புனருத்தாரண வேலைகளும் இடம்பெற்றுவருகிறது. 1921ம் ஆண்டு 26 அடி உயரத்தினைக் கொண்ட அணையுடன் இக்குளம் உருவானது. 1950ல் 30 அடியாகவும் 1954 32 அடியாகவும் 1975ல் 34 அடியாகவும் அதன் அணை உயர்த்தப்பட்டது.

2006ம் ஆண்டில் மேலும் அணையில் 2 அடியினைக் கூட்டுவதன் மூலம் யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. 1984ல் ஏற்கனவே இருந்த குளக் கட்டின் இறுக்கமில்லாத தன்மையானது பொறியியலாளர் கே.விக்னேஸ்வரனினால் தெளிவாக்கப்பட்டிருந்தது.

வடமாகாணத்தின் முக்கிய ஆறான கனகராயன் ஆற்றினை மறித்து ஏற்கனவேயிருந்த இரண்டு குளங்களை இணைத்துத் தடுப்பணை போட்டப்பட்டதால் இரணைமடுக்குளம் என்று அழைக்கப்பட்டது. 588 சதுரக்கில்லோ மீட்டர் நீரேந்து பரப்பினைக் கொண்ட கனகராயன் ஆறு ஒரு பருவ கால ஆறாகவே உள்ளது.

இலங்கை அரசின் குறிப்புக்களின்படி குளங்களில் தன்னால் கட்டப்பட்ட குளங்களில் தான் தனது செல்வமிருக்கிறது என்று தான் கட்டிய குளங்களைக் காட்டியதனால் வெறுப்படைந்த சொந்த மகன் காசியப்பனானால் சுவருடன் வைத்துக் கட்டப்பட்ட தாதுசேன மன்னனால் இக்குளமும் கட்டப்பட்டது என்றும் அத்துடன் கனகராயன் குளம், முத்தையன்கட்டுக்குளம், கயந் தைக்குளம் ஆகியனவும் அவனால் கட்டப்பட்டது எனவும் சொல்லப்பட்டிருக்கிறது.

இடைக்காலங்களில் குளங்கள் பராமரிப்பு இன்றியே அழிந்தன. ஆங்கிலேயர் உள்ளூர் நிர்வாகத்திலும் உள்ளூருக்குரிய பொருளாதார நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்தத் தொடங்கிய பொழுதில் கனகராயன் ஆற்றில் குளம் கட்டக்கூடிய சாத்திய நிலைமையை அவதானித்து ஆங்கிலேய மாகாண ஆளுனர்களும் பொறியியலாளர்களும் செயலாற்றியிருந்தார்கள்.

இந்த இரணைமடுக்குளத்தில் சேகரிக்கப்படும் நீரைக் கரைச்சிப்பகுதியின் நகரவிவசாய மற்றும் குடிநீர்த் தேவைக்கும் மேலதிகமான நீரை குடாநாட்டில் நீர்த்தேவையுள்ள பகுதிகளுக்கும் குளாய்கள் மூலம் அனுப்பப்படும் திட்டமாக யாழ் - கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம் உருவாக்கப்பட்டிருந்தது.

1951ல் 30 அடி அணையைக் கொண்டு 71 ஆயிரம் ஏக்கர் அடிநீரும் 1954ல் 32 அடி உயர்தப்பட்டபொழுது 82000 ஏக்கர் அடிநீரும் 1975ல் 32 அடி உயர்த்தப்பட்ட பொழுது 106,500 ஏக்கர் அடிநீரும் சேமிக்கப்பட்டிருந்தது. புதிய திட்டத்தில் அணை 2 அடி உயரத்தால் உயர்த்தப்படும்பொழுது 13500 ஏக்கர் அடிநீர் மேலதிகமாகக் கிடைக்கும் என்ற உறுதி மொழியும் வழங்கப்பட்டது. அத்துடன் குளத்தின் அணைக் கட்டானது பலமாக்கப்பட்டு 100 வருட உத்தரவாதம் வழங்கப்படும் எனவும் சொல்லப்பட்டது.

1957ல் இடம் பெற்ற பெருவெள்ளத்தின் பொழுது இரணைமடுக்குளத்தின் அணை உடைந்து நீர் முற்றாக வெளியேறியிருந்தது. அதே நிலைமை மீண்டும் ஒரு தடவை ஏற்படுமாகவிருந்தால் குடிநீர் வழங்கும் திட்டத்தின் மூலம் பயன் கிடைக்காமற் போய்விடும். அத்துடன் வயல்களில் பயன்படுத்தப்படும் நீரில் பெருமளவு தேவைக்குப் பயன்படாது கழிவுவாய்க்கால்களூடாகக் கடலுட்செல்வதனால் விவசாயிகள் நீரைச் சிக்கனமுறையில் பயன்படுத்தமுடியாமையும் சுட்டிக்காட்டப்பட்டது. இதனடிப்படையில் வாய்க்கால்கள் புரைமைக்கப்படுவதும் இரணைமடுக்குளம் புணரமைக்கப்படுவதும் அவசியம் எனப் பலதரப்பினராலும் விதந்துரைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் இத்திட்டத்தினை உடனடியாகச் செய்துமுடிப்பது சாத்தியமில்லாததுடன் கரைச்சிப்பிரதேச விவசாயிகளுக்கு பலவித உத்தரவாதங்களும் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கான முதலீட்டினை விட அதனை நிர்வகிக்கும் பொறுப்பு மிகவும் கடினமாகவிருக்கும். நடைமுறைச் செலவு கூடுதலாகும் நிலை ஏற்பட்டால் அதனை வடமாகாண மக்களே தாங்கவேண்டிய நிலை ஏற்படும் என்பதனால் அதற்கான உத்தரவாதமும் வழங்கவேண்டியது அவசியமாகும். வடபிரதேசத்தில் உருவாக்கப்பட்ட பல ஏற்றுநீர்ப்பாசனத்திட்டங்கள் பலவகையான நிர்வாக மற்றும் நிதிச் சிக்கலை எதிர்நோக்கியிருக்கின்றன.


இரணைமடுவிலிருந்து குடாநாட்டின் முக்கிய பகுதிகளுக்கும் நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய தீவுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் இருப்பதனால் நீரை ஏற்று நீர்ப்பாசன முறையில் எடுத்துச் செல்லுதல், நீர் சுத்திகரிப்பு, நீர் வழங்கல், நீருக்கான பண அறவீடு என்பனவும் முக்கியத்துவம் பெறும். மக்களுக்கு நீரை இலவசமாகக் கொடுக்காவிட்டால் மக்கள் மாற்றுவழிகளைக் கண்டுபிடிப்பது சாத்தியமாக இருப்பதனால் நீரைக் கட்டாயப்படுத்தி விற்பனை செய்யவும் முடியாது போகலாம்.

முழுச்செலவும் மத்திய அரசாங்கம் செய்யுமாகவிருந்தால் நீரை இலவசமாகக் கொடுக்கமுடியும் அதனால் மத்திய அரசின் செல்வாக்கு அதிகமாகிவிடும். மாகாண அரசு செய்யவேண்டுமாயின் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அதிலிருந்து விடுபடவேண்டும் இரண்டும் சாத்தியமற்ற தொன்றாக விருக்கும்.

பலவகையான வாதப் பிரதிவாதங்களிருப்பினும் சாத்தியமான நிலைமையினைத் தெளிவுபடுத்தி அவற்றை மக்களின் முன் வைக்கவேண்டும். எந்த முடிவுகளிலும் ஒழிவுமறைவு இருப்பது சந்தேகத்தை ஏற்படுத்திவிடக்கூடியது. இந்தத் திட்டத்தின் பிரதான நிகழ்ச்சி நிரலையும் அவை ஏற்படுத்தக்கூடிய சாதகபாதக நிலைமைகளையும் தொடர்ந்து அவதானிக்கலாம்.

*kanapathipillai.a@thaiveedu.com*

■ ■ ■



# நலம் நாடுவதும் அதுவே

## உங்கள் மாற்றத்தின் மாற்றத்திற்கு என்னை அழையுங்கள்



வீடு
வியாபார நிலையங்கள்
வாங்க விற்க

HOMELIFE HIGHER STANDARDS

No credit
Bad credit
No Problem

**Kathir**

Buy or Sell call 24-7

Subramaniam Kathirgamanathan P.Eng.    HomeLife GTA Realty Inc. Brokerage.

**Cell: 416 856 6900**
kathirhomes@gmail.com

Bus:416 321 6969
Fax:416 321 6963





கனடாவில் வாழும் மாற்று திறனாளிகளுக்கும், முக்கியமாக, பாடசாலை கல்வியை நிறைவு செய்து தம் வாழ்க்கையை சுயமாக வாழ நினைக்கும், அனைத்து இளைஞர் யுவதிகளுக்கும், அவர் அவர் சவால்களை தனித்து எதிர் நோக்க விடாமல் கரம் கொடுத்து உதவி புரிந்து அவர்களின் நலனுடன் அவர்களைச்சார்ந்தவர்களின் அமைதிக்காகவும் சுபிட்சத்துக்காகவும் சேவை செய்ய நிறுவப்பட்டதே "அன்னை தந்த இல்லம்" ஆகும்!

அத்தகைய இலட்சியத்தின் முதற்கட்ட நிகழ்வு..




ATI

அன்னை தந்த இல்லத்துடன் தொண்டராக (volunteer) அல்லது அங்கத்துவராக (member) இணைய அழையுங்கள் **(647)955-4496**

www.facebook.com/ATIFoundationCanada
www.atifc.com | info@atifc.com

# மக்களின் கலைஞன், அரசியல் போராளி எஸ்.ரி. அரசு: ஒரு சகாப்தம்

- கந்தையா ஸ்ரீகணேசன் -

மண்ணோடு தம்மைப் பிணைத்தவர்கள் ஈழத்துக் கலைஞர்கள், படைப்பாளிகள், அரசியலாளர்கள். அறுபதுகளில் தொடங்கிய மண்வாசனைக் கோஷம் மண்சார்ந்த அரசியலை மொழிசார்ந்த உரிமைப் பிரகடனத்துடன் முன்னோக்கிக் கொண்டு சென்றது. இங்கு மக்கள்தம் வாழ்வுடன் மொழியும் பண்பாடும் மறக்கமுடியாத பிணைப்பை ஏற்படுத்தி நிற்க அரசியல் உரிமைக் கோஷம் வலுவுள்ள சக்தியாகி அனைவரையும் பிணைத்தது.

இலங்கை அந்நியராட்சிக்கு உட்பட்டிருந்த வேளையில் விதேச பண்பாட்டுத் திணிப்புக்கு எதிராக போராடிய பண்பாட்டுக் காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் முதற் கொண்டு தொடர்ந்த காலங்களில் அரசியலில் தமிழர் இருப்பைத் தக்கவைத்த சேர். பொன். இராமநாதன் அருணாசலம் சகோதரர்கள் மற்றும் சுதந்திரத்தை பெறுகின்ற வேளையில் தமிழர் தனித்துவம் பேணிய ஜீ.ஜீ. பொன்னம்பலம், தந்தை செல்வநாயகம் ஆகியோர் ஈறாக தமிழரின் சுயாதீனமான வாழ்வையே தக்க வைக்க அரும்பாடுபட்டனர்.

இந்த அரசியல் பண்பாட்டு மொழியுரிமைத் தனித்துவம் 1958களில் இலங்கை அரசு கொண்டு வந்த தனிச்சிங்கள சட்டத்தால் மேலும் உரம்பெற்றது. இதன் காரணமாக தமிழர் அடையாளத்தை பறைசாற்றும் கைங்கரியங்கள் பல தரப்பட்ட மட்டத்திலும் செயல்வடிவங்கள் கண்டன. கலைஞர்கள் நாடகத்தினூடாக தேசிய அரங்கு எனவும், எழுத்தாளர்கள் ஈழத்துத் தமிழ் இலக்கியம், மண்வாசனைக் கோஷம் எனவும் செயற்பாடுகள் கண்டனர். அத்தோடு சமகாலத்தில் கலையரசு சொர்ணலிங்கம் காத்திரமான நாடக உருவாக்கம் பெறும் நவீன அரங்கு ஒன்றை ஈழத்து தமிழ் நாடக உலகில் தோற்றுவிக்க காரணமானார். பம்மல் சம்பந்த முதலியாரைக் குருவாகக் கொண்டு ஐரோப்பிய விக்ரோரியின் பாணியிலான படச்சட்ட அரங்கில் நவீன நாடகத்தை ஈழத்தமிழ் அரங்குக்கு வளர்த்து சென்ற கலையரசு சொர்ணலிங்கம் பாசறையில் பயின்று அவர்தம் ஒறியன்ஸ் கிளப் பண்ணையில் வளர்ந்து அவரது தேரோட்டி மகன் நாடகத்தில் அர்ச்சுனன் பாத்திரம் ஏற்று நடித்து முத்திரை பதித்த எஸ்.ரி.அரசு, தொடர்ந்து வண்ணைக் கலைவாணர் அரங்கில் என். லோகநாதன், பற்குணம் ஆகியோருடன் தீவிர நாடக நடிகராகவும், இயக்குநராகவும், ஒப்பனைக் கலைஞராகவும் மிளிர்ந்தார்.

நல்லூர் காமாட்சி நாடகமன்றம், அரியாலை சரஸ்வதி வாசிகசாலை, வடஇலங்கை நாடகமன்றம், அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம், யாழ் ஒறியன்ஸ் கிளப், மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றம் போன்ற நாடக அமைப்புக்கள் ஊடாக சமகால அரசியல் உணர்வுடன் ஒட்டிய புராண இதிகாச இலக்கிய நாடகங்களில் எஸ்.ரி. அரசு கலைவண்ணம் கூட்டி நின்றார்.

'திப்பு சுல்தான்' எனும் நாடகத்தினூடாக சிறந்த இயக்குநராகவும் 'தமிழன் கதை', 'வீரமைந்தன்' என்பனவற்றினூடாக தமிழர் அரசியல் போராளியாகவும் தன்னை வெளிக்காட்டிக் கொண்ட எஸ்.ரி. அரசு 1961ம் ஆண்டு சத்தியாக்கிரக போராட்டத்தில் முன்னிலைப் போராளியாக பொலிஸ் வாகனத்தை வழிமறித்து நகர முடியாதபடி நெஞ்சை நிமிர்த்தி நடுரோட்டில் படுத்திருந்த காட்சி உள்ளூர் - சர்வதேச பத்திரிகைகளில் பதிவானது வரலாறாகும்.



ஓவியம்: ஆசை இராசையா

சுண்டிக்குளி, ஏ.சி. பரமாணந்தம் குழுவில் நடிக்கத்தொடங்கிய அரசர், சமூக சீர்திருத்த அரசியல் நாடகங்களிலும் தம் ஈடுபாட்டைக் காட்டி நின்றார். தி.க., தி.மு.க. காலத்து நாடக இயக்கம் ஈழத்தமிழ் நாடக உலகிலும் செல்வாக்கை காட்டி நின்ற வேளை அரசரின் நாடகங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஒருபுறம் மொழி உரிமை சார்ந்த அரசியல் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வை மாற்ற முயலும் கலை முயற்சிகள் என வளர்ந்து சென்ற ஈழத்தமிழ்க் களத்தில் காத்திரமான நாடகங்களை ஒரு நடிகனாக 'இளங்கோவின் சிலம்பு' நாடகத்தில் கோவலனாக பாகமேற்று நடித்ததாகட்டும், சொக்கனின் 'கவரி வீசிய காவலன்', 'ஞானக் கவிஞன்', 'தெய்வப் பாவை', 'கூப்பிய கரங்கள்' போன்றவற்றையும் சு.வேலுப்பிள்ளையின் 'வீர சிவாஜி', 'சைலொக்', 'ஒத்தொல்லோ' போன்ற பிறமொழி நாடக இயக்கமாகட்டும் அரசரின் பாணி தனித்துவம் மிக்கது என்பர் அவர் காலத்து நடிகர்கள்.

பின்னாளில் 70, 80 களில் குழந்தை ம. சண்முகலிங்கம், விதானை செல்வரத்தினம் போன்ற கலைஞர்களுடன் இணைந்து 'அன்னத்துக்கு அரோகரா' நாடகம் முதல் தொடர்ந்து சண்முகலிங்கம் எழுதிய 'வையத்துள் தெய்வம்' எனும் திருவள்ளுவர் பற்றிய நாடகம் மற்றும் பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்' கவிதையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட குழந்தைகளின் நாடகத்தையும் சமகால இரசிகர்கள் மறக்கமாட்டார்கள். இவற்றின் உச்சக்கட்டமாக குழந்தை சண்முகலிங்கம் எழுதிய 'எந்தையும் தாயும்' எனும் சமகால போர் அவலங்கள் மற்றும் புலம்பெயர் வாழ் மூதாதையர் படும் துயரம் கூறும் நாடகத்தில் அரசரின் ஐயாத்துரை பாத்திரம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது யாவரும் அறிந்ததே.

இவற்றோடு ஒரு சினிமாக் கலைஞராகவும் 'கடமையின் எல்லை', 'குத்துவிளக்கு', 'டாக்ஸி றைவர்' மற்றும் 2000 ஆண்டுகளில் உருவான 'இனி அவன்' (ஹத்தனுகம இயக்கியது) முதலிய திரைப்படங்களிலும் அரசர் நடிப்பின் எல்லையைக் காட்டி நின்றார்.

ஒரு புகைப்படக்கலைஞராக வாழ்க்கையை தொடர்ந்தவர் ஒரு சிற்பியாகத் தன்னை வளர்த்துக் கொண்டார். சிற்பத் தொழில் தமிழகத்து விருது நகர் வெயிலுகந்த கோயில் திருப்பணிவேளைகளில் பயின்ற அரசர் ஈழத்தில் மருகர் ரமணி மற்றும் அன்ரன் ஆகியோருடன் இணைந்து சதாவதானி கதிரவேற்பிள்ளை, புற்றளை கந்தமுருகேசனார், தியாகி சிவகுமரன் ஆகியோரது சிலைகளை வடிவமைப்பதில் பங்கு கொண்டார்.

இயல்பிலேயே நகைச்சுவை உணர்வு கொண்டவராக கூட இருப்போரை மகிழ்விக்கும் அரசர், கலைஞர் திருப்பூங்குடி ஆறுமுகம் மற்றும் வில்லிசைக் கலைஞர் சின்னமணி குழுவினர் உடன் இணைந்து பக்கப்பாட்டு கலைஞராக இரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டார்.

பாரம்பரிய குடும்ப வழி வைத்திய அறிவு யாழ்ப்பாண மரபு சார்ந்த வேதாந்த சைவ சித்தாந்தப் புலமை தமிழிலக்கிய, புராண இதிகாச அறிவு, நாட்டார் கதைகள் பழமொழிகள் விடுகதைகள் பற்றிய ஞானம் என்பனவற்றுடன் சமகால அரசியல் செல்நெறிகள் பற்றிய தெளிவும் செயல்வேகமும் ஒரு நாடகக்காரரான திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்களை வெற்றிகரமான ஒரு படைப்பாளியாக உருவாக்கிய காரணிகள் ஆகும்.

நல்லூர் பூங்கா அருகே அமைந்த வீடு போர்க்களச் சூழலில் அடிபட்டுப் போக வவுனியாவில் இடம் பெயர்ந்து வாழ்ந்த காலத்திலும் வவுனியா வளாகம், வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி மற்றும் பாடசாலைகளில் நடாத்தப்பட்ட நாடகப் பயிற்சிகளிலும் பட்டறைகளிலும் (1996 - 2002) கலந்து கொண்டு தமது பணியை ஆற்றினார். திருகோணமலை வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விழா நாடகப் பட்டறைகளிலும் (1997ல்) மட்டக்களப்பு கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத்தலைவர் பேராசிரியர் சி. மௌனகுருவின் அழைப்பின் பேரில் நாடகத்துறை மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கியும், கொழும்பில் தேசிய கலை இலக்கியப் பேரவை நடாத்திய கூட்டங்களிலும் கலந்து கொண்டு கருத்துக்கள் வழங்கியும் தென்னிந்தியாவில் 1999ல் இலங்கை 'நாராய் நாராய்' நாடகக் குழுவுடன் எந்தையும் தாயும் நாடக மேடையேற்றத்தில் பங்கு கொண்டும் அளப்பெரும் பணிகளை ஆற்றிய திரு. அரசு, மனைவி மற்றும் தமது பிள்ளைகளான கலா, ஜீவா, அரசகுமார் குடும்பங்களை விட்டுப் பிரிந்து அமரர் உலகு சென்றுள்ளார். தாம் வாழ்ந்த பூமியின் கலை அழகை மெருகூட்டிய கலைஞனின் வாழ்வு அம் மண்ணில் என்றும் நிதர்சனமாக பரிமளிக்க அவர் பெற்ற 'மாமனிதர்' விருதும், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் வழங்கிய நாடகச்செல்வர் விருதும், இலங்கை அரசு வழங்கிய கலாபூஷணம் விருதும் காலந்தோறும் பறைசாற்றும் என்பது திண்ணம்.

shriganeshan.k@thaiveedu.com






# என் நாடக உலக அனுபவத் துளிகள்:

**அரசையா தனது நாடக அனுபவங்களை அவ்வப்பொழுது வாய்வழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் மேடைப்பேச்சுகளிலும் மற்றவர்களுடன் பகிர்ந்துவந்துள்ளார். அவ்வாறு பகிர்ந்துகொண்டவைகளில் இருந்து ஓரிருபகுதிகளை இங்கு பிரசுரிக் கின்றோம். இவை அவர் வாழும்பொழுதே பிரசுரத்துக்காக வழங்கப்பட்டிருந்தும் அவற்றை முழுமைப்படுத்தி தொகுக்குமுன்னர் ஐயா முந்திக்கொண்டுவிட்டார்.**

கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை அவர் களின் ஆக்கங்களில் ஒன்றே 'இறுதிப்பரிசு' என்னும் நாடகம். கடையெழு வள்ளல்க ளில் ஒருவனே குமணன். இல்லையென்று இரந்து வருவோர்க்கெல்லாம் இல்லை யென்னாது வாரிவழங்குபவன் குமணன். குமணனின் இச்செயல் அவனின் உடன் பிறப்பாகிய இளங்குமணனுக்கு ஆவே சத்தையும், ஆத்திரத்தையும் ஊட்டுகிறது. உடன் பிறப்பு என்றும் பாராது அரியா சனத்தினின்றும் அண்ணனை விரட்டிவிட்டு ஆட்சியைக் கைப்பற்றுகிறான். இளங்கு மணனால் நாட்டைவிட்டு விரட்டப்பட்ட கும ணன் காடுபுகுந்து துறவியாகி பேரின்பப் பேரானந்தத்தை நாடுகிறான். குமணன் அந் நிலையெய்திய பின்பும் 'அண்ணன் உயி ரோடிருந்தால் என்றோ ஒரு நாள் உன் னைத்தேடி ஆபத்து வரும் ஆகவே அண் ணனை இவ்வுலகினின்றும் தீர்த்துக்கட்டிவிடு' என ஆலோசனை வழங்கிய தீயோர்தம் அறிவுரைப்படி அண்ணன் குமணின் தலை யைக் கொண்டு வருவோருக்கு பல்லாயி ரம் பொன் பரிசளிப்பேன் என பறையறி வித்தான்.

இந்நிலையில் வறுமையில் வாடிய புலவ னொருவன் நாட்டிற்குள் நுழைகிறான். முர சறைவோனின் செய்திகேட்டு நாட்டு நிலை மையைத் தெரிந்துகொண்ட புலவன் கும ணனைத்தேடி காடுமேடுகளெல்லாம் அலை கிறான். அவ்வேளை காட்டில் ஒரு துறவி யைச் சந்தித்து உரையாடுகின்றான். தான் குமண வள்ளலைத் தேடி அலைவதாகவும் தான் வறுமையில் வாடும் புலவனென்றும் வள்ளலைச் சந்தித்தால் தன் துயர் தீரும் எனவும் கூறுகிறான். புலவரின் நிலைமை யைப் புரிந்து கொண்ட துறவி அவர்தம் துயரைத் துடைப்பதாகக் கூறிவிட்டு தன் கையிலிருந்த கோடரியைப் பற்றிக் கொள் ளுமாறு புலவர் வசம் கொடுக்கிறான். நிக ழப்போவது இன்னதுதான் என்று ஏதுமறி யாத புலவன் கோடரியை வாங்குகிறான். இளங்குமணனின் ஆணைப்படி பறைய றைவோன் கூறிய செய்தியை புலவர்க்கு நினைவுபடுத்தி தாங்கள் தேடியலையும் குமணன் தானேயெனவும் என் தலையை வெட்டி தம்பியின் கையில் கொடுங்கள். அவன் தரும் பல்லாயிரம் பொன் மூலம் தங்கள் வறுமையைப் போக்குங்கள் என்று கூறி மண்டியிட்டு புலவர் முன்னிலையில் தன் தலையை நீட்டுகிறான். துறவி வடிவில் தன்னோடு இதுவரை உரையாடியவன் குமணன் என்பதறிந்ததும் தன் கையிலி ருந்த கோடரியை வீசி எறிந்து அவனைக் கட்டியணைத்து கதறி அழுகிறான். அதன் பின் எழுந்து குமணனை நோக்கி மன்னா என் வறுமையைப் போக்க உன் தலையை நீ எனக்கு அர்ப்பணித்துவிட்டாய். நீ உன் வாயால் கூறிய நேரம் தொடக்கம் உன் தலை என்னுடையது. நான் இவ்விடமிருந்து சென்று திரும்பி வந்து எடுத்துக் கொள் வேன். அதுவரை நானல்லாது பிறர் எவரும் உன் தலையைக் கவராது காப்பாற்றி வைத்திருக்க வேண்டியது உன் பொறுப்பு எனக் கூறி அவ்விடத்தை விட்டுச் செல்கி றான். சென்ற புலவன் குமணனின் தலை இரத்தம் தோய்ந்த நிலையில் ஒரு கூடை யில் வைக்கப்பட்டிருப்பது போன்று போலி யாகக் காட்சிப்படுத்தி இளங்குமணனின் சபையை நோக்கிச் சென்றான். சென்ற புலவன் இளங்குமணன் முன் இதோ உங் கள் அண்ணனின் தலை என கூறியதுதான் தாமதம் அந்நேரம் வரை வன்மமே உரு வாக இருந்த இளங்குமணன் சகோதர பாசம் மேலோங்க ஓவென்றலறி மூர்ச்சை யடைகிறான். அடியற்ற மரம்போல் சாய் கிறான். சிறிதுநேரம் கழிந்து மயக்க நிலை தெளிந்து எழுந்த இளங்குமணனை நோக் கிப் புலவன் நடந்த கதைகளைக் கூறுகி-றான். இளங்குமணனை கானகம் அழைத் துச் சென்று பிரிந்தவர்களை கூட்டி வைக்



கிறான். கானகம் வாழ் அண்ணனை அழைத் துவந்து அரியணையில் மீண்டும் அமர்த்தி மகிழ்கிறான் தம்பி இளங்குமணன். புலவர் பொன்னும் பொருளும் பெற்றுச் செல்கி றான். இதுவே நாடகக் காட்சியாக விரிகி றது.

மேற்படி நாடகம் கலைப் பேரரசு அவர்க ளாலேயே நெறியாள்கை செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டது. குமணனாக ஏ.ரி.பொ வும், இளங்குமணனாக திரு.பேரம்பலம் (D.R.T.O) அவர்களும் புலவனாக திருவ ருள் (யாழ் கச்சேரியில் O.A) அவர்களும், இதர சிலரும் நடித்து வந்தனர். ஒரு தடவை மேடையேற்றுவதாக ஒப்புக்கொண்ட நிகழ்ச் சிக்குப் போக முடியாத அளவு ஏ.ரி. பொன் னுத்துரை அவர்கள் அம்மை நோய் கண் டிருந்தார். மேற்படி நிகழ்ச்சிக்கு ஒரு வாரம் தான் இடைவெளியிருந்தது. ஏ.ரி. பொன் னுத்துரை, தான் நடித்த பாத்திரத்தை என்னை ஏற்று நடிக்கும்படி செய்தி அனுப்பினார். நான் சரியென ஒப்புக்கொண்டேன் ஒத்தி கைகள் நாளுக்கு இரண்டு, மூன்று முறை கள் நடைபெற்று முடிந்தன. அவ்வேளை தான் பேரம்பலம், திருவருள் இருவரை யும் அணுகி 'ஒப்பனை உடையலங்காரம் என்ன மாதிரி' என்று கேட்டேன். 'அது பற்றி நீங்கள் ஒன்றும் யோசிக்கத்தேவையில்லை ஒப்பனை செய்ய வருபவரே மன்னர்களா கிய உங்களிருவருக்கும் அரசர்கள் அணி யும் உடைகளைக் கொண்டுவருவார். நான் புலவர். நான் எளிமையான முறையில் உடுப் பதற்கு ஏதாவது பார்த்துக் கொண்டுவரு வேன்' என திருவருள் கூறினார்.

'தம்பியாகிய இளங்குமணனால் துரத்தப் பட்டு குமணன் காட்டில் வாழும்பொழுது என்னவிதமான உடை அணிய வேண்டும்' என்று கேட்டேன். பேரம்பலம் அவர்களும் 'அது ஒரு பிரச்சினையுமில்லை. ஆரம்பத் தில் நாங்கள் செய்து கொள்ளும் ஒப்ப னையும் உடையலங்காரமும் தான் நாட கம் முடியும் வரை இருக்கும். நாங்கள் இதற்கு முன் மேடையிட்ட போதெல்லாம் அவ்வாறே செய்தோம்' என்றனர்.

காட்டிலே புலவர் துறவியைச் சந்திக்கும் போது, தான் உரையாடுவது துறவியோ டுதான் என்ற தோரணையில் தான் வசனங் களமைந்திருந்தன. குமணன் தன்னைத் தானே யாரென்று காட்டிக் கொண்ட பிற குதான் கணிப்பீடு செய்ய முடியாத கோலத் தில் மன்னரிருக்கிறார் என்பது தெரிய வருகிறது. அப்படியிருக்க நீங்கள் கூறுவ துபோல் அரச உடையில் இருக்கும் கும ணனை புலவர் கண்டபின்பும், துறவியோடு பேசுவதுபோல் உரையாடுவது பொருந் தாது என்று வாதாடினேன். 'இஞ்சை ஒண் டையும் குழப்பாதையுங்கோ. நாங்கள் பல தடவை போட்டு சனம் பாராட்டினவ. நீங்கள் ஒருக்கால் தமிழ்ச்செல்வம் என்ற கி.ஆ. பெ. எழுதிய புத்தகத்தை எடுத்துப் பாருங்கோ. T.K.S. பிரதர்ஸ் குமணன் நாட கம் நடிச்சிருக்கினம். பகவதி குமணனாக அரச உடுப்போட வாளை புலவனுக்கு நீட் டியிடிச்சுக் கொண்டு நிக்கிறார்' என்றனர். 'ஓ அவர் காட்டிலே இல்லே அரண்மனை யிலே நிண்டு குடுக்கிறார்' என்றேன். 'T.K.S. பிரதர்ஸ் நடித்த நாடகமெண்டால் அவை செய்யிற முடிவுதான் சரியா' என்றேன். 'ஏன் நாங்கள் வித்தியாசமாகக் கற்பனை பண் ணினால் என்ன' என்றும் கேட்டேன். கடை சியில் சரி உங்களுக்கு சரியெண்டதைச் செய்யுங்கோ. ஆனால் நாடகம் சோபை இழக்காமல் இருக்க வேண்டும். அந்தப் பொறுப்பு உங்களோட என்றனர். சரியென ஒப்புக் கொண்டேன் நான்.

குமணன் காட்டில் காவியுடை தரித்து பரட் டைத்தலையும், தூசிபடிந்த தாடியும், ஒரு கையில் கண்ட கோடரியுடனும் புலவரோடு உரையாடுகிறான். ஈற்றில் தான் யாரென் பதை வெளிப்படுத்தி புலவரின் வறுமை யைப் போக்க தன் தலையைத் தானமா கத் தருவதாகக் கூறி கண்ட கோடரியை புலவன் கைக்கொடுக்கப் புலவன் அலறி அழுகிறான். சபையிலிருந்தோர் நாடக நிகழ்வோடு ஒன்றிக் கழிவிரக்கப்பட்டதானது நடிகர்களாகிய எம்மையும் ஆட்கொண்டது.

நாடகம் முடிந்து ஒரு வார காலத்துக்குள் ATP அவர்களிடமிருந்து எனக்கு ஒரு கடி தம் வந்தது. உடல் நலமாகிய பின் சந் திக்கிறேன். எனது நாடகம் முன்பு மேடை யேறிய தடவைகளை விட வித்தியாசமான புதிய மெருகேற்றி விட்டீர்கள் சக நாடக நடிகர்கள் மூலம் யாவுமறிந்தேன். என்ற சாரப்பட எழுதியிருந்தார்கள்...

■ ■ ■

# அரசையா அவர்களுக்கு எமது இறுதி வணக்கம்

லண்டனிலிருந்து சுமார் 30 வருடங்களுக்கு பின்னர் தாயகம் சென்று நாம் நடத்திய எமது நாடகவிழா 03-08-2013ல் யாழ். வீர சிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற போது அவர் குத்துவிளக்கு ஏற்றி ஆரம்பித்து வைத்தார். விழா ஆரம்பமாவதற்கு ஒரு மணி நேரம் முதலே அங்கு வந்திருந்து எம்மை உற்சாகப்படுத்தினார்.

70களில் எனக்கு அவருடன் தொடர்பு ஏற்பட்டது. அவர் எனக்கு முந்திய தலை முறையை சேர்ந்தவர். இருந்தும், எனது நாடகம் ஒன்றில் பணியாற்ற அவரைக் கேட்டதும் முழுமனதுடன் ஒத்துக்கொண்டு சிறப்பாக செய்துமுடித்தார். 1982ல் நான் நெறிப்படுத்திய கிரீஸ் கர்னாட்டின் துக் ளக் நாடகத்திற்கு மொஹலாய பாணி உடை வடிவமைப்பு முடிகள் செய்திருந் தார். 15ம் நூற்றாண்டு மொஹலாய சரித்திர அடிப்படையில் எழுதப்பட்ட நவீன நாட கம் அது. அந்தக் காலப்பகுதிக்கு ஏற்ற உடைகள் பற்றி ஆராய்ந்து நூல்களில் இருந்து படங்களை காட்டி அரசன், மந் திரி, ராணுவம், போன்ற பாத்திரங்களுக்கு எப்படி முடி அல்லது தலைப் பாகைகள் செய்யவேண்டும் என்று கேட்டபோது எனது விருப்பத்தையும் மிஞ்சும் அளவில் மிகக் கச்சிதமாக அவற்றை செய்துதந்தார். முப் பரிமாணத்தில் அழகுணர்ச்சியுடன் சிந்திக்கக்கூடிய ஆற்றல் உள்ள ஒரு கலைச் சிற்பி.

நான் அவரிடம் செய்நேர்த்தி, மனிதாபி னம், ஆணவமில்லாமல் பழகும் நட்பு, தமிழ் நாடகக் கலையின் பால் அளவு கடந்த பற்று போன்ற பல நல்ல பண்பு களை கண்டேன். அடிப்படையில் ஒரு நல்ல மனிதர். நல்லபண்பாளர். அவருடன் நாட கம், புகைப்படம் ஆகிய துறைகளில் தான் எனக்கு தொடர்பு ஏற்பட்டது. எனது மனைவி ஆனந்தராணியின் நடன நிகழ்ச் சியினை மிக அற்புதமாகப் புகைப்படத் தில் பதித்துத் தந்தவர். அது பல பத்தி ரிகைகளிலும் அப்போது வெளியானது.

கூட்டு முயற்சியில் தன் பங்கினை சரியாக ஆற்றி நாடக நிகழ்வை சிறக்க வைப்ப வர். ஒப்பனை, உடைவண்ணம். நடிப்பு... என அவர் ஒரு பன்முக ஆளுமை.

எனது ஊரான அரியாலையில் உள்ள நாட கக் கலைஞர் பலருடன் நல்ல தொடர்பு பேணுபவர். கடந்த வருடமும் அரியா லையில் நான் நடத்திய ஒரு நாடக கலந் துரையாடலுக்கும், 2013ல் அரியாலையில் நிகழ்த்திய நாடக நிகழ்வுக்கும் வருகை தந்து சிறப்பித்தார்.

28-09-2015ல் யாழ். பல்கலைக்கழகத்தில் நான் நெறிப் படுத்திய நெட்டை மரங்கள் மேடை நிகழ்வை பார்த்து எம்மை வாழ்த் தினார். இதுவே நான் அவரை சந்திக்கும் இறுதி சந்தர்ப்பம் என்று நான் நினைதி ருக்கவில்லை.

அரசையா அவர்களுக்கு எமது இதயபூர் வமான இறுதி அஞ்சலி.

- கே. பாலேந்திரா

■ ■ ■

# மாமனிதர் அரசையா

- சோக்கல்லோ சண்முகநாதன் -

சிவக்கொழுந்து திருநாவுக்கரசு என்றாலோ அல்லது எஸ். திருநாவுக்கரசு என்றாலோ எங்களுக்கு எதுவும் தெரிவதில்லை. எஸ்.ரி. அரசு என்றால் கொஞ்சம் தெரிகிறது. 'அரசய்யா' எனறாலோ அல்லது 'அரசண்ணை' என்றாலோ எங்களுக்கு முழுமையாக விளங்குகிறது. 'அரசையா' என்பதே எனக்கு வால யமான சொல்.

இவர் ஒரு பல்துறைக் கலைஞனாக இருந்தபோதும் நாடகம்தான் இவரது உயிர் மூச்சு. வண்ணைக் கலைவாணர் நாடக மன்றத்திலிருந்தே தொடங்குகிறேன். வண்ணைக் கலைவாணர் நாடகமன்றம் மேடையேற்றிய முக்கியமான நாடகங்கள் 'சரியா தப்பா', 'திப்பு சுல்தான்', 'இன்பக்கனவு', 'வீரமைந்தன்', இன்னும் பல. சில நாடகங்கள் மீண்டும் மீண்டும் மேடையேறின. கலையரசு சொர்ணலிங்கம், அரசையா, யமன் சின்னமணி, பிரான்சிஸ் ஜனம், பாடகர் கிருஷ்ணமூர்த்தி, லோகநாதன்,கே.கே.வி, வடிவேலு, பற்குணம் இப்படிப் பல முன்னணி நடிகர்கள். அரசையா இந்த மன்றத்தின் தீவிர உழைப்பாளி அங்கத்தவர். இவர்களது அனேகமான நாடகங்கள் மனோகரா (யாழ்) தியேட்டரில் மேடையேறியது. கலையரசு சொர்ணலிங்கம் அவர்களும் அந்த மன்றத்திலிருந்தது அவர்களுக்கு பலத்தையும் உற்சாகத்தையும் கொடுத்தது.

யாழ். நால்லூர் முத்திரைச் சந்தியில் தான் அரசையாவின் வீடு அமைந்திருந்தது. ஏப்பிரல் 28, 1926ல் பிறந்த அரசையா பெப்பிரவரி 17, 2016 இறுதி நாட்கள் வரை ஓயாது உழைத்த ஒரு கர்மவீரன். யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவன். 90 வயது வரை வாழ்ந்த ஒரு உத்தமசீலன்.

யாழ் 'செல்லம் ஸ்ரூடியோ' தான் இவரது வேலைத்தளம். அதிபர் செல்லம் மாஸ்டர் ஒரு கலையுள்ளம் கொண்டவர். இறுதிவரை நல்ல நண்பர்களாகவே வாழ்ந்தார்கள். புகைப்படம் எடுப்பது பிரதான தொழில். நடிகன், ஒப்பனையாளர், சித்திரக்காரர், சிலை செதுக்குவது, நெறியாளர் இப்படிப் பல.

இராமசாமிப் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தால் கவரப்பட்டவர். அறிஞர் அண்ணாவின் கொள்கைகள், தந்தை செல்வநாயகம் அவர்களின் ஒத்துழையாமை இயக்கங்கள் ஆகியவற்றால் கவரப்பட்டு, பின்பு அதே வழியில் விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு தந்தவர். பொன்னடியானின் கவிதைவரிகள் இவருக்கு மிகவும் பொருத்தமானவை.

*காற்றடிக்கும் பக்கமெல்லாம்*
*என்துடுப்பைப் போடமாட்டேன்*
*கை வலிக்குமென்பதனால்*
*திசைமாறிப் போகமாட்டேன்.*

கொள்கைக்காக வாழ்ந்த ஒரு மாமனிதர். மாமனிதர், கலா பூஷணம் என்ற பட்டங்கள் இவருக்கு வழங்கப்பட்டன. அந்தப் பட்டங்கள் இவரால் பெருமை பெற்றன.

தேசிய கலை இலக்கிய பேரவையுடனும் அதன் ஸ்தாபக அங்கத்தவர் சோ. தேவராஜாவுடனும் இவருக்கு நல்ல ஈடுபாடு உண்டு. தேவராஜாவின் தயாரிப்புக்கள் அனேகமானவற்றிற்கு அரசையா நெறியாளராக இருந்தார். இந்த வகையில் குழந்தை சண்முகலிங்கம் அவர்களின் 'எந்தையும் தாயும்' மாகாகவி உருத்திரமூர்த்தி அவர்களின் 'கோடை' ஆகிய நாடகங்களை அரசையா நெறிப்படுத்தினார். தேசிய கலை இலக்கியப் பேரவையின் 'நாராய் நாராய்' இந்திய நாடக சுற்றுலாவிலும், அரசையா பங்கேற்றார். இதில் பங்கேற்ற இன்னுமொரு முக்கிய நடிகர் பிரான்சிஸ் ஜனம். அரசையாவிற்கும், இவருக்கும் மிக நெருங்கிய நட்பு இருந்தது. இதைவிட சிதம்பரநாதன், மௌனகுரு, தாசிசியஸ் எல்லோரும் நல்ல நாடக நண்பர்கள். இவர்களுக்குள் ஓர் உறவு இருந்தது.

திருப்பூங்குடி ஆறுமுகம், கலாவிநோதன் சின்னமணி அவர்களின் கலைவாணர் வில்லிசைக் குழு ஆகியவற்றில் சேர்ந்து பணியாற்றியவர் அரசைய்யா. மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு வில்லிசைச் சுற்றுப்பயணம் மேற்கொண்டவர்.



நாடகத்தைப் பொறுத்தவரை அரசையா ஒரு கடுமையான நெறியாளர் என்றும் பெயரெடுத்தவர். என்னைப் பொறுத்தவரை அரசய்யா மட்டுமல்ல, நெறியாளர்கள் எல்லோருமே கடுமையானவர்கள்தாம். அரசையாவிற்கு நாடக அரங்கக்கல்லூரி (யாழ். திருநெல்வேலி) குழந்தை சண்முகலிங்கம் ஆகியோரோடும் நல்ல தொடர்பு இருந்தது.

வேட்டிதான் அரசையாவின் தேசிய உடை. எங்குபோனாலும் வேட்டிதான். கொழும்பில் வேட்டியுடன் உலாவுவது, அதற்கு ஒரு திறில் வேண்டும். உடையால் கூட அன்னியருக்கு அடிமைப்படாதவர். அரசையா இறுதிவரை மீசை வைத்திருந்தவர். மீசை வைத்திருக்கிற சகல தகுதியும் அரசையாவுக்கு இருந்தது. நிமிர்ந்த நன்நடை நேர்கொண்ட பார்வை, நிலத்திலே யாருக்கும் அஞ்சாத நெறிகள் அரசையாவுடயவை.

*ஆடுதல் பாடுதல் சித்திரம் - கவி*
*ஆதியினய கலைகளில் உள்ளம்*
*ஈடுபட்டு என்றும் நடப்பவர்*
*பிறர் ஈனநிலை கண்டு துள்ளுவர்.*

அரசையா அடிக்கடி கோவிப்பதற்கு மற்றவர்களுடைய ஈனநிலையே காரணம். பார்ப்பதற்கு அரசையா மீசையுடன் 'வில்லன்' போல் தோற்றமளித்தாலும், அவர் ஒரு குழந்தை உள்ளம் கொண்டவர். மற்றவர்களுடைய துயரம் கண்டே வேதனைப்படுபவர்.

'கடமையின் எல்லை' இலங்கைத் திரைப்படத்தில் அரசையா நடித்ததுடன் உதவி இயக்குநராகவும் அப்படத்தில் கடமையாற்றி இருக்கிறார். வேதநாயகம் அவர்களின் தயாரிப்பில் உருவான இப்படத்தயாரிப்பில் செல்லம் ஸ்ரூடியோ அதிபர் 'செல்லம் மாஸ்டர்' அதிக அக்கறை செலுத்தினார்.

நறுமணம் கமழும் முற்றத்து மல்லிகை, பந்தலின் கீழ் கொட்டிக் கிடக்கின்றது. காலில் மிதிபடுகின்றது. தேடுவாரில்லை. நாங்கள் கார்னேசன் மலர்களையும், அந்தூரியம், ஓர்கிட் மலர்களைத் தேடிப்போகின்றோம்.

*தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலிற் றோன்றாமை நன்று.*

- குறள்: 236

அரசையா இந்தக் குறளை தனது கருத்துக்கு வலு சேர்ப்பதற்காகச் சேர்த்துக்கொண்டார்.

மேடையில் தோன்றுவதாக இருந்தால் மற்றவர் பாராட்டும் படியாகத் தோன்றவேண்டும் அல்லது மேடைக்கே வராதே என்பது அவரது கொள்கை.

மற்றவர்களுடைய பழிப்புக்களோடும். இழிப்புக்களோடும் தோன்ற வேண்டாம் என்பது அவரது கோட்பாடு. இதுவும் சரிதானே? செய்வன திருந்தச்செய்.

'எந்தையும் தாயும்' நாடகத்தில் எனக்கு சிங்கப்பூர் பென்சனியர் செல்வரத்தின் பாத்திரம் தந்து, கஞ்சிகாய்ச்சி எடுத்தார். பின்பு தேவராஜாதான் என்னை மீட்டுவிட்டார்.

அரசையா என்று நல்லதோர் வீணை செய்து, அதை நலங்கெட புழுதியில் எறிந்தோம். அரசையாவின் திறமைகளை நாம் வழமை போல் உபயோகப்படுத்தாமல் விட்டுவிட்டோம்.

யாழ். செம்மணி மாயனத்தில் அவரது பூதவுடல் தீயோடு சங்கமாகி இருபத்தைந்து நாட்கள் கழியுமுன்பே கடல்கடந்து, பனி படர்ந்த ஊசி இலைக் காடாகிய இந்தக் கனடா தேசத்தில் அவர் நினைவுகூரப்படுகின்றாரென்றால், அவர் சாதாரண மனிதனல்ல, 'மாமனிதர்' தாம். அவரை நினைவு கூர்ந்த கலையுள்ளங்களுக்கு எமது மனமார்ந்த நன்றி.

அவர் பிறப்பில்லா பெருவாழ்வு வாழ
நாம் அனைவரும்
பிரார்த்திப்போமாக!



sanmuganathan@thaiveedu.com

# நன்றி ஐயா! எல்லாவற்றுக்கும் நன்றி!

அரசையா இனி எம்முடன் இல்லை. அதனை எண்ணும் போது மனதில் வெறுமைதான் படிகிறது. தொலைவில் இருந்தாலும் அவர் இருப்பதும், இயங்குவதும் எமக்குத் தெம்பைத் தந்துகொண்டேயிருந்தது. ஊருக்கு எப்ப வரப்போகிறியள் என்று கதைக்கும் போது அநேகமாகக் கேட்பார். வரவேணும் ஐயா. அதற்குரிய காலமொன்று வரும் என்பேன். இன்று அவரே காலம் ஆகிக் கிடக்கிறார். அரசையா இல்லாத ஊருக்குத்தான் வரவேண்டும் என்பதுதான் இயற்கையின் முடிவோ?

அரசையா எம்மை விட்டு தவறிப் போனார் எனும் செய்தியினை சிதம்பரநாதன் சேர் தொலைபேசி ஊடாகச் சொன்ன போது சற்று ஆடித்தான் போனேன். அரசையா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற சேதியறிந்தபோது மனதினுள் கவலை படியத் தொடங்கியிருந்தது. அவர் தவறிப் போவாரா என்ற அச்சமும் எழத் தொடங்கியிருந்தது. அதற்கு முதல் வாரம் தொலைபேசியில் கதைத்த போது அவர் மிகவும் தளர்ந்து போய் இருந்ததும் தெரிந்தது. எப்படியாவது அவரைத் தேற்றி மீட்க வேண்டும் என்று விரும்பினேன். அவர் தவறுவதற்கு முதன்நாள் வைத்தியசாலையில் வைத்து Skype ஊடாகக் கதைக்கும் போது மனசை தளரவிடாதேங்கோ ஐயா என்று இரந்து கேட்டேன். இருந்தும் அவரது குரலில் இயலாமை தெரிந்தது. இயக்கம் குறைவதன் ஆற்றாமை வார்த்தைகளில் வெளிப்பட்டது. இயற்கை அவரை நெருங்குகிறது என்ற உணர்வும் எழுந்தது. இயற்கையை வெல்ல எவரால்தான் முடியும்?

அரசையாவை எனக்கு மிகவும் பிடிக்கும். அவர் எனது மாமன் என்பதற்காக அல்ல. எனது மாமனாக அவர் வருவதற்கு முன்னரே அரசையாவை எனக்கு மிகவும் பிடிக்கும். நல்லதோர் மனிதன் என்பதற்காக அவரை எனக்கு மிகவும் பிடிக்கும். பன்முக ஆளுமை கொண்ட சிறந்த கலைஞன் என்பதற்காக அவரை எனக்கு மிகவும் பிடிக்கும். அவரது நடை, உடை, சிரிப்பு, செருமல், பார்வை, கண்களில் தெரியும் கனிவு, கதை சொல்லும் பாங்கு, நகைச்சுவை உணர்வு, தன்னம்பிக்கை, துணிச்சல், தேசப்பற்று, மக்கள் நேயம், சமூக நீதிச் சிந்தனை, உழைப்பு, பரந்த மனப்பான்மை, சுயமரியாதை எல்லாமே அவரது இந்த குணாம்சங்கள் எல்லாமே எனக்கு மிகவும் பிடிக்கும். அரசையாவை மாமனாகவும் எனக்கு மிகவும் பிடிக்கும். எனக்கு நல்லதொரு மனைவியை வாழ்க்கைத்துணையாகத் தந்தவர் அவரல்லவா! அரசையாவை எனக்கு மிகவும் பிடிக்கும்.

அரசையா! வாழும் போதே வரலாறாய் இருந்தீர்கள். இனி வழிகாட்டியாக இருப்பீர்கள். உங்கள் காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பது எமக்குப் பெருமை.

நன்றி ஐயா! எல்லாவற்றுக்கும் நன்றி ஐயா!

- சர்வே



## அரசையாவின் இறுதி வணக்க நிகழ்வில் பகிரப்பட்ட
# தாசீசியஸ் மாஸ்டரின்
## இரங்கல் வரிகள்!

அரசையா
நீங்கள் போயிட்டீங்களாம்!
செய்தி கிடைத்ததும் வந்த பெருமூச்சு -
நீங்கள் போயிட்டீங்கள் எண்டதாலை அல்ல!
உங்களோடை பழகி மகிழ்ந்த நாட்கள்
எனக்குத் திரும்பவும் கிடைக்க மாட்டாவோ
எண்ட ஏக்கத்தாலைதான்!

யாழ்ப்பாணம்
நாடக அரங்கக் கல்லூரியை நினைச்சால்
உங்களை நினைக்காமல் இருக்க முடியேல்லை.
உங்களை நினைச்சால்
நாடக அரங்கக் கல்லூரியை
நினைக்காமல் இருக்க முடியேல்லை!

எத்தினை விதமான தார் பாய்ச்சிக் கட்டுவீங்க!
எத்தினை விதமான தலைப்பாகை கட்டிக் காட்டுவீங்க!
தமிழ் நாட்டுத் தலைப்பாகை எது -
நம்ம ஊர்த் தலைப்பாகை எது எண்டு
நுணுக்கமா வேறு படுத்திக் காட்டுவீங்க!
இவ்வளவும் பொதிந்திருக்கும் நீங்க -
பென்னம்பெரிய கலைக் குவியம், அரசையா!

ஊருக்குத் திரும்பி வந்து
உதையெல்லாம் உங்களெட்டை உபாசித்து மீண்டு -
புலத்து வரட்சியிலை வளம் ஏத்த வேணும் எண்டு -
ஆசைப்பட்டு இருந்தன்.
அதெல்லாம் இண்டைக்கு மண்!
ஏனெண்டா நீங்கதான் போயிட்டீங்களே!

உலகத் தமிழ் நாடகரைக் கூவி அழைத்தபடி
லண்டன் களரியினர் -
நாராய் நாராய் எண்ட பயணப் பதாகை ஏந்தி -
தமிழ் நாடு சென்றபோது
அரசையா வந்தீங்க!
பத்துக்கு மேற்பட்ட தமிழக மேடைகளில்
நேர்த்தியா நடிச்சீங்க!
பாராட்டுப் பெற்றீங்க!

அரசையா - நீங்க ஒரு வரலாறு!
வரலாறு எனும்போது
நாடக வரலாறு!
எனது வரலாற்றில் செழுமை சேர்த்த பேராறு!
ஈழத் தமிழ் நாடகத்தில்
பெருமை சேர்த்த வரலாறு!
போய் வாங்க அரசையா!

**- ஈழக்கூத்தன் ஏ.சீ. தாசீசியஸ்.**




# கடல் கடந்த கலைப் பயணம்

1977ம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று, கலைவாணர் வில்லிசைக் குழுவினராகிய நாங்கள் ஏயர் லங்கா விமானம் மூலம் மலேசியா புறப்பட்டோம். இக்குழுவின் தலைவர் க.நா. கணபதிப்பிள்ளை, ஆர்மோனியச்சக்கரவர்த்தி சி.மு. சோமசுந்தரம், மிருதங்க வித்துவான் பொன். ஆத்மானந்தா, செ. தங்கவேல் ஆகிய நால்வருடன் ஐந்தாவது நபராக நானும் சென்றேன். அந்நாட்டு நேரப்படி இரவு பதினொன்றுக்கு நாம் கோலாலம்பூரை அடைந்தோம். நாம் விமான நிலையத்தை விட்டு வெளியே சென்ற போது, தவில்வித்துவான் சின்னராசா, நாதஸ்வர வித்துவான் P. நாகேந்திரன் அவர்களுடன் வேறு சில கலைஞர்களும் நமக்காக வெளியே காத்திருந்தனர். எமது வில்லிசைக் கருவிகளைக் கண்ணுற்ற விமானநிலைய அதிகாரி மூன்று நாளைக்குரிய விசாவைச் சிபாரிசு செய்து, மறுநாள் உரிய அலுவலகத்தில் சென்று விசாவை நீடிக்கும்படி கூறிவிட்டு அகன்று விட்டார். நாம் எவ்வளவோ மன்றாடி, ஒரு மாதத்துக்குரிய அனுமதிக்கான சிபாரிசைச் செய்யும்படி கேட்டும், அவர் மறுத்துவிட்டார்.

இங்கு நாம் மலேசியா சென்றிருந்த நோக்கம் பற்றிச் சிறிது சொல்லவேண்டும். மலேஷியாவில் நாங்கள் தொடர்ந்து இரண்டு மூன்று மாதங்களுக்காவது வில்லிசை நிகழ்ச்சிகளைச் செய்யவேண்டுமென எண்ணியிருந்தோம். யாழ்ப்பாணத்திலே திருப்பூங்குடி ஆறுமுகம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட வில்லிசையை, சின்னமணி செய்யத்துவங்கியது 1968ல் தான். இருப்பினும், வில்லிசைக்கு எடுத்தாளப்படும் பாடல்களை எந்த வகையில் கையாண்டால் அவை மக்களின் மனதைக் கவரும் என நாடிபிடித்துப்பார்த்து, சின்னமணி அவற்றை அளவுடன் கையாண்டது மூலமும், அபிநயம் நகைச்சவை ஆகியவற்றைக் கலந்து மக்களுக்கு அளித்ததன் மூலமும், சிறப்பானதொரு இடத்தைப் பெற்றிருந்தார். நாம் மலேசியாவுக்குச் சென்றிருந்த காலகட்டத்தில் சின்னமணி, சிறுவர்முதல் முதியோர் வரையும், படித்தவர் முதல் பாமரர் வரையும் வில்லிசை மூலம் கவர்ந்து பல பட்டங்களையும் பராட்டுக்களையும் பெற்றிருந்தார். இவ்வளவு சிறப்பான வில்லிசையை, அது எப்படியானது, கருவிகளை எப்படிக் கையாள்வது என்று கூட அறிந்திராத மலேசிய வாசிகளை அரை மணி நேரத்தில் மட்டும் நிகழ்ச்சியைச் செய்து கவர்வது எப்படி என்பது தான் எமது பயத்துக்கும் கிலேசத்துக்கும் காரணம். சாதாரணமாக ஒரு வில்லிசை நிகழ்ச்சியைச் சிறந்திடச் செய்வதென்றால் அதற்கு, சுமார் இரண்டு மணி நேரமாவது தேவை. இந்நேரத்தை அரைமணி நேரமாகக் குறைத்து நிகழ்ச்சியைச் செய்யும் போது, பாடும் பாடல்கள், கதையை விளக்குவதற்குப் பேசும் வசனங்கள், அபிநயங்கள் ஆகியன குறைந்திடவே செய்யும். அதனால் ரசிகர்களின் ரசனைக்கு போதிய கால அவகாசம் இல்லாமல் போகும். இதுவும் எமக்கு பயத்தைக் கொடுத்தது. இருப்பினும், நாம் தொடர்ந்து மலேசியாவில் இருப்பதற்கும், நிகழ்ச்சிகளைச் செய்வதற்கும் அடுத்த நாள் நிகழ்ச்சியே அத்திவாரமாக அமைந்து விட்டதால் கடவுளின் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு நிகழ்ச்சியைச் செய்ய ஆயத்தமானோம்.

சின்னமணியுடன் நாற்பது வருடங்களுக்கும் மேலாக கலைசம்பந்தமான தொடர்புகளைக் கொண்டிருந்தவன் நான். கலைவாணர் நாடக மன்றத்தின் உறுப்பினரான அவருடன் நான் பல நாடகங்களில் இணைந்து நடித்துள்ளேன். என்னால் நெறிப்படுத்தப்பட்ட திப்புசுல்தான், இளங்கோவின் துறவு, சக்கரவத்தி அசோகன், யாழிசையும் ஊழ்வினையும், இன்பக்கனவு ஆகிய நாடகங்களில் அவர் என்னுடன் நடித்துள்ளார். அந்த வகையில் அவருடைய திறமையைப் பற்றி நான் நன்கு அறிந்தும், அவரைப் புரிந்தும் வைத்திருந்தேன். ஆயினும் அவருடைய திறமையை மீண்டும் நான் அறி-



வதற்கு எமது முதலாவது மலேசியப்பயணம் ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது. வில்லிசையில் மிளிர்வதற்கு, புராண இதிகாசமும், சைவநெறி சம்பந்தமாக அறிவும், அதை வெளிப்படுத்துவதற்கு சரளமாகவும், நல்ல உச்சரிப்புடன் பேசும் திறமையும், பாடல்கள் மக்களைக் கவரும் விதத்தில் பாடும் திறமையும் கண்டிப்பாக ஒருவரிடம் இருக்க வேண்டும். இவையெல்லாவற்றுடனும் சின்னமணியிடம், அபிநயங்களின் மூலமும் நகைச்சுவையின் மூலமும் மக்களைக் கவரும் தன்மையும் சேர்ந்திருந்தன. மலேசியாவில் நாம் செய்த முதலாவது நிகழ்ச்சியிலே அரை மணி நேரத்தில் அவர் மக்களைக் கவர்ந்த விதமும், சொல்லுவதற்குக் கதையே இல்லாத ஒரு நிலையில் மேலும் ஒன்றரை மணிநேரம் ரசிகர்களுக்குச் சோர்வும் அலுப்பும் இல்லாத வகையிலும் அதே நேரம் கவரும் வகையிலும், கதையை அவர் நீடித்த விதம் அல்லது அவரது வித்துவத் தன்மை, உண்மையிலேயே என்னைப் பிரமிக்க வைத்தது.

■ ■ ■

# காலம் தந்த கலைக்குவியம் அரசையா!

ஈழத்துக் கலைவானில் குறிப்பிடத்தக்க ஆளுமைகளில் ஒன்றாகத் திகழ்ந்த அரசையாவின் மறைவு ஈழத்துக் கலையுலகைத் துயரத்தில் ஆழ்த்தியிருந்தது. அவர் தொடர்பான நினைவு நிகழ்வுகள் பலவிடங்களிலும் நடைபெற்றன. அவரது ஆளுமைகளால் ஈர்க்கப்பட்ட பலரும் ஒன்றிணைந்து, கடந்த மார்ச் 13, 2016 ஞாயிற்றுக்கிழமையன்று ‘காலம் தந்த கலைக்குவியம்” என்ற ஒரு நினைவு நிகழ்வை ஸ்கார்பரோ மக்கள் மையத்தில் நடத்தியிருந்தனர்.

உணர்வுபூர்வமாக நடைபெற்ற நிகழ்வில் அரசையாவுடன் பழகிய நண்பர்கள், நாடகர்கள், கலைஞர்கள் அவரது மாணவர்கள் எனப் பலதரப்பட்டோர் கலந்து கொண்டு அவருடனான தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

பிற்பகல் 4 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. அங்கு வைக்கப்பட்டிருந்த அரசையா அவர்களின் உருவப் படத்துக்கு கவிஞர் திரு கந்தவனம் விளக்கேற்றினார். திரு துரைசிங்கம் அவர்கள் மாலையணிவித்தார்.

அரசையா அவர்களின் அரங்கியற் சீடரான திரு சேகர் தம்பிராஜா நிகழ்வைத் தொகுத்து வழங்கினார். தொகுப்புகளினிடையே அரசையாவினுடைய ஆளுமைகளையும் தனது அனுபவங்களையும் வெளிப்படுத்தினார்.

அரசையாவின் சிறு வயது நண்பரும் அவருடன் நாடகம் மற்றும் அரசியல் முயற்சிகளில் ஈடுபட்டவருமாகிய திரு. துரைசிங்கம் அவர்கள் அரசையாவுக்கும் தனக்குமான உறவு வண்ணை கலைவாணர் சபாவி-லேயே ஆரம்பித்ததாகவும் இருவரும் பல நாடகங்களில் இணைந்து பணியாற்றியதோடு, பல போராட்டங்களிலும் கலந்து கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய கவிஞர் திரு கந்தவனம் அவர்கள் அரசையாவினுடைய பல்வேறு கலையாளுமைகளை வெளிப்படுத்தினார். அவரோடான தன்னுடைய நெருக்கமான நட்பையும் நாடக அரங்கக் கல்லூரியில் இணைந்து ஆற்றிய பல பணிகள் குறித்தும் குறிப்பிட்டார். பல்துறைக் கலைஞரான அரசையா ஒரு துறையில் தன் முழு ஆற்றலையும் குவித்திருந்தால் மேலும் புகழ் பெற்ற கலைஞராகத் திகழ்ந்திருப்பார் என்றார்.

நாடகரான திரு பா.அ. ஜயகரன் உரையாற்றும் போது அவரது நாடகங்கள் தனக்கு ஏற்படுத்திய பாதிப்புகளைக் குறிப்பிட்டதோடு, தொடக்க காலத்தில் நாடகத்துறைக்குத் தன்னை ஈர்த்து இழுத்தவர்களில் ஒருவராகவும் இவர் இருந்தார் எனக் கூறினார்.

தொடர்ந்து அரசையா அவர்களின் நினைவுகளைப் பகிர்ந்து கொண்ட சோக்கல்லோ சண்முகம், அவர் தொடர்பான பல அனுபவங்களைச் சுவைபடக் கூறினார். அவரிடம் தான் நடிக்கக் கற்றுக்கொண்டதையும் அவரது கண்டிப்பான போக்கையும் குறிப்பிட்டு, அரசையா ஓர் உன்னதமான முழுமையான கலைஞர் என்பதை அழுத்தமாகத் தெரிவித்தார். அவர் இயக்கிய ‘எந்தையும் தாயும்’ நாடகத்தில் இருந்து ஒரு பகுதியையும் திரு. ராஜேஸ்வரனுடன் இணைந்து நடித்து காட்டினார்.

காலம் சஞ்சிகையின் ஆசிரியர் திரு செல்வம் தன்னுரையின் போது, புகைப்படதுறையில் தனக்கும் அவருக்கும் இருந்த நட்பையும், அரசையாவின் இந்திய மலேசியப் பயணங்களில் நடந்த சுவாரசியங்களையும் பகிர்ந்து கொண்டார்.

சிறு வயதில் அயலவரான வீட்டில் (திரு பற்குணம் வீட்டில்) அடிக்கடி சந்தித்து அறிமுகமானவர் அரசையா எனக் குறிப்பிட்ட திருமதி கவிதா செந்தில்நாதன் அரசையா எழுதிய கவிதையொன்றைஅங்கே வாசித்தார்.

தொடர்ந்து, திரு நயினை ஆனந்தன், வவுனியா வளாகத்தில் அவரிடம் நாடகப் பயிற்சிகள் வாயிலாகப் பெற்ற அனுபவத்தினையும் வளாகத்துக்கு வெளியே கலை இலக்கிய நட்புகளுடனான சந்திப்பில் அரசையாவின் பங்களிப்புகள் பற்றியும் குறிப்பிட்டு ஒரு நினைவுக் கவிதை வாசித்தார்.

தொடர்ந்து அரசையா அவர்களின் நினைவுப் பகிர்வுகளைக் கொண்ட காணொளி ஒளிபரப்பானது.


இவ்வொளிபரப்பு வாயிலாகத் திருமறைக் கலாமன்ற இயக்குனர் அருட்திரு மரிய சேவியர் அடிகளார், ஈழத்தின் முதுபெரும் இசையமைப்பாளர் கண்ணன், பிரபல நாடகர் கே.பாலேந்திரா, வண்ணை கலைவாணர் நாடக மன்றின் நிறுவனர்களில் ஒரு-வரான திரு லோகநாதன் ஐயா, மற்றும் கூத்து கலைஞரும் ஊடகவியலாளருமாகிய சாம் பிரதீபன் ஆகியோர் அரசையா பற்றிய அனுபங்களையும் ஆளுமை வெளிப்பாடுகளையும் பகிர்ந்து கொண்டனர்.

தனது வாழ்வைக் கலைக்காகவே ஈர்ந்து, கலைக்காகவே முழுமையாக வாழ்ந்த கலைத் தாயின் தலைமகனுக்குத் தமிழுலகம்

நன்றி கூறிய உணர்வுபூர்வமான நிகழ்வாக இந்த நிகழ்வு அமைந்தது.

■ ■ ■















# வீடு வாங்க விற்க...

**10 வருட வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்**

## வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...


**வாங்கப் போகிறீர்களா?**

- தரமான வீடு தவறிப்போகாது
- பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- வாங்கியபின் ஏமாற்றங்கள் இல்லை
- பெருவருவாய் தரும் முதலீடு

**விற்கப் போகிறீர்களா?**

- இலவச வீட்டுப் பரிசோதனையும் ஆலோசனைகளும்
- விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்




**For Sellers**

Free $10,000 Sweepstakes
Free Home Inspection!
Free Market Evaluation!
Free Home staging Cosultation!







**For Buyers**

Free $10,000 Sweepstakes!
Free 1 Year Home Warranty!
* Cashback incentives!

★ Cash incentive for referrals

**Please Call for more details**

**www.vela4homes.com**

## Custom Build Luxury Homes in Markham

**14th Avenue & McCowan Rd**

**65'x240'**

**Only 2 left out of 7**







## Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Chairman's Club Award Winner 2015

HOMELIFE HIGHER STANDARDS

Dir: **416-786-0760**
info@vela4homes.com
www.vela4homes.com

**Homelife/Future Realty Inc.** Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8



# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## SRI
## CREDIT SOLUTION CENTRE

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi

# புலம் பெயர் மொன்றியல் தமிழர்களின் ஆரம்பகால கலை இலக்கிய முயற்சி!

- லீலா சிவானந்தன் -

1983ம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட பிரச்சினையை அடுத்து பெரும்பாலான தமிழ் மக்கள் தம் தாயகத்தை விட்டு வெளிநாடுகளுக்கும் புலம் பெயர்ந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்களே. ஐரோப்பிய நாடுகளுக்குப் பலர் செல்ல கனடா நோக்கியும் பெரும்பாலான இளைஞர்கள் வந்தனர். இவர்களில் பெருமளவினர் மொன்றியல் நகரை வந்தடைந்தனர். பிரெஞ்சு மொழி பேசும் பிரதேசமான மொன்றியல் நகருக்கு வந்தபோது அங்கு அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவம் மகிழ்ச்சியைத் தரவில்லை. நாட்டை, வீட்டை, பெற்றோரை, உற்றாரை, நண்பர்களை விட்டு வந்த சோகமும் வந்து சேர்ந்த இடத்தின் சூழலும் அவர்களுக்கு விரத்தியை ஏற்படுத்தியது. முக்கியமான மொழிப் பிரச்சினை அவர்களைப் பாடாய்ப் படுத்தியது. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போன்ற அனுபவத்தைப் பெரும்பாலானோர் உணர்ந்தனர்.

புதிய இடம், புதிய சூழல், புரியாத மொழி உடலுக்கு ஒத்துக்கொள்ளாத கால நிலை மாற்றங்கள், வேலை கிடைப்பதில் ஏற்பட்ட சிரமங்கள் ஆகியன அந்த இளம் உள்ளங்களுக்கு மனதளவில் பெரும் வேதனையை ஏற்படுத்தின. அந்தக் காலகட்டத்தில் அரசஉதவி ஏதும் கிடைக்கவில்லை என்பதை இங்கே குறிப்பிட்டேயாக வேண்டும். தனிப்பட்ட ஒரு தொண்டு நிறுவனம் சிறிதளவு உதவி செய்தது. அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்தக்கூட, அது போதுமானதாக இருக்கவில்லை.

பிறந்த நாட்டைத் துறந்து, இயற்கையோடியைந்த வாழ்வை இழந்து, பயணத்தில் பல இன்னல்களைச் சந்தித்து, முற்றிலும் வேறான ஒரு சூழ்நிலையில் வேற்று நாட்டுக்கு வந்த அவர்களுக்கு ஒருவித அச்சமும் பதற்றமும், மனக்குழப்பமும் எதிர்காலத்தின் மீது நம்பிக்கையற்ற தன்மையும், அவர்களை ஆட்டிப்படைத்தன. குடியேறிய ஆரம்பகாலத்தில் பெரும்பாலானவர்களுக்கு இவ்வாறான மனநில ஏற்பட்டது.

குடியேறியோருக்கு வேலை செய்வதற்கான அனுமதிப் பத்திரம் கொடுக்கப்பட்டது. ஆனால் வேலை எடுப்பதுதான் குதிரைக் கொம்பாக இருந்தது. எப்படியோ கஷ்டப்பட்டு மிகுந்த பிரயத்தனத்தின் பேரில் வேலை பெற்றுக் கொண்ட சில இளைஞர்கள் ஒன்று சேர்ந்து, தாம் பட்ட கஷ்டம் ஏனையோர் படக்கூடாது என்ற உயர்ந்த சமூக நோக்குடன், 'தமிழர் ஒளி' என்ற பெயரில் ஒரு சங்கத்தை ஆரம்பித்தனர். தமிழர் ஒளியை ஆரம்பித்தவர்களின் பெயர்களை இங்கே குறிப்பிட்டேயாக வேண்டும். செபஸ்டியன் தாசன், அவன் ராஜரட்னம், பசிலராஜன், ஆறுமுகம், ராஜேந்திரலிங்கம், சின்னையா சிவானந்தன், தர்மலிங்கம் பரமானந்தன் லோகநாதன் ஆகியோரே இச் சங்கத்தை உருவாக்கியோர் ஆவர்.

இவர்களால் ஏற்படுத்தப்பட்ட நிர்வாகசபை, தலைவர், செயலாளர், பொருளாளர், அங்கத்தவர் என்றில்லாமல் ஒரு வித்தியாச மான முறையில் அமைந்திருந்தது. இதை Decision Making body அல்லது 'தீர்மானம் மேற்கொள்ளும் குழு' என்று அழைத்தனர். தலைவர், நிர்வாகச் செயலாளர், நிதிச் செயலாளர், கலாசாரச் செயலாளர், சமூகச் செயலாளர், தகவல் செயலாளர், தமிழர் நலன்புரிச் செயலாளர் என்று ஒரு தலைவரையும் ஆறு செயலாளர்களையும் கொண்டதாக அமைந்திருந்தது. ஒவ்வொரு செயலாளரும் தமக்குரிய துறைகளைப் பொறுப்பெடுத்து திறமையுடன் செயலாற்றினார்கள்.

> "பிரெஞ்சு மொழி பேசும் மொன்றியல் நகருக்கு வந்தபோது அங்கு அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவம் மகிழ்ச்சியைத் தரவில்லை.
> நாட்டை, வீட்டை, பெற்றோரை, உற்றாரை, நண்பர்களை விட்டுவந்த சோகமும் வந்துசேர்ந்த இடத்தின் சூழலும் அவர்களுக்கு விரத்தியை ஏற்படுத்தியது."

மொன்றியல் நகருக்குப் புதிதாக வருபவர்களுக்கும் அங்கு ஏற்கனவே இருந்தவர்களுக்கும் பல துறைகளிலும் பயிற்சி அளிக்கக்கூடிய பயிற்சித்திட்டங்களை அரசின் உதவியுடன் செயல்படுத்தலாம் என்பதை அறிந்து அவற்றைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். உன்னதமான இந்த நோக்கத்துடன் இந்த அமைப்பு 1983ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ம் திகதி ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர், 1984ம் ஆண்டு மே மாதம் 8ம் திகதி பதிவு செய்யப்பட்டு, 1984ம் ஆண்டு மேமாதம் 20ம் திகதி Centre Street ல் உத்தியோக பூர்வமாகத் தனது சேவையைத் தொடங்கியது. மொழி தெரியாத, புதிய சூழலில் திக்குத் தெரியாத காட்டில் விடப்பட்டது போலத் தவித்த இளைஞர்களுக்கு மொழி அறிவைப் புகட்டி தொழில் கற்றுக் கொடுத்து கனடிய சமூக நீரோட்டத்துடன் சேர்ந்து தம் வாழ்க்கையைக் கொண்டு செலுத்தவும் அவர்களைச் சார்ந்தவர்களையும் காப்பாற்றும் பொறுப்பையும் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலும் பல செயற்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

இதில் ஒரு விடயம் குறிப்பிட வேண்டும். தமிழர் ஒளியை உருவாக்கிய 7 பேரில் செபஸ்டியான் தாசனைத் தவிர மிகுதிப் பேர் வேலை செய்பவர்களாக இருந்தார்கள். வேலைப்பளுவினிடையேயும் சங்கத்திற்காகவும் மக்களுக்காகவும் செயற்பட்டார்கள். இன்னுமொரு விடயம், இந்த நிர்வாக சபையில் இருந்தவர்களும் பயிற்சித் திட்டத்தில் சேர்ந்தவர்களும் வயதில் மிக இளையவர்கள். பெரும்பாலானவர்கள் 20 _ 30 வயதுக்குட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கியூபெக் மாகாண மற்றும் கனடிய அரசாங்கத்தின் மூலமாகச் சமூக சேவை அமைச்சின் ஊடாகக் கிடைத்த பயிற்சித் திட்டங்களில் பல இளைஞர்கள் ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் சேர்ந்து பயன் பெற்றனர். குறிப்பாகப் பிரெஞ்ச் (French) ஆங்கிலமொழி வகுப்புகள், தையல் பயிற்சி வகுப்பு, இளம் தொண்டர் (Young Volunteers) பயிற்சித் திட்டம் ஆகியன குறிப்பிடத்தக்கன. இளம் தொண்டர் வேலைத் திட்டத்தின் கீழ் கணினிப் பயிற்சியும் வழங்கப்பட்டது.

அத்துடன் தமிழர்கள் எங்கு சென்றாலும் எந்நிலையில் இருந்தாலும் தம் மொழியையும் கலாசாரத்தையும் பேசுவதில் வல்லவர்கள். இதை நிருபிக்கும் வகையில் 1984ம் ஆண்டு ஜுன் மாதம் 2ம் திகதி தமிழ் மொழி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

அக்காலகட்டத்தில் மொன்றியாலில் இருந்த தமிழ்ச் சமுதாயம் இளைஞர்களைக் கொண்டதாகவே இருந்தது. பெண்கள் குறைகவாகவே இருந்தார்கள். பெரும்பாலும் திருமணமான பெண்களாக இருந்தார்கள். ஏதாவது ஆலோசனை பெறுவதற்கு ஒரு முதியவர் கூட இருக்கவில்லை. ஆகவே தமிழ் படிப்பதற்கு இளஞ்சிறார்கள் அதிகம் இருக்கவில்லை என்பதைக் கூறவே தேவையில்லை. (1983ம் ஆண்டில் மொன்றியாலில் 300 தமிழ் மக்கள் மட்டுமே இருந்தார்கள்) இருந்தாலும் இருப்பவர்கள் சிலருடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் வகுப்பு சிறப்பாக நடைபெற்றது. பின்னர் மக்கள் பரவலாக மொன்றியலுக்கு வந்ததையடுத்து தமிழ் படிக்கும் மாணவரின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்தது.

தமிழர் ஒளி நிர்வாகத்தினரின் பெரு முயற்சியால் நூல்நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. தமிழகத்திலிருந்தும் வாராந்த நாளாந்த, மாதாந்த சஞ்சிகைகள், கதை, கட்டுரை, நாவல்கள், மற்றும் அறிவியல் நூல்கள் ஆகியன தருவிக்கப்பட்டன தரம் மிகுந்த எழுத்தாளர்களின் நூல்கள் கணிசமான அளவு தருவிக்கப்பட்டன.

தினசரி வாரப்பத்திரிகைகள் ஒழுங்காக மக்களுக்குக் கிடைப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டன. தாயகச் செய்திகள் மொன்றியல் தமிழ் மக்களுக்குக் கிடைப்பதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. தாயகச் செய்திகளை அறிவதற்காக பெரும்பாலான மக்கள் நூல்நிலையத்தை உபயோகித்தார்கள். பொழுதுபோக்காகவும், அறிவு சார்ந்ததாகவும் செய்திகளை அறிந்து கொள்வதாகவும் ஆகிய மூன்று வகைகளில் அவர்களுக்கு நூல் நிலையம் பயனளித்தது எனலாம்.

1983, 1984ம் ஆண்டு காலப்பகுதியில் தமிழில் பத்திரிகை வெளியிடுவது என்பது மிகவும் கஷ்டமான காரியமாக இருந்தது. தமிழ்த் தென்றல் வானொலி ஆண்டு விழா மலர், பார்வை என்ற மாதாந்த சஞ்சிகை, மற்றும் ரவி அமிர்தவாசகம் எழுதிய கவிதை நூல் ஆகியன கையெழுத்துப் பிரதிகளாக வெளிவந்தன. இந்த முயற்சிகளின் பின்னால் பல சிரமங்கள் இருந்தன. தாயகச் செய்திகளையும் புகலிடச் செய்திகளையும் மொன்றியல் வாழ் தமிழ் மக்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டுத் தொலைபேசிச் சேவை ஏற்படுத்தப்பட்டது. தகவல் வேண்டுவோர் கொடுக்கப்பட்ட தொலைபேசி இலக்கத்தை அழைத்து செய்தியைச் செவிமடுக்கும் வகையில் இச்சேவை அமைந்திருந்தது.

இன்றுமொரு முக்கிய நிகழ்வும் குறிப்பிடப்பட வேண்டியுள்ளது. வெளிநாட்டுக் காற்று அதாவது கனடாக் காற்று அதிலும் மொன்றியல் காற்று தமிழ் பேசிய நாள் 1984ம் ஆண்டு ஜுலை மாதம் 11ம் திகதி ஆகும். கனடாவில் முதன் முதலாக தமிழ் ஒலிபரப்புத் தொடங்கிய நாள இதுவே. தமிழர் ஒளியினால் முதன் முதலாக மொன்றியல் வானலைகளைகளில் தங்கத்தமிழ் ஒலித்த நாள். தமிழ்த் தென்றல் என்ற பெயருடன் பல்சுவை அம்சங்களையும் தாங்கித் தரமான நிகழ்ச்சிகளை அளித்து மக்களை மகிழ்ச்சிப்படுத்திய நாள் CF MB 1410 அலைவரிசையில் புதன்கிழமையும் சனிக்கிழமையும் தங்குதடையின்றி ஒழுங்கான ஒலிபரப்பாக நடைபெற்றது. இதற்குத் தமிழர் ஒளியின் நிறுவனரும் கலாசாரச் செயலாளருமான சி. சிவானந்தன் பொறுப்பாக இருந்தார்.


அத்துடன் குடிவரவு சம்பந்தமான உதவிகள் அகதிக் கோரிக்கை சம்பந்தமான விடயங்கள், மொழி பெயர்ப்பு மற்றும் தமிழ் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளில் உதவுதல் போன்றவற்றையும் தமிழர் ஒளி செய்து வந்தது.

1986ம் ஆண்டு நொவாஸ் ஸ்கோசியாவுக்கு வந்த கப்பலில் பயணித்த அகதிகள் மொன்றியல் நகரை வந்தடைந்தனர். அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் தமிழர் ஒளி செய்தது.

'அடிக்கடி சந்தித்து ஒருவடோருவர் மனம் விட்டு தங்கள் பிரச்சினைகளைக் கூறிக் கொள்ளவும் மனக்கஷ்டங்களைப் பிறரிடம் கூறி ஆறுதல் அடையும் இடமாகவும் அவற்றுக்குத் தீர்வு தேடும் இடமாகவும் தமிழர் ஒளி விளங்கியது. தமிழர் ஒளி நடத்திய பல நிகழ்ச்சிகள் மனதளவில் சோர்ந்து போயிருந்த பல உள்ளங்களுக்கு மருந்தாக இருந்தது. வீட்டை விட்டு என்றுமே பிரியாத, தம் ஊர் எல்லையைத் தாண்டாத இளைஞர்கள் பலர், பல எதிர்பார்ப்புகளோடு இங்கு குடியேறி பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டனர். துயரம், விரக்தி கொண்டவர்களாக இருந்தனர். அவ்வாறானோர்க்குத் தமிழர் ஒளி பெரும் ஆறுதலாக இருந்தது என்பதை மறுக்க முடியாது' இது தமிழர் ஒளியின் பயிற்சித் திட்டத்தில் பங்கு பற்றி அதன் மூலம் வேலை கிடைத்து வாழ்க்கையில் முன்னேறிய ஒரு இளைஞரின் கூற்று.

தமிழர் ஒளியின் முதல் ஈராண்டுகள் தமிழ் மக்களின் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கப் பயன்படுத்தப்பட்டது எனலாம். இக்காலப் பகுதியில் அமைப்பின் உறுப்பினர்கள் ஆற்றிய சேவை பாராட்டுக்குரியது என்று பின்னானில் தமிழர் ஒளியால் வெளியிடப்பட்ட பார்வை சஞ்சிகை குறிப்பிட்டதை இங்கே தருவது பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன். அதேவேளை தமிழர் ஒளியின் நிறுவன உறுப்பினர்களே தொடர்ந்தும் நிர்வாக சபையில் இடம் பெற்று இச்செயல் திட்டங்களை முன்னெடுத்தனர் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

இக்கட்டுரைத் தொடர் தமிழர் ஒளி நிறுவனம் மொன்றியலுக்கு அடைக்கலம் தேடி வந்த இளைஞர்களின் இடர்களை அடையாளம் கண்டு, அவர்களின் முன்னேற்றத்துக்கு உதவும் வகையிலும் முன்னெடுத்த செயல்திட்டங்கள் பயிற்சி வகுப்புகள், மற்றும் கலை இலக்கிய, ஊடககங்கள் சம்பந்தமாக மேற்கொண்ட ஆரம்ப முயற்சிகள், அவற்றை வளர்க்க அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் அதற்காக அவர்கள் எதிர்கொண்ட சிரமங்கள் ஆகியவற்றை அடுத்த கட்டுரையில் விரிவாகப் பார்ப்போம்.



leela.sivananthan@thaiveedu.com

### ராஜாஜி ராஜகோபாலனின் முதல் சிறுகதை நூல்

# குதிரை இல்லாத ராஜகுமாரன்

- தெளிவத்தை ஜோசப் -

முப்பது வருடங்களுக்கு மேலாக கனடாவில் வசிக்கும் ராஜகோபாலன் பேராசிரியர் சிவத்தம்பியின் ஊர்க்காரர். கரவெட்டி மண்ணின் மைந்தன். கனடா வாசியானாலும் தனது ஊர்ப்பற்று பற்றி அவரே இப்படிக் கூறுகின்றார். நேற்றைய தலைமுறையைச் சேர்ந்த நான் பலகாலம் ஊரில் வாழ்ந்தவன் என்று சொல்வதிலும் பார்க்க ஊரோடு வாழ்ந்தவன் என்று சொல்வதில் தான் பெருமை கொள்கின்றேன். நான் நேசிக்கும் இந்த மண்ணின் மக்களுடைய அன்றைய கால வாழ்வின் ஒவ்வொரு அங்கங்களிலும் அவர்களுடன் கூடப் பயணித்திருக்கின்றேன். பிறந்து வளர்ந்து படித்த நாட்டை விட்டேகிய பிறகும் இந்த மக்களுடன் என் மனம் இன்றும் இறுக ஒன்றிப்போயிருப்பதற்கு இந்த ஊர் மண்ணின் வாசனைதான் காரணம் என்பேன். (இந்தத் தொகுதியின் என்னுரை)

இவர் எழுபதுகளில் எழுத்துலகப் பிரவேசம் செய்தவர் என்பதும் வீரகேசரி, தினகரன், அலை, மல்லிகை போன்ற ஏடுகளில் இவருடைய கதைகள் வெளிவந்தன என்பதும் குப்பிளான் ஐ. சண்முகனின் முன்னுரை மூலம் தெரிய வருகின்றன. இத்தொகுதியின் கதைகள் எதிலும் அந்தக் கதை வெளிவந்த ஆண்டோ கதை வெளிவந்த பத்திரிகை பற்றிய தகவலோ இடம்பெறவில்லை. தன்னூர்க்காரரும் நண்பருமான குப்பிளான் சண்முகத்திடமே விடாப்பிடியாக நின்று முன்னுரை பெற்றுக் கொண்டதாகவும் குறிக்கின்றார்.

ராஜாஜி ராஜகோபாலன். ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலத்துக்கு முன்னரேயே என்னோடு அறிமுகமானவர். இருவரும் ஒரே நிறுவனத்தில் ஒரே கிளையிலேயே பல ஆண்டுகளாக இணைந்து பணி புரிந்தோம் என்று தனதுரையை ஆரம்பிக்கின்றார் குப்பிளான் சண்முகன். ராஜகோபாலனது கவிதை நூல் ஒரு வழிப்போக்கனின் வாக்கு மூலம் 2014ல் வெளி வந்துள்ளதாகவும் முன்னுரையில் குறிக்கின்றார் இவர்.

இந்த நூலை நாகர்கோவில் சுதர்சன் புக்ஸ் வெளியிட்டுள்ளது. காலச்சுவடு பதிப்பகத்தின் இன்னொரு இணைப்பதிப்பகமே சுதர்சன் புக்ஸ் என்பது நூலாசிரியரின் உரை மூலம் தெரிய வருகின்றது. 15 சிறுகதைகள் கொண்ட இத்தொகுதி ஈழத்துச் சிறுகதைத் துறைக்கும் தமிழ்ச் சிறுகதைத்துறைக்கும் ஒரு நல்ல படைப்பாளியை அடையாளம் காட்டி நிற்கிறது என்பதை தயக்கமின்றிக் கூறலாம். ராஜாஜி ராஜகோபாலனது இயற்கையான எழுத்தின் வளம் பாத்திரங்களின் ஊடாக அதை அழகுற வடிவமைத்துக் கொள்ளும் நுட்பம் போன்ற பல அம்சங்கள் இந்த அடையாளப்படுத்தலை அதற்கான தகுதியை உறுதி செய்கின்றன.

தன்னுடைய கதை மாந்தர்கள் பற்றி அவர் குறிப்பிடுவதை சற்றே கவனிப்போம். ஒவ்வொரு கதையிலும் வரும் மாந்தர்கள் குணங்களும் குற்றங்களும் உள்ளவர்கள். ஏனெனில் அவர்கள் எனது காலத்தில் என்னோடு வாழ்ந்த என்னைப்போன்ற சாதாரண மனிதர்கள். அவர்கள் தம் வாழ்வில் வெளிப்படுத்திய காதல், நட்பு, தியாகம் போன்ற உணர்வுகளை அடுக்கியே இக்கதைகளைக் கட்டி எழுப்பியிருக்கின்றேன். இக்கட்டுமானத்தில் காதலையும் காமத்தையும் அளவுக்கதிகமாக அள்ளி மெழுகி இடுகின்றேன் என்ற வாதங்கள் எழவும் கூடும். மனித வரலாறு காதலையும் காமத்தையும் பற்றித்தானே பெரும்பாலும் பேசுகிறது. இவை இரண்டும் இல்லாமல் மனித வாழ்க்கை எவ்வாறு ஆரம்பிக்கும் என்று கேட்கிறேன். இக்கதைகளில் வரும் மனிதர்களோடு நான் கைகோர்த்து உலாவியதைப் போலவே நீங்களும் உலாவவேண்டும் என்றும் உணர வேண்டுமென்றும் விரும்பினேனேயன்றி என் எழுத்தால் உங்கள் மனதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றே சமுதாயத்துக்கு ஏதேனும் படிப்பினையைப் புகட்ட வேண்டுமென்றே அவர்களை உங்களுடன் நான் பேசவைக்க விரும்பவில்லை. மாறாக நான் அந்த மண்ணில் ஒருகால் வாழ்ந்து அனுபவித்த சூழலையும் இன்று நீங்கள் அங்கே இன்னும் ஒரு முறையாவது வாழக்கிடைக்க வேண்டுமென அவாவுறும் சூழலையும் எமக்கு உவப்பான மொழியில் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பினேன் என்கின்றார்.




இந்தக்கூற்றும் கூட படைப்பு இலக்கியத்துக்கான அவருடைய முக்கியத்துவத்தை இனம் காட்டுவதாகவே அமைகின்றது. இந்தப் 15 கதைகளில் 14 கதைகள் யாழ்ப்பாணத்தமிழ் மக்களின் வாழ்வியலைக்குறிப்பவை.

தலைப்புக் கதையான குதிரை இல்லாத ராஜகுமாரன் என்ற கதையானது அதில் வரும விஜயா என்ற யாழ்தேவி ரயில் பெண் தன்னுடைய 32 வயதிலும் இன்னும் தன்னை பெண் பார்க்க வந்து போய்க் கொண்டிருப்பவர்களைப் பற்றிய நினைவலைகளில் மூழ்கி நிலை குலைவதை அழகாகக் காட்டுகிறது. கொழும்பு கோட்டையில் ரயில் ஏறி யாழ்ப்பாணத்தில் இறங்குகையில் கதையும் முடிகிறது.

வாசிப்பவனை அலுப்படையச் செய்யாமல் கதையுடன் கூட்டிச்செல்லும் இலாவகமான எழுத்து வன்மை கொண்டவர் இக்கதாசிரியர்.

முதல் கதையாகிய மேலும் சில கேள்விகளில் வரும் பவானி மகள் ஸ்ருதி கறுத்தக் கொழும்பானில் வரும் சண்டைக்கார சரசுவதி என்று அனைவருமே யாழ்ப்பாண மண்ணின் சாதாரண மனிதர்கள்தான்.

குப்பிளான் ஐ. சண்முகன் இந்தத்தொகுப்பில் உள்ள கதைகளில் எனக்குப் பிடித்தமான கதைகள் இரண்டு என்கின்றார். ஒன்று ஆத்மார்த்தமான தத்துவத் தேடல்களைக் கொண்ட அலையில் வெளிவந்த விழிப்பு மற்றது புதிய வாழ்வியல் சூழல் பற்றியதான அந்த ஒருவனைத்தேடி என்ற இரண்டும். அந்த ஒருவனைத்தேடி கதையின் களம் யாழ்ப்பாணம் அல்ல அமெரிக்கா என்றாலும் பாத்திரங்கள் யாழ்ப்பாணத்தவர்கள்தான்.

நீண்ட நெடுங்காலமாக மகளுக்கு மாப்பிள்ளை தேடும் கனடாத் தம்பதியினரின் கதை. 30 வருடங்களுக்கு மேலாக கனடாவில் வாழும் ராஜகோபாலன் அங்குள்ள தமிழர் வாழ்வியலை வைத்து எழுதியுள்ள ஒரே கதை இது என்கிறார் குப்பிளான்.

பெண்ணின் தகப்பனார் வரப்போகும் புதிய மாப்பிள்ளையின் குடும்பம் பற்றி பெருமையடிப்பதை கதாசிரியர் இப்படி எழுதுகின்றார். இவையள் எங்கடை ஊர் ஆக்கள். முப்பது நாப்பது வருசத்துக்கு முந்தியே கனடாவுக்கு வந்திட்டினமாம். வந்த காலத்திலயிருந்தே வான்கூவரில் தான் இருக்கினமாம். டொராண்டோ சனங்களைப் போல் முட்டையிலை மயிர் புடுங்குற ஆக்கள் இல்லையெண்டு அறிஞ்சவன் நான்.

யாழ்ப்பாண மக்களின் வாழ்வியல் கோலங்களை அலாதியான வர்ணனைகளுடனும் நுட்பமான அவதானிப்புடனும் தனக்கேயுரிய தமிழ் நடையிலும் எள்ளலும் காதலும் கனிவும் ததும்பும் சொற்சித்திரங்களுடனும் கதை மாந்தர்களின் உரையாடல்களில் இயல்பாகவே இடம்பெறும் பிரதேசப் பேச்சு வழக்கில் வாசகர் மனம் கட்டுண்டு வாசிப்புச் சுகத்தை முழுமையாக நுகரும்படி நுட்பமாகக் கதையை நகர்த்திச் செல்லும் உத்தியில் ராஜாஜி கவர்ச்சியான தனது திறமையை வெளிப்படுத்தி இருக்கின்றார். என்னும் பதிப்புரைக் கூற்று முற்றிலும் உண்மை வெறும் புகழ்ச்சியல்ல என்பதை இவரை வாசிக்கும் அனைவரும் ஒத்துக் கொள்வார்கள்.

தேடி வாசிக்கப்பட வேண்டிய ஒரு நூல் இது.



theliwathai.joseph@thaiveedu.com



நிலையான சொத்துக்களை வாங்க, விற்க அழைக்க வேண்டிய
உங்கள் வீடு விற்பனை முகவர் சுகுமாரன் சின்னையா (சுகு)

ROYAL DE MONTRÉAL 2012 INC.
4372, Papineau, Montréal, Qc, H2H1T5

Sugumaran Sinniah
Chartered Real Estate Broker

திருப்தியான இல்லம்
ஆனந்தமான வாழ்க்கையின் அடிப்படை !

Direct : 514.299.3186

email: seranvib@hotmail.com Office : 514.529.0454 Fax : 514.525.4557


7PM to 7AM Daily
1540 AM / 91.9 FM
அலைவரிசைகளில்
வண்ண வண்ண மெட்டெடுத்து வருகிறது
வண்ணத் தமிழ் வானொலி
Vanna Thamil Radio
வண்ணத் தமிழ் வானொலி
Like us
/vannathamil



President & C.E.O.
**Raj Nadarajah**

# Mega Financial Group

★ ★ ★

## ANNUAL AWARD CEREMONY 2016

★

MARKHAM CONVENTION CENTRE
27TH FEBURARY 2016



Director
**Abiramie Shanmuganathan**

## MEGA TOP WINNERS - 2015

**Gold Winner**



Jay Nadarajah

**Silver Winner**



Guru Thevarajan

**Bronze Winner**



Sharmila Neleishkumar

**RESP Gold Winner**



Santhila Ravichandran

# MEGA TOP 10 PRODUCERS



**Top Producer - Industrial Alliance**



Jay Nadarajah

**Top Producer - La Capitale**



Poonam Batth

**Top Producer - Desjardin**



Vasanthakumaran Markandu

**Top Producer - Investments**



Trevor Chew

**Top Producer - Assumption Life**



Christopher Dhanaraj

**2nd Top Producer - Industrial Alliance**



Guru Thevarajan

**2nd Top Producer - La Capitale**



Murugiah Gandhiram

**2nd Top Produer - Desjardin**



Steve Dwyer

**2nd Top Producer- Assumption Life**



Jay Nadarajah

Mega Financial Group


ANNUAL AWARD CEREMONY 2016



Congratulations TO ALL THE AWARD RECIPIENTS



Philip Antony



Vany Jeganmohan



Santhan Nadarajah



Celina Regalado



Marites Garcia



Gowry Yogeswaran



Maribeth Restua



Mohan Subramaniam



Racquel Jasol



Ravi Ponnudurai



Ravi Supramaniam



Roy Wignarajah



Sathya Sharma



Selvakumaran Nadarajah




Siva Panchalingam



Thiru Nagarajah



Thiruvatharan Subramaniam



Rajeswaran Rajathurai



Selvi John



Vasi Simaak


















FOR SALE›FOR SALE›FOR SALE›FOR SALE›FOR SALE›FOR SALE›FOR SALE

# Fully Renovated Spacious Family Home

## $999,995



### 257 Torii St., Vaughan
(Pine Valley & Embassy (N Of 7)


Fully Renovated Spacious Family Home On Quiet, Court End Of Street With No House Directly Behind. Prime Location. Almost 2800 Sq Ft+} Finished Walk-Out Basement Suitable For In-Law/Nanny/Income Generating. Lots Of Storage/Closets. Park 4 Cars On Driveway-No Sidewalk.

**Bedrooms: 4 + 1**
**Washrooms: 4**

Main Floor Den. Trex Deck
Fully Hardwood Floor
Italian Style Kitchen
Granite Counter Tops, custom backsplash Patterned Concrete Patio/Side Walkway
Brand New Chandeliers
Spot lights living & family Rooms!







அடமான (Mortgage) ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்

கமல் நவரட்ணம்
**Kamal** Navaratnam
Sales Representative
Direct: **416-671-4815**
E mail:kamalhomesale@gmail.com

**HomeLife/Future Realty Inc.**
Brokerage
205-7 Eastvale Drive
Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977
Fax: (905) 201-9229
Independently Owned and Operated

*Trust and reliable services*

# சொல்லத்தான் நினைக்கிறேன் 12

அருண்மொழிவர்மன்

## செங்கை ஆழியான்: ஒரு நினைவுக் குறிப்பு

அண்மையில் காலமான செங்கை ஆழியான் எனது பதின்மங்களின் ஆரம்பங்களில் எனக்கு மிகப் பிடித்த எழுத்தாளர்களுள் ஒருவராக இருந்தவர். செங்கை ஆழியானின் மரணத்தைத் தொடர்ந்து எழுதப்பட்ட சில அஞ்சலிக் கட்டுரைகளும், அவுஸ்திரேலியாவில் இருக்கின்ற ஜேகே யின் வானொலிப் பகிர்வொன்றும் அவர் பற்றிய நினைவுகளை மீட்டிக்கொண்டேயிருந்தன. அவர் பற்றி எழுத நினைத்த சிறு நினைவுக்குறிப்பொன்றும் கூட நேரநெருக்கடி காரணமாக தவறவிடப்பட்டிருந்தது. தொன்னூறுகளின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டை போர் முழுமையாகச் சூழ்ந்திருந்த காலப்பகுதியில் தென்னிந்திய சஞ்சிகைகளும், நூல்களும் கூட பெரும்பாலும் மாறிமாறி தடைசெய்யப்பட்டும், அவ்வாறு தடைசெய்யப்படாத போதும் நெருக்கடிகளினால் மிகக் குறைவாகவே யாழ்ப்பாணத்துக்கு வருவதாகவும் இருந்தன. இதற்கு மத்தியிலும் செங்கை ஆழியான் தொடர்ச்சியாக எழுதிக்கொண்டேயிருந்தார். அவரது பல நூல்கள் அப்போது கொப்பி பேப்பர் என்று சொல்லப்படுகின்ற கோடிட்ட பேப்பர்களில் கூட அச்சடிக்கப்பட்டு வெளியாகிக்கொண்டிருந்தன. இதனால் கிட்டத்தட்ட 90ம் ஆண்டு முதல் 92ம் ஆண்டு வரை நான் வாசித்தவற்றில் மிகப்பெரும்பாலானவை செங்கை ஆழியான் எழுதியதாகவே இருந்தன. இவற்றுள் செங்கை ஆழியான் என்ற பெயரில் அவர் எழுதிய புனைவுகளும், க. குணராசா என்கிற பெயரில் அவர் எழுதிய பொது அறிவு, புவியியல், வரலாற்று நூல்களும் அடக்கம்.

1980 களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் அர்ச்சுனா என்றொரு சிறுவர் இதழ் வெளிவரத் தொடங்கியிருந்தது. அதில் ஹம் சாக்குட்டிக்கு அப்பா சொன்னகதைகள் என்று தொடராக சிறுவர் கதைகளை செங்கை ஆழியான் எழுதிவந்தார். அந்தத் தலையங்கமும், கதைகளும் மனதில் இலகுவாகப் படிந்திருந்தன. அதற்கு முன்னரே செங்கை ஆழியானின் யானை நாவலை வாசித்திருந்தேன். பின்னர் 90ம் ஆண்டு போர் தொடங்க வீட்டில் ஏற்கனவே இருந்த காட்டாறு, ஆச்சி பயணம் போகிறாள், முற்றத்து ஒற்றைப் பனை என்று செங்கை ஆழியான் அடுத்தடுத்து அறிமுகமானார். இதே காலப்பகுதியில் நவாலி YMCA இலும், வள்ளுவன் கோட்டம் என்ற பெயரில் நண்பர் ஒருவர் நடத்திவந்த வீட்டு நூலகத்திலும் நிறைய ஈழத்து நூல்கள் இருந்தன. வாடைக்காற்றும், கொத்தியின் காதல் என்று நிறைய நூல்கள் அங்கே எடுத்து வாசித்தவைதான். இவை தவிர வீட்டில் பிறந்தநாள் பரிசாக விருப்பமான நூல்கள் வாங்கித்தரப்படும் என்று அப்பா அறிவித்த பின்னர் அவர்கள் வாங்கித்தந்த கிடுகுவேலி, பிரளயம் மற்றும் அவரது நிறைய அபுனைவு நூல்கள். இப்போது யோசித்துப்பார்க்கின்ற போது கடந்த 20 ஆண்டுகளாக செங்கை ஆழியான் எழுதிய எதையும் மகாவம்சம், எல்லாளன், குவேனி தவிர நான் வாசிக்கவில்லை என்றே சொல்லவேண்டும். ஆயினும் பதின்மங்களைக் கவர்ந்த, என் வாசிப்பினை ஒருகாலத்தில் திசைதிருப்பியவர் என்ற வகையில் செங்கை ஆழியான் மிகமுக்கியமானவரே.

செங்கை ஆழியான் போன்றவர்கள் சிறுவர் இலக்கியங்களில் இருந்து அடுத்தகட்ட வாசிப்பு நோக்கிச் செல்கின்றபோது ஒரு இணைப்பாகச் செயற்படுபவர்கள். உண்மையில் சமகாலத்தில் தமிழிலக்கியத்தில் (அது ஈழத்தில் என்றாலும், தமிழ்நாட்டில் என்றாலும்) இருக்கின்ற பெரிய பின்னடைவே இவ்வாறான "இணைப்பாளர்கள்" இல்லாமையே. இந்த வகிபாகத்தைச் சிறப்பாகச் செய்தவர்களுள் ஒருவர் செங்கை ஆழியான். அதே நேரம், செங்கை ஆழியானின் எழுத்துகள் வாசகர்களுக்கு நிலவியல் சார்ந்தும் பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்தும் முறையினாலும் ஈழத்து இலக்கியம் என்கிற பிரக்ஞையை வலிதாக்கியபடியே இருந்தன. ஒரு புவியியலாளர் என்கிற அவரது பின்னணி அவரது எழுத்துகளில் அவர் எழுதுகின்ற பிரதேசங்களின் நிலவியலினை மிக நுணுக்கமாகப் பதிவு செய்தன. அவரது யானை, காட்டாறு, வாடைக்காற்று, நடந்தாய் வாழி வழுக்கியாறு என்பன இவற்றின் உச்சங்களாக இப்போதும் நினைவில் இருக்கின்றன. மேலும், இதே படைப்புகளில் வருகின்ற கதாபாத்திரங்களின் சமூக நிலை, உணவு முறைகள், உற்பத்தி உறவுகள் என்பவற்றையும் அவர் நுணுக்கமாகப் பதிவுசெய்ததாகவே தற்போதும் ஞாபகத்தில் இருக்கின்றது.

வரலாற்று நாவல்களை எழுதுவது என்பது ஈழத்தில் மிக அரிதாகவே இருக்கின்ற போது அதன் முன்னோடிகளில் ஒருவராக செங்கை ஆழியானைக் குறிப்பிடலாம். கடற்கோட்டை, குவேனி, எல்லாள காவியம், கந்தவேள் கோட்டம் போன்றன நான் வாசித்து தற்போதும் நினைவில் நிற்கின்ற அவரது வரலாற்று நாவல்கள். ஆயினும், இவ்வாறாக எழுதப்படும் நாவல்களில் குறிப்பிடப்படும் வரலாறுகள் ஆதாரபூர்வமான ஆய்வுகளின் அடிப்படையில் முழுமையாக



அமைந்திருக்கும் என்று சொல்லமுடியாதபோது வரலாற்று நூல்களைத் தனியே எழுதிய செங்கை ஆழியான் எழுதும் வரலாற்று நாவல்களையும் உண்மை என்று எண்ணி வாசகர்கள் அணுகிவிடக்கூடிய ஆபத்து இருக்கின்றது என்பதை இங்கே சுட்டிக்காட்டவேண்டி இருக்கின்றது. அவரது வரலாற்று நூல்களில் ஈழத்தவர் வரலாறு, மகாவம்சம், யாழ்ப்பாண அரசர் வரலாறு, ஈழத்துச் சிறுகதை வரலாறு என்பன முக்கியமானவை.

செங்கை ஆழியானின் இலக்கியச் செயற்பாடுகளில் அவரது ஆவணப்படுத்தல் முயற்சிகள் மிக முக்கியமானவை. குறிப்பாக மட்டக்களப்பில் ஏற்பட்ட சூறாவளியைப் பற்றி அவர் எழுதிய 12 மணி நேரம் என்கிற நூலும், 1977ம் ஆண்டு ஓகஸ்ட் மாதக் கலவரத்தின் முதல்நாள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அரச வன்முறைகள் பற்றி அவர் எழுதிய 24 மணி நேரம் என்கிற நூலும் முக்கியமான ஆவணங்கள். இவ்வகையான ஆவணப்படுத்தல்கள், வரலாற்று ஆய்வுகளின் முக்கியம் அதிகமானதாக இன்று உணரப்படுகையில் இந்த இரண்டு நூல்களையும் செங்கை ஆழியான், நீல வண்ணன் என்ற இன்னொரு புனைபெயரில் 40 ஆண்டுகளுக்கு முன்னரே எழுதியிருக்கின்றார் என்பது இன்னமும் ஆச்சரியமளிக்கின்றது. அவரது இலக்கியச் செயற்பாடுகளில் ஈழத்துச் சிறுகதை வரலாறு மிகமுக்கியமாது. மறுமலர்ச்சி சிறுகதைகள், ஈழகேசரிச் சிறுகதைகள், சுதந்திரன் சிறுகதைகள் என்கிற பத்துக்கு மேற்பட்ட தொகுப்புநூல்களை அவர் உருவாக்கியிருக்கின்றார்.


பெருமளவு உழைப்பையும் நேரத்தையும் கோரி நிற்கின்ற இதுபோன்ற இலக்கியச் செயற்பாடுகளிலும், படைப்பிலக்கியத்திலும், பாடநூல்கள், அபுனைவுகள் என்பவற்றை எழுதுவதிலும் ஈடுபட்ட செங்கை ஆழியானின் அனைத்து எழுத்துக்களையும் ஆவணப்படுத்தும் முயற்சியில் நூலகம் நிறுவனம் (Noolaham.org) ஈடுபட்டிருப்பதுடன் அது ஆவணப்படுத்திய முதற்தொகுதி நூல்களை அவர் உயிருடன் இருக்கின்ற போதே அவரிடம் கையளித்திருக்கின்றது சிறிது நிறைவளிக்கின்றது.

## நம் அடுத்த தலைமுறையோடு...

கனடாவில் தற்போது பதின்மவயதுகளில் இருக்கின்ற தமிழர்களில் பெரும்பாலானவர்கள் கனடாவில் பிறந்து வளர்ந்தவர்களாகவோ, அல்லது மிக சிறுவயதிலேயே கனடாவுக்கு வந்தவர்களாகவோ இருக்கின்றார்கள் என்பதை அவதானிக்க முடிகின்றது. ஆயினும் கனடியத் தமிழர்களின் வாழ்வில் இவர்களுக்கான வெளி போதுமானதாக இருக்கின்றதா என்கிற கேள்வி முக்கியமானது. இங்கு நடைபெறுகின்ற பெரும்பாலான புத்தக வெளியீடுகள், இலக்கிய நிகழ்வுகள் போன்றவற்றில் முப்பது வயதுக்குக் குறைந்த எவரையுமே காண முடிவதில்லை. நாடகங்கள் போன்றவற்றில் மட்டுமே இளவயதினரைக்காணமுடிகின்றது. அவர்களும் கூட பெரும்பாலும் நடிகர்களாக மட்டுமே நாடகங்களில் பங்கேற்கின்றனரே அன்றி நாடக உருவாக்கம், இயக்கம் போன்றவற்றில் பங்கேற்பதில்லை. இவற்றை பண்பாட்டு இடைவெளி, தமிழ்மொழிப் புலமை குறைவாகவிருத்தல் ஆகியவற்றோடு மாத்திரம் தொடர்புபடுத்திக் கடந்துபோகமுடியாது.

சற்றே சிந்தித்துப் பார்த்தால் எமது வீடுகளில் நிகழும் பிறந்தநாள் உள்ளிட்ட கொண்டாட்டங்களானாலும் சரி, சடங்குகளானாலும் சரி இளையவர்களுக்கான வெளி ஏதும் இருப்பதில்லை என்பதே உண்மை. இது முழுக்க முழுக்க புலம்பெயர் நாடுகளில் இருக்கின்ற தமிழர்களின் நிலைப்பாடு மாத்திரம் அல்ல. பதின்மவயதினரும் சரி, அதைத் தாண்டிய இளைஞர்களும் சரி பெரியவர்களின் உலகில் "சின்னப்பிள்ளைகள்" ஆக மட்டும் அனுமதிக்கப்படுகின்றார்கள் என்பதே வழமையாக இருக்கின்றது. அவர்களது எல்லா முயற்சிகளையும், நியாயமான கேள்விகளையும் தமது வயதினை மட்டும் அதிகாரமாக வைத்து பெரியவர்கள் எதிர்கொள்ளும் போது இளையவர்கள் தமக்கு உவப்பில்லாத அந்த சூழலைவிட்டு விட்டு வெளியேறிவிடுகின்றனர்.

புலம்பெயர்நாடுகளில் முதல் தலைமுறையினர் குடியேறியபோது அவர்கள் பெரிதும் பழக்கப்பட்டிருந்த ஒரு பண்பாட்டுப் பின்புலத்தில் இருந்து வேறொரு பண்பாட்டுச்சூழலுடன் உறவாடவேண்டி ஏற்பட்டது. அவர்களுக்கு வீட்டில் நிலவும் பண்பாட்டுச்சூழல் பழக்கமானதாகவும் வெளிச்சூழல் ஒட்டமுடியாததாகவும் விளங்கியது. இதனால் அவர்கள் தம்மை வெளிச்சூழலில் அந்நியப்படுத்திக் கொண்டு வீட்டுக்குள் தாம் விரும்பிய ஒரு பண்பாட்டுவாழ்க்கையை வாழத்தலைப்பட்டனர். ஆனால் இன்றைய புதியதலைமுறையினர் எதிர்கொள்கின்ற உளநெருக்கடி இதற்கு எதிரானது. அவர்கள் தமது பாடசாலைப்படிப்பு, பார்க்கின்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், நண்பர்கள் என்கிற புறச்சூழலின் தாக்கமே அதிகம் நிறைந்தவர்கள். இதனால் இவர்களுக்கு புறச்சூழலுடன் உறவாடுவது இலகுவானதாக இருக்கின்ற அதே வேளை வீட்டுச்சூழல் பெரும்பாலும் ஒட்டமுடியாததாகிவிடுகின்றது. இதனால் அவர்கள் வீட்டிலிருந்தும் உறவுகளிலிருந்தும் அந்நியப்பட்டுவிடுகின்றார்கள். இதற்கு இன்னொரு காரணம் இந்த இளையவர்கள் அவர்களது நீண்ட பண்பாட்டு வரலாற்றையும் மரபுகளையும் அறியாதவர்களாக இருப்பதுவும் ஆகும். இந்தப் பலவீனம் உருவாக்கும் பண்பாட்டு வறட்சி இவர்களை தன்னம்பிக்கை குன்றியவர்களாகவும், தாழ்வுமனப்பான்மை கொண்டவர்களாகவும் ஆக்கிவிடுகின்றது. ஒருவர் எனக்கு தமிழ் தெரியும் என்று சொல்வதன் அர்த்தம் அவர் தமிழை பேசவோ எழுதவோ தெரிந்திருப்பதோ என்றாகிவிட்டது. தமிழ் தெரியும் என்பதன் அர்த்தம் தமிழ்ப்பண்பாட்டை, கலை இலக்கியத்தைத் தெரிந்திருப்பது, அதன் தொன்மையைத் தெரிந்திருப்பது, வரலாற்றைத் தெரிந்திருப்பது. அதுபோலவே ஆங்கிலம் தெரியும் என்று சொல்வது ஆங்கிலம் பேசவோ எழுதவோ தெரிந்திருப்பது அல்ல. அதன் வரலாற்றை, பண்பாட்டை, இலக்கியத்தைத் தெரிந்திருப்பது. நாம் தமிழும் தெரியாத, ஆங்கிலமும் தெரியாத ஒரு அரைகுறை தலைமுறையை உருவாக்குவதில் பங்காளிகளாகிவிட்டோமோ என்றே எண்ணத் தோன்றுகின்றது.



arunmozhivarman@thaiveedu.com




# உங்கள் கடனை Consumer Proposal மூலம் செலுத்தும் போது 85% வரை பணத்தினைச் சேமிக்கலாம்

**Consumer Proposal is up to 85% cheaper than repaying your debts on your own**

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
**We will stop all interest on your debts immediately**

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள்,சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
**We will stop collection calls, court action & wage garnishments immediately**

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
**We will protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC, Life Insurance, Stocks, Bonds & Shares)**

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப் பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
**We will make one monthly payment to all your creditors**

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
**No need to file for Bankruptcy**

**WE WORK EXCLUSIVELY FOR YOU, AND SAVE YOU THOUSANDS OF DOLLARS**

பலவருடகால அனுபவமுள்ள

**Suren Sornalingam BBA**
Post Graduate Diploma in Business Management
Federal Government Registered & Certified (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation



**CREDIT RECOVERY CANADA**

Tel: 416-264-1272
Fax: 416-332-0914
Web: www.creditrecoverycanada.com

# எதற்காக அறுபது ஆண்டு வட்டம்?

- பாலா. சிவகடாட்சம் -

ஐரோப்பியரால் கிரகேரியன் ஆண்டு அறிமுகப்படுத்தப்படு முன்னர் தெற்காசியாவில் ஆட்சி புரிந்த மன்னர்கள் பல்வேறு வகையான கலண்டர்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர். இவற்றுள் இந்தியாவின் தலைசிறந்த வானியல் நிபுணரும் காலக்கணிதருமான ஆரியபட்டர் உருவாக்கிய கலியுக ஆண்டு கிரகங்களின் நிலையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. கி.மு 3101ம் வருடம் கலியுக ஆண்டு தொடங்கப்பெற்ற வருடமாகும். அடுத்து சாலிவாகன சகவருடம் கி.பி. 78ல் தொடங்கப்பெற்றது. சக ஆண்டைத்தவிர புத்தர் பரிநிர்வாணம் பெற்ற கி.மு. 544ம் ஆண்டிலிருந்து எண்ணப்படும் புத்த ஆண்டு, கி.மு. 57ல் ஆரம்பிக்கப்பட்ட விக்கிரமவருடம், கி.பி.318ல் குப்தர் ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட குப்த ஆண்டு, கனோஜ் மன்னன் ஹர்சவர்த்தனால் கி.பி. 606ல் ஆரம்பிக்கப்பெற்ற ஹர்ச வருடம், முகம்மது நபி அவர்கள் மெக்காவில் இருந்து மெடினாவுக்கு ஓடிய நாளான கி.பி. 622 ஜுலை மாதம் 15ம் திகதியை தொடக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப் பெற்ற ஹிஜ்ரி ஆண்டு, மற்றும் கேரளத்தில் சேரமான் பெருமாளால் கி.பி. 824ம் ஆண்டில் தொடக்கி வைக்கப்பட்டதாகக் கருதப்படும் கொல்லம் ஆண்டு, என்று பலவகையான ஆண்டுக் கணக்குகள் இந்தியாவிலும் இலங்கையிலும் வழக்கில் இருந்து வந்துள்ளன.

சாலிவாகன சக ஆண்டு தொடங்கிய கி.பி. 78ம் ஆண்டை ஆண்டு 0 என்று சிலரும் ஆண்டு 1 என்று வேறு சிலரும் கணக்கில் கொண்டனர். சக ஆண்டுக்கணக்கில் சென்ற ஆண்டு 1 என்பது சகவருடக்கணக்கு தொடங்கப்பெற்று ஒரு ஆண்டு சென்று (கழிந்து) விட்டது என்பதைக் குறிப்பதாகும். இதன் காரணமாகச் சென்ற ஆண்டுக் கணக்கிலும் நின்ற ஆண்டுக் கணக்கில் ஒரு ஆண்டு கூடுதலாக இருக்கும்.

2015 ஏப்ரல் 14 தொடக்கம் 2016 ஏப்ரல் வரையிலான காலப்பகுதியை சகவருடம் 1938 என்றும் கலியுகவருடம் 5117 என்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் இரகுநாதர் வாக்கிய பஞ்சாங்கம் குறிப்பிடுகின்றது. இது நின்ற (current) சக ஆண்டுக் கணக்காகும். தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் பஞ்சாங்கங்கள் இதே ஆண்டை சக வருடம் 1937 என்றும் கலியுகவருடம் 5116 என்றும் குறிப்பிடுகின்றன. இது சென்ற (expired) ஆண்டுக் கணக்காகும்.

கலியுக ஆண்டு, சாலிவாகன சக ஆண்டு தவிர்ந்த பிற ஆண்டுக்கணக்குகளுக்கு இந்தச் சிக்கல் ஏற்படவில்லை. அவை அனைத்துமே ஆண்டுக்கணக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டை முதலாம் ஆண்டு (ஆண்டு 1) என்றே கொள்கின்றன.

ஒரு சாசனத்தில் குறிப்பிடப்பெறும் சாலிவாகன சக ஆண்டு நின்ற ஆண்டாயின் சித்திரை முதல் மார்கழி வரையிலான காலப்பகுதிக்கு சக ஆண்டுடன் 77 ஐக் கூட்டியும், தைமுதல் பங்குனி ஈறாக வரும் காலப்பகுதிக்கு 78 ஐக் கூட்டியும் கிரகேரியன் ஆண்டு பெறப்படும். சென்ற ஆண்டாயின் சித்திரை மார்கழி வரையிலான காலப்பகுதிக்கு சக ஆண்டுடன் 78 ஐக் கூட்டியும், தைமுதல் பங்குனி ஈறாக வரும் காலப்பகுதிக்கு 79 ஐக் கூட்டியும் கிரகேரியன் ஆண்டு பெறப்படும்.

சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சக ஆண்டு சென்ற ஆண்டா அல்லது நின்ற ஆண்டா என்பதைக் கண்டறிவதில் தொல்லியல் ஆய்வாளர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியதுண்டு. இதனை Epigraphia Indica என்னும் தொல்லியல் ஆய்வுக் கட்டுரைகளின் தொகுதிகளைப் படிப்போர் நன்கு அறிந்துகொள்வர். ஒரு சாசனத்தில் மாதம் கிழமை நட்சத்திரம் திதி போன்ற குறிப்புக்கள் இன்றி சக ஆண்டு மட்டுமே குறிப்பிடப்பட்டிருப்பின் அதற்குச் சமனான கிரகேரியன் ஆண்டை உறுதிப்படுத்துவது கடினம்.

ஈழத்திலே ஆக்கப்பெற்று இன்று கிடைக்கப்பெறும் தமிழ் நூல்களில் ஆதியானது என்ற பெருமையைச் சரசோதிமாலை என்னும் சோதிட நூல் பெறுகின்றது. மேற்படி நூலானது சகவருடம் 1232 வைகாசி-மாதம் அனுடநட்சத்திரமும் புதன்கிழமையும் சேர்ந்தநாளில் தம்பைதெனிய மன்னன் பராக்கிரமபாகுவின் அரசவையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது என்ற விபரம் அந்நூலிலேயே தரப்பட்டுள்ளது.

சரசோதிமாலையை முதன்முதலில் அச்சில் வெளிக்கொண்டு வந்த யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்த இரகுநாதையர் இந்நூலில் கூறப்பட்டுள சக ஆண்டு 1232 என் பதைச் சென்ற ஆண்டாகக் கணித்து இந் நூல் கி.பி. 1310ல் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற முடிபுக்கு வந்தார். இதனை மறுத்து F.X.C. நடராசா அவர்கள் யாழ்ப்பாணத்து வாக்கிய பஞ்சாங்கக் கணக்குப்படி சக ஆண்டு 1232 உடன்



77 ஐக்கூட்டி சரசோதிமாலை கி.பி.1309ம் ஆண்டில் அரங்கேற்றம் செய்யப்பட்டது என்று வாதிட்டார்.

வைகாசி மாதமும் அனுடநட்சத்திரமும் புதன்கிழமையும் சேரும் நாள் எதுவும் கி.பி. 1309ம் ஆண்டில் வரவில்லை. ஆனால் அப்படியொரு நாள் (May 14 & June 10) கி.பி. 1310ம் ஆண்டில் வருகின்றது. எனவே சரசோதிமாலையில் குறிப்பிடப்பட்டுள்ள சக ஆண்டு 1232 என்பது சென்ற ஆண்டையே குறிக்கும் என்பதையும் நூல் அரங்கேற்றப்பட்ட ஆண்டு கி.பி. 1310 ஆண்டு என்பதையும் உறுதிப்படுத்த முடிகின்றது.

கலியுக ஆண்டுக் கணக்கிலும் சாலிவாகன சக ஆண்டுக்கணக்கிலும் ஏற்பட்ட சென்ற ஆண்டு, நின்ற ஆண்டுக் குழப்பத்தைத் தவிர்க்குமுகமாக சாலிவாகன ஆண்டு தொடங்கப்பெற்று ஆண்டுகள் பல கழிந்தபின் இந்தியக் காலக்கணிதர் அறுபது சக வருடங்கள் கொண்ட ஒரு காலவட்டத்தை உருவாக்கினர். ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு பெயரைவைத்து ஒரு ஆண்டின் பெயர் அறுபது ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் வருவதாக அமைத்தனர். சக ஆண்டுக் கணக்கு அறிமுகப்படுத்தப்பெற்று ஒரு ஆண்டு கழிந்தபின் பிறந்த வருடத்துக்கு பிரபவ என்னும் பெயர் வைக்கப்பட்டது. சென்ற ஆண்டுக் கணக்காகினும் நின்ற ஆண்டுக் கணக்காகினும் சக ஆண்டின் பெயர் மாறாது என்பதைக் கவனத்தில் கொள்வது அவசியம்.

உதாரணமாக கி.பி. 2015 ஏப்ரல் தொடக்கம் கி.பி. 2016 மார்ச் வரையிலான காலப்பகுதியை சக ஆண்டு 1937 என்று சென்ற ஆண்டாகக் குறிப்பிடுவோரும் 1938 என்று நின்ற ஆண்டாகக் குறிப்பிடுவோரும் இந்த ஆண்டின் பெயரை மன்மதவருடம் என்றே குறிப்பிட்டிருப்பதை அவதானிக்கமுடியும். எனவேதான் சாசனம் ஒன்றில் சக ஆண்டும் அதன் பெயரும் குறிப்பிடப்பட்டிருப்பின் அது சாசனத்தின் காலத்தை உறுதிப்படுத்தப் பேருதவியாக இருக்கும்.

சோழ, பாண்டிய மன்னர்களின் காலத்தைச் சேர்ந்த பெரும்பாலான கல்வெட்டுக்களில் அரசனின் ஆட்சி ஆண்டு மாத்திரமே குறிப்பிடப்பட்டிருக்கும். உதாரணமாகக் 'குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு பத்தாவது' என்று சாசனத்தில் கூறப்பட்டிருப்பின் அந்தச் சாசனம் குலோத்துங்க சோழன் ஆட்சிபீடம் ஏறிப் பத்தாவது வருடத்துக்கு உரியது என்பது உணரப்படும். ஆட்சியாண்டுடன் கூடவே மாதம் திதி கிழமை நட்சத்திரம் போன்ற காலக் கணிதக் குறிப்புக்களும் சாசனத்தில் இடம் பெற்றிருக்கலாம். மற்றைய தென்னிந்திய அரசர்களின் சாசனங்களில் பெரும்பாலும் சாலிவாகன சக ஆண்டு அல்லது கலியுக ஆண்டு குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்க்க முடிகிறது. பஞ்சாங்கக் குறிப்புக்கள் இடம் பெற்றுள்ள சாசனங்கள் ஒருசிலவற்றை உதாரணத்துக்கு இங்கு பார்ப்போம்.

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவில் கல்வெட்டு ஒன்று பின்வருமாறு தெரிவிக்கின்றது.
'ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனவீர சோழ தேவர்க்கு யாண்டு ஏழாவது (?) சித்திரபானு வருஷத்து சிம்மஞாயிற்று அபரபக்கத்து சப்தமியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற ரோகிணிநாள்' (Epigrahia Indica Vol.8 Page 7)

இக்கல்வெட்டில் கலியுக ஆண்டோ, சக ஆண்டோ குறிப்பிடப்படவில்லை. எனினும் சித்திரபானு என்னும் ஆண்டுப்பெயர் மட்டும் தரப்பட்டுள்ளது. தென்னிந்தியாவில் சோழ அரச வம்சத்தவர் ஆட்சியில் இருந்திருக்கக்கூடிய கி.பி. 922க்கும் 1462க்கும் இடைப்பட்ட காலப்பகுதியானது அறுபது ஆண்டு வட்டங்கள் ஒன்பதை உள்ளடக்கியது. இக்கால இடைவெளியில் சித்திரபானு வருடம் பத்து முறை வருகின்றது. இந்தப் பத்து வருடங்களில் சக ஆண்டு 1264 சென்ற சித்திரபானு வருடம் ஆவணிமாதமும் (சிங்கஞாயிறு) அபரபக்க சப்தமியும் வெள்ளிக்கிழமையும் ரோகிணி நட்சத்திரமும் கூடும் நாள் கி.பி.1342 ஆகஸ்ட் மாதம் 24ம் திகதியில் வருகின்றது. இங்கு சாசனத்தின் காலத்தை நிர்ணயிக்க ஆண்டின் பெயர் உதவுவதைக் காண்கின்றோம்.

சாலிவாகன சக ஆண்டு மட்டும் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு கல்வெட்டை நோக்குவோம்.

*அன்பினுடன் சகாத்தம் ஆயிரத்து முந்நூற்(று)*
*அறுபத் தெட்டின்மேல் வைகாசித் திங்*
*மன்திகதி ஈரைந்தில் பூருவ பக்க*
*மருவு தசமியில் வெள்ளிவாரம் தன்னில்*
*மின்திகழ் உத்திரநாள் மீனத்தில் வாகை*
*வேல்அரிகே சரிபராக் கிரம மகிபன்*
*தென்திசையில் காசிநகர் கோயில் காணச்*
*சென்று நின்று தரிசனைதான் செய்வித்தானே.*

- திருவிதாங்கூர் கல்வெட்டுத் தொகுதி 1 பக்கம் 96

இக்கல்வெட்டில் சகாப்தம் ஆயிரத்து முன்னூற்று அறுபத்தெட்டின் மேல் வைகாசி மாதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் இங்கு கூறப்பட்டுள்ள சக ஆண்டைக் கழிந்த (சென்ற) ஆண்டாக எடுத்து கி.பி. 1446 எனச் சிலர் கொள்ள இடமுண்டு. எனினும் கல்வெட்டில் தரப்பட்டுள்ள வைகாசி பத்து, வளர்பிறை தசமி, வெள்ளிக்கிழமை, உத்தர நட்சத்திரம் சேர்ந்த நாள் எதுவும் கி.பி.1446ல் வரவில்லை. மாறாக கி.பி. 1445 மே மாதம் 16ம் திகதி வைகாசி மாதம் பத்தாம் திகதியாகவும் வளர்பிறை தசமியும் வெள்ளிக்கிழமையும் உத்தர நட்சத்திரமும் கூடும் நாளாக உள்ளது. எனவே கல்வெட்டில் கூறப்பட்டுள்ள சகாப்தம் 1368 என்பது நின்ற ஆண்டையே குறிக்கின்றது எனக்கொள்ளலாம். தரப்பட்டுள்ள பஞ்சாங்கக் குறிப்புக்கள் துணையின்றி இந்தச் சாசனத்தின் காலத்தை உறுதிப்படுத்தமுடியாது என்பதை உணரமுடியும் சாலிவாகன ஆண்டும் அதன் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ள மற்றுமொரு கல்வெட்டை அடுத்து நோக்குவோம்.

*ஏறிய சகாத்தமாயிரத்து நானூற்றெழுபதின்*
*னாலில் வருஷம் பரிதாபி தனில் மாதம்*
*தேறிய சித்திரை இருபத்தொன்பதாகும்*
*தேதி இரண்டாம்பக்கம் திங்கள் உரோ*
*- கிணிநாள்*
*வீறுயர்ந்த மிதுனத்து நெல்வேலிமாறன்*
*வீரவேள் குலசேகர செழியனென்று சுரர்*
*ஆறுபுனை அகிலேசர் காசியிலே விளங்க*
*அணிமவுலி தரித்தனன் பரராசர்*
*- பணிந்தனரே*

- திருவிதாங்கூர் கல்வெட்டுத் தொகுதி 1 பக்கம் 105

"சகாப்தம் 1474 பரிதாபி வருடம் சித்திரை மாதம் 29ம் தேதி இரண்டாம் திதியும் திங்கள் கிழமையும் ரோகிணி நட்சத்திரமும் சேர்ந்த தினத்தில் மிதுனலக்கின சுபவேளையில் நெல்வேலிப்பாண்டியன் வீரவேள் குலசேகரசெழியன் எனும் பெயருடன் தென்காசி விசுவநாதர் கோயிலில் முடிசூடினான்" என்னும் செய்தி மேற்காணும் கல்வெடுப் பாடலில் தெரிவிக்கப்படுகின்றது.

சாசனத்தில் கூறப்பட்டுள்ள சகாப்தம் 1474 என்பது சென்ற சக ஆண்டாயின் இதனுடன் 78ஐ கூட்டி கி.பி. 1552 என்னும் கிரகேரியன் ஆண்டும், நின்ற ஆண்டாயின் 1474 உடன் 77ஐக் கூட்டி கி.பி.1551 என்ற வருடமும் பெறப்படும். கி.பி. 1552/53 என்பது அறுபது ஆண்டு வட்டக்கணக்கில் ஒரு பரிதாபி வருடமாகும். எனவே சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகாப்தம் 1474 என்பது சென்ற சக ஆண்டையே குறிக்கும் என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. பரிதாபி வருடமாகிய சக ஆண்டு 1474 சித்திரை 29ம் திகதி திங்கள் கிழமையும் இரண்டாம் திதியும் (துதியை) ரோகிணி நட்சத்திரமும் சேர்ந்த ஒரு நாளாகும் என்று சாசனம் குறிப்பிடுவதால் இத்தினம் கி.பி. 1552 ஏப்ரல் மாதம் 25ம் திகதியேயாகும் என்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றி உறுதிப்படுத்தமுடிகின்றது.

அறுபது சக ஆண்டுகள் கொண்டவட்டமும் அந்த அறுபது ஆண்டுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு பெயர் வைத்தமையும் தேவை கருதி உருவாக்கப்பட்ட ஒரு காலக்கணித ஒழுங்குமுறை என்பதை அனைவரும் உணர்ந்துகொள்வது அவசியமாகும்.

ஆண்டுப் பெயர்கள் சமஸ்கிருதத்தில் இருப்பதாக நம்மவர் சிலர் குறைப்பட்டுக் கொள்கின்றனர். அக்காலப்பகுதியில் தமிழ் நாட்டவரும் கூட சமஸ்கிருதமொழியிலேயே காலக்கணித நூல்களை எழுதிவைத்துள்ளனர் என்பதை இவர்கள் அறிந்திருக்கவில்லை.

இந்த ஆண்டுகளுக்குப் பெயர் வைத்ததன் உண்மையான நோக்கத்தைப் புரிந்துகொள்ளாமல் யாரோ ஒருவர் கட்டிவைத்த புராணக் கதையொன்றைத் தூக்கிப்பிடித்துக் கொண்டு நிற்கின்றனர்.

'அறுபது வருடவட்டம் எதற்காக? அறுபதுக்கு மேல் அவர்களுக்கு எண்ணத் தெரியவில்லையா?' என்றெல்லாம் சில அதிபுத்திசாலிகள் கேட்பதுண்டு. 60 செக்கண்டுகள் கொண்ட ஒரு நிமிடம் எதற்காக? 60 நிமிடங்கள் கொண்ட ஒரு மணித்தியாலம் எதற்காக? ஏழுநாட்கள் கொண்ட வாரம் எதற்காக? ஏழுக்குமேல் எண்ணமுடியாதா? என்றெல்லாம் தம்மை யாரும் கேட்கக்கூடுமே என்று சிந்திக்கக்கூடத் தெரியாதவர்கள் இவர்கள்.



Sivakadadcham@thaiveedu.com

# மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்: ஓர் அரசியல் சாட்சியம்

- மு. நித்தியானந்தன் -

சுதந்திரத்திற்குப்பிற்பட்ட இலங்கைத்தமிழர் அரசியல் தளத்தில் 1956 - 1977 வரைப்பட்டகாலப்பகுதியில் தமிழரசுக்கட்சி தமிழ் மக்களின் ஏகோபித்த குரலாக தன்னை நிலைநிறுத்தியிருந்தது. 1956க்குப்பின் நடைபெற்ற 5 பொதுத்தேர்தல்களிலும் தமிழரசுக்கட்சி தொடர்ந்து பெற்ற வெற்றிகள் இதனை உறுதிசெய்வனவாகும்.

தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்தில் தமிழ்மக்களை பேரணியில் திரட்டி அறப்போராட்டத்திலும் ஏனைய சட்டமறுப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தி அரசியல் பிரக்ஞையை அடிமட்டமக்கள் மத்தியில் வேரூன்றச்செய்ததில் தமிழரசுக்கட்சியின் பணி அளப்பரியது.

தமிழ்மக்கள் திரளை அரசியல்மயப்படுத்தியபணியில் அவர்கள் இட்டுச் சென்ற அஸ்திவாரம் ஆழ்ந்த அர்ப்பணிப்பிலும் கடும் உழைப்பிலும் உருவானது. அரசுக்கெதிரான அச்சமற்ற போராட்டங்களிலே வார்க்கப்பட்டது. பொலிஸ் அடக்கு முறை, கைது, சிறைச்சாலை என்ற எதிர்ப்பியக்கத்தில் மூர்ச்சனை கொண்டது. ஆணவம் கொண்ட ஆட்சியாளர்களின் புறக்கணிப்பிற்கும் அலட்சியத்திற்கும் எள்ளி நகையாடலுக்கும் மத்தியில் நெஞ்சை நிமிர்த்திய இலட்சிய வேட்கையில் வேர்கொண்டது.

இந்த மாபெரும் அரசியல்பணியில் ஒரு கால் நூற்றாண்டு பகுதியை தனக்குரிமையாக்கும் தகுதி கொண்டவர் மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள்.

தமிழரசுக்கட்சியின் பொதுமேடைகளில் அவரது கம்பீரமான பிரசன்னம் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. மேடைகளில் அவர் தேசிய எழுச்சிப்பாடல்களை இசைத்தபோது கூட்டம் உணர்வு வெள்ளத்தில் தோய்ந்தது. அரசியல் அணிதிரட்டலில் அரசியல் விடுதலை இயக்கப் பாடல்கள் ஆளுமை கொண்ட பெண்களால் இசைக்கப்பட்டபோது அது பெரும் ஆகர்ஷணசக்தியாய் திகழ்ந்திருப்பதை இந்திய சுதந்திரப்போராட்டங்களில் காண முடிந்திருக்கிறது. ஆபிரிக்க நாடுகளின் விடுதலை இயக்கப்போராட்டங்களில் அரசியல் மேடைகளில் தோன்றி ஆபிரிக்கப் பெண்மணிகள் இசைத்த பாடல்கள் புரட்சி அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

தமிழரசுக்கட்சியின் ஆரம்ப அமைப்புக் கட்டத்தில் சின்னஞ்சிறுகிராமம் தோறும் தனது கணவருடன் சென்று மக்களுடன் உறவாடி அவர்களின் மத்தியில் நம்பிக்கைக்குரியவராகத்திகழ்ந்தார். பெற்றோமெக்ஸ் விளக்கில் - லாந்தர் வெளிச்சத்தில் நடந்த கூட்டங்களில் எல்லாம் அக்கறை-யோடு பணிசெய்திருக்கிறார். அரசியல் பிரச்சாரக் கூட்டங்கள் எதிர்க்கட்சிகளின் மூர்க்கத்தனமான எதிர்ப்பின் மத்தியில் நடைபெற்றபோதேல்லாம் அச்சமின்றி மேடையில் தோன்றியவர். கைக்குழந்தையை வைத்துக் கொண்டு சத்தியாக்கிரகப்போராட்டத்தில் தனது கணவருடன் போராட்டத்தில் இணைந்த மாதரசி இவர். கணவருடன் தடுப்புக்காவலில் மாதக்கணக்கில் சிறைவாசம் கண்ட பெருமகள்.



அரசியல் மேடைகளும் போராட்டங்களும் பொலிஸ் நிலையங்களும் பனாகொடை முகாமும் இவரது உலகமானது.

இவரது அரசியல் வாழ்வு உல்லாசப் பூங்காவாக இருந்ததில்லை. காலம் பூராவும் முட்பாதையாகவே இருந்திருக்கிறது. தனது கணவரையே துப்பாக்கித் தோட்டாவிற்கு பலிகொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய பயணத்தை அவர் தேர்ந்திருந்தார்.

விருந்தோம்பும் பெரும் பண்பு கொண்ட இவர்களின் அருங்குணத்தையே பலவீன-மான நுழைவாயிலாகக் கொண்டு, கொடியவர்கள் செய்த கோரதாண்டவத்தை கண் முன்னால் காண நேர்ந்த சரித்திரத்தின் ஒரு சாட்சியம் இவர்.

தமிழர் அரசியலில் தீவிர ஈடுபாடு கொண்ட பெரும் தலைவர்களை நாம் கண்டதுண்டு. அன்றும் தான், இன்றும்தான். அவர்களின் துணைவியரை நாம் அறிந்ததில்லை. பலர் தமது கணவரின் அரசியலுக்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றிருந்தவர்கள். இன்னும் பலர் இது அநாவசியமான அலுவல் என்று கணவரின் அரசியல் செயற்பாடுகளை அசூசையோடு பார்த்தவர்களாக இருந்திருக்கிறார்கள்.காதல் துணைவனின் காரியம் யாவிலும் கைகொடுத்து வாழ்ந்த மகராசி இவள்.

விடுதலை இயக்கங்கள் தமது குருட்டுத்தனமான பயணத்தில் அரும்பெரும் ஆளுமைகளை அழித்திருக்கின்றன. அந்த நாசகாரச்செயலின் விளைவால் ஒரு சூனிய அரசியல் உலகிற்குள் அவர் சிறைப்பட நேர்ந்தமை துரதிர்ஷ்டமானது.

சென்னையில் அமிர்தலிங்கம் அவர்களோடு மங்கையர்க்கரசியையும் நான் காண நேர்ந்த சந்தர்ப்பங்களில், ஈழத்து அரசியல் நிலை குறித்து மங்கையர்க்கரசி கொண்டிருந்த கரிசனையை அறிந்துள்ளேன்.

1957ல் தமிழரசுக்கட்சியின் மகளிர் பேரவைச் செயலாளராக தெரிவு செய்யப்பட மங்கையர்க்கரசி தமிழ்ப் பெண்களின் அரசியல் இயக்கத்தை பலப்படுத்துவதில் பெரும் பங்காற்றினார். 1958ல் சிங்கள ஸ்ரீ எதிர்ப்பியக்கத்தில் ஈடுபட்டு திருமதி கோமதி வன்னியசிங்கம், மங்களா கிறிஸ்தோபர் ஆகியோருடன் கைதுசெய்யப்பட்டார். 1974ல் ஆறுமாத காலம் பனாகொட இராணுவ முகாமில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

அமரர் கோப்பாய் வன்னியசிங்கத்தின் துணைவியார் கோமதி வன்னியசிங்கத்துடன் மிகநெருக்கமான உறவுபேணி வந்தவர்.

ஈழத் தமிழர்களின் அரசியலுரிமைகள் குறித்து மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் இறுதிவரை மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் கொண்டவராகவே திகழ்ந்தார். ‘எந்த விடியலையும் காணமுடியாத ஒரு இருள்சூழ்ந்த நிலையில்தான் தமிழ் இனத்தின் வாழ்க்கை இருக்கிறது. இதற்குமுன் சிங்களப்பகுதியில் இனவாதப்பிரச்சினைகள் தோன்றும்போது, ஓடிவருவதற்கு எம் தமிழருக்கு ஒரு தமிழ்ப்பகுதி இருந்தது. இன்று அந்நிலமும் பறிபோனநிலை மன-திலே ஒரு அச்சத்தைத்தான் தருகிறது ‘என்று மங்கையர்க்கரசி அவர்கள் ஒரு பேட்டியில் கூறியிருந்தார்.

தனது கணவருடனான அரசியல் நினைவுகள் குறித்து அவர் எழுதிய நினைவுக் குறிப்புகளை செம்மைப்படுத்திக் கொடுத்திருந்தேன். ஆனால் அந்த நூல் இறுதி வடிவம் பெறாதுபோய்விட்டமை துரதிர்ஷ்டமாகும்.

ஈழத்தமிழர் சரித்திரத்தின் நீண்ட சாட்சியமாகத் திகழ்ந்த மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின் மறைவு ஒரு தமிழ் அரசியல்நாயகியின் சரித்திர இழப்பைக் குறித்து நிற்கிறது.



nithiyananthan.m@thaiveedu.com

Introduction offer
FREE BUSINESS CARD design*
Designing services done by a professional graphic designer who newly came to Canada from Sri Lanka with 15 years of experience in the advertising field.
Designing services for NEWSPAPERS, MAGAZINES, FACEBOOK and WEB DESIGN can be done for VERY REASONABLE PRICES.
*Conditions Apply
Work samples can be viewed at www.GOdesignsCANADA.com & FB : godesignscanada
If you have any DESIGNING REQUIREMENT please contact George at
தமிழிலும் தொடர்பு கொள்ளலாம்
647 580 5275

வீடு வாங்க... விற்க...
உங்கள் பிரதிநிதி

Residential • Commercial • Investment




**Rave P. Raveenthiran**
Sales Representative

**HomeLife/Future**
Realty Inc. Brokerage
Independently Owned and Operated

205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8
**Dir: 416-567-2462**
Tel: 905-201-9977
Fax: 905-201-9229
ravehomes@gmail.com

HOMELIFE Higher Standards

The spring market started early this year.
Are you thinking of selling?
Opportunity is knocking!
Call me today to get free home evaluation.

**GET STAGED**
**GET SOLD**
**GET MORE $$$**



## ATTIC INSULATION

பரண் (ATTIC) உள்வீடு செய்வீர்களா!!!

SAVE Heating & Cooling Costs
PREVENT Roof Rot & Mold
On Your Attic Insulation!!!



Stay Warm in Winter. Be Cool in Summer.

We also do Insulation Removal

Spray Foam Insulation
Attic Walls
Ceiling Garage
Crawl Space



ENERcon Insulation

க.ப. இரவீந்திரன்
416-939-9353

**416-847-7171**
info@enercon.com / www.enercon.com



# N.K.S

Drapery & Blinds Fabric LTD



**திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்**

உங்கள் வீட்டுக்குத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

**கேதா நடராஜா**
**416.321.6420**

**Ketha Nadarajah**
(President)
**Tel: 416.321.6420**
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9



# TBC Toronto Business College

கணக்கியலில் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



## *DIPLOMA PROGRAMS*

**ACCOUNTING & PAYROLL ADMIN.**
35 Weeks

**BUSINESS ADMINISTRATION**
26 Weeks

**COMPUTERIZED ACCOUNTING**
26 Weeks

**FOOD SERVICE WORKER (FSW)**
12 Weeks (Co-op available)

**MEDICAL OFFICE ADMIN.(MOA)**
32 Weeks

**PERSONAL SUPPORT WORKER(PSW)**
28 Weeks

**SECOND CAREER**

யார் தகுதி உடையவர்கள் ?

- ★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
- ★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
- ★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றைக் கற்கலாம்

Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $25000 or more
visit www.secondcareerontario.com

**PART TIME COURSES**
*Windows, Word, Excel, Power Point, Access, QuickBooks, Sage50 Accounting & Accpac 2012*

**Workshops**
Food Handler Certification
First Aid & CPR

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Student Friendly Environment
- Ample Free Parking
- Professional & Experienced Staff
- TTC Accessible
- Career Planning & Counselling

**416- 451- 6680 / 416-291-5155**

**4465 Sheppard Ave. East #208**
**( Sheppard & Brimley ) Scarborough**
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# இலங்கை கணக்காளர்கள் சங்கம் - கனடா

மார்ச் 12 - Toronto Northeast Hotel இல் நடைபெற்ற இலங்கை கணக்காளர்கள் சங்கம் - கனடாவின் 7 வது வருடாந்த கணக்காளர்கள் கருத்துக்களம்.







# கௌரவம் பெறும் குறள் சிறுமி

மார்ச் 18 - Armadale கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற மார்க்கம் தமிழ் முதியோர் சங்க மாதாந்தக் கூட்டத்தில் கௌரவம் பெறும் 'குறள் சிறுமி' அஞ்சலி ஜெயகாந்தன்.









ஆன் ரைலர் 1941. அமெரிக்க நாவலாசிரியர், சிறுதையாசிரியர், இலக்கிய விமர்சகர். இலக்கியத்துக்காக புலிற்சர் பரிசு, ஜனெற் ஹைடெங்கர் காப்ஃகா பரிசு போன்ற பல பரிசுகளைப் பெற்றிருக்கிறார். இருபது நாவல்கள் எழுதியுள்ளார். அவற்றில் பெயர்பெற்ற நாவல்கள் மூன்று: Dinner at the Homesick Restaurant, The Accidental Tourist, Breathing Lessons. மூன்று நாவல்களுமே புலிற்சர் பரிசுக்கான இறுதித் தேர்வுக்குத் தெரிவானவை. கடைசி நாவல் புலிற்சர் பரிசையும் பெற்றுக்கொண்டது. அந்த நாவல்களின் 'கதாபாத்திரங்கள் முழுமை பெற்றவை' என்றும் 'கூர்மையான கற்பனையும், முற்றிலும் துல்லியமான விவரங்கள் கொண்டவை' என்றும், 'இம்மியும் பிசகாத அழகான நடை கொண்டது' என்றும் 'கூர்மதியும் திறந்த மொழியும்' உடையவை என்றும் அவரின் படைப்புக்களைப் பலரும், குறிப்பாக அவர் காலத்து நாவல் ஆசிரியர்கள், வியந்து கூறியுள்ளனர். அவருடைய பாத்திரங்கள் பலவும் விசித்திரமானவர்களாக இருந்தபோதிலும் அவர்களை நிஜமானவர்கள் போல அவர்களின் உள்ளார்ந்த வாழ்க்கையை தன் செயல்திறனால் ஆழம் நிறைந்ததொன்றாகக் காட்டியுள்ளார். அவருடைய நடைக்காகவும் பொருளுக்காகவும் அவரை ஜோன் அப்டைக், ஜேன் ஒஸ்ரின் ஆகியோருடன் ஒப்பிடுகின்றனர்.



# பதின்ம வயதுப் பாலைநிலம்

## - ஆன் ரைலர் -

### மொழியாக்கம்: என்.கே. மகாலிங்கம்

ஒரு காலத்தில் அவனுக்கு பொன்னிற மயிர் இருந்தது. ஏறக்குறைய வெண்ணிறம். மற்றக் குழந்தைகளிலும் பார்க்க அது குறுகக் கத்திரிக்கப்பட்டிருந்தது. நெற்றியில் சிறிய முடிக்கற்றை ஒன்று முன்னால் நீட்டிக்கொண்டுமிருந்தது. அது அவன் சிறியவனாக இருக்கும்போது. அவன் வளர்ந்த பிறகு அவன் முடி கறுப்பானது. அதை அவன் நீளமாக வளர்த்திருந்தான். சில வேளை கழுத்தளவுக்கும். நீளமாக பழுப்பு நிறக் கயிறு போல அது அவன் முகத்தில் தொங்கிக் கொண்டுமிருக்கும். அவனுடைய முகம் அப்பொழுதும் எவரையும் வசப்படுத்துவதாகவும் சிறப்பானதாகவுமே இருந்தது. அத்துடன் அவனுக்கு அசாதாரணமான நீர் போன்ற நீலக்கண்கள். ஆனால் இப்பொழுது அவன் முகம் வட்டமாக இல்லை. அவன் பேசும்பொழுது கூரான கழுத்துச் சங்கு மெதுவாக ஆடிக் கொண்டுமிருக்கும்.

ஒக்ரோபர் மாதத்தில் அவன் படித்த தனியார் பாடசாலையிலிருந்து பெற்றோரைச் சந்திக்க வேண்டும் என்று ஓர் அழைப்பு வந்தது. டெய்ஸி தனியாகச் சென்றாள். அவள் கணவன் வேலையில் சென்றிருந்தான். தன் கைப்பையை இறுக்கிப் பிடித்துக் கொண்டு அதிபரின் அறையின் மெத்தையில் இருந்தாள். டொன்னி கலகம் செய்கிறவன், சோம்பேறி, குழப்பம் விளைவிப்பவன், நண்பர்களுடன் சேர்ந்து நேரத்தை வீணாக்குபவன், வகுப்பில் கேட்கும் கேள்விகளுக்கு மறுமொழி சொல்லாதவன் என்று அவர் சொல்வதை எல்லாம் அவள் கேட்டுக் கொண்டிருந்தாள்.

குழந்தைகள் பிறப்பதற்கு முன்பு அவளும் நாலாம் வகுப்பு ஆசிரியையாக வேலை பார்த்தாள். இப்பொழுது இந்த அதிபருக்கு முன்னால் ஒரு பெற்றாராக அதுவும் கடமை தவறிய பெற்றாராக அதிபர் திரு லங்காம் முன்னால் மகனைக் கவனிக்காத, அவனைப் பற்றிக் கவலைப்படாத ஒரு பெற்றாராக அமர்ந்திருப்பதற்கு அவள் நாணினாள். 'அவனைப் பற்றி நாங்கள் கவலைப்படாமல் அல்ல,' என்றாள் அவள். 'நாங்கள் இரண்டு பேருமே அவனைப் பற்றித்தான் கவலைப்படுகிறோம். எங்களால் முடிந்தளவு, எவற்றை எல்லாம் செய்ய முடியுமோ அவற்றை எல்லாம் செய்கிறோம். பாடசாலை நாட்களில் அவனை நாங்கள ரிவி பார்க்க விடுவதில்லை. அவன் தன் வீட்டுப் பாட வேலைகளை செய்யும் வரை தொலைபேசியில் பேச விடுவதில்லை. ஆனால் தனக்கு ஒரு வீட்டு வேலையும் இல்லை என்று சொல்வான் அல்லது அவற்றை பாடசாலையிலேயே செய்து முடித்து விட்டான் என்று சொல்வான். எதை நம்புவது என்று எங்களுக்குத் தெரிய வில் லை.'

ஒக்ரோபர் மாத ஆரம்பத்திலிருந்து நவம்பர் மாத முடிவுவரை திரு லங்காமின் ஆலோசனைப்படி டெய்ஸி, டொன்னியின் வீட்டுப் பாடங்களை ஒவ்வொரு நாளும் சரி பார்த்தாள். அவன் பாடங்களைச் செய்யும் போது அவனுக்கு ஊக்கம் அளிப்பதற்காக அவனுக்குப் பக்கத்தில் குந்தி இருந்தாள். அவன் செய்யும் தரமற்ற பிழைகள் எல்லாவற்றையும் கண்டபோது உள்ளுரச் சோர்ந்து போனாள். கணிதத்தில் கவனக் குறைவான பிழைகள், ஆங்கிலக் கட்டுரைகளிலுள்ள தர்க்க ஒழுங்கற்ற கருப்பொருட்கள், ஆய்வு ஏதாவது செய்து எழுத வேண்டிய வரலாற்றுக் கேள்விகளை செய்யாமல் விட்டு விடுதல் போன்றவை அவளின் சோர்வை மேலும் கூட்டின.

அதனால் டெய்ஸி இரவுணவை உண்ணுவதற்கு அடிக்கடி பிந்தினாள். டொன்னியின் தங்கையில் தேவையான அளவு அவளால் கவனம் செலுத்த முடியவில்லை. 'அங்கே என்ன நடந்ததென்று..' தங்கை அமண்டா சொல்ல ஆரம்பிக்கையிலேயே 'இப்போ சொல்லாதே அன்பே, பிறகு சொல்' என்று டெய்ஸி சொல்லி விடுவாள்.

அவளுடைய கணவன் மாற் வீட்டுக்கு வந்தவுடன் அவனுடன் அவள் சிடு சிடுத்துச் சினந்து விழுவாள். அன்றைய நாள் நடந்த துன்பங்களை ஒவ்வொன்றாகச் சொல்லத் தொடங்குவாள். ஆங்கில பாடத்திலுள்ள தெளிவற்ற அறிவுறுத்தல்கள், வரலாற்றுப் பாடத்திலுள்ள அரைகுறைப் படம், சிக்கலானதும் தீர்வுகாண இயலாததுமான இயற்கணித சமன்பாடுகள் என்று பல. மாற் ஆச்சரியத்துடனும் குழப்பத்துடனும் அவளைப் பார்ப்பான். அதன் பின் டெய்ஸி படிப்படியாக அடங்கிப் போவாள். உண்மையாகவே அது எத்தனை அலுப்பூட்டும் செயல் என்பதை எவருக்கும் விளக்கமுடியாது.

மார்கழி மாதத்தில் திரும்பவும் பாடசாலையிலிருந்து அழைப்பு வந்தது. இந்த முறை மாற்றும் வரவேண்டும் என்று சொல்லப்பட்டது. அவளும் மாற்றும் திரு லங்காமுக்கு முன்னாலுள்ள மெத்தையில் இரண்டு குழப்படிகார மாணவர்கள் போல இருந்து அவர் சொல்லப்போகிற செய்தியைக் கேட்க வேண்டியிருந்தது: டொன்னியின் படிப்பில் சற்று முன்னேற்றம் காணப்படுகிறது. வரலாற்றுப் பாடத்தில் டி யிலிருந்து சி தரத்துக்கு முன்னேறியிருக்கிறான். இயற்கணிதத்தில் சி யிலிருந்து பி மைனஸிற்குப் போயிருக்கிறான். மோசமானது என்னவென்றால் அவனுக்குப் புதிய பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன. மூன்று முறை அவன் வகுப்புக்கு வராமல் விட்டிருக்கிறான். கணப்பறையில் சிகறெற் புகைத்திருக்கிறான். சொனி பாணற் என்ற புதிய மாணவனின் லொக்கரை உடைப்பதற்கு உதவி செய்திருக்கிறான். கடந்த கிழமை தடகள விளையாட்டு நேரத்தில் இவனும் மூன்று நண்பர்களும் பாடசாலை விளையாட்டுத் திடலிற்கு வெளியே நின்றிருப்பதைப் பார்த்திருக்கிறார்கள். இவர்கள் திரும்பி வந்தபோது இவன் வாயிலிருந்து பியர் வாசனை வந்திருக்கிறது.

டெய்ஸியும் மாற்றும் திகைத்துப் போய் அமைதியாக அமர்ந்திருந்தனர். மாற் தன் விரல்களால் நெற்றியைத் தேய்த்துக் கொண்டான். திரு லன்கமுக்கு முன் தாங்கள் எப்படி இருந்திருப்பார்கள் என்று டெய்ஸி நினைத்துப் பார்த்தாள். பருத்தி ஆடையில் இருந்த பருமனான இல்லத்தலைவியும், தொழுதொழுத்த காற்சட்டையும் கோட்டும் அணிந்த மிக உயரமான மிக மெலிந்த காப்புறுதி முகவர். தோற்றுப்போன இருவர். மற்றவர்கள் இலகுவாகக் கற்று விடக்கூடிய விஷயங்களை இவர்கள் இருவரும் மிகச் சிரமப்பட்டுக் கற்க வேண்டியவர்களாக இருந்திருக்கிறார்கள். முழங்காலளவு காலுறை போடாமல் நைலோன் உறைகள் போட்டிருக்கலாம் என்று எண்ணிக்கொண்டாள்.

டொன்னி ஓர் உளவியலாரைக் காண வேண்டும் என்று ஒழுங்கு செய்யப்பட்டது. திரு லங்காமுக்கு சரியான ஒருவரைத் தெரியும் என்றும் உடனடியாகவே டொன்னியை அங்கே அனுப்புவதாகவும் சொன்னார்.

அவர்கள் அவ்விடத்தை நீங்க எழுந்து நிற்கையில் டெய்ஸி தன் வயிற்றை உள்ளிழுத்துக் கொண்டு திரு லங்காமுக்கு உறுதியானதும் பொறுப்புள்ளதுமான வகையில் கைகுலுக்கினாள்.

டொன்னி உளவியலாளர் ஒரு கழுதை என்றும் அவர் கொடுத்த சோதனைகள் உண்மையாகவே முட்டாள்த்தனமானவை என்றும் சொன்னான். ஆனால் போக வேண்டிய மூன்று நியமனத்திற்கும் ஒழுங்காகச் சென்றான். அதன்பின் பெற்றோர் இருவருக்கும் உளவியலாளருக்கும் நடைபெற்ற சந்திப்பு கலந்துரையாடலுக்கு டெய்ஸி நன்றாகத் தலையை வாரி இழுத்திருந்தாள். அத்துடன் வழக்கத்துக்கு மாறாக நிதானமாகவும் அமைதியாகவும் இருந்தது போலத் தோன்றினாள். டொன்னிக்கு கடுமையான உணர்வெழுச்சிச் சிக்கல்கள் ஒன்றும் இல்லை என்று உளவியலாளர் சொன்னார். அவன் தன் வாழ்க்கையில் கஷ்டமானதொரு கட்டத்தைக் கடந்துகொண்டிருக்கிறான் என்றும் அவன் கற்பதற்கு சில உதவிகள் தேவை என்றும் அவனுக்கு மேலதிக தன்மதிப்புக் கிடைக்க வேண்டும் என்றும் சொன்னார். அதற்காக கல்வின் பீடில் என்ற ஒரு தனிமுறைப் பயிற்சி ஆசிரியர் ஒருவரை ஒழுங்கு செய்யுங்கள். அவருக்குக் கணிசமான உளவியல் பயிற்சியும் இருக்கிறது என்றும் சொன்னார்.

காரில் வீட்டுக்கு செல்லும்போது, ஒரு மடக் குட்டிச்சாத்தான் தனிப் பயிற்சியாளன் ஒருத்தனிடம் தன்னை இழுத்துக் கொண்டு போய் விட்டால் தான் பாழாய்ப் போவான் என்று டொன்னி சொன்னான். அம்மாவின் முன்னால் இப்படியான வார்த்தைகளைச் சொல்லுவதில் கவனமாக இருக்க வேண்டும் என்று அவனுடைய தகப்பன் சொன்னான்.

அன்றிரவு டெய்ஸி 'தன்மதிப்பு' என்ற

தொடர்தல் 90ம் பக்கம்

# பதின்ம வயதுப்...

89ம் பக்கத் தொடர்ச்சி...

சொல்லைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு நித்திரை இல்லாமல் கிடந்தாள். அவனை எப்பொழுதுமே தாராளமாகப் பாராட்டு வாள். உனக்குப் பல திறன்கள் உள்ளன, நீ திறமைானவன், கைத்திறன்கள் உள்ள வன் என்று எப்பொழுதுமே சொல்லுவாள். அவனுக்கு அளித்த சின்னஞ் சிறிய அன் பளிப்புகளையும் திரும்பவும் நினைத்துக் கொண்டாள். உண்மையில் அப்படியாக அதிகப்படியான அன்பளிப்புக்களைக் கொடுத்து விட்டாளோ என்று எண்ணியும் கொண்டாள். அப்படிச் செய்யவில்லை, தான் செய்தது சரியென்று ஆண்டவனுக்குத் தெரியும் என்று நினைத்தாள். அது தானா அவனுடைய பிரச்சினை?

அமண்டா பிறந்த காலத்தை நினைத்துப் பார்த்தாள். அப்போது டொன்னி தொலைந்து போனது போலவும் குழம்பிப் போனது போலவும் இருந்தான். டெய்ஸி அதுபற்றி மிகவும் எச்சரிக்கையாகவே இருந்தாள். இருந்தும் வீட்டில் புதிய குழந்தையுடன் அவள் அதிக வேலையாக இருந்தாள். தன்னால் செய்யக் கூடிய எல்லாவற்றை யுமே அவள் செய்தாளா? அனைத்தையும் பதிவு செய்யும் காலப் பொறிக்காக அவள் ஏங்கினாள். வருந்தினாள். இன்னுமொரு சந்தர்ப்பம் கிடைத்தால் கச்சிதமாக அவற் றைச் செய்வாள். அவனை அதிகமாக அணைப்பாள், இன்னும் அதிகமாக பாராட் டுவாள், இல்லை குறைவாகப் பாராட்டு வாள். ஓ, அவை எல்லாவற்றையும் செய் வேன் என்று எவரால் சொல்ல முடியும்... என்று நினைத்துக் கொண்டாள்.

பயிற்சியாளன் தன்னைக் கல் என்று அழைக்கும்படி டொன்னிக்குச் சொன்னான். அவனுடைய எல்லா மாணவர்களும் அப் படித்தான் தன்னை அழைப்பதாகவும் சொன்னான். அவனுடைய குழந்தைகள் தான் அப்படிச் சொல்கிறார்கள் என்று டெய்ஸி முதலில் எண்ணினாள். அதன் பிறகு தான் நினைத்தது பிழை என்று அவள் உணர்ந்து கொண்டாள். ஒரு குடும் பத் தலைவனாக இருப்பதற்கு பயிற்சியா ளன் மிகவும் இளையவன். அவன் கைப்பிடி போல தடித்த மீசை வைத்திருந்தான். அவனுடைய தலைமயிர் டொன்னியின் தலைமயிர் போல இழை இழையாக இருந் தது. அவன் உடுத்திருந்த ஜீன் மங்கிப் போய் இருந்தது. கம்பி விளிம்பு போட்ட மூக்குக் கண்ணாடி அவனுடைய மூக்கில் நழுவிக் கிடந்தது. கன்வஸ் துணி போட்ட கதிரையில் சாய்ந்திருந்தான். விரல்கள் நெஞ்சில் குறுக்காகக் கோர்த்திருந்தன. டொன்னியைப் பார்த்து நேசமான முறை யில் கேள்விகளைக் கேட்டான். டொன்னி நிமிர்ந்திருந்து கொண்டு கைநாற்காலி- யைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'அப்போ பாடசாலையில் அவர்கள் எல் லாரும் உன்னில் ஏறுகிறார்கள், இல்லையா? நீ செய்யும் பிழைகள் எல்லாவற்றையும் பெரிது படுத்திக் கொள்கிறார்கள், என்ன?' என்றான் கல்.

'உண்மை,' என்றான் டொன்னி.

'அது ஏன் என்று உனக்குத் தெரியுமா?'

'ஓ, வீட்டுப் பாடம் போன்ற விஷயங்கள்,' என்றான் டொன்னி.

'ஏன், நீ உன் வீட்டுப் பாடங்களைச் செய் கிறதில்லையா?'

'ஓ, நான் சிலவேளை செய்வேன். அவர்கள் செய்யச் சொல்கிற மாதிரி இல்லை.' டொன்னி சற்று முன்னுக்கு அரக்கி இருந்து கொண்டு, 'அதுவொரு சிறைச்சாலையை போல. எல்லா வகுப்புக்கும் போகவேணும். விளையாட்டுத் திடலுக்கு வெளியே இறங் கக் கூடாது.'

'அப்போ, நீ சிலவேளை வகுப்புக்கு போகாமல் விடுவாய், இல்லையா?'

'சிலவேளை,' என்றான் டொன்னி, தன் பெற்றோரைச் சற்றுப் பார்த்துக் கொண்டே.

கல் எந்தவித கவலையும் காட்டாதது போல் கேட்டுக் கொண்டிருந்தான். 'சரி. நான் என்ன சொல்கிறேன் என்றால். நானும் நீயும் ஒரு கிழமைக்கு மூன்று இரவுகள் முயன்று பார்ப்போம். அதைச் செய்ய உன்னால் முடியும் என்று நீ நினைக்கி- றாயா? உன்னுடைய பாடசாலைக்கு எங் களாலும் எதையாவது செய்ய முடியும் காட்டிப் பார்ப்போம். ஒரு மாதம் முயன்று பார்ப்போம். உனக்கு விருப்பம் இல்லா விட்டால் நிறுத்திக் கொள்வோம். சரியா? சிலவேளை எல்லாரும் எல்லாரோடும் ஒத்துப் போவதில்லை, இல்லையா? அதற்கு நீ என்ன சொல்கிறாய்?'



**குடும்பத் தலைவனாக இருப்பதற்கு பயிற்சியாளன் மிகவும் இளையவன். அவன் கைப்பிடிபோல தடித்த மீசை வைத்திருந்தான். தலைமயிர் டொன்னியின் தலைமயிர்போல இழை இழையாக இருந்தது. உடுத்திருந்த ஜீன் மங்கிப்போய்இருந்தது. கம்பி விளிம்புபோட்ட மூக்குக்கண்ணாடி அவனுடைய மூக்கில் நழுவிக்கிடந்தது. கன்வஸ் துணிபோட்ட கதிரையில்...**

'சரி,' என்று டொன்னி சொன்னான். அதில் திருப்தி அடைந்தவன் போல.

'புதன், வியாழன், வெள்ளி இரவு ஏழு மணியிலிருந்து எட்டு மணிவரை.' மாற்றுக் கும் டெய்ஸிக்கும் கல் அதைச் சொன் னான். அவர்கள் அதற்கு தலையை ஆட் டினார்கள். கல் தன் கால்களை மெதுவாக இழுத்து எழும்பி நின்று சிறியதொரு சலாம் போட்டு, கைளால் கதவைக் காட்டினான்.

அவன் அங்கே தான் வசித்துக் கொண்டு தன் வேலையையும் பார்த்துக் கொண்டான் போலத் தெரிந்தது. நேர்காணல் உணவ றையில்தான் நடந்தது. அதையே அவன் அலுவலகமாகவும் மாற்றி உபயோகித்தான். வரவேற்பறை ஊடாக அவர்கள் உள் நுழைந்தபோது றொக் இசையைக் கேட்டு டெய்ஸி அதிர்ச்சி அடைந்திருந்தாள். இருந் தும் அதை அவள் வெளிக்காட்டிக்கொள் ளவில்லை. அவள் உள்ளே பார்த்த போது டொன்னியின் வயதை ஒத்த ஒரு சிறுவன் சோபாவில் படுத்துக் கொண்டு புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தான். இன் னொரு சிறுவனும் சிறுமியும் கணப்படுப் பின் முன்னால் நின்று கொண்டு பிங் பொங் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

'இங்கே எல்லாரையும் ஒன்றாக வைத்தா கற்பிப்பாய்?' என்று கல்லை டெய்ஸி கேட் டாள்.

'ஓ, அவர்கள் தங்கள் வகுப்பு முடிந்த பின்னும் சிலவேளை தங்கி நிற்பார்கள், றப் இசை பாடுவதற்காக. பொதுவாக அவர்கள் நல்ல நட்பான கூட்டம். இந்த இளம் டொன்னி போல அவர்களிலும் பல சோம்பேறிகள் இருக்கிறார்கள்.'

டொன்னியின் தோளை விளையாட்டாகத் தட்டினான். டொன்னி முகம் சிவந்து சிரித் தான்.

காரில் ஏறிக் கொண்டவுடன், 'சரி, நீ என்ன நினைக்கிறாய்?' என்று டெய்ஸி டொன்னி யைக் கேட்டாள்.

டொன்னி பழையபடி தன் வழக்கமான மழுப்பலான சுயத்துக்குச் சென்றான். தன் தாடையை ஆட்டி, கார் நிறுத்துமிடத்தைக் காட்டி, 'அங்கே பாருங்க, அவனிடம் ஒரு கூடைப்பந்து வலை இருக்கிறது,' என் றான்.

இப்பொழுது திங்கள், புதன், வெள்ளிகி- ளில் மாற் வந்தவுடன் தங்கள் இரவுணவை நேரத்துடன் முடித்துக் கொண்டார்கள். சில வேளை இரவுணவை முழுவதும் முடிக் காமல் கூட அவர்கள் வீட்டை விட்டு வெளிக்கிட வேண்டியிருந்தது. அமண்டா உணவுக்குப் பின்னான இனிப்பு பண்டத்தை அப்பொழுதும் தின்று கொண்டிருப்பாள். 'மன்னிக்க வேணும் மகளே, நாங்கள் போயிற்று வாறோம்,' என்று டெய்ஸி சொல் லிக் கொண்டு டொன்னியைக் கூட்டிக் கொண்டு செல்வாள்.

கல் அனுப்பிய முதலாவது கட்டணச் சீட்டு டெய்ஸிக்கு பீதியைக் கொடுத்தது. இருந் தும், அது பெறுமதி தக்கது தான். டொன் னியை திரும்ப அழைத்துச் செல்கையில் டொன்னியின் முகத்தைப் பார்த்தாள். அதில் ஒளியும், பெரும் ஆர்வமும் இருந்தன. அதி பர் டெய்ஸிக்குத் தொலைபேசி டொன்னி எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறான் என்று சொன்னார். 'உண்மையில் அது அவனுடைய பாடங்களில் இன்னும் தெரிய வில்லை. இருந்தும், பல ஆசிரியர்களுக்கு அவனுடைய மனப்பாங்கு மாறியிருக்கி றது என்பது தெரிந்திருக்கிறது. இங்கே ஏதோ மாறுதல் நடைபெறுகிறது என்பதும் தெரிகிறது,' என்றார்.

ஆனால் வீட்டில் டொன்னியில் அதிக வித்தியாசம் தெரியவில்லை. அவனுடைய பெற்றோர்களில் அவனுடைய அபிப்பிரா யம் இன்னும் குறைவாகவே இருக்கிறது போலத் தெரிந்தது. அது தவிர்க்க முடி யாதது என்று டெய்ஸி நினைத்துக் கொண் டாள். அது பதினைந்து வயதின் குணம். தன்னைத் தன் பெற்றோர் மிகவும் 'கட் டுப்படுத்துகிறார்கள்,' என்று அவன் சொன் னான். டெய்ஸியை அந்த வார்த்தை அவனை சடுதியாகத் திரும்பிப் பார்க்க வைத்தது. அவர்கள் தன்னை 'விடுதிக் காப்பாளர்' போல நடத்துகிறார்கள் என் றான். வார இறுதிகளில் வீட்டை விட்டு வெளியேற முடியாது என்று உத்தரவு போட்டார்கள். அவன் ஏதாவது இரவு விருந்துக்குப் போனால் வளர்ந்தோர் எவ ராவது அவர்களை மேற்பார்வை செய்கி றார்களா என்று முதலில் தொலைபேசி யில் கேட்டுக் கொள்வார்கள். 'கடவுளே, நீங்கள் என்னை நம்பவில்லையா?' என்று அவன் கேட்பான்.

'இது நம்பிக்கை, நம்பிக்கை இல்லையா என்ற விஷயமில்லை, மகனே,' என்று சொல்லுவார்கள். ஆனால் அதைப்பற்றி அவனுக்கு விளங்கப்படுத்த மாட்டார்கள்.

அவனுடைய பயிற்சியாளன் ஒருநாள் அவர் களை ஒரு பின் மதியம் அழைத்தான். 'இந்தப் பிள்ளை, நீங்கள் அவனைக் குறைத்து மதிப்பிடுவதாக நினைத்துக் கொள்கிறது என்று நான் நினைக்கிறேன். அவன் மோசமான செயல்களைச் செய்வான் என்று நீங்கள் ஏன் எதிர்பார்க்கிறீர்கள். அவனுக்கு நாங்கள் இன்னும் கொஞ்சம் கூடுதலான சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்,' என்றான்.

'அவன் இன்னும் மற்றவர்களின் தூண்டு தலுக்கு ஆளாகக் கூடியவன்,' என்றாள் டெய்ஸி. அவனுடைய நண்பர்கள் ஏதாவது குறும்புகள் செய்வோம் வா என்று தூண் டினால் அதை இவனும் செய்வான். மது குடிக்க, புகைக்க. மற்றவர்கள் செய்வதை இவனால் செய்யாமல் இருக்க முடியாது.'

'திருமதி கோபிள், இந்தப் பிள்ளையின் மனம் புண்பட்டுக் கொண்டிருக்கிறது. இவன் தீவிரமானவன், எளிதில் உணர்ச்சிவசப்ப டக் கூடியவன். வளர்ந்தவர்கள் எடுக்கும் சவால்களைத் தானும் எடுக்க நினைக்கி றான். அவனில் நம்பிக்கை வைக்க மறுக் கிறீர்கள் என்ற செய்தியை அவனுக்கு நீங்கள் அளிக்கிறீர்கள். அது எப்படி அவன் மனதைப் புண்படுத்துகிறது என்பதை நீங் கள் புரியவில்லையா?'

'ஓ..' என்றாள் டெய்ஸி.

'அவனுடைய தன்மதிப்பை அது குறைத்து மதிப்பிடுகின்றது என்பது உங்களுக்குப் புரியவில்லையா?'

'சரி, நீங்கள் சொல்வது சரியென்றே நான் நினைக்கிறேன்,' என்றாள் டெய்ஸி. டொன் னியை சடுதியாக இப்பொழுது புதிய கோணத்தில் பார்த்தாள்: அவன் இருக்கும் இரங்கத்தக்க நிலை. குனிந்து தோள்க ளைத் தாடையில் தொங்கப் போட்டுக் கொண்டு கைவிடப்பட்டது போல அமர்ந் திருக்கும் நிலை. இளையவன் ஒருத்தனுக்கு அது மோசமானதொரு நிலையல்லவா? அவளுடைய வளரிளம் பருவமும் அவ லமானதொன்றாகத்தான் இருந்தது. தனது குழந்தைகள் எதுவுமே அப்படி ஒருபோ துமே மகிழ்ச்சியற்றதாக இருக்கக் கூடாது என்று தான் எப்பொழுதுமே உறுதிப்படச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

இப்பொழுது வீட்டுக்கு நேரஞ் சென்று வருவதற்கு டொன்னியை அனுமதித்திருந் தார்கள். இரவு விருந்துகள் மேற்பார்வை செய்யப்படுவனவா என்று முதலிலேயே அழைத்து உறுதி செய்வதில்லை. மாலை நேரங்களில் என்ன செய்கிறான் என்று அவனைக் கேள்விகளால் துளைத்தெடுப் பதில்லை. பயிற்சியாளன் பல விதிகளை விதித்திருந்தான்! பாடசாலையில் நடை- பெறுவது எதைப்பற்றியும் கேள்விகள் கேட்க அவர்களை அனுமதிப்பதில்லை. அவனுடைய ஆசிரியர்களுடன் பேச அவர் களுக்கு அனுமதியில்லை. எந்த ஓர் ஆசிரியருக்கும் ஏதாவது முறைப்பாடு இருந்தால் கல்லுக்குத் தான் அவர்கள் தொலைபேச வேண்டும். ஒரு ஆசிரியர் மட்டும் அதற்கு இணங்கவில்லை. வரலாற்று ஆசிரியர், செல்வி எவன்ஸ். அவர் பெப் ரவரியில் ஒரு நாள் காலை டெய்ஸியை அழைத்தார். 'திருமதி கோபிள் உங்கள் மகன் டொன்னியைப் பற்றி ஒரு சிறிய குறை இருக்கிறது.'

'ஓ, மன்னிக்க வேணும், செல்வி எவன்ஸ். டொன்னியின் பயிற்சியாளரே இந்தப் பிரச் சினைகளை இப்பொழுது கையாள்கிறார்...'

'நான் பெற்றோருடன் தான் இப்படியான விஷயங்களை நேரடியாகக் கதைப்பேன். நீங்கள் தான் அவனுடைய பெற்றார்,' என்று செல்வி மிக மெதுவாகவும் தெளி வாகவும் சொன்னாள். 'இதுதான் பிரச்சினை. நீங்கள் டொன்னிக்கு உதவி செய்யும்போது அவனுடைய தரம் டி யிலிருந்து சி க்கு உயர்ந்திருந்தது. இப்போது அது பழை யபடி கீழிறங்கி எஃப் வரை சென்றிருக் கிறது.'

'அதுவரையா?'

'நீங்கள் திரும்பவும் அவன் வீட்டுப் பாடங்

தொடர்தல் 91ம் பக்கம்

# பதின்ம வயதுப்...

90ம் பக்கத் தொடர்ச்சி...

களை மேற்பார்வை செய்ய வேண்டும்.'

'டொன்னியின் பயிற்சியாளன் சொல்கிறார்..'

'டொன்னிக்கு ஒரு பயிற்சியாளன் இருக்கிறார் என்பது நல்லதுதான். இருந்தும் நீங்கள் தான் அவனுடைய வீட்டுப் பாடங்களுக்குப் பொறுப்பாக இருக்க வேண்டும். உங்களுடன் அவன் நன்றாகப் படித்தான். தன் சோதனைகளில் சித்தியடைந்தான். பயிற்சியாளன்.. அவனொரு ஊன்றுகோல் போல மட்டுமே. டொன்னி, வருகிற வெள்ளி ஒரு நொடி வினா வருகிறது, கதைக்காமல் பாடத்தைக் கேள் என்று சொன்னேன். அவன் சொல்கிறான், பரவாயில்லை, செல்வி எவன்ஸ். இப்பொழுது எனக்கொரு பயிற்சியாளன் இருக்கிறார் என்று. ஏதோ இரட்சகன் இருக்கிறது போல. திருமதி கோபிள், நீங்கள் திரும்பவும் பயிற்சியாளனிடமிருந்து அவனை மீட்டெடுக்க வேண்டும்.'

'அப்படியா? நான் அதைப்பற்றி யோசிக்கிறேன். நீங்கள் அழைத்ததிற்கு நன்றி,' என்றாள் டெய்ஸி.

தொலைபேசியை வைத்தவுடன் டொன்னியின் மேல் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. இரட்சகன்! இரட்சகனுக்காக அவள் தன்னுடைய தேவைகள் எல்லாவற்றையும் துறந்தாள். தன் மகளுடன் நேரம் செலவழிக்காமல் விட்டாள். வீட்டிலிருக்கும் தன் மாலை நேரத்தைத் துறந்தாள்!

கல்லின் தொலைபேசி எண்ணை அழைத்தாள். அவன் ஏதோ உளறுவதைப் போலக் குரல் இருந்தது. 'நான் உன்னைத் துயிலில் இருந்து எழுப்பி விட்டிருந்தால் மன்னிக்கவும். ஆனால் டொன்னியின் வரலாற்று ஆசிரியர் என்னை சற்று நேரத்திற்கு முன் அழைத்திருந்தார். டொன்னி வகுப்பில் நன்றாக தன் பாடத்தைச் செய்வதில்லை என்று அவர் சொல்கிறார்.'

'அவர் என்னுடன் அல்லவா பேசியிருக்க வேண்டும்.'

'அவர் என்னை திரும்பவும் மேற்பார்வை செய்யச் சொல்கிறார். டொன்னியின் தரம் கீழிறங்கிக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்.'

'உண்மை. உங்களுக்கும் எனக்கும் தெரியும். தரம் ஒன்றைத் தவிர வேறு விஷயங்களும் இருக்கின்றன என்பது. இல்லையா? நான் முழு முற்றான மாணவனைப் பற்றிக் கவலைப்படுகிறேன். அவனுடைய மகிழ்ச்சி, தன்மதிப்பு போன்றவற்றை எல்லாம். தரம் நாளடைவில் வரும். அதற்கு காலம் தேவை.'

அவன் தொலைபேசியை வைத்தபோது, அவளுக்கு செல்வி எவன்ஸில்தான் கோபம் வந்தது. எப்படிப்பட்ட குறுகிய எண்ணம் உள்ள மனுஷி அவள்!

எல்லாம் கல் தான். கல் அவன், கல் இவன், கல் இப்படிச் சொல்கிறான். கல் அப்படிச் செய்கிறான். கல் இசைத் தட்டொன்றைக் கொடுத்திருக்கிறான். டொன்னியையும் இன்னும் இரண்டு சிறுவர்களையும் றொக் இசை நிகழ்ச்சி ஒன்றுக்கு அழைத்துச் சென்றிருக்கிறான். மார்ச் மாதத்தில் மிரியம் என்ற சிறுமியுடன் தொடர்ந்து தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்தான். கல் மிரியத்தை தன் வகுப்பு ஒன்றுக்கு வருவதற்கும் அனுமதித்திருக்கிறான். கல் டொன்னியின் வாழ்வில் ஈடுபாடு காட்டியது டெய்ஸியின் மனதை நெகிழ வைத்தது. அதேவேளை அது அவளைச் சற்றுப் புண்படுத்தவும் செய்தது. மிரியத்தை ஏற்கெனவே இரவுணவுக்கு அழைத்திருந்தபோது டொன்னி அதை மறுத்து விட்டான். இப்பொழுது கல்லின் வீட்டுக்குப் போவதற்கு தன்னையும் மிரியத்தையும் காரில் கொண்டு போய் விடும்படி எந்த ஐயவுணர்வும் இல்லாமல் கேட்டான்.

இந்த மிரியம் என்ற பெண் கவர்ச்சியற்றவள். மங்கலான உதட்டுச்சாயம் பூசியிருப்பாள். சடைத்த, கரடு முரடான சிவத்த தலைமயிர். கட்டையான தொழுதொழுத்த ஜக்கெற் அணிந்திருப்பாள். அந்த ஜக்கற் மோட்டோர் சைக்கிளில் போகும் போது தான் தோதாக இருக்கும். கல்லின் வீட்டுக்குப் போகும்போது அவள் அமைதியாக வந்தாள். திரும்பும்போது வளவளாவென்று பேசிக் கொண்டு வந்தாள். 'அவன் எத்தனை சுத்தமாக இருக்கிறான். எப்படிப்பட்ட வீடு அது! அங்கிருந்த பொடியள் எல்லாம் ஒரு கேளிக்கை விடுதி போல கூடிக் கொண்டு நிற்கிறார்கள். ஸ்ரியோவில் றொக் இசை போய்க் கொண்டிருக்கிறது.. கடவுளே, அவன் வளர்ந்தவன் மாதிரி இல்லை! திருமணமாகி, விவாகரத்தாகி, அப்படி எல்லாம். ஆனால் அவனை எங்கள் வயதென்றுதான் நினைப்பார்கள்.'



> 'ஓம், சரி,' என்றாள் டெய்ஸி. ஆனாலும் அதற்கு அவள் விரும்பவில்லை என்று அவள் காட்டிக்கொள்வதுபோல இருந்தபோதிலும் அவளும் அதை விரும்பினாள். கல் அமைதியாக அதை எடுத்துச்சொன்னபோது அவள் வேதனை ஓரளவு தணிந்தது.

'திரு பீடில் திருமணம் முடித்தவனா?' என்று டெய்ஸி கேட்டாள்.

'ஓம், அவனைக் கட்டுப்படுத்தும் ஒரு பெண்ணை. அவள் அவனைக் கொஞ்சம் கூடப் புரிந்து கொள்ளவே இல்லை.'

'இல்லை, அப்படியிருக்க முடியாது என்று நினைக்கிறேன்' என்றாள் டெய்ஸி.

இளவேனில் வந்தது. கல்லைச் சுற்றியிருந்த மாணவர்கள் கார் நிறுத்தும் இடத்திலிருந்து கூடைப்பந்து விளையாட்டிடத்துக்குச் சென்றார்கள். சிலவேளைகளில் டெய்ஸியும் மாற்றும் டொன்னியை அழைத்துப் போக வரும்போது அவனை மற்றவர்களுடன் அங்கே பார்த்தார்கள். உற்சாகமாக, ஆர்வத்துடனும் பரபரப்புடனும் கூடை வலையின் கீழே காணப்படுவான். இப்பொழுது சூரியன் மறைவதற்கு நெடுநேரம் செல்லும். அடுத்த வீட்டு வேலியின் நிழல் பிரகாசமான புல் தரையில் தன் ஒடுங்கிய கோடுகளை விழுத்திக் கொண்டிருக்கும். கல்லின் ஜன்னல்களிலிருந்து உரத்த இசை ஒழுகி கொண்டிருக்கும். ஒருமுறை டொன்னி கல்லிடமிருந்து கடனாக வாங்கி வந்த யார் என்ற இசைத் தட்டிலிருந்து வந்த இசை அதுவென்று டெய்ஸி கண்டு பிடித்தாள். அது 'பதின்ம வயது பாலைநிலம் என்ற பாடல்,' என்று டெய்ஸி உரத்துச் சொன்னாள். மாற் அதைக் கேட்டு வரண்டதொரு சிரிப்பை உதிர்த்தான். 'நிச்சயமாக அதுதான்,' என்றான் அவன். அவர்களுக்கு முன்னால் நிகழும் காட்சியைத்தான் அவள் குறிப்பிடுகிறாள் என்று அவன் நினைத்துக் கொண்டான். உண்மையில் அவளும் அப்படித்தான் சொல்லியிருக்கலாம். அங்கே விளையாடியவர்கள் குண்டர்களைப் போலத்தான் இருந்தார்கள். அவர்களுடைய மகனும் கூட அப்படித்தான் இருந்தான். ஏன்? அண்மையில் கல்லின் மாணவர்களில் ஒருத்தன் தவறணையில் நடந்த கத்திக் குத்துக்குப் பலியாகி இருக்கிறான். தவணை நடுவில் ஒருத்தனை விடுதிக்கு அனுப்பி விட்டிருக்கிறார்கள். இரண்டுபேரை அவர்களின் பெற்றோர் நிறுத்தி விட்டார்கள். மறுபக்கத்தில் இன்னொரு மாணவன் கல்லிடம் ஐந்தாண்டுகள் கல்வி கற்கிறான் என்று டொன்னி சொன்னான். 'ஐந்து ஆண்டுகளா,' என்றாள் டெய்ஸி. 'எவனுக்காவது அவனுடைய தேவை முடிவடையாதா?'

டொன்னி அவளைப் பார்த்தான். இறுதிக் காலங்களில் கல்லைப் பற்றி அவள் சொல்வது எல்லாம் அவனைப் பற்றிய விமர்சனம் என்றே டொன்னி எடுத்துக் கொண்டான். 'நீங்கள் எப்பொழுதுமே அவனை உங்களுடைய போட்டிக்குரியவனாகவே பார்க்கிறீர்கள். அத்துடன் கட்டுப்படுத்துகிறீர்கள்,'

ஏப்ரில் மாதம் அதிபர் அவளை அழைத்து டொன்னியை பாடசாலையிலிருந்து நீக்கி விட்டதாகச் சொன்னார். அவனுடைய லொக்கரைப் சோதித்துப் பார்த்தபோது அங்கே ஐந்து ரின் பியரும் அரைப் பெட்டி சிகறெற்றும் கண்டுபிடிக்கப்பட்டன. டொன்னியின் பழைய ஆதாரப் பதிவுகளையும் சேர்த்து பார்க்கையில் இந்தக் குற்றச்செயல் பாடசாலையை விட்டு வெளியேற்றத் தக்க குற்றம் என்றார்.

டெய்ஸி தொலைபேசியின் செவிக்கருவியை இறுக்கிப் பிடித்துக் கொண்டு, 'அவன் இப்போ எங்கே?' என்றாள்.

'அவனை வீட்டுக்கு அனுப்பி விட்டோம். தன்னுடைய உடைமைகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு அவன் வீட்டுக்கு நடந்து வந்து கொண்டிருக்கிறான்.

டெய்ஸி டொன்னிக்கு என்ன சொல்வதென்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்தாள். அவனுடைய பிரச்சினை இப்போது மிகவும் முக்கியமாகி அது மிக அருகில் வந்து புதியதொரு நிலைமைக்கு அவளைத் தள்ளி விட்டிருக்கிறது. அந்தப் பிரச்சினையைக் கையாள்வதற்கு அவள் ஒருவருமே ஆயத்தப்படுத்தவில்லை. வேறெந்த இடத்தில் அவனை எடுப்பார்கள்? அரசாங்க பாடசாலையில் அவனை எடுப்பார்களா? அதற்கு என்ன விதிகள் இருக்கின்றன? வரவேற்பறையில் அவனுக்காகக் காத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். அவன் வருவதற்கு நேரம் எடுக்கிறது என்று அவளுக்குப் படிப்படியாக விளங்கியது. மணிக் கூட்டைப் பார்த்தாள். திரும்பவும் தெருவை வெறித்துப் பார்த்தாள்.

ஒரு மணி நேரம் சென்று விட்டது. பாடசாலைக்குத் தொலைபேசினாள். திரு லங்காமின் செயலாளர், 'ஓம் டொன்னி கோபிள் நிச்சயமாக அவன் வீட்டுக்குத்தான் போயிருக்க வேண்டும்' என்று ஆழ்ந்த, பரிவான குரலில் கூறினாள். டெய்ஸி தன் கணவனை அழைத்தாள். அவன் அலுவலகத்திற்கு வெளியே எங்கோ சென்றிருந்தான். திரும்பவும் ஜன்னலடிக்குச் சென்று சற்று நேரம் சிந்தித்தாள். அதன் பின் டொன்னியின் பயிற்சியாளனை அழைத்தாள்.

'டொன்னியைப் பாடசாலையிலிருந்து வெளியேற்றிவிட்டார்கள். அவன் எங்கே போனான் என்று எனக்குத் தெரியவில்லை. உங்களுக்கு ஏதாவது தெரியுமா?'

நீண்ட நேர அமைதிக்குப் பிறகு, 'டொன்னி என்னுடன் தான் இருக்கிறான், திருமதி கோபிள்,' என்று சொன்னான்.

'உங்களுடனா? அங்கே எப்படி வந்தான்?'

'ஒரு வாடகைக்காரைப் பிடித்துக் கொண்டு வந்தான். அதற்குரிய வாடகையை நான் கட்டினேன்.'

'தயவுசெய்து அவனுடன் பேச முடியுமா?'

திரும்பவும் அமைதி. 'நாங்கள் மூவரும் கலந்துரையாடல் அழைப்பில் தொலைபேசினால் நல்லது என்று நினைக்கிறேன்,' என்றான் கல்.

'எனக்கு கலந்துரையாடல் அழைப்பு தேவையில்லை. அவன் செத்துப் போனானோ கடத்தப்பட்டு விட்டானோ என்னவோ என்று யோசித்துக் கொண்டு நான் யன்னலடியில் நிற்கிறேன். இப்போ நீங்க சொல்கிறீங்க, கலந்துரையாடல் என்று..'

'டொன்னி மிக மிகக் குழம்பிப் போய் இருக்கிறான். அதைப் புரிந்து கொள்ள முடிகிறது. திருமதி கோபிள், என்னை நம்புங்கள். நடந்தது வேற போல. அவனுடைய பக்கக் கதையைக் கேட்டீர்களா?' என்றான் கல்.

'இல்லவே இல்லை. அது எப்படி எனக்குத் தெரியும்? அவன் இங்கே வராமல் உங்களிடம் ஓடி வந்திருக்கிறான்.'

'ஏனென்றால் நீங்கள் அவனுடைய கதையைக் கேட்க மாட்டீர்கள் என்று அவன் நினைக்கிறான்.'

'ஆனால் எனக்குத் ..'

'நீங்கள் வந்து ஏன் கதைக்க கூடாது? நாங்கள் மூன்று பேரும் சேர்ந்து கதைத்து முழுவதையும் ஆராய்ந்து பார்க்கலாம் தானே?'

'ஓம், சரி,' என்றாள் டெய்ஸி. ஆனாலும் அதற்கு அவள் விரும்பவில்லை என்று அவள் காட்டிக் கொள்வது போல இருந்த போதிலும் அவளும் அதை விரும்பினாள். கல் அமைதியாக அதை எடுத்துச் சொன்ன போது அவள் வேதனை ஓரளவு தணிந்தது.

கதவு மணி அடித்தவுடன் கல் கதவைத் திறந்து, 'ஹாய்,' என்று சொல்லி அவளை உணவறைக்கு அழைத்துச் சென்றான். டொன்னி நாற்காலியில் சாய்ந்து இருந்து கொண்டு பெருவிரல் ஒன்றின் மொளியைக் கடித்துக் கொண்டிருந்தான். 'ஹெல் லோ டொன்னி,' என்றாள் டெய்ஸி. அவன் அவளைச் சடாரெனத் திரும்பிப் பார்த்தான்.

'இங்கே இருங்கள் திருமதி கோபிள்,' என்று சொல்லிக்கொண்டு அவளை டொன்னிக்கு முன்னால் இருத்தினான், கல். அவனும் அவ்விடத்தில் நின்று அங்குமிங்கும் நடந்து கொண்டு 'அப்போ'' என்றான்.

டெய்ஸி டொன்னியை கடைக்கண்ணால் பார்த்தான். அவனுடைய உதடுகள் வீங்கி இருந்தன, நீண்ட நேரம் அழுது கொண்டிருந்தது போல.

'இதைப் போன்ற ஒன்றை நான் எதிர்பார்த்தேன். அந்தப் பாடசாலை தண்டனை விதிக்கும் ஒரு பாடசாலை. அதில் நீங்கள் இவனை விட்டிருக்கிறீர்கள். அது உங்களுக்கு விளங்குகிறதா? ஓர் அரை குறைச் சட்டத்தரணி கூட அவர்கள் இவனுடைய குடியியல் உரிமைகளை மீறி விட்டார்கள் என்று சொல்லுவார்கள். லொக்கரைச் சோதிப்பது! அதற்கு சோதனை எழுத்

தொடர்தல் 92ம் பக்கம்

# பதின்ம வயதுப்...

91ம் பக்கத் தொடர்ச்சி...

தாணை எங்கே?' என்றான் கல்.

‘ஆனால் அவர்களுடைய விதி..’ டெய்ஸி சொன்னாள்.

‘சரி, எப்படியிருந்தாலும் அவன் தன்னுடைய பக்கக் கதையை உங்களுக்குச் சொல்லட்டும்,’ என்றான் கல்.

அவள் டொன்னியைப் பார்த்தாள். ‘அது என்னுடைய குற்றம் இல்லை, சத்தியமாக,’ என்றான் டொன்னி.

‘உன்னுடைய லொக்கர் முழுக்க பியர் இருந்ததாக அவர்கள் சொல்லுகிறார்கள்,’ என்றாள் டெய்ஸி.

‘அதுவொரு சோடிக்கப்பட்ட கதை. என்னைப் பிடிக்காத ஒருத்தன் அங்கே இருக்கிறான். அவன் என்னுடைய லொக்கரில் அந்த பியர் முழுவதையும் வைத்து விட்டு அந்தக் கதையை எல்லாவிடமும் பரப்பி இருக்கிறான். அதனால் திரு லங்காம் லொக்கர் சோதனைக்கு ஆணையிட்டார்.’

‘அந்த மாணவனுடைய பெயரென்ன?’ டெய்ஸி கேட்டாள்.

‘ஊ?’

‘திருமதி கோபிள், என்னுடைய வார்த்தையை நம்புங்கள். அப்படியான நிலைமைகள் வழக்கத்துக்கு மாறானவை அல்ல. சிலவேளைகளில் இந்தச் சிறுவர்கள் எத்தனை தூரம் பழிக்குப் பழி இயல்புடையவர்கள் என்று உங்களால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது,’ என்றான் கல்.

அந்தச் சிறுவனின் பெயரென்ன? அதைச் சொன்னால் அந்தச் சிறுவன் தான் லொக்கர் சோதனை செய்து பார்க்கச் சொல்லிச் சொன்னானா என்பதை திரு லங்காமிடம் கேட்கலாம்?’ என்றாள் டெய்ஸி.

‘என்னை நீ நம்பவில்லையா?’ என்றான் டொன்னி.

‘முதலாவது அந்தச் சிறுவனுக்கு உன்னுடைய லொக்கரின் திறப்பு இலக்கம் எப்படித் தெரியும்?’ என்றாள் டெய்ஸி.

‘மனம் திறந்து பேசுவதென்றால், இந்தப் பாடசாலையும் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறது என்றால் நான் ஆச்சரியப்பட மாட்டேன். இவனைப் பள்ளிக்கூடத்தை விட்டுத் துரத்துவதற்கு ஒரு சாக்குத்தான் தேவையாக இருந்தது. மற்றப்படி அவர்களுடைய தாளத்திற்கு ஏற்றப்போல எல்லாப் பிள்ளைகளும் நடப்பார்கள். வேறொரு தாளத்திற்கு அந்தப் பிள்ளைகளால் நடக்கமுடியுமா? நான் என்றால் அந்தப் பள்ளிக் கூடத்தில் எல்லாப் பிழைகளையும் போடுவேன்,’ என்றான் கல்.

‘டொன்னியை ஒருக்காலும் குற்றம் சாட்ட முடியாதா?’ என்றாள் டெய்ஸி.

‘திருமதி கோபிள், டொன்னி சொன்னதை நீங்கள் கேட்டீர்கள் அல்லவா?’

‘அதை மறந்து விடுங்கள்,’ என்று டொன்னி கல்லுக்குச் சொன்னான். ‘என்னை அவர் நம்பவில்லை என்பது உங்களுக்குத் தெரியவில்லையா?’

நிச்சயமாகத் தான் நம்புகிறேன் என்று சொல்வதற்காக டெய்ஸி தன் மூச்சை இழுத்து விட்டாள். அதுவொரு அனிச்சைச் செயல். மறிவினை. டொன்னியின் துடுக்கான, பிரமித்தப் பார்வை அவளுக்கு நன்றாகத் தெரியும். அந்தப் பார்வையை அவன் குழந்தையாக இருக்கையிலேயே அவள் கண்டிருக்கிறாள். ஏதாவது சிறிய குழப்படி செய்து பிடிபட்டால் அதை மறுப்பதற்காக அப்படியில்லை என்று காட்டிக் கொள்வதற்காக அப்படியான பார்வை ஒன்று அவன் கண்களில் தெரியும். இருந்தும் அவனை உடனடியாக குற்றம் சாட்டுவதற்கு அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. தீர்மானம் எடுக்காமல் பின்போடுவதற்காக, ‘எனக்கு நிச்சயமாகத் தெரிந்த ஒன்றே ஒன்றுதான். உன்னைப் பள்ளிக்கூடத்திலிருந்து துரத்தி விட்டார்கள். அதனால் உன்னை என்ன செய்வதென்று எங்களுக்குத் தெரியாமல் இருக்கிறது,’ என்று சொன்னாள்.

‘நாங்கள் போராடுவோம்,’ என்றான் கல்.

‘எங்களால் முடியாது. எங்களால் முடியாதென்பது உனக்கும் தெரியும்.’

‘பிறான்ற்லிக்கு விண்ணப்பிக்க என்னால் முடியும்,’ என்றான் டொன்னி.

கல் உலாத்துவதை நிறுத்தி அவனை விளி தாழ்த்திப் பார்த்தான். ‘பிறான்ற்லி! ஓம், எங்கே இருந்து ஒரு மாணவன் வருகிறான் என்பதைக் கண்டுபிடித்து அவர்களுக்கு உண்மையாகத் தேவையானதை அவர்கள் கற்பிப்பார்கள். அதுதான் பிறான்ற்லி! எனக்கு பிறான்ற்லியில் இடம் எடுத்துத் தர முடியும். அங்கே படிக்கும் மாணவர்களில் பலர் என்னிடம் படிக்கிறார்கள்,’ என்றான் கல்.

டெய்ஸி பிறான்ற்லியைப் பற்றிக் கேள்விப்பட்டதே இல்லை. பிறான்ற்லியைப் பற்றி அவளுக்கு ஏற்கெனவே கூடாத அபிப்பிராயம் வந்து விட்டது. கல்லினுடைய புன்முறுவல் அவளுக்குப் பிடிக்கவில்லை. அது கிளர்ச்சியூட்டுவதாகவும் தீவிரமாகவும் இருந்தது. புன்முறுவலில் ஒருவகைப் பசி இருந்தது.

ஏப்ரில் பதினைந்தாம் திகதி அரசாங்க பாடசாலையில் டொன்னியைச் சேர்த்தார்கள். அத்துடன் தனிமுறைப் பயிற்சியையும் நிறுத்தினார்கள். இரண்டையும் டொன்னி மிகவும் கடுமையாக எதிர்த்தான். கல் ஆச்சரியப்படும் வகையில் அதை ஆட்சேபிக்கவில்லை. டொன்னியைப் பொறுத்தவரை தன்னால் அவனுக்கு எதையும் அளிக்க முடியவில்லை என்பதை கல் ஒப்புக் கொண்டான். அதற்குக் காரணம் டொன்னி உளவெழுச்சி குழப்பமுள்ளவன் என்பதாகச் சொன்னான்.

டொன்னி புதிய பாடசாலைக்கு ஒவ்வொரு நாள் காலையிலும் தலையைக் குனிந்து கொண்டு இழுத்து இழுத்து நடந்து சென்றான். வீட்டுப் பாடங்களைச் செய்தான். சராசரி புள்ளிகளைப் பெற்றான். ஆனால் புதிய நண்பர்கள் ஒருவரையும் அவன் சேர்த்துக் கொள்ளவில்லை. எந்தச் சங்கங்களிலும் சேரவில்லை. அவனைப் பார்க்கையில் களைத்துப் போனவன் போலவும் தோற்றுப் போனவன் போலக் காணப்பட்டான்.

யூன் மாத முதலாம் கிழமையில் நடந்த இறுதித் தேர்வுக் காலத்தில் அவன் காணாமல் போனான். ஒருநாள் பின் மதியம் அவன் வீட்டுக்கு வரவில்லை. பாடசாலையிலிருந்த ஒருவருக்கும் அவனைப் பார்த்ததாக நினைவும் இல்லை. பொலிசும் அவனைக் கண்டு பிடித்து விடலாம் என்று உறுதியாகச் சொன்னார்கள். முதல் சில நாட்கள் தீவிரமாகத் தேடவும் செய்தார்கள். டொன்னியின் பொலிவிழந்த அலங்கோலமான அறையை தடயங்கள் ஏதாவது கிடைக்குமா எனப் பார்ப்பதற்காகத் தேடினார்கள். மிரியத்தினதும் கல்லினதும் வீட்டுக்கும் சென்றார்கள். அதன் பிறகு ஒவ்வொரு ஆண்டும் ஓடிப்போன சிறுவர்களைப் பற்றி அவர்கள் பேச ஆரம்பித்தார்கள். இந்த நகரத்தில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட ஓடிப்போன சிறுவர்கள் இருக்கிறார்கள். ‘விரும்பியபோது ஒருநாள் அவன் திரும்பி வருவான். விரும்பாவிட்டால் அவன் வர மாட்டான்,’ என்றார்கள்.

அவன் வர மாட்டான் என்று தெளிவாகத் தெரிகிறது.

இப்பொழுது அவன் போய் மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. அவனைப்பற்றி ஒரு சொல்லும் கேள்விப்படவில்லை. மாற்றும் டெய்ஸியும் அலங்கோலமாகக் காணப்படும் மனத்துயரை உண்டாக்கும் பதின்ம வயதுச் சிறுவர்கள் கூடியுள்ள இடங்களில் எல்லாம் தேடுகிறார்கள். ஒவ்வொரு முறை தொலைபேசி ஒலிக்கும்போதும் அது டொன்னியாக இருக்கும் என்று நினைக்கிறார்கள். பெற்றோர்கள் இருவருமே இப்போது மூப்படைந்து விட்டார்கள். டொன்னியின் சகோதரி இப்பொழுது வீட்டிலிருந்து தூரத்தில் இருக்கவே கூடுமானவரை விரும்புகிறாள்.

இரவுகளில் டெய்ஸி துயிலாமல் விழித்திருந்து டொன்னியின் வாழ்க்கையைப் பற்றியே நினைத்துக் கொண்டு படுத்திருப்பாள். அவனுடைய வாழ்க்கையில் எது எங்கே பிழையாகப் போனது? தாங்கள் எங்கே பிழை விட்டார்கள் என்று கண்டுபிடிக்க முயலுவாள். அந்தக் குற்றங்களை அவன் ஆரம்பிக்கவில்லை என்று அவளுக்குத் தெரிந்தபோதிலும் அடிக்கடி கல்லில் அவள் குற்றம் காணுவாள். மற்ற நேரங்களில் அவன் இல்லாவிட்டால் டொன்னி முன்னமே வீட்டை விட்டு வெளியேறி இருப்பான் என்று கல்லை மன்னித்து விடுவாள். யாருக்குத் தெரியும்? முடிவில் பெருமூச செறிந்து கொண்டு தலையை வைப்பதற்குத் தலையணையில் குளிர்ந்த இடத்தைத் தேடுவாள். அவள் நித்திரையாகியவுடன் அவளுடைய காட்சியில் சிலவேளைகளில் ஏதோவொன்றைக் காணுவாள். வட்டமான பந்தைப் போன்ற ஒன்று திடீரென வந்து மறைந்தும் விடும். கூடைப் பந்தொன்று. அது மேலே பறக்கும். பின் கூடைக்குள்ளாலே கீழே கடந்த ஆண்டு விழுந்து பரந்து கிடந்த இலைகளின் மேல் விழுந்து கிடக்கும். இலைகளின் மேல் கதிரவனின் கதிர்கள் கோடிழுத்து பட்டை பட்டையாக எலும்புகள் போல வெண்ணிறத்தில் வெளிறிப் போய் உலர்ந்து சுத்தமாகக் கிடக்கும்.



mahalingam.k@thaiveedu.com

கனடா உதவி நண்பர்களின் ஏற்பாட்டில்
இலங்கையில் ஆதரவற்ற பிள்ளைகளுக்கு நிதி சேர்க்கும் நிகழ்வு.

புதுமணப்பிம்பங்கள்

நிகழ்ச்சிகள்

- சிறுவர்களுக்கான ஓவியப் பயிற்சிப் பட்டறை (6 தொடக்கம் 12 வயதுவரை)
  சிறுவர்களுடன் இணைந்து பயணிப்பவர் இரா.குணசீலன்
  நேரம்: 2:00 – 3:00
- சைகை மொழி ஓர் அறிமுகம்
  இணைந்து பயணிப்பவர்: போல்
  நேரம்: 3:00 – 3:30
- உதவி வேலைத் திட்டத்தின் இன்றைய நிலை ஒரு பார்வை
  நேரம்: 3:30- 3:45

கலை நிகழ்வுகள்
3:45ல் இருந்து 5:00 மணி வரையில் நடைபெறும்

இடம்: Scarborough Civic Centre,
150 Borough Dr,
Toronto, ON, M1P 4N7
காலம்: 16-04-2016

தொடர்புகளுக்கு:
போல்: 647-772-1445
குணசீலன்: 416-464-0219
நிருபா: 647-739-3474

குறைந்த பட்ச கட்டணம் $10

அனைத்து உறவுகளையும் அன்புடன் அழைக்கின்றோம்!

Forestbrook Pet Hospital

Dr Raj DVM
905-831-1118
fax: 905-831-4119
3-1105 Finch Avenue
Pickering, Ontario L1V 1J7
www.forestbrookpethospital.com
info@forestbrookpethospital.com

# வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?



அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

MOTOR VEHICLE ACCIDENT

SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A

## MOTOR VEHICLE ACCIDENT

Fractures | Spinal Cord Injury | Brain or Head Injury | Internal Injuries | Scarring or Disfigurement | Catastraphic Injuries

**FOR CASH SETTLEMENT KNOW YOUR RIGHTS AGAINST THE INSURANCE COMPANY.**

## MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Over 30 Years Combined Experience**

Even if you are at fault:
Unemployed . Employed
Passenger . Pedestrian
Cyclist . Travelling in
public transit . Student
Housewife.




DON'T BE MISLEAD INTO TAKING A POOR OR SMALL
**CASH SETTLEMENT**
IF YOU ARE INJURED PHYSICALLY AND/ OR PSYCHOLOGICALLY CALL US NOW!

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்.

**தீபன்**

**(416) 505-9804**

**(416) 831-4444**

24 Direct Line

2190 Warden Ave., Suite 202,
Toronto, ON M1T 1V6





# Diploma Programs

New batch starts every month

- **Automation Technology**
  PLC - HMI - Drive - TCP/IP - DeviceNet
- **CAD/CAM Technology**
  CNC-AutoCAD-SolidWorks-MasterCAM
- **Computerized Accounting**
- **Food Service Worker**
- **Office Administration**
- **Accounting and Payroll**

## Certificate Programs

**Electrical Exam Prep Course**

**Computer Technology**
- PC Technician (A+)
- Programming
  - C/C++, VB.NET, Java
- SQL Database
- Web Development (HTML, CSS, JAVA Script)
- LINUX systems
- CISCO
- Android App Development

- Canadian Securities Course
- Bank Teller
- Cashier Course
- Income Tax Course
- Food Handler Certificate

**Accounting Softwares**
- QuickBooks
- Simply Accounting
- Accpac

**Microsoft Office Apps**
- Word
- Excel
- PowerPoint
- Outlook

**Multi-Media**
- Web Design
- Video Editing
- PhotoShop
- Illustrator
- QuarkXpress
- 3D Animation

(All Certificate Courses are taught individually and each courses are less than 40hrs)

**Second Career Funding**
*Covers tuition, living, transportation expenses upto $28,000 for those qualify*

EI or Laid off ?

# beta College
of Business & Technology

*Visit us:*
**www.betacollege.ca**
*Location:*
**Bellamy & Ellesmere**

**416-449-2382**
**info@betacollege.ca**
*1085 Bellamy Road #208*
*Toronto ON*

# DEBT FREE CREDIT SOLUTION

## Seeking freedom from DEBT?
## We offer Total Debt Free Solutions

- கடன் தொகையினை 85% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
  We shield you from your creditors and offer you a guaranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்
  We arrange a sensible Repayment Plan minimizing potential losses and avoiding bankruptcy

**Instant relief with one easy monthly payment.**

**SAVE thousands of dollars**

**SOLVE YOUR DEBT WORRIES WITH DIGNITY**




**Elankeeran . T**

CERTIFIED INSOLVENCY COUNSELOR

BY Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

Phone: **416.434.1522**

Mobile: **416.834.7227**

Fax: **1.877.800.7899**



**DEBT FREE CREDIT SOLUTION.**

- SETTLEMENT
- CONSUMER PROPOSAL
- BANKRUPTCY

Convenient Greater Toronto locations to serve you better

HEAD OFFICE
10 Milner Business Court, Suite 303
Toronto, ON
M1B 3C6

BRANCH OFFICE
3033 Palstan Road
Mississauga, ON
L4Y 4E7

# பொன்விழாக் கலைஞர் ஜி.ஜே. ராஜ்

ஆழத்து முத்துக்கள் 159

- தெளிவத்தை ஜோசப் -

### 50 வருடங்கள் அரங்கியல் பங்காற்றிய மலையகப் பொன்விழாக் கலைஞர் ஜி.ஜே. ராஜ்:

மலையகத்தின் நுவரெலியா மாவட்டம் பொகவந்தலாவையில் 16.06.1948ல் பிறந்தவர் வி.ரி. போல்ராஜ். 1960ல் பொகவந்தலாவ பரிசுத்த ஜெபமாலை பாடசாலையில் இவர் 5ம் வகுப்பு மாணவனாக இருந்த போது பாடசாலை தமிழ் விழா நடந்தது. ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் ஏதாவதொரு நிகழ்வில் பங்குபெற வேண்டும் என்பது பாடசாலை நியதி. ஐந்தாம் வகுப்பின் ஆசிரியர் ஆசீர்வாதம் ஒரு பாடலைத் தேர்ந்தெடுத்து ஒரு மாணவனைப்பாடவும் போல்ராஜைப் ஆடவும் பணித்தார். சிறுவன் போல்ராஜ் மிகவும் அடக்கமானவன் சங்கோஜி. ஆகவே மேடை ஏறி நடனமாட மறுத்து விட்டதுடன் ஓடியும் ஒளிந்து கொண்டான்.

ஆசிர்வாதம் மாஸ்டரால் ஒன்றும் செய்ய முடியவில்லை! பாட்டுப்பாட தெரிவு செய்த மாணவனை வைத்துப்பாட்டுடன் சமாளித்தவர் கைப்பிரம்பு நாராகும் வரை ஆட மறுத்த போல்ராஜை அழுக அழுக அடித்து தனது ஆத்திரத்தை தீர்த்துக்கொண்டார். ஆனால போல்ராஜை மேடையேற்ற முடியவில்லை. ஆனாலும் என்ன ஆச்சர்யம் இரண்டே வருடங்களின் பின் 1962ல் பாடசாலை மேடையேற்றிய ஆண்டு விழா நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று நடிக்கின்றார் போல்ராஜ்.

இசை ஆசிரியர்களும் சர்ப்பினா மாஸ்டருமான ஏ. மரியசூசை அவர்கள் எழுதித்தயாரித்த பள்ளி நாடகம் தேவமாதாவின் அற்புதம். இதில் பாதிரியாராகப் பாத்திரமேற்று நடித்தவர் போல்ராஜ்.

நுவரெலியா மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற நாடகப்போட்டி 1963ல் நடந்த போது மட்டகளப்பைச் சேர்ந்த ஆசிரியர் திருச்செல்வம் எழுதி இயக்கிய நாடகம் யாழ். நூல் அரங்கேற்றம். அதில் நக்கீரனாக நடித்தவர் இவர். இந்த நாடகம் சிறந்த நாடகமாகவும் இவர் சிறந்த நடிகராகவும் தேர்வு பெற்றார்.

1964ல் கல்லூரி நிதிக்காகப்போடப்பட்ட நாடகம் ஜான்சியின் செல்வம் என்பது. நிதி சேர்ந்ததோ தெரியவில்லை. ஆனாலும் போல் ராஜுக்கு அபிமானம் சேர்ந்தது. பாடசாலை ஆசிரியர்கள் பெரிய வகுப்பு மாணவர்கள் கல்லூரி அதிபர் உட்பட அனைவரும் இந்த மாணவனைப்பாராட்டி மகிழ்ந்தனர். மாணவர் திலகம் என்னும் பட்டமும் கிடைத்தது.

50 களின் இந்திய தமிழ் சினிமா ஆதிக்கம் 60 களில் இலங்கையையும் ஆட்கொண்டிருந்தது. தி.மு.க.வும் அதன் கொள்கை பரப்பும் நாடகம் மற்றும் சினிமாவும் மலையகத்தின் மூலை முடுக்கெங்கும் எதிரொலித்தது.

சிவாஜியின் பராசக்தி கோர்ட்சீன் மனோகராவின் கனல் தெறிக்கும் வசனங்கள் கட்டபொம்மனின் ஜாக்சன் துரையுடனான உரையாடல்கள் அதே சிவாஜி குரலில் பேசப்பட்டு நடித்துக் காட்டப்பட்ட கைதட்டல் பெற்ற காலம் அது. பாடசாலை தமிழ் விழாக்கள் வார இறுதிக்கூட்டங்கள் போன்றவைகள் மேற்படி பேச்சுக்களாலும் அன்றைய திரைப்படங்களில் இடம்பெற்ற சாம்ராட் அசோகன் சாக்ரிட்டீஸ் ஒத்தெல்லோ சேரன் செங்குட்டுவன் போன்ற நாடக மீள் நடிப்புக்களாலும் கலகலத்துக் கிடந்த காலம் அது.

இலங்கை திராவிட முன்னேற்றக்கழகத்தின் கறுப்புச்சிவப்பு வர்ணக்கொடிகள் தோட்டங்கள் தோறும் பறந்த காலம் அது. தமிழர்கள் செய்யும் ஏதாவதொன்றை தூக்கிப்பிடித்துக்கொண்டு எதிர்க்கோஷம் எழுப்பும் பேரினவாதக் கட்சிகள் இ.தி.மு.க. வை தடை செய் என்று டயர்கள் கொழுத்தி கலவரங்கள் மேற்கொண்டு ஊர்வலங்கள் நடத்திய காலமும் அதுதான்.

மலையக இளைஞர்கள் தமிழ் எங்கள் உயிர் என்னும் தி.மு.க கொள்கைப்பிடிப்புடன் உலா வந்தனர். போல் ராஜும் அதற்கு விதிவிலக்கல்ல.

பிந்திய அறுபதுகளில் க.பொ.த. பரீட்சையுடன் தொழில் நிமித்தம் மாத்தளை வாசியாகின்றார். நாடக ஆசை நடிப்பு பின் துடிப்பு ஆகியவைகளும் உடன் செல்கின்றன. அரங்கியல் கலைஞர் மாத்தளை கார்த்திகேசு, மாத்தளை சிவா, இலக்கிய வாதிகளான மலரன்பன், மாத்தளை வடிவேலன், மாத்தளை சோமு ஆகியோரின் இணைவும் நட்பும் கிடைக்கிறது.



நாடக மேடையேற்றம், வில்லுப்பாட்டு, தனிமனித நடிப்பு என்று அரங்கப் பணிகள் தொடர்கின்றன. மாத்தளை தமிழ் மன்றத்தின் உபதலைவர் எஸ். நடேசன் அவர்களின் ஐக்கியத்தோட்ட தொழிலாளர் சங்கத்தின் கலாசாரச்செயலாளர் மாத்தளையில் நடத்திய மலையக இலக்கிய விழா என்று கலைக்கலாசார நிகழ்வுகளில் முன்னின்றவர் இவர். மலையக இலக்கிய விாவுக்காக இவர் எழுதித் தயாரித்த இரு துருவங்கள் நாடகம் இலங்கை இந்திய் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது என்னும் அரசியல் காரணங்களுக்காக மேடையேற்றம் தடை செய்யப்பட்டது.

எழுபதுகளின் ஆரம்ப காலங்கள் திரை இசை நிகழ்ச்சிகளால் மேடைகள் ஆக்கிரமிக்கப்பட்டுக்கொண்டிருந்தன. புகழ்பெற்ற ஹிந்தி தமிழ் சிங்களப்பாடல்கள் மேடைதோறும் ஒலித்தன. சிங்களத்திரை இசைப் பாடகர்கள் மில்டன் மல்லவராச்சி, எச்.ஆர். ஜோதிபால, த்ரீசிஸ்டர்ஸ், பைலா சக்கரவர்த்தி, எம்.எஸ். பெர்ணாண்டோ என்று மேடைகள் கலகலத்தன. காசு கொடுத்து நாடகம் பார்ப்பவர்களை விடவும் கூட்டம் கூட்டமாக டிக்கெட் வாங்கி மக்கள் இந்த சங்கீத மேடை மண்டபங்களில் நிறைந்து வழிந்தனர்.

கொழும்பில் மட்டுமின்றி மலையகம் உள்ளிட்ட பிற இடங்களுக்கும் இந்த இசை நிகழ்ச்சிகள் கொண்டு செல்லப்பட்டன.

கொழும்பின் பிரபல பாடகர்களுடன் அந்த அந்தப்பிரதேச இளம் கலைஞர்களும் மேடையேற்றப்பட்டனர். மாத்தளை, ஹட்டன், நுவரெலியா சங்கீத மேடைகளில் போல்ராஜ் என்னும் புதுப்பாடகர் மக்களை ஈர்க்கத் தொடங்கினர்.

சிங்களத்தில் பைலா தமிழில் பொப்பிசை மெல்லிசைப் பாடல்கள் என்று மேடைகள் களை கட்டின. பைலாவுக்கும் பொப்பிசைக்கும் ஆடிக்களிக்கும் அதே ரசிகர்கள் மெல்லிசைப்பாடல்களையும் அமைதியாகக் கேட்டு ரசித்த விசித்திரமான அரங்குகள் இவை.

போல்ராஜ் மேடை ஏறி பைலா பாட்டுக்கு ஆடிப்பாடிக் கூச்சலிட்டு மகிழும் கூட்டத்தினர் மத்தியில் எங்கே மனிதர் யாரும் இல்லையோ அங்கே எனக்கோர் இடம் வேண்டும் என்னும் புதிய பறவை சிவாஜி பாடல் ஆட்டம் போட்ட ரசிகர்களை கப்சிப்பென்று அடக்கி விடும் பாட்டுப் பிடிக் காவிட்டால் ரசிகர்கள் கத்திக் கலாட்டா செய்வார்கள். உள்ளே போ என்று கூச்சலிடுவார்கள். ஒரு புதுப்பாடகராக மேடையேறிய போல்ராஜ் தனது எங்கே நிம்மதி பாடல் நடிப்பு மூலம் கூட்டத்தைக் கட்டிப் போட்டு வைத்திருக்கத் தெரிந்துகொண்டார்.

பைலாவுக்கும் பொப்பிசைக்கும் ஆட்டம் போட்ட ரசிகர் கூட்டம் போல்ராஜின் மெல்லிசைப் பாடல்களையும் அமைதியாகக் கேட்டு அடங்கிக் கிடந்தது. இசை நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் போலின் இந்த சூட்சுமச் சக்தியை புரிந்து கொண்டனர்.

எழுபதுகளில் இந்த மலையகக் கலைஞர் போல்ராஜின் தலைநகர் நோக்கிய நகர்வு நடைபெறுகிறது.
கலைஞர் கலைச் செல்வன் மானாமக்கீன், நாகூர் கனி போன்ற கலைத்துறையாளர்களினதும் எஸ்.வி. ரஞ்சன், ஆர். திவ்வியராஜன், அந்தனி ஜீவா போன்ற மலையகக் கலைஞர்களினதும் நட்பு கிடைத்திருக்கின்றது.

இவர்களின் நட்பு என் தலைநகர் வாழ்வை நிரந்தரமாக்கியது என்கின்றார் போல்ராஜ்.

திரை இசை நிகழ்ச்சிகள் மேடை மேடையாகக் கொடிகட்டிப் பறந்த எழுபதுகளில் எஸ்.வி. ரஞ்சன் தயாரிப்பில் மானா மக்கீன் இயக்கத்தில் யாதோன் கீ பாஹாத் என்னும் இசை நிகழ்ச்சி மேடையேறியது. ஜி.ஜே. என்டடெயின்மென்ட்ஸ் தயாரித்தளித்த இந்நிகழ்ச்சியில் போல்ராஜ் என்னும் பெயரை மாற்றி அமைப்பின் பெயரான ஜி.ஜே. ராஜ் என்னும் பெயருடன் ஒரு மேடைப் பாடகனாக கொழும்பில் அறிமுகமானார் போல்ராஜ்.

யாதேன் கீ பாஹாத் இசை நிகழ்ச்சி புகழ் பெற்ற சிங்கள இசைக்கலைஞர்களுடன் நவரங்ஹால மண்டபத்தில் ஒலிக்கின்றது. இத்தனை பிரபலங்களுடன் பிரபலமே இல்லாத ஒரு புதிய குரலும் ஒலித்தது. அதுதான் ஜி.ஜே. ராஜின் குரல். நவரங்கஹால ரசிகர்கள் கரகோஷம் எழுப்பி ஜி.ஜே. ராஜின் திறமைக்குக் கட்டியம் கூறினார்கள். அவருடன் நான் கைகோர்த்துக் கொண்டேன். 1974ம் ஆண்டு அரச தமிழ் நாடக விழாவில் மேடையேறிய எனது ‘சிறுக்கியும் பொறுக்கியும்’ நாடகத்திலும் அறிஞர் அண்ணாவின் நாடகமான ‘சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்’ நாடகத்திலும் அவரை நடிக்கச் செய்தேன் என்றெழுதுகின்றார் கலைஞர் கலைச்செல்வன்.

சிலோன் யுனைட்டட் ஆர்ட்ஸ் ஸ்டேஜ் தலைவரும் உரிமையாளருமான கே.செல்வராஜ் 1974ல் ‘உறவுகள்’ நாடகத்தை இரண்டு தடவைகள் மேடையேற்றிய கையோடு ‘புதுப் பணக்காரன்’ என்னும் தனது இரண்டாவது நாடகத்துக்கான ஆரம்ப வேலைகளை ஆரம்பித்து நடிகர்களைக் தெரிவுசெய்து கொண்டிருந்தபோது, கதாநாயகனாக தெரிவாகி இருந்த ஆர். திவ்வியராஜன் அவர்கள் என்னிடம் கூட்டி வந்து அறிமுகப்படுத்தியவர் தான் ஜி.ஜே. ராஜ். மலையகத்தைச் சேர்ந்தவர். நடிகர் மட்டுமல்லாமல் சிறந்த மேடைப் பாடகர் என்றே அறிமுகப்படுத்தினார். அவருடைய கம்பீரத் தோற்றமும் கணீர் என்னும் குரலும் அடக்கமும் என்னைக் கவர்ந்தன. புதுப்பணக்காரனில் அவருக்கான முக்கிய பாத்திரம் இருந்தது.

ஆரம்ப விழா அரங்கேற்றத்துக்கான மண்டபம் எல்லாம் முடிவு செய்யப்பட்டு ஒத்திகை ஆரம்பிக்கும் நேரத்தில் இவரைக் காணவில்லை. திவ்வியராஜனுக்கும் தெரியவில்லை. என்ன செய்வதென்றே தெரியாத நிலையில் இவருடைய பாத்திரத்தை ஏற்க வேறு ஒரு பிரபல நடிகரை ஏற்பாடு செய்தேன்.

மும்முரமாக ஒத்திகை நடக்கிறது. அரங்கேற்றத்துக்கு ஓரிரு வாரம் இருக்கும்போது வந்து சேர்ந்தார். குடும்பப் பிரச்சினை பிரதர் சொல்லிக்கக் கூட அவகாசம் கிடைக்கலை. நுவரெலியா போய்விட்டேன் மன்னிச்சிக்கோங்க. எப்ப நாடகம் வச்சிருக்கீங்க? என்று ஆர்வத்துடன் கேட்டார். எனக்குச் சங்கடமாகத்தான் இருந்தது. நிலைமை அறிந்ததும் சமாளித்துக்கொண்டார். பரவாயில்லை பிரதர் தப்பு என்னுடையதுதானே என்றவர் புதுப்பணக்காரன் நாடக வெற்றிக்காக எங்களுடன் ஓடி ஆடி ஒத்தாசையும் புரிந்தார்.

தொடர்தல் 96ம் பக்கம்

இந்திய மருத்துவம்

உடலும் - மனமும்

- மருத்துவ ஆலோசனைகள்
- மூலிகைகள்
- மருத்துவம் கற்றுக் கொள்ள
- மருத்துவ தொழில் ஆலோசனை பெற

நேரில் சந்திக்கவும்:

இராஜசேகர் ஆத்தியப்பன்
416-995-0416
ayurvetha@gmail.com
www.ayurexpress.net

# பொன்விழாக் கலை...

95ம் பக்கத் தொடர்ச்சி...

என்னுடைய அடுத்தடுத்த நாடகங்கள் அனைத்திலும் அவரை நடிக்க வைத்தேன். இன்று அவர் பொன்விழாக் கலைஞர் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. கலைத்துறையில் அவர் தடம் பதித்த போது நானும் எனது பங்களிப்பினை செய்திருக்கின்றேன் என்பதில் நியாயமான சந்தோஷம் என்கின்றார் கே. செல்வராஜன் அவர்கள்.

உதிர்ந்த ரோஜா(1975), அவள் ஒரு மெழுகுவர்த்தி (1976), உனக்கு நான் சொந்தம் (1976),மோகம் 30 நாள்(1977),முதல் நாடகம் (1977), சலங்கையின் நாதம் (1997) என்று சிலோன் யுனைட்டட் ஆர்ஸ்டேஜின் நாடகங்களில் நடித்தவர் ஜி.ஜே.ராஜ் என்னும் போல்ராஜ்.

கே. செல்வராஜன் அவர்களின் கதை வசன இயக்கத்தில் மேடையேறிய அவள் ஒரு மெழுகுவர்த்தி நாடகம் 1976 ல் மேடை ஏறிய போது இலங்கை இந்திய கூட்டுத் தயாரிப்பான பைலட் பிரேம்நாத் படப்பிடிப்பு இங்கு நடந்தது. அதில் நடிக்க வந்திருந்த தேங்காய் சீனிவாசன் அவர்களும் பார்க்க வந்திருந்தார்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் சத்தியமூர்த்தியாக கம்பீரத் தோற்றத்துடன் நடிக்க போல்ராஜை தேங்காய் சீனிவாசன் ஆரத்தழுவி பாராட்டுக்கள் தெரிவித்ததை மறக்காமல் குறிப்பிடும் ஜீ.ஜே. ராஜ் பைலட் பிரேம்நாத்தில் ஒரு சின்ன றோல் கிடைத்ததையும் அதே மகிழ்வுடன் குறிக்கின்றார்.

2009ல் நடந்த தேசிய நாடக விழாவில் நாகூர்கனி எழுதி செல்வராஜன் இயக்கிய ‘ஆழ்கடலில் ஒரு முத்து’ நாடகத்தில் நடித்த இவருக்கு அந்த ஆண்டின் சிறந்த துணை நடிகருக்கான விருது கிடைத்தது. கலைஞர் கே.செல்வராஜன், கலைஞர் கலைச் செல்வன், கலைஞர் கே. மோகன்குமார், கலைஞர் ஆர். திவ்வியராஜன், கலைஞர் ஜே.பி. ரொபேட், கலைஞர் பாக்கியராஜா என்று அனைவரின் நாடகங்களிலும் நடித்தவர் இவர்.

2004ம் ஆண்டு பெப்ரவரி மாதம் யுனிவர்சல் ஆர்ட் ஸ்டேஜ் கலைஞர் உங்கள் பாக்கியராஜா அவர்கள் வத்தளை நகரசபை மண்டபத்தில் ஜி.ஜே. ராஜின் 40 வருட கலை சேவைக்கான பாராட்டு விழாவினையும் பாக்கிராஜாவின் எதிரொலி நாடகமேடை ஏற்றத்தையும் நடத்தியது.

2006ம் ஆண்டு இதே யுனிவர்சல் ஆர்ட் ஸ்டேஜ் புசல்லாவ சரஸ்வதி வித்தியாலயம், நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி, நுவரெலியா கிறிஸ்தவக் கல்லூரி ஆகிய மலையகக் கல்லூரிகளின் 5ம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப்பரிசு கருத்தரங்குகளில் மலையகக் கலைஞரான ஜி.ஜே. ராஜும் முக்கிய பங்கேற்றார்.

2009ம் ஆண்டு இவருடைய 50 வருட கால கலைச்சேவையைப் பாராட்டி அரசு கலா பூஷண விருந்தளித்துக் கௌரவித்தது.

ஜனவரி 25, 2015ல் கலைஞர் கே. மோகன்குமார் அவர்கள் வத்தளை நகர சபை மண்டபத்தில் பொன்விழா சங்கமம் என்னும் பாராட்டு விழாவினை நடத்தி கலா பூஷணம் ஜி.ஜே. ராஜ் அவர்களின் 50 வருட கலைச்சேவையை கௌரவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



theliwathai.joseph@thaiveedu.com

Since 1999

NOBLE REIGN

NOBLE REIGN
NR

Trusted in Your Neighbouhood. Trusted for your Family



திருடர்கள் பயமா!

இதோ உங்களுக்கும் உங்கள்
அன்புக்குரியவர்களுக்கும்...
உயரிய பாதுகாப்பு

SECURITY ALARM
No Contract
$23.95
Pre Month

SECURITY ALARM
with36 Months Contract
$21.95
Pre Month

SECURITY CAMERA
1080 p HD Package
Starting From
$900

416 710 5050

3341 Markham Rd. Unit B101
Scarborough, M1X 0A6
(Blue Building - Markham & Steeles)

தமிழில் தொடர்புகளுக்கு
416 710 4900

www.noblereign.com

# கலையெழில் நர்த்தகி வானதி தேசிங்குராஜா

- வி. கந்தவனம் -

இலக்கிய உறவுகள் - 63

## அறிமுகம்:

திருமதி வானதி தேசிங்குராஜா அவர்கள் யேர்மனியிற் புகழ்பெற்ற பரதநாட்டிய ஆசிரியர். யேர்மனியில் இவரும் வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரனும் இணைந்து பல கலை இலக்கியப் பணியகளில் ஈடுபட்டுவருகின்றனர். சிவகுமாரனே யேர்மனியில் வானதியை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தவர். அதனைத் தொடர்ந்து அவரது கணவர் தேசிங்குராஜா எனது நண்பராயினார். யேர்மனிக்கு என்னையும் எனது துணைவியார் தவமணியையும் கூட்டங்களுக்கு அதிகம் அழைத்தவர் தேசிங்குராஜா அவர்கள்தான். அதுவும் மனைவி வானதியின் மாணவிகளின் அரங்கேற்றங்களுக்கு முதன்மை விருந்தினர்களாக.

## இளமைக் காலம்:

வானதியின் சொந்த ஊர் யாழ்ப்பணத்துக் கந்தர்மடம். தந்தையார் சிங்கப்பூரிலே பிறந்து வளர்ந்த திரு. இராசையா இலங்கேஸ்வரன். தாயார் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த தனலட்சுமி. இவர்களின் இல்லறமாகிய நல்லறத்தின் பயனாக 30.6.1961ல் வானதி மூத்த பெண்ணாகப் பிறந்தார். உடன்பிறப்புகளாக சுமதி (திருமதி சுமதி மனோகரன்), தேவராஜ், கோபிராஜ், மோகன்ராஜ் ஆகியோரைப் பெற்ற பெருமையும் இவருக்கு உண்டு. குடும்பத்தில் முதலிற் பிறப்பவருக்கு என்னென்ன பொறுப்புகள், கடமையுணர்வுகள் எல்லாம் இருக்குமோ அத்தனையும் வானதிக்கும் இருக்கவே செய்தன. மூத்த பிள்ளைக்குரிய மதிப்புக்கும் மரியாதைக்கும் மத்தியில் வானதி வளர்ந்தார், வளர்க்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் H.N.C.E வரை படித்து மட்டக்களப்புப் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புக்கும் தெரிவுசெய்யப்பட்டார். எனினும் தூரம் கருதித் தந்தையார் படிக்கவிடவில்லை.

## பரதக்கலைப் பயிற்சி:

கல்லூரியிற் கற்ற காலத்திலேயே நனடக் கலையையும் வானதி கற்றுவந்தார். நான்கு வயதிலேயே திருமதி விமலா யோகநாதனிடம் பரதத்தைக் கற்கத் தொடங்கியவர். இரண்டு ஆண்டுகளின் பின்னர், 1967 முதல், செல்வி லீலா நாராயணன் அவர்கள் யாழ்ப்பாணம் ஆரியகுளத்தில் நடத்திவந்த சலங்கை நர்த்தனாலயம் என்ற நடனப்பள்ளிற் வானதி சேர்க்கப்பட்டார்.

செல்வி லீலாவதி இலங்கையில் தயாரிக்கப்பெற்ற இரண்டாவது தமிழ்ப்படமாகிய ‘குத்துவிளக்கு’ படத்தில் நடித்துப் புகழ் பெற்றவர். பிற்காலத்தில் திருவாளர் ஆறுமுகையா அவர்களைத் திருமணம் செய்து கொண்டவர். இத்தகைய பெயர்பெற்ற ஆசிரியரிடம் ஏறத்தாழப் பத்து ஆண்டுகள் பரதக்கலையைப் பயிலும் வாய்ப்பினைப் பெற்றவர் வானதி.

இவரது அரங்கேற்றம் 07.05.1977ல் யாழ் விரசிங்கம் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. அரங்கேற்றத்துக்கு முன்னதாகவே பல கலைவிழாக்களில் நடனம் ஆடித் தனது திறமையை நிலைநாட்டியும் இருக்கின்றார். பிரபல நடன ஆசான் சுப்பையா அவர்களின் தயாரிப்பான ‘ஊர்வசி’ என்ற நாட்டிய நாடகத்தில் நடித்திருக்கின்றார். ‘ஊர்வசி’ பல போட்டிகளில் வெற்றி பெற்று கொழும்பு வரை சென்று வெற்றிக் கொடி நாட்டியதற்கு வானதியின் அழகும் ஆடல் திறனும் அணியாக இருந்தன.

அரங்கேற்றத்தின் பின்னர் பல பிள்ளைகள் நடனத்தைக் கைவிட்டுவிடுவதுண்டு. அவ்விதமின்றி வானதி தொடர்ந்து லீலாவதியிடம் நடனத்தைப் பயின்றுவந்தார். சலங்கை நர்த்தனாலயத்தில் ஆசிரியராகவும் பணிபரிந்தார். தனது ஆசிரியர் லீலாவதியின் மாணவரது அரங்கேற்ற நிகழ்ச்சிகளுக்கு உதவியாகவும் இருந்தார். விடுமுறைகளில் கலைவேந்தன் வேல் ஆனந்தனிடம் கதக்களி நடனத்தைப் பயின்று வந்தார். அவருடன் இணைந்து பல நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டார். இவ்வித பயிற்சிகள் வானதியின் நடன அறிவையும் அனுபவங்களையும் மிகவே விரிவுபடுத்தின.



யாழ் தொலைத் தொடர்புத் தாபனம் 1979ம் ஆண்டு நடத்திய நடனப் போட்டியில் வானதி முதலாவது இடத்தைப்பெற்றார். அதனைப் பாராட்டி அத்தாபனம் வானதிக்கு ‘நாட்டிய தாரகை’ என்ற பட்டத்தைச் சூட்டிக்கௌரவித்தது.

பரதக் கலையில் மேற்படிப்பைத் தொடருவதற்காகப் பெற்றோர் வானதியைத் தமிழ் நாட்டுக்கு அனுப்பிவைத்தனர். 1979 மார்கழி முதல் 1981 மார்கழிவரை திருமதி ரூக்மணிதேவி அவர்களின் மேற்பார்வையில் நடந்த கலாசேத்திரத்தில் திருமதி கமலா அவர்களிடம் வானதி பரத சாத்திரத்தைப் பயின்றார்.

1982 தையில் தாயகம் திரும்பி யாழ் இந்துக் கல்லூரி சிறுவர் பாடசாலையில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். அதே ஆண்டு பிற்பகுதியில் ஆனைப்பந்தி மகா வித்தியலயத்தில் நடன ஆசிரியையாக நியமனம் பெற்றார். 1983 தை முதல் வைத்தீஸ்வரக் கல்லூரியில் கற்பிக்கத் தொடங்கினார்.

## இல்லறம்:

வானதிக்கும் திரு. தேசிங்குராஜா அவர்களுக்கும் 07.12.1983ல் திருமணம் இனிதே நடந்தேறியது. தேசிங்குராஜா அவர்கள் புங்குடுதீவைச் சேர்ந்த திரு. வேலாயுதம் திருமதி பார்வதி தம்பதியரின் மூத்தமகனாவர். இவர்களது கருத்தொருமித்த இல்லற வாழ்க்கையின் பயனாக கிசோத்தனன் பரிசாகக் கிடைத்தான். அவன் பிறந்த பலனோ என்னவோ பிறந்த பதியைவிட்டு யேர்மனிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை தேசிங்குராஜா குடும்பத்துக்கு உருவாகியது.

## யேர்மனியில் வானதி:

திரு. தேசிங்குராஜா 1979ல் யேர்மனிக்குச் சென்று 1984ம் ஆண்டு மனைவி வானதியையும் குழந்தை கிசோத்தனனையும் வரவழைத்தார். யேர்மனியில் தேசிங்குராஜா குடும்பம் டலன்பேக் நகரத்திற் குடியேறிப் படிப்படியாகத் தங்கள் வாழ்வைப் புதிய சூழலுக்கேற்பச் சீரமைக்கத் தொடங்கியது.

1985ம் ஆண்டளவில் வானதி யேர்மனியில் தானே நடனமாடிச் சிறு நடன நிகழ்ச்சிகளைக் கொடுக்கத் தொடங்கினார். அப்பொழுதெல்லாம் உடுப்பகள், அலங்கார நகைகள் வாங்கமுடியாத நிலை. எனினும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது வீட்டுத் துணிமணிகளைக் கட்டிக்கொண்டு மிக உறுதியாகவே அவரது காற்சலங்கைகள் யேர்மனியில் ஒலிக்கத் தொடங்கின.

## வானதி வாணி நர்த்தனாலயம்:

திருமதி வானதி தேசிங்குராஜா 1986ம் ஆண்டு டோற்மூண்ட் நகரில் ‘வாணி நர்த்தனாலயம்’ என்ற பெயரில் நடனப்பள்ளி ஒன்றை ஆரம்பித்தார். ஓர் ஆண்டுக்குள்ளாகவே பள்ளியின் பிள்ளைகள் தொகை 30 ஆகியது. 1990ல் பிராங்பேட் நகரிலும் வகுப்புகள் தொடங்கப்பட்டன. படிப்படியாகப் பிற இடங்களிலும் பிள்ளைகளின் தொகையைப் பொறுத்து நர்த்தனாலயத்தின் கிளைகள் இயங்கத் தொடங்கின.

பரதநாட்டியம் தமிழர் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் ஒரு கலையாகும். பரதநாட்டியத்தின்மூலம் பிள்ளைகள் தமிழர் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்னும் கொள்கையுடையவர் வானதி. பண்பாட்டை விளங்கிக்கொள்வதற்குப் பிள்ளைகளுக்குத் தமிழ் அறிவு இன்றியமையாதது. அதனால் தனது நர்த்தனாலயத்திற்குப் படிக்கவரும் பிள்ளைகள் தமிழ்மொழியைப் பேசவும் எழுதவும் தெரிந்தவர்களாக இருத்தல்வேண்டும் என்பதை அனுமதித்தகைமைகளில் ஒன்றாக வைத்திருக்கின்றார்.

வாணி நர்த்தனாலயம் காலப்போக்கில் மக்களால் வானதி வாணி நர்த்தனாலயம் என்று அழைக்கப்படலாயிற்று. இதன் முதலாவது அரங்கேற்றம் 11.05.1991ல் டோற்மூண்ட் நகரில் நடைபெற்றது. அரங்கேறிய முதல்மாணவி எனது பெறாமகள் செல்வி அன்பரசி சிவதாசன்(இப்பொழுது திருமதி அன்பரசி ஐங்கரன்).

## பிற திறமைகள்:

திருமதி வானதி பரதக்கலைக்கு அப்பாலும் தனது பன்முகத் திறமைகளைக் காட்டிவருகின்றார். மிகவும் முக்கியமாக இவரது பேச்சாற்றலைக் குறிப்பிடல் வேண்டும். பல விழாக்களில் அவரது பேச்சுக்களைக் கேட்டிருக்கின்றேன். காலத்தையும் இடத்தையும் அறிந்து அழகாகவும் அளவாகவும் பேசுகின்ற ஒரு திறமைசாலி இவர்.

மற்றுமொரு திறமை எழுத்தாற்றல். ‘எனது நோக்கிற் பரதம்’ பரதம் நூல் ஒன்றையும் இவர் பரதநாட்டிய உலகத்துக்குப் பரிசாகத் தந்திருக்கின்றார். இது ஆங்கிலம், டொச் ஆகிய மொழிகளிலும் பெயர்க்கப் பெற்றுள்ள சிறப்புடையது. இதன் அறிமுக விழா ஒன்று எனது தலைமையில் கனடாவிலும் நடந்தேறியிருக்கின்றது. வானதி அவர்களை ஆசிரியராகக்கொண்ட யேர்மனியின் முதற் சமயப் பத்திரிகையாகிய ‘சிவத்தமிழ்’ என்ற இதழை வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி சிவகுமாரன் காலத்துக்கு காலம் வெளியிட்டுவருகின்றார்.

## கனடிய உறவு:

வானதி அவர்கள் யேர்மனிக்கு அப்பால் ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலுமே நன்கு அறியப்பட்டவர். நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு மட்டுமன்றிப் பிறர் நடத்தும் கலைவிழாக்களுக்குப் பிரதமவிருந்தினராகவும் நடனப் போட்டிகள் மற்றும் எழுத்துப் பரீட்சைகளை நடத்தும் நடுராகவும் எல்லா நாடுகளுக்கும் சென்றுவருகின்றார்.

கனடாவுக்கும் வந்திருக்கின்றார். வந்த இடத்தில் அவரை tvi யில் பேட்டியும் கண்டிருக்கின்றேன். கனடாவில் சங்கீதபூஷணம் திரு. பொன் சுந்தரலிங்கம், சங்கீதவித்துவான் திருமதி பராசக்தி விநாயகதேவராஜா, ‘உதயன்’ பத்திரிகை ஆசிரியர் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் போன்றவர்களுடன் நெருங்கிய உறவை வளர்த்துவருகின்றார். 2002ம் ஆண்டு மே மாதம் நடந்த உதயன் விழாவில் வானதியின் மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் இடம்பெற்றன என்பதுவும்

தொடர்தல் 98ம் பக்கம்

SP Electronics
TV, VCR, DVD, Players, Telephone-Computers அனைத்துத் தமிழ் வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்
416 264 6400
2641 Eglinton Avenue East ( Brimley & Eglinton)

JRS College
"Committed to providing quality training"

International Students

Now we accept international students

Beauty Courses
Starts in April

Food Service Worker
Starts in May

STUDENT TESTIMONIALS

"I have chosen Early Childcare Assistant diploma program which is 36 weeks in length at JRS College of Business and Health Care Inc. To do this diploma program at JRS College, I received over $34, 000 from government." **Mathu**

"I have chosen 40 weeks of Health Office Administrator diploma program at JRS College of Business and Health Care Inc. Due to long duration program I received $44, 000 through Second Career to cover my studies, day care, living allowance and transportation." **Thiny**

"With the help of JRS College of Business and Health Care Inc., I am able to take Accounting and Payroll Administration diploma program with the government funding of $36, 000. The main reason for me to get high amount is since the program duration is 45 weeks." **Suba**

15 Diploma Programs

| | |
|---|---|
| **Business** | |
| -Accounting & Payroll Admin-PT | (50 Weeks) |
| -Accounting & Payroll Admin | (45 Weeks) |
| -Computerized Accounting | (30 Weeks) |
| -Office Assistant | (16 Weeks) |
| **Health Care** | |
| -Community Service Worker | (52 Weeks) |
| -Early Childcare Assistant | (36 Weeks) |
| -Health Office Administrator | (40 Weeks) |
| -Personal Support Worker-PT | (35 Weeks) |
| -Personal Support Worker | (32 Weeks) |
| -Pharmacy Assistant | (46 Weeks) |
| **Technology** | |
| -3D Animation for Video Games | (72 Weeks) |
| -Graphic Design | (34 Weeks) |
| -Web Development | (43 Weeks) |
| -Computer Network & Security | (40 Weeks) |
| -Engineering Design and Drafting Technologist | (28 Weeks) |

Contact info

(Midland & Finch)
330-4168 Finch Ave East
Scarborough, ON M1S 5H6
416-292-2455

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005.)

# கலையெழில் நர்த்தகி...

97ம் பக்கத் தொடர்ச்சி...

இங்கு குறிப்பிடத்தக்கது.

### மக்கட் செல்வம்:

தேசிங்குராஜா வானதி தம்பதிகளுக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவர் கிசோத்தனன் தயகத்திலே 09.12.1983ல் பிறந்தவர். தம்பியார் ஷியாம் யேர்மனியில் 13.03.1986ல் பிறந்தவர். மூன்றாமவர் செல்வி தமிழினி 20.08.1990ல் பிறந்தவர்.

மூவருமே படிப்பில் படுசுட்டிகள். தமிழ், டொச்சு, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் சரளமாகப் பேச வல்லவர்கள். தாயகத்தில் தமிழைப் பேசத்தெரிந்த குழந்தைகளே புலம்பெயர்ந்தபின் தமிழை மறந்துவிடுகின்ற நிலைமை பொதுவாக இருக்கையில் இவர்கள் தாயகத்துப் பிள்ளைகளைப் போலவே சுத்தமான உச்சரிப்போடு தமிழைப் பேசுகிறார்கள். அதற்குப் பிரதான காரணம் இவர்களது வீட்டுமொழி தமிழாக இருப்பதுதான்.

தமிழினியும் பெயருக்கேற்ற வகையில் அசல் தமிழ்ப்பிள்ளையாகவே வளர்ந்திருக்கின்றார். வானதி தாய்ப்பாலோடு பரதக்கலையையும் தமிழினிக்கு ஊட்டி வளர்த்துள்ளார். எட்டு வயதில் இவரது அரங்கேற்றம் டீலன் பேக் நகரத்தில் 11.07.1998 சனிக்கிழமை பெருந்திரளான பார்வையாளர் முன்னிலையில் நடத்தப்பெற்றது. தொடர்ந்து இந்தியா சென்று குச்சுப்புடி நடனத்தையும் பிரபல குச்சுப்புடி ஆசிரியர் திருமதி சத்தியப் பிரியா அவர்களிடம் நான்கு ஆண்டுகள் கற்கும் பெரும் வாய்ப்பினையும் இவரது பெற்றோர் வழங்கியிருந்தனர். தமிழினியின் குச்சுப்புடி அரங்கேற்றம் 02.11.2002 டீலன் பேக்கில் வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி மு.க.சு. சிவகுமாரன் தலைமையில் நடைபெற்றது. கனடாவிலிருந்து கவிநாயகர் வி. கந்தவனமும் துணைவியார் தவமணியும் முதன்மைவிருந்தினராக அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களோடு தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிப் பணியகப் பொறுப்பாளர் திரு. து. அரவிந்தன் கௌரவ விருந்தினராகவும் தமிழ்நாட்டிலிருந்து தமிழினியின் குச்சுப்புடி ஆசிரியர் திருமதி சத்தியப் பிரியாவும் அவரது கணவர் திரு. ரமணாவும் சிறப்புவிருந்தினர்களாகவும் வருகை தந்திருந்தமை பெருஞ்சிறப்பாகும்.

### பாராட்டுகளும் பட்டங்களும்:

எமது சமூகம் நன்றி மறவாத சமூகம். பொதுப்பணியாற்றுகின்றவர்களை மதித்துப் பாராட்டுகின்ற சமூகம். வானதியையும் அவ்வப்போது தமிழ்மக்கள் பாராட்டி மதிப்பளித் திருக்கின்றார்கள். அவற்றுள் பெருவிழாக்களிற் சூட்டப்பெற்ற பட்டங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு:

நாட்டியதாரகை - யாழ்
தொலைத்தொடர்புத் தாபனம் (1979)
நாட்டிய ஆச்சார்யமணி
- டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம் (1996)
ஈழத் தேசியவாணி - திருமதி ராகினி
இராஜபோபால் (1998)
கலைச்சுடர்
- திருமதி லீலா ஆறுமுகையா (2001)
நிருத்த கலைமாமணி
- சர்வதேச இந்துமதச் சங்கம் (2001)
பரதமாதேவி
- கவிநாயகர் வி. கந்தவனம் (2002)
கலையெழில் நர்த்தகி
- கனடா இளங்கலைஞர் மன்றம் (2002)
நாட்டிய கலாமணி
- சர்வதேச இந்துமத குருபீடம் (2002)
கௌரவ கலாநிதி - உலகப்
பல்கலைக்கழகம், அமெரிக்கா (2003)

வாழ்க கலாநிதி வானதி தேசிங்குராஜா அவர்கள்! வளர்க அவர்தம் கலை மற்றும் சமூகப் பணிகள்!



kandavanam.v@thaiveedu.com

யோகசாலை

ஒரு வளமான சமுதாயத்தை நோக்கி

உடல், மனம் மற்றும் ஆத்ம நலம் பேண
ஆசனப்பயிற்சி
மூச்சுப்பயிற்சி
தியானம்


- சிறுவர்கள் ஆர்வமாக கற்றுக் கொள்ளும் முறையில் அமைந்த யோகா வகுப்புக்கள்
- இளையோருக்கான சிறப்பு குறுகிய கால அறிமுகப்பயிற்சி வகுப்புக்கள்
- ஆரம்ப மற்றும் ஆழ்நிலை வகுப்புக்கள்
- முதியோர் நலம் பேணும் சலுகைக்கட்டண வகுப்புக்கள்

பதினைந்து வருட பயிற்சி அனுபவம் பெற்று
உலகப் பிரசித்தி பெற்ற சிவானந்தா அமைப்பில்
பயிற்றுவிற்கும் ஆசிரியர்கள்

யோகசாலையை ஒரு யோகசமூக சாலையாக
உருவாக்க நீங்களும் இணையவும்

தொடர்புகளுக்கு

Tel: 647 760 8156
Email: yogasalai108@gmail.com
Address: 210 Silver Star Blvd, Unit 850, Scarborough, ON
(Midland Ave/ Finch Ave E)


YOUR SATISFACTION IS
OUR SUCCESS
Serandib Travel
Your satisfaction is our success
Tel: 416-750-0009 / Fax: 416-750-9880 Canada Toll Free: 1-800-207-0902
7, Eastvale Drive # 207, Markham, Ontario, L3S 4N8, Canada
Ph: 416-628-8590, 519-962-8910, 313-887-0911, 905-472-7500
Montreal: 514-448-1389, Calgary: 403-770-9647, Ottawa: 613-482-6590
Vancouver: 604-625-0495, Mississauga: 905-564-7564
Email: info@serandibtravel.com Web: www.serandibtravel.com
SriLankan
Emirates
ETIHAD
FLY KINGFISHER
QATAR
JET AIRWAYS
KUWAIT AIRWAYS
IATA
tico.ca


ekuruvi
NIGHT 2016
BIZTHA MARKETING EXCELLENCE AWARD
Connecting Roots Award
Web and Online Marketing Award
Commitment to Service Award
Making a Difference Award
Pioneer in Tamil Media Award
Industry Initiative Award
03
APRIL
5:30 Sunday April 03rd 2016| Chandni Grand | 3895 McNicoll Ave, Scarborough
இகுருவி விழாவின் பிரதம விருந்தினராக அரசியல் ஆய்வாளர் நிலாந்தன்
சர்வதேச ரீதியில் அறியப்படும் தமிழ் அரசியல் கருத்தாளர்களில் நிலாந்தன் பிரதானமானவர்.
இலங்கைத்தீவின் அரசியலில் பெரும் தாக்கத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தக்கூடிய
பிரதான அரசியல் மற்றும் பத்தி எழுத்தாளராக இவர் விளங்குகின்றார். அரசியல் ஆய்வாளர்.
பத்தி எழுத்தாளர். கேலிச் சித்திரக் கலைஞர். கவிஞர் என பன்முகங்களை கொண்ட நிலாந்தன்
இலக்கியம் தொடர்பாக ஆய்வு கட்டுரைகளை தொடர்ந்தும் எழுதுபவர். சமகால அரசியல் குறித்த
இவரது பதிவுகள் பல்வேறு நாடுகளிலும் ஒலி மற்றும் ஒளி ஊடகங்களிலும்
பத்திரிகை மற்றும் இணைய ஊடகங்களிலும் தொடர்ந்தும் வெளியாகி வருகின்றன.
RE/MAX
THIPAN RAJ
NAVA LAW
THE GUARDIAN
GINI ANNARASA
INFORCE LIFe
Financial Service Inc.
AJAX NS DENTAL
COMPUTEK COLLEGE
Allstate
HARRY KULASEGARAM
416-272-8543


வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Landmark Realty Inc.
Brokerage
Higher Standard Agents..
Higher Results!
Thana Yoganathan
Sales Representative
தனா யோகநாதன்
416.418.5749
thaneaever@gmail.com
CHAIRMAN AWARD
TOP 10 SALES PERSON/ RESALE
TOP 5%
PLEASE CALL
Rossland / Audley AJAX
Detached
Br: 5 | Wr: 4
STARTER SPECIAL
Midland/Danforth Rd
Condo
Br: 2+1 | Wr: 2
135 Village Green Sq
Kennedy & Hwy 401
Detached
Br: 2 + 1 | Wr: 2
COMING SOON
Mccowan/Ellesmere
Detached
Br: 1 + 1 | Wr: 1
COMING SOON
Morningside / Finch
Detached
Br: 4 + 2 | Wr: 4
POWER OF SALE
Brock And Major Oaks
Detached
Br: 4| Wr: 4
$489,900
Ravencroft And Westney
Detached
Br: 3 | Wr: 3
$494,900
Harwood/Rossland
Detached
Br: 3 | Wr: 3
$499,000
Weston Rd/Kingston Rd
Detached
Br: 3 | Wr: 3
$499,900
Audley And Rossland
Att/Row/Twnhouse
Br: 3 | Wr:3
$499,900
Audley / Rossland
Detached
Br: 3 | Wr: 3
$499,900
Ravenscroft/Rossland
Semi-Detached
Br: 3 + 1 | Wr: 3
$499,900
Westney
Detached
Br: 3 | Wr: 3
$549,900
Harwood/Emperor
Detached
Br: 4 | Wr: 2
$529,000
Harwood & Taunton
Att/Row/Twnhouse
Br: 3 | Wr: 3
$ 535,000
Harwood & Hwy #2
Detached
Br: 2+1 | Wr: 3
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Thana Yoganathan
Mortgage Agent - Lic# M09000424
416.418.5749
thanaever@gmail.com


தூறல்
இனிமையானது...
தமிழ் எங்கள் மூச்சு-2016
கனடாவில் முதல்முறையாக 55 வயதிற்கு மேற்பட்டோருக்கான
சிறுகதை | கட்டுரை | கவிதை | பேச்சுப் போட்டிகளில்
வெற்றிபெற்றவர்களுக்கான
விருது வழங்கும் விழா
Title Sponsors
AJAX NS DENTAL
905 426 2222
Harwood & Taunton
TD Canada Trust
Moon Mahalingam
Cell: 416-319-6654
NAVA LAW
PROFESSIONAL CORPORATION
Gold Sponsors
iNFORCE LIFe Financial Services Inc.
Direct: 416 909 0400
www.inforcelife.com
TIMO STAR TEXTILES
280 Elson St, #6 Markham, ON
TEL: 416 723 4463
OGDEN
Funeral Homes
Scarborough • 416-293-5211
Silver Sponsors
Sathy Sivasubramaniam
HomeLife/Future Realty
COMPUTEK COLLEGE
905.471.3344
416.321.9911
SARAVANAA BHAVAN
Bronze Sponsors
RBC Royal Bank
PrashathGnane
Contect :6474047728
MORTGAGE
For all your mortgage needs!
Thavanesan Subra
Mortgage Agent
Contect: 416.908.5656
JODI MATRIMONY
NRS GENERAL SERVICES
CUSTOM WOODWORKING & FINISHING
647-969-5579 416-836-0162 647-296-7197
வெள்ளிக்கிழமை
மாலை 6 மணி
ஏப்ரல் 15 2016
JC Grill Banquet Hall
1686 Ellesmere Road, Toronto, On M1H 2V5

# அடுத்த புதன்கிழமை உன்னுடைய முறை

- அ. முத்துலிங்கம் -

வாரத்தில் ஏழு நாட்கள் இருப்பதில்தான் முதல் பிரச்சினை ஆரம்பமானது. இதை மாற்றுவது அவனுடைய ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. வாரத்தில் ஆறு நாட்கள் இருந்திருக்கலாம் எட்டு நாட்கள் கூட பரவாயில்லை. ஒற்றைப் படையாக ஏழு நாட்கள் வந்ததில்தான் விவகாரம். 1700 வருடங்களுக்கு முன்பு ரோமாபுரி பெரும் சக்கரவர்த்தி கொன்ஸ்டன்ரைன் வாரத்தில் ஏழு நாட்கள் என்று தீர்மானித்ததை அவன் எப்படி மாற்ற முடியும்.

இதனால் மண முடித்த ஆரம்பத்தில் சில தொந்தரவுகள் ஏற்பட்டு தீர்க்கப்பட்டன. அவன் மனைவி கருவுற்ற போது அவை இன்னும் தீவிரமடைந்தன. லவங்கி பிறந்தபோது கனவிலும் அவன் நினைத்திராத பல பிரச்சனைகள் உருவாயின.

ஆனால் அவன் மனைவி பட்டியல் போடுவதில் திறமைசாலி. எந்தப் பிரச்சனையையும் பட்டியல் போட்டு தீர்த்துவிடுவாள். லவங்கி பிறந்த போது ஏற்பட்ட மேலதிக வேலைகளுக்கும் பட்டியல் தயாரித்து அவற்றை சமமாகப் பங்கிட்டுக் கொண்டார்கள். குழந்தைக்கு உடை மாற்றுவது, குளிக்கவார்ப்பது, மழலைக் கீதம் பாடுவது, நித்திரையாக்குவது, உணவு / பால் கொடுப்பது, விளையாட்டுக்காட்டுவது, நாப்பி மாற்றுவது எல்லாம் பட்டியலில் இருந்தன. எவ்வளவு எளிய வேலை என்றாலும் அது பட்டியலின் பிரகாரம் சரி சமமாக பிரிக்கப்பட்டது.

அப்போதுதான் புதன்கிழமை பிரச்சனை உருவானது. ஞாயிறு, திங்கள், செவ்வாய் அவனுடைய முறை. வியாழன், வெள்ளி, சனி அவளுடைய முறை. புதன்கிழமை நடுவே வந்தது. அதை யார் செய்வது. அதற்கும் அவள் ஒரு வழி கண்டுபிடித்து சுமுகமாகத் தீர்த்துவைத்தாள். ஒரு மாதம் புதன்கிழமை அவன் வசம் அடுத்த மாதம் அவள் வசம்.

பிறந்து பத்து மாதங்களில் லவங்கியின் எடை 14 றாத்தல் கூடியிருந்தது. அதில் ஏழு றாத்தல் அவனுக்கு சொந்தம் மீதி ஏழு றாத்தல் அவளுக்கு சொந்தம். திங்கள் காலை ஏழு மணிக்கு அவன் லவங்கிக்கு பால் கொடுத்து, ஆடையணிந்து காரின் பின் இருக்கையில் வைத்து கட்டி அவளை குழந்தைகள் காப்பகத்துக்கு எடுத்து செல்வான். மாலையில் அவள் லவங்கியை அழைத்து வருவாள். இந்த வேலைப் பங்கீடு கறாரான ஒழுங்குடன் நடைபெற்றது.

தவழத் தொடங்கிய போது லவங்கிக்கு பெரிய குழப்பம் உண்டானது. அவளுடைய பொம்மை ஒன்றை நெடுநேரம் கூர்ந்து பார்ப்பாள். தவழும் நிலைக்கு வந்து தயாராவாள். பிறகு தலையை கீழே போட்டுக்கொண்டு உந்தி உந்தி பின்பக்கம் போய்விடுவாள். அந்தப் பொம்மை இன்னும் தூரமாகிவிடும். தன் இயக்கத்தில் ஏதோ தவறு இருப்பது லவங்கிக்கு வெகு காலமாகத் தெரியவில்லை. இறுதியில் எப்படியோ முன்னுக்கு தவழப்பழகிவிட்டாள்.

புத்தகங்களில் லவங்கிக்கு அளவில்லாத பிரியம். அவன் படித்தால் கேட்டுக்கொண்டே இருப்பாள். சில வேளைகளில் வேண்டுமென்றே புத்தகத்தை அவன் தலைகீழாக வைப்பான். அதை திருப்பி வைக்கலாம் என்பது லவங்கியின் மூளையின் எல்லைக்குள் வராது. எதிர்ப்பக்கம் தவழ்ந்து போய் உட்காருவாள். அவன் மனைவியைப் பார்த்து 'உன் மூளை உன் மகளுக்கு' என்று சீண்டுவான். பட்டியல்காரி 'இல்லை சரி பாதி என்பாள்'.

அவன் ஒரு பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளர். வேலை கனமில்லாதது. ஆனால் ஒரு சிக்கல் இருந்தது. அவனுடைய வீட்டிலிருந்து பல்கலைக் கழகம் ஒன்றரை மணி நேர கார்ப்பயண தூரத்தில் இருந்தது. இப்படி ஒரு நாளில் அவனுக்கு மூன்று மணி நேரம் பிரயாணத்தில் செலவழிந்து விடும். வீடு திரும்பும்போது மிகவும் களைத்துப்போய் வந்து சேர்வான்.

ஒரு தனியார் கணக்காய்வு நிறுவனத்தில் அவள் கடுமையாக உழைத்தாள். தன் கைவசம் உள்ள வேலையெல்லாம் முடிவதற்கிடையில் நேரம் தீர்ந்துவிடுகிறது என்று தினமும் முறைப்பாடு வைப்பாள். நாளுக்கு 12 - 14 மணி நேர வேலை. இது தவிர ஆலோசனைக் கூட்டங்களில் பங்கேற்பு, நெடுந்தூரப் பயணம் எல்லாம் உண்டு.

எந்த விதப் பிரச்சனைகளையும் முன்கூட்டியே அனுமானித்து அவற்றை எதிர்கொள்வது அவர்கள் வழக்கம். அதன்படியே நாளாந்த பட்டியல் தயாரித்து அவனுக்கு அவளுக்கு என்று பிரித்து சமாளிக்க பழகிக்கொண்டனர். மேலதிக வேலையாக கடமைகள் சரிவர நிறைவேற்றப்படுகின்றனவா என்பதையும் அவளே கவனித்துக்கொண்டாள்.

அவனுடைய மனைவி இரண்டு நாள் கருத்தரங்கு ஒன்றுக்கு ஆயிரம் மைல் தூரம் செல்கிறாள். இதுதான் அவள் முதல் தடவை லவங்கியை விட்டு பிரிவது. அவன் இரண்டு இரவுகளும், இரண்டு பகல்களும் லவங்கியை தனியாக கவனிக்கவேண்டும். அது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. அவள் திரும்பிய பிறகு வேலைப் பங்கீடுகளை மீண்டும் சரிப்பண்ணிக் கொள்ளலாம்.



வழக்கம்போல டேகேரில் இருந்து லவங்கியை கூட்டிவந்தான். பால் கொடுத்து, குளிக்க வார்த்து சரியாக ஏழு மணிக்கு படுக்கையில் போட்டான். வழக்கத்திலும் பார்க்க லவங்கி அன்று சோர்வுடன் காணப்பட்டாள். இரவு படுக்கமுன் லவங்கியின் அறைக்கு சென்று பார்த்தான். அவள் அனுங்குவது கேட்டது. தொட்டுப்பார்த்தால் உடம்பு கணகணவென்று கொதித்தது. வீட்டிலே எப்பொழுதும் தயாராக இருக்கும் ரைலனோலை கொடுத்தான். ஒரு மணி நேரம் பொறுத்து பார்த்த போது காய்ச்சல் கொஞ்சமும் குறையவில்லை. ஆனால் மூச்சு முட்டல் அதிகமாகி சிணுங்கல் அழுகையாக மாறியிருந்தது.

லவங்கி இன்னும் இருபது றாத்தல் எடையை எட்டவில்லை. காரில், பின் பக்கம் பார்க்கும் சீட்டில் அவளைப் போட்டு கட்டி, அவசரச் சிகிச்சைப் பிரிவுக்கு விரைந்தான். மனைவி இருந்தால் குழந்தை பக்கத்தில் இருப்பாள். இன்று யாருமில்லை. பின் சீட்டில் இருந்த அவளைப் பார்க்க முடியாதது பெரிய குறையாகப்பட்டது. லவங்கி மூச்சு விடத் திணறுவதும், முனகுவதும் கேட்டது. புறப்படுமுன் அவளுடைய காய்ச்சல் 103 டிகிரி. வேக எல்லைகளைக் கவனிக்காமலும், மஞ்சள் கோடுகளை மதிக்காமலும், அடிக்கடி மிருதுவான குரலில் 'லவங்கி, லவங்கி என்று உச்சரித்தபடியே காரை ஓட்டினான்.

நேற்று லவங்கியிடம் அவன் மிகவும் கடுமையாக நடந்து கொண்டு விட்டான். பாத்திரம் கழுவியில் அவளுக்கு மோகம் அதிகம். அவன் மூடியை திறந்ததும் அவள் தவழ்ந்து வந்து ஏறி உட்கார்ந்து கொள்வாள். இறங்காமல் அடம்பிடிப்பாள். சத்தமாக அவன் ஓர் அதட்டல் போட்டான். அவள் விம்மி விம்மி அழத்தொடங்கினாள். மிகச் சாதாரணமான ஒரு இன்பத்தை தான் அவளுக்கு மறுத்ததை நினைத்தபோது என்னவோ செய்தது.

அவசரப்பிரிவில் லவங்கியை பரிசோதித்த டொக்டருடைய முகத்தை கூர்ந்து கவனித்தான். அவர் எல்லாவித சோதனைகளையும் செய்தார். காய்ச்சலைக் குறைக்க கடுமையான மருந்தொன்றைக் கொடுத்து ஒரு மணி நேரம் காத்திருக்கச் சொன்னார். அப்படியே செய்தான். இருந்தும் உஷ்ணம் குறையவில்லை. லவங்கி அடிக்கடி கண்களை திறந்து பார்த்தாள். அதற்கு கூட போதிய பலம் இல்லாததால் மூடிவிட்டாள். ஒரு இரும்புக்கதவை மூடுவதுபோல பெரிய சத்தத்துடன் சுவாசம் வந்துகொண்டிருந்தது. ஒவ்வொரு முறையும் இந்த சுவாசம்தான் கடைசி சுவாசமாக இருக்குமோ என்ற பயம் எழுதுகொண்டே இருந்தது.

அவசர சிகிச்சை பிரிவுக்கு அம்புலன்ஸ் வாகனங்கள் அடிக்கடி வந்தபடியே இருந்தன. கடைசியாக கை அறுந்து தொங்கியபடி ஒரு சிறுவனை சில்லு வைத்த கட்டிலில் தள்ளிக்கொண்டு வந்தார்கள். பின்னால் பெற்றோர் ரத்தக்கறை உடையுடன் விரைந்தார்கள். இவனால் தொடர்ந்து மாறிக்கொண்டு வரும் வேதனைக் காட்சிகளை தாங்க முடியவில்லை. லவங்கியை நெருக்கமாக அணைத்தபடி காத்திருந்தான்.

டொக்டர் மறுபடியும் வந்து மேலும் பரிசோதனைகள் செய்ய வேண்டும் என்றார். ஒரு தாதி வந்து ரத்தம் எடுப்பதற்காக ஊசியை செலுத்தினாள். ஐந்து நிமிட நேரம் ஐந்து இடங்களில் கிண்டினாள். பலதடவை முயற்சி செய்தும் அவளால் ரத்தநாளத்தை கண்டு பிடிக்க முடியவில்லை. தலைமை தாதி போல தெரிந்த ஒருத்தி வந்து மீண்டும் முயற்சி செய்தாள். லவங்கி தன்கையைக் கொடுத்துவிட்டு இந்த உலகத்தில் தன்னை காக்க ஒருவருமே இல்லை என்பதுபோல உச்சக்குரலில் கதறினாள். போதிய ரத்தத்தை உறிஞ்சி எடுத்தபிறகு முன் யோசனையாக ஊசியை வெளியே எடுக்காமல் கையுடன் சேர்த்து கட்டுப்போட்டு வைத்தார்கள். இப்பொழுது லவங்கி அவன் கழுத்தை கட்டிப்பிடித்தபடி, கால்கள் இரண்டையும் அவன் இடுப்பில் பாம்புபோல சுற்றிக் கொண்டு, விம்மியபடியே இருந்தாள்.

அவளுடைய சின்ன உடம்பை வதைப்பதற்கு இன்னும் பல தயாரிப்புகள் நடந்தன. இப்பொழுது சிறுநீர் வேண்டும் என்றார்கள். பச்சைக் குழந்தையிடம் சிறுநீர் எடுப்பது எப்படி. அவர்கள் விடுவதாக இல்லை. அதே தாதி வந்தாள். அவளுடைய கெட்டியாக நிற்கும் வெள்ளை கவுனை பார்த்த கணமே லவங்கி கத்தத் தொடங்கினாள். ஒரு மிக மெல்லிய ட்யூபை அவள் உடம்புக்குள் செலுத்தினாள். லவங்கியின் அலறல் எல்லையை அடைந்துவிட்ட காரணத்தினால் உடலை வில்லுப்போல எதிர்ப்பக்கமாக வளைத்து திமிறி தன் எதிர்ப்பை காட்டினாள்.

டொக்டர் இரவு ஆஸ்பத்திரியில் தங்க வேண்டும் என்றார். அவள் கையிலே ஒரு பிளாஸ்டிக் காப்பு மாட்டப்பட்டது. அதிலே லவங்கியின் பேரும், தேதியும், ஒரு நம்பரும் இருந்தது. லவங்கியை பற்றிய எல்லா பதிவுகளும் கம்யூட்டரில் இந்த நம்பரின் கீழ் பதியப்படும் என்றார்கள். லவங்கியின் வீட்டு ஆடையை களைந்துவிட்டு, பின்னுக்கு முடிச்சுப்போடும் ஒரு தொளதொளத்த நீல கவுனை அணிவித்தார்கள். தடுப்பு போட்ட உயரமான கட்டிலில் அவளைக் கிடத்தி, அந்தச் சின்னக் கையிலே குத்தியிருந்த ஊசியின் மூலம் சேலைன் சொட்

தொடர்தல் 104ம் பக்கம்

# அடுத்த புதன்கிழமை...

103ம் பக்கத் தொடர்ச்சி...

டுகளை உடம்பிலே செலுத்த தொடங்கினார்கள். கால் பெருவிரலில் தொடுத்த வயர், அவளுடைய உயிர் விநாடிகளை, கம்புயூட்டர் திரையில் இருதயத் துடிப்பாக காட்டியது. மூக்கிலே பிராண வாயுவும் போனது. இவை எல்லாம் ஆயத்தங்கள்தான். சிகிச்சை இன்னும் ஆரம்பிக்கவில்லை என்றார்கள். கடுமையான வலியிலிருந்து அவள் மெள்ள மெள்ள விடுபட்டு வருவதுபோல தெரிந்தது. அவன் அவளுடைய முதுகை வருடியபடியே இருந்தான்.

இரவு மணி இரண்டிருக்கும். மறுபடியும் டொக்டர் வந்தார். சோதனையில் கிடைத்த தகவல்கள் சிகிச்சைக்கு போதாது, லவங்கியின் சுவாசப்பையை எக்ஸ்ரே எடுக்க வேண்டும் என்றார். இதற்கு முன் எத்தனையோ பேர் படுத்தகட்டிலில் ஒரு பாவப்பட்ட ஜீவனைப்போல சுருண்டுபோய் லவங்கி அப்பொழுதுதான் சற்று அயர்ந்திருந்தாள்.

நூறு பின்னல்கள் செய்து மடித்துக் கட்டிய தலையோடு கறுப்பு இனத்து இளைஞன் ஒருவன் வந்தான். எக்ஸ்ரே எடுப்பதற்கு அவனே வண்டியில் அவளைத் தள்ளிப் போனான். அவள் அணிந்திருந்த நீல நிற சைஸ் பெரிதான ஆஸ்பத்திரி கவுனை அகற்றினார்கள். ஓர் இரவிற்கிடையில் அவளுடைய விலா எலும்புகள் வரிவரியாக தள்ளிக்கொண்டு நின்றன. ஈயக் கவசம் அணிந்த ஊழியர் இருவர் லவங்கியை தூக்கி பிடித்து சதுரமான உலோகத்தில் நெஞ்சை அழுத்தி எக்ஸ்ரே எடுத்தார்கள். லவங்கி யாரோ துப்பாக்கியை காட்டியது போல இரண்டு கைகளையும் தூக்கிப்பிடித்தபடி தலையை குனிந்து கதறினாள். ரத்தம் எடுக்கும் போதும், ரப்பர் குழாயை உள்ளே செலுத்தும் போதும் இல்லாத அழுகையாக இந்த அலறல் இருந்தது. அந்நியர்கள் இப்படி அமுக்கிப் பிடிக்க அனுமதித்த தன் அப்பாவை நம்ப முடியாத கண்களினால் கெஞ்சினாள். அந்த பரிதாபமான விழிகள் அவன் நெஞ்சத்தின் ஆழமாக பதிந்தன.

டொக்டர் காலை ஐந்து மணிக்கு வந்தார். மறுபடியும் பரிசோதனைகள். சேலைனுடன் சேர்த்து பொதுப்படையான மருந்து செலுத்தினார்கள். இதுவும் தற்காலிக ஏற்பாடுதான். சுவாசப்பையில் நீர் கட்டியிருக்கிறது, அதை அகற்ற வேண்டும். பெரிய டொக்டரையும், ரேடியோலஜிஸ்டையும் கலந்துதான் முடிவுக்கு வரமுடியும் என்றார். அவனுக்கு திக்கென்றது. என்றென்றைக்குமாக அவனை விட்டு லவங்கி போய்விடுவாளோ என்ற திகில் பிடித்தது. அந்த நேரம் பார்த்து அவன் மனைவி கைபேசியில் அழைத்தாள். அன்றைய கருத்தரங்கில் அவள் தான் முதல் பேச்சாளர் அவளைக் கலவரப்படுத்த அவன் விரும்பவில்லை. வீட்டிலே எல்லாம் ஒழுங்குமுறையாக நடக்கிறது என்பது போல சொல்லி வைத்துவிட்டான்.

அவனுடைய பல்கலைக் கழகத்தை அழைத்து தகவல் விட்டான். அன்று அவனுக்கு மிகப் பிரதானமான ஒரு சந்திப்பு இருந்தது. கடந்த ஆறு மாத காலமாக முயற்சி செய்து கிடைத்தது. அதையும் கான்சல் பண்ணினான். ஒரு இரண்டு அவுன்ஸ் பாலை போத்தலில் ஊற்றி அவளுக்கு புகட்டப் பார்த்தான். லவங்கி மறுபக்கம் திரும்பி படுத்துவிட்டாள்.

லவங்கியின் காய்ச்சல் குறைந்துவிட்டதாக தாதி சொன்னது கொஞ்சம் ஆசுவாசமாக இருந்தது. மூச்சு சிரமப்பட்டு போனது ஆனால் முந்திய மாதிரி திணறல் இல்லை. முனகல் மாத்திரம் இருந்தது. சுவாசப்பை 90 வீதம் வேலைசெய்வதாக மீட்டர் சொன்னது. இருதயத்தின் ஒலியை கம்புயூட்டர் வரைபடமாக காட்டியது. அதில் ஏற்படும் சிறு ஒலி மாற்றமும் இவனுக்கு பகீரென்றது.

கடைசியில் ரேடியோலஜிஸ்ட் வந்த பிற்பாடு சுவாசப்பையில் தண்ணீர் கட்டவில்லை. ஒரு சுவாசப்பை மடிந்து சுருங்கிவிட்டது. லவங்கி 24 மணி நேரமாக ஒரு சுவாசப்பையில்தான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். சேலைனுடன் சேர்ந்து புதிய மருந்தை உட்செலுத்தினால் சுவாசப்பை பழைய நிலமைக்கு மீண்டுவிடும். பயப்படத்தேவை இல்லை என்றார்.

அவனுக்கு கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. மெல்ல லவங்கியை தடவியபடியே பார்த்தான். பலவித வயர்களும், டியூபுகளும் அவள் உடலில் இருந்து மேலே போயின. கயிற்றிலே வேலை செய்யும் ஒரு பாவையை யாரோ எறிந்துவிட்டது போல நடுக்கட்டிலில் அநாதரவாகக் கிடந்தாள்.



**சோதனையில் கிடைத்த தகவல்கள் சிகிச்சைக்கு போதாது, லவங்கியின் சுவாசப்பையை எக்ஸ்ரே எடுக்கவேண்டும் என்றார். இதற்குமுன் எத்தனையோ பேர் படுத்தகட்டிலில் ஒரு பாவப்பட்ட ஜீவனைப்போல சுருண்டுபோய் அப்பொழுதுதான் சற்று அயர்ந்திருந்தாள்.**

பின்னேரம் நாலு மணியளவில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. சுவாசப்பை வேலை 100 வீதம் காட்டியது. முதன்முதலாக அப்பொழுதான், இத்தனை மணி நேரத்துக்கு பிறகு வாயை திறந்து லவங்கி புன்னகை செய்தாள். இயக்கமில்லாத நிலையிலும் தன் மெலிந்து போன வயிற்றை மெத்தையிலிருந்து எம்பி எம்பிக் காட்டியபடியே சிரித்தாள். அவனுக்கு மனதை என்னவோ பிசைந் தது.

ஆறுமணிக்கு முதன்முதலாக பால் இரண்டு அவுன்ஸ் குடித்தாள். தாதி வந்து பார்த்துவிட்டு இனிமேல் பயப்பட ஒன்றுமில்லை, பசிக்கும் போதெல்லாம் பால் கொடுக்கலாம் என்றாள். அவனுக்கு கொஞ்சம் நிம்மதி திரும்பியது. மனைவியை கூப்பிட்டு சொல்லுவோமா என்று நினைத்தான். மறுபடியும் இப்பொழுது சொல்லி என்ன பிரயோசனம் வந்த பிறகு பார்க்கலாம் என்று எண்ணத்தை மாற்றிவிட்டான். அன்று இரவு பார்க்க வந்த டொக்டர் நல்ல முன்னேற்றம் என்றார். எல்லா பரிசோதனைகளையும் மீண்டும் செய்தார். மூச்சு சீராக இயங்குகிறது. இன்று இரவும் இப்படியே தாண்டிவிட்டால் நாளை பெரிய டொக்டர் வீட்டுக்கு போக அனுமதிப்பார் என்றார். வாழ்க்கையில் முன்னெப்போதும் கிடைக்காத ஒரு ஆறுதல் அப்போது கிடைத்தது.

ஆனால் புதிய அதிர்ச்சி ஒன்றை அன்று இரவு அவன் எதிர்பார்க்கவில்லை. மனைவியிடம் இருந்து பத்து மணிக்கு தொலைபேசி வந்தது. அவள் கலந்துகொண்ட கருத்தரங்கைப்பற்றி நிறையப் பேசினாள். மனது நிறைய சந்தோசமாக இருந்தாள். அடுத்த நாள் மாலை வந்துவிடுவதாகக் கூறினாள். அப்போது கூட சொல்லிவிடலாம் என்று தோன்றியது. அவளுடைய அழகான நித்திரையை கெடுத்து என்ன பிரயோசனம் என்று தவிர்த்துவிட்டான்.

இருளூட்டப்பட்ட அறையின் நாற்காலியில் அமர்ந்தபடியே அன்று உறங்கினான். இரவு பன்னிரெண்டு மணியிருக்கும். ஆஸ்பத்திரியில் இவனுடைய இரண்டாவது இரவு. திடாரென்று லவங்கி எழுந்து வீர் என்று அலறினாள். வயர்களும், டியூபுகளும் நாலு பக்கமும் இழுக்க நிலைகொள்ளாமல் துடித்தபடி படுக்கையில் சுருளத் தொடங்கினாள். இவன் அவசர மணியை அழுத்திவிட்டு, தடுப்பை கீழே இறக்கி அவளை வேகமாக அள்ளினான். அவன் கையிலே லவங்கி வழுக்கியபடி துடித்து கொண்டிருந்தாள்.

இரண்டு தாதிமார் ஓடிவந்தார்கள். லைட்டை போட்டார்கள். ஊசி ஏற்றப்பட்ட அவளுடைய கை வீங்கிப்போய் மினுமினுத்தது. தாதி உடனே யோசிக்காமல் ஊசியை நீக்கி கட்டையும் அவிழ்த்துவிட்டாள். லவங்கியின் விரல்கள் பந்துபோல் சுருண்டு, உள்ளங்கை ரேகைகள் மறைந்துவிட்டதை பிரமிப்புடன் பார்த்தான். அது அவளுடையது அல்ல. வேறு யாருக்கோ சொந்தமான தனியுறுப்புபோல அசிங்கமாக ஊதிப்போய் கிடந்தது.

ஊசி நழுவி சேலைன் தசைக்குள் போயிருக்கிறது. தாதிமார் வீக்கத்தை அடக்குவதற்கு சிகிச்சை கொடுத்தார்கள். லவங்கி அப்படியே அழுது அழுது இனிமேல் இயலாது என்ற நிலையில் ஓய்ந்துபோனாள். இருந்தும் அவளுடைய உடல் வெகுநேரமாக நடுங்கிக் கொண்டிருந்தது. இந்த உலகத்தில் யாருமே இல்லை என்பது போன்ற தனிமையில் துயரமும், மௌனமும் அழுத்த அவன் சுவரை வெறித்தபடி உட்கார்ந்திருந்தான். அவனுடைய இருதயத்தைப் போலவே அவனுடைய மடியிலும் ஒரு உயிர் துடித்தது. ஒன்பதாவது மாடியின் அந்த அறைக்குள் சூரியனுடைய முதல் கிரணங்கள் நுழையும் வரை அவன் அசையவில்லை.

காலை டொக்டர் வந்து பார்த்த போது வீக்கம் குறைந்திருந்தது. அதற்கான சிகிச்சைக்கு மருந்து எழுதினார். பிறகு பின்னேரம் வீட்டுக்கு போகலாம் என்றார். நம்பமுடியாத திகைப்பும், மகிழ்ச்சியும் அவனுக்கு ஏற்பட்டது. ஏதாவது விளையாட்டு காட்டுவதற்கு லவங்கியை ஒரு சிறு தள்ளுவண்டியில் வைத்து தள்ளிக்கொண்டு அந்த வார்டைச் சுற்றி ரவுண்டு வந்தான். ஒரு மனித உடல் தாங்கக்கூடிய எல்லை மட்டுமான வலியை அவள் அனுபவித்து விட்டாள். அதை எல்லாம் மறந்து பிரகாசமான ஒரு சிரிப்பு சிரித்தாள். அவள் என்ன கேட்டாலும் அந்த விநாடி அதைச் செய் வதற்கு அவன் சித்தமாயிருந்தான்.

நாலு மணியளவில் தாதி வந்தாள். அவளைக் கண்டதும் லவங்கி கண்களைத் தாழ்த்தி, அவன் தோள்களுக்குள் தலையைப் புதைத்து மறைந்துபோகப் பார்த்தாள். லவங்கி கையிலே மாட்டிய பிளாஸ்டிக்காப்பை வெட்டினாள். அடுத்த இரண்டு நாட்களும் என்ன மருந்து, எப்போது கொடுக்க வேண்டும் போன்ற விவரங்களை அவள் சொல்ல குறித்துக் கொண்டான். லவங்கிக்கு வந்தது நியூமோனியா. ஒரு சுவாசப்பை கொடூரமான கிருமிகளால் தாக்கப்பட்டிருந்தது. அடுத்த சுவாசப்பையும் எந்த நிமிடத்திலும் மடிந்திருக்கலாம். அவன் அவசர சிகிச்சைக்கு வந்ததால் குழந்தை பிழைத்தாள். இனிமேல் கவனமாய் இருக் கவேண்டும் என்றாள்.

கிடைக்க முடியாத பொக்கிஷம் ஒன்று கிடைத்தது போல லவங்கியை அள்ளி தூக்கிக் கொண்டான். பிரத்தியேகமான குழந்தை இருக்கையில் அவளை இருத்திக் கட்டி, 'லவங்கி, லவங்கி' என்று மெல்லிய குரலில் அழைத்தபடி காரைக் கிளப்பினான். அவளுக்கு பிடித்த பாட்டைவைத்தான். அந்த கீதம் காரை நிறைத்தது லவங்கி மெதுவாக இரண்டு பக்கமும் தலையை ஆட்டியபடி தூங்க ஆரம்பித்தாள்.

வீடு வந்ததும் விழித்துக் கொண்டாள். தனது அறையையும், தனது பொம்மைகளையும் பார்த்து ஆரவாரப் பட்டாள். இதுவரை காணாத ஒரு புது உலகத்துக்குள் வந்தது போல மகிழ்ச்சி அவளை மூழ்கடித்தது. நாலு கால்களிலும் தவழ்ந்து தவழ்ந்து தன் முழு அறையையும் திருப்தி ஏற்படும் வரைக்கும் சோதித்து உறுதி செய்தாள்.

அவளுடைய பாலை சூடாக்கி பருக்கினான். இரவு உடைக்கு அவளை மாற்றினான். நீல மேற்சட்டை, மஞ்சள் காற்சட்டை. அப்பொழுதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது இரண்டு நாட்களாக தான் ஒன்றுமே உண்ணவில்லை என்பது. ஆனால் சமைத்து சாப்பிடும் மூடில் அவன் அப்போது இல்லை. ஏதாவது இலகுவான அயிட்டம் போதும். ஒரு சூப் டின்னை தேடி எடுத்து, ஒரு பாத்திரத்தில் இட்டு, நுண்ணலை அடுப்பில் வைத்து இரண்டு நிமிட பட்டனை அமுக்கினான். அது பாத்திரத்தை சுழலவிட்டது.

லவங்கி அவளுக்கு மிகவும் பிடித்தமான ஒரு விளையாட்டை ஆரம்பித்திருந்தாள். பிளாஸ்டிக் பைகளை பிசைந்து தலையிலே கவிழ்த்து விளையாடுவது. தடுக்கப்பட்ட விளையாட்டு என்றபடியால் அவளுக்கு அதிகமான ஆவல் ஏற்பட்டது. இந்தக் கட்டுப்பாடற்ற சுதந்திரம் அவளுக்கு பிடித்திருந்தது. வெகு விரைவிலேயே இதற்கு ஒரு தடை வரும். அதற்கிடையில் அந்த விளையாட்டின் உச்சத்தை அடைந்துவிட எண்ணினாள். முகத்தில் தாங்கமுடியாத கள்ள சந்தோசம்.

அந்த நேரம் பார்த்து வாசல் அழைப்பு மணி கிர்ங்... என்று தொடர்ந்து ஒலித்தது. நிற்க அவகாசம் தராமல் அப்படி பொத்தானை அமுக்குவது வேறு யாரும் அல்ல. அவனுடைய மனைவிதான். மறுபடியும் வீட்டு சாவியை மறந்துவிட்டு போயிருக்கிறாள். மணிச்சத்தம் கேட்டு லவங்கி இருந்தபடியே இடுப்புக்கு மேல் திரும்பி கைகள் இரண்டையும் பறவை போல ஆட்டத் தொடங்கினாள். வருவது அம்மா என்பது அவளுக்கு எப்படியோ தெரிந்துவிடும். அவள் குடிக்காமல் விட்ட மீதப் பால் இரண்டு அவுன்ஸ் போத்தலில் அப்படியே பக்கத்தில் கிடந்தது.


அவன் மனைவி உள்ளே வந்ததும் அவன் கன்னத்தில் சிறு முத்தம் கொடுப்பாள். அவனுடைய கன்னத்துக்கும் அவளுடைய உதட்டுக்கும் இடையில் நிறைய காற்று இருக்கும். கைப்பைகளை கீழே உதறும் அதே கணத்தில் 'லவங்கீ 'என்று ஆசையாகத் தாவி அவளை அணைப்பாள். இரண்டு அவுன்ஸ் பால் மிச்சம் விட்டதை சுட்டிக் காட்டுவாள். பிளாஸ்டிக் பைகள் தரும் ஆபத்தை பற்றி மீண்டும் போதனை நடக்கும். இரவு தூக்கம் தள்ளிப்போவதால் ஏற்படும் மோசமான விளைவுகள் பற்றி முறைப்பாடு வைப்பாள். தூக்க ஆடைகள் கீழுக்கு மஞ்சளும், மேலுக்கு நீலமுமாக மாட்ச் பண்ணாமல் இருக்கும் அபத்தத்தை உடனேயே மாற்றியாகவேண்டும் என்பாள். மிகக் கடினமான கணக்குகள் போட்டு அடுத்த நாளைக்கு யார் லவங்கியை டேகேரில் இருந்து அழைத்து வரவேண்டும் என்பதை சரியாகக் கண்டு பிடித்து சொல்வாள்.

அழைப்பு மணிச்சத்தம் அடிக்கத் தொடங்கி அது நிற்க எடுத்துக் கொண்ட நீண்ட நேரத்தில் அவன் இவ்வளவையும் நினைத்துக் கொண்டான்.

muththulingam.a@thaiveedu.com




UNDER ONE ROOF
ACCOUNTING & TRUCK PERMITS
Accounting & Tax Services
• Personal Tax Return
• Corporation Tax Return
• GST / HST & T4 Filings
• Business Consulting
Trucker's Permit & Authority
• CVOR & Ontario Permits
• US DOT, MC & Authority
• IRP Plate & IFTA Registration
• IFTA –Fuel Tax Reporting
CS Business Services Ltd.
Your One Stop Accounting & Trucking Solutions.
Call:
Sam
905-453-2929
416-230-6397
sam@csbusiness.net
SUPER VISA TRAVEL INSURANCE
• Disability Insurance
• Life / Critical Illness Insurance
• Education Saving Plans (RESP)
• Group Insurance / Benefits
• Drug & Dental Plans
• RRSP / TFSA
Call:
Alex Rodrigo
647-298-0300
Swarnee P.Singhe
647-502-2642
EZChoice
Credit Counselling and Financial Services
All Your Mortgage Need
www.EasyChoiceMortgage.com
CUT YOUR DEBT UP TO 80%
• Avoid Bankruptcy
• Stop Wage Garnishment
• Stop Interest Charges
• Low Monthly Payments
• Stop Collection calls
• Save All Your Assets (House, Car, RRSR, etc
Get Out Of Debt Without Bankruptcy
Call:
416-896-9991
Ravi Logarajah
Certified Insolvency Counselor (BIA)
905-896-9991
416-896-9991
www.EasyChoiceHome.com
180 Wilkinson Road. Unit 32. Brampton, ON L6T 4W8


SKYWATCHCONDOS
AT THE ROSEDALE ON BLOOR STREET
UNIVERSITY OF TORONTO
Equal distance to University of Toronto and Ryerson
RYERSON UNIVERSITY
Across the street from the subway
SHERBOURNE
ROSEDALE
YORKVILLE
UNIVERSITY OF TORONTO
RYERSON UNIVERSITY
LOUIS VUITTON
Minutes away from Yorkville and overlooking Rosedale
Call us to reserve your unit in one of Canadas wealthiest neighbourhoods with
SKYWATCH CONDOS
PRICES FROM $200's
Top 5% in Century 21 Canada
Over 15 years of top producing full time experienced realtors with many international centurion awards, Master diamond, Masters hall of fame & centurion honour society member
Expect results beyond your expectation
PRATHEEP BALASUBRAMANIAM,
Broker
Masters Emerald (15)
Cell: 416-884-7020
Century 21
King's Quay Real Estate Inc.
Brokerage Office: 905-940-3428
AMIR RAMALINGAM, B.Sc.
Sales Representative
Masters Hall of Fame
Cell: 416-409-6067

# தாய்ப் பால்

உலகியல் வாழ்வில் மிகவும் சக்தி வாய்ந்ததாகவும் பாசமும் பற்றும் பின்னிப்பிணைந்ததாகவும் உயிரினங்களுக்கு உயிர்கொடுக்கும் தெய்வீகமாகவும் இருப்பது 'தாய்ப்பால்' தான். பாலூட்டும் எல்லாச் சீவராசிகளுக்கும் சரணம் அளிக்கும் பொருள் கொண்டதுதான் தாய்ப்பால். தாயையும் சேயையும் இணைத்து இயற்கை செயற்படுத்தும் உன்னதமான செயல் இது.

இலங்கையின் முகடு எனப்படும், நுவரெலிய மலைச்சாரல்களின் வலதுபுறத்தே கீழ் நோக்கிச் சரிந்திருக்கும் சாரல்களில் உள்ள பல தேயிலைத் தோட்டங்களில் ஒன்று 'புறாக்சைட்' என்ற தோட்டம். இத்தோட்டங்களில் தான் 'உடப்புசல்லாவ' என்ற உயர்ந்த ரகத்தேயிலை விளைகின்றது.

'புறாக்சைட்' தோட்ட அதிகாரியின் மாளிகையில் மனையாளின் பிள்ளைப் பேறு நடந்த சில நாட்களில் உடனிருந்து உதவி செய்ய நியமிக்கப்பட்டவள்தான் தமிழ்த் தாதித்தாய். தாதித்தாயும் தோட்ட அதிகாரியின் மனையாளும் ஒரே காலத்தில் குழந்தை பெற்றவர்கள். இந்தத் தாதி, தன் குழந்தையுடன் தோட்ட அதிகாரியின் மனைவியாருக்கு உதவி செய்யும் பொருட்டு அந்த மாளிகையில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

17ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையில் உள்ள பிரித்தானிய முதலாளிமாரின் தேயிலைத் தோட்டங்களில் கூலித் தொழில் செய்வதற்கு இழுத்துவரப்பட்டவர்கள்தான் தென்இந்தியத் தமிழர்.

தனுஷ்கோடியில் வள்ளம் ஏற்றப்பட்ட இவர்கள் இலங்கைத் தலைமன்னாரில் தரை இறக்கப்பட்டார்கள். தலைமன்னார்க் கடலில் காலையில் பிடித்த பெருமளவு நெத்தலிமீனும் சூரை மீனும் அந்த கடும் வெப்பமான பாலை மணலில் காயவிட்டால் மாலையில் கருவாடாகி விடும். முட்டைகளில் கட்டி ஏற்றலாம். அந்தளவு கொடும் வெய்யிலில் வேக்காடு உள்ள மணல் வெளியில், கால்களில் செருப்பும் இல்லாது தரையிறக்கப்பட்ட தமிழர் கால்நடையாக, நூறுநூறு பேராக, கங்காணி என்ற முரடர்களின் தொந்தரவுகளுக்கும் வெள்ளை 'ஏஜடுன்ட்' என்ற பச்சோந்தித் தரகர்களின் கொடுமைகளுக்கும் ஆளாகி, பல நாட்கள் நடந்து சென்று, மாத்தளையை அடைந்தனர்.

வந்தவர்களில் சிலர் நோய் வாய்ப்பட்டும் நீராகாரம் இன்றியும் இறந்துபோக, மிஞ்சியவர்கள் அட்டைக்கடியும் அரிய வழிநடையும் கட்டை இடறலும் தாண்டிக் கண்டிப்பகுதியை அடைந்தனர்.

இவர்களில் அரைவாசிப்பேர் அளவில் தான் தள்ளாத நிலையில் தொடர்ந்து நடந்து நுவரெலியாவைச் சென்றடைந்தார்கள். இவர்களை எல்லாம் மந்தைகள் போல் சிறுசிறு கொட்டில், கூடங்களில் தங்க வைத்தனர் வெள்ளை ஆட்சியாளர்கள். இந்த மக்களின் தலைமுறையில் தோன்றியவள்தான் மேற்சொன்ன தமிழ் தாதித் தாய்.

இவளது தகப்பனார் அந்தத் தோட்டத்தில் கணக்கப்பிள்ளையாக வேலை செய்தார். இந்தத் தாதியின் தாய்வழிப் பாட்டி ஒரு கைதேர்ந்த மகப்பேறு மருத்துவிச்சியாய் இருந்தாள். இந்தத் தாதித்தாயும் தனது தமிழ்ப் படிப்போடும் சிறு ஆங்கில அறிவோடும் அந்தத்தோட்ட வைத்திய நிலையத்தில் பயிற்சி பெற்ற ஒரு தாதியாகப் பணிபுரிந்து வந்தார்.

அந்த நேரத்தில்தான் தோட்ட அதிகாரியின் மனையாள் குழந்தை பெற்றாள். அதே காலத்தில்தான் இந்தத் தாதிக்கும் மகப்பேறு கிடைத்தது. தோட்ட அதிகாரியின் மனைவிக்கும் குழந்தைக்கும் உடனிருந்து சேவை செய்ய இத்தாதி அழைக்கப்பட்டார். தன் குழந்தையுடன் அதிகாரியின் வீட்டில் தனி அறையில் தங்கி இந்தச் சேவையைச் செய்தார்.

தோட்ட அதிகாரியின் பாலனுக்குத் தாய்ப்பால் பருகும் பாக்கியம் இல்லாத கொடுமையான நிலை. இயற்கை அன்னையின் செயலால் அக்குழந்தைக்கான தாய்பால் சுரக்கும் வழி இல்லாது போனது. அந்தத் தாய் மிகவும் வேதனை அடைந்தாள். இரவானதும் குழந்தை தாய்பாலுக்கு வேண்டி அலறும் சத்தம், தாய்பாலைத் தாராளமாய் சுரந்து தன் மகனுக்கு ஊட்டும் இந்த தமிழ் தாய்க்குக் கேட்கும். மிகவும் வேதனை அடைந்தாள். குழந்தையின் தாய் உறங்கியதும் இந்தத் தமிழ்தாய் மெல்லச் சென்று குழந்தையை எடுத்துவந்து தன் அறையில் வைத்துப் பாலூட்டினாள் சிறிது நேரத்தில் பாலுண்ட நிறைவாக குழந்தை நித்திரையானது. இந்த வேளையில் விழித்த குழந்தையின் தாய் தொட்டிலில் குழந்தை இல்லாதது கண்டு வெளியில் வந்து பார்த்தாள். தமிழ் தாயின் மார்பில் இரு குழந்தைகளும் பால் பருகும் அந்த அற்புதக் காட்சியைக் கண்டாள். இரு தாய்மாரும் நேருக்கு நேர் பார்த்தாலும் பேச்சில்லா மௌனம் தான் நிலவியது. ஊர் கடந்து, உறவு கடந்து, சாதி கடந்து, சமயம் கடந்து, மொழி கடந்து, ஒரு பேரன்பான தாய்மை உறவு அந்த இரவில், அந்த மாளிகையில் நிலவியது. தாய்மை உணர்வை எடுத்தியம்பும் தாய்பால் என்ற தெய்வீக மருந்து தாய்மை என்ற வடிவில் இருதாய்மார்க்கும் நடுவில் தெய்வீக உருவில் காலில் சதங்கைகள் சிலிர்க்கக் கைகொட்டி ஆரவாரம் செய்து கொக்கலி கொட்டிச்சிரித்து. மௌனம் நீண்ட நிலையில் அதிகாரியின் மனைவி திரும்ப வந்து படுத்துவிட்டார்.

அவரைத் தாய்மை என்ற தெய்வம் ஆட்கொண்டது தான் உண்மை. தமிழ்த்தாய் அந்த குழந்தையை அதன் தொட்டிலில் படுக்க வைத்துவிட்டு தன் அறையில் படுத்துக்கொண்டார். காலையில் இதுபற்றி இருவரும் யாதும் பேசவில்லை. வழமையான தன் சேவையை தாதி செய்துவந்தாள்.

இந்தப்பால் ஊட்டும் படலம் தினமும் இரவில் நடந்தது. இதில் வியப்பு என்னவென்றால் இரு தாய்மாரும் தங்கள் உறவினர் யாருக்கும் பாலுட்டும் செய்தி பற்றிக்கூறவில்லை. தொடர்ந்து ஆறுமாதம் தாதியின் பாலூட்டும் தொண்டு தொடர்ந்தது. ஆறுமாத முடிவில் தாதி தன் வழமையான வைத்திய நிலையச் சேவைக்குச் சென்றாள். தன் மகன் நல்லப்பனை பாட்டியிடம் விட்டுச் செல்வாள். அதிகாரியின் குழந்தை 'வான்கூட்டன்' சிறுவர் உணவான நீராகாரங்களை உண்டு வந்தான். அவனுக்கு மூன்று வயதாகும் போது அதிகாரியின் மனைவி இன்னும் ஓர் ஆண் குழந்தைக்குத் தாயானார். ஆனால் இந்த முறை முன்பு வஞ்சிக்கப்பட்ட தாய்ப்பால் இரண்டாவது குழந்தையான 'வான்நூவென்ற்' றுக்குத் தாராளமாய் கிடைத்தது.

வாலிப வயதை எட்டிய வான்கூடனும் வான்றூவெஸ்ரும் கண்டியில் றினின்றி கலாசலையில் மேற்படிப்பைத் தொடர்ந்தனர். பின்பு வான்கூட்டன் தோட்ட அதிகாரியாகப் பயிற்சி பெற்றுக் கப்புத்தளைத் தோட்ட அதிகாரியானார். தம்பி வான்நூவென்ற் விளையாட்டு வீரனாய் திறமை பெற்றுக் களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கூடத்தில் இரு வருடங்கள் பயன்று திறமையுடன் கொழும்புத் தலைமையிடத்தில் பணிசெய்தார். சில காலத்தில் பதவியுயர்வு பெற்று கொழும்பு மாவட்ட 'ஏ.எஸ்.பி வான்றூவென்ற்' என்ற புகழோடு வாழ்ந்தார்.



தமிழ்ப் பாடசாலைக் கல்வியை முடிந்த நல்லப்பன் உறவினரின் துணையால் ஒரு தோட்டக் குமாஸ்தாவாகப் பயிற்சி பெற்று வாழ்க்கையைத் தொடர்ந்தார். 1976ம் ஆண்டு இலங்கை அரசு தேயிலை, ரப்பர், தென்னை என்ற பணம் ஈட்டும் தோட்டங்களை தனி முதலாளி சம்மேளங்களின் பிடியில் இருந்து விடுவித்துத் தேசிய மயமாக்கியது. இதன் விளைவால் வெள்ளை முதலாளிமார் கம்பனியில் இருந்து என் போன்றவர்கள் அரச கூட்டுத்தாபனங்கள் அரச மக்கள் தோட்டசபை என்பவற்றில் சேர்க்கப்பட்டோம். சில வருடங்கள் இரத்தினபுரியில் அரச தோட்டக் கூட்டுத்தாபன மாநிலக் காரியாலயத்தில் சேவை செய்தோம்.

மத்திய அரச தோட்டக் கூட்டுத்தாபனத் தலைமை நிலையத்தை நுவரெலியாவில் அமைத்தது. அதன்படி கப்புத்தளை, பலாங்கொடை என்ற பிராந்திய தோட்டங்கள் அடங்கிய ஒரு பகுதியும் நுவரெலியா, தவாக்கொல்லை, கற்றன் என்னப் பகுதித் தோட்டங்கள் மறு பதியாக இயங்கின. நானும் எனது நண்பர் ஒருவரும் கப்புத்தளைச் சபையில் உத்தியோகப் பொறுப்பேற்றோம். அந்தச் சபைக்கு அனுபவமும் திறமையும் வாய்ந்த ஒருவராகக் கணிக்கப்பட்ட வான்கூட்டன் நியமனம் பெற்றார். இவரை முதலில் சந்தித்த போது இவர் ஒரு முரட்டுப்பேர் வழியோ என்ற ஐயமும் எங்கள் மத்தியில் இருந்தது. இவரின் ஆறு அடி உயரத் தோற்றமும் வெகு சுறுசுறுப்பாய் செயலாற்றும் திறனும் இதற்கு காரணமாய் இருக்கலாம் என்று முன்பு எண்ணினோம். ஆனால், நாளடைவில் இவரில் இன்னொரு நல்ல பண்பான இதயம் உள்ள ஒருவர் மறைந்திருக்கிறாரோ என்ற எண்ணமும் எங்கள் மனதில் இல்லாமல் இல்லை. அப்படியான காலங்களில் சில வேளைகளில் மாலையில் எங்களை அழைத்துப்பல விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடுவார். இந்த நாட்களில் நல்லப்பன் என்ற தமிழ் தாதியின் மகன் இவரின் ஆதரவோடு நுவரெலியாச் சபையில் குமாஸ்தாவாக புதிய நியமனம் பெற்றார். சிறு காலத்தின் பின் நல்லப்பனின் தாய் இறந்தபோது வான்கூட்டன் குடும்பத்தோடு சென்று பங்கு கொண்டது மாத்திரமின்றி, அன்றைய செலவு

## - பூர்வீகன் -

அத்தனையும் பொறுப்பேற்றார். இது காரியாலய ஊழியர் மத்தியிலும் நிர்வாக அதிகாரிகள் மத்தியிலும் ஒரு வலுவான சந்தேகத்தை ஏற்படுத்தியது. இந்த ஐயம் பரவிய நிலையில் இது பற்றி வான் கூட்டலும் அறிந்திருந்தார் போலும்.


தன் மனதில் உள்ளதை யாருடனேனும் பகிர்ந்து கொள்ளும் ஆவலில் வான்கூட்டன் இருந்ததை நாங்கள் அவதானித்தோம். இவரின் நல்ல குணத்தால் நானும் எனது நண்பரும் அவரோடு மனம் விட்டுப்பேசுவோம். அதற்குப்பல சந்தர்ப்பங்கள் இருந்தன. ஒருவார இறுதியான வெள்ளிக்கிழமை மாலையில் எங்கள் இருவரையும் தன்னுடன் தேனீர் அருந்த அழைத்தார் வான்கூட்டன். தேனீர் வேளையில் தான் மனதில் சுமந்துள்ள செய்தியைச் சொல்வதற்கு ஒரு பீடிகை போட்டார். 'நண்பர்களே! நீங்கள் என்னிலும் வேறான இனத்தவர் என்றாலும் எனது உடன் பிறப்பாகப் பழகினீர்கள், இன்று உங்களிடம் என் தாய் சொன்ன இரகசியத்தை உங்களிடம் கூறுகிறேன்' என்று அந்த நல்ல மனிதர் தனக்குத்தாய் பால் இல்லாததையும் தானும் நல்லப்பனும் நல்லப்பனின் தாய்ப்பாலில் வளர்ந்ததாயும் சொன்னார். அதனல் தான் எனக்கும் நல்லப்பனுக்கும் ஒரு சகோதரபாசம் உண்டு. குழந்தையாய் இருந்தபோது இந்தப்பாலூட்டும் கதையை என் தாய் எனக்குச் சொல்லும் வரை எவருக்கும் வெளியிடவில்லை. இதே நிலையில்தான் நல்லப்பனின் தாயும் இருந்தார் என்றார்.

சுமார் பதினைந்து நிமிடம் ஒரு தெய்வீகக் கதை போல் கூறி முடித்தபின் கண்களையும் முகத்தையும் அழுத்தித் துடைத்து விட்டுத் 'தான் மனச்சுமை நீங்கியது' என்று கூறினார். நாங்களும் வியப்போடு கேட்டு விடை பெற்றோம்.

தாய்ப்பாலின் பலவித நன்மைகளில் ஒன்றாகச் சகோதரபாசம் இருக்கின்றது என்பதை வெளிப்படுத்துவதுதான் இக்கட்டுரையின் நோக்கம்.

அந்த நல்ல மனிதரோடு தொடர்ந்து சேவை செய்யமுடியவில்லை. சிலநாட்களின் எனது சேவை பெருந்தோட்டத்தொழில் அமைச்சுக் காரியாலயத்தில் தொடர்ந்தது. ஒரு சில சமயங்களில் அந்த நல்லவரை சந்தித்தேன்.

காலச்சக்கரம் சுழன்று விரைந்ததில் நானும் ஒருவனாய்த்தான் சுழன்றேனாயினும் மறக்க முடியாத நினைவுகள் நெஞ்செங்கும் நிறைந்துள்ளன.



poorveekan@thaiveedu.com

# பொன் மாலைப் பொழுது

- ரதன் -

ஒவ்வொரு முறையும் அந்த மண்டபத்தில் நிகழ்வு என்றால் எப்படியாவது சென்று விடுவேன். மண்டபத்துக்கேயுரிய கம்பீரத்துடன் தோற்றமளிக்கும் கட்டடம். கட்டியதென்னவோ செங்கற்களும் ஒட்டு மரங்களுமாக இருக்கும். ஆனால் மண்டபம் கலையால் நிரம்பியிருக்கின்றது. மண்டபத்துடன் இணைந்து நூலகம். கலைக்கு மேலும் அழகும் அறிவும் ஊட்டுகின்றது. அன்றும் அந்த மண்டபத்தில் நிகழ்வு. அதுவும் உயிர்ப்பு பெண்கள் அமைப்பின் நாடகங்கள். அந்த யோர்க்வூட் மண்டபத்தில் எத்தனையோ நாடகங்களைக் கண்டு களித்துள்ளேன். நாடகங்கள் மட்டுமல்லாது சில இசை நிகழ்ச்சிகளையும் இரசித்துள்ளேன். ஒரு சில பரதநாட்டிய அரங்கேற்றங்களும் நிகழ்ந்துள்ளன. அந்த மண்டபம் என்றவுடன் நிகழ்வுகளும் தரமாகிவிடுகின்றன எனப் பலதடவைகள் நினைத்ததுண்டு. ஒவ்வொரு தடவையும் நிகழ்வுகளுக்குச் சென்றுவிட்டுத் திரும்பும் பொழுது மனநிறைவுடனேயே வீடு திரும்பியுள்ளேன். பல நாட்கள் நிகழ்வுகளை எனது மனது அசைபோடும், இரை மீட்கும்.

யோர்க்வூட் மண்டபத்தின் உள்ளே நாடகங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றேன். ஆறு மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகுமெனத் தரப்பட்ட அறிவித்தல் பிரசுரம் தெரிவித்தது. மண்டபம் நிரம்பியிருந்தது. 13 நிமிடங்களின் பின்னர் அரசி விக்னேஸ்வரனின் அறிவித்தல்களுடன் நிகழ்வு ஆரம்பமாகியது. பலர் கூடி நிகழ்த்தும் இதுபோன்ற நிகழ்வுகள் தாமதங்களை உருவாக்கினாலும் தவிர்க்கப்படவேண்டியவையே. தாமதத்துக்கான மன்னிப்பை நாங்களே எங்களைப் பார்த்துக் கேட்டுக் கொண்டோம். வைகறை பத்திரிகையின் ஆசிரியர் ரவி, கவிஞர் திருமாவளவன் பற்றிய நினைவுகளை பகிர்ந்து கொண்டு சிறப்பாகவே நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து ஔவை விக்னேஸ்வரன், திருமாவளவனின் கவிதைகளை வாசித்தார்.

நான் ஒரு சாதாரண பார்வையாளனாகவே நிகழ்வுகளுக்குச் சென்று வருகின்றேன். நான் ஒரு படைப்பை எப்படி நுகரவேண்டும் என்று பல்கலைக்கழகத்தில் படித்தவனும் அல்லன். ஒரு படைப்பாளி, எனக்கு இப்படித்தான் படைப்பை நுகர வேண்டும் எனக் கூறவும் முடியாது. என்னால் எது நுகரப்படுகின்றது என்பதே முக்கியம். பல சமயங்களில் விடைகளைத் தேடி சமூக வலைத்தளங்கள், இணையத் தளங்களைத் தேடவேண்டியுள்ளது. நவீன தொழினுட்பம் எனக்கு அதற்கான வசதியைச் செய்துள்ளது. ஒவ்வொரு நாடகத்திலும் பல்வேறு கருத்துகள் வெளிப்படும். தனது கருத்துக்களைச் சுயமாகக் கூற, படைப்பாளிக்கு அதற்கான சுதந்திரமுண்டு. இன்று சரியானது என்று நினைக்கப்படுபவை நாளை தவறாக இருக்கலாம். இது மாறியும் அமையலாம். இன்று சமூகவலைத்தளங்கள் பலரது கருத்துக்களையும் அலசி ஆராய்கின்றன. எனது இக்கட்டுரையின் நோக்கம் கூறப்பட்ட கருத்துகள் அல்ல. மேடையேற்றமும் அதற்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தவர்களது நோக்கம் நிறைவடைந்ததா? இல்லையா? என்று எடை போடுவதுமாகும். இது ஆரோக்கியமான நாடகச் சூழல் வளர்ச்சியே - எனது கருதுகோள்.

முதல் நாடகமாக மீராபாரதியின் நாடகம் தொடங்கியது, மீராபாரதியைப் பல தடவைகள் சந்தித்துள்ளேன். நல்ல நண்பர். ஒரு தீர்க்கமான பார்வை. புத்திஜீவிகளுக்குரிய முகத்தோற்றம். மிகத் தெளிவாக உரையாடுவார். ஒரு பார்வையாளனாக பல தடவைகள் இவர் பேசும் பாணியை இரசித்துள்ளேன். நான் மதிக்கும் ஒரு மனிதர். நாடக மேடையேற்றத்தின் பின் எனது கருத்துகளை அறிய ஆவலாக உள்ளதாக முகநூலில் உள்பெட்டியில் தெரிவித்திருந்தார். இவரது கருத்துகள் பல வற்றை நான் கிரகித்துள்ளேன். இம்முறை நேரடியாக ஒரு பார்வையாளனாக அவர் கருத்துகளை அவரது நாடகத்தின் படைப்பினூடாக அவர் குழுவினர் சபையைச் சுற்றி வர அவரை தரிசிக்கின்றேன்.

சமயத் தத்துவங்கள் உயர்ந்தவை என்ற கோசத்துடன் நாடகத்தினுள் செல்கின்றோம். பாலினச் சமத்துவமின்மை, அராஜகம், ஆக்கிரமிப்பு, வன்முறை என எதனையுமே மீராபாரதி விட்டுவைக்கவில்லை. அடித்து நொருக்கிவிடுகின்றார். "நாங்கள் வெளிவிடும் மூச்சு, நீங்கள் உள்வாங்கும் மூச்சு. நீங்கள் வெளிவிடும் மூச்சு, நாங்கள் உள்வாங்கும் மூச்சு. இவையே எம்மை இணைக்கும் சக்தி. இதையுணர்ந்தால் நாம் மாபெரும் சக்தியாக உருவாகுவோம்!"

நாடக விழாவில் ஒரு பெண் இயக்குநரின் நாடகம் இல்லாமற்போனது ஏன்? என்று கேட்கக்கூட மீராவால் முடியாமல் போன தற்கான காரணத்தைத் தேடுவதற்காகக் கண்களை மூடியபோது, மேடையில் சுற்றியவர்கள் மஞ்சள் உடையுடன் தொடர்ந்து சுற்றிக்கொண்டிருந்தார்கள். இனி அடுத்த நாடகம் தொடங்கும்வரை கண்களை மூடுவதில்லை எனச் சபதம் எடுத்துக்கொண்டேன்.

டி.சே. தமிழனின் சாம்பல் பறவைகள் (மன்னிக்கவும் - முதல் நாடகத்தின் தலைப்பைக் கூட மறந்துவிட்டேன் மறக்கடிக்கப்பட்டுவிட்டேன். மஞ்சள் உடையுடன் சுற்றுபவர்கள் தான் நினைவுக்கு வருகின்றார்கள்).

நாடகத்தினுட் செல்லமுன்னர், நாடக


படம்: ஈகுருவி

> "நாடகம் என்பது ஒரு காண்பியல் கலை. ஒரு சிறுகதையில் கதாபாத்திரங்கள் பேசும் வசனங்களைப் பெயர்த்தெடுத்து மேடையில் பேசிவிடுவதோ அல்லது ஏராளமான கோசங்களை ஒன்றன்பின் ஒன்றாக இணைத்து மேடையில் கூவுவதோ நாடகமாகாது. அவ்வாறாயின், ஒரு சிறந்த அரசியல் கட்சியின் அறிக்கை கலைப்படைப்பாகியிருக்கவேண்டுமல்லவா?"

தூள் பறக்கும் வசனங்கள். ரஜினியின் பாட்ஷா படத்துக்குத்தான் வந்துவிட்டோமோ என்ற சந்தேகம். சற்றுத் தள்ளியிருந்த நண்பர் அசையாது மேடையைப் பார்த்துக்கொண்டிருந்தார். 'அடுத்து என்ன?' என்று எதிர்பார்க்கின்றோம். அரங்கினுள் ஒரு குரல் "கண்களை மூடினால் மட்டுமே அந்த ஒளியைப் பார்க்கலாம். அது உள்ளொளி". மூடிய கண்களைத் திறந்த பொழுது மஞ்சள் ஆடைகளுடன் பலர் மேடையில் சுற்றிக்கொண்டிருந்தனர். கண்கொள்ளாக் காட்சி. சகல பிரச்சினைகளுக்குமான தீர்வு மேடையில் சுற்றிக் கொண்டிருந்தது. இது தெரியாமல் அரசியல் ஆய்வாளர்களும் நிபுணர்களும் தலைவர்களும் மண்டையைப் பிய்த்துக்கொண்டிருக்கிறார்கள். (அவர்களை.... காத்தருள்வாராக). 'அற்புதமான நாடகம்'.

அனைத்துக் கலைஞர்களையும் அவர்களது உழைப்பையும் நிச்சயமாக பாராட்டியே தீரவேண்டும். நாடகம் ஆரம்பமானபோது ஆடிய நடனத்தில் அவர்களது உழைப்பும் பயிற்சியும் தெரிகின்றது.

உலகையே சுற்றிய மீரா, 'ஐ.எஸ்.ஐ.எஸ்'ஐ மறந்துவிட்டார். பயமாக இருந்திருக்காது, மரியாதையாக இருந்திருக்கக்கூடும்.

பெண்களுக்கான அமைப்பு நடத்திய மேடையேற்றத்தைப் பற்றிக் கூறுவது மிக முக்கியம். இவ்வகையான நவீன நாடகத்துக்கு சோபாக்கள் அவசியமா? சாம்பல் பறவைகள் மேடையேற்றப்பட்ட முறையில் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம். பல ஆண்டுகளுக்கு முன்னர் பி. விக்கினேஸ்வரன், 'எந்தையும் தாயும்' என்ற நாடகத்தை மேடையேற்றியிருந்தார். அதில் மூன்று குடும்பங்கள். ஒரே மேடை. ஒளி வெள்ளமே குடும்பங்களைக் காட்டியது. திரை இழுக்கப்படவில்லை. அப்போதெல்லாம் நாடகங்கள் பாடசாலை மேடைகளிலேயே மேடையேற்றப்பட்டன. யோர்க்வூட் அரங்கில் இருக்கின்ற தொழினுட்ப வசதிகளில் ஐம்பது வீதமும் அங்கிருக்காது. இவ்வளவு கடினங்கள் மத்தியிலும் மேடையில் மிகக் குறைந்த பொருட்களுடன் எந்தையும் தாயும் சிறப்பாக மேடையேற்றப்பட்டிருந்தது.

'சாம்பல் பறவைகள்' நாடகத்தில் நடித்தவர்கள் மிகச் சிறப்பாக நடித்திருந்தார்கள். குறிப்பாக அருண்மொழிவர்மன். சாதாரண பாத்திரமாகத் தோன்றினாலும், அவ்வாறான இயல்பை உடல் மொழியாக வெளிப்படுத்துவது கடினம். அதனை இயல்பாக வெளிப்படுத்தியிருந்தார். ரமேஸ் தனது பாத்திரத்தைச் சிறப்பாக வெளிப்படுத்தியிருந்தார். தற்கொலை செய்பவரின் (ரமேஸ்) மனைவியாக பிருந்தா சிறப்பாக நடித்திருந்தார்.

தற்கொலை என்பது எமது சமூகத்திலும் அதிகரித்துச் செல்கின்றது. தற்கொலைக்கான காரணங்களைப் பல சமயங்களில் விளங்கிக்கொள்ள முடியாமல் உள்ளது. தொடர்ந்து உலகளவில் தற்கொலைகள் பற்றிய உளவியல்ரீதியான ஆய்வுகள் நடைபெற்றுவருகின்றன. அப்படியிருந்தும் முற்றாகத் தற்கொலைகளை நிறுத்தமுடியவில்லை. (இந்த நாடகத்திலும்) தற்கொலை செய்பவரின் மனோ நிலையை எமது சமூகம் விளங்கிக்கொண்டதா?

இதற்கு டி.சே. தனது முகநூலில் கூறியது இது... 'இன்று எத்தனையோ முன்னாள் போராளிகள் நம்மிடையே வாழ்கின்றார்கள். அவர்களால் தாங்கள் கடந்துவந்ததைப் பொதுவில் பகிர முடிகின்றதா? அதற்கான வெளியை நாம் வாழும் சமூகத்தில் அவர்களுக்கு வழங்கியிருக்கின்றோமா? ஏன் சாதாரணமாய், போராளியாக இல்லாத பொதுமக்களாக இருந்த நம்மால் கூட போர் குறித்த எல்லா விடயங்களையும் பகிரமுடிகின்றதா? நமது நெருக்கமான துணைகளிடம் கூடப் பகிரமுடியாது? எது நம்மைத் தடுக்கின்றது?'

டி.சே கேட்பது மிக முக்கியமான கேள்வி. இது இந்த நாடகத்தில் வெளிப்பட்டுள்ளதா? தற்கொலைக்கான காரணமாக மனைவியைக் குற்றஞ்சாட்டியவுடன், நுகர்வோர் டி.சே மேற்கூறிய காரணங்களிலிருந்து நகர்ந்து பெண்ணிடம் வருகின்றனர். ஒரு சமூக, அரசியல் போராளி ஏன் சாட்டுக்காகவும் பெண் மீது குற்றஞ்சுமத்தவேண்டும்? டி.சே. தேடல் மிக்க இளைஞர். இணையங்களில் நான் அதிகம் (விரும்பி) வாசித்தவை டி.சேயின் எழுத்துகளாகத்தானிருக்கும். பிரசன்ன விதானகேயின் 'வித் யு வித் அவுட் யூ' என் மீது ஏற்படுத்திய பாதிப்பு இந்த நாடகமும் அரசியல் கருத்துக்களை முன்வைக்கின்றதா? எனத் தேட முற்பட்டேன். டி.சேயின் நாடகம் பற்றி எழுந்துள்ள விமர்சனங்கள், கருத்துகளைத் தனது முகநூலில் திறந்த மனதுடன் சுருக்கமாக வெளியிட்டுள்ளார். அதனை அப்படியே பகிர்வது நல்லது. டி.சே உங்களால் வித்தியாசமான மேடையாக்கத்துடன் கூடிய நாடகத்தை தரமுடியும். அடுத்த நாடகத்தில் நிச்சயமாக நீங்கள் மேடையேற்றத்தில் நம்பிக்கையளிப்பீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அதற்கப்பால் சாம்பல் பறவைகளை முன்வைத்து ஒரு கருத்துக்களமே நடத்தலாம்.

*//'சாம்பல் பறவைகள்' என்னும் பெண்களைக் கொச்சைப்படுத்துவதாய்ச் சொல்லப்பட்ட பிரதியை முன்வைத்து...*

*(1) எல்லோருக்கும் பிடித்தமான படைப்பை எவராலும் எழுதிவிட முடியாது. எந்த ஒரு படைப்பானாலும் சிலருக்கு விருப்பமானதாகவும், சிலருக்குப் பிடிக்காமலும் இருக்கும். அதுவே இயல்பானது. மேலும் ஒரு படைப்பை எழுதும் எவரும் எல்லோருக்கும் பிடிக்கவேண்டும் என்று யோசித்தும் எழுதுவதில்லை. ஒவ்வொரு படைப்பாளியும் தனது படைப்புக்கு நேர்மையாக இருக்கவே எப்போதும் விரும்புவர். அதன் பொருட்டு கிடைக்கும் பாராட்டுக்களை மட்டுமன்றி விமர்சனங்களையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பர்.*

*(2) 'சாம்பல் பறவைகள்' என்கின்ற இப்பிரதியின் பொருட்டு வைக்கப்படும் எந்தக் கருத்தானாலும் அதற்கான பொறுப்புக் கூறலை எழுதிய நானே எடுத்துக்கொள்கிறேன். அதைவிடுத்து உயிர்ப்பின் தயாரிப்பாளரை நோக்கி விமர்சனங்கள் எழுப்*

**தொடர்தல் 110ம் பக்கம்**




# இவனையும்... இவனுக்குள் இருக்கும் இவனையும்...

- ஆனந்தப்ரசாத் -

## அத்தியாயம் - 06

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நானும் அருள்ஜோதியும் 'அக்கா' என்றழைக்கப்பட்ட திருமதி கந்தப்பாவை சந்தித்துக்கொண்டோம். முழங்கால் வரையிலான சுருக்கு வைத்த சிவப்பு நிறப்பாவாடைக்குப் பொருத்தமாக மஞ்சள் வர்ண மேற்சட்டை. மார்பகங்களை எடுப்பாகக் காட்டும்படியாக சிவப்பு நிறப் பொத்தான்கள் வைத்துத் தைக்கப்பட்டிருந்தது. கழுத்தின் கீழ் இறங்கிய பள்ளத்தாக்கில் மார்பகங்களின் பிரிவின் துயர் தெரிந்தது. கைகளில்லாத மேற்சட்டையின் மேல் தோள் பட்டையில் அலட்சியமாகத் தொங்கிக் கொண்டிருந்த ஹான்ட் பாக்கிலிருந்து எமது தலையெழுத்தை நிர்ணயிக்கப் போகும் விமான டிக்கட்டுகளை எடுத்து எங்களிடம் கொடுத்தாள். பயபக்தியோடு வாங்கிக் கொண்டோம். விமான நிலைய சம்பிரதாயங்களை முடித்து... திருக்கோணமலை ஆலடிப்பிள்ளையாரை மனதிற்குள்ளேயே வேண்டிக்கொண்டு... வலது காலை முதலில் வைத்து விமானத்திற்குள் நுழைந்தேன். அருள்ஜோதிக்கு இதிலெல்லாம் துளிகூட நம்பிக்கையில்லை. அவன் மகா அர்ப்பணிப்புள்ள நாஸ்திகன்.

விமானம் சிறிது தூரம் உருண்டோடிப் பின்னர் மெதுவாகத் தரையைவிட்டு மேலெழுந்தது. சில நிமிடங்களின் பின்பு ஒரு மிகக் கனதியான உண்மை முளையைப் பிளந்து கொண்டு மனதின் ஆழத்துக்குள் விழுந்தது!

எத்துணை அழகானதொரு தீவில் நான் பிறந்திருக்கிறேன்...? எப்படி இயற்கையின் ரகசியங்கள் அனைத்தையும் தனக்குள் புதைத்து வைத்துக்கொண்டு எழில் கொஞ்ச இலங்கும் இலங்கைத் தீவை உதாசீனப் படுத்திவிட்டு எங்கே போய்க்கொண்டிருக்கிறேன்...? வளங்கள் அனைத்தையும் நிலத்திலும், நீரிலும் பொதிந்து கிடக்க வைத்துக்கொண்டும்... நாலுவித சீதோஷ்ண நிலைகளை இருபத்தி ஐயாயிரம் சதுர மைல் பரப்பில் பதுக்கி வைத்துக்கொண்டும்... காரமும், புளிப்பும், இனிப்பும், உவர்ப்புமாக மானுடம் செழிப்போடு வாழத் தேவையான அனைத்து ஜீவாதாரங்களையும் அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் பூகோளத்தின் ஒரு அமோகமான பூமித் தாயிடமிருந்து தொப்புள் கொடியை அறுத்தெறிந்துவிட்டு எதனைத் தேடி ஓடிக்கொண்டிருக்கிறேன்...? யார் என்னை விரட்டிக் கொண்டிருக்கிறார்கள்? இந்தக் கணத்தில் இதுதான் என்னோடு கடைசிவரை இருக்கப்போகும் இறுதியான விம்பம் என்பதை நான் உணர்ந்திருக்க ஏதொரு தரவுகளும் எனக்கு அப்போதில் இருந்திருக்கவில்லை. இருபதே நிமிடங்களில் எல்லாமும் மறைந்து போய்விட்டது.

சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான கூடத்தில் எமது 'எயர் லங்கா' காலை பதினொரு மணிக்குத் தரையிறங்கியது. முதன் முதலாக தமிழ் நாட்டில்... அதே வலதுகால் தரையில் பாவியது. சென்னைப்பட்டினம்... 'பட்டணம்தான் போகலாமடி பொம்பளே...' மனத்திரையில் சலனித்தது. தமிழ் நாட்டைப் பார்க்க வேண்டும் என்று கொள்ளை ஆசை. கனவுகள் மட்டும் மனக்கிணற்றுக்குள் மண்டிப்போய்க் கிடந்தது. என்னைக் கடவுச் சீட்டு எடுக்க வைத்ததே இந்தக் கனவுகள்தாம். ஒரு வருடம் முன்புதான் நானும், நண்பன் நவநீதனும் தமிழ்நாடு போய்வருவோம்... புத்தகங்கள் வாங்குவோம்... 'தேவி பாரடைஸில்' கமலின் இளமை ஊஞ்சலாடுகிறதைப் பார்ப்போம்... 'புஹாரி ஹோட்டலில்' பிரியாணி சாப்பிடுவோம்... என்ற பாரிய திட்டங்களோடு கொழும்பு சென்று பாஸ்போர்ட் எடுக்க முயன்றோம்.

பாஸ்போர்ட் ஆபீஸ்... ஊழல்கள் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் பெரும் கோட்டையாகத் திகழ்ந்தது. எப்படியோ நவநீதனுக்குக் கிடைத்துவிட்டது. எனக்கு உரிய காலத்தில் வரவில்லை. பல்கலைக்கழக விடுமுறைக்குள் அவன் போய்வந்தான்... நூல்கள் கொண்டு வந்தான்... கமல் படம் பார்த்தான்... கதைகள் சொன்னான்... காலம் கடந்து என்கையில் சர்வதேச பாஸ்போர்ட் தவழ்ந்தது. எல்லா நிகழ்வுகளுக்கும் ஒரு காரண, காரியம் உண்டல்லவா... எப்படியோ பாஸ்போர்ட் எடுத்த காரணம் நிறைவேறிவிட்டது. ஆனால், காரியம் வேறுபட்டு விட்டது. முன்னதில் மனது நிகழ்காலத்தின் குதூகலிப்பில் கிடந்தது. பின்னதில் மனதுக்குள் எதிர்காலம் பற்றிய பயம் பதுங்கிப்போய் முடங்கியது.

மீனம்பாக்கத்திலிருந்து ஒரு டாக்ஸி பிடித்துக் கொண்டு சென்னை சென்ரல் ரயில்வே ஸ்டேஷன் அருகிலிருந்த தெருவில் 'குமுதா லாட்ஜ்' என்று பளபளப்பாகப் பலவர்ணங்களில் எழுதப்பட்டிருந்த... தாமரைக்குப்பதிலாக யாரோ ஒரு நடிகையின் முகம் ஓவியமாக வரையப்பட்டிருந்த பெயர்ப் பலகை மேலிருந்து கீழாகத் தொங்கிக் கொண்டிருந்த மூன்றுமாடிக் கட்டிடம் ஒன்றின் முன்னால் வந்து இறங்கினோம்.

வலது புறமாக நீண்டிருந்த நடைபாதை வழியாக சாரி சாரியாக மனிதர்கள் வந்தும் போயும் கொண்டிருந்தனர். வண்டி மாட்டுக்கு முன்னால் கொம்புகளோடு இணைத்து முன்நோக்கிக் கட்டப்பட்டிருக்கும் நீண்ட கழியின் நுனியில் அதன் அசை போடும் நாவின் சுழற்சியில் அகப்படாது... ஓடிக் கொண்டிருக்கும் விசைக்கு நேரெதிராக எருதின் வயிற்றுப் பசியை தனது வேகத்திற்குச் சாதகமாக்கிக் கொண்ட சாதூர்ய மான வண்டிக்காரன் கட்டித்தொங்க விட்டிருந்த பசும்புல்லுக் கட்டின் வாசனையின் மாய்மாலங்களில் எருதுக்குப் புல்லின் மீதேற்படும் மோஹ லாகிரியில் சவாரி சூடு பிடிக்குமே... அதே போல மக்கள் எனப்படுபவர்கள் இல்லாத ஏதோ ஒன்றைத் தேடிக்கொண்டு இங்கும் அங்குமாக அலைந்துகொண்டிருந்தார்கள்.

சுற்றுப்புற ஓசைகளில் பல்வேறு பாஷைகளின் உயிர்களும் மெய்களும் கலந்து புணர்ந்து அந்தமில்லாத இரைச்சலை உற்பத்தி செய்துகொண்டிருந்தன. சாலையின் இடதுபுறத்து நடைபாதையோடு சமாந்தரமாக நீண்ட மதிற் சுவரில் சுமார் பதினைந்தடி நீளத்தில் உதய சூரியன் சின்னமும் இருபது அடி நீளத்தில் 'வாய்மையே வெல்லும்' என்ற வாசகமும் கொண்ட கறுப்பு சிவப்பு வர்ணச் சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்தது. இவ்வளவு நீளமான சுவரொட்டியை நான் வாழ்நாளில் கண்டதில்லை. தமிழ்நாட்டு அரசியலின் ப்ரம்மாண்டங்களைப் பறைசாற்றிக் கொண்டிருந்ததோடு பழசாகிக்கொண்டிருந்த மதிற்சுவரின் வெடிப்புகளையும் மறைத்துக் கொண்டிருந்தது.

டாக்ஸியிலிருந்து நாங்கள் இறங்கிய சில நிமிடங்களில் சுமார் நான்கு அடிகளே உயரம் இருக்கக்கூடிய ஒரு இளைஞன் 'வாங்கோ...வாங்கோ...அக்கா... றிப்பெல்லாம் எப்பிடி...?' என்று கேட்டுக்கொண்டே வந்து அக்காவின் கையிலிருந்த சூட்கேஸை 'றிப்' செய்துகொண்டான். இவன் யாழ்ப்பாணத்துப் பொடியன்தான் என்று சந்தேகமில்லாமல் அநுமானித்துக் கொள்கிறேன்.

'ட்றிப் நல்லா இரிஞ்சி... விஜயன்... இவங்கதான் நான் ஃபோன்ல சொன்ன ஆளுங்க... இவங்கள நீங்க பாம்பேக்குக் கூட்டிபோயி ரோஹானட்ட குடுக்கிறீங்க... நாளயின்னைக்கு தானே டிக்கட் செஞ்சிரிக்கீங்க? நான் நாளைக்கு மார்னிங் ஃபிளைட்டில பாம்பே போய் ரோஹானப் பாத்துப்போட்டு ரண்டு மூண்டு நாள்ள கொழும்பு போயிருவேன்... சரியா?'

பேசிக்கொண்டே படிக்கட்டுகளில் ஏறிப் போய் குமுதா லாட்ஜுக்குள் நுழைந்தோம். என்னையும், அருள்ஜோதியையும் ரிஸெப்ஷனில் இருக்கும்படி சொல்லிவிட்டு அக்காவைக் கூட்டிக்கொண்டு பேசிக்கொண்டே மாடிப்படிகளில் ஏறிப்போனான் விஜயன் என அழைக்கப்பட்டவன். அக்காவின் பின்புறங்கள் தான் இறுதியாக நாங்கள் பார்த்தது.

சுமார் நான்கு தசம் இரண்டு அல்லது மூன்று அடி உயரம்தான் வளர்த்தி இருக்கும் இந்த விஜயனுக்கு. கரு கருவென்று சுருண்டிருந்த கேசம் 'என்டர் தி ட்ராகன்' ஜிம் கெல்லியை நினைவுபடுத்தியது. ஆனால் முகத்தில் ரோம சாம்ராஜ்யம் இல்லை. மீசை ஏதோ பெயருக்கு ஆங்காங்கே ஒட்டிக்கொண்டிருந்தது. தாடி அறவே கிடையாது. ஷேவ் செய்தமாதிரியும் தெரியவில்லை. ஷவர சிரமங்கள் இல்லாத முகம். நெல்மணிகள் போலக் கண்கள், இல்லாத மின்னலின் எதிர்பார்ப்பில் சுருங்கியிருந்தன. முகத்தில் ஒரு மங்கோலியக் களை இருந்தது. சிறிது நேரத்தில் மாடியிலிருந்து இறங்கிவந்தான்.

'இப்பிடி வாங்கோ... உங்கட ரூமைக் காட்டிறன்'

என்றவாறு அதே தளத்தில் வலது புறமாக எங்களை அழைத்துச்சென்றான்.

'நாங்கள் மூண்டு பேரும் இந்த ரூமில தங்குவம்... ரண்டு நாளைக்குத்தானே? மூண்டு பெட் இருக்குது. உந்தப் பக்கம் பாத்ரூம் இருக்குது... களைச்சுப்போய் இருப்பியள்... போய்க் குளிச்சிட்டு

தொடர்தல் 110ம் பக்கம்

# இவனையும்...

109ம் பக்கத் தொடர்ச்சி...

வாங்கோ... வெளியில போய்ச் சாப்பிடுவம்'

சுமார் அரைமணி நேரத்தில் நாங்கள் மூவரும் லாட்ஜ்ஜை விட்டு வெளியே வந்தோம். ஈ.வே.ரா. பெரியார் சாலை வழியாக நடந்து போய் ஸ்டேஷனுக்குப் பக்கத்திலிருந்த ஒரு செட்டிநாடு ஹோட்டலில் மீன் வறுவலோடு இன்ன பிற அசைவங்களையும் மணக்க மணக்க சோத்தோடு சாப்பிட்டு விட்டு மூர் மார்க்கெட் பக்கமாக காலாற நடந்து போய்க்கொண்டிருக்கும்போது இவனைப் பற்றிய தகவல்களைத் திரட்டிக் கொண்டேன்.

விஜயனுக்கு இருபத்து மூன்று வயதுதான் ஆகிறது. யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில பிறந்து வளர்ந்தவன். தங்க நகை வியாபாரத்தில் செழித்திருந்த குடும்பம். தகப்பனார் கிருஷ்ணசாமிப் பத்தரின் குதிரைப் பந்தய மோகத்தால் ஸ்வர்ணமெல்லாம் உருகிப் போய் வியாபாரம் நொடித்துப் போய்விட நண்பர் ஒருவரின் நகை மாளிகையில் குழந்தைகளுக்குக் காதும் இளம் பெண்களுக்கு மூக்கும் குத்திவிட்டுக் கொண்டு உஞ்சவிருத்தி பண்ணிக்கொண்டிருந்தார்.

கிருஷ்ணசாமிப் பத்தரின் ராசியான கையால் குழந்தைகள் காது குத்திக்கொண்டால் அவர்களுக்கு நோய் நொடி வராமலிருக்கும் என்பதும், பதின்ம வயதுப் பெண்கள் மூக்குத்தி போட்டுக்கொண்டால் நல்ல இடத்தில் கலியாண சம்பந்தம் கிடைக்கும் என்பதும் நாளடைவில் ஒரு ஐதீகமாகிப் போய்விட்டிருந்தது. விஜயனுக்குக் கலியாண வயதை மீறிய மூத்த அக்காளும், கலியாண வயதில் இரண்டு தமக்கைமாரும் இருக்கிறார்கள். தந்தையின் கைகள் குடும்பத்துக்கு ராசியானதாக இருந்திருக்கவில்லை. ஆஸ்துமா நோயால் அவதிப்படும் தாயாரின் மருந்துச் செலவுகளோடு பத்தரின் குடும்பம் அல்லாடிக் கொண்டிருந்தது.

விஜயனுக்குப் படிப்பு ஏறவில்லை. தமக்கைமார்களோ குமுதம், கல்கி, ஆனந்த விகடன் வாசிக்குமளவுக்கே அறிவை வளர்த்துக் கொண்டார்கள். தந்தையார் வேலை பார்க்கும் நகை மாளிகையில் பதினைந்தாம் வயதிலிருந்தே பித்தளைக்குத் தங்க முலாம் பூசிக்கொண்டிருந்தானாம். காதுகளும், மூக்கும் தந்துகொண்டிருந்த தட்சணைகளோடு முலாம் பூசிய வருமானமும் சேர்ந்து நாச்சிமார் கோயிலடியிலிருந்த பூர்வீகமாக வந்த பழைய சித்தோட்டு வீட்டில் மல்லிகைப் பந்தலோடும், துளசி மாடத்தோடும் வாழ்வு உருகிக்கொண்டிருந்தது.

ஒருநாள் நகைக்கடைக்கு வந்த ஒரு வாடிக்கையாளர் முலமாக சுண்டிக்குளியில் கந்தப்பா என்றொருவன் கிரேக்க வாணிபக் கப்பல்களில் கொழுத்த சம்பளத்தில் வேலைக்கு ஆட்களை முப்பதினாயிரம் ரூபாய் பணம் வாங்கிக்கொண்டு விமானத்திலேற்றி அனுப்புவதாக விஜயன் அறிந்துகொண்டான். வாழ்வு நிமிரும் என்றொரு நம்பிக்கை துளிர்த்தது. ஆனால் அவ்வளவு பணம்...?

அன்றிரவு வீட்டில் எல்லோருமாக உட்கார்ந்து சாப்பிடும் நேரத்தில் இதுபற்றி மெதுவாகப் பேச்செடுக்க ஆரம்பிக்கையில் நாச்சிமார் கோயில் மணியடித்ததாம். விஷயத்தை விபரமாகச் சொல்லி முடித்ததும் எல்லோரும் மணியடித்த சுப சகுனத்தை வியந்து பலவாறு வியாக்கியானங்கள் செய்ய... எழுந்து கையை அலம்பிவிட்டுக் கூடத்து அறைக்குள்ளே சென்ற மூத்த அக்காள் வெளியே வரும்போது தனது கலியாணத்துக்கென்று கிருஷ்ணசாமிப் பத்தரின் குதிரைகள் பெருமனது கொண்டு இரக்கத்தோடு விட்டுவைத்த தங்க நகைகளைக் கொண்டுவந்து தம்பியின் கைகளில் கொடுத்தாளாம். இவன் உட்பட எல்லோருக்கும் கண்களில் நீர் முட்டியதாம்.

ஒரு மாதம் கழிந்து கிருஷ்ணசாமிப் பத்தர் காங்கேசன்துறைக்குப் போய் யாழ்தேவியில் 'சீற்' பிடித்துக்கொண்டு யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்துக்கு வர... எல்லோரிடமும் விம்மல்களோடும், விசும்பல்களோடும் விடைபெற்றுப் புகை வண்டிக்குள் ஏறி ஜன்னலோரத்து இருக்கையில் அமர... வாழ்க்கைப் புகையிரதச் சக்கரங்கள் மெதுவாக உருளவாரம்பிக்கையில்...

'நீ திரும்பி வரும்போது நான் உயிரோடு இருப்பேனோ என்னவோ...' என்ற தாயின் அவநம்பிக்கை தோய்ந்த முகமும்... 'என்னுடைய முட்டாள்தனத்தால் தானே நீ இப்படி எங்களையெல்லாம் விட்டு எங்கோ தொலைவுக்குப் போகிறாய்...' என்பதாகத் தந்தையின் கழிவிரக்கமும், குற்றவுணர்வும் கப்பிய முகமும்... தமக்கைமார் மூவரினதும் நீர்த்திரையிட்ட கண்களில் 'தம்பி எங்களைக் கரைசேர்ப்பான்...' என்ற நம்பிக்கை தோய்ந்த, தென்னங்குருத்தோலைத் தோரணங்களும், மாவிலைத் தோரணங்களும்... வெள்ளைத் துணி தரையிலும், கூரையின் கீழும் விரிக்கப்பட்டிருந்த தற்காலிகப் பந்தல்களும், மணவறையும், 'மாங்கல்யம் தந்துனாமேனா... மமஜீவன ஹேசுனா...'ஓம குண்டத்து நெய்வாசனையுட்பட ஏனைய வாசனாதித் திரவியங்களிலிருந்து எழுந்த வாசனையில் கடைசியாக கலியாணக்கனவுகள் விரிந்து கிடந்த முகங்களும் தன்னோடு கூடவே சென்னை வரை வந்ததாக விஜயன் சொல்லிக்கொண்டிருக்கும் போதில் அவன் கண்களில் நீர் பனித்ததை என்னால் காண நேர்ந்ததால் இவனுக்குள் இருக்கும் இவனையும் உருவகிக்க முடிந்தது.

சந்தித்து நான்குமணி நேரத்திற்குள்ளேயே தன்னைப் பற்றிய முழு விபரங்களையும் எங்களிடம் கொட்டிவிட்டான். இவன் நல்லவன். மென் மனதுக்காரன். நம்பத்தகுந்தவன். இப்போது இதோ... கெட்டுப் போன சென்னைப் பட்டணத்தில் பழம்பொருள் அங்காடியான மூர் மார்க்கெட்டில் வந்து நிற்கிறான்.

anandprasad@thaiveedu.com



# பொன் மாலைப்...

108ம் பக்கத் தொடர்ச்சி...

*புவது எந்தவகையிலும் நியாயமாகாது.*

*சாம்பல் பறவைகளுக்கான முழுச் சுதந்திரத்தையும் தந்த தயாரிப்பாளரிடமும் மட்டுமன்றி, இந்நாடகத்தில் நடித்த எந்த நடிகர்களிடமும் இது குறித்து வினவுதல் முறையாகாது.*

*(3) சாம்பல் பறவைகள் பெண்களைக் கொச்சைப்படுத்தும் பிரதியென சிலர் கூறக் கேட்டு தயாரிப்பாளர் மன உளைச்சலுக் குள்ளாகியிருக்கின்றார். பிரதி பெண்களைக் கொச்சைப்படுத்தியிருந்தால் அந்த விமர்சனத்தை எழுதியவரிடம் சொல்வதே சாலவும் சிறந்தது.//*

*(முகநூலில் டி.சே. தமிழன்)*

இந்த நாடக மேடையில் நடித்தவர்களில் பெரும்பாலானோர் சமூக, அரசியல் தளங்களில் பங்களித்துவருகின்றனர். கூறப்படும் கருத்துகளுக்கும் அவர்களுக்குமான இடைவெளி என்ன? நாடகங்களைப் பற்றிய கருத்துகளை முன்வைக்க முன்னர் நண்பர்கள் சிலர் முழுமையாகவும் பகுதியாகவும் பதிவுசெய்த ஒளிக்கோர்வைகளைச் சில தடவைகள் பார்த்தேன்.

இடைவேளைக்குப் பின்னர் சக்கரவர்த்தியின் நாடகம். சக்கரவர்த்தியின் பாத்திரத் தேர்வு முக்கியம். முரளிதரன், தர்சினி, இலங்கதாஸ் ஆகியோர் சகலருக்கும் தெரிந்த முகங்கள். அது மட்டுமல்ல. அவர்களுக்கென அரசியல், சமூக கருத்துக்கள் உள்ளன. நாடகத்தில் அவர்கள் தோன்றிய போது அவர்களது சமூக, அரசியல் முகங்களே முதலில் தெரிந்தன. குறிப்பாக முரளியின் அரசியல் பாத்திரமே தெரிந்தது. அவ்வகையில் சக்கரவர்த்தி இவர்களது முகங்களைத் தெரிந்துகொண்டே தெரிவு செய்துள்ளார். அதுவே அவருக்கு கிடைத்த வெற்றி எனலாம். நாடகத்தின் கருவுடன் முரளிக்கான உடன்பாடு, முரண்பாடுகளை முரளியின் சமூக வலைத்தளங்களில் வாசிக்கலாம் என நம்புகின்றேன்.

புரட்சியை மக்கள் மீது ஏவிவிடவேண்டும் என்று கூறிக்கொண்டு தோன்றும் முரளி ஒரு தலைவராகத் தோன்றாமல், பிரச்சாரகராகத்தான் தோன்றுகின்றார். இதனைத் தான் சக்கரவர்த்தியும் விரும்பியிருக்கக் கூடுமெனத் தெரிகின்றது. சக்கரவர்த்தியின் கருவே இவர் நடிக்கும் முறையில் வெளிப்படுகின்றது. முரளி மூளைச்சலவை செய்ய முற்படும் சில இடங்களில் அவரது இயல் புத்தோற்றம் வெளிப்பட்டது. இதனால்தான் சக்கரவர்த்தியின் பாத்திரத்தெரிவு அபாரம் என்று சொல்கிறேன். முரளி இயல்பாக நடிக்கக்கூடியவர். நன்றாக நடிக்கக் கூடிய நல்ல நடிகர்.

"எங்களைக் கொலைகாரராக இருக்கும்படி கட்டாயப்படுத்துகின்றார்கள்" எனக் கூறும் இலங்கதாஸின் நடிப்பு மிகச் சிறப்பானதாக இருந்தது. தர்சினியும் இயல்பாக நடித்திருந்தார்.

மேடையேற்றப்பட்ட மூன்று நாடகங்களையும் இணைக்கும் ஓர் இழை 'வாழ்வு'. டி.சே கேட்கின்றார் "வாழ்வு என்றால் என்ன?" என்று. வாழ்வை இவர்கள் எவ்வாறு பார்க்கின்றார்கள் என்பதே இங்கு வேறுபட்டுள்ளது. சக்கரவர்த்தியின் நாடகத்தின் கருவை, சமூகமும் உலகமும் இன்று அசை போட்டுக்கொண்டிருக்கின்றன. அரங்கை விட்டு வெளியேவந்து வானொலியை முடுக்கிய போது வாகனத்தைச் சூடுபடுத்தியது தற்கொலைத் தாக்குதல் ஒன்றை அரசியலறிஞர் ஆய்வு செய்து கொண்டிருந்ததே. இனிவரும் நாட்களிலும் சக்கரவர்த்தியின் நாடகக் கரு அசைபோடப்படும். புருசல்ஸ் விமான நிலையத்தில் குழந்தைகளைக் கடந்து தற்கொலைப் போராளிகள் தங்களது பொதிகளை தள்ளிக்கொண்டு செல்வதைத் தொலைக் காட்சிகள் ஒளிபரப்பியுள்ளன. மீராபாரதியின் கருவைச் சுமந்து இன்று பலர் 'தமிழில், வணக்கம்' சொல்லி எங்களைக் கண்மூட வைக்கின்றார்கள்.

நாடகம் என்பது ஒரு காண்பியல் கலை. ஒரு சிறுகதையில் கதாபாத்திரங்கள் பேசும் வசனங்களைப் பெயர்த்தெடுத்து மேடையில் பேசவிடுவதோ அல்லது ஏராளமான கோசங்களை ஒன்றன்பின் ஒன்றாக இணைத்து மேடையில் கூவுவதோ நாடகமாகாது. அவ்வாறாயின் ஒரு சிறந்த அரசியல் கட்சியின் அறிக்கை கலைப்படைப் பாகியிருக்கவேண்டும் அல்லவா?

மேடையேற்றப்பட்ட மூன்று நாடகங்களில் சீரிய நாடகத்துக்குரிய அம்சங்களுடன் மேடையேற்றப்பட்ட நாடகம் என்றால் அது சக்கரவர்த்தியினுடையதே. மீரா பாரதியின் நாடகம், அலுப்பையும் சலிப்பையுமே தந்தது. இதனால் டி.சேயின் நாடகத்தினுள் செல்ல அதிக நேரம் தேவைப்பட்டது. சக்கரவர்த்தியின் நாடகம் மாற்று மொழி நாடகத்தின் பிரதி என ஒரு நாடகர் தனது முகநூலில் தெரிவித்திருந்தார். இது பற்றிய ஆய்வுக்கு நான் செல்லவிரும்பவில்லை. குறிப்பிட்ட நாடகரின் நாடகங்களிலும் மாற்று மொழி (பிரதி) வாடையை நுகர்ந்துள்ளேன். ஒவ்வொரு பிரதியும் ஒவ்வொருவரது உழைப்பு இதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

அரங்கம் முழுவதும் மூன்று நாடகங்களையும் கவிஞரின் கவிதைகளையும் உள்ளடக்கி ஆண் மொழியில், ஆணால் உருவாக்கப்பட்ட மொழியிலேயே ஒலித்து, ஒளிர்ந்தது. அதிகளவு பங்காற்றியவர்களும் ஆண்களே, நடிகர்கள் உட்பட. இது தவிர்க்கப்பட்டிருக்கலாம். மீராபாரதியிடம் உயிர்ப்பு அமைப்பின் இயக்குநர், நாடகம் ஒன்றை இயக்கவேண்டும் என்று கேட்ட போது அவருக்கு ஏன் 'நாடகத்தை இயக்குவதற்கான வாய்ப்பு ஒரு பெண்ணுக்கு வழங்கப்படவேண்டும்' என்று தோன்றவில்லை. அதை ஏன் அமைப்பின் இயக்குநரிடம் கூறவில்லை. உயிர்ப்பு அமைப்பினர், ஆண்களின் பிற்போக்கான கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்று நினைத்திருந்தால் அதில் ஓரளவுக்கு அவர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள் என்று தான் கூறவேண்டும்.


புலம்பெயர் தமிழர்களைப் பொறுத்தவரை உயிர்ப்பு பெண்கள் அமைப்பு முக்கியமானது. இங்கு தமிழர் மத்தியில் பெண்களுக்கான அமைப்புகள் அதிகம் இல்லை. இந்த வகையில் உயிர்ப்பு நாடகப் பட்டறையின் தொடச்சியான நாடக முன்னெடுப்புகள் காத்திரமானவை. இதன் பின்னணியில் இயங்கும் அனைவரையும் பாராட்டுகிறோம். நாடக நிகழ்வு நடைபெற்ற மார்ச் 5ம் நாள் ரொறன்ரோவில் அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு மிகப்பெரியதோர் ஊர்வலம் நடந்தது. ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்ட அந்த ஊர்வலத்தை, அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு கனடாவில் நடத்தப்பட்ட முக்கியமான நிகழ்வாக ஊடகங்கள் விவரித்திருந்தன. அதே நாளில் பெண்கள் அமைப்பொன்றால் நடத்தப்பட்ட நிகழ்வொன்றில் அனைத்துலகப் பெண்கள் நாளைப் பற்றி எதுவுமே கூறப்படாமை ஏமாற்றத்தையே தந்தது.

பெண்களுக்காகவும் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், பால் சமத்துவமின்மை தொடர்பாகவும் உயிர்ப்பு அமைப்பினர் குரல் கொடுத்து வருகின்றனர்.

இந்த நாடக மேடை உங்களது. வெளி உங்களுக்கானது. ஐந்து அரங்குகளைக் கண்டுவிட்டீர்கள். அரச ஆதரவும் உங்களுக்குண்டு. ஏன் உங்களால் பெண் இயக்குநர்களையோ பிரதியாளர்களையோ உருவாக்க முடியவில்லை? அவர்களுக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை? ஆரம்பத்தில் கவிதைகள் வாசித்த ஒளவையும் ஓர் இயக்குநர். அரசியிடமும் நல்ல திறமை உண்டு. ஏன் முற்று முழுதாக ஆண்களிடம் அரங்கைக் கையளித்தீர்கள். உங்களுக்கான வெளியில் பெண்களின் குரலை ஏன் உங்களால் ஒலிக்க, ஒளிர்க்க முடியாமல் போனது?

ஓர் ஆணின் வெற்றிக்குப் பின்னால், ஒரு பெண் உள்ளார் என்பது முதுமொழி. ஆனால் அதனை உயிர்ப்பு பெண்கள் அமைப்பு மூன்று ஆண் இயக்குநர்களின் நாடகத்தை மேடையேற்றி நிரூபித்துள்ளார்கள். எனது ஆதங்கமே இது தான். இங்கு பல பெண் நாடகர்கள் உள்ளார்கள். அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்திருக்கலாமே. ஏன்? முதலில் கூறியது போல் விடை தேடிக் கண்களை மூடிய போது மீரா பாரதியின்...


கொலைகள் இல்லாத பூமியை உருவாக்க நாங்கள் கொலைகள் செய்வோம். ஆண்களற்ற, பெண் படைப்பாளிகள் நிரம்பிய அடுத்த உயிர்ப்பு நாடக அரங்குக்கு நாங்கள் எம்மாலான பங்களிப்பைச் செய்வோம். நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம்.



rathan@thaiveedu.com

# தமிழ்வலை - 06

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.



**இடமிருந்து வலம்**

2 தினம்
3 துணை
5 வியத்தகு காட்சி
6 தழும்பு
7 விலங்குணவு
8 புலமையாளர்
10 அடி
11 விவேகம்
14 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என முழங்கிய புலவர் (4-7)
15 இலங்கையில் ஒரு மாகாணம்
17 ஒரு சுகயீனம்
21 மங்களநாயகம் தம்பையா எழுதிய நாவல் (6-5)

**மேலிருந்து கீழ்**

1 முதிய
3 ஒரு பிராணி
4 மாதிரி
5 மறைந்த இந்திய குடியரசுத் தலைவர் (4-3)
6 காட்டு
7 முடிவுகட்டு
9 வேண்டியவரை
11 பாம்பாட்டும் கருவி
12 உண்
13 புதிர்
16 மருத்துவம்
18 நளபாகம்
19 சகிப்பு
20 தராதரம்

தமிழ்வலை
போட்டிக்கான விடைகளை இம்மாதம்
23ம் திகதிக்கு முன்
எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள்.
விடைகளை மின்னஞ்சல் மூலமும் கடித மூலமும் அனுப்பிவைக்கலாம்.

கடிதம் மூலம் அனுப்புபவர்கள் தாய்வீடு பத்திரிகையின் தமிழ்வலை பக்கத்தில் நேரடியாக விடைகளை எழுதியோ அல்லது பிரதியெடுக்கப்பட்ட தமிழ்வலைப்பக்கத்தில் விடைகளை எழுதியோ அனுப்பி வைக்கலாம்.

மின்னஞ்சல் மூலம் விடைகளை அனுப்புபவர்கள் நிரப்பப்பட்ட 'தமிழ்வலைப்' பக்கத்தை படியெடுத்து (Scan செய்து) அல்லது நிழற்படம் எடுத்து அனுப்ப வேண்டும்.

நடுவர்களின் முடிவே இறுதியானது.

**விடைகளை அனுப்பவேண்டிய மினன்னஞ்சல் முகவரி**

**thamilvalai@thaiveedu.com**

**தொலைநகல்: 416 849 0594**

**விடைகளை அனுப்பவேண்டிய கடித முகவரி**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 05க்கான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 நெ | | 2 அ | றி | 3 வி | ய | ல் | | 4 ம | 5 கா |
| 6 அ | றி | கு | றி | | ரு | | | 7 உ | லை | வு |
| | பி | | | 8 த | ந் | 9 த | ம் | | ப் | |
| 10 நி | ர | ம் | | | 11 தோ | ணி | | 12 அ | பி | ன் |
| | ழ் | | 13 தா | ர | ம் | | 14 நி | | ர | |
| 15 க | வு | தா | ரி | | ப | | 16 தி | ரி | ச | டை |
| ல் | | | கை | | ல் | | ம | | ங் | |
| 17 வி | டு | 18 தி | | 19 ப | | 20 சா | ன் | று | க | ள் |
| கே | | ட் | | ற் | | 21 வ | று | | ம் | |
| ள் | | டு | | ப | | க | | | | 22 ந |
| 23 வி | ரை | | 24 ப | ல | து | ம் | ப | த் | து | ம் |

## தமிழ்வலை - 05 பெறுபேறுகள்

முன்னிலைப் போட்டியாளர்கள்:

யசோதை தயாபரன் (கனத்தா)
த. செ. நடராசா (ரொறன்ரோ)
துஷ்யந்தி வசந்தகுமார் (ஸ்காபறோ)
கே. பரமேஸ்வரன் (நோர்த் யோர்க்)
சோ. பஞ்சாட்சரமூர்த்தி (ரொறன்ரோ)
வீ. நடராசா (ஸ்காபறோ)
ஏ. எஸ். மகாலிங்கம் (ரொறன்ரோ)
சபிதா தியாகராசா, ஸ்காபறோ

•

**பரிசுபெறும் அதிஷ்டசாலி:**

**கே. பரமேஸ்வரன் (நோர்த் யோர்க்)**


கலைச்சொற்கோவை

http://kalaichotkovai.blogspot.ca





உங்கள் நிகழ்வுகளைப் பார்ப்பதற்கும் பதிவதற்கும்

www.inayam.net

info@inayam.net 416.400.6.406


Real Estate
✓ Residential
✓ Commercial
✓ Investment
✓ Property Management
✓ Custom Houses
HomeLife Today Realty Ltd., Brokerage
Office: 416-298-3200
Tax
✓ Personal
✓ Self Employed
✓ Corporate
✓ Estate
✓ Company Registration
MVK TAX Consultants
Office: 647-947-8449
Insurance
✓ Life & Health
✓ Travel
✓ Key Person
✓ Buy & Sell
✓ RESP
iNFORCE LIFe
Financial Services Inc.
Office: 416 880 6051
FOR ALL YOUR
REAL ESTATE | INSURANCE | TAX
NEEDS...!
Vallikkannan (MVK) Maruthappan
Direct : 416 880 6051 | www.mvkhome.ca
25 Years of Experience | Qualified and Well-Known | Award Winning Businessman
HONESTY ★ RELIABILITY ★ INTEGRITY

# இலங்கையில் 1958 - இனக்கலவரம்

## நினைவுகளின் நிழல்கள் - 09

- உதயணன் -

ஒரு வருடம் கழிந்தது. எனது சிறுகதைகள், நகைச்சுவைக் கட்டுரைகள் சில பல பத்திரிகைகளில் பிரசுரமாகின. வாழ்ந்த இடத்திலும் தொழில் பார்த்த இடத்திலும் நண்பர்கள் தந்த உற்சாகத்தால் வாழ்க்கை சுகமானது. பத்திரிகை ஆசிரியர்கள் காட்டிய ஆதரவால் மனம் நிறைவானது. கொட்டாஞ்சேனைச் சந்தியும் கோழி பஸ்ஸும் வசமானது. கொட்டாஞ்சேனை பிராமணாள் சைவ ஹோட்டலில் கண்ணறை இடியப்பமும் உப்பில்லாச் சொதியும் சுவையானது.

எனது படைப்புகள் சில வெளிவந்ததும் நமசிவாயம் அங்கிள் எவ்வளவோ மாறிவிட்டார். நீங்கள் எதைச் சொன்னாலும் எதை எழுதினாலும் அது சரியாகத்தான் இருக்கும் என்று சொல்லும் அளவுக்கு இறங்கிக் கைகளைக் கட்டிக்கொண்டு பயபக்தியுடன் இருக்கும் பக்குவம் பெற்றிருந்தார். அட்டமி நவமியில் எதைச் செய்யலாம் எதைச் செய்யக் கூடாது என்று என்னிடமே பணிவாக ஆலோசனை கேட்கும் சீடனும் ஆனார்.

நமசிவாயம் அங்கிள் வாட்டசாட்டமான உடலைப்பைக் கொண்டவர். கொழும்புத் துறைமுகத்தில் காவற்பகுதியில் கடமை ஆற்றிக்கொண்டு இருந்தார். ஒரு வாரம் பகல் வேலை என்றால் மறு வாரம் இரவு வேலையாக இருக்கும். காக்கித் துணியில் நீளக் காற்சட்டையும் தோள்பட்டையில் ஏதோ பட்டிகளுடன் வெள்ளை நிறத்தில் அரைக்கை மேற்சட்டையும் அவருடைய சீருடை. அந்த உடையில் அவரைக் காணும் வெளியார் சிலர், அவரைச் சிவில் உடையில் திரியும் பொலிஸ் அதிகாரியாக நினைத்துக் கொள்வார்கள். அவருக்கே தெரியாத அந்த ரகசியத்தை நாங்கள் அணையாமல் ஊதி ஊதிப் பொத்திப்பேணிப் பாதுகாத்து வந்தோம். ஏனென்றால் அவரைச் சீருடையுடன் எங்கே அழைத்துச் சென்றாலும், அவரை ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் என்று நினைத்து நாங்கள் போகும் கருமத்தை விரைவாக முடித்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது. அதிலும் தமிழ்க் கடைகளுக்குப் போனால் முதலாளியே எழுந்து நின்று எல்லாப் பற்களும் தெரியச் சிரித்து வரவேற்பார்.

அலுவலகத்திலும் கருமங்கள் அமைதியாகவும் மன நிறைவாகவும் போய்க்கொண்டிருந்தன. எங்கள் பிரிவில் ஆறு பேர் கடமை யாற்றினோம். தலைவர் லியோ இம்மானுவல். ஏனைய ஐவரில் அறுபது வயதை எட்டும் ஒரு பறங்கியர் இருந்தார். இரண்டாவது உலக யுத்தத்தில் ஏதோவாகக் கடமையாற்றிய அவரை யுத்தம் முடிந்த பின்னர் இங்கே மாற்றினார்கள். ஓய்வு பெறப்போகிற வயது. காக்கி நிறத்தில் அரைக்காற்சட்டையும் அதன் உள்ளே செருகப்பட்ட வெள்ளை நிற அரைக்கைச் சட்டையும் 365 நாட்களும் அணிந்திருப்பார். 'டாண்' என்று ஒன்பது மணிக்கு ஒரு பெரிய தோற்பையுடன் வருவார். இவரைக் கண்டவுடன்தான் ஞாபகம் வந்தது போல அலுவலகக் கடிகாரம் ஒன்பதை அடிக்கத் தொடங்கும். வேலை நேரம் முழுவதும் யாருடனும் பேசாமல் நாற்காலியில் உட்கார்ந்திருப்பார். அடிக்கடி அவர் கொண்டு வந்த தோற்பையிலிருந்து விதம்விதமான உணவு வகைகளை எடுத்து உண்பார். எவருடனும் பேசமாட்டார். அவரை நாற்காலியில் காணவில்லை என்றால் வேலை நேரம் முடிந்துவிட்டது எல்லோரும் வீட்டுக்குப் போகலாம் என்று அர்த்தம்.

ஏனைய ஐவரில் வயதில் குறைந்தவன் கில்பேர்ட் என்னும் ஒரு சிங்கள இளைஞன். இவன் ஒரு வஞ்சகம் இல்லாத விளையாட்டுப் பிள்ளை. எப்பொழுதும் மற்றவர்களின் உணர்வுகளைக் காயப்படுத்தாமல் நகைச்சுவையாகப் பேசுவான். மற்றவர்களுக்கு உதவிகள் செய்வதில் முதல் ஆளாக நிற்பான். இவனை எல்லோருக்கும் பிடிக்கும். ஒன்பது மணிக்கு முன்னரே வருவான். பதினொரு மணிவரை எவருடனும் பேசாமல் வேலை செய்வான். அதன்மேல் இரண்டொரு மணி நேரம் மாயமாக மறைந்து போவான். இந்தத் திணைக்களத்தின் தட்டச்சுப் பிரிவில் மூன்று இளம் சிங்களப் பெண்கள் கடமையாற்றினார்கள். இந்த இடைவெளியில் இந்தக் 'கண்ணனை' அங்கே காணலாம்.

ஒரு சம்பவம் எனக்கு இன்னமும் நன்றாக நினைவிருக்கிறது. நான் வேலையில் சேர்ந்த ஆரம்ப நாட்களில் எனக்கு இரண்டு பிரச்சினைகள் இருந்தன. ஒன்று, அங்கேதான் எனக்கு முதன்முதலாகத் தொலைபேசி அறிமுகமானது. அந்தப் பெரிய கறுத்தத் தொலைபேசியை எப்படி எடுத்து, எந்தப் பக்கத்தை எந்தக் காதில் வைத்து எப்படிப் பேசுவது என்று தயக்கமாக, அல்லது பயமாக இருந்தது என்றும் சொல்லலாம். அடுத்த பிரச்சினை, அங்கே உயர் அதிகாரிகள் என்று ஓர் அதிபரும் நாலைந்து உதவி அதிபர்களும் இருந்தார்கள். நாங்கள் அவர்களுக்கு அனுப்பும் கோப்புகளில் (files) ஏதாவது விளக்கம் தேவைப்பட்டால், அவர்கள் சம்பந்தப்பட்டவரைத் தொலைபேசியில் கூப்பிட்டு நேரில் வரவைத்து உரையாடுவது வழக்கம். ஆரம்ப நாட்களில் ஆங்கிலத்தில் உரையாடுவதும் எனக்குச் சங்கடமாக இருந்தது.

ஒரு நாள் தொலைபேசிமணி அடித்தது. அந்தந்தப் பிரிவின் தலைவரின் மேசையில் தான் தொலைபேசி இருக்கும். லியோ இம்மானுவல் தொலைபேசியை எடுத்துப் பேசிவிட்டு, 'சிவா, உங்களுக்குத்தான்,' என்று சொல்லித் தொலைபேசியை மேசையில் வைத்துவிட்டுத் தனது வேலையில் தொடர்ந்து கவனமானார். நான் எழுந்து போய், 'எனக்கு யார் போன் பண்ணுவது? யார் என்று கேட்டுச் சொல்லுங்கள்,' என்றேன்.

இம்மானுவல் நிமிர்ந்து என்னைப் பார்த்து, "இப்படியே பயந்து பயந்து இருந்தால் எப்படி வேலையைப் பழகுவது? நீங்களே பேசுங்கள்," என்று சொல்லிவிட்டுத் தனது வேலையில் தொடர்ந்து கவனமானார்.

நான் தொலைபேசியை எடுத்துப் பயபக்தியுடன், 'ஹலோ!' என்றேன்.

"நான் உதவி அதிபர் 'இன்னார்' பேசுகி-றேன். எனது அறைக்கு உடனே வாருங்கள்," என்று சொல்லி நிறுத்திவிட்டார். அதிபர்களுடைய அறை அடுத்த கட்டிடத்தில் இருந்தது. நான் பயந்து பயந்து அங்கே போய், குறிப்பிட்ட உப அதிபரின் அறைக்கதவைத் திறப்பதற்காக அறைக் கதவின் குமிழில் கையை வைத்தபோது -



யாரோ ஒருவன் பின்புறமாக வந்து இரண்டு கைகளாலும் எனது வயிற்றைக் கட்டிப் பிடித்து கொறகொறவென்று என்னைப் பின் பக்கமாக இழுத்துக் கொண்டு போனான். திரும்பிப் பார்த்தால், கில்பேர்ட்! "உப அதிபர் போன் பண்ணவில்லை. நான்தான் இன்னொரு பிரிவிலிருந்து போன் பண்ணினேன். உன்னுடைய பயத்தைப் போக்கத்தான் அப்படிச் செய்தேன்," என்று சொல்லிச் சிரித்தான். நாங்கள் திரும்பி எங்கள் பிரிவுக்கு வந்தோம். அங்கே இம்மானுவல் சிரித்துக் கொண்டு இருந்தார். அவரும் இந்த நாடகத்தில் பங்கு என்று பின்னர் தெரிய வந்தது.

நாங்கள் எல்லோரும் நல்ல நண்பர்களைப் போல, அண்ணன் தம்பிபோல ஆங்கிலத்தில் சரளமாகப் பேசிக் கொள்வோம். சிங்களவன் தமிழன் என்ற நினைவே வருவதில்லை.

ஒரு நாள். நண்பகல் உணவுக்குச் சென்ற கில்பேர்ட் மூச்சு இளைக்க இளைக்க ஓடி வந்தான். இம்மானுவலின் மேசையருகில் இருந்த நாற்காலிகளில் ஒன்றைப் படார் என்று இழுத்து, அதில் அவசரமவசரமாக அமர்ந்து, இம்மானுவலின் காதுகளில் இரகசியமாக என்னவோ சொன்னான்.

இம்மானுவலின் முகம் பேய் அறைந்தது போல் இருண்டது. தொலைபேசியை எடுத்து இரண்டு மூன்று பேர்களுக்குப் போன் பண்ணினார். கில்பேர்ட்டை இருக்கச் சொல்லிவிட்டு, எழுந்து வேகமாக நடந்து அதிபர், உப அதிபர்கள் கடமை ஆற்றிய கட்டடத்துக்குள் நுழைந்தார். சிறிது நேரத்தில் குழம்பிய முகத்துடன் திரும்பி வந்த அவர், என்னை அவசரம் அவசரமாகக் கூப்பிட்டு, "கொழும்பில் பெரிய இனக்கலவரம் தொடங்கியிருக்கிறதாம். சிங்களவர் தமிழருடைய கடைகள் வீடுகளை நெருப்பு வைத்துக் கொளுத்துகிறார்களாம். தெருவில் செல்லும் தமிழரை வெட்டிக்கொல்கிறார்களாம். நேரமாக நேரமாகக் கலவரம் பெரிதாகும் போலிருக்கிறது. நீங்கள் உடனே வீட்டுக்குப் போங்கள். நான் தகவல் அனுப்பும்வரை வேலைக்கு வரவேண்டாம். உடனே புறப்படுங்கள்," என்று அவசரப்படுத்தினார்.

"சிவா இப்பொழுது தனியாகப் போவது பாதுகாப்பில்லை. கோட்டை வரை போய் அவரைக் கொட்டாஞ்சேனை பஸ்ஸில் ஏற்றிவிட்டு வர முடியுமா?" என்று இம்மானுவல் கில்பேர்ட்டைப் பார்த்துக் கெஞ்சுவது போலக் கேட்டார்.

"கவலைப்படாதீர்கள். சிவாவின் வீட்டு வாசற்படிவரை பத்திரமாகக் கொண்டுபோய் விடுவேன்," என்று சொல்லி என்னை அன்புடன் பார்த்தான் கில்பேர்ட்.

சிங்களவன் நல்லவனா, கெட்டவனா?

கில்பேர்ட் நல்லவன் கோடியில் ஒருவன்.

அது 1958ம் ஆண்டு, மே மாதத்தின் பிற்பகுதியில் ஒரு நாள்!

1948ல் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கிவிட்டு வெள்ளையன் வெள்ளை மனத்தோடு வெளியேறிவிட்டான். வெள்ளையனின் முதுகு மறைவதற்குள், 'இந்தச் சுதந்திரம் எனக்குத்தான் உனக்கல்ல,' என்று சொல்லிப் பழைய ஏடுகளை அழித்தெழுதி, பொய்யைப் பொன்முலாம் தடவித் தொங்கவிட்டு, புதிய வரலாற்றுக்கு வர்ணம் பூசி, சிங்களவன் தமிழனின் முதுகில் ஓங்கி அடித்தான். இந்த 1958 கலவரம் எவனோ ஒரு சிங்களவனின் சூழ்ச்சியால் இலங்கை முழுவதிலும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்ட துன்பியல் நாடகம்.

•

தொடர்தல் 114ம் பக்கம்

# இலங்கையில் 1958...

113ம் பக்கத் தொடர்ச்சி...

சுதந்திரத்திற்கு முன்னர் இந்தியாவில் முஸ்லீம்களின் எண்ணிக்கை நாற்பது சத விகிதமாகும். அதனால் பெரும்பான்மை யினரான இந்துக்களின் மத்தியில் சிறு பான்மையினரான முஸ்லீம்கள் வாழ முடி யாது என அவர்கள் நினைத்தனர். 1900ம் ஆண்டு இந்தி இந்தியாவின் அதிகாரப் பூர்வ மொழியாக அறிவிக்கப்பட்டது. அப் போது உருது மொழியையும் இணைக்கு மாறு முஸ்லீம்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் அது நிராகரிக்கப்பட்டது. அத னால் பெரும்பான்மையினர் மத்தியில் சிறு பான்மையினர் வாழ முடியாது என்னும் எண்ணம் முஸ்லீம்களுக்கு ஏற்பட்டது.

1947ம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்ற போது, பாகிஸ்தானை இந்தியாவிடமிருந்து பிரித்துத் தனிநாடாகத் தரவேண்டும் என்ற ஜின்னாவின் உறுதியான, பிடிவாதமான வேண்டுகோளை ஆங்கிலேயர்களால் மட்டு மல்ல, காந்தி நேரு போன்ற இந்தியத் தலைவர்களால் கூட மறுக்க முடியாமல் போனது.

அதனால், இந்தியா பிரிந்தது பாகிஸ்தான் பிறந்தது!

கிட்டத்தட்ட இதே காலகட்டத்தில், 1915ல் இலங்கையில் சிங்கள - முஸ்லிம் கலவரம் நடைபெற்றது. அப்போது ஆங்கிலேய அரசாங்கம் அதனை கடுமையாக நசுக் கும் நடவடிக்கைகளில் இறங்கியது. இலங் கையின் முதலாவது பிரதமரான டி.எஸ். சேனநாயக்காவில் இருந்து சில சேனாநா யக்காக்களையும் பல பண்டாரநாயக்காக் களையும் பிடித்துச் சிறையில் தள்ளியது வெள்ளைக்கார அரசு. அவர்களுக்கு என்ன தண்டனைகளும் கிடைக்கலாம் என்ற நிலைமை. இந்த இக்கட்டான வேளையில், ஒரு தமிழ் மகனான சேர் பொன். இராம நாதன் முதலாம் உலகப்போர் நடைபெற் றுக் கொண்டிருந்த போர்ச் சூழ்நிலையிலும் இங்கிலாந்துக்குச் சென்று பிரதமருடனும் மற்ற அமைச்சர்களுடனும் பேசிக் கைது செய்யப்பட்ட சிங்களத் தலைவர்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தார்.

இந்த மனித சமுதாயம் நன்றி கெட்டது!

ஆங்கிலேயர் 1948ம் ஆண்டு இலங்கைக் குச் சுதந்திரம் வழங்க முன்வந்த போது, இந்தியாவில் சிறுபான்மையினராக இருந்த முஸ்லீம்களுக்கு 'முஸ்லீம் பாகிஸ்தான்' என்ற நாட்டைப் பிரித்துக் கொடுத்தது போல இலங்கையில் சிறுபான்மையினராக இருந்த தமிழர் தனித் தமிழீழம் பெறும் வாய்ப்பு இருந்தது என்றும், சிங்களத் தலைவர்களின் பொய் பூசிய வாக்குறுதி- களை விழுங்கிய இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் தனித் தமிழீழம் பெறக் கூடிய அரிய வாய்ப்பை அன்று இழந்தார்கள் என்றும் அரசியல் ஞானிகள் இன்று கவ லைப்படுகிறார்கள்.

இலங்கைக்குச் சுதந்திரம் கேட்டுச் சிங்க ளவனோடு சேர்ந்து தமிழன் போராடியது ஒரு குற்றமா? அது குற்றம் என்றால் வெள் ளையனை வெளியேற்றச் சிங்களவனோடு சேர்ந்து போராடி, அந்தச் சிங்களவனுக்கே அடிமையானது எத்தகைய முட்டாள்தனம் என்று இன்று சில 'பழசுகள்' வயிற்றில் அடித்து அங்கலாய்க்கிறார்கள். ஏனென் றால் - ,

தான் வாழத் தரணி எங்கும் தட்டேந்தித் திரிகிறான் தமிழன் இன்று!

ஈழத்தமிழன் நம்பிக் கெட்டவன்!

ஈழத்தமிழனுக்கு எதிரான முதலாவது வன் முறை 1956ல் நிகழ்ந்தது.

1956ல் 'தனிச் சிங்கள' சட்டமூலம் நாடா- ளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நாளில்,



**1958 ஜூன் 1ல் அவசரகாலச் சட்டம் அறிவிக்கப்பட்ட பின்னரும் ஆங்காங்கே வன்முறைகள் இடம்பெற்றன. இந்நிகழ்வு பொதுவாக இனக்கலவரம் என அழைக்கப்பட்டாலும், சிலஇடங்களில் இனவழிப்பாகவே நடத்தப்பட்டது.**

எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையி லான இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் (பழைய) நாடாளுமன்றக் கட்டடத்துக்கு முன்பாக காலி முகத்திடலில், 'தனிச்சிங் கள' சட்டமூலத்தை எதிர்த்து அகிம்சை வழியில் போராட்டமொன்றை நடத்தினர். இந்தியாவின் தந்தை எனக் கருதப்படும் மகாத்மா காந்தியின் பாதையில், அதன் தாக்கத்தில் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் கள் உட்பட ஏறத்தாழ 300 தமிழரசுக் கட் சியினர் காலி முகத்திடலில் கூடி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாக அங்கே உட்கார்ந்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். இந்தச் சத்தியாக்கிரகிகளோடு இணைந்து சட்டத்தரணி பரணவிதான மற்றும் பிதா. சேவியர் தனிநாயகம் அடி களார் ஆகியோரும் சத்தியாக்கிரகத்தில் அமர்ந்து கொண்டனர்.

அமைதி வழியில் நாடாளுமன்றக் கட்டடத் துக்கு முன்பாக காலிமுகத்திடலில் சத்தி யாக்கிரகமிருந்து தமது எதிர்ப்பை வெளிப் படுத்தியவர்களைச் சிங்களக் காடையர்கள் தாக்கத் தொடங்கினர். சுற்றிவர பொலிஸ் காவலுக்கு நின்ற போதும், பொலிஸார் காடையர்களைத் தடுக்கவில்லை. அமைதி வழியில் சத்தியாக்கிரகம் இருந்தவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். சிலர் நாடா- ளுமன்றக் கட்டடமருகே தூக்கி வீசப்பட் டனர். சிலர் கீழே போட்டு மிதிக்கப்பட்ட னர், சிலர் அடித்து உதைக்கப்பட்டனர், சிலர் மீது எச்சில் உமிழப்பட்டது. சத்தி யாக்கிரகிகள் வைத்திருந்த பதாதைகள் பறித்து எறியப்பட்டன.

இந்த வன்முறை பரவி கொழும்பிலும் பின் னர் பிற இடங்களிலும் 150க்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதுவே 1956ல் இலங்கைத் தமிழர், சிங் களவர் இனங்களுக்கிடையான முதலாவது கொடிய வன்முறைச் சம்பவமாகும். இதன் பின்னர் இரு இனத்தவரும் ஒருவர்மீது ஒருவர் சந்தேகத்துடன் பார்க்கும் நிலைமை ஏற்பட்டது.

மீண்டும் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் நிகழ்ந்த '1958 இனக்கலவரம்' பற்றிய அதாரபூர்வமான சாட்சியங்களாகப் பல குறிப்புகள், செய்திகள், கட்டுரைகள், நூல் கள் ஆகியன அகிலம் எங்கணும் பதிவாகி இருக்கின்றன. அவற்றுள் உண்மையானது நிஜமானது சத்தியமானது என்று ஒரு நூல் கூறப்படுகின்றது. அது இலங்கையில் 'ஒப் சேவர்' பத்திரிகையின் ஆசிரியராகப் பணி யாற்றிய ஊடகவியலாளர் தார்ஸி வித்தாச்சி என்பவர் எழுதிய 'இலங்கை இனக் கல வரம் - 58,' (Emergency '58 – The Story of the Ceylon Race Riots -Tarzie Vittachi, 1958, Copyright: Tarzie Vittachi) என்னும் நூல். பிலிப்பீனிய அதிபர் ரமொன் மக் சாய்சாய் என்பாரின் பெயரால் வழங்கப்ப டும், ஆசியாவின் நோபல் பரிசு எனக்கரு தப்படும் '1959 Ramon Magsaysay Aw ard' என்னும் 1959ம் ஆண்டுக்கான விருதை இந்த நூல் பெற்றது.

இந்த நூலின் முன்னுரையின் முதலாவது வரி இவ்வாறு தொடங்குகின்றது. 'பன்னூறு ஆண்டுகளாக இலங்கை வாழ் மக்களான இரு இனங்களும் ஒருவர்மீது ஒருவர் வைத் திருந்த அந்நியோன்யமான நன்மதிப்பை யும் நன்னம்பிக்கையையும் முப்பது மாதங் களான குறுகிய காலத்தில் அழிக்கப்பட் டதைக் கண்கூடாகக் காண்கிறார்கள்' (The people of Ceylon have seen how the mutual respect and good will which existed between two races for several hundred years was destroyed within the relatively brief period of thirty months.)

கொழும்பு, ராணி மாளிகையில் இருந்து கசிந்த ஓர் உத்தியோகபூர்வமற்ற செய் தியில் கவர்னர் ஜெனரல் இவ்வாறு கூறி யிருந்தார், 'இது தற்செயலாக வெடித்த ஓர் இனக்கலவரம் அல்ல. கனவான்களே, நீங்கள் இதனைத் தற்செயலாக வெடித்த ஓர் இனக்கலவரம் என்று எண்ணியிருந்தால், உங்கள் கருத்தை மாற்றிக் கொள்ளுங் கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே மக்கள் செல்வாக்கின் பின்னணியிலிருந்த திறமையான மூளைசாலிகளால் வைக்கப் பட்ட காலம் நிர்ணயிக்கப்பட்ட ஒரு வெடி குண்டு இப்பொழுது வெடித்திருக்கிறது!'

("... News trickled out from Queens House that the Governor General had announced, off the record at the press conference, that the riots had not been spontaneous. What he said was: 'Gentlemen, if any of you have an idea that this was a spontaneous outburst of communalism, you can disabuse your minds of it. This the work of a master mind who has been at the back of people who have planned this carefully and knew exactly what they were doing. It was a time bomb set about two years ago which has now exploded ...")

இரத்த வாடை வீசிக்கொண்டிருக்கும் இத் தகைய சில தகவல்களை 'இலங்கை இனக் கலவரம் - 58,' என்னும் இந்த நூலில் ஆங்காங்கு காணலாம் அவலச் சாவை டைந்த ஆத்மாக்களின் ஈனக் குரல்களையும் அவ்வப்போது கேட்கலாம்.


இந்த நூலும் பல்வேறு உலகளாவிய பத் திரிகைகளும் அமைப்புகளும் இந்தக்கல வரம் பற்றிச் சொன்ன சோகமான செய்தி களின் சாராம்சம் வருமாறு.

பதினாறாம் நூற்றாண்டில் மேற்கத்தேய வல்லரசுகளின் வருகைக்கு முன்னதாக இலங்கைத் தீவிலே மூன்று இராஜதானி கள் இருந்தன. அவற்றில் ஒன்று வடக்கிலே தமிழருக்குச் சொந்தமாக இருந்தது. மத் திய மலையகத்திலே இருந்த கண்டி இராச் சியம் தான் கடைசியானதாக 1815ல் பிரித் தானியரிடம் வீழ்ச்சியடைந்தது. 1833ம் ஆண்டு நிர்வாக வசதிக்காக இந்த மூன்று இராஜதானிகளையும் பிரித்தானியர் ஒன் றிணைத்தனர். அன்றிலிருந்து இலங்கை ஒரே நிலப்பரப்பாக ஆளப்பட்டது. 1948ம் ஆண்டு காலனித்துவ ஆளுகையிலிருந்து சுதந்திரம் பெற்ற வேளையில் சாதாரண பெரும்பான்மைத்துவம் கொண்ட ஒற்றை ஆட்சித் தன்மையான அரசியல் அமைப்பு ஒன்று இலங்கைக்கு வழங்கப்பட்டது. இந்த அரசியல் அமைப்பின் 29(2) உறுப்புரை யில் குறித்ததொரு சமூகத்தையோ சமயத் தையோ பாதிக்கின்ற அல்லது மட்டுப்ப டுத்துகின்ற சட்டமோ அல்லது குறித்த ஒரு சமூகத்துக்கோ சமயத்துக்கோ மற்ற வர்களுக்கு இல்லாத சலுகையை கொடுக் கும் சட்டத்தையோ நிறைவேற்றக் கூடா தென்ற தடைவிதிக்கப்பட்டது


1949ம் ஆண்டில் இந்திய வம்சாவளித் தமி ழர்களில் கணிசமானோருடைய குடியுரிமை பறிக்கப்பட்டதுடன் சிங்களம் மாத்திரம் அரச கரும மொழியாக மாற்றப்பட்டது. மேலே கூறப்பட்ட 29(2) உறுப்புரை இப் படியானவற்றை தடுப்பதற்காக இயற்றப் பட்டிருந்தாலும் கூட, அதனை மீறி இந்த சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டன. இது, அதுவரை காலமும் இருந்த அரசாங்க கொள்கைக்கு மாறான செயலுமாகும். இந் தக் கால கட்டத்தில் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில், தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வட, கிழக்கு பிரதேசங் களில், அந்தப் பிரதேசங்களில் குடிசனப் பரம்பலை மாற்றியமைக்கும் விதத்தில்


தொடர்தல் 117ம் பக்கம்

தமிழ் மக்கள் மத்தியில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனம்
வீடுகள் வியாபார நிலையங்களுக்குத் தேவையான கதவுகள் ஜன்னல்களை
தரமாகவும், மலிவாகவும் அனுபவம் வாய்ந்தவர்களின் கைவண்ணத்திலும் பெற்றுக்கொள்ள



Viewtech
Windows & Home Improvements
Tel : 416-367-2721 Fax : 416-913-7176
2721 Markham Road, Unit 34, Scarborough, ON. M1X 1L5


HomeLife
HomeLife Today
Realty Ltd., Brokerage*
Independently Owned and operated
BEFORE YOU LIST
YOUR PROPERTY JUST CALL US
& PLEASE LET US EXPLAIN
OUR SERVICES !
Homelife Home Warranty Program
Flexible Commission |
Free Market Evaluation
WE HAVE FEW
SERIOUS BUYERS LOOKING
FOR HOUSE
MORTGAGE CAN BE
ARRANGED IN MAJOR BANKS
$ 89,000
Morningside and Ellesmere
Delicious Sandwish Food Court Business. Walking Distance To University Of Toronto (Scarborough), Centennial College, Infront Of Pan Am Sports Centre. Located In High Traffic Area(Student) Centre.
$ 99,900
Ellesmere Rd/Kennedy
Next To Highland Farm ,Busy Area ,Great Potential, Tons Of Opportunities For The Right Person. Minutes To 401 And Ttc Access. Tons Of Parkings Available
$ 129,000
Lawrence/Galloway
2 Bed Room, 1 Washrooms
Fully Updated With Fresh Paint, New Bathroom Fixtures, Gleaming Laminate Floors And A Modern Kitchen! Breathtaking Views On 10th Floor On Large Open Balcony!
$ 155,000
Eglinton Ave/Midland
Well Establish West Indian Restaurant & Bar In Prime Location. High Traffic, High Volume Business Day/Weekends. Turn Key Operation Easy To Operate
$ 179,000
Leeward/Donmills
2 Bed Room, 1 Washrooms
Bright And Beautiful Fantastic Layout, Close To Schools, Park Dvp Ontario Science Centre, Shopping Area, Chinese Food Mart Sunny Food Market Mall Mosque Church
$ 179,900
Eglinton/Kingston Rd
2 Bed Room, 2 Washrooms
New Laminate Floors, Unit Facing The East Side View Of Lake, Large Balcony, Large Bedroom, Ttc In Front of Building Lots Of Shopping, Facilities, Schools
$ 188,888
Midland/Eglinton
2 Bed Room, 1 Washrooms
Very Spacious And Well Kept Apartment. Newly Renovated And Painted. Priced To Sell. Close To All Amenities, 24 Hours Security.
$ 389,000
Markham/Sheppard
2+1 Bed Room, 3 Washrooms
Three Years Old, New Stacked Town Home In A Very Demanding Area,Beautiful Flat. Close To Hwy 401, Ttc, Schools, Centennial College
$ 799,000
Markham Rd/Denison
4+1 Bed Room, 4 Washrooms
Gorgeous Home In Great Area!! Bright & Spacious Family Home Located In Prime Location. Close To All Amenities
$ 849,000
Simcoe St N/ Taunton
4 Bed Room, 4 Washrooms
Brand New Halminen Built Home In Established Neighborhood. Upgraded Kitchen/Granite Counter Top, 9 Ft Ceilings & Hardwood On Main Floor
2011 - 2012 PLATINUM CLUB Member
2013 DIAMOND CLUB Member
2014 DIAMOND CLUB Member
2015 DIAMOND CLUB Member
Hariharan
Nadarajah
Sales Representative
Cell: 416-856-4276
harisells@gmail.com
2013 & 2014
Top 5% GROSS
SALES COMMISSION
Nima
Hariharan
Sales Representative
Cell: 647-866-2642
nimah02@hotmail.com
Not intended to solicit buyers or sellers under contract.
Office: 416.298.3200


PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
OPEN HOUSE SAT | SUN 2PM - 5PM
Toronto - 4725 Sheppard Ave E 1506 Sheppard/Mccowan
2+1 Bedrooms, 2 Washrooms
COMING SOON
LOT: 80.22 X 123.98 (FEET)
Toronto - Sheppard/Meadowvale
4 Bedrooms, 4 Washrooms
COMING SOON
Toronto - Conlins/Ellesmere
3+1 Bedrooms, 3 Washrooms
Basement Finished
COMING SOON
Toronto - South Of Steeles/Staines
5 Bedrooms, 4 Washrooms
COMING SOON
Gwillimbury - Mccowan/Ravenshoe South
4 Bedrooms, 5 Washrooms
COMING SOON
Markham - Highglen/Mccowan
3 Bedrooms, 3 Washrooms
BSep Entrance
COMING SOON
Toronto - Mccowan/401
2+1 Bedrooms, 2 Washrooms
GREAT OPPORTUNITY TO INVEST IN AN APPROXIMATELY 88 ACRES OF LAND FOR PRIME RESIDENTIAL DEVELOPMENT
HUNTSVILLE - 2509 ETWELL RD
ASHWORTH RD/ ETWELL RD
$359,900
Oshawa - Wilson/ Beatrice
3 Bedrooms, 2 Washrooms
Basement Finished
$439,900
Oshawa - Wilson/Clearsky
3 Bedrooms, 3 Washrooms
$649,900
Whitby - Dryden/Garrard
5 Bedrooms, 4 Washrooms
$688,000
Toronto - Pharmacy/Sheppard
3+2 Bedrooms, 3 Washrooms
Basement Finished
$698,000
Mississauga - TBristol/Creditview
3+1 Bedrooms, 4 Washrooms
$988,888
Markham - Brimley/Steeles
4+2 Bedrooms, 5 Washrooms
Basement Finished
$688,000
Stouffville - Reeves Way Blvd/Ninth Line
4 Bedrooms, 3 Washrooms
$739,900
Stouffville - Main/10th Line
4 Bedrooms, 4 Washrooms
$919,000
Stouffville - Hoover Park/Sandiford
4 Bedrooms, 3 Washrooms
Basement finished
$700,000
Ajax - Williamson/Audley
4 Bedrooms, 3 Washrooms
$838,000
Stouffville - 10th Line/ Hoover Park Dr
4 Bedrooms, 3 Washrooms
$749,500
Toronto - Morningside/Finch
4+1 Bedrooms, 4 Washrooms
Basement Finished
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future Realty Inc., Brokerage
#205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
Bus : 905 201 9977 / Fax: 905 201 9229
Independently Owned and Operated, REALTOR * Sales Representative
Uthayan Sivarajah 416 301 5555
Sugan Sivarajah 905 201 0066
Raj Sivarajah 416 843 3333
SivaKumar Sivarajah 416 453 7777

# இலங்கையில் 1958...

114ம் பக்கத் தொடர்ச்சி...

அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றங்கள் முழு மூச்சோடு நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்தப் பின்னணியில் இலங்கைத் தமிழ் மக்கள் சிங்களவரிடம் இருந்து பிறிதொரு தேசிய இனம் என்பதால் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை 1951 ஏப்ரல் மாதத்தில் இலங்கை தமிழ் அரசுக்கட்சி எடுத்தியம்பியது. இந்த சுயநிர்ணய உரிமையின் வெளிப்பாடாக தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கில் ஒரு சமஷ்டி முறையான ஆட்சியை தமிழரசுக் கட்சி வலியுறுத்தியது. ஆரம்பத்தில் வெளிநாட்டுப் படையெடுப்புக்களினாலும் பின்னர் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளாத பெரும்பான்மையினரின் மேலாதிக்க வாதத்தை உறுதி செய்யும் அரசமுறை ஒன்றின் மூலம் தமிழ் மக்கள் இழந்து விட்ட சுயநிர்ணய உரிமையை திரும்பவும் வென்றெடுப்பதற்காக 1950 களிலிருந்து 1960 களின் இறுதிவரை இலங்கைத் தமிழர் பல அமைதி-வழிப் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

1958 இனக்கலவரம் 1958 மே மாதம் 22ல் இருந்து மே27 வரை பெருமளவில் நிகழ்ந்த போதிலும், 1958 ஜூன் 1ல் அவசரகாலச் சட்டம் அறிவிக்கப்பட்ட பின்னரும் ஆங்காங்கே வன்முறைகள் இடம்பெற்றன. இந்நிகழ்வு பொதுவாக இனக்கலவரம் என அழைக்கப்பட்டாலும், சிலஇடங்களில் இனவழிப்பாகவே நடத்தப்பட்டது. இவ்வழிப்பில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை கண்டெடுக்கப்பட்ட உடல்களின் எண்ணிக்கையைக் கொண்டு மதிப்பிடப்பட்டு 300 முதல் 1500வரையென அறிவிக்கப்பட்டது. இக்கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலானோர் தமிழர்கள் ஆயினும், தமிழர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்த காரணத்தினால் சில சிங்களவர்களின் உடமைகளும் சேதமாக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அரசாங்கத்தினால் எந்தவிதமான பாதுகாப்பும் வழங்கப்படவில்லை.

•

கில்பேர்ட், கொட்டாஞ்சேனையில் நான் வாழ்ந்த பழைய மாடிவீட்டின் மேற்பகுதியில் எனது அறையின் வாயில்வரை பத்திரமாகக் கொண்டுவந்து சேர்த்து விட்டுத் திரும்பிவிட்டான். அன்று காலை வேலைக்குச் சென்ற, அந்த வீட்டில் வாழ்ந்தவர்களில் சிலர் நிலைமையை அறிந்து அவசரமவசரமாகத் தத்தம் அறைகளுக்குத் திரும்பியிருந்தனர். மாலை ஐந்து மணியளவில் அந்த மேல்மாடியில் வாழ்ந்த அனைவருமே பத்திரமாகத் தத்தம் அறைகளுக்குத் திரும்பிவிட்டனர். எங்களில் கிட்டத்தட்ட இருபது பேர் மேல்மாடியில் வசித்து வந்தோம்.

எங்களுக்கு நெஞ்சில் ஒரேயொரு நம்பிக்கை இருந்தது. வீட்டின் உரிமையாளரான கீழ் வீட்டில் வாழ்ந்த வட இந்தியரான வசதி படைத்த கருவாட்டுக் கடை முதலாளியின் பெரிய குடும்பத்தினரைத் தாண்டித்தான் மேல்மாடிக்கு எங்களிடம் வரவேண்டும். ஆனால் அவர்களுக்கும் எங்களுக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இருந்ததில்லை. நாங்கள் அங்கே இருப்பதால் தங்களுக்கு இடைஞ்சல் என்று அவர்கள் கருதினால், தாங்கள் தப்புவதற்காக அவர்களே எங்களைக் காட்டிக் கொடுக்கலாம்.

அநேகமானோர் அன்றைய மத்தியான உணவே உண்ணவில்லை. அன்றிரவும் எல்லோரும் பட்டினி. அடுத்த நாள் படுக்கையில் கிடக்கும் பத்திய உணவுக்காரன் போல, பச்சைத் தண்ணீரைத் தவிர வேறெதுவும் இல்லை. குழாய்த் தண்ணீரும் கைவிட்டால் குடல் காய்ந்து போகலாம் என்ற நிலைமை. கொட்டாஞ்சேனைச் சந்தியில் இருந்த பிராமணாள் சைவ ஹோட்டல் போன்றவை மூடப்பட்டிருக்கலாம் அல்லது பலவந்தமாக மூடச் செய்திருக்கலாம். நாங்கள் இடைக்கிடை போய்ச் சாப்பிட்ட சில சிங்கள ஹோட்டல்கள் சிறிது தூரத்தில் இருந்தன. அவ்வளவு தூரம் தெரு-வழியே நடந்து செல்லப் பயமாக இருந்தது. அப்படி ஒரு ‘றிஸ்க்’ எடுத்துச் சென்றாலும் அந்தச் சிங்களவன் எங்களுக்குச் சாப்பாடு தருவானா அல்லது எங்களை வறுத்துச் சாப்பிடுவானா என்று தெரியாமல் இருந்தது.

உணவு எதுவும் கிடைக்காத காரணத்தால், இரண்டாம் நாள் முடிவில் நாங்கள் எல்லோரும் களைத்துப் போனோம். குழாய்த் தண்ணீரும் கசந்தது. ஆளாளுக்குச்சுருண்டு சுருண்டு படுக்கத் தொடங்கினார்கள்.

நெஞ்சு முழுக்கப் பயம் வயிறு முழுக்கப் பசி!

எனது அறையில் ஏகாம்பரம் என்றொரு நண்பர் இருந்தார். அவர் மட்டக்களப்பில் முறகட்டான்சேனையைச் சேர்ந்தவர் கொழும்பில் சுப்பிறிம்கோர்ட்டின் ஒரு கிளையில் கடமை ஆற்றிக் கொண்டிருந்தார். அவர், “அடுத்த வளவில் ஒரு சிறிய கடையமைப்பில் இரண்டு மூன்று சிங்கள இளைஞர்கள் ஒரு சிறிய பேக்கரி வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு நாளும் காலையில் தங்கள் பாண் பணிஸ் போன்ற உற்பத்திப் பொருட்களைச் சைக்கிள்களில் கட்டிக் கொண்டு விற்பனைக்குப் போவதைப் பார்த்திருக்கிறேன். ஒரு சுவருக்கு அப்பால் அவர்கள் அதே சுவருக்கு இப்பால் நாங்கள். அவர்களுடன் தொடர்பு கொண்டால், எங்களுடைய பசிபட்டினி தீரலாம்,” என்றார்.

பக்கத்தில் நின்றவர் வேலாயுதம். அவர் புத்தளத்தில் சேனைக்குடியிருப்பைச் சேர்ந்தவர். அவர், “எங்களுடன் நமசிவாயம் அங்கிளை அவருடைய சீருடையில் அழைத்துச் சென்றால் காரியம் நிச்சயம் சரிவரும். அவரைக் கிளப்புவது அவ்வளவு லேசான காரியமல்ல. சிவலிங்கம் அண்ணை சொன்னால் அவர் கேட்பார்,” என்று என்னைப் பார்த்தார் வேலாயுதம்.

நாங்கள் மூவரும் அவருடைய அறைக்குப் போய் விஷயத்தைச் சொன்னோம். அவர் அதனை விளங்கி யோசித்து முடிவு செய்வதற்கு அவகாசம் தராமல், நாங்களே அவருடைய சூட்கேஸைத் திறந்து, கொஞ்சம் மிடுக்கான சீருடையை வெளியே எடுத்து அவரை அணியச் செய்து, அவரைத் தொட்டுத் தடவி ஐஸ் வைத்து வெளியே அழைத்து வந்தோம். தெரு வாசலை எட்டிப் பார்த்து மக்கள் நடமாட்டம் குறைந்த வேளையில் எங்கள் வாசலால் வெளியேறி அடுத்த வாசலால் உள் நுழைந்து பேக்கரிக்குள் சென்றோம். வாசலில் வேலாயுதத்தை நிறுத்திவிட்டு, நமசிவாயம் அங்கிளை முதல் ஆளாக வைத்து நாங்கள் மூவரும் உள்ளே நுழைந்து மேசையைத் தட்டினோம்.

உள்ளேயிருந்து வந்த ஒருவர் நமசிவாயம் அங்கிளைக் கண்டவுடன் ஓடிப் போய் ஒரு நாற்காலியைத் தூக்கி வந்தார். “அதெல்லாம் வேண்டாம்,” என்று சொன்ன ஏகாம்பரம், விடயத்தைச்சுருக்கமாகச்சொல்லி, “இந்தப் பிரச்சினை முடியும்வரை நாங்கள் வெளியே எங்கேயும் போக முடியாது. அதுவரை நீங்கள் உங்கள் பேக்கரி உற்பத்திப் பொருட்களான பாண் பணிஸ், மீன்பணிஸ் போன்றவற்றை நாளாந்தம் எங்களுக்குத் தந்துதவ வேண்டும். உடனுக்குடன் காசைத் தந்துவிடுவோம்,” என்றார்.

“காசென்ன காசு? மனிதனுக்கு மனிதன் இப்படியான சமயத்தில் உதவாவிட்டால் எப்படி?”என்ற அவர், நமசிவாயம் அங்கிளை மரியாதையாகப் பார்த்தார். “எங்களுடைய பேக்கரிப்பொருட்கள் மட்டுமல்ல. வெளியே ஏதாவது தேவைப்பட்டாலும் சொல்லுங்கள் வாங்கித் தருகிறோம்.”

நாங்கள் திரும்பி வரும்போது, “ஏன் வேலாயுதம், பேக்கரிக்காரன் ஏன் எனக்கு இத்தனை மரியாதை காட்டுகிறான்?” என்று கேட்டார் நமசிவாயம்.

“எல்லாம் உங்கள் முகராசிதான்,” என்று சமாளித்தார் வேலாயுதம்.

நாட்கள் நகர்ந்தன. இனக்கலவரம் நாட்டின் பல பகுதிகளிலும் பரவி உக்கிரம் அடைந்ததாகக் கேள்விப்பட்டோம். பேக்கரிக்காரன் ஒழுங்காக வந்து போய்க் கொண்டிருந்தான். நாளாக நாளாக அவன் தந்த உணவு வகைகளையும் உண்ண முடியவில்லை. தண்ணீரே தொண்டைக்குள் தடக்கி நின்றது. இப்படியே எண்ணியெண்ணி ஏங்கியேங்கி, ஊன் உருக, உள்ளம் கலங்க, உயிரை உடலுக்குள்ளே பொத்தி வைத்துக் கொண்டு, உணர்வுகளை உள்ளத்துக்குள்ளே அடக்கி வைத்துக் கொண்டு, முகத்திலே காய்ந்த சிரிப்புகளுடன், வாயிலே வளமிழந்த வார்த்தைகளுடன் _

எத்தனை நாளைக்கு. இன்னும் எத்தனை நாளைக்கு? இந்தப் பிறப்பில் இன்னும் ஒருமுறை ஊருக்குப் போவோமா? உறவுகளைக் காண்போமா? கொழும்பு மண்ணி-லேயே உரமாகிப் போவோமோ?

கொழும்பின் பிற பகுதிகளில் வாழ்ந்த சிலர் பாதுகாப்புடன் வந்து எங்களுடன் வாழ்ந்த நாலைந்து பேரை அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

நாங்கள் எட்டுப்பத்துப் பேர் மிஞ்சியிருந்தோம்.

ஒரு நாள் காலை, நாங்கள் மூன்று நான்கு பேர் மாடி யன்னல் வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தோம். வாசலில் ஒரு பொலிஸ் ஜீப் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ‘கேட்’டிலிருந்த வீட்டு இலக்கத்தைச் சரிபார்த்துக்கொண்டு உள்ளே வந்து, கீழ் வீட்டுக்காரரிடம், “இங்கே ஆர்.சிவலிங்கம் என்று யாராவது இருக்கிறாரா?” என்று வினவியது, மேலே நின்ற எங்களுக்குத் தெளிவாகக் கேட்டது.

வீட்டுக்காரர், “மேலே சில தனியாட்கள் வசிக்கிறார்கள். பெயர் விபரங்கள் எதுவும் எங்களுக்குத் தெரியாது,” என்று சொல்லி மாடிப்படிகளைச் சுட்டிக் காட்டினார். ஏகாம்பரம் என்னை இழுத்துக் கொண்டுபோய் ஓர் அறைக்குள் தள்ளிக் கதவை லேசாகச் சாத்திவிட்டு வெளியே வந்து, மற்றவர்களுடன் கலந்து ஏதும் அறியாதவர் போல் நின்றார்.

நான் வீரகேசரி, தினகரன், சுதந்திரன் போன்ற பத்திரிகைகளில் சிலபல சிறுகதைகள் கட்டுரைகள் எழுதிய பின்னர், சுதந்திரன் ஆசிரியரான எஸ்.டீ.சிவநாயகம் அவர்கள் எனது ஆக்கங்களில் நான் கையாண்ட கிண்டல் _ நகைச்சுவை நடையைக் கவனித்து, ‘சுதந்திரன்’ பத்திரிகையில் வெவ்வேறு புனைபெயர்களில் வெவ்வேறு கட்டுரைகளை எழுதும் வாய்ப்பையும் தந்தார். சிறுகதை, நாவல்களுக்கு ‘உதயணன்’, நகைச்சுவைக் கட்டுரைகளுக்கு ‘பரதன்’ மற்றும் அரசியல் கட்டுரைகளுக்கு ‘நாரதர்’ என்றும் தீர்மானிக்கப்பட்டது. எனது அரசியல் கட்டுரைக்காக பத்திரிகையில் இரண்டு பத்திகளை (columns) வாராவாரம் ஒதுக்கித் தந்தார். அந்த நாட்களில் எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்களின் அன்றைய தமிழரசுக்கட்சிக்கு ஆதரவாக சில கட்டுரைகள் எழுதியது இப்போது நினைவுக்கு வந்தது. பொதுவாக அரசியலைப்பற்றி எழுதுவதை நான் விரும்பாதவன். அப்போதைய சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக, வயதின் வீம்பு காரணமாக அரசை விமர்சித்து ஏதாவது எழுதியிருப்பேனோ என்ற ஒரு கேள்விக்குறி, இப்பொழுது வாசலில் ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் வந்து நின்று எனது பெயரைச் சொல்லி விசாரித்த வேளையில் தட்டுத் தடுமாறி வந்து நெஞ்சிலே நின்றது.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் மேலே வந்தார். அதே கேள்வியை மீண்டும் கேட்டார். எவரும் எதுவுமே பேசாமல் நின்றதால், பொலிஸ் இன்ஸ்பெக்டர் தனது கையில் இருந்த காகிதக்கட்டைப் பிரித்துப் பார்த்து விட்டு, ‘Who is R.Sivalingam of Department of Social Services,’ என்று மீண்டும் கேட்டார்.

அதற்கு மேலும் தாமதிப்பது பெரிய பிரச்சினையாகும் என்று எண்ணிய நான், வருவது வரட்டும் என்ற பிரார்த்தனையுடன் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தேன்.

வளரும்...

**உசாத்துணை:**

- *http://www.tamilwin.com/print-RUmoyDSWIIRUg.html*
- *https://en.wikipedia.org/wiki/1958_anti-Tamil_pogrom*
- *http://tamilnation.co/indictment/indict006.htm*
- *http://www.yarl.com/forum3/topic/12146*
- *http://winulagam.blogspot.ca/2012/06/blog-post_3879.html*
- *http://www.tamilcanadian.com/article/tamil/220*
- *Emergency ‘58 – The Story of the Ceylon Race Riots, Tarzie Vittachi, 1958*



uthayanan@thaiveedu.com






# அற்லான்ரிஸ்! மறைந்திருக்கும் மர்ம நகரம்

எங்கள் வாழ்வில் தண்ணீரின் மவுசு பற்றி தனியாகச் சொல்ல வேண்டியதில்லை. உயிரின் கரு தொடங்குவதும் தண்ணீரில்தான், பின்னர் ஆட்டம் முடிந்து அஸ்தி கரைவதும் தண்ணீரில்தான்.

உலகில் நிலத்தை விட நீர் தான் அதிகம். சமுத்திரங்கள், நதிகள், குளங்கள், குட்டைகள், நீங்கள் கையில் வைத்திருக்கும் Tim Hortons கோப்பி, எல்லாவற்றையும் சேர்த்தால் ஏறத்தாழ எழுபது வீதம் தண்ணீர் தான். எஞ்சிய முப்பது வீதம் தான் நிலப்பரப்பு. உலகத்தில் இவ்வளவு தண்ணீர் இருந்தாலும், குடிக்கக் கூடிய தண்ணீர் வெறும் ஒரு வீதம் என்பது கொஞ்சம் சோகம் தான்.

பூமி பிறந்த போது தண்ணீர் இருந்திருக்கவில்லை. பிற்பாடு, பூமிக்கு நடுவே கொதித்துக் கொண்டிருக்கும் நெருப்புக் குழம்பிலிருந்து நீராவி மேலே போய், மழையாகப் பொழிந்தபோது தான் பூமி முதன் முதலில் நீரைப் பார்த்தது. விண்வெளியிலிருந்து வந்து வீழ்ந்த கற்களும் பூமிக்கு நிறைய நீரை தானம் கொடுக்க, பெரிய பெரிய சமுத்திரங்கள் உண்டாகத் தொடங்கின.

பூமியில் வாழ்வு தொடங்கியது கடல்களில் தான். உலகில் உயிரினங்களை தாலாட்டிய முதல் தொட்டில் தண்ணீர் தான்.

3.8 பில்லியன் வருடங்களுக்கு முன்பு, அதிசயமாக ஒரு பக்ரீரியா கடலில் பிறந்தது. அப்பா, அம்மா இல்லாமல் தனியாக வந்த தான்தோன்றீஸ்வரர் இது. இதிலிருந்து தான் அல்காக்கள், ஜெலி மீன்கள், சுறாக்கள் என இயற்கை தன் சாம்ராஜ்ஜியத்தை தண்ணீரில் விஸ்தரித்தது.

நீரில் தான் உயிர்களின் ஆட்சி நெடுங்காலம் நடந்தது. நிலத்தில் அப்போது வெறும் பாறைகளும், பனிக்கட்டிகளும்தான். நிறைய காலத்திற்கு பிறகு தான் தரையில் உயிரினங்கள் தவழத் தொடங்கின. மனிதன், மிருகம் எல்லோருக்கும் மூத்த முன்னோரான Tiktaalik என்ற மீன்கள் கடலிருந்து தரைக்கு வந்தது வெறும் 370 மில்லியன் வருடங்களுக்கு முன்பு தான்.

தண்ணீரின் தயவில் தான் நிலத்தில் உயிரினங்கள் செழித்தன. பெரும் ஏரிகளும், வளைந்து, நெளிந்து ஓடுகின்ற ஆறுகளும், பூமியெங்கும் பெருகிய புதிய உயிரினங்களின் தாகங்களைத் தணித்தன. பின்னாட்களில் நாடோடிகளாய் அலைந்த மனிதர்களின் நாகரீகங்கள் முளைத்ததும் நதிக் கரைகளில் தான்.

தண்ணீருக்கு பலமுகங்கள். மழைத்துளியாய் சிதறி எங்களை மகிழ்விக்கவும், சுனாமியாய் சுழன்றடித்து எங்களை அழவைக்கவும் அதற்கு முடியும். ஹீரோவும் அது தான், வில்லனும் அதுவே தான்.

பல நாடுகளில் தண்ணீர் குறைந்தாலும் பிரச்சினை தான், கூடினாலும் பிரச்சினை தான். சில விருந்துகளில் 'தண்ணி' கூடினால் வீடுகளில் வரும் பிரச்சினையை பற்றி விபரிக்கவே தேவையில்லை.

அச்சமூட்டும் ஆழ்கடல்களில் இருக்கும் மர்மங்களும், ஆச்சரியங்களும் அற்புத மானவை. வெளியே வராத விசித்திரமான விலங்குகள், சீறிப் பாயும் எரிமலைகள், புதையுண்டு போன நகரங்கள், புதையல்களுடன் மூழ்கிப்போன கப்பல்கள், நடுங்க வைத்த கடற்கொள்ளையர்கள் என பிரமிப்புகளுக்கு குறைவேயில்லை.

கால் நனைக்கும் கரைகளைத் தாண்டி, மூச்சைப் பிடித்தபடி என்னுடன் நீந்தி வாருங்கள். அலையடிக்கும் ஆழ்கடலின் அடிவரைக்கும் முங்கி, மூழ்கி, தண்ணீரின் வரலாற்றை ஒருதரம் தரிசித்து வருவோம். மரண பயம் காட்டும் கடல்களின் கீழே இருக்கும் மலைப்புகளைக் காண நீங்கள் தயாராகுங்கள்.

ஒருகாலத்தில் ஓகோ என்று வாழ்ந்து, ஓரிரவில் அலைகளால் வாரிச் சுருட்டப்பட்ட நகரங்கள் வரலாற்றில் நிறையவே உண்டு. நீருக்கடியில் அமைதியாய் நித்திரை கொள்ளும் அந்த கடல் கொண்ட கரையோர நகர்களின் கண்ணீர் கதைகளை கவலையுடன் ஒருதரம் கவனித்து வருவோம்.

இந்தப்பட்டியலில் முதலில் இருப்பது அதீத புகழ் கொண்ட அற்லான்ரிஸ். உலக மக்களின் கண்களுக்கு இன்றுவரை அகப்படாமல் நெடுங்காலம் ஏமாற்றுகின்ற ஒரு அற்புத நகரம்.

கிரேக்க தத்துவஞானி பிளேட்டோ தான் அற்லான்ரிஸ் பற்றி முதலில் எழுதி வைத்த ஆசாமி. அவர் எழுதியதை அவரையே சொல்லக் கேட்போம்.

"அற்லான்ரிக் சமுத்திரத்தின் நடுவே, செல்வம் கொழித்த அற்லான்ரிஸ் எனும் சொர்க்கபுரி இருந்தது. பலம் பொருந்திய அந்த தேசத்தில், நாகரிக வளர்ச்சி உச்சத்தில் இருந்தது. தங்கத்தால் கூரைகள் வேயப்பட்ட கட்டிடங்கள் கண்களைப் பறித்தன. மூன்று பெரும் அகழிகளால் சூழப்பட்ட அதன் தலைநகரத்தின் நடுவே கடல் அரசனின் மிகப்பெரும் கோயில் இருந்தது."

"அசைக்கப்பட முடியா பலத்துடன் இருந்த ளுக்கு முன்பு.

அப்படியான உச்ச நாகரீகம் கொண்ட நகரம் உண்மையிலேயே இருந்துபோனதா? அல்லது பிளேட்டோவின் கற்பனையான கப்சா கதையா என்ற விவாதம் இன்றும் தொடர்கிறது.

திமிர் கொண்டு போர் புரிந்தால் பலனை அனுபவிக்க வேண்டும் என்பதை தான் பிளேட்டோ தன் கற்பனையில் வடித்திருக்கிறார் என்று சில வரலாற்று அறிஞர்கள் வாதிடுகிறார்கள்.

உண்மைக் கதை இது என்று பிளேட்டோ எழுதியிருப்பதால் அற்லான்ரிஸ் நிச்சயம் எங்கோ கடலுக்கடியில், தான் கண்டுபிடிக்கப்படும் நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது என்று தான் அதிகம் பேர் நம்புகிறார்கள். இல்லாவிட்டால், இத்தனை வருடங்களாய் ஏராளம் பேர், எக்கச்சக்கமாய் காசைக் கொட்டித் தேடிக் கொண்டிருக்க மாட்டார்கள்.

'ஆரியர்கள் ஆளப்பிறந்தவர்கள்', எனத் தீவிரமாக நம்பி, உலகில் அழிவுகளை விதைத்த ஹிட்லர் கூட அற்லான்ரிஸை தேடிய தகவல்கள் இப்போது கசிகின்றன.

கதிகமாய் நிறைந்து வழிந்தது.

பெரும் கட்டிடங்களாலும், பெரிய கோயில்களாலும் நிறைந்திருந்த இந்த நகரங்களைப் பற்றி புராணக்கதைகள் நிறையவே இருந்தன. புகழ் பெற்ற ஹோமரின் இலியட் இதிகாசத்தில், ட்ரோய் போருக்கு மூல காரணமாக இருந்த பேரழகி ஹெலன், இங்கே தன் காதலனுடன் தங்கியிருந்தாள் எனச் சொல்லப்படுகிறது. கிரேக்க வரலாற்றாசிரியர்களும் இந்த நகரங்களைப் பற்றி நிறையவே எழுதியிருந்தார்கள்.

பெரும் பிரசித்தி பெற்ற இந்த நகரங்கள்



அந்த நாட்டிற்கு காலப்போக்கில் மமதை வந்தது. போர்வெறி கொண்டு மற்ற நாடுகளை ஒன்றன் பின் ஒன்றாக வெற்றி கொண்டது. வெற்றி கொண்டவர்களை அடிமைகளாக்கியது. இறுதியில் கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரத்திற்கான போரில் அற்லான்ரிஸ் தோற்றுப் போனது."

"அந்தத் தோல்வியின் பின் அற்லான்ரிஸ் நாட்டில் பெரும் பூகம்பங்கள் வெடித்தன. கடல் அலைகள் சீறிப் பாய்ந்தன. உலகத்தில் நெடுங்காலம் கோலோச்சிய, அற்புதமான அற்லான்ரிஸ் நாடு ஒற்றை நாளில் நீருக்குள் மூழ்கி முற்றிலும் புதையுண்டு போனது."

புகழ்பெற்ற ஞானி சோக்கிரட்டீஸின் மாணவனும், அறிஞர் அரிஸ்டோட்டிலின் ஆசிரியரும், உலகத்தின் மிகப்பெரும் தத்துவஞானியுமான பிளேட்டோ, அற்லான்ரிஸ் பற்றி இப்படித்தான் எழுதி வைத்தார்.

பிளேட்டோவுக்கு இந்த உன்னத நகரத்தைப் பற்றிச் சொன்னது, அவரது கொள்ளுத் தாத்தா. தாத்தாவிற்குச் சொன்னது சொலோன் என்ற மதகுரு ஒருவர்.

பிளேட்டோ வாழ்ந்தது இரண்டாயிரத்து ஐநூறு வருடங்களுக்கு முன்பு. அவரின் கதையின்படி அற்லான்ரிஸ் அழிந்தது அதற்கு முதல் ஒன்பதினாயிரம் வருடங்க

அதிக ஆற்றல் கொண்ட அற்லான்ரிஸ் மக்களின் வழித்தோன்றல்கள் தாங்கள் என நினைத்த ஹிட்லரின் தளபதி ஹிம்லரின் ஆட்கள் அற்லான்ரிஸை தேடி ஆர்க்டிக் கடல் வரை சென்றார்களாம்.

இரண்டாயிரம் வருடங்களாக இடைவிடாமல் தேடப்படும் இந்த அதிசய நகரம் என்றாவது ஒருநாள் அகப்படுமா? அல்லது ஆழ்கடலின் இருட்டுக்குள் நிரந்தரமாய் புதைந்து போய் விடுமா? காலத்தின் கைகளில் தான் பதில் இருக்கிறது.

அற்லான்ரிஸ் இன்னும் ஒளிந்தபடியே இருந்தாலும், எங்கள் கைகளில் அகப்பட்ட இன்னொரு புதையல் இருக்கவே இருக்கின்றது. எகிப்தின் புகழ் பெற்ற நைல் நதி கடலுடன் சீறிக் கலக்கும் முகத்துவாரத்தில் அமைந்திருந்த பெரும் புகழ்பெற்ற இரு நகரங்களான Herakleion, Eastern Canopus என்பவற்றின் வரலாறு காண நாங்கள் இரண்டாயிரத்து ஐநூறு வருடங்கள் பின்னோக்கிப் போகவேண்டும்.

இந்த இரு நகரங்களும் அப்போதைய உலகின் மிகவும் பிரசித்தி கொண்ட துறைமுகங்கள். பொங்கி பிரவாகிக்கும் நைல் நதியின் வழியேயான எகிப்தின் வாசல் கதவுகள் இவை. இடையறாது வந்து போய்க் கொண்டிருக்கும் கப்பல்களால் நிறைந்திருந்த இந்த நகரங்களில் செல்வம் அளவுக்

வரலாற்றில் திடீரென காணாமல் போய் விட்டன. இவை இனிமேல் கிடைக்காது என்று உலகம் நினைத்திருந்த போது, கடலின் இருபதடி ஆழத்தில் இவை மறைந்திருந்ததை கொஞ்சக் காலத்தின் முன்பு தான் கண்டுபிடித்தார்கள்.

பெரிதும் சிதைவடையாமல், அமைதியாய் ஆழ்ந்திருந்த இந்த நகரங்களை பார்த்த சுழியோடிகள் மூச்சடைத்துப் போனார்கள். அவ்வளவு அழகு. ஏராளமான தங்க நாணயங்கள், ஆபரணங்கள், பெரிய, பெரிய கட்டிடங்கள், பிரமாண்டமான கடவுள் சிலைகள் என ஏகப்பட்ட பிரமிப்புகள். ஒன்றன் பின் ஒன்றாக ஒவ்வொன்றும் மேலே கொண்டு வரப்பட்ட போது, முழு உலகமும் மூக்கில் விரலை வைத்தது.

ஆயிரத்து இருநூறு வருடங்களுக்கு முன்பு நைல் நதி பெருக்கெடுத்து, பெரும் வெள்ளம் பாய்ந்த போது தான் இந்த நகரங்கள் தண்ணீருக்குள் சடுதியாக மூழ்கிப் போயின எனப் பிற்பாடு கண்டு பிடித்தார்கள்.

புதையுண்ட நகரங்களின் பட்டியல் தொடர்ந்தும் விரிகின்றன...!



nimal.nagaraj@thaiveedu.com

காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும்
காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும்
ஒரு நம்பிக்கையான நிறுவனம்

FREE CLASSES
To Become RESP & INSURANCE ADVISORS

LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE

MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED



Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct: 416.918.9771
Business: 416.321.2500
MDRT Member of Million Dollar Round Table

Life100 INSURANCE & INVESTMENTS INC.

- digi Media -

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca

La Capitale | INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Assumption Life | BMO Insurance

Are you getting Million Dollar advice?



Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...




வீட்டுக்கடன்
வியாபாரக்கடன்
முதலீட்டுக்கடன்

வருமான உத்தரவாதம்
இல்லாமலே
பெற்றுக் கொடுக்கப்படும்

கடன் தேவையா?
என்னை அழையுங்கள்
ரம்போ தர்மலிங்கம்



KAPITAL CARE MORTGAGE INC.

Rambo Tharmalingam
Mortgage Agent

5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5

647-290-3416 / 416-543-1111


BMO Bank of Montreal
For all your mortgage needs
Sivacantharasa (Siva) Thurairatnam
Mortgage Specialist
Serving Greater Toronto Region
BMO Bank of Montreal
Cell: 416-476-5419
416-274-2830


Mega Financial Group
உங்கள் அனைத்து விதமான
காப்புறுதித் தேவைகளுக்கும்.
Call Now
Raj Nadarajah
416-666-1120


ஒரு நம்பிக்கையான முகவர்
Karuna Gopalapillai
RealEstate Broker | CEO
Dir: 416.830.8520
HOMELIFE GALAXY REAL ESTATE LTD. BROKERAGE
111 Grangeway Avenue, Suite #301
Toronto ON, M1H 3E9
Tel: 416.284.5555
karuna@homelifegataxy.ca


Puzzle Solver for your
Real Estate needs....
Ramanan
Ramachandran
Broker of Record
Direct: 416-670-6467
HomeLife Today
Office: 416-298-3200
100% Proven Results visit www.agentram.com
JUST LISTED
BUR OAK/MARKHAM RD
5 Bedrooms
3 Washrooms
2500 - 3000 Sq. Ft
ASKING $875,000


தாய்வீடு
THAIVEEDU HOME & LIVING
அரங்கியல் விழா
ஒக்ரோபர் 02
Flato Markham Theatre
LIVE ARTS MATTERS.
171 Town Centre Blvd
Markham, ON L3R 8G5


NOW HIRING
JOIN OUR
DYNAMIC TEAM
CHANDRAN
RASALINGAM CHS
President & CEO
iNFORCE LIFe
Financial Services Inc.
10 Milner Business Court, Suite 707
Scarborough, ON M1B 3C6
Dir: 416-909-0400 Bus: 416-321-6000 x400
career@inforcelife.com www.inforcelife.com
QUALITY ADVICE YOU CAN TRUST


YOUR PARTNER IN
MORTGAGES
Dirresh Krishna MBA, CMA, AMP
Tel: 416.819.4373
accent@rogers.com
Raga Ram AMP
Tel: 416.579.7533
raga_ram@yahoo.com